Thuppariyum Saambu
by *Devan*
Devan Endowments, Chennai ©
Kizhakku First Edition: October 2006
Previous Editions : 1991
600 Pages, Price Rs. 300
Printed at Mani Offset, Chennai - 5.

ISBN 81-8368-184-0

Publisher
Badri Seshadri
Chief Editor
Pa. Raghavan
Editor
Vasudev
Managing Editor
R.Parthasarathy
Asst. Editors
M.Muthuraman
Mugil
Marudhan
Sa.Na. Kannan
Chief Designer
T. Kumaran
Designers
S. Kathiravan
Muthu Ganesan
R. Sarathy
R. Giridharan
Artist
Pillai
Proof Reader
Saidai Murali

Kizhakku - 168
Kizhakku, An imprint of
New Horizon Media Pvt. Ltd.,
No.33/15, IInd Floor, Eldams Road,
Alwarpet, Chennai - 600 018.
Phone : 044 - 42009601/03/04
Fax : 044 - 43009701

In Madurai: 4/7, East Pattamar St., Madurai - 1
Phone: 0452 - 4230701

In Coimbatore: 201, IInd Floor, Sri Vasavi Complex,
Periya Kadai Veedhi, Coimbatore - 1
Phone: 0422 - 4208601

Email : sales@kizhakku.in
Website : www.kizhakku.in

All rights relating to this work rest with the copyright holder. Except for reviews and quotations, use or republication of any part of this work is prohibited under the copyright act, without the prior written permission of the publisher of this book.

பதிப்பாசிரியர் குறிப்பு

தமிழ்ச் சமூகம் எக்காலத்திலும் நினைவில் வைத்திருக்கவேண்டிய படைப்பாளிகளுள் தேவன் முக்கியமானவர். முகம் சுளிக்கச் செய்யாத, மிக உயர்தரமான அவரது நகைச்சுவை அபூர்வமானது.

அவரது படைப்புகள் அனைத்தையும் செம்பதிப்பாக வெளியிடுவது என்கிற எங்கள் திட்டத்தின் ஆரம்பம், துப்பறியும் சாம்பு. வரிசையாக தேவனின் அனைத்து படைப்புகளும் கிழக்கு பதிப்பகம் மூலம் வெளிவர இருக்கின்றன.

சிறுவர்களுக்கும் தேவனை அறிமுகப்படுத்தும் விதத்தில் படக்கதையாகவும் 'துப்பறியும் சாம்பு' வெளிவரவிருக்கிறது.

இந்த வாய்ப்பை கிழக்குக்கு வழங்கிய தேவன் அறக்கட்டளையினருக்கும், அதன் நிர்வாகி சாருகேசி அவர்களுக்கும் நன்றி.

உள்ளே

1. ஒரு வேலை போய் ஒரு வேலை வருகிறது! / 9
2. முதல் செக் வருகிறது! / 19
3. காணாமற்போன கம்மல்கள் / 31
4. தேடி வருகிறது கௌரவம்! / 43
5. மைசூர் யானை / 53
6. தோல்வியே வெற்றி! / 65
7. மாம்பலத்து மர்மம்! / 75
8. சுண்டைக்காய் கேஸ் / 87
9. ஒரு கல் இரண்டு மாங்காய்! / 99
10. ரங்கூன் ரங்கன் / 109
11. தலைக்கு வந்தது / 119
12. வேஷம் பலித்தது! / 129
13. சிங்கப்பூர் சிங்கம் / 139
14. குறட்டையும் கொட்டாவியும் / 149
15. முந்திரிப் பருப்பு - பருப்புத் தேங்காய் / 159
16. மகாராணியின் முத்துமாலை / 167
17. பங்களா மர்மம் / 179
18. சாம்புவும் வேம்புவும் / 189
19. புது வருஷப் பரிசு / 199
20. வேம்புவின் படம் / 209
21. தேடி வந்த தனம் / 221
22. மடையன் செய்கிற காரியம் / 233
23. குழந்தை விளையாட்டு / 243
24. தலைக்கு மேல் வெள்ளம் / 253
25. சிங்காரம் ஐ.சி.எஸ். / 263
26. பழம் பெருச்சாளி / 275
27. பெரியவாள் ஆசிர்வாதம் / 287
28. அதிர்ஷ்டம் துரத்துகிறது! / 298
29. இஷ்டம் போல் பிரயாணம் / 311
30. பச்சை வைரம் / 323
31. பெங்களூர் விஜயம் / 337
32. திரை எழும்புகிறது! / 353
33. சித்திரஸேனா நாடகசபை / 367
34. 'அகல்யா'வில் தேநீர் விருந்து / 379
35. வேம்புவின் மாமா பிள்ளை / 393
36. பம்பாயில் பிரக்யாதி / 405
37. கோடாலி தர்மராஜய்யா / 415
38. பேய் உலாவும் பங்களா! / 431
39. திருநீர்மலையில் உத்ஸவம் / 443
40. அடி வேம்பு! அடி வேம்பு! அடி வேம்பு! / 457
41. சங்கராபுரம் மகாராஜா / 469
42. மலையாள பகவதி / 483
43. கமிஷ்னரின் ஊதல் / 495
44. கொட்டையூர் கோமளம் / 509
45. இன்ஸ்பெக்டர் கோபாலன் / 521
46. பிரம்மஸ்ரீ கோவர்த்தன சிரௌதிகள் / 535
47. சிபாரிசுக் கடிதம் / 547
48. காணாமற்போன கணவன் / 561
49. சுந்துவின் சிறுகதை / 575
50. லண்டனில் [illegible] / 587

சென்னைப் தமிழ்ச் சங்கம்

1

ஒரு வேலை போய் ஒரு வேலை வருகிறது!

'நாற்பதாவது வயதில் எவனொருவன் முட்டாளாக இருக்கிறானோ அவன் ஆயுள் முழுதும் முட்டாளாகவே இருப்பான்' என்று யாரோ - முட்டாள்தனமாக அல்ல - சொல்லி வைத்தனர். சாம்புவுக்கு நாற்பது வயது சரியாக ஆகியிருந்தது. அவனை எல்லாரும் பார்த்த மாத்திரத்தில் முட்டாள் என்று சொன்னார்கள். வழக்கமாக அவன் ஆபீஸ் மேனேஜர் மகர பூஷண ராவ், சாம்புவைக் கூப்பிடுவதென்றால், 'அந்த முட்டாளை வரச் சொல்!' என்றுதான் ஆபீஸ் பையனிடம் சொல்லுவார். ஆபீஸ் பையன் மறு பேச்சு பேசாமல் சாம்புவிடம் வந்து நிற்பான்.

விளாம்பழம் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? கொஞ்சம் பெரிய விளாம்பழத்தை நினைத்துக் கொள்ளுங்கள்; அதுதான் சாம்புவின் தலை! கன்றுக் குட்டிகள் அழகாகக் காதுகளை முன்புறம் வளைத்துக்கொண்டு பார்க்கும் அல்லவா? அந்த மாதிரிக் காதுகள் - குடலைபோல் - ஜாடிக் காதுகள் போல் துருத்திக் கொண்டு இருக்கும். கண்கள் ஒரு மாதிரியாக அரைத் தூக்கத்தைத் தேக்கிக்

கொண்டிருக்கும். இந்த லட்சணங்களுடன் ஒரு பித்தானில்லாத சட்டை, ஒரு பழைய கோட்டு, கிழிசல் குடை இவைகளைச் சேர்த்துக் கொள்ளுங்கள். இதோ சாம்பு பிரத்யட்சமாகி விட்டான்.

ஸ்ரீ திரிபுராந்தகா பேங்கில் கணக்கு வைத்துக் கொண்டிருந்தவர்கள் சாம்புவைக் கவனிக்காமல் இருக்க முடியாது. பேங்கின் கௌண்டரில் அவர்கள் காத்திருக்கும்போது, உள்ளே ஒரு மூலையில் மேஜையில் பரபரப்பாக எழுதுவதும், சற்று நின்று யோசிப்பதும், மறுபடியும் எழுதுவதுமாக, சாம்பு பதினேழு வருஷ காலம் வேலை பார்த்து விட்டான். இந்தப் பதினேழு வருஷத்தில் அவன் பேங்கில் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டு விட்டன. பேங்க் முதலாளி லக்ஷாதிகாரியாகிவிட்டார். எத்தனையோ குமாஸ்தாக்கள் வந்து எத்தனையோ குமாஸ்தாக்கள் போய்விட்டார்கள். சம்பளங்கள் உயர்ந்திருக்கின்றன; சம்பளங்கள் குறைந்திருக்கின்றன. பேங்க் கட்டிடம் மாறுதல்கள் அடைந்திருக்கிறது. ஏன், சாம்புவின் உருவத்தில்தான் எத்தனை மாறுதல்கள்! உச்சந்தலையில் ஒரு சிறு வழுக்கை தோன்றி, இப்போது பின் தலையில் அர்த்த சந்திர வடிவத்துக்கு வந்து விட்டது. இத்தனை மாறுதல்களுக்கிடையில் ஒன்றே ஒன்று மட்டும் மாறாமலேயே இருந்தது. அது சாம்புவின் வரும்படி தான். பதினேழு வருஷமாக நாற்பத்துமூன்று ரூபாய் சம்பளந் தான் வாங்கி வருகிறான் சாம்பு.

சாம்பு எழுதுவதை நிறுத்திவிட்டு யோசித்தான். 'இது என்ன எழுத்து! இது என்ன பிழைப்பு!' என்று வாய்விட்டுக் கூறினான். அவன் முகத்தில் மேகப் படலம்போல் ஏக்கம் வந்து சூழ்ந்து கொண்டது. தலையில் கையை வைத்துக்கொண்டு மறுபடி எழுதுவதற்குக் குனிந்தான்.

மேனேஜர் அறையிலிருந்து மணியடித்த சப்தமும், 'டேய்! அந்த முட்டாளை இங்கே வரச் சொல்!' என்ற குரலும் கணீரென்று கேட்டன. சாம்புவின் காதிலும் அவை நன்றாகக் கேட்டன.

டைப்பிஸ்ட் சுப்புணி, சிரிப்பை அடக்கிக்கொண்டு, 'மிஸ்டர் சாம்பு! மேனேஜர் உங்களைக் கூப்பிடுகிறாப் போல் இருக்கிறதே!' என்றான்.

சாம்புவுக்கு உதடுகள் துடித்தன. கோபத்தை அடக்கிக்கொள்ள முயன்று பார்த்தான். கோபித்துக்கொண்டால் வேலையே போய்

விடும். அப்புறம் வேறு வேலைக்கு உடனே எங்கே போவது? வீட்டில் உட்கார்ந்து சாப்பிடலாமென்றாலோ கையில் அதிக ரொக்கம் வைத்துக்கொள்ளவில்லை. நெற்றியில் வந்த வியர்வையைத் துடைத்துக்கொள்ள, கோட்டுப் பையிலிருந்து கைக்குட்டையை எடுத்து முகத்துக்குக் கொண்டு போனான். அந்த நிமிஷம் ஜவ்வாதின் நறுமணம் 'குப்'பென்று அடித்தது. அந்த மணத்துடன் சாம்புவின் அதிர்ஷ்டம் பிறந்துவிட்டது! அது அப்போது அவனுக்கு எப்படித் தெரியும்?

ஒரு நிமிஷத்தில் அவனுடைய அகங்காரமெல்லாம் ஆச்சரியமாக மாறி விட்டது. வாசனை! வாசனை! ஜவ்வாது வாசனை! ஏது ஜவ்வாது? அது எப்படி அந்தக் கைக்குட்டைக்குள் வந்தது? பதினேழு வருஷமாக அவன் ஜவ்வாது பூசியதில்லை. ஏன் ஜவ்வாது பூசியவர்களுடன் கூடப் பேசியதில்லை! வீட்டிலிருந்து நேரே பஸ்ஸில் ஏறி ஆபீஸுக்கு வந்திருக்கிறான். அன்று எடுத்த கர்ச்சீப். அதுவும், சென்னை பஸ்களில் ஜவ்வாதா தடவி வைத்து இருக்கிறது? இல்லை, ஆபீஸ் மேஜையில் ஜவ்வாதா? ஜவ்வாதுப் பூனை என்பார்களே, அதுதான் ஆபீஸில் நடமாடுகிறதா? இதெல்லாம் ஒன்றும் சாத்தியமானதாக இல்லையே!

பின், ஏது ஜவ்வாது வாசனை? எப்படி வந்தது அது?

மேனேஜர் அறைக்குப் போய்விட்டு வந்த பிறகும், அவன் மனம் ஜவ்வாதைப் பற்றியே நினைத்தது. அவன் எங்கெங்கெல்லாம் போய் வந்தோம் என்று எண்ணிப் பார்த்தான். சாம்பு யோசித்த போது, அவனுக்குத் திடீரென்று ஞாபகம் வந்தது. நடுவில் கீழே இறங்கி மோட்டார் காரேஜுக்குப் போனதுதான் அந்த ஞாபகம். சாம்பு, இடத்தைவிட்டு எழுந்தான். என்றுமில்லாத பரபரப்புடன் வேகமாக மோட்டார் காரேஜுக்குப் போனான்.

சாம்புவுக்குப் பிறந்தது முதலே துப்பறிய வேண்டும், துப்பறிபவனாகப் போக வேண்டும் என்ற ஆசை அபரிமிதமாக உண்டு. அந்த ஆசைதான் அவனை இப்பொழுது மேலும் மேலும் இப்படித் துப்பு அறியத் தூண்டிற்று.

கேரேஜிலிருந்த மோட்டாரின் பக்கத்தில் சென்று மோந்து பார்த்தான். ஆச்சரியம்! மோட்டார்க் கதவின் மீது வாசனை கமகமவென்று அடித்தது! கையில் கைக்குட்டையை வைத்துக் கொண்டு, கதவைப் பிடித்து இருந்ததால்தான் கைக்குட்டையில்

ஜவ்வாது பட்டிருக்கவேண்டும்! சாதாரணமாக யாருடைய ஆச்சரியமும் இதனுடன் தணிந்திருக்க வேண்டும். ஆனால், சாம்புவின் ஆச்சரியம் இதிலிருந்துதான் ஆரம்பமாயிற்று.

மோட்டார் கைப்பிடியில் ஏது ஜவ்வாது? ஜவ்வாது பூசிக் கொள்பவர் யாரும் ஆபீஸில் கிடையாது. பதினேழு வருஷ அநுபவத்தின் மீது ஆணையிட்டு, சாம்பு இதைச் சொல்ல முடியும்! பின் இந்த வண்டியில் ஜவ்வாது வருவானேன்? சாம்பு மோட்டாருக்குள் எட்டிப் பார்த்தான். அன்று திங்கள்கிழமை. முந்தின சனிக் கிழமையும் அவன் கேரேஜுக்கு வந்து இந்த மோட்டாரைப் பார்த்திருக்கிறான். அப்போது இந்த வாசனையைக் காணோம்!

உம். இதில் ஏதோ மர்மம் இருக்க வேண்டும். மோட்டாரிலிருந்த மைலேஜ் டயலை அகஸ்மாத்தாகச் சாம்பு கவனித்தான். 17,812 மைல் காட்டிற்று அது. சாம்புவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஏனென்றால், முந்தாநாள் அது 17,740 மைல் காட்டியது நன்றாக நினைவு வந்தது. சனிக்கிழமையிலிருந்து திங்கள்கிழமைக்குள் மோட்டார் 70 மைல் பிரயாணம் செய்திருந்தது!

எதற்காக அது அப்படிச் செய்தது? யார் அதை எடுத்துச் சென்றது? மோட்டாரை எடுப்பதென்றால் ஆபீஸுக்காகத்தான் எடுப்பது; அதுவும் ஆபீஸ் தினங்களில்தான்! ஞாயிற்றுக்கிழமையில் சொந்த உபயோகத்துக்காக இதை யார் கொண்டு போயிருக்கக் கூடும்?

யாராயிருந்தால் அவனுக்கென்ன? ஒன்றுமில்லை. சாம்பு வெறும் குமாஸ்தாவாயிருந்தாலும், இது ஒரு மர்மமாயிருக் கிறதல்லவா? சாம்பு திரும்பத் தன் மேஜைக்கு வந்து சேர்ந்தான். போக வர 72 மைல்; போக 36 மைல், வர 36 மைல். எந்த ஊராயிருக்கலாம்? சென்னையிலிருந்து செங்கல்பட்டு முப்பது மைல்தான். அட! இது தெரியாமல் போச்சே! செங்கல்பட்டு, செங்கல்பட்டேதான்!

நான்கு நாளைக்குப் பிறகு சாம்பு இதைப்பற்றி விசாரித்துப் பார்க்கலாமா என்று யோசனை செய்து கொண்டிருந்தபோது அவனைத் தேடிக்கொண்டு தந்திச் சேவகன் வந்தான். அவனுக்குக் கிடைத்த இந்தத் துப்பு விஷயங்களை முழுக்க மறக்கச் செய்துவிட்டது அது. அவன் மாமா மரணத் தறுவாயில் இருந்ததாக வந்த தந்திதான் அது.

சனிக்கிழமை மாலையில் செங்கல்பட்டுக்கு, தன் மாமாவைப் பார்க்கச் சாம்பு ஓடினான். மாமாவின் உடம்பு கவலைக்கிடமான தாகத்தான் இருந்தது. ஞாயிற்றுக்கிழமையன்று கையெழுத்து மறையும்போதே, சாம்பு செங்கற்பட்டுக் கடைத் தெருவில் மெல்ல நடந்து கொண்டிருந்தபோது, பழையபடி மோட்டார் நினைவு வந்தது. சில சமயம் ஒருவர் நினைப்பதும் அதே காரியம் நடைபெறுவதும் சகஜமாக நடப்பது உண்டல்லவா?

'பூம்! பூம்!' என்று மோட்டார் சத்தம் கேட்டு சாம்பு திடுக்கிட்டு ஒதுங்கினான். அது அவன் ஆபீஸ் மோட்டாரின் ஊதுகுழல் போலவேயிருந்தது. வியப்புடன் உற்றுநோக்கினான். மோட்டார் அவனைத் தாண்டிச் சென்றது. அது அவன் ஆபீஸ் வண்டிதான். கதவுப் பக்கத்தில் ஒரு யௌவன ஸ்த்ரீ உட்கார்ந்து சிரித்துக்கொண்டே பேசிக்கொண்டு போனாள். மோட்டார் ஓட்டியவன் அவளுக்கு அப்பால் இருந்தபடியால், சாம்புவுக்கு மங்கிய வெளிச்சத்தில் அடையாளம் கண்டுபிடிக்க முடிய வில்லை! மோட்டார் போய்விட்டது.

சாம்புவின் நெஞ்சம் திக்திக்கென்று அடித்துக்கொண்டது. அதன் அடியில் ஒருவிதப் பெருமையும் இருந்தது. மோட்டார் வண்டி மர்மமாக உபயோகப்படுவதில் ஆச்சரியம்! தான் தனது துப்பறி யும் சக்தியால் மர்மத்தைக் கண்டுபிடிக்கும் தறுவாயில் இருப்ப தில் ஆனந்தம்!

'ஆபீஸில் - அத்தனை மடையன்களும் - நம்மை முட்டாள் என்று சொல்கிறார்கள்! மேனேஜர் மகர பூஷணம் நம்மை 'முட்டாள்' என்றே கூப்பிடுகிறான்! இன்னொரு தரம் மட்டும் அப்படிக் கூப்பிடட்டும், பல்லை உடைக்கிறேன். இந்தப் பேங்கியிலேயே நமக்கு இன்ஸ்பெக்டர் வேலை கொடுத்தால் இருப்பது, இல்லாவிட்டால் ராஜிநாமா செய்வது!' என்று சாம்பு தீவிரமாக எண்ணிக்கொண்டான்.

மறுநாள் திங்கள்கிழமை. சாம்பு ஆபீஸுக்கு வந்ததும் மற்றோர் ஆச்சரியம் காத்திருந்தது. இந்த மோட்டார் மர்மம் முழுதுமே தானாகச் சாம்புவிடம் சிக்கிக்கொள்வதென்று தீர்மானித்து விட்டது போலும்! அவன் கண்ணில் முதலாகப் பட்டது பெரிய பச்சை லெட்ஜர். அதில் ஆபீஸுக்காகச் செலவழிக்கப்படும் இனங்கள் குறிப்பிடப்பட்டிருக்கும். சாம்புதான் அதை எழுது பவன். சென்ற சனிக்கிழமை போகும்போது, ஞாபகமாக

ஷெல்பின் மேல் தட்டில் வைத்துவிட்டுப் போயிருந்தான். இன்று அது கீழ்த்தட்டுக்கு வந்திருந்தது! சனிக்கிழமை ஐந்தரை மணிக்கப்புறம், திங்கள்கிழமை பத்து மணிக்கு முன்பு யாரோ அதை எடுத்திருக்க வேண்டும். சந்தேகமில்லை! அடுத்த எண்ணம் சாம்புவுக்கு வந்தது. இதற்கும் மோட்டார் மர்மத்துக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா? 'உண்டு' என்றுஅவன் அந்தராத்மா சொல்லியது.

இம்மாதிரி எண்ணத்தில் லயித்திருக்கும்போதுதான் மேனேஜர் மகரபூஷணம் மணியடித்து, 'அந்த முட்டாளைக் கூப்பிடு!' என்றார்.

சாம்புவின் ஆவேசம் எல்லைமீறிப் போய்விட்டது. ரத்தம் கோபத்தில் மண்டைக்கேறி, அவன் திருஷ்டியை மறைத்தது. அந்த லெட்ஜரைத் தூக்கிக்கொண்டு மேனேஜர் அறைக்குள் படபடப்புடன் சென்றான்.

'நீங்கள் கூப்பிடுவது நன்றாயில்லை!' என்றான், சாம்பு தைரியமாக!

மகரபூஷணம் வியப்புடன் பார்த்தார். சாம்புவுக்கு - அசட்டுச் சாம்புவுக்கு - கோபம் வருகிறதென்றால் வேடிக்கையாக இருக்கிறதல்லவா? அந்த ஹாஸ்யத்தை முழுதும் அனுபவிக்க அவர் தீர்மானித்துவிட்டார்.

'அட! உமக்குப் பிடித்திருக்கிற பேர் என்று அல்லவா நினைத்தேன்?' என்றார் அவர்.

'ஹூம்! பிடித்திருப்பதும் பிடிக்காமலிருப்பதும் தெரியச் சொல்கிறேன். நீங்கள் மாத்திரமில்லை. இந்த ஆபீஸில் எத்தனையோ மடையன்கள் என்னை முட்டாள் என்று நினைத்துக் கொண்டு இருக்கிறான்கள். போன சனிக்கிழமைக்கு முந்தின சனிக்கிழமை, எவனாவது கேரேஜில் நான் கண்டதைக் கண்டிருப்பானா?'

மேனேஜர் சிரிப்பை அடக்கிக்கொண்டு, 'என்னத்தைக் கண்டீர்? காண்டாமிருகம் முட்டையிட்டிருந்ததா?' என்றார்.

'அதைவிட ஆச்சரியமான விஷயம்! ஆபீஸ் மோட்டார் சனிக்கிழமை சனிக்கிழமை செங்கல்பட்டுக்குப் போகிறதே, யாருக்காவது தெரியுமா?'

'அது உமக்கெப்படித் தெரியும்?'

'நான் முட்டாள் என்கிறீர்கள்! ஒரு ஜவ்வாதுப் பொட்டிலிருந்து இவ்வளவு தூரம் கண்டுபிடித்திருக்கிறேன். என் கைக்குட்டையிலிருந்த ஜவ்வாது, மோட்டார் கதவிலிருந்து வந்ததென்று கண்டுபிடித்தேன். மோட்டார் செங்கல்பட்டு போகிறதை அந்த மோட்டாரின் மைலேஜ் டயலிலிருந்து கண்டுபிடித்தேன். செங்கல்பட்டுக்கே போய், ஒரு பெண் அதில் போவதைக் கண்டுபிடித்தேன்.'

மேனேஜர் இதுவரையில் அரைக் கண் மூடிக்கொண்டு கேட்டவர் நிமிர்ந்து உட்கார்ந்தார். சாம்பு சொல்லிக்கொண்டே போனான். 'பதினேழு வருஷமாக என்னை முட்டாள் என்று சொல்லிக்கொண்டு வந்திருக்கிறீர்கள், இப்போது தெரிகிறதா யார் முட்டாளென்று!'

'மிஸ்டர் சாம்பு! மெல்லப் பேசும்! உட்கார்ந்துகொண்டு மெதுவாக விஷயத்தைச் சொல்லும். நான் உம் விஷயத்தில் தவறாக நினைத்திருக்கிறேன் என்று தோன்றுகிறது. இன்னும் என்ன கண்டுபிடித்திருக்கிறீர்? மோட்டாரை ஓட்டியது யார்? பார்த்தீரா?'

'அதை அடுத்த வாரம் சொல்லுகிறேன். அதற்குள் இன்னும் என்ன நடக்கப் போகிறதோ?'

'அதெப்படிச் சொல்கிறீர்?'

'எப்படியா? நேற்று இந்த லெட்ஜரை எடுத்து யாரோ விஷமம் செய்திருக்கிறார்கள். பிரித்துப் பார்த்தால் ஒருகால் பல வருஷ மர்மங்கள் வெளியாகலாம்.'

மேனேஜர் 'உம்?' என்றார், புருவத்தை நெறித்து. 'மிஸ்டர் சாம்பு! உம்முடன் நான் இத்தனை நாளாக நெருங்கிப் பேசியதில்லை. இப்போதுதான் உம்முடைய கெட்டிக்காரத்தனம் தெரிகிறது. நீர் எப்போதோ இன்ஸ்பெக்டராகி நூறு நூற்றைம்பது சம்பாதித்துக் கொண்டிருக்க வேண்டியவர். எனக்கு ரொம்ப வருத்தமாயிருக்கிறது.'

சாம்பு மேனேஜரைப் பார்த்தான். மேனேஜர் சாம்புவைப் பார்த்தார். 'சரி, உம் விஷயமாக நான் முதலாளியிடம் பேசுகிறேன். ஒரு வாரத்தில் உம் வேலை மாறாவிட்டால் நான் இங்கிருப்பதில்லை! என்றார். பிறகு அந்த லெட்ஜரை வாங்கி,

அதை இப்படிக் கொடும்! இந்த மோட்டார் விஷயத்தை நானே கவனிக்கிறேன். இது வேறு யாருக்கும் தெரிய வேண்டாம். யாரிடமாவது சொன்னீரா?' என்றார்.

'ஈ காக்காய்க்குத் தெரியாது!'

'பார்த்தீரா? நீர் புத்திசாலி என்பதற்கு இது இன்னோர் அடையாளம். நான் ஏன் தெரிய வேண்டாம் என்று சொன்னேன், சொல்லும் பார்க்கலாம்!'

'வெளியில் தெரிந்தால், குற்றவாளி தப்பித்துக்கொள்ளப் பார்ப்பான்!' என்றான் சாம்பு.

'கொயிட் ரைட்! கொயிட் ரைட்! நீர் போம்! இன்னும் ஒரு வாரத்துக்குள் உமக்கு ஆர்டர் வரும். எதிர்பார்த்துக் கொண்டிரும். நான் சொன்னதெல்லாம் இரகசியமாயிருக்கட்டும்.'

சாம்பு தன் இடத்தில் வந்து உட்கார்ந்தான். சாம்புவின் முகத்தில் ஆனந்தம் தாண்டவமாடியது. ஒரு வாரத்தில் இன்ஸ்பெக்டர் வேலை என்றால் ஏன் சந்தோஷம் வராது?

இந்தச் சம்பவத்துக்கு மறுநாள் மேனேஜர் ஆபீஸுக்கு வரவில்லை. அதற்கு அடுத்த நாளும் வரவில்லை. அவருக்குத் தேக அசௌக்கியமென்று சாம்பு கேள்விப்பட்டான். ஆனால், ஆபீஸ் குமாஸ்தாக்கள் கூடிக் கூடிப் பேசுவது அவன் சந்தேகத்தைக் கிளப்பிவிட்டது. விசாரித்தபோது அவனுக்குத் துணுக்குற்று மயிர்க்கூச்செறிந்தது. மேனேஜர், ஆபீஸ் பணத்தை ஒரு லகரத்துக்குக் கொள்ளையடித்துக்கொண்டு ஓடிவிட்டார் என்பதுதான் அந்தச் செய்தி. சில வருஷங்களாகவே இவர், ஆபீஸைக் கொள்ளையடித்து வருகிறார் என்றும் தெரிந்தது. சாம்புவுக்குத் தலை சுழன்றது.

'ஆஹா! இப்போதல்லவா தெரிகிறது!' என்று எண்ணினான். அவன் துப்பறியும் சாமர்த்தியந்தான் மேனேஜரை இந்த ஓட்டத்துக்குக் கொண்டுவந்து விட்டிருக்கிறது. தன்னைப் பேச்சால் ஏமாற்றிவிட்டு ஓடியிருக்கிறார் என்பது சாம்புவுக்குப் புரிய வெகுநேரம் பிடிக்கவில்லை.

விரைந்து சென்று, மற்ற குமாஸ்தாக்களிடம், 'மேனேஜர் ஓடினாரே! யார் ஓட வைத்தது தெரியுமா?' என்று கேட்டான் பரபரப்புடன்.

'ஆபீஸ் பணந்தான் ஓட வைத்திருக்கிறது!' என்றார்கள் அவர்கள்.

'இல்லவே இல்லை! அவரை ஓட வைத்தவன் உங்களுக்கு முன்னால் நிற்கிறான்! எனக்கும், என் துப்பறியும் சக்திக்கும் பயந்துகொண்டுதான் ஓடிவிட்டார்.'

அத்தனை பேரும் சிரித்தார்கள். 'உமக்கு அந்த மேனேஜர் முட்டாள் என்று பொருத்தமாகத்தான் பேர் வைத்தார்!' என்றார்கள்.

'அப்படித்தான் தோன்றும்! இந்த ஆபீஸில் என்னைத் தவிர அத்தனை பேர்களுந்தான் முட்டாள்கள்! உங்களில் யாருக்காவது ஜவ்வாது வாசனை தெரியுமா? தெரிந்திருந்தாலும் அதை மோட்டார் வரையில் மோப்பம் பிடித்திருப்பீர்களா? மோட்டாரைச் செங்கல்பட்டு வரைக்கும் தொடர்ந்து போயிருப்பீர்களா? ஆபீஸ் லெட்ஜருக்கும் மோட்டாருக்கும் சம்பந்தம் இருக்கிறதென்று யாருக்காவது மூளையில் பட்டிருக்குமா? இத்தனையும் நான் ஒருவன்தான் தெரிந்துகொண்டேன். யார் ஐயா முட்டாள்?' என்று சவால் விடுத்தான்.

ஆனால், இவன் சவாலை ஒருவரும் லட்சியம் செய்யாமல் வேறு திசையைப் பிரமையுடன் நோக்கிக் கொண்டிருந்தார்கள். அங்கே திரிபுராந்தகா பேங்கின் டைரக்டர் பரமேசுவர முதலியார் ஒரு வார்த்தை விடாமல் கேட்டுக்கொண்டு நின்றுகொண்டிருந்தார்.

சாம்பு முடித்ததும், தமது அறைக்கு அவனை அழைத்துப்போய், 'ஏன் ஐயா? உமக்கு விஷயம் முன்னாலேயே தெரியுமா' என்று கேட்டார்.

'ஓ! எல்லாம் தெரியுமே?'

'எப்படித் தெரியும்?'

'துப்பறிந்தேன். எனக்குத் துப்பறியும் சக்தி உண்டு.'

'அடச்சே! உம்ம துப்பும் உம்ம மூஞ்சியும்! என்னிடம் ஏன் ஐயா ஒரு வார்த்தை சொல்லவில்லை?'

'மேனேஜரிடம் சொன்னேன். இன்ஸ்பெக்டர் வேலை தருவதாகச் சொல்லியிருந்தார். அதனால்தான்.'

'நீர் நாசமாய்ப் போனீர்! உம்மால்தான் ஐயா அவன் ஓடினான்! என் முன்னால் நிற்காதேயும்! போம் தொலைந்து!' என்றார்.

சாம்பு தன் முதலாளியின் நன்றி கெட்ட தனத்தை வெறுத்துக் கொண்டு வரும்போது, முதலாளி அவனை முட்டாள் என்று சொன்னது அவன் காதில் விழுந்தது.

சாம்பு அன்று மாலை வேலையிலிருந்து நீக்கப்பட்டான். ஆனால் அவனுக்கு வேறு வேலை காத்திருந்தது. அதை அவன் தானே மேற்கொண்டான். அது துப்பறியும் வேலைதான் என்று சொல்ல வேண்டியதில்லை!

2

முதல் செக் வருகிறது!

சாம்பு துப்பறியும் தொழிலை மேற் கொண்டபோது மிகுந்த உற்சாகத்துடன்தான் இருந்தான். நவீனங்களில், துப்பறிபவர்கள் கைகளில் மட்டுந்தான் தடயங்கள் எல்லாம் சிக்குவதையும், போலீஸ்காரர்கள் திண் டாடித் தெருவில் நின்று திணறும்போது, இவர்கள் மட்டும் வெற்றியுடன் புகழ் மாலை யும் பணப் பையுமாய்த் திரும்புவதையும் படித்துப் படித்து, அவனுக்கு அவ்வளவு நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது. ஆனால், நாளாக நாளாக அது குறைவாகிக் கொண்டு வரத் தொடங்கியது. ஏனெனில், அவன் எதிர் பார்த்தபடி ஊரில் கொலைகளோ, கொள்ளை களோ நடக்கவில்லை. பத்திரிகைகளை வாங்கி ஒரு வரி விடாமல் படித்து வந்தான். அவற்றிலாவது ஒரு மர்மம் வெளியாக வேண்டுமே! கிடையாது.

சரி, இப்படியெல்லாம் பார்த்தால் கேஸு கிடைக்காது. மாறுவேஷம் போட்டுக் கொண்டு போய் பிறருக்குத் தெரியாமல் கவனிக்க வேண்டும் என்று தீர்மானித்தான். ஆனால், இவன் மாறுவேஷம் போட்டுக்

கொண்டவுடன் இவனை முன்பு கவனிக்காமல் இருந்தவர்கள் கூடக் கவனிக்கத் தொடங்கி விட்டார்கள்! சாம்பு பின் தொடரத் தொடங்கிய பேர்வழிகள் சிலர், பலமாய் ஆட்சேபிக்கவும் ஆரம்பித்தார்கள். தடிக்கம்புடன் சென்ற ஓர் ஆசாமி, சாம்புவைக் கூப்பிட்டு, 'இனிமேல் நான் போகிற இடத்தில் எங்கேயாவது உன் மூஞ்சி தென்பட்டால், இந்தத் தடிக்கம்பு முறிஞ்சு போயிடும்!' என்று எச்சரிக்கை செய்யவே, சாம்புவுக்குத் திகில் ஏற்பட்டது. தடிக்கம்பு முறிவதற்குள்ளாகத் தன் மூஞ்சி சிதறி விடும் என்பதை அவன் தெரிந்துகொண்டு, பின்தொடர்வதை நிறுத்தினான். உற்ஸாகம் செத்துப்போய், சாம்பு ஒருநாள் சாயங் காலம் ஒரு பார்க் பெஞ்சியில் கண்ணை மூடிக்கொண்டு சாய்ந்து கிடந்தான்.

வேகமாக இருள் சூழ்ந்துகொண்டு வந்தது. இன்னும் சற்று நேரம் அதே நிலையில் இருந்தானானால் அவன் தூங்கிக்கூடப் போய் இருப்பான். தனக்குப் பின்புறம் இருவர் பேசும் குரல் கேட்டு, திடுக்கிட்டு விழித்தான். ஆனால், மறு நிமிஷம் திரும்பவும் கண்ணை மூடிக்கொண்டான்.

ஒரு பெண் குரல் சொல்லிற்று; 'அப்படி வெட்டித் தள்ளினது எனக்குக் கொஞ்சமும் இஷ்டமில்லை!'

'நீ சொன்னபடிதானே நான் செய்தேன்? உடலெல்லாம் ஒரே ரத்தக் கறையாக இருக்கிறதேன்னு சொல்றயா?' என்று கேட்டது ஓர் ஆண் குரல்.

'அது எக்கேடோ கெட்டுப் போகட்டும். யார் கண்ணிலும் படா மல் அதை மறைத்துவைக்க வேண்டுமே என்றுதான் இப்போது கவலையாக இருக்கிறது. ஐயோ! ஏன் நான் அப்படிச் சொன்னேன் என்று இப்போது வேதனைப்படுகிறேன். திடீர்னு அப்படி வெட்டிப் போட்டுவிட்டீர்களே!'

'வெட்டினால் என்ன? யார் என்னை என்ன பண்ணுகிறது? அதைச் சாமர்த்தியமாய் வேறு யார் தலையிலாவது கட்டிவிட மாட் டேனா? நம்ம போலீஸ் இன்ஸ்பெக்டருக்குத் தெரிந்தால் இலேசில் விடமாட்டார். ஒன்றும் சாயவில்லையென்றால், ஒரு கல்லைக் கட்டி நம் வீட்டுக் கொல்லைக் கிணற்றில் போட்டு விடு கிறேன். சரிதானே?' இப்படிச் சொல்லிக்கொண்டே அவர்கள் அங்கிருந்து மெல்ல நகர்ந்தார்கள். சற்றுத்தூரம் செல்லும்வரை

பல்லைக் கடித்துக்கொண்டு தூங்குவதுபோல் பாசாங்கு செய்த சாம்பு சடக்கென்று கண்ணை விழித்து நிமிர்ந்து உட்கார்ந்தான். அவன் நெஞ்சு திக்திக்கென்று அடித்துக் கொண்டது. ஆகா! இத்தனை நாளாக எதிர்பார்த்த கேஸ் ஒன்று இப்போதுதான் கையில் சிக்கியது! ஓர் ஆணும் ஒரு பெண்ணும் ஓர் உடலைக் கிணற்றில் தள்ளப் போகிறார்கள். அது வெட்டப்பட்டுக் கிடக்கிறது. ஒரே ரத்தக் கறை! போலீஸ் இன்ஸ்பெக்டருக்குத் தெரிந்தால் இலேசில் விடமாட்டார்! இன்னும் என்ன ருசு வேண்டும்? 'கொலையாளிகளைப் பின் தொடர்ந்து போ! வந்தது வரட்டும்!' என்று அவன் அந்தராத்மா ஆக்ஞையிட்டது. சாம்பு உடனே கிளம்பி, சுமார் நூறு கஜ தூரத்தில் அவர்களை விடாமல் பின்தொடர்ந்து செல்லத் தொடங்கினான்.

அவர்கள் சாம்புவைக் கவனித்ததாகவே தெரியவில்லை. நேரே ரஸ்தாவைக் கடந்து சென்றார்கள். இப்படியாகச் சுமார் பதினைந்து நிமிஷம் சென்றிருப்பார்கள். அவர்கள் ஒரு முறை கூட, திரும்பியே பார்க்கவில்லை. சாம்புவுக்கும் தைரியம் அதிகமாகி வந்தது. இப்போது ரஸ்தா மற்றொரு பெரிய ரஸ்தாவின் குறுக்கே சென்றது. சேருமிடத்தில் டிராம் வண்டியொன்று வந்து நின்றதற்கும், தம்பதிகள் போய்ச் சேர்ந்ததற்கும் சரியாக இருக்கவே, அவர்கள் சட்டென்று அதற்குள் ஏறிக் கொண்டார்கள்.

சாம்பு, பின்னால் வந்து கொண்டிருந்தவன், இவர்கள் டிராமில் ஏறுவார்கள் என்பதை எதிர்பார்க்கவேயில்லை. டிராம் மெல்ல நகரத் தொடங்கவே, சாம்பு தன்னையும் அறியாமல் அதைத் துரத்திக்கொண்டு ஓடலானான். ஏன் ஓடினோம், எப்படி ஓடினோம் என்பது சாம்புவுக்கு இப்போதுகூட விவரமாகத் தெரியாது. குடல் தெறிக்க ஓடி, டிராமின் கைப்பிடியைப் பிடித்தான்; டிராம் நிற்காமலே போயிற்று. அதோடு சாம்பு ஓடினான். டிராமின் வேகம் அதிகரித்தது. சாம்புவின் வேகமும் அதிகரித்தது. தெருவில் போகிறவர்கள் கூச்சலிட்டார்கள். டிராம் கண்டக்டர் அலறினான். சாம்பு லட்சியம் செய்யவில்லை. எங்கிருந்தோ அமாநுஷியமான பலம் அவன் உடலில் புகுந்துகொண்டது. கடைசியாக, ஒரு பெரும் பிரயத்தனம் செய்து தாவி, அவன் டிராமிலும் ஏறிவிட்டான்!

வண்டியில் சென்றுகொண்டிருந்த ஜனங்களில் பெரும்பாலோர் சாம்புவைக் கவனித்தார்கள். சாம்பு யாரையும் கவனிக்காமல், தான் பின்பற்றி வந்த தம்பதிகளையே பார்த்தான். அவர்கள்

வேறுபுறம் திரும்பிக் கொண்டிருந்ததைக் கண்ட பிறகுதான், அவன் நெஞ்சத்தில் அமைதி ஏற்பட்டது.

பதினைந்து நிமிஷ பிரயாணத்துக்குப் பிறகு அவர்கள் இறங்கினார்கள். இதற்குள் நன்றாக இருட்டிவிட்டபடியால் சாம்பு பயமின்றி வேறொரு வழியாக இறங்கினான். இப்போது பின்தொடர்வதும் அதே காரணத்தினால் இலகுவாகிவிட்டது. சாம்பு விடாமுயற்சியுடன் உழைத்தான். உழைப்பின் பலனாக அவர்கள் நுழைந்த பங்களாவையும் கண்டுகொண்டான்.

சற்று பொறுத்து, மெல்லத் தடவிக்கொண்டே சென்றதில், பங்களாவின் வெளி கேட்டில் ஒரு பித்தளைப் பிளேட் பொருத்தப்பட்டிருந்தது சாம்புவுக்குத் தெரிந்தது. அதில் என்ன பெயர் எழுதியிருக்கிறதென்று கூர்ந்து கவனிக்க, சாம்பு எத்தனித்தான். அப்போது அவன் முற்றும் எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்தது. பின்னாலிருந்து ஒரு கை அவன் பிடரியை இறுகப் பிடித்துக் குலுக்கியது. 'அடேய்! போக்கிரிப் பயலே! என்ன செய்கிறாய் அங்கே? வேவு பார்க்க வந்தாயா?' என்று ஒரு குரல் அதட்டிற்று. சாம்பு திக்பிரமித்துப் போய்விட்டான். அவனுக்கு, திரும்பிப் பார்க்கத் தைரியமில்லை. ஆனால், அவன் ஊகம் என்னவோ, நம்மைப் பிடித்திருப்பவன் அந்தக் கொலைகாரன்தான் என்று சொல்லிற்று. தொடர்ந்து நடந்த சம்பவங்களைச் சொல்ல இரண்டு நிமிஷம் பிடிக்கும். ஆனால், அவை நடந்தது இரண்டு விநாடிகளில்தான். ஆகாயத்தில் தூக்கிச் செல்லப்பட்டுப் பொத்தென்று தரையில் விழுந்தது போன்ற உணர்ச்சிதான் சாம்புவுக்கு ஏற்பட்டது. சுய உணர்வு வந்தபோது, தான் ஓர் இருட்டறையில் கை கால் கட்டுண்டு கிடப்பதை அவன் உணர்ந்தான்.

எங்கேயோ பத்து மணி அடித்து ஓய்ந்தது. சாம்பு இருந்த அறைக் கதவு திறந்து கொண்டது. அரை நிமிஷத்துக்கெல்லாம் கிளிக் என்ற சத்தமும் கேட்க, பால் போன்ற வெளிச்சம் அறை முழுவதும் பரவியது. சாம்பு, கண்களைச் கசக்கிக்கொண்டு பார்த்தான். அறை நடுவில், அந்த ஸ்த்ரீ நின்றுகொண்டிருந்தாள். அவள் கையில் ஒரு ரிவால்வர் இருந்தது. அவள் புதிதாக அணிந்து வந்திருந்த ஜார்ஜெட் புடைவையும் வைர நகைகளும் மின்சார வெளிச்சத்தில் ஜ்வலித்தன.

அவள், கை விரலைத் தன் உதடுகளில் அமுக்கி, 'பேசாதே!' என்று சமிக்ஞை செய்தாள். பிறகு நெருங்கி வந்து, 'ஓய்!

முட்டாள் மனிதரே! உம் உயிர் இன்னும் ஒரு மணிக்கெல்லாம் போகப் போகிறது!' என்றாள்.

சாம்புவின் நெஞ்சு திக்திக்கென்று அடித்துக்கொண்டது. உதடுகள் துடித்தன. அழுகை வரும்போல் இருந்தது. அந்த ஸ்த்ரீ மேலும் சொன்னாள்.

'உம்மைப் பிடித்துப் போட்டிருப்பவர் என் கணவர். பிடிவாதமாக உம்மைக் கொன்றுவிட வேண்டுமென்று சொல்கிறார். இங்கிருந்து தப்பித்துக்கொள்ளலாம் என்ற நம்பிக்கை ஏதாவது நீர் வைத்திருந்தால் அதை நீர் கை விட்டுவிட வேண்டியதுதான். ஏனென்றால், வெளியில் மாங்குடி முண்டன் காவல் இருக்கிறான். ஒரு பிடியில் உம்மைப் பிழிந்து விடுவான்.'

'முண்டனா?' என்று குழறினான் சாம்பு. இந்தச் சமயத்தில் ஒரு கோரச் சிரிப்பு வெளியில் கேட்டது.

'கேட்டீரா! அவன்தான் முண்டன். ஆனால், நான் உம்மை எப்படியாவது காப்பாற்றுவதென்று தீர்மானித்து விட்டேன்.

அதனால் என் கணவர் என்ன கோபித்துக் கொண்டாலும் தாங்கிக் கொள்கிறேன். ஏனென்றால், அப்பாவியாகிய நீர் அநாவசியமாகச் சாவதில் எனக்கு இஷ்டமில்லை. இப்போது உம் கட்டை அவிழ்த்துவிடப் போகிறேன். என்ன சொல்கிறீர்? நான் கட்டவிழ்த்த பிறகு ஏதாவது விஷமம் செய்தீரோ, இதோ இந்த ரிவால்வர் உம் உயிரைக் குடித்துவிடும், தெரியுமா?'

சாம்பு ரிவால்வரைப் பார்த்து நடுங்கினான். அடுத்து வந்த இரண்டு நிமிஷங்களுக்குள் அவன் கைக் கட்டுகள் அவிழ்க்கப்பட்டுக் கீழே கிடந்தன. சாம்பு கைகளை நீட்டிப் பார்த்துக் கொண்டான். அதற்குள்ளாக அந்த ஸ்த்ரீ வாசற்படி பக்கம் போய்விட்டு, இரண்டு கோப்பைகளில் சர்பத்து கலந்து ஒரு தட்டில் வைத்துக்கொண்டு வந்தாள்.

'இதில் ஒரு கோப்பை நீர் சாப்பிடும்; நான் ஒன்று எடுத்துக் கொள்கிறேன்' என்றாள். அவள் ஒன்று சாப்பிடுவது அவனுக்கு நம்பிக்கை ஏற்படுவதற்காகத்தான் என்று சாம்பு நினைத்தான். ஆனால், அதே க்ஷணத்தில் ஒரு பெருத்த சந்தேகமும் அவனைப் பற்றிக்கொண்டது. விஷம்! அவனுக்குக் கொடுக்கப்படும் கோப்பையில் விஷம் இருக்கலாம்; அவள் சாப்பிடும்

கோப்பையில் விஷம் இல்லாமல் இருக்கலாம். இப்படி லகுவாக அவனைத் தீர்க்க, அந்தக் கொலைபாதகி தீர்மானித்திருக்க வேண்டும்! அதற்காகவே தன்னைக் காப்பாற்றுவதாகச் சொல்லி ஏமாற்றுகிறாள்! சாம்பு தயங்கினான். ஓர் ஆபத்தில் தப்பி வேறொன்றில் அல்லவா மாட்டிக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இந்தச் சமயத்தில் தெய்வ சங்கல்பமாக அறைக்கு வெளியில் முண்டன் அந்த ஸ்த்ரீயை அவசரமாக அழைக்கவே, தன் கையிலிருந்த கோப்பையை வைத்துவிட்டு, அவள் வேகமாக வெளியே சென்றாள். சாம்பு உடனே தன் கையிலிருந்த கோப்பையைக் கீழே வைத்துவிட்டு, கீழே இருந்ததைச் சட்டென்று எடுத்துக் கொண்டான்! மறு க்ஷணமே ஸ்திரீ மறுபடி பிரவேசித்து, நடந்ததைச் சற்றும் அறியாதவளாய் கீழிருந்த கோப்பையைக் கையில் எடுத்துக்கொண்டாள்.

'உம். இன்னும் சாப்பிடவில்லையா? நான் சாப்பிடுகிறேன், பாரும்!' என்று கூறிக்கொண்டே மடமடவென்று அவள் அதைக் குடித்தாள். சாம்புவின் மார்பு அடித்துக் கொண்டது. என்ன நேரிடுமோ என்ற திகில் அவனைப் பற்றிக்கொண்டது. ஆனால், அவன் எதிர்பார்த்ததற்கு முன்னதாகவே பலன் ஏற்பட்டது. அந்த ஸ்த்ரீ உடனே அப்படியே அந்த இடத்திலேயே சுருண்டு கீழே விழுந்தாள்!

'ஆஹா! அந்தப் பானத்தை அருந்தியிருந்தால் நாமும் அப்படித்தானே விழ வேண்டும்!' என்று நினைத்தபோது சாம்புவுக்குக் கால்கள் எழும்ப மறுத்தன. அங்கே நின்ற ஒவ்வொரு நிமிஷமும் அபாயம் நெருங்கிக் கொண்டிருந்ததென்ற எண்ணத்தால் தைரியத்தை வருவித்துக்கொண்டு, அவள் கையிலிருந்த ரிவால்வரையும் பிடுங்கிக்கொண்டு, ஜன்னல் வழியாக இறங்கி, சாம்பு கேட்டண்டை வந்து விட்டான். 'அப்பாடா! பிழைத்தோம்!' என்று சாம்பு ஒரு பெருமூச்சு விட்டான். அதே க்ஷணம் அவன் கையைப் பலமாக ஒரு போலீஸ்காரன் பிடித்தான்! 'என்னப்பா எங்கே வந்தே?' என்றான் அவன்.

இந்தத் தடவை அகப்பட்டுக்கொள்வதில்லை என்று சாம்பு தைரியமாக எண்ணினதுடன், கைத் துப்பாக்கியையும் உபயோகிக்கத் துணிந்து திடமானான். அதில் கிளிக் என்ற சப்தம் கேட்டது. ஆனால், அந்தப் போலீஸ்காரன் ஏனோ செத்துப்போய் கீழே விழவில்லை! சாம்புவை இன்னும் கெட்டியாகப்

பிடித்துக்கொண்டு பங்களாவுக்குள்ளே தள்ளிக் கொண்டு போனான். 'ஐயோ! மறுபடியும் அந்தப் பிசாசுகளிடமா போகிறோம்!' என்று சாம்பு குற்றுயிரானான்.

வீட்டின் நடு ஹாலில் அந்த மனிதர் உட்கார்ந்திருந்தார்.

'இந்தப் பேர்வழி உங்கள் வீட்டிலிருந்து ஏறிக் குதித்து வெளியே ஓடினான். சார் பிடித்து வந்தேன்!' என்று போலீஸ்காரன் அவரிடம் சொல்ல ஆரம்பித்தான்.

'ஐயோ! போலீஸ்காரரே! நாம் இங்கிருந்து ஓடிப்போய் விடுவோம். இவன் கொலைகாரன். உமக்குத் தெரியாது! இந்த வீட்டிலே கொலை செய்து உடலைப் போட்டு வைத்திருக்கிறான். நம்மையும் கொன்று விடுவான்!' என்று அலறினான் சாம்பு.

'ஏ! சும்மா இரு!' என்று போலீஸ்காரன் அவன் கையை ஒரு முறுக்கு முறுக்கவே சாம்பு ஒய்ந்தான்.

அந்த மனிதர், 'அடேடே! சித்தப்பா எப்படி தப்பித்துக் கொண்டார்? இப்பதானே மேல்மாடி அறையிலே தள்ளிக் கதவைச் சாத்தினோம்!' என்றார் சாம்புவைப் பார்த்து.

'இவர் உங்கள் சித்தப்பாவா?' என்று கேட்டான் போலீஸ்காரன்.

'ஆமாம்; ஆமாம். அவரை அறையிலே போட்டு அடைத்து வைப்பது உனக்குத்தான் இதற்குள் தெரிந்திருக்குமே! ஆசாமி கொஞ்சம்..' என்று சொல்லி நெற்றிப்பொட்டை விரலால் தட்டிக் காண்பித்தார்.

'சரிதான், புரிந்துகொண்டேன்! பைத்தியமா?'

சாம்பு கதறினான் : 'ஐயையோ! நான் பயித்தியமேயில்லை! இவன் சித்தப்பாவுமில்லை! இவன் கொலைகாரன், கொலைகாரன்!'

'பார்த்துக்கொள்!' என்றார் மனிதர்.

'சரிதான்! துப்பாக்கி வைத்துக்கொண்டல்லவா விளையாடுகிறாரு!'

'துப்பாக்கியா? அது விளையாட்டுத் துப்பாக்கிதான். வேடிக்கைக்குக் கொடுத்து வைத்திருக்கிறோம். அதனால் ஒன்றும் அபாயமில்லை.'

போலீஸ்காரன் போவதற்குத் திரும்பினான்.

'ஐயோ! என்னை விட்டுட்டுப் போகாதேயேன்!' என்று சாம்பு அலறினான். வீடே இடிந்து விழுவதுபோல் தோன்றியது. போலீஸ்காரன், 'அப்படியா சேதி? நல்ல முத்தின பைத்தியந்தான்!' என்று முணுமுணுத்துக்கொண்டு வேகமாக வெளியேறினான்.

•

இனிக் கத்துவதால் உபயோகமில்லை என்று நினைத்த சாம்பு ஒய்ந்தான். ஆனால், மற்றோர் ஆச்சரியம் காத்திருந்தது. உள்ளேயிருந்து ஒரு ஸ்த்ரீ வந்தாள். அவள் யாருமில்லை. சாம்பு விஷம் கொடுத்துவிட்டதாக நினைத்த அதே ஸ்த்ரீதான்! ஆனால், இப்போது சாதாரணப் புடைவைதான் உடுத்தியிருந்தாள். சாம்புவின் மனத்தில் இதுவரை ஒரு பெரும் பயம் இருந்தது. தன் மனைவியைக் கொன்றதற்காக அவள் புருஷன் தன்னைக் கொல்லாமல் விடமாட்டான் என்பதுதான் அந்தப் பயம்.

சாம்புவுக்கு அகாரணமாகச் சிரிப்பு வந்தது. ஏன் வந்தது அந்த ஆபத்தான நிலையிலும் என்றால், அப்போதுதான் அவனுக்கு அதிர்ஷ்ட தேவதை கடாக்ஷிக்கத் தொடங்கியிருந்தாள்! சாம்பு கடகடவென்று சிரித்தான். பத்து நிமிஷமாகியும் அவன் ஓயவில்லை.

அந்தப் 'பொல்லாத' கொலைகாரத் தம்பதிகள் ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தார்கள். சாம்பு சிரிப்பை இப்போது நிறுத்தி, அந்த ஸ்த்ரீயின் புடைவையைக் கவனித்துப் பார்த்து, 'அம்மணி! ஒரு புடைவையினாலே நான் ஏமாந்துவிடுவேன் என்று நினைத்தீர்களா?' என்றான். ஏன் அப்படிச் சொன்னாயென்று இப்போது சாம்புவைக் கேட்டால், அவனுக்கே பதில் சொல்லத் தெரியாது.

தம்பதிகள் திடுக்கிட்டு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். 'உட்காருங்கள், சார்! உங்களுக்கு எல்லாம் முன்னாலேயே தெரியுமா?' என்று கேட்டார் அந்த மனிதர்.

சாம்புவுக்கு, முன்னால் ஒன்றும் தெரியாது. இருந்தாலும், 'சித்தப்பா! நல்ல சித்தப்பா! கதையாய் எழுதுங்கள் ஐயா உடனே!' என்றான். அசடுகளுக்கும் தைரியம் வரும் என்பார்களே, அந்தத் தைரியந்தான் சாம்புவுக்கு வந்திருந்தது.

'என்ன! அவ்வளவுமே உங்களுக்குத் தெரியுமா? ஆச்சர்ய மாயிருக்கிறதே!' என்றாள் அவள்.

சாம்புவுக்கு அவள் இப்போது சொன்னதும் விளங்கவில்லை. 'நல்ல சினிமா! முதல் தரமான சினிமா! சினிமா என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்!' என்று சற்று உரத்து, தனக்குத் தானே சொல்லிக்கொண்டான்; தலையையும் ஆட்டிக் கொண்டான்.

அந்த மனிதர் எழுந்து வந்து சாம்புவின் கையைப் பற்றிக் கொண்டார். 'உங்களை நான் முட்டாள் என்று நினைத்து விட்டேன். இதுவரையில் நீங்களும் முட்டாள் போலவேதான் நடித்தீர்கள்! இப்போது தெரிகிறது, ஆதி முதல் விஷயம் தெரிந்து கொண்டு வேண்டுமென்றே இப்படிச் செய்தீர்களென்று!' என்றார் அவர்.

அதற்குள் அந்த ஸ்த்ரீ, 'நாங்கள் பார்க்கில் 'வெட்டு', 'ரத்தக் கறை', என்றெல்லாம் பேசியது என் புடைவையைப் பற்றி என்று எப்படித் தெரிந்துகொண்டீர்கள்?' என்று கேட்டாள்.

சாம்புவின் மனத்தில் குழப்பந்தான் இருந்தது. அவனுக்குப் புடைவையைப் பற்றி ஒன்றும் தெரியாது. ஆகவே, இப்போது தலையைத்தான் ஆட்ட முடிந்ததேயொழியப் பதில் ஒன்றும் சொல்ல முடியவில்லை.

அந்த மனிதர் சொன்னார்: 'எங்கள் பேச்சைக் கேட்டு நீர் ஏமாந்துவிட்டீர் என்று நினைத்தேன். ஆனால், நான் சினிமா வுக்குக் கதை எழுதியிருக்கிறதையும், அதைப் போலவே உண்மையில் நடக்குமா என்று உம்மைக் கொண்டு பரீக்ஷித்துப் பார்க்க விரும்பியதையுங்கூட நீர் தெரிந்து கொண்டிருக்கிறீர். நான் நடத்திய நாடகத்தில் கடைசி வரையில் ஒன்றும் தெரியாத அசடு மாதிரி நடித்துவிட்டு. இப்போது கதை ஜோர். சினிமாவும் நன்றாயிருக்கும் என்று சொல்கிறீர்! ஆச்சரியமாயிருக்கிறதே! நீர் யார்? முதலில் அதைச் சொல்லும்!' என்று கேட்டார்.

சாம்புவுக்கு விஷயம் ஒருவாறு புரியத் தொடங்கியது. இத்தனை நேரமும் ஒரு சினிமாக் கதாசிரியர் தமது கதையைப் பரீக்ஷித்துப் பார்க்கவே தன்னை ஆட்டி வைத்திருக்கிறார் என்று அறிந்து கொண்டான். கடைசியில் தான் ஏதோ பிதற்றியது அவனுக்கு எதிர்பாராத நல்ல பலனை அளிக்கத் தொடங்கி இருக்கிறது!

அதிகம் பேசினால் 'குட்டு' வெளிப்படும் என்பதைச் சாம்பு அறியாதவன் அல்ல. ஆகவே, வாய் திறக்காமல் கோட்டுப் பையிலிருந்து தனது 'விஸிட்டிங் கார்டை'க் கொடுத்தான்.

அதைப் பார்த்த தம்பதிகள் திடுக்கிட்டார்கள். 'ஆஹா! இப்போ தல்லவா தெரிகிறது! துப்பறிபவர் என்றால், கடைசி வரை வேஷம் போடத் தெரியவேண்டும் அல்லவா? நீங்கள் நிபுணரா யிருக்கக் கொண்டு, இத்தனை நேரமும் வேஷம் போட்டிருக்கிறீர் கள் என்பது எனக்குத் தெரியவில்லை!' என்றார் அந்த மனிதர்.

சாம்புவின் மனம் எங்கேயோ சஞ்சரித்துக் கொண்டிருந்தது. 'மாங்குடி முண்டன்' என்று அவன் வாய் முணுமுணுத்தது.

'அதுகூட உங்களுக்குத் தெரியாமல் இருக்குமா? நீங்கள் நடிக்கும் போது நான்தான் அறைக்கு வெளியில் மாங்குடி முண்டனாக இருந்தேன். எனக்குப் பூர்விகம் மாங்குடி. 'மாங்குடி மகாராஜன்' என்று எனக்குப் பெயர். நான் சினிமாவுக்குக் கதைகள் எழுதிக் கொடுக்கிறேன். இப்போது போலீஸ்காரனாக வந்தவன்கூட என் மச்சினன்தான்!'

சாம்பு சிரித்தான். அவனுக்கு எல்லாம் மனோ லோகத்தில் நடப்பதுபோல் இருந்தது. அன்றிரவு வெகுநேரம் கழித்துத்தான் சாம்பு வீட்டுக்குத் திரும்பினான். அவனை ஒரு ரிக்ஷாவில் ஏற்றி, தம்பதிகள் உபசாரத்துடன் அனுப்பினார்கள்.

•

இரண்டு நாள்களுக்குப் பின் சாம்புவுக்கு ஒரு செக் வந்தது. அதை மாங்குடி மகாராஜன் அனுப்பி, 'இதில் நூறு ரூபாய்க்குச் செக் அனுப்பியிருக்கிறேன். தங்கள் சாமர்த்தியமான நடிப்பை நாங்கள் அல்லும் பகலும் வியந்து கொண்டிருக்கிறோம். ஒரு சினிமாக் கம்பெனியார் என் கதையைப் படம் பிடிக்க எடுத்துக்கொண்டு விட்டார்கள்! இது சம்பந்தமான தங்கள் உதவியை ஒரு நாளும் நான் மறக்கவே மாட்டேன். என்னுடைய நண்பர்களுக்கு, தங்கள் தொழில் சம்பந்தமாக சிபாரிசு செய்யத் தவறமாட்டேன்!' என்று ஒரு கடிதமும் வைத்திருந்தார்.

சாம்பு ஒரு பைல் வாங்கி, முதல் நற்சாட்சிக் கடிதத்தை அதில் அடக்கம் செய்தான். எடுத்தவுடன் வெற்றியும் பணமும் கிடைக்கும்போது அவனுக்கு ஏன் குதூகலம் ஏற்படாது.

3

காணாமற்போன கம்மல்கள்

'பூம், பூம்! என்று மோட்டார்ச் சத்தம் கேட்டவுடன் எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்துகொண்டிருந்த சாம்பு வாசலுக்கு ஓடி வந்தான். மோட்டாரில் மிஸ்டர் மகாராஜன் உட்கார்ந்து கொண்டிருந்தார்.

'சாம்பு! சீக்கிரமாக டிரஸ் பண்ணிக்கொண்டு வாரும். ஒரு கேஸ்!' என்றார்.

அப்போது அவனுக்கு உண்டாகிய பரபரப்பில் தன் சட்டையாலேயே தலையைத் துடைத்துக்கொண்டு அவசர அவசரமாகக் கோட்டை மாட்டிக்கொண்டு சாம்பு வெளியே வந்தான். சிறிது நேரத்தில் மகாராஜனுடன் நாற்பது மைல் வேகத்தில் மோட்டாரில் பிரயாணம் செய்து கொண்டிருந்தான்.

'மிஸ்டர் சாம்பு! ரொம்ப அவசரப்பட்டுக் கொண்டு வந்திருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். இருக்கட்டும். நாம் எங்கே போகிறோமென்று முன்னதாகவே சொல்லி விடுகிறேன்! என்று ஆரம்பித்து மகாராஜன் சொன்னார்.

'அடையாற்றில் சபாபதி செட்டியார் என்று கேள்விப்பட்டிருக்கிறீரா? பெரிய வைர வியாபாரி. சமீபத்தில் அடையாற்றில் அவரது பங்களாவுக்கு மூன்றாவது மாடி கட்டினார். அப்போது அவர் பங்களாவிலே ஒரு திருட்டு நடந்து விட்டது. செட்டியார் அடைமானமாக வைர நகைகள் வாங்கிக் கொள்வதுண்டு. அம்மாதிரி கர்ணாபுரம் ஜமீன்தாரிடம் ஒரு ஜதை வைரக் கம்மலை வாங்கியிருக்கிறார்.'

'உம். அந்தக் கம்மல் திருட்டுப் போய்விட்டதாக்கும்?' என்றான் சாம்பு, தனது கூர்மையான மூக்கு நுனியைத் தடவிக்கொண்டு.

'அவசரப்படாமல் கேட்டுக்கொண்டு வாரும். ஜமீன்தார் போன பிறகு கம்மல் பெட்டி மேஜை மேலேயே இருந்தது. செட்டியார் ஏதோ காரியமாய் ஒரு நிமிஷம் அடுத்த அறைக்குப் போயிருக்கிறார். மூன்றாவது மாடியில் கொல்லத்துக்காரர்கள் வேலை செய்துகொண்டிருந்தார்கள். அவருடைய குமாஸ்தா குப்புசாமி வாசல்புறம் வந்திருக்கிறான். அவருடைய ஆறு வயதுக் குழந்தை தங்கவேலு கூடத்து ஹாலில் விளையாடிக் கொண்டு இருந்திருக்கிறான். செட்டியாரின் தகப்பனார்க் கிழவர், திண்ணையில் உட்கார்ந்திருக்கிறார். சமையல்காரன் அடுக்களையிலிருந்து வெளியே வரவேயில்லை. வேலைக்கார முனுசாமி கிணற்றங்கரையில் வேஷ்டி துவைத்துக்கொண்டிருக்கிறான். கம்மல் பெட்டி மாயமாக மறைந்துவிட்டது.

'ஹூம்!' என்றான் சாம்பு.

'அப்படியும் செட்டியார் கெட்டிக்காரத்தனமாக நடந்துகொண்டு இருக்கிறார். வாசற் கதவை உடனே சார்த்தச் சொல்லிவிட்டார். வீட்டின் வாசற்புறமாகத் திருடன் வெளியேறியிருக்க முடியாது. கிழவர் யாரும் வெளியே போகவில்லையென்று உறுதியாகச் சொல்கிறார். புழக்கடைப் பக்கமும் ஒருவரும் செல்லவில்லை. ஆகவே அதை எடுத்தவன், வீட்டுக்குள்தான் எங்கேயோ ஒளித்து வைத்திருக்க வேண்டுமென்று அவர் நிச்சயமாக நம்புகிறார்.'

'அப்புறம் என்ன செய்தார்?'

'என்னத்தைச் செய்வது? இரண்டு கொல்லத்துக்காரர்கள் மேலும் சந்தேகப்பட்டு, ரிமாண்டில் வைத்தார். அதனால் ஒன்றும் வெளிப்படவில்லை. அவர்களை விடுதலை செய்ய வேண்டியிருந்தது. வேறு கொல்லத்துக்காரர்களைக் கொண்டு பாக்கி

யிருந்த சொற்ப வேலைகளையும் பூர்த்தி செய்தார். போலீஸுக்கு அறிவித்ததில், இன்ஸ்பெக்டர் கோபாலன் என்கிறவரை அவர்கள் அனுப்பி, திருட்டைக் கண்டுபிடிக்கச் சொல்லியிருக்கிறார்கள். கோபாலன் பதினைந்து நாளாகச் செட்டியார் வீட்டில் தான் இருக்கிறார்.'

சாம்புவுக்குப் பகீர் என்றது. 'இதேதடா, போலீஸ்காரருடன் வம்பு எதுக்கு நமக்கு?' என்று தயங்கினான்.

'என்ன யோசிக்கிறீர்? சும்மா வாரும். பயப்படாதேயும். அந்தக் கம்மல்களை நீர்தான் கண்டுபிடித்துக் கொடுக்கணும். தவிர, இப்போது கர்ணாபுரம் ஜமீன்தார் வேறு பணத்தை வைத்துக் கொண்டு பண்டத்தைக் கொடுக்கும்படி, செட்டியாரை நெருக்குகிறார்.'

'உம்!' என்றான் சாம்பு கவலை சூழ்ந்த முகத்துடன்.

'கம்மல்களை இன்று சாயந்தரத்துக்குள் கொடுக்க வேண்டும்!' என்று முடித்தார் அவர்.

'இன்று சாயந்தரத்துக்குள்ளா?' என்று சாம்பு வாயைப் பிளந்தான்.

அதேசமயம் வண்டியும் ஒரு பெரிய பங்களாவின் முன் நின்றது. சபாபதி செட்டியார் உற்சாகத்துடன் வாசலுக்கு வந்தார். ஆனால், சாம்புதான் துப்பறியப்போகிறான் என்று கேள்விப்பட்டதும் அவர் முகம் உண்மையிலேயே இறங்கிப் போய்விட்டது. சாம்புவின் முகத்தில் அசடும் எண்ணெயும் வழிவதைக் கண்டு, ஒரு நீண்ட பெருமூச்சு அவரை அறியாமல் வெளிவந்தது.

மகாராஜன், 'ஒன்றும் யோசனை செய்யாதீர்கள், செட்டியார்! மிஸ்டர் சாம்பு இப்படி இருக்கிறாரே என்றும் நினைக்காதீர்கள். மகா கெட்டிக்காரர்!' என்று கூறி, அவரை அங்கே விட்டுவிட்டு காரில் திரும்பினார்.

செட்டியாருடன் தனியே விடப்பட்ட சாம்புவுக்குக் கொஞ்ச நேரம் ஒன்றுமே தோன்றவில்லை. செட்டியாருடைய அலட்சியப் பார்வையினால் அவன் உடம்பு குன்றிப்போயிற்று. கேஸின் விவரங்களை அவரிடமிருந்து கேட்கக்கூட அவனுக்குத் தைரியம் வரவில்லை. அவரும் இவனை மதித்துச் சொல்ப வராகப் படவில்லை. மேற்கொண்டு என்ன செய்வதென்று அறியாமல் அவன் விழித்தபோதுதான் செட்டியாரின் குமாஸ்தா

வந்து சாம்புவை உள்ளே அழைத்துச் சென்றான். ஓர் அறையில் அவனை இருக்கச் சொல்லி, பலகாரம் கொண்டு வருவதாகக் கூறிவிட்டுச் சென்றான்.

தனியே இருந்த சாம்புவுக்கு அங்கிருந்து தப்பித்துக்கொண்டு ஓடிவிடலாமாவென்று ஓர் எண்ணம் உதயமாயிற்று. முன்பின் தெரியாத இடத்தில் மிகக் கடினமான கேஸில் அதுவும் ஒரு போலீஸ்காரருக்குப் போட்டியாக சம்பந்தம் வைத்துக்கொள்ள அவன் பயந்தான். தப்பித்துக்கொண்டு ஓடுவது என்பதாக அவன் செய்த யோசனை சரியென்றே தோன்றியது. அவ்வாறே செய்ய நினைத்து அவன் வெளியேறப் பார்க்கும் தருணத்தில், ஒரு சின்னப் பயல் தலைதெறிக்க ஓடிவந்து சாம்புவின் மேல் விழுந்தான்.

'என்ன வெளியிலே பார்க்கிறே?' என்று கேட்டான் அவன். சுமார் ஆறு வயதுள்ள அந்தக் குழந்தை கணீரென்று பேசினான்.

'ஒன்றுமில்லை, குழந்தை!' என்று சாம்பு சற்றுப் பின் வாங்கினான். ஓடலாம் என்றால் இது எங்கே வந்தது என்று சாம்புவுக்கு எரிச்சலாகவே இருந்தது.

'நீதான் வைர நகையைக் கண்டுபிடிக்கப் போறியா?' என்று கேட்டான் குழந்தை.

'ஆமாம். உன் பேரென்ன?'

'தங்கவேலு! கட்டாயமாக நீ கண்டுபிடிச்சிடுவியா?'

'உம். நிச்சயமாய்!'

'அப்படின்னா எனக்கும் ஒரு காரியம் பண்றயா?'

'என்ன பண்ணணும், சொல்லு' என்று கேட்டான் சாம்பு. தன்னுடன் சமமாகப் பேசுவதற்கு ஓர் ஆத்மாவாவது அகப்பட்டதில், சாம்புவுக்கு ஒரு சிறு ஆறுதல்கூட உண்டாகியது.

'என் பம்பரத்தைக் காணோம், அஞ்சு நாளா! எடுத்துத் தரயா?'

'தரேண்டா, கண்ணே!'

'அந்தக் குப்புசாமிதான், விளையாடாதே, விளையாடாதேன்னு சொல்லிண்டிருந்தார். அப்புறம் பம்பரமே காணாமே போயிட்டுது!'

'குப்புசாமி யாரு?'

'அதுதான் குமாஸ்தா. உன்னைக்கூட கொண்டுவந்து விட்டாரே, அவர்தான்! ரொம்பப் பொல்லாதவர். நான் மேல் மாடியிலே விளையாடப் போனா அங்கே வரப்படாதுன்னு அதட்டறார்!' என்றான் அவன்.

இப்படிக் குழந்தை சொல்லிக்கொண்டிருந்தபோது அந்தக் குப்புசாமியே பலகாரத் தட்டை எடுத்துக்கொண்டு நுழைந்தான். அவனுடன் கூடவே போலீஸ் உடையில் ஒருவர் வந்தார். இவர்தான் மகாராஜன் குறிப்பிட்ட கோபாலனாக இருக்க வேண்டும் என்று சாம்பு எண்ணினான். அவனுக்கு மறுபடி பகீரென்றது.

'பயல் என்மேல் குற்றம் சொல்கிறானோ! எப்பவும் விஷமமும் விளையாட்டுந்தான் அவனுக்கு!' என்று குப்புசாமி சிரித்துக் கொண்டே பலகாரத்தை வைத்தான். பிறகு போலீஸ் உத்தியோகஸ்தரிடம் திரும்பி, 'இவர்தான் மிஸ்டர் சாம்பு! புதிதாக வந்திருக்கிறார். செட்டியார்கூடச் சொன்னார் அல்லவா?' என்றான்.

'சரிதான்!' என்றார் அவர். பிறகு குமாஸ்தாவிடம், நீங்கள் போகலாம். நான் இவருடன் பேசிக்கொள்கிறேன்!' என்று சொல்லவே, அவன் தங்கவேலுவையும் அழைத்துக்கொண்டு வெளியே சென்றான்.

போலீஸ் அதிகாரியுடன் என்னத்தைப் பேசுவது என்று சாம்புவின் உள்ளத்தில் பெரும் புயலே அடித்தது.

'உட்காருங்கள், சாம்பு சார்! உங்களை இதற்குமுன் நான் பார்த்ததே இல்லை; கேள்விப்பட்டதுமில்லை! இதற்குமுன் ஏதானும் பெரிய கேஸுகளில் சம்பந்தம் வைத்துக் கொண்டிருக்கிறீர்களோ?' என்று கேட்டார் கோபாலன்.

சாம்பு தலையைச் சொறிந்துகொண்டு, 'உம் உம். அதாவது, உம்!' என்று தயங்கினான்.

'சரி, தெரிந்து கொண்டேன். இந்தக் கேஸ் விஷயமெல்லாம் உங்களுக்கும் தெரிந்திருக்கலாம். நான் பத்துப் பன்னிரண்டு நாளாக வேலை செய்து வந்திருக்கிறேன். ஒன்றும் நிச்சயமாகச்

சொல்வதற்கில்லை. இன்னும் சிரமப்பட்டுப் பார்க்கலாமென்று தான் இருக்கிறேன். நீங்களே நகையைக் கண்டுபிடித்தாலும் எனக்குச் சந்தோஷந்தான்!' என்றார்.

'என்னமோ.. என்னாலானது.. தங்களுக்கு.. அதாவது.. வேண்டுமானால்.. இல்லை, வேண்டிய மட்டும்.. ஒத்தாசையாயிருக்கிறேன்!' என்று குழறினான் சாம்பு.

'உம்ம உதவி, ஒத்தாசை ஒன்றும் எனக்குத் தேவையில்லை!' என்றார் கோபாலன் சற்று அகம்பாவமாக.

கோபாலனே தொடர்ந்து, 'சென்ற பத்து நாள்களாக நான் கண்டுபிடித்ததையும் சொல்லி விடுகிறேன். தேவையானால் நீர் உபயோகித்துக் கொள்ளும். அது, குற்றவாளி பொடி போடுபவனாயிருக்க வேண்டும் என்பது குற்றம் நடந்த ஸ்தலத்தில் புத்தம் புதிதாகப் பொடி சிந்திக்கிடந்தது. தெரிந்ததா?' என்றார்.

சாம்பு, 'ஹூம்!' என்றான். அவன் மூளை வேலை செய்தது. குற்றவாளி பொடி போடுபவன் மட்டும் அல்ல; பொடியைச் சிந்துபவனாகக்கூட இருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

கோபாலன் எழுந்து, 'நீர் உசிதம்போல் வேலையைத் தொடங்கலாம், நான் வருகிறேன்!' என்று கூறிவிட்டு அறையைவிட்டு வெளியே சென்றார்.

பத்து நிமிஷத்துக்கெல்லாம் குழந்தை தங்கவேலு சாம்புவிடம் ஓடிவந்து, 'திருடனைக் கண்டுபிடிச்சுட்டேளா?' என்று கேட்டான்.

'அதுக்குள்ளே எப்படியடா குழந்தை, கண்டுபிடிப்பது?'

'நானும் உனக்கு ஒத்தாசை செய்யட்டுமா?' என்று கேட்டான் பயல்.

'ஏன் இவனை நாம் ஒத்தாசைக்கு வைத்துக்கொள்ளக் கூடாது?' என்று சாம்புவுக்குத் தோன்றியது. உடனே, 'சரி குழந்தை! நீ எனக்கு ஒத்தாசை செய்யலாம். ஆனால் நான் சொல்வதை யாரிடமும் சொல்லக் கூடாது. நான் பார்த்துவரச் சொல்வதையும் ஜாக்கிரதையாக அவ்வப்போது பார்த்துவர வேண்டும்!' என்றான்.

'ஓ! இப்போ நான் என்ன செய்யணும்?'

'சரி. இந்த வீட்டிலே யார் யார் பொடி போடுகிறார்கள் என்று சொல்லு. அப்போ யார் கீழே பொடி சிந்தறான்னு பார்த்துக் கொண்டு வா!' என்றான். தங்கவேலு ஒரே ஓட்டமாக ஓடினான். அதற்கப்புறம் இரண்டு மணி அவகாசம் அவன் சாம்புவின் பக்கமே வரவில்லை.

சாம்பு, இடைக்காலத்தில் குப்புசாமியுடன் பேசிக் கொண்டிருந்தான். பேச்சுவாக்கில் வீட்டில் யார் யார் இருக்கிறார்கள் என்பதையும் விசாரித்து அறிந்தான். அதனால் அவனுக்கு ஒருவித உபயோகமும் தென்படவில்லை; அவர்களை விசாரிக்க வேண்டியதும் அவசியமாகப் படவில்லை. மூன்றாவது மாடியில் புதிதாகக் கட்டிய இடங்களை, குமாஸ்தா அழைத்துப்போய்க் காண்பித்தான். திருட்டுப் போகும்போது கைப்பிடிச் சுவர் எழுப்பி, அதில் கலசங்களைக் கொல்லத்துக்காரர்கள் பொருத்திக் கொண்டிருந்ததாகக் குப்புசாமியிடமிருந்து அறிந்தான். வீடு பூராவுமே சுற்றிவந்து சாம்பு இண்டு இடுக்குகள் எல்லாம் பார்த்தான். அதனால் ஏற்பட்ட பலனும் பூஜ்யந்தான்.

பிறகு சாம்பு உதட்டைப் பிதுக்கிக் கொண்டு, குப்புசாமியுடன் திரும்பினான். ஏனோ குப்புசாமி மீது சாம்புவுக்கு ஓர் அபார வாஞ்சை பிறந்துவிட்டது. பொடி போடுபவர்கள் மேல் தனக்கு உள்ள சந்தேகத்தை அவனிடம் சொல்லி, 'மிஸ்டர் குப்புசாமி! என்னால் என்னவோ இந்தக் கேஸைக் கண்டுபிடிக்க முடியுமென்று நான் நினைக்கவே இல்லை. உம்மால் கூடிய ஒத்தாசை செய்ய வேணும்!' என்று அந்தரங்கமாகக் கேட்டுக் கொண்டான்.

'அதற்கென்ன சார்! உங்களுக்கு என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள்! நான் உடனே செய்கிறேன். ஆனால், நான் பொடி போடுவதில்லை. பார்த்துக் கொள்ளுங்கள்!' என்று சிரித்து விட்டுப் போனான் குப்புசாமி.

சுமார் ஒரு மணிக்குப் பிறகு, தங்கவேலு சாம்புவை வந்து ரகசியமாகப் பார்த்தான்.

'தாத்தா பக்கத்திலே என்ன கிடந்தது, தெரியுமா?' என்று கேட்டான் காதோடு.

'தெரியாது, சொல்லு!'

'கீழே பொடி கிடந்தது!'

ஒருவேளை கிழவர்தான் கம்மல்களை எடுத்து ஒளித்திருப்பாரோ என்று சாம்பு யோசித்தான். 'சே! இராது! சொந்தப் பிள்ளையிடம் திருடுவாரா?' என்று அந்த ஊகத்தைத் தள்ளினான்.

சற்று நேரத்துக்கெல்லாம் தங்கவேலு மறுபடி வந்து 'எங்கப்பா கிட்டப் போய் உட்கார்ந்தேன். கீழெல்லாம் பொடியாக இருந்தது!' என்றான். செட்டியார் மேலேயே சந்தேகப்படுவது சரியில்லை என்று எண்ணி, சாம்பு அதையும் விட்டான்.

கடைசியாகத் தங்கவேலு ரகசியமாக, 'வீட்டிலே, எங்கே பார்த்தாலும் பொடியாகச் சிந்திக்கிடக்கு!' என்றான்.

சாம்பு திடுக்கிட்டு உட்கார்ந்தான். 'என்ன! அப்படி யார் செய்கிறது? சீக்கிரம் பார்த்து வந்து சொல்லு!' என்று தங்கவேலுவை அனுப்பினான். பிறகு அறையில் மேலும் கீழும் சாம்பு உலாவ ஆரம்பித்தான். திருடனைப் பிடிக்கும் காலம் நெருங்கிவிட்டதாக இப்போது சாம்புவுக்குத் தோன்றியது. ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் தங்கவேலு திரும்பிவிட்டான். 'இன்ஸ்பெக்டர் வந்திருக்கிறாரே! அவர் மேல்மாடிக்கு மூணு நாலுதரம் போயிட்டு வந்தார். ஒவ்வொரு தடவையும் கொஞ்சம் பொடியைத் தூவிவிட்டு, உங்கள் அறையைப் பார்த்துப் பார்த்துச் சிரிச்கண்டார்.'

'நிஜமாவா?'

'ஆமாம்! வாயைக் கைக்குட்டையாலே பொத்திண்டு கூடச் சிரிச்சார்!'

சாம்புவுக்குக் கோபம் வந்தது. வேண்டுமென்றே கோபாலன் தன்னை ஏமாற்றியிருக்கிறாரா, என்ன? பொடியைச் சிந்துபவன் தான் திருடன் என்று சொல்லி, அவன் அதைக் கவனித்துக் கொண்டிருந்தபோது, தாமே திருட்டைக் கண்டுபிடித்து, பெருமையை அடையலாம் என்பது இன்ஸ்பெக்டரின் கெட்ட எண்ணமாயிருக்குமோ? இந்த விஷயத்தை அவரையே கண்டு நேரில் கேட்டுவிடுவது என்ற ஆத்திரத்துடன் சாம்பு, 'எங்கே இப்போ அவர்?' என்று தங்கவேலுவை அதட்டினான்.

'மேல் மாடியில்.'

முழுதும் கேட்பதற்குள் சாம்பு ஒரே தாவலாகக் கிளம்பி விட்டான். ஐந்தாவது நிமிஷம் மூன்றாவது மாடியைப் போய் அடைந்தான். ஆனால், மூன்றாவது மாடியில் யாருமே இல்லை.

மாடியின் கைப்பிடிச் கவர் வரை சென்று எட்டிப் பார்த்துவிட்டுத் திரும்பும்போது, தன் பின்னால் இன்ஸ்பெக்டர் கோபாலன் நிற்பதைக் கண்டு சாம்பு திடுக்கிட்டான். அப்போது அவர் கையை நீட்டி, 'மிஸ்டர் சாம்பு! அதை இப்படிக் கொடுத்து விடும்!' என்றார்.

'எதை?' என்றான் சாம்பு.

'கம்மல்களைத்தான்!' என்றார் அவர்.

'இது என்ன விளையாட்டு? என்னை ஏமாற்றுவதென்று நீர்..' என்று சாம்பு ஆரம்பித்தான். மறு நிமிஷம் இன்ஸ்பெக்டர் திடீரென்று அவன் மேலேயே பாய்ந்துவிட்டார்.

சாம்பு இதை எதிர்பார்க்காதவனாகையால் பக்கத்தில் சாய்ந்தான். அப்படியே விழுந்திருந்தானானால் மண்டையில் பலமாக அடிபட்டிருக்கும். சாம்பு விழும்போதே, கைப்பிடிச் கவரில் பதித்திருந்த கலசம் ஒன்றை இறுகக் கட்டிக்கொண்டான். இன்ஸ்பெக்டர் அவனை இழுத்தார். சாம்பு கலசத்தை இன்னும் இறுகப் பிடித்தான். வெறும் மண் கூடாகிய கலசம் இதை எல்லாம் எப்படித் தாங்கும்? அது கையோடு பிடுங்கிக் கொள்ளவே, சாம்பு அதைக் கட்டிக் கொண்டபடி தரையில் விழுந்தான்.

கோபாலன், அந்தக் கலசத்தைச் சாம்புவின் கையிலிருந்து ஆத்திரத்துடன் எடுக்கும் சமயத்தில், மாடிக்குச் செட்டியாரே வந்துவிட்டார்!

'என்ன? என்ன? என்ன சேதி?' என்றார் அவர் பரபரப்புடன்.

சாம்பு ஏதோ பதில் சொல்ல விரும்பினான். ஆனால் கீழே விழுந்த அதிர்ச்சியாலும், இன்ஸ்பெக்டர் தாக்கியதாலும் கலங்கிப் போயிருந்தபடியால் அவனால் பேச இயலவில்லை.

கோபாலன், செட்டியாரின் எதிரிலேயே சாம்புவின் கையிலிருந்த கலசத்தை எடுத்து உடைத்தான். அதன் உள்ளிருந்து, என்ன ஆச்சரியம்! கம்மல்கள் வைத்திருந்த பெட்டி விழுந்தது.

செட்டியார் சட்டென்று பெட்டியை எடுத்துத் திறந்தார். அப்படியே இருந்தன கம்மல்கள். இந்த சந்தர்ப்பத்தில் கோபாலன் சாம்புவின் காதோடு, 'நீர் ஒன்றும் வாயைத் திறக்காதேயும்! நான் பார்த்துக்கொள்கிறேன். பொடி விஷயமும்தான். ஆமாம்' என்று

சொன்னார். சாம்புவுக்கு ஏற்பட்ட குழப்பத்தில் அவன் ஒன்றுமே புரிந்துகொள்ளவும் இல்லை; புரியாவிட்டாலும் சொல்லக்கூடிய நிலையிலும் அவன் இல்லை.

பிறகு கோபாலன், செட்டியாரிடம் சொன்னார்: 'சார்! இதோ சாம்பு இருக்கிறாரே, இவரைப் பார்த்து கேவலமாக எண்ணிவிட வேண்டாம். இவர் மகா கைகாரர்! நான் பதினைந்து நாளாகச் சிரமப்பட்டுக் கண்டுபிடிக்க முயலுவதை இவர் ஒரே நாளில் கண்டுபிடித்து விட்டார். உங்கள் வீட்டு மெத்தையில் இந்த இடம் கட்டப்படும் போதுதானே திருட்டு நடந்தது? திருடியவன் கொல்லத்துக்காரன்தான். நகையை வெளியே கொண்டு போனால் அகப்பட்டுக் கொள்வோமென்பதை அறிந்து, இந்தக் கலசங்களில் ஒன்றில் மறைத்து, களிமண்ணால் உடனே மூடிவிட்டான். திருட்டு அவ்வளவு சீக்கிரம் வெளியாகுமென்று அவன் எதிர்பார்க்கவில்லை. ஆனால், நீங்கள் உடனேயே கண்டு கொண்டு அவனையும் போலீஸில் ஒப்புவித்துவிட்டதால், அவ னால் இதைத் திரும்ப எடுத்துக் கொள்ள முடியவில்லை. பிறகு புதுக் கொல்லத்துக்காரர்கள் கட்டி பூர்த்தி செய்தார்கள். வைரக் கம்மல்கள் ஒரு கலசத்துக்குள் இருந்ததென்னமோ வாஸ்தவம். ஆனால், எந்தக் கலசத்தில் என்று எப்படிக் கண்டுபிடிப்பது?'

சாம்புவுக்கு மண்டையிடி அதிகமாயிற்று. ஏதாவது சூடாக அருந்தலாமென்று, 'குப்புசாமி' என்று முனகினான்.

இன்ஸ்பெக்டர் உடனே, 'மிஸ்டர் சாம்பு! நீங்கள் அலட்டிக் கொள்ளாதீர்கள்! நானே ஏற்பாடு செய்துவிட்டேன். குப்பு சாமியைப் போலீசார் இவ்வளவு நேரம் கைது செய்திருப்பார்கள். கேளுங்கள் செட்டியார்! அந்தக் கொல்லத்துக்காரன் இந்தக் கம்மல்களை அடைய உங்கள் குமாஸ்தாவைக் கையில் போட்டுக் கொண்டான். கலசங்களை, ஒவ்வொன்றாக கம்மல்கள் கிடைக்கும்வரை உடைத்துப் பார்க்க, குப்புசாமி முடிவு செய்தான். அதற்காகக் குழந்தையைக்கூட மேல்மாடிக்கு வராமல் விரட்டினான்!' என்று நிறுத்தினார்.

'அட! அப்புறம்? நிஜமாவா?'

'குப்புசாமி இதுவரை ஆறு கலசங்களை உடைத்துப் பார்த்து விட்டான். இன்னும் விட்டிருந்தால் கம்மல்கள் கிடைக்கும்வரை உடைத்துக்கொண்டே இருப்பான். எனக்குங்கூட அது எந்தக் கலசத்தில் இருந்தது என்பது தெரியாது. இதோ சாம்பு, ஒரே நொடியில் அதைக் கண்டுபிடித்துக் கொடுத்திருக்கிறார்!'

சாம்புவுக்குக் காதால் கேட்பதெல்லாம் உண்மைதானா என்ற சந்தேகமே வந்தது. தடுமாறிக்கொண்டு எழுந்தான். 'நான் வீட்டுக்குப் போகிறேன். எனக்கு உடம்பு சரியாக இல்லை!' என்றான்.

கோபாலன் அவன் கையைப் பிடித்துக்கொண்டு கீழே அழைத்துச் சென்றார். போலீஸ் கார் ஒன்று வரவழைத்து, அதில் சாம்புவைத் தாமே அழைத்துச் சென்று வீட்டில் விட்டார். போகும்போது, 'மிஸ்டர் சாம்பு! நீர் என்னைப் பற்றி மனத்தில் ஒன்றும் வைத்துக்கொள்ளக் கூடாது. நான் உங்களுக்குத் தவறான தடயங் களைச் சொன்னதை வெளிப்படுத்தாமல் இருந்த பெருந்தன் மைக்கு எப்படி நான் நன்றி செலுத்தப் போகிறேன்!' என்று சொல்லிக்கொண்டு சென்றார்.

சாம்புவுக்குச் செட்டியார் இருநூறு ரூபாய் அனுப்பினார். சாம்பு அவருக்கு வந்தனம் தெரிவிக்கப் போனபோது, ஞாபகமாக ஒரு பம்பரம் வாங்கிக் கொண்டுபோய், குழந்தை தங்கவேலுவிடம் கொடுத்தான். 'ரொம்ப சரி, மாமா! நான் வீட்டிலே தேடிப் பார்த் தேன். என் பம்பரமே அகப்பட்டுவிட்டது. நீங்க பெரிய துப்பறி பவர்னு அப்பா சொல்றார். அதனாலே ஒரு பம்பரம் கெட்டுப் போனாலும் இரண்டு பம்பரமா அகப்பட்டுடறது!' என்றான் அவன்.

4

தேடி வருகிறது கௌரவம்!

வீட்டுக் கதவைப் பூட்டிக்கொண்டு சாம்பு எங்கேயோ கிளம்பிக் கொண்டிருந்தான். அப்போது அவனுடைய கையின்மீது முரட்டுத் தனமாக ஒரு பிடி விழுந்தது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தபோது இன்ஸ்பெக்டர் கோபாலன் நின்று கொண்டிருந்தார். 'பேசா மல் என்கூட வாரும், கப்சிப்!' என்று கையைப் பிடித்துப் பலமாக இழுத்தார். சாம்பு திருதிரு வென்று விழித்துக்கொண்டே அவர்கூடச் சென்று தயாராகக் காத்திருந்த மோட்டாரில் ஏறினான். மோட்டார் உடனே புறப்பட்டது.

போலீஸ் ஸ்டேஷனை அடைந்தவுடன், கோபாலன் சாம்புவைத் தமது அறைக்கு அழைத்துச் சென்றார். 'உட்காருங்கள், மிஸ்டர் சாம்பு! முக்கியமான கேஸ் ஒன்று வந்திருக் கிறது. பார்வைக்கு, சர்வ முட்டாள்போல் இருக்கிற ஆசாமி ஒருவன் அதற்கு வேண்டியிருக்கிறது.'

'உம். சரி!'

'உடனே, என் கண்முன்னால் உம்முடைய முகந்தான் வந்து நின்றது!'

'ஓகோ! அப்படியிருக்கிறதோ அது?' என்று கேட்டான் சாம்பு.

'மிஸ்டர் சாம்பு! கோபித்துக்கொள்ளக் கூடாது. இவ்வளவு மௌட்டிய பாவத்தை உங்கள் மூஞ்சி காண்பிக்கும்போது, நீர் எப்படித்தான் இவ்வளவு கெட்டிக்காரராயிருக்கிறீர் என்று எனக்கு இன்னும் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது!'

'சரி! அப்படியே இருந்துவிட்டுப் போகட்டும். விஷயத்தைச் சொல்லுங்கள்!' என்று சாம்பு கேட்டான். தன் முகத்தைப் பற்றி அதிகம் பிறர் சொல்வதை சாம்புவால் சகித்துக்கொண்டிருக்க முடியவில்லை. இன்ஸ்பெக்டர் கோபாலனும் அதிக அலட்சியம் செய்யாமல் கூறினார்.

'இந்த சென்னைப் பட்டணத்தில் கொஞ்ச நாளாக ஒருவிதமான திருட்டு அதிகமாகிவிட்டது. திருடர்கள் இரவு வேளையில் கன்னம் வைத்துக்கொண்டு போனால் நாங்கள் நிமிஷத்தில் பிடித்துவிடுவோம். இந்தத் திருடர்களைப் பார்த்தால், திருடர்கள் என்று சொல்ல முடியாதபடி அவ்வளவு நாகரிகமாக இருக்கிறார்கள்! யாராவது ஏமாந்தவர்கள் பணம் வைத்திருக்கிறார்கள் என்று தெரிந்தால், ஒட்ட க்ஷவரம் செய்து விடுகிறார்கள் பட்டப் பகலில்! எவ்வளவோ முயற்சி செய்து பார்த்துவிட்டேன். அந்தக் கோஷ்டியில் ஓர் ஆசாமியைக் கூடப் பிடிக்க முடியவில்லை.'

'உம்!' என்றான் சாம்பு.

'உம்மைப் பார்த்தால் லகுவில் ஏமாந்து போகிறவர் மாதிரி தோன்றுகிறது. நீர் செய்ய வேண்டியதெல்லாம், அந்த ஆசாமிகள் யாராவது ஒருவரிடம் ஏமாந்துபோவது போல் பாசாங்கு செய்ய வேண்டும். அவ்வளவேதான்.'

'எனக்குப் புரியவில்லையே!'

'அவசரப்படாதேயும்! நீர் நன்றாக டிரஸ் செய்து கொள்ளும். கட்டுக் கட்டாக ரூபாய் நோட்டைத் தருகிறேன்; லட்சாதிப் பிரபு மாதிரி செலவழித்துக் கொண்டிரும். சினிமாக் கொட்டகைகள், பெரிய ஹோட்டல்கள், பார்க்குகளுக்கு தவறாமல் தினம் போய் இரும். ஒருநாள் இல்லாவிட்டால் ஒருநாள் இந்தக் கோஷ்டியார் உம்மிடம் வராமல் இருக்கப் போகிறதில்லை.

நீர் ஏமாறுவதுபோல் ஏமாந்து, அவர்களில் யாராவது ஒருவரைப் பிடித்துக்கொடுக்க வேண்டும். இப்போது தெரிந்ததா?'

சாம்புவுக்குத் தெரிந்தது. ஆனால், யார் எப்போது ஏமாறுகிறார்கள் என்று எப்படித் தெரிந்து கொள்வதென்றுதான் தெரியவில்லை.

கோபாலன் தொடர்ந்து, 'ஆனால் ஒன்று! இந்தப் பேர்வழிகள் கஜப் போக்கிரிகள்! சற்று ஏமாந்தீரோ உம்மையே உயிரோடு முழுங்கி விடுவார்கள்; ஏப்பமும் விட்டு விடுவார்கள்! என்னாலான உதவி உமக்கு எப்போதும் செய்கிறேன். அதற்காக உம் பின்னால் இரண்டு போலீஸ்காரர்கள் மப்டியில் இருந்து கொண்டே இருப்பார்கள். உமக்கு அவர்கள் உதவி அவசியம் என்று தோன்றும்போது, இந்தமாதிரி மோவாய்க் கட்டையைத் தடவிக்கொள்ளும். உடனே வந்துவிடுவார்கள்!' என்றார் கோபாலன். மோவாய்க் கட்டையைத் தடவியும் காண்பித்தார். 'சரி' என்றான் சாம்பு.

•

அன்று சாயந்திரம் சாம்புவை அவன் சொந்தத் தாயார் பார்த்திருந்தால்கூட, 'என் பிள்ளை இவன்' என்று சொல்லத் தயங்கி இருப்பாள். அவன் உடையிலும் நடையிலும் அவ்வளவு மாறுதல்கள் ஏற்பட்டிருந்தன. தலையைச் சென்னையின் தலைசிறந்த ஸலூன்காரர் வெட்டி வாரி இருந்தார். ட்வீட் சூட் போட்டுக்கொண்டு, நெக்டை காலர்களுடன் சாம்பு ஒரு ஜமீன்தாரைப் போல் நடந்தான். மார்புப் புறமிருந்த பை, ஒரு பெரிய கற்றை நோட்டுகளுடன் துருத்திக்கொண்டிருந்தது. சாம்புவின் நடையிலும் விசேஷ மாறுதல்கள் ஏற்பட்டிருந்தது. அவன் முகக் களை ஒன்றைத் தவிர, எல்லாமே மாறிப் போயிருந்தன என்று ஒரு வார்த்தையில் சொல்லிவிட வேண்டும்.

சினிமாக் கொட்டகையில் முதல் கிளாஸில் உட்கார்ந்து படங்கள் பார்த்தான். 'டிரிங்கு'கள் அருந்தினான். காசை நாற்புறமும் வீசினான். டாக்ஸியில்தான் பிரயாணம் செய்தான். மாலை வேளைகளில் பார்க்குகளில் உலாவினான். பெரிய ஹோட்டல்களாகப் பார்த்து, உயர்ந்த பட்சணங்களை ஆர்டர் செய்தான். சுருங்கச் சொன்னால், சாம்பு தன்னையே மறந்து விட்டான். இரண்டு மூன்று நாள்கள் சென்ற பிறகு, நாம் எதற்காக இப்படியெல்லாம் நடிக்கிறோம் என்பதைக்கூட மறந்து விட்டான். அப்படி அவன் மறப்பதற்குக்கூட ஒரு காரணம் இருந்தது. சாம்பு இருந்த திசையில் ஒரு திருடன் கூட வரவில்லை! 'திருடர்கள்

வந்தால் உம்மை உயிரோடு விழுங்கி விடுவார்கள்!' என்று இன்ஸ்பெக்டர் கோபாலன் எச்சரித்ததை, சாம்பு ஒரொரு சமயம் நினைத்துப் பார்த்துக் கொள்வான். 'நம்மையா விழுங்குவான்! ஹூம்! வரட்டும்!' என்று தனக்குள் சிரித்தும் கொண்டான்.

ஒருநாள் மாலை ஆறு மணி இருக்கும். சாம்பு பார்க் பெஞ்ச் ஒன்றில் உட்கார்ந்து, ரேடியோ பாடுவதை, கண்மூடி ரசித்துக் கொண்டிருந்தான். பார்க்கில் ஸ்திரீகளும் புருஷர்களுமாக ஏராளமாகக் கூடியிருந்தார்கள். சாம்பு இருந்த பெஞ்சு ஒதுக்குப் புறமாக ஒரு மரத்தின் அடியில் இருந்ததால், அவனுக்கு ஏகாந்த மாக உட்கார்ந்து யோசனை செய்ய - சந்தர்ப்பம் ஏற்பட்டது. 'இப்போது வரட்டும் அந்தத் திருடன்! எவ்வளவு முரடனாகத் தான் இருக்கட்டுமே! மென்னியைப் பிடித்துப் பிழிந்து விடுகிறேன்!' என்று எண்ணிக்கொண்டு கண்ணை மூடினான்.

அவன் உட்கார்ந்திருந்த பெஞ்சியில், அவனுக்கு சற்றுத் தள்ளி யாரோ பொத்தென்று உட்கார்ந்ததை உணர்ந்து, கண்ணை விழித்துப் பார்த்தான். ஒருகால் தன் மனத்தில் உருவகப்படுத்திக் கொண்டிருந்த திருடன்தானா என்று பகீரென்றது அவனுக்கு. ஆனால், அவன் நினைத்ததற்கு நேர் மாறாகத்தான் அவன் கண்டது இருந்தது. ஓர் இளம் பெண்தான் அப்படி வந்து உட்கார்ந் திருந்தாள்.

சாம்புவுக்கு, பெண் குலத்திடமே அசாத்திய மரியாதை. பெஞ்சியிலிருந்தே எழுந்து போய்விடலாமா என்று நினைத்து எழுந்திருக்க முயற்சி செய்தபோது, 'சார்! சார்! நான் போய் விடுகிறேன். எனக்காக நீங்கள் சிரமப்படாதீர்கள்!' என்றாள் அந்தப் பெண்.

சாம்பு அந்த இனிய குரலைக் கேட்டுப் பரவசமாகி விட்டான். 'இல்லை, அம்மா! நான் உனக்காகப் போகவில்லை. நானே கிளம்பிப் போகலாமென்றுதான் எண்ணியிருந்தேன். நீ வந்த தற்கும் அதற்கும் ஒத்துக்கொண்டது, அவ்வளவுதான்!' என்றான் சாம்பு.

'இருந்தாலும், நான் வந்ததும் நீங்கள் போவது எனக்கு என்னவோ போலிருக்கிறது. எனக்காகத்தான் போகிறீர்களோ என்று தோன்றுகிறது!' என்றாள் அந்த யுவதி. சாம்பு, அசட்டுச் சிரிப்பு சிரித்தான். என்ன பேசுவது? இருப்பதா போவதா என்று ஒன்றும் புரியாதவனாகத் தயங்கி அங்கேயே சற்று நின்றான்.

'நீங்கள் பாட்டுக்கு உட்காருங்கள், சார்! நான் உங்கள் பெண் மாதிரி!' என்று அவள் சொல்லவே, சாம்பு மறுபடி மனத்தைத் திடம் செய்துகொண்டு பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டான்.

சுமார் கால் மணி நேரம் இருவரும் மௌனமாகவே இருந்தார் கள். சாம்பு ஆகாயத்தைப் பார்த்து மூக்கு நுனியைத் தடவிக் கொடுத்துக்கொண்டிருந்தான். அந்த யுவதி வேறுபுறம் திரும்பி இருந்தாள். சாம்புவின் மௌனத்தைக் கலைத்து அவன் நெஞ்சையே பிளந்துவிடும்படியான ஒரு சிறு சத்தம் அப்போது எழுந்தது. அந்தச் சத்தம் - ஒரு சிறு கேவல், ஒரு சின்ன விகசிப்பு தான்! அதன் சக்திதான் என்ன! அதுவும் தன் பக்கத்திலிருந்த யுவதியிடமிருந்து வெளிப்பட்டதென்றால் சாம்புவால் பொறுக்க முடியுமா?

'அம்மா!' என்று கூப்பிட்டான். அவளிடமிருந்து, மௌனந்தான் பதில்.

மறுபடி, 'அம்மா!' என்றான் சாம்பு.

அவள் திரும்பிப் பார்த்தாள். கண்களில் நீர் நிறைந்திருந்தது. அந்த முகத்தின் அழகை அந்தச் சோகம் பதினாயிரம் பங்கு அதிகமாக்கி இருந்தது.

'ஏன் அம்மா அழுகிறாய்?' என்றான் சாம்பு, சற்று நெருங்கி உட்கார்ந்து கொண்டு.

அதற்குப் பதிலாக அவள் முன்றானையால் தன் முகத்தை முழுதும் மூடிக்கொண்டு மேலும் விசும்ப ஆரம்பித்தாள். சாம்பு அவள் பக்கத்திலேயே போய் உட்கார்ந்து கொண்டான். 'அம்மா! அழாதே, குழந்தை! என்னிடம் சொல்லு!' என்றான்.

'ஊஹூம்!' என்றாள், அவள் முன்றானையை அகற்றாமலேயே.

'சும்மா, சொல்லு அம்மா! என் பெண் மாதிரி என்று நீதானே சொன்னாய்? என்னால் முடிந்த உதவி உனக்குச் செய்ய நான் தயாராக இருக்கிறேன். உம், சொல்லு!'

'சொல்லி என்ன உபயோகம்? உங்களால் எனக்கு ஓர் உதவியும் செய்ய முடியாது!' இப்போது அவள் பாதி முன்றானையை அகற்றிக் கொண்டாள்.

சாம்புவின் பரபரப்பு அதிகமாயிற்று. 'உதவி செய்ய முடியா தென்று உனக்கு எப்படித் தெரியும்? வெறுமே சொல்லு!' என்று மறுபடி வற்புறுத்தினான் சாம்பு.

அவள் கண்களைத் துடைத்துக்கொண்டு, தொண்டையையும் கனைத்துவிட்டுக் கொண்டாள். 'நான் மகாபாவி! மகா சண்டாளி! என்னைப் பெற்றபேரைத் துரோகம் செய்தேன்! எனக்கு இந்தத் தண்டனை வேண்டியதுதான்; இன்னும் வேண்டியதுதான். என் தலையில் ஏன் ஓர் இடி விழ மாட்டேனென்கிறது?'

'அப்படியெல்லாம் சொல்லாதே!' என்னிடம் விஷயத்தைச் சொல்லு!' சாம்பு அருகில் போய்விட்டான்.

'சொல்கிறேன். உங்களைப் பார்த்தால் என்னைப் பெற்ற தகப்பனார் மாதிரி இருக்கிறது. இந்த ஊரில் எனக்கு உற்றார் உறவினர் சிநேகிதர் ஒருவருமே கிடையாது. எல்லாம் நீங்கள் தான் என்று நினைத்து என் கதையைச் சொல்கிறேன்.'

'சரி. சொல்லு.'

'எனக்கு மலையாளம். நான் அங்கே காலேஜில் படித்துக் கொண் டிருந்தேன். பட்டணத்திலிருந்து கோபாலன் என்று ஓர் இளைஞர் எங்கள் ஊருக்கு வந்திருந்தார். ரொம்ப அழகாக இருப்பார். கவர்ச்சியாகப் பேசுவார். பால் வடியும் முகம். ஆனால், அவர் நெஞ்சு எப்பேர்ப்பட்டதென்று எனக்கு அப்போது தெரியாது. என் உள்ளத்தை அந்தப் பாவிக்குப் பறி கொடுத்தேன்; என் பெற்றோரை வஞ்சித்தேன்; கல்வியைத் திரஸ்கரித்தேன்; என் ஆபரணங்களையெல்லாம் அவரிடம் ஒப்படைத்துவிட்டு, என் பிறந்த வீட்டையும் உற்றாரையும் விட்டுவிட்டு அவருடன் பட்டணத்துக்கு ஓடிவந்துவிட்டேன்.'

மறுபடியும் ஒரு தேம்பல்.

'உம்.'

'அப்புறம் அந்தப் பாவி என்னை ஒரு ஹோட்டலில் இருக்கச் சொல்லிவிட்டு, இதோ வருவதாகப் போனான். போனவன் போனவன்தான். பன்னிரண்டு நாளாகிறது. அவன் வரவில்லை. பட்டணத்தில் ஓர் இடம் பாக்கியில்லாமல் தேடி விட்டேன். அவன் பெயரே கோபாலன் என்று இருக்குமோ என்று எனக்கு

இப்போது சந்தேகம் வந்துவிட்டது. அவன் சொல்வது அவ்வள வும் பொய்யாக இருக்கும்போது, இது மட்டும் நிஜமாயிருக்கப் போகிறதா? நடந்து நடந்து என் கால்கள் இற்றுப் போய்விட்டன. இந்தப் பார்க்கில் அகப்படுவானோ என்று வந்தேன். அவன் இங்கும் இல்லை. என் கையிலிருந்த பணமெல்லாம் செலவாகி விட்டது. நகைகளையும் அவன் அடித்துக்கொண்டு போய்விட் டான். என் பெற்றோரிடம் திரும்பிப் போவதென்பதும் இனி இல்லை. அவர்கள் முகத்தில் எப்படி விழிப்பது? நான் சாப்பிட்டு நான்கு நாளாகிறது!' என்றாள்.

'உம்!' என்றான் சாம்பு. அவன் நெஞ்சு பாகாய்க் கரைந்து விட்டது. அவன் கண்களிலும் கண்ணீர் நிரம்பிவிட்டது.

'இனி, எனக்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. அது எலெக்ட்ரிக் ரயில் வண்டிதான்!' என்றாள் அவள்.

'அப்படியென்றால்?'

'தற்கொலை! உயிரை மாய்த்துக்கொள்வது! பட்டணத்துக் கோபாலன் ஒருவனிடம் நான் பட்டது இந்த ஜன்மத்துக்குப் போதும்! அதோடு என் ஜீவனை விடுகிறேன்.'

'இந்தா! நீ அப்படியெல்லாம் சொல்லக் கூடாது! உன் கதையைக் கேட்ட பிறகு உன்னைத் தனியே விடுவதில்லை என்று நான் தீர்மானித்து விட்டேன். உன் செலவுக்கு எத்தனை வேணுமானா லும் கேள். நான் பணம் தருகிறேன். அந்த அயோக்கியன் கோபாலனைப் பிடிக்கவேண்டியது என் கடமை!' என்றான். உடனே சட்டைப் பையிலிருந்து ஒரு கட்டு ரூபாய் நோட்டுகளை உருவி, அவற்றிலிருந்து இருபது ரூபாயை அந்தப் பெண்ணிடம் கொடுத்தான் சாம்பு.

அவள் அதை வாங்கவில்லை. விழித்துப் பார்த்து, 'இது எதற்கு? உங்களிடம் நான் ஒன்றும் தொட மாட்டேன்!' என்றாள் உறுதியுடன்.

'சே! பேசாமல் பிடி, சொல்கிறேன்!' என்று அதட்டினான் சாம்பு.

அதை அவள் மனமில்லாமல் வாங்கிக்கொண்டே, 'என் வார்த்தையை உடனே நம்பி, நீங்கள் இப்படி உதவி செய்வது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது! இதற்குக் கைம்மாறு?' என்றாள்.

'ஒன்றும் வேண்டாம்! எனக்கு யாரை நம்புவது, யாரை நம்பக் கூடாது என்று தெரியாதா என்ன? மேலும், இந்தப் பணம் என் சொந்தப் பணம் அல்ல!' என்றான் சாம்பு.

'பின் யாருடையது?'

'சர்க்கார் பணம்! நான் இங்கே வந்திருப்பதுகூட உன்னைப்போல் நம்பி மோசம் போகிறவர்களைக் காப்பாற்றுவதற்குத்தான்.'

'விவரமாகச் சொல்லுங்கள்.'

'பக்கத்தில் வா! அது வெளியில் தெரியவேண்டாம்! நான் ஒரு துப்பறிபவனாக்கும்!' என்றான் சாம்பு.

அவள் திடுக்கிட்டாள். 'துப்பறிபவரா? நீங்களா?'

'ஆமாம்! நான்தான். இந்த ஊரில் ஏமாற்றிக் கொள்ளையடிக்கும் கோஷ்டி ஒன்று அலைகிறது. அவர்களில் ஒருவரைப் பிடித்து விட்டால், அவ்வளவு பேரையும் பிடித்த மாதிரிதான். அதற் காகவே ஒரு வாரமாக நான் முயன்று வருகிறேன். அதற்காகவே தான் இங்கேயும் வந்திருக்கிறேன்.'

அவள் முகத்தில் கலவரம் தாண்டவமாடியது. 'இங்கே அந்தத் திருடர்கள் இருக்கிறார்களா? உங்களுக்குத் தெரியுமா?' என்று கேட்டாள்.

'எங்கேயும் இருக்கலாம். நாம் எதைக் கண்டோம்?'

'சரி! நீங்கள் துப்பறிகிறவர் என்றால், போலீஸில் போய்த் தெரிவிக்கலாம். அவ்வளவுதானே? அவர்களை அரெஸ்ட் செய்யவோ, வேறு தடுத்து நிறுத்தவோ உங்களுக்கு அதிகாரம் கிடையாதே!' என்றாள்.

'எனக்கு அதிகாரம் ஒன்றுமில்லை. ஆனால், போலீஸாரும் இந்தக் கேஸில் என்னோடு வேலை செய்கிறார்கள்.'

'ஓஹோ! அப்படியானால் போலீஸ்காரர்கள்கூட இங்கே இருக்கிறார்கள் என்று சொல்லுங்கள்!'

'இருக்கலாம்.'

'நீங்கள் திருடனைக் கண்டுபிடிப்பதை விட்டுவிட்டு என்னோடு பேசி ஏன் பொழுது போக்க வேண்டும்? நான் வருகிறேன்!' என்றாள் அவள்.

சாம்பு அவளை நிறுத்தினான். 'அது கிடக்கிறது தரித்திர வேலை! இன்னொரு சமயம் பார்த்துக்கொள்ளுகிறேன். இன்று எல்லா வற்றையும்விட உனக்கு உதவி செய்வதுதான் எனக்கு முக்கியம். உன் கோபாலனை உனக்குப் பிடித்துத் தந்துவிட்டு...'

'ரொம்ப வந்தனம். உங்கள் உதவிக்கு என்ன கைம்மாறு செய்வது என்று தெரியவில்லை. நாம் தனியாக இன்னொரு தடவை பேசிக் கொள்ளலாம். இங்கேதான் போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள் என்கிறீர்களே! அவர்கள் நாம் என்ன பேசுகிறோமென்று கவனித்துக் கொண்டிருப்பார்கள்.'

'கவனித்தால் கவனிக்கட்டும். அவர்களிடம் உன் சமாசாரத்தை நான் சொல்வேனா என்ன? காதுங்காதும் வைத்தாற்போல் உன் காதலனைப் பிடித்துத் தருகிறேன். உட்காரு!'

'இங்கே யார் போலீஸ்காரர்கள்? அதோ செடி மறைவில் நிற்கிறார்களே? அவர்களா?' என்று கேட்டாள் அந்த யுவதி.

'எனக்குத் தெரியாது, அம்மா!'

'பின், உங்கள் உதவிக்கு அவசரமாக அவர்கள் வரவேண்டு மானால் எப்படிக் கூப்பிடுவீர்கள் அவர்களை?'

'அதுவா? அதற்கு ஒரு யுக்தி இருக்கிறது. இதோ பார்!' என்றான் சாம்பு. உடனே அந்த க்ஷணமே அவன் தன்னை மறந்தான்.

மோவாய்க்கட்டைக்கு அடியில் கையைக் கொடுத்து ஓர் இழுப்பு இழுத்தான். அதே க்ஷணத்தில் சாம்பு உட்கார்ந்திருந்த பெஞ்சி யின் பின்புறம் எம கிங்கரர்கள் போல் இரண்டுபேர் வந்து நின்றார்கள்!

சாம்புவுக்குப் பகீரென்றது. அவன் செய்த பிசகை உணர்ந்தான். இவர்களை ஏன் அழைத்தோம் என்று அவன் உடலெல்லாம் பட படத்தது! நா குழறிற்று.

'உம்.. உம்.. உம்..' என்று தவித்தான்.

அவர்கள் இருவரும் அந்தப் பெண்ணின் இருபுறமும் நின்று கொண்டார்கள். சாம்புவைப் பார்த்து, 'சார்! நீங்கள் ஒன்றுமே சொல்ல வேண்டாம். இந்தப் பேர்வழியை நாங்கள் இத்தனை நேரமாகக் கவனித்துக்கொண்டுதான் இருந்தோம். உங்களிடம்

அவள் நடத்திய நாடகத்தைப் பூராவும் பார்த்தோம். நீங்கள் இனிச் சிரமப்பட வேண்டாம். நாங்கள் கவனித்துக்கொள் கிறோம்!' என்றார்கள்.

சாம்பு, மறுபடி மோவாய்க்கட்டையைத் தடவிக்கொண்டு திருதிருவென்று விழித்தான். வாய் பேச மறுத்தது. அதற்குள் அந்தப் பெண் சாம்புவை, 'அடே கிழப் பாபி! கடைசியில் என்னையே மோசம் செய்துவிட்டாயே! மடையன் மாதிரி மூஞ்சியை வைத்துக்கொண்டு எமகாதகனாயிருக்கிறாயே! உன் விளாங்காய்த் தலையில் இடி விழ!' என்றாள்.

போலீஸ்காரர்களில் ஒருவர், 'ஏ! சும்மா இரு! எத்தனை பேரை இதுவரை நீ ஏமாத்திப் பணம் பறிச்சிருக்கே! உன் வேலையையே இவரு உன்னண்டை காண்பிச்சாரு. அவ்வளவுதான்! பேசாம ஸ்டேஷனுக்கு நடக்கிறாயா, என்ன!' என்று அதட்டவே, அவர்கள் கூடவே நடந்தாள். சாம்பு பிரமித்து நின்றான்.

இன்ஸ்பெக்டர் கோபாலன் சாம்புவின் முதுகில் 'பட் பட்' என்று ஷொட்டுக் கொடுத்தார். 'சாம்பு, நீர் அபூர்வப் பிறவிங்காணும். ஐயோ! இது என்ன மூஞ்சி ஐயா உமக்கு! இதை வைத்துக் கொண்டு உலகத்தையே முட்டாள்மயமாக அடித்து விடலாமே! ஐயோ! எப்படித்தான் அவளைப் பிடித்தீரோ! என்ன சாமர்த்தியம் ஐயா உமக்கு! மகா துஷ்டை ஒருத்தியை எவ்வளவு லகுவாய் மடக்கிவிட்டீர்!' என்றார். கரகரவென்று சாம்புவை இழுத்துச் சென்று டெபுடி கமிஷ்னர் துரை முன்னால் கொண்டுபோய் நிறுத்தினார். சாம்புவைப் பார்த்து, துரை புன்னகை செய்தார்.

'ரொம்ப ஒண்டர்புல் உம்ம வேலை, மிஸ்டர் சாம்பல்!' என்றார்.

'இல்லை, சாம்பு என் பெயர்!' என்றான் சாம்பு.

'வெரி குட்! உம்மைப் பார்க்க ரொம்ப சந்தோஷம்! இனிமேல் பெரிய கேஸ்களெல்லாம் நீர்தான் கவனிச்சுக்கணும். போய் வாரும், மிஸ்டர் சாம்பல்!' என்றார்.

'இல்லை, என் பெயர் சாம்பு!' என்றான் சாம்பு.

'ஐ ஆம் சாரி! உம்ம பேர்தான் எனக்கு வரமாட்டேனென்கிறது, மிஸ்டர் சாம்பல்!' என்றார் துரை.

5

மைசூர் யானை

சாம்புவின் மணிபர்ஸில் பல ரூபாய் நோட்டுகள் சேர்ந்துவிடவே, நாம் பெரிய மனுஷனாகப் போய்விட்டோம் என்ற எண்ணம் அவனுக்கு ஏற்பட்டது. பெரிய மனுஷர்கள் செய்கிற காரியங்களில் ஏதாவது ஒன்று செய்ய வேண்டுமென்றும் தோன்றி யது. ஆகவே, 'பங்களூர் போவோமா? திருக் குற்றாலம் போகலாமா? அல்லது கொடைக் கானல் போகலாமா?' என்று எண்ணினான். ஒருவித முடிவுக்கும் வராமல் அவன் மூக்கைச் சொறிந்துகொண்டு உட்கார்ந் திருந்த சமயம் இன்ஸ்பெக்டர் கோபாலன் வந்து சேர்ந்தார்.

வந்ததும் வராததுமாக, 'என்ன சாம்பு சார்! பெங்களூருக்குப் போய் ஒரு வாரம் பத்து நாள் ஷோக்காக இருந்துவிட்டு வர்றது தானே?' என்றார்.

சாம்பு திடுக்கிட்டான். 'எப்படி சார் தெரிந்தது உங்களுக்கு, என் மனத்தில் இருந்தது?' என்றான், வாயைப் பிளந்து.

41474

'எனக்குத் தெரியாதா? கண்ணாடி மாதிரி உம்ம மூஞ்சியில் தெரிகிறதே! சும்மா போய்விட்டு வாரும், ஐயா!'

'பெங்களூர் போகலாம். ஆனால், பணத்துக்கு எங்கே போறது?' என்று சாம்பு உதட்டைப் பிதுக்கினான்.

'ஒய் சாம்பு! உம்மிடமா பணம் இல்லை? இருக்கட்டும். நான் சொல்கிறபடி கேளும்! பெங்களூருக்குத் தம்படி செலவில்லாமல் ராஜா மாதிரி போகலாம்; விச்ராந்தியா இருக்கலாம். எனக்கும் ஒரு கேஸில் உதவி செய்தாற்போலிருக்கும்! என்ன சொல்றீர்?'

சாம்பு யோசனையில் ஆழ்ந்தான். 'இரண்டு நாளைக்கு அப்புறம் யோசித்துச் சொல்றேனே?'

'இரண்டு நாளைக்கு அப்புறமா? நாசமாய்ப் போச்சு! நான் எதற்காக இங்கே வந்தேன்? இன்னிக்கு ராத்திரி மெயிலில் உமக்கு சீட் ரிசர்வ் பண்ணியாச்சுங்காணும்! செகண்ட் கிளாஸ். நீர் போகாவிட்டால் வண்டி காலியாகத்தான் போகும்.'

'எல்லாம் நீங்களாகப் பார்த்துச் செய்யும்போது, கேட்பதைத் தவிர எனக்கு என்ன சுதந்தரம் இருக்கிறது? இன்னும் என்ன செய்ய வேண்டும்? சொல்லி விடுங்கள்!'

'நீர் போகிற வண்டியிலேயே லக்ஷ்மிராஜு என்று ஒரு பையன் வரான். முப்பது வயசு. பார்வைக்கு ரொம்ப ஷோக்காயிருப்பான். கொஞ்ச நாளாகவே என் பார்வை அவன்மேல் விழுந்திருக்கு; தெரிந்ததா? அவனும் பெங்களூருக்குத்தான் வரான். நீர் அவன் அறியாமல் கூடவே கவனித்துக்கொண்டு பெங்களூருக்குப் போய்விட்டு அவனோடு திரும்பி வரணும்.'

சாம்பு தலையைப் பலமாக ஆட்டினான். 'நன்னா சொன்னீர், இன்ஸ்பெக்டர்! நீர் கண்காணிக்கிற பேர்வழின்னா எப்படி இருப்பான்னு எனக்குத் தெரியாதா? கொலைகாரப் பயலாயிருப்பான்! அவன் பின்னாலே போடான்னு லகுவாகச் சொல்லிப்பிட்டீரே! அவன் ராத்திரிக்கு ராத்திரியே என் கழுத்தை அறுத்துடுவான், ஒய்! நான் போகலை எங்கேயும்!' என்றான்.

சாம்புவின் முகத்தை இன்ஸ்பெக்டர் தடவிக் கொடுத்து, 'எதற்காக வேடிக்கையெல்லாம் பண்ணுகிறீர், சாம்பு? இந்த ஆசாமி கொலை கிலை செய்கிற பேர்வழியே இல்லை. வேறு

விதமா இவன் மேலே சந்தேகம் எனக்கு. தவிர, நீர் ஒண்ணுமே செய்யவேண்டாம். வெறுமனே அவன்கூடப் போய், அவன் செய்கிறதை மட்டும் கவனிச்சுண்டு வந்தால் போதும்!.' என்றார். இன்னும் எவ்வளவோ சொல்லி, சாம்புவைச் சமாதானப் படுத்தினார். கடைசியில் ஒருவிதமாகச் சாம்பு, 'சரி, போகிறேன்!' என்று ஒப்புக்கொண்டான்.

இன்ஸ்பெக்டர் போகுமுன், 'சாம்பு சார்! மைசூர், பெங்களூரெல் லாம் சுற்றிவிட்டுக் குஷியாக வரப் போகிறீர்! வரும்போது எனக்கு ஞாபகமாக ஏதானும் வாங்கிக்கொண்டு வரணும், என்ன?' என்று சொல்லி, சிரித்துவிட்டுப் போனார்.

•

பெங்களூர் மெயில் சென்னையைவிட்டுக் கிளம்பியது. சாம்பு இரண்டாவது கிளாஸ் வண்டியொன்றில் உட்கார்ந்திருந்தான். அவனுக்கு எதிர்த்த சீட்டில் ஓர் இளைஞன் உட்கார்ந்துகொண்டு இருந்தான். அவன் முகத்தைப் பார்த்தவுடனேயே தான் பின் தொடர வேண்டிய பேர்வழி அவன்தான் என்று சாம்பு ஊகித்துக் கொண்டான். இளைஞனுடைய பால்வடியும் முகத்தைப் பார்த்து, 'ஐயோ! இவ்வளவு நல்ல பையனையா கோபாலன் போய்ச் சந்தேகப்படுகிறார்! அவருக்குக் கல் நெஞ்சுதான்!' என்று ஒரு க்ஷணம் எண்ணினான்.

சாம்பு, வழக்கம்போல் அவனைப் பார்த்து அசட்டுச் சிரிப்பாகச் சிரித்தான். அவன் படித்துக்கொண்டிருந்த தினசரிப் பத்திரிகையைக் கீழே வைத்துவிட்டு, சாம்புவைப் பார்த்து, 'சார்! நீங்களும் பெங்களூர்தான் வருகிறீர்களோ?' என்று கேட்டான்.

'ஆமாம். இங்கே வெயில் தாங்கலே. என் சிநேகிதர் ஒருவர் என்னைக் கட்டாயப்படுத்தி, பெங்களூருக்குப் போகச் சொன்னார். அவருக்காகவே போகிறேன்!' என்றான் சாம்பு. இன்ஸ்பெக்டர் பெயரை அவன் அப்போது எப்படிச் சொல் லாமல் இருந்தான் என்பதே ஓர் ஆச்சரியந்தான்.

'ஓஹோ சரிதான், சார்! நானும் பெங்களூருக்குத்தான் வரு கிறேன். நீங்கள் எங்கே தங்குவீர்கள்?' என்று கேட்டான் அவன்.

'எங்கே தங்குவதா? ஏதானும் ஹோட்டலில்தான் தங்க வேணும். இதற்கு முந்திப் பிந்தி நான் பெங்களூருக்குப் போனதுகூட

இல்லை. அதுதான் சொன்னேனே, நிர்ப்பந்தத்தின் பேரில் போகிறேனென்று!' என்றான் சாம்பு. லக்ஷ்மிராஜு சிரித்தான். 'நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். பெங்களூரில் நான்கூட ஹோட்டலில்தான் தங்கப் போகிறேன். நானும் சும்மாதான் போகிறேன். நான் தங்குகிற ஹோட்டலிலேயே உங்களுக்கு ஆட்சேபம் இல்லை என்றால் நீங்களும் தங்கலாம்!' என்றான்.

சாம்புவுக்கு மனத்துக்குள் ஆனந்தம் பொங்கியது. 'லக்ஷ்மிராஜு உண்மையில் துஷ்டப் பையனாக இருந்தால் இவ்வளவு வெகுளித்தனமாக இருப்பானா?' என்று எண்ணினான்.

மெயில் போய்க்கொண்டே இருந்தது. சாம்புவும் நிமிஷத்துக்கு நிமிஷம் லக்ஷ்மிராஜுவுடன் நெருங்கிப் பேசிக் கொண்டிருந் தான். தான் துப்பறிபவன் என்று ஒரு செய்தி நீங்கலாகச் சகல விஷயங்களையும் அவன் சொல்லிவிட்டான். எத்தனையோ தடவைகள் அதையும்கூடச் சொல்லிவிடுவோமா என்று அவன் உதடுகள் துடித்தன. ஒருவிதமாக அந்த ஆசையை அடக்கிக் கொண்டான். பெங்களூரை அடைந்ததும் சாம்புவைக் கையைப் பிடித்து லக்ஷ்மிராஜு, ஹோட்டலுக்கு அழைத்துக் கொண்டு போனான். அங்கே போனதும், 'மிஸ்டர் சாம்பு! உங்களை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது! உங்கள் முகத்தைப் பார்க்கப் பார்க்க எனக்கு என் மாமாவின் ஞாபகந்தான் அடிக்கடி வருகிறது. நீங்கள் தனி அறையில் இருக்க வேண்டியதில்லை; நான் இருக்கும் அறையிலேயே இருங்கள்!' என்று வற்புறுத்தினான். சாம்புவின் ஆச்சரியம் பன்மடங்கு அதிகரித்தது. 'என்ன! நாம் ஓர் சாமியை ரகசியமாகத் தொடர்ந்து போய், அவன் செய்வதையெல்லாம் கவனிப்பதென்று வருவதாவது; அவனே நம்மை வலுவில் அழைத்து, தன் அறையிலேயே வைத்துக் கொள்வதாவது; நம்பும்படியாக இல்லையே!' என்று ஆச்சரியப்பட்டான்.

மறுநாள் காலை ஏழு மணி இருக்கும். காபி சாப்பிட்டுவிட்டு ஹோட்டல் அறையில் சாம்புவும் லக்ஷ்மிராஜுவும் உட்கார்ந் திருந்தார்கள்.

'சாம்பு மாமா! உங்களை இனிமேல் நான் 'மாமா' என்றுதான் கூப்பிடப் போகிறேன். உங்களுக்கு ஆட்சேபம் இல்லையே?' என்றான் இளைஞன் சிரித்துக்கொண்டு.

'எப்படி வேண்டுமானாலும் கூப்பிட்டுக் கொள். அப்பா! நான் இந்த ஊருக்குப் புதிசு; உன்னைத்தான் நம்பியிருக்கிறேன்!' என்றான் சாம்பு.

'சரி, மாமா! உங்களுக்கு இந்த ஊரில் என்ன பார்க்க வேணும், சொல்லுங்கள்! அதையெல்லாம் நீங்கள் பார்க்கலாம்!'

'உன் இஷ்டம்போல்!' என்றான் சாம்பு.

'இன்னும் ஒரே ஒரு விஷயமும் சொல்லிவிடுகிறேன்; உங்களை எனக்கு அதிகம் தெரியாது. இருந்தாலும் வெகுகாலம் பழகி விட்டது மாதிரியே தோன்றுகிறது. என் மனத்தில் இருப்பதைத் தாராளமாகச் சொல்லிவிடுகிறேன்.'

'சொல்லு அப்பா.'

'என்னை நீங்கள் எப்போதும் அங்கு இங்கு போகாமல் நன்றாகக் கவனித்துக்கொள்ள வேண்டும்!' என்றான் லக்ஷ்மிராஜு.

இதைக் கேட்டவுடன் சாம்புவுக்கு ஆச்சரியத்தில் விழியே பிதுங்கிவிட்டது.

'என்ன?' என்றான் அவன்.

'நான் சிறு பிள்ளை, பாருங்கள்! கையில் பணத்துடன் இந்த ஊரில் தனியே வந்திருக்கிறேன். கெட்ட சகவாசம் சூழ்ந்துகொள்ளும். உங்கள் மாதிரி ஒரு பெரியவர்கூட இருப்பது எவ்வளவு நன்மை!' என்று சொன்னான் லக்ஷ்மிராஜு வெள்ளையாக.

சாம்புவுக்குப் போன மூச்சு அப்போதுதான் திரும்பி வந்தது.

அடுத்துப் பதினைந்து தினங்கள் டாக்ஸியிலும் மோட்டாரிலும் சாம்பு பெங்களூரைச் சுற்றிச் சுற்றி வந்தான். போகுமிடமெல்லாம் லக்ஷ்மிராஜுவும் கூடவே வந்தான். உண்மையில் அவன்தான் சாம்புவை அழைத்துப் போனது. ஆகவே, லக்ஷ்மிராஜுவைப் பின்தொடர வேண்டுமென்ற கவலையே சாம்புவுக்கு ஏற்படவில்லை.

நாளுக்கு நாள் சாம்பு தன் புதிய நண்பனிடம் அதிக அன்பு பாராட்டினான். 'ஐயோ! எவ்வளவு நல்லபிள்ளை! இவன் இருக்குமிடத்தில்கூட, திருட்டு புரட்டு நடக்காதே!' என்று

எண்ணிக்கொள்வான். இப்படியே விரைவாகப் பதினைந்து தினங்கள் ஓடி மறைந்தன.

அன்றுதான் கடைசி தினம். லக்ஷ்மிராஜு சென்னைக்கு மறுநாள் திரும்ப வேண்டும் என்று சொல்லிவிட்டான். அதைக் கேட்ட சாம்பு, 'சரி. நானும் வருகிறேன், எனக்கும் இங்கே இனி வேலை ஒன்றுமில்லை!' என்று கூறினான்.

'இரண்டு பேருமே கிளம்பிவிட்டால் போகிறது! மூட்டையைக் கட்டும்!' என்றான் லக்ஷ்மிராஜு, காலை நீட்டி ஈஸிசேரில் சாய்ந்து கொண்டு. அந்தச் சமயத்தில்தான் ஹோட்டல் அறை வாசலில் ஒரு வியாபாரி வந்து நின்றான். 'சார், மரயானை!' என்றான் அவன்.

லக்ஷ்மிராஜு இருந்த இடத்தைவிட்டு நகராமல் சாம்புவைப் பார்த்து, 'யானை வாங்குகிறீர்களா, மாமா? பெங்களூருக்கு வந்து விட்டு வெறுங்கையோடு போகிறதா?' என்று கேட்டான்.

சாம்புவுக்குத் திக்கென்றது. 'அடடே! இப்போதுதான் ஞாபகம் வருகிறது. என் சிநேகிதர் ஏதாவது வாங்கிக்கொண்டு வரும்படி சொன்னாரே! மறந்தே போய்விட்டேனே! இதில் ஒன்று வாங்கிக் கொண்டு போனால் என்ன?' என்றான் சாம்பு.

'சரி, மாமா! நீங்கள் ஒன்று வாங்கிக் கொள்வதானால் நானும் ஒன்று வாங்கிக் கொள்கிறேன்!' என்று ஈஸிசேரிலிருந்து அவன் எழுந்து வந்தான்.

மரத்தினால் செய்த அந்த யானைகள் சுமார் ஓர் அடி உயரம் இருந்தன. மழமழவென்று கன்னங்கரேலென்ற உடலும் தூய்மை யான வெண்மை நிறத்தில் தந்தங்களுமாகப் பார்வைக்கு அவை அழகாக இருந்தன. யானை ஒன்று, மூன்று ரூபாய் என்றான் வியாபாரி. அவனிடம் இருந்தவை இரண்டே யானைகள்தான். சாம்பு உடனே அந்த விலைக்கு வாங்கிஇருப்பான். லக்ஷ்மிராஜு 'மாமா! உங்களுக்கு விலைபேசி வாங்கத் தெரியாது! நான் பேசுகிறேன்; நகர்ந்துகொள்ளுங்கள்!' என்று வியாபாரியின் முன்பு உட்கார்ந்துகொண்டான். அரை மணி நேரம் பேரம் நடந்தது. இரண்டு யானைகளையும் ஒன்றரை ரூபாய்க்குப் பேசி முடித்து வாங்கிவிட்டான் லக்ஷ்மிராஜு.

அன்றிரவு சாம்புவும் லக்ஷ்மிராஜுவும் பெங்களூர் மெயிலில் ஏறினார்கள். சாம்புவின் பெட்டிக்குள் அவன் வாங்கின

யானையை வைக்க இடம் இல்லையாதலால் கையில் அணைத்துக் கொண்டு ஜாம் ஜாமென்று மெயிலில் ஏறினான். சாம்புவின் மனத்துக்குள் ஒருவித ஆனந்தந்தான் நிரம்பியிருந்தது. அதற்குக் காரணம், லக்ஷ்மிராஜு புகார் சொல்லும்படி நடந்துகொள்ளாததுதான். கோபாலனிடம் போய், 'ஐயோ! நீர் பெரிய பிசகு செய்துவிட்டீர்! அவனைப் பற்றித் தவறாகச் சொன்ன வாயை அலம்பிக் கொள்ளும்!' என்று சொல்ல வேண்டும் என்று அவன் துடிதுடித்துக் கொண்டிருந்தான். அப்போது லக்ஷ்மிராஜு 'மாமா! நீங்கள் எனக்கு ஒரு வாக்குக் கொடுக்க வேண்டும். மெட்ராஸ் வந்தவுடன் நேரே எங்கள் வீட்டுக்குத்தான் வரவேண்டும். அங்கே சாப்பிட்டுவிட்டு மத்தியானத்துக்கு மேல்தான் போக வேண்டும்' என்றான்.

'சரி, அப்பா! உன் இஷ்டம்' என்றான் சாம்பு. பிறகு நிம்மதியாகக் கண் மூடினான்.

சாம்புவின் தூக்கம் திடீரென்று கலைந்தது. கண்ணை விழித்து உட்கார்ந்தான். பொழுது விடிந்திருந்தது. மெயில் ஒரு பெரிய ஸ்டேஷனில் நின்றது. ஜனங்கள் ஜே ஜே என்று போய்க் கொண்டு இருந்தார்கள். அவன் இருந்த வண்டியில் இரண்டு ஜவான்கள் நின்றுகொண்டிருந்தார்கள். ஆனால், லக்ஷ்மிராஜுவைக் காணோம்!

சாம்பு, இறங்குங்கள். நல்ல தூக்கம் போலிருக்கிறதே? என்றது இன்ஸ்பெக்டர் கோபாலனின் குரல்.

இதற்குள் மெட்ராஸா? என்றான் சாம்பு, சுற்றுமுற்றும் பார்த்துக் கண்ணைக் கசக்கிக்கொண்டு. மாம், உம்ம சாமான்களை எங்கே வைத்திருக்கிறீர்?

சாம்பு தன் பெட்டியை ஒரு ஜவானிடம் கொடுத்தான். பெஞ்சுக்கடியிலிருந்து யானை பொம்மையைத் தானே தூக்கிக் கொண்டு வண்டியிலிருந்து இறங்கினான்.

'இது யாருக்குங்காணும் பொம்மை?' என்று கேட்டார் கோபாலன்.

இதைத்தான் உமக்கு ஸ்பெஷலாகக் கொண்டு வந்திருக்கிறேன்!' என்றான் சாம்பு.

'அட! நன்றாயிருக்கிறதே!' என்று சிரித்தார் கோபாலன்.

இன்ஸ்பெக்டரைப் பின்தொடர்ந்து சாம்பு ஸ்டேஷன் அறைக்குள் சென்றான். போனதும் போகாததுமாகக் கோபாலன் அவனை, எங்கே, நடந்ததைச் சீக்கிரம் சொல்லும்! என்றார்.

சாம்பு, ஆதியோடந்தமாகச் சொன்னான். முடிவாக லக்ஷ்மிராஜுவின் நல்ல குணத்தை எடுத்துச் சொல்லப்போகும் தருவாயில், இரண்டு போலீஸ்காரர்கள் உள்ளே நுழைந்தார்கள்.

'சார்! லக்ஷ்மிராஜுவை நல்லா சோதனை போட்டாச்சு. ஒன்றுமே கிடைக்கவில்லை. இந்தத் தடவை நாம் ஏமாந்துதான் போய்விட்டோம். இனிமேல் பேர்வழியை விட்டுவிட வேண்டியதுதானே?' என்றார் அவர்களில் ஒருவர்.

என்ன ஐயா இது? சரியாகப் பார்த்துவிட்டீர்களா? என்றார் கோபாலன் பதற்றத்துடன்.

'சரியாகவா? அவன் ஒரு யானைப் பொம்மை கொண்டு வந்தான். அதைக்கூட அல்லவா துண்டு துண்டாக உடைத்துப் பார்த்து விட்டேன்.'

கோபாலன் அழைத்து வந்த அவசரத்தில் சாம்பு இதுவரை லக்ஷ்மிராஜுவைப் பற்றிக் கவலைப்படவில்லை. இப்போது யானையைப் பற்றி பேச்சு வந்ததும் அவன், யானையை உடைத்தீர்களா? அதை லகுவாக உடைக்க முடிந்ததா? என்றான். உடனே தன்னிடமிருந்த யானையை, கைக்கு இருகால்களாகப் பிடித்து முறுக்கிப் பார்த்தான். அது லகுவில் உடையாது என்பதை நிரூபிக்கத்தான் அவன் அப்படிச் செய்தான். ஆம்; அவன் முறுக்கவே யானையின் கால்கள் சற்று நகர்ந்துகொண்டாற் போல் அவனுக்குத் தோன்றியது. மேலும் சற்றுப் பலமாக முறுக்கினான். யானையின் வயிற்றின் குறுக்கே ஒரு மெல்லிய கோடு தெரிந்தது. அவன் முறுக்க முறுக்க அந்தக் கோடு அகன்று வந்து, கடைசியில் யானை கைக்கு ஒரு பாகமாகப் பிரிந்து போயிற்று. ஒரே கூடாக இருந்த அதன் வயிற்றுக்குள்ளிருந்து பொத்தென்று ஒரு சிறு தோல் பை விழுந்தது! இன்ஸ்பெக்டர் கோபாலன் துள்ளிக் குதித்தார். பரபரப்புடன் பாய்ந்து, அதைக் குனிந்து எடுத்து அவிழ்த்தார். ஒரு சிரங்கை அளவு வெள்ளைக் கற்கள். அதனுள்ளிருந்து ஆயிரம் வர்ணங்கள் வாரி இறைத்தன!

ஒரு விநாடி நிசப்தம்! சாம்பு பிரமித்துப் போய் நின்றான். அவன் அப்படி நிற்கும்போதே இன்ஸ்பெக்டர் அவனை இறுகத் தழுவிக் கொண்டார்.

'சாம்பு, சாம்பு! என்ன மேதாவி ஐயா நீர்! எவ்வளவு பெரிய திருட்டைக் கண்டுபிடித்து, சரக்கைக் கையில் ஒப்படைத்து விட்டீர். ஆச்சரியமாக இருக்கே! நம்ப முடியவில்லையே, போக்கிரி மனுஷா! எனக்கு ஸ்பெஷலாகவா கொண்டு வந்தீர், இந்த யானையை? இத்தனை குறும்புத்தனம் எங்கிருந்து வந்தது உமக்கு?' என்றார். மேலும், மூச்சு விடாமல் சொன்னார்:

'கேளுங்கள், சாம்பு! இந்த லக்ஷ்மிராஜு நல்ல பையன்தான். அவனைப் பற்றி நீர் சொன்னதெல்லாம் சரிதான். அவன் கெட்ட வழியில் இறங்கிவிட்டான். போன மாதம் மைசூரில் ஒரு பங்களாவில் வைரங்கள் திருட்டுபோன சமாசாரம் பேப்பரில் படித்திருப்பீரே! இவை அந்த வைரங்கள்தான். இவற்றைச் சென்னைக்குக் கொண்டுவரத் திருடர்கள் பகீரதப் பிரயத்தனம் செய்து பார்த்திருக்கிறார்கள். போலீஸ் கண்காணிப்பு அதிகமாக இருக்கவே, அவர்களே கொண்டு வந்தால் எளிதில் அகப்பட்டுக் கொண்டிருப்பார்கள். லக்ஷ்மிராஜுவும் இந்தக் கோஷ்டியில் சம்பந்தப்பட்டவன். அவனைத் தருவித்து அவன் மூலமாக அனுப்ப அவர்கள் முயற்சி செய்தார்கள். ஆனால், லக்ஷ்மிராஜுவுக்கும் தன்பேரில் போலீசார் சந்தேகப்படுகிறார்கள் என்பது தெரியும். தான் திரும்பிவரும்போது போலீசார் சோதனை செய்வார்கள் என்றும் தெரியும். உம்ம பேரில் அவனுக்குச் சந்தேகம்தான். நீர் அவனைக் கண்காணிக்கப் போகிறீர் என்று ஊகித்துக் கொண்டிருப்பான். உம்மைக் கண் மறைவில் போகாமல் பார்த்துக்கொள்ள ஒரு யுக்தி செய்து, தன்னையே கவனித்துக் கொள்ளும்படி உம்மைக் கேட்டுக் கொண்டான். அந்த யானை வியாபாரி வந்தானே, அவனும் திருடர் கோஷ்டியைச் சேர்ந்த பேர்வழி. எந்த யானையின் வயிற்றில் வைரங்கள் இருக்கின்றனவென்று அவன் லக்ஷ்மிராஜுவுக்குச் சொல்லி இருக்கிறான். நீர் தூங்கும் சமயத்தில் உம்முடைய யானையையும் தன்னுடைய யானையையும் மாற்றிக்கொண்டான். ஏனென்றால், போலீசார் சந்தேகப்பட்டாலும் அவனைத்தான் நன்றாகச் சோதனை செய்வார்கள்; உம்மை ஒன்றும் செய்யப் போவதில்லை. ஸ்டேஷனுக்கு வெளியே வந்ததும் உம்மை வீட்டுக்கு அழைத்துப் போகிறா போல் கூட்டிப்போய், யானைகளை மீண்டும் மாற்றிக்கொள்ளலாம் என்பது அவன் போட்டிருந்த திட்டம். ஆனால், நீர்தான் எமகாதகப் பேர்வழி ஆயிற்றே. அந்த யானையையே எனக்கு ஸ்பெஷல் பிரைஸாகக் கொடுத்து விட்டீரே. சபாஷ் சாம்பு, மார்வெலஸ்!' என்றார் கோபாலன்.

சாம்பு ஸ்டேஷனுக்கு வெளிய வந்ததும், அவனைச் சுற்றி ஒரு பெரிய கூட்டம் கூடிவிட்டது. 'பளிச் பளிச்'சென்று மின்சார வெளிச்சம் அடித்தது பத்து பேர் சூழ்ந்து சாம்புவை போட்டோ எடுத்தார்கள். சாம்பு பேந்தப் பேந்த விழித்தான். மறுபடியும் போட்டோக்கள் எடுக்கப்பட்டன. அப்போது மட்டும் இன்ஸ்பெக்டர் கோபாலன் வந்து சாம்புவை அழைத்துக் கொண்டு போயிராவிட்டால் சாம்புவைப் பத்திரிகை நிருபர்கள் திணற வைத்திருப்பார்கள். மறுநாள் பத்திரிகைகளில் சாம்புவின் படங்கள் வெளியாயின என்று சொல்லவும் வேண்டுமா?



6

தோல்வியே வெற்றி!

ஆறு மாதத்துக்குச் சாம்பு சும்மாதான் உட்கார்ந்திருக்க வேண்டிவந்தது. பத்திரிகைகள் எல்லாம் அவனுக்குச் சப்பென்று இருந்தன. எங்கேயாவது யாராவது ஒரு கொலை செய்தால்தானே? 'சீ! இதென்ன உலகம்! இதில் என்னமாக இருப்பது!' என்று சாம்பு வெறுத்துக்கொண்டான். உள்ளூர்ப் புத்தக சாலையில் இருந்த துப்பறியும் நாவல்களை, ஒன்றுவிடாமல் அவன் வாசித்து முடித்துவிட்டான். இனிமேல் வாசித்தவைகளையேதான் திரும்ப வாசிக்க வேண்டும்.

ஒருநாள் அஸ்தமித்த பிறகு சாம்பு திண்ணையில் உட்கார்ந்து தன் வழக்கப்படி மூக்கின் கூர்மையைப் பரீட்சித்துக் கொண்டிருந்த போது, இரண்டு பேர் தெருவில் பேசிக் கொண்டிருந்தது அகஸ்மாத்தாகக் காதில் விழுந்தது.

'அவன்தாண்டா! போன வருஷத்திலே சோமுக் கவுண்டன்னு ஒருத்தன் செத்துப் போய்க் கிடக்கலே, கொரட்டூர் ஏரிக்கரையிலே. நீ கேள்விப்பட்டிருப்பியே?' என்றான் அவர்களில் ஒருவன்.

'கேள்விப்படாமல் என்ன? அவனுக்கு ஏகப்பட்ட விரோதிகள். மகபோக்கிரிப் பயலாம். எவனாவது அடிச்சுப் போட்டிருப் பான்னுகூடச் சந்தேகப்பட்டார்களாமே?'

'அதையேன் கேட்கிறே? அவன் ஒழிஞ்சப்புறந்தான் ஊரே கொஞ்சம் நிம்மதியாயிருக்கு! அவனாகத்தான் குடிச்சுப்புட்டு விழுந்து செத்துக் கிடந்தானா அல்லது யாரானுந்தான் வஞ்சத்தைத் தீர்த்துக்கொண்டார்களோ தெரியாது. அந்த ஊரிலே பஞ்சநாத முதலின்னு பலத்த கை. அவனோட போய் இந்தக் கவுண்டன் விரோதிச்சுக்கிட்டானாம். அவனேகூடத் தீர்த்திருப் பான்னு ஒரு வதந்தி அந்த ஊரிலே இருந்தது.'

சாம்பு நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான், உற்றுக் கேட்க. ஆனால், அந்த வழிப்போக்கர்கள் பேசிக்கொண்டே மெல்ல நடந்து அவன் வீட்டைத் தாண்டிக்கொண்டு போய்விட்டார்கள்.

'அவர்கள் போனால் போகட்டும். நம் கையில் ஒரு கேஸை அல்லவா போட்டுவிட்டுப் போய்விட்டார்கள்?' என்று சாம்பு ஆனந்தப்பட்டான். அன்றிரவு பூராவும் அவனுக்குத் தூக்கமே வர வில்லை. நகத்தைக் கடித்துக்கொண்டு யோசனையில் இறங்கி விட்டான். மறுநாள் கொரட்டூருக்குப் போக மூட்டை கட்டி விட்டான்.

கொரட்டூர் கிராமத்து ஜனங்கள் கசமுசவென்று பேசிக் கொண்டார்கள். இத்தனை நாளாகக் காலியாகக் கிடந்த கோடி வீட்டுக்கு, புதிதாக ஓர் ஆசாமி குடிவந்தது பற்றித்தான் பேச்சு. அவன் கிருஷ்ணையர் ஹோட்டலில் சாப்பிடுகிறான் என்றும், பட்டணத்திலிருந்து ஏதோ ஓர் இரகசியக் காரியமாக வந்திருக் கிறான் என்றும் பேச்சுகள் கிளம்பின.

'போலீஸ் ஆளாக இருப்பானோ?' என்றான் ஒரு பேர்வழி.

'இருக்கலாம். சோமுக் கவுண்டன் கொலை விஷயமாக வந்திருக்கலாமோ?' என்றான் இன்னொரு பேர்வழி.

'ஆசாமியைப் பார்த்தால் அசடு வழிகிறதே!' என்றான் ஒருவன்.

'அப்படித்தாண்டா இருப்பான். நான் சொல்கிறேன், பார். அவ்வளவும் வேஷம். துப்பறிய வருபவன் இதற்காக வருகிறேன் என்று தண்டோரா போட்டுக்கொண்டு வருவானா?' என்று கேட்டான் ஒரு கெட்டிக்காரன்.

'ரொம்ப வாஸ்தவம். இவன் முகத்தில் வழிகிற அவ்வளவு அசடு எந்தக் கடைசல் பிடித்த முட்டாளுக்கும் வழியாது. இவன் வேஷம் போடுகிறான் என்பதில் சந்தேகமே இல்லை!' - விஷயம் தெரிந்தவராகக் கருதப்பட்ட ஓர் ஆசாமி கூறினார்.

இப்படியாக, கொரட்டூருக்கு வந்த மறுநாளே சாம்புவைக் கண்டு ஊர்வாசிகள் அவ்வளவு பேரும் ஒதுங்க ஆரம்பித்தார்கள். யாரா வது நெருங்கிப் பேசினால் கொலையைப் பற்றிய விவரங்களை அறியலாம் என்று எதிர்பார்த்த சாம்பு, தனியே விடப்பட்டான்.

துப்பறிபவர்களுக்கு மற்ற குணங்களுடன் பொறுமையும் விடா முயற்சியும் வேண்டும். சாம்புவிடம் மற்ற குணங்கள் இல்லாவிட்டாலும், இந்த இரண்டு அருங்குணங்கள் மட்டும் அபரிமிதமாக இருந்தன. ஆகையால், 'சரி நாமே போய் ஏரிக்கரையைச் சுற்றிப் பார்க்கலாம்!' என்று ஒருநாள் மாலை கிளம்பினான்.

கொரட்டூர் வீதிகளைக் கடந்து சிறிது தூரம் போயிருப்பான். 'என்ன! நம்முடைய காலடிச் சப்தமா இவ்வளவு பெரிதாகக் கேட்கிறது?' என்று சந்தேகப்பட்டு அவன் திரும்பிப் பார்த்தான். தெருமுனையில் சுமார் பன்னிரண்டு வயதுள்ள சின்னப் பையன் ஒருவனுடைய உருவம் தெரிந்தது.

சாம்பு மேலே நடந்தான். இப்போது கொரட்டூர் தோப்புகளை நெருங்கியிருப்பான். பின்னால் வந்த பையன் தன்னைப் பின்தொடர்ந்துதான் வருகிறானோ என்று மீண்டும் சந்தேகம் வந்து திரும்பிப் பார்த்தான். இப்போது அந்த ஒரு பையனுடன் கூட, மற்றும் ஒன்பது பையன்கள் வந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் தன்னைத்தான் பின்தொடருகிறார்கள் என்பதில் சாம்புவுக்கு இப்போது சந்தேகமில்லை. 'சரி, இவர்களை ஏமாற்றிவிட்டு, சுற்றுவழியாகப் போகலாம்!' என்று சிறிது தூரம் நேர்வழியாகத் திரும்பிப் பாராமலேயே போனான். அப்புறம் ஒரு குறுக்குப் பாதையில் திரும்பினான்.

உடனே பின்னாலிருந்து பன்னிரண்டு சிறுவர்கள் ஓடிவந்து சாம்புவைச் சூழ்ந்துகொண்டார்கள். 'மாமா! ஏரிக்கரைக்கு இந்த வழியாகப் போகிறதில்லை; அப்படிப் போக வேண்டும்!' என்றான் ஒரு பையன். முதன்முதலாகச் சாம்பு பார்த்த பையன் அவன்தான்.

'நான் ஏரிக்கரைக்குப் போகிறேன் என்று யாரடா உங்களுக்குச் சொன்னது?' என்றான் சாம்பு.

'எனக்குத் தெரியாதா, மாமா? கொலை பண்ணினவனைப் பிடிக்கத்தானே வந்திருக்கிறே நீ?' என்றான் அவன்.

'வீரப் பயலாய் இருக்கிறாயே! உன் பேர் என்ன?' என்று கேட்டான் சாம்பு.

அந்தப் பையன் தன் சகாக்கள் பக்கம் திரும்பி, 'பார்த்தாயாடா! இந்த மாமா துப்பறியத்தான் வந்திருக்கேன்னு நம்மண்டே ஒப்புத்துக்கிறார்! என்று பல்லைக் காட்டினான். பிறகு சாம்புவிடம், மாமா! என் பேர் மாணிக்கம்!' என்றான்.

'சரி, மாணிக்கம்! நீ உன் சிநேகிதர்களை அழைத்துக்கொண்டு வீட்டுக்குப் போ! நீ கெட்டிக்காரப் பயல்!' என்றான் சாம்பு. அவர்களைத் தாஜா பண்ணி லகுவாக அனுப்பிவிடலாம் என்பது தான் சாம்புவின் எண்ணம்.

மாணிக்கம் என்ற பையன், 'நாங்கள் போய்விடுகிறோம், மாமா! உங்களுக்கு யார்மேல் சந்தேகம் என்று மட்டும் எங்களுக்குச் சொல்லிவிடுங்கள்!' என்று கேட்டான்.

'அதெல்லாம் சிறு பசங்கள் கேட்கப்படாது! அப்புறம் கடைசியில் தான் சொல்ல முடியும்! இப்போது போங்கள்!' என்றான் சாம்பு.

'மாமா! மாமா! நீங்கள் உங்கள் வாயால் சொல்ல வேண்டாம். நான் ஒவ்வொருத்தர் பேராகச் சொல்லிக்கொண்டு வருகிறேன். நீங்கள் உண்டு, இல்லை என்று சொன்னால் போதும். பஞ்சநாத முதலியாரா?'

சாம்பு திருதிருவென்று விழித்தான். மாணிக்கம் மிகவும் சுறுசுறுப்பான பயலாகையால், 'அடே! பஞ்சநாத முதலியார் மேல் இந்த மாமாவுக்கு சந்தேகமாண்டா!' என்றான்.

சாம்பு ஏதோ மறுத்துக்கூற வாயெடுத்தான். ஆனால், அதற்குள் அவ்வளவு பையன்களும் மாணிக்கம் பின்தொடர ஊரைப் பார்க்க ஓடிவிட்டார்கள்.

சாம்பு வாயில் விரலை வைத்துக்கொண்டு யோசித்தான். 'இப்படியெல்லாம் பகிரங்கமாக வந்து தடயங்களைத் தேடுவது

முட்டாள்தனம். விடியற்காலை வேளையில் யாருக்கும் தெரியாமல்தான் வரவேண்டும்!' என்று அவனுக்குத் தோன்றியது. ஆகவே, உடனே வீட்டுக்குத் திரும்பினான்.

திரும்பும்போது வழியில் ஒரு மரத்தடியில் நின்று அவனையே கவனித்துக்கொண்டிருந்துவிட்டுச் சென்ற ஓர் உருவத்தை அவன் பார்க்காமல் தன் எண்ணங்களிலேயே லயித்து நடந்தான்.

மாணிக்கத்தை வீரப்பயல் என்று சாம்பு சொன்னானல்லவா? அது ஆயிரத்தில் ஒரு வார்த்தை. அன்றிரவு ஓர் அலாரம் கடிகாரத்தை கிருஷ்ணையர் ஹோட்டலில் இரவலாகச் சாம்பு வாங்கி வைத்துக்கொண்டதையும், அதில் விடியற்காலை ஐந்து மணிக்கு அலாரம் வைத்திருந்ததையும் எப்படியோ அவன் கண்டுகொண்டு விட்டான்.

ஆகவே, மறுநாள் காலை சாம்பு கிளம்பிய அரைமணி நேரத்துக்குப் பிறகு, அவன் தன் சகாக்களுடன் ஏரிக்கரையை நோக்கிச் சென்றான். இப்போது அவனுடன் பத்தொன்பது பையன்கள் கிளம்பினார்கள்.

சரியாக விடியற்காலை ஐந்து மணிக்குக் கிளம்பிய சாம்பு, முதல் நாள் மாலை தாண்டிய தோப்பை நெருங்கிவிட்டான். கிழக்கு வெளுத்திருந்தது. சிலுசிலுவென்று காற்று அடித்தது. தோப்பைச் சுற்றியிருந்த முள்வேலிக்கு வெளியே ஒற்றையடிப் பாதை இருந்தது. அவ்வழியேதான் தலைகுனிந்து யோசனை செய்தவாறு சாம்பு சென்றுகொண்டிருந்தான். அவன் மனத்தில் அப்போது ஏரிகரையில் சோமுக் கவுண்டன் சாவைப்பற்றிய எண்ணங்களே இருந்தன.

திடீரென்று வேலியைத் திறந்துகொண்டு சாம்புவின் முன்பாக, கட்டுமஸ்தான தேகத்துடன் ஓர் ஆசாமி நின்றான். அவனது அகன்ற மார்பும் திரண்ட புஜங்களும் அவனுடைய பிரமாதமான பலத்துக்கு அறிகுறியாக இருந்தன. காதுகளில் கடுக்கன், அரையில் ஒரு ஜரிகை வேஷ்டி உடுத்தி, மேலேயும் ஒரு ஜரிகை அங்கவஸ்திரத்தை வீசி இருந்தான். அவன் முகத்தில் ஜொலித்த கோபம் சாம்புவை நடுநடுங்க வைத்தது. அவனுடைய கையில் ஒரு பெரிய ஜாதி நாயைப் பிடித்திருந்தான். சாம்புவைப் பார்த்ததும் அது இருகால்கள்மீது நின்று 'உர்ர்ர்' என்ற உறுமி, அவன்மீது பாயத் தயாராகியது.

சாம்புவின் எதிரில் அவன் வந்து நின்றான். ஒருமுறை இவனை ஏற இறங்கப் பார்த்து, 'அடே! நீதானாடா அந்தப் பட்டணத்தான்?' என்று அவன் இடிபோன்ற குரலில் கேட்டான்.

சாம்புவுக்கு சப்த நாடியும் ஒடுங்கிவிட்டது என்று சொல்ல வேண்டியதில்லை. காலை வேளையில் இந்த ராட்சஷனுடன் வாயைக் கொடுத்துவிட்டு, மண்டையைப் பிளந்து கொள்வதை விட, மரியாதையாக ஒதுங்குவதே உசிதம் என்பதாக அவனுடைய பகுத்தறிவு வற்புறுத்தியது.

'நீங்கள் யார்? தெரியவில்லையே!' என்றான் சாம்பு தீனமாக.

'நீங்களாவுது, நாங்களாவுது! மடப்பயலே! நான்தாண்டா பஞ்சநாத முதலியார். பார்த்துக் கொள்!'

சாம்புவுக்கு உள்ளம் நடுங்கியது. 'இந்த ஆசாமி ஏன் கவுண்டனைக் கொலை செய்திருக்க மாட்டான்?' என்று எண்ணிக் கொண்டான்.

'உஹூம். உஹூம். ரொம்ப சந்தோஷம், உங்களைப் பார்க்க!' என்றான் வாய் குழற.

'ஏய்! என்னைப் பார்க்காமலிருக்கத்தான் நீ சந்தோஷப்பட வேண்டும்! இங்கே துப்பறியவா வந்திருக்கிறே? உம்! உன் மூஞ்சியிலே இப்போ காரித் துப்புகிறேன் பாரு! நான்தான் கொலை செய்துவிட்டதாக ஊரிலேயெல்லாம் பொய் வதந்தியைக் கிளப்பிவிட்டிருக்கியாமே!'

'இருக்காதே! நான், நான்...'

'ஏன் பயந்து சாவுறே? உள்ளதை ஒப்புக்கொள்ளேன் தைரியமா! களவாணிப் பயலே! நான் சொல்றேன் கேளு. இதுவரைக்கும் நான் யாரையும் கொலை செய்ததில்லை. நீ மட்டும் என்னண்டை எதினாச்சும் விளையாட ஆரம்பிச்சியோ, உன்னைத்தான் மொதல்லே கொலை செய்யப் போறேன், தெரிஞ்சுதா?'

சாம்பு விழித்தான். பஞ்சநாத முதலி தன் பேச்சோடு கையை ஓங்கி சாம்புவின் விளாங்காய் மண்டையில் ஒரு குட்டு குட்ட வந்தான். அந்தக் குட்டு விழுந்திருக்குமானால், சாம்புவின் தலை அநேகமாக இரண்டாகப் போயிருக்கும். அவன் தெய்வாதீனமாகப் பின்னால் சாய்ந்து வேலியின்மேல் படுத்தவாறு

விழுந்தான். அவன் உடலில் ஆயிரம் இடங்களில் 'சுரீர், சுரீர்' என்று முள் தைத்தது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. பஞ்சநாதத்தின் நாய் ஒரே பாய்ச்சலில் அவனைக் கடிக்கப் பாய்ந்தது. சாம்பு, 'இதோடு நாம் செத்தோம்!' என்று கண்ணை இறுக மூடிக் கொண்டான்.

'ஏய், ஜாக்! வாடா! அதுக்குள்ளே இவன் குரல்வளையிலே நீ வாய் வைக்க வேண்டாம்!' என்று நாயை இழுத்துக்கொண்டு, பஞ்சநாத முதலி வந்தவழியே போனான்.

கால் மணி நேரம் சென்றிருக்கும். சாம்பு விழுந்த இடத்திலிருந்து எழுந்து நிற்க முயன்றான்! முடியவில்லை. அவன் முயற்சியினால் இன்னும் பல இடங்களில்தான் முள் குத்திற்றே தவிர, வேறு பயன் ஏற்படவில்லை. 'சே! இந்தத் துப்பறியும் தொழிலில் உயிர்கூட அல்லவா போய்விடும் போலிருக்கிறது! இதோடு, இன்றோடு, இந்தச் சனியன் பிடித்த தொழிலை விட்டொழிப்பது!' என்று சத்தம் செய்து பல்லைக் கடித்தான்.

இந்தச் சமயத்தில் மாணிக்கம் தன் சகாக்களுடன் அங்கே வந்து சேர்ந்தான். இப்போது அவர்கள் மொத்தம் இருபத்து மூன்று பேர் இருந்தார்கள். சாம்புவை இருபத்து மூன்று விநாடிகளில் விடுவித்து, தலைமேல் தூக்கிக்கொண்டு போனார்கள். சாம்பு எவ்வளவுதான் திமிறியும் அவனை அவர்கள் விடாமல் ஏரிக்கரையில் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள்.

வந்ததுதான் வந்துவிட்டோம் என்று சாம்பு ஏரிக்கரைப் பிரதேசத்தை ஒரு நோட்டம் போட்டான்.

மாணிக்கம், 'மாமா! நாங்கள் இங்கெல்லாம் உங்களுக்காகத் தேடிப் பார்க்கட்டுமா?' என்றான். சாம்புவின் சம்மதத்தை எதிர்பாராமலேயே வேலையும் தொடங்கிவிட்டார்கள்.

அடுத்த நிமிஷம் இருபத்து மூன்று பையன்களும் ஏரிக்கரை ஓரத்தில் இருந்த புதர்களைச் சல்லடையாகச் சலிக்க ஆரம்பித்தார்கள். சாம்பு தலையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

'சுமார் அரை மணி ஆகியிருக்கும். மாமா! மாமா! என்று மாணிக்கம் ஓடிவந்தான். சுமார் ஒரு முழ நீளமுள்ள துருப்பிடித்த இரும்புக் கழியும், ஒரு கிழிசல் துணியும் அவன் கையில்

இருந்தன. சாம்பு அவைகளை வாங்கிப் பார்த்தான்; மூக்கைத் தடவிவிட்டுக் கொண்டான்.

'என்ன, மாமா!' என்றான் மாணிக்கம்; ஒரு நிஜத் துப்பறிபவர் வேலை செய்வதைப் பார்க்க அவனுக்கு ஆவலாக இருந்தது. பையனுக்கு என்ன பதில் சொல்வதென்று சாம்புவுக்குத் தெரிய வில்லை. கிடைத்த பண்டங்களை வைத்துக்கொண்டு என்ன செய்வதென்றும் புலப்படவில்லை. பையன்கள் உற்சாகத்தைக் குறைக்க மனம் இல்லாமல், 'குழந்தைகளே! நீங்கள் முன்னால் போங்கள். நாம் சேர்ந்து போனால் எல்லாரும் சந்தேகப்படுவார் கள். குற்றவாளியும் தப்பி ஓடிவிடுவான். நீங்கள் தேடிக் கொடுத்திருக்கும் இந்த இரண்டையும் வைத்துக்கொண்டு நான் குற்றவாளியைப் பிடித்துவிட்டதாகவே நினைக்கிறேன்; நீங்கள் இப்போது போங்கள்!' என்றான்.

மாணிக்கமும் அவன் இருபத்திரண்டு சிநேகிதர்களும் உடனே போய்விட்டார்கள். அவர்கள் தலை மறைந்த பிறகு, சாம்பு அந்த இரும்பையும் துணியையும் எடுத்து மூட்டை கட்டிக்கொண்டு கிளம்பினான். அதன் பின்னரே, அவன் பின்னால் சற்று தூரத்தில் நின்று உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த ஓர் உருவம் வேகமாக வெளியேறியது. முதல் நாள் அவனைக் கவனித்த அதே பேர்வழிதான் இவனும் என்று சொல்லவேண்டியதில்லை.

இதையொன்றும் அறியாத சாம்பு, தன் மூட்டையுடன் நேரே கொரட்டூர் போலீஸ் கான்ஸ்டபிள் வீட்டைத் தேடிக்கொண்டு போனான். கான்ஸ்டபிளிடம் ஆதியோடந்தமாக விஷயத்தைச் சொன்னான். கான்ஸ்டபிள் கேட்டுக்கொண்டே வந்தான். 'ஆச்சரியமாயிருக்கே! நீங்க பட்டணமா?' என்றான் அவன். அவன் சுபாவம் மரியாதையைத் தெரிவித்தது.

'ஆமாம்!' என்றான் சாம்பு.

'ரொம்ப சந்தோஷம்! உங்களுக்குப் போலீஸிலே எந்த டிவிஷனில் வேலை?' என்று கேட்டான் அவன்.

'எனக்கு வேலையுமில்லை, ஒண்ணுமில்லை. நான் சும்மா துப்பறிபவன், அவ்வளவுதான்!' என்றான் சாம்பு.

சாம்பு இந்த வார்த்தையைச் சொன்னதுதான் தாமதம். அந்தக் கான்ஸ்டபிளின் மீசை துடித்தது. 'ஓய்! உமக்குப் பைத்தியமா

பிடித்திருக்கிறது? இந்தக் கடப்பாரையையும், துணியையும் இங்கிட்டு ஏன் தூக்கிட்டு வந்தே? சோமுக் கவுண்டன் குடிச்சுட்டு மயங்கி விழுந்து செத்தான்னுதான் மரண விசாரணையிலே தீர்ந்து போச்சே! அதுவும் எட்டு மாசமாச்சே! நீ அப்புறம் என்னத்தைப் பெரிசாக் கண்டுபிடிக்கிறது? என்னத்தைத்தான் கண்டுபிடிச் சுட்டே? பஞ்சநாத முதலியார் பெரிய கை. எதுனாச்சும் அசந்தர்ப்பமா நீ உளறிக்கிட்டு அலைஞ்சியோ, உன் முதுகு உறிஞ்சிடும், ஜாக்கிரதை! விஷயம் பரவுவதற்குள்ளே மெல்லமா உதை வாங்காம ஊருக்குப் போ! நான் சொல்றதைக் கேளு!' என்றான் அவன்.

சாம்புவுக்கு இரு தடவை புத்திமதியைச் சொல்லவேண்டிய அவசியமில்லை. அன்று பூராவும் அவன் யார் கண்ணிலும் படாமல் வீட்டில் அடைந்து கிடந்தான். மறுநாள் விடியற்காலை ஒருவருக்கும் தெரியாமல் முதல் வண்டியில் ஏறிவிட்டான்.

'அப்பாடா! போதும், இந்தத் துப்பு கண்டுபிடிக்கிற வேலை!' என்று இரண்டாவது தடவையாகப் பெருமூச்சு விட்டான். அந்தப் பஞ்சநாத முதலியின் முகமும் அவன் நாயின் பற்களும் மனக்கண் முன்னால் தோன்றவே, அவன் உடம்பு நடுங்கியது.

வண்டி கைகாட்டி மரத்தைத் தாண்டியிருக்கும். வெளியில் ஹோவென்ற சத்தம் கேட்டு ஜன்னல் வழியாகச் சாம்பு எட்டிப் பார்த்தான். இவன் எவ்வளவோ ரகசியமாக வந்திருந்தும் மாணிக்கத்துக்குத் தெரியாமல் வரமுடியவில்லை என்பதை அவன் கண்டான். ஏனென்றால், மாணிக்கம் அந்த ஊரிலுள்ள நண்டு சிண்டு வாண்டுப் பயல்கள் மொத்தம் நாற்பத்தாறு பேரையும் சேர்த்துக்கொண்டு, ரயில் பாதையோடு வரிசையாக நின்று கூச்சல் போட்டு சாம்புவை வழியனுப்ப வந்திருந்தான்.

•

சாம்பு மிகுந்த வேதனையுடன்தான் சென்ட்ரல் ஸ்டேஷனில் இறங்கினான் என்று சொல்லவேண்டியதில்லை. அவனை நோக்கி இன்ஸ்பெக்டர் கோபாலனும் இன்னும் சில போலீஸ் உத்தியோகஸ்தர்களும் வருவதைக் கவனித்தபோது, அவனுக்குப் பகீரென்றது. தான் துப்பறியப் போனது சட்ட விரோதமோ என்றுகூட ஒருவிதப் பயம் அவனைப் பற்றிக்கொண்டது.

இன்ஸ்பெக்டரோ ஒரு ரோஜா மாலையை, சாம்புவின் கழுத்தில் மாட்டினார்! சாம்பு அசட்டு விழி விழித்து நாற்புறமும் பார்த்தான்.

கோபாலன் சொன்னார்: 'மிஸ்டர் சாம்பு! கொரட்டூரிலிருந்து துரத்தினீரே அந்தக் குற்றவாளி கந்தசாமிப் பிள்ளை, நேரே வந்து நம்மிடம் சரண் அடைந்து குற்றத்தை ஒப்புக்கொண்டுவிட்டான். நீர் கண்டெடுத்த அதே இரும்புக் கழியால்தான் சோமுக் கவுண்டன் மண்டையில் அவன் போட்டானாம். உம்மிடம் அகப் பட்ட துணியும் அவனது தானாம்! இத்தனை மாதமாக அகப் படாத தடயங்களை நீர் கண்டெடுத்து, உள்ளூர் கான்ஸ்டபிளிடம் கொண்டு போனதும், ஆசாமி ஒரே ஓட்டமாக இங்கே வந்துவிட் டான். சென்ற இரண்டு நாளாக உம்முடைய பின்னாலேயேதான் சுற்றியிருக்கிறானாம். நீர்கூட அவனைப் பார்த்துவிட்டுப் பாராததுபோல் பாசாங்கு செய்தீராமே!'

சாம்பு சிரித்தான். அதிர்ஷ்ட தேவதையின் லீலைகளைப் பார்த்துத் தான் அவனுக்குச் சிரிப்பு வந்தது.

கோபாலன் மேலும் சொன்னார்: 'ஓய் சாம்பு! குற்றவாளி யாரென்று தெரிந்தப்புறங்கூட, நீர் வேறொருத்தன் மேல் சந்தேகப்படுவதுபோல் பாசாங்கு செய்தீராமே! எல்லா வற்றையும் உமக்கு முன்பு சொல்லிவிட்டான்! உம் பெயரைச் சொன்னால்கூட நடுங்குகிறான், ஓய்!' என்றார் அவர்.

'எட்டு மாதமாக வெளிப்படாத மர்மத்தைச் சாம்பு விளக்குகிறார்! குற்றவாளி சரண் அடைகிறான்!' என்ற செய்தி நகர் எங்கும் பரவியது.

பஸ்ஸிலும் டிராமிலும் சாம்புவைப் பற்றியே பேசிக் கொண்டார் கள். அவனைக் கனவில்கூடப் பார்த்திராதவர்களும், 'எனக்குச் சாம்புவை நன்றாய்த் தெரியுமே!' என்றார்கள்.

சாம்பு பெருமையுடன் மார்பைப் பார்த்துக்கொண்டு தன் கூர்மையான மூக்கு நுனியைத் தடவி விட்டுக் கொண்டான்.

7

மாம்பலத்து மர்மம்!

சாம்பு ஒரு நாள் மத்தியானமாக எங்கேயோ போவதற்கு ஒரு பஸ்ஸில் ஏறினான். சிறிது நேரத்துக்கெல்லாம் அவனுக்கு எதிர்த்த சீட்டில் பயங்கரமாக மீசையை முறுக்கிக் கொண்டு ஒருவன் வந்து உட்கார்ந்தான். சாம்பு அவன் முகத்தை அச்சத்துடன் பார்த்துக்கொண்டிருந்தபோதே, அவன் மேல் உதட்டை தன் மீசையுடன் சேர்த்து பற்களுக் கடியில் நான்கு முறை விட்டு இழுத்து, பிறகு சாம்புவைப் பார்த்து ஒரு விழிவிழித்து கரகரத்த குரலில், 'இன்னிக்குப் பத்திரிகை படிச்சீரா, ஐயா!' என்று அதட்டிக் கேட்டான்.

'படிச்சேன்!' என்றான் சாம்பு சாத்துவிகமாக.

அன்று காலைப் பத்திரிகைகளில்தான் சாம்பு வின் படமும் அவன் சாமர்த்தியத்தைப் புகழ்ந்து பாராட்டுகளும் வந்திருந்தன.

'நீர் என்ன ஐயா சொல்கிறீர், அந்தச் சாம்புவைப் பற்றி! அவர் கெட்டிக்காரர் இல்லை?' என்றான் மீசைக்காரன்.

சாம்புவுக்கு உடம்பெல்லாம் ஒருவித ஆனந்தம் பரவியது. அந்த அநுபவத்தில் அவன் சற்றுநேரம் மெய்ம்மறந்து மௌனமாக இருந்தான்.

மீசைக்காரன் உடனே பதிலை எதிர்பார்த்தானாகையால், அது கிடைக்காமல் போகவே, 'ஏன்? அதிலே என்ன உமக்குச் சந்தேகம் வந்துவிட்டது?' என்றான் இடி போன்ற குரலில். அவன் மீசை ஒரு மாதிரியாக வளைந்தது.

'ஹூம்! ஹூம்! என்று சாம்பு தயங்கினான். அவனைச் சங்கோசம் வந்து சூழ்ந்துகொண்டுவிட்டது.

'வாயைத் திறந்துதான் அதை ஒப்புக்கொள்ளேன்! முத்து உதிர்ந்து விடுமா?'

மீசைக்காரன், வார்த்தையை ஒப்புக்கொள்ளாவிட்டால் உடனே அறைந்து விடுவான்போல் இருந்தது. ஆகவே அவசர அவசர மாக, 'ஆமாம்! ஆமாம்! சாம்பு மகா மேதாவிதான். ஹி, ஹி!' என்று சாம்பு ஒப்புக்கொண்டான்.

'நீ பிழைச்சே போ!' என்றான் அந்த மீசைக்காரன். அடுத்தாற் போல் பஸ் நின்றதும் சாம்பு துரிதமாக அதிலிருந்து இறங்கிவிட் டான். தன்னை யாரென்று தெரிந்து கொள்ளாமலேயே இவ்வளவு உற்சாகம் காண்பித்த மீசைக்காரன், தெரிந்துகொண்டு விட்டால் என்ன சொல்வானோவென்று பயந்தே அவ்வாறு செய்தான்.

இதுமாதிரியே, சாம்பு சென்றவிடமெல்லாம் எத்தனையோ சம்பவங்கள் நான்கு நாளைக்குள் நடந்துவிட்டன. சிலர் சாம்புவைத் தெரிந்துகொண்டு பேசினார்கள்; சிலர் தெரிந்து கொள்ளாமல் பேசினார்கள். எப்படியிருந்தாலும் சாம்புவுக்கு ஏற்பட்ட தொல்லை இவ்வளவு அவ்வளவு அல்ல. இது தவிர, சாம்புவுக்கு வீட்டிலுங்கூட ஒய்ச்சல் ஒழிவு இல்லை. அவனைப் படம் பிடிக்க வந்தார்கள்; அவனைத் தரிசனம் செய்ய வந்தார்கள்; அவன் ஜாதகத்தைக் கேட்டுக்கொண்டு ஒரு பிரபல ஜோஸ்யர் வந்தார். அவர் பெரிய மனிதர்களின் ஜாதகங்களை யெல்லாம் சேகரித்து வைத்திருக்கிறவராம். பத்திரிகைக்காரர்கள் சாம்புவிடம் கட்டுரைகள் கேட்டார்கள். அவனைத் தேடிக் கொண்டு நூற்றுக்கணக்கான தபால்கள் வந்தன. 'ஏது நாம் இந்த வீட்டில் இருந்தால் நம்மைப் பிய்த்துத் தின்று விடுவார்கள் போல்

இருக்கிறதே!' என்று சாம்பு எண்ணிய சமயம், அவன் குடியிருந்த வீட்டுச் சொந்தக்காரரே வந்தார்.

'மிஸ்டர்! தயவுசெய்து நம் வீட்டை நாளைக்கே காலி செய்து விடும்! ரொம்ப கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்!' என்றார் அவர்.

'ஏன்?' என்று கேட்டான் சாம்பு.

'நீர் ஏதோ துப்பறிய ஆரம்பித்துவிட்டீராம்! உம்ம வேலையையும் ராஜிநாமா செய்துவிட்டீராம். நமக்கு வேண்டாம் ஐயா, உம்ம சங்காத்தம்! அதெல்லாம் ஆபத்து!'

'என்ன ஆபத்து?'

'அதெல்லாம் உம்மிடம் இங்கே சொல்லிக்கொண்டிருக்க முடியாது. துப்பறிபவனோட தொடர்பே உதவாது. வேறு ஒன்றும் வேலை இல்லாவிட்டால், நம்மையே துப்பறிய ஆரம்பித்துவிடுவான். நீர் முதலில் காலி செய்யும். பதினைந்து நாள் நோட்டீஸ்!' என்று அவர் சொல்லிவிட்டுப் போனார்.

மாம்பலத்தில் போய்க் குடியிருக்க வேண்டுமென்ற ஆவலை, சாம்பு இப்போது தீர்த்துக்கொண்டான். ஒரு சின்ன வீட்டின் முன் புறத்தில் ஒரு போர்ஷன் பேசிக்கொண்டு தன் சாமான்களுடன் மறுநாளே சந்தடியின்றிப் போய்ச் சேர்ந்தான். தன் பெயரை வெளியிட்டால்தானே இவ்வளவு தொந்தரவுகள் என்று அதையும் மாற்றி, கோவிந்தன் என்று வைத்துக் கொண்டான்.

சாம்புவின் போர்ஷனுக்குப் பின் இருந்த ஓர் அறையில், இரண்டு இளைஞர்கள் மட்டும் இருந்தார்கள். மாடியில் ராகவாச்சாரி என்று ஒருவர் இருந்தார். மாடிக்கும் சாம்பு இருந்த போர்ஷனுக்கும் சம்பந்தமே இல்லை. ஏனெனில், மாடிக்குப் போக வாசற்பக்கம் தனிப் படிக்கட்டுகள் இருந்தன.

ராகவாச்சாரி சாம்புவைப் பார்த்தது முதலே அவனிடம் ஓர் அன்புடன் நடந்துகொண்டார். 'மிஸ்டர் கோவிந்தன்!' என்று கூப்பிட்டுக்கொண்டு அடிக்கடி அவன் அறைக்கு வந்து பேசினார். அவனிடம், தமக்குத் தெரிந்த கதைகளை அளந்தார். ஒரொரு சமயம் சாம்புவை மாடிக்கும் அழைத்துப்போய்ப் பேசுவார். சாம்புவும், அவரிடம் விசுவாசமும் மரியாதையும் காண்பித்தான் என்று சொல்லவேண்டியதில்லை.

சாம்புவுக்கு ஏனோ, கீழே குடியிருந்த இரண்டு இளைஞர்கள் மீதும் ஆரம்பம் முதலே ஒரு சந்தேகம் வந்தது. அந்த இளையவனுக்கு 24 வயது வரை சொல்லலாம். அவர்களைச் சாம்பு கவனிக்கக் கவனிக்க, அவர்கள் அதிகம் மறைந்துகொள்ளத் தொடங்கினார்கள். அவனையும், அவர்கள் ஒருவிதமாகப் பார்த்ததாகத் தோன்றியது சாம்புவுக்கு.

ஒருநாள் இரவு ஒன்பது மணி இருக்கும். சாம்பு வீட்டுக்குத் திரும்பி வந்தபோது பேச்சுக்குரல் உள்ளிருந்து கேட்டது. அவன் நின்று உற்றுக் கேட்டான். அந்த இளைஞர்கள்தாம் மெல்லமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

'அடே, சந்தானம்! நான் சொன்னது சரியாப் போச்சல்லவா! இந்தப் பேர்வழிதான் அந்தச் சாம்பு! இதோ பார், அவன் விஸிட்டிங் கார்டு கீழே கிடந்தது. நான் கண்டெடுத்தேன்.

'இருக்கட்டுமே!'

'இவன் நம்மைக் கவனிக்கத்தான் இங்கே வந்திருப்பான்னு நான் நினைக்கிறேன்.'

'கவனிக்கட்டுமே!'

'அப்படிச் சொல்லிவிட முடியுமா? நம்ம பேரிலே பிசகு இருக்கிறது. இன்னும் ஒரு பிசகான காரியம் வேறு, முதல் தேதியிலிருந்து செய்யப் போகிறோம்.'

'தாஸ்! நீ சுத்தக் கோழையடா! உன்னைக் கூட்டி வந்தேனே நான்; என் புத்தியைச் செருப்பால்தான் அடிக்கணும்! நீயாகவே அவனிடம் போய் எல்லாத்தையும் சொல்லிவிடுவாய்ப் போலன்னா இருக்கு!'

'இல்லே, அண்ணா! எதற்கும் நாம் ஜாக்கிரதையாயிருக்கணும்னு சொன்னேன்.'

பேச்சு ஓய்ந்தது அத்தோடு. சாம்பு சற்றுத் தயங்கி நின்றுவிட்டுக் கதவை இடித்துக்கொண்டு தன் அறைக்குப் போனான். 'ஓஹோ! ஒண்ணாம் தேதியா! இருக்கட்டும்!' என்று தலையையும் ஆட்டிக் கொண்டான்.

மறுதினம் முப்பதாம் தேதி. அன்று சாம்புவின் மனத்தில் ஒரு விஷயந்தான் பிரதானமாக இருந்தது. அது இந்த இரண்டு இளைஞர்

களின் விஷயம். அவர்கள் ஏதோ பெரிய குற்றம் செய்யப் போகிறார்கள் என்பதில் அவனுக்கு இப்போது சந்தேகமே இல்லை.

'இன்னும் பார்ப்போம்' என்று மனத்தை அடக்கிக்கொண்டு பொறுமையாகக் காத்திருந்தான்.

அப்போது ராகவாச்சாரி அவன் பக்கம் வந்து பேச்சு கொடுத்தார். அவருடைய நன்மதிப்பை இன்னும் பெறுவதற்கு சாம்பு ஒரு தீர்மானம் செய்திருந்தான். 'அவரிடம் நான் யார் என்பதைச் சொல்லிக்கொள்வதால் என்ன மோசம் வந்துவிடும்?' என்பது தான் அந்தத் தீர்மானம்.

அதற்குத் தகுந்தாற்போல் ராகவாச்சாரியுடைய பேச்சும் அன்று அமைந்தது. 'உங்களை நான் எங்கேயோ பார்த்த ஞாபகமாக இருக்கிறது. எங்கே என்றுதான் ஞாபகம் வரவில்லை!' என்று ஆரம்பித்தார் அவர்.

சாம்பு சிரித்துக்கொண்டு, 'நன்றாக யோசித்துப் பாருங்கள்!' என்றான்.

'ஏதேனும் பத்திரிகைகளில் பார்த்திருப்பேனோ? உங்கள் படத்தை யாராவது போட்டார்களோ?'

'இன்னும் யோசித்துப் பாருங்கள்!' என்றான் சாம்பு.

'உம். இப்போது தெரிகிறது! நீங்கள் அந்தச் சாம்பு மாதிரியே இருக்கிறீர்கள்!'

'நான் சாம்புவேதான், சார்! கோவிந்தன் என்று ஒரு காரணார்த்தமாகப் பெயரை மாற்றி வைத்துக் கொண்டிருக்கிறேன்!'

ராகவாச்சாரி சற்றுத் திடுக்கிட்டார். 'என்ன! நிஜமாகவா, அந்தப் பிரசித்தி பெற்ற சாம்புவா நீங்கள்?'

'ஆமாம். இது வெளியில் தெரிய வேண்டாம். நான்தான் சொன்னேனே! காரணார்த்தமாகத்தான் பெயரை மாற்றி வைத்துக் கொண்டிருக்கிறேன்.'

ராகவாச்சாரி உடனேயே விடைபெற்றுக்கொண்டு வேகமாக வெளியே போனார். தம் சிநேகிதர்கள் பலரை ஒருவர்பின் ஒருவராகப் பார்த்துப் பேசத்தான் அப்படிப் போனார்.

'நம் வீட்டின் கீழண்டை ஒருத்தன் வந்திருக்கானே, அவன் சாம்புவாம்! ஏதோ விஷயத்துக்குத்தான் அங்கே வந்திருக்கிறான் என்று எனக்குத் தோன்றுகிறது!' என்றார்.

'நம்மை அவன் சந்தேகப்படுகிறானா?' என்று கேட்டார்கள், அந்தச் சிநேகிதர்கள்.

'இல்லை என்று தோன்றுகிறது. அவனைப் பார்த்தால் பெரிய வேஷக்காரனாயிருப்பான்போல இருக்கிறது. அசல் மடையன் மாதிரியே வேஷம் போடறான்னா!'

'என்ன சொல்கிறான்? முதலில் அதைச் சொல்லுமே!'

ஒரு காரணார்த்தமாக வந்திருக்கிறேன் என்கிறான். என்ன காரணம் என்று சொல்லவில்லை, மேலே கேட்கவும் முடியவில்லை. கேட்டால் சந்தேகப்படுவான், இல்லையா?'

'உம்மிடம் அவனாகவே தன் பெயரைச் சொல்லிக் கொண்டானே?'

'அது, நாம் அவனைச் சந்தேகப்படாமல் இருக்கச் சொல்லியிருக்கலாம். அவன் பெரிய பேர்வழியாயிருப்பான் போலேன்னாயிருக்கு! என்ன பிளான் பேரில் இப்படிச் சொன்னானோ? நமக்கு அது எப்படித் தெரியும்?'

'சரி! எப்ப வேணா இருக்கட்டும்! இன்னி ராத்திரிக்கு உம்ம வீட்டிலே போட்டிருக்கிற நம்ம புரோக்ராமை மாற்ற டயம் இல்லை. அங்கேதான் நடத்தியாகணும்!' என்றார்கள் அவர்கள்.

ராகவாச்சாரி உடனே, 'அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. நாலு பேரை ஏற்பாடு பண்ணி, இந்தச் சாம்பு ஏதாவது வாலை ஆட்டினான்னா ஒட்ட நறுக்கிவிடலாம்! கீழே குடி இருக்கும் இரண்டு பேர்வழிகளுங்கூட அவனுக்கு உள்கையாக இருப்பார்களோ என்று எனக்கு ஒரு சந்தேகம். இருக்கட்டும். இவன் ஒரு விஷமம் பண்ணினால், நாம் அதற்கு மேலே ஒரு விஷமம் பண்ண முடியாதா? சாம்புவோட வீம்பெல்லாம் பார்த்துப்பிடலாம்! சும்மா இருங்கள்!' என்று சொல்லிவிட்டுத் திரும்பினார்.

அன்று மாலை ஆறரை மணி இருக்கும். சாம்பு வேறெங்கெயோ கவனித்துக்கொண்டிருந்த சமயம், இளைஞர்கள் இருவரும் நழுவி, வேகமாக வெளியே சென்றார்கள்.

திடீரென்று இருவரையும் காணாமல் சாம்பு திடுக்கிட்டான். எங்கேயோ என்னவோ விஷமம் செய்யத்தான் போகிறார்கள் என்று அவன் மனத்துக்குள் ஒருவித நிச்சயமே ஏற்பட்டுவிட்டது. உடனே அவர்களைப் பின்பற்றிச் செல்லக் கிளம்பிவிட்டான்.

சாம்பு வருவான் என்று எதிர்பார்க்கவில்லையாதலால், அவர்கள் திரும்பிப் பார்க்காமலேயே சென்றார்கள். இரண்டு தெருக்களைக் கடந்து ஒரு கோடியில் இருந்த வீட்டண்டை வந்ததும் நின்றார்கள். நாற்புறமும் பார்த்துவிட்டு, சட்டென்று அதன் உள்ளே நுழைந்தார்கள். சாம்பு, சரியான சமயத்தில் ஒரு மரத்தின் பின் ஒளிந்துகொண்டு விட்டானாதலால் அவர்கள் கண்களில் படவில்லை. இரண்டே நிமிஷத்தில் சாம்பு ஒளிவிடத்திலிருந்து வந்து, அவர்கள் நுழைந்த வீட்டுக்குள்ளேயே நுழைந்துவிட்டான். அப்போது கூடத்து ஹாலில் நின்று கொண்டிருந்த அவர்கள், சாம்புவும் தங்களுடன் வருவதைக் கண்டதும் திடுக்கிட்டுப் போனார்கள்.

'ஐயோ சாம்புவா?' என்றான் தாஸ்.

'இங்கும் பின்தொடருகிறீரோ?' என்றான் சந்தானம். அவர்கள் திகிலைக் கண்டு சாம்புவுக்கு ஒரு சந்தோஷம் ஏற்பட்டது.

'உங்களைப் பற்றி அத்தனை விஷயங்களும் எனக்குத் தெரியும்!' என்றான் சாம்பு ஹோதாவாக. இது வெறும் புரட்டுதான் என்றாலும், சும்மா சொல்லி மிரட்டப் பார்த்தான்.

அவர்கள் இரண்டு பேரும் முதலில் நடுநடுங்கி விட்டார்கள். என்றாலும் பெரியவன் தைரியமாக, 'தெரிந்தால் என்னவாம்?' என்றான்.

'என்னவா? இதற்கு மேலும் போகாமல் தடுக்கப் போகிறேன்!' என்றான் சாம்பு. இதுவும் வெறும் கப்ஸாதான்.

சந்தானம் கோபமாக, 'ஓகோ! உம்மால் அது முடியுமோ! எங்கள் வழிக்கு வந்தால் மண்டை டணார் என்று உடையும், ஜாக்கிரதை!' என்று கூறி, கையையும் ஓங்கினான்.

'சந்தானம்! சந்தானம்!' என்று இளையவன் அவன் கையைப் பிடித்துக்கொண்டு கெஞ்சும் பாவனையில் அவனது கோபத்தை அடக்க முயன்றான்.

சாம்பு மேலும் ஒரு பொய் சொல்லி அவர்களை வழிக்குக் கொண்டுவர எண்ணி, 'ஹே! யார் மண்டை போகிறதென்று பார்க்கலாம். என்மேல் ஒரு விரல் பட்டால் போதும்! என் பின்னால் என் உதவிக்கு ஆறு பேர் எப்போதும் காத்திருக்கிறார்கள் என்பது ஞாபகமிருக்கட்டும்!' என்றான்.

அவன் அப்படிச் சொல்லி வாய் மூடியிருக்கமாட்டான். திடுதிடுவென்று ஆறு பேர் அந்த வீட்டுக்குள் நுழைந்தார்கள். அப்புறம் நடந்தவைகளை வர்ணிக்க ஐந்து நிமிஷம் பிடிக்கலாம். ஆனால், அரை நிமிஷத்தில் காரியங்கள் நடந்துவிட்டன. சாம்புவை ஒரு நாற்காலியுடன் போட்டுப் பிணைத்து, அவன் கால்களை இரண்டுபேர் கட்டினார்கள். மற்றவர்கள், இரண்டு இளைஞர்களையும் தூண்களில் வைத்து வரிந்து கட்டி, வாயில் துணியை அடைத்தார்கள். இனி இவர்கள் நகரவும் முடியாதென்ற திருப்தி அடைந்தவர்களாய், வந்த வழியே அந்த ஆறு முரடர்களும் கதவைச் சாத்திக்கொண்டு போனார்கள்!

வெகுநேரம் கழித்து அந்த வீட்டு வாசலில் ஒரு மோட்டாரின் ஊதுகுழல் ஓசை கேட்டது. பிறகு வாசற்கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது. அந்த வீட்டுக்குள் ஒரு பெரிய மனிதரும் அவர் சேவகனுமாக நுழைந்தார்கள். அவர் வந்த தோரணையிலிருந்து அவர்தான் வீட்டுக்காரர் என்று யாரும் சொல்லிவிடலாம். தம் வீட்டுக்கூடத்தில் யாரோ மூவர் கட்டப்பட்டிருந்ததைக் கண்டு அவர் ஆச்சரியம் எல்லை மீறியது. சேவகனைவிட்டு உடனே கட்டவிழ்க்கச் சொன்னார். ஆனால், அங்கேயே சாம்பு சோர்வுற்றுச் சுருண்டு கீழே படுத்துவிட்டான். அவன் தலை சுழன்றது. சந்தானந்தான் வீட்டுக்காரரிடம், 'சார்! எங்களை நீங்கள் மன்னிக்க வேண்டும். உங்கள் வீட்டில் புகுந்து, பெரிய பிசகு செய்துவிட்டோம். ஆனாலும், எங்களுக்குக் கெட்ட எண்ணம் ஒன்றும் இல்லை. இதோ எங்களைப் பின்பற்றி வந்த துப்பறியும் சாம்புவுக்கு எல்லாம் தெரியும். அவரே எங்கள் வார்த்தைக்குச் சாட்சி!' என்றான் சடசடவென்று.

'சாம்புவா, யாரு? இப்போ பத்திரிகைகளிலே அடிபடுகிறாரே, அந்த, அந்தச் சாம்புவா இவர்!' என்றார் அவர்.

'அதே சாம்புதான்! எங்கள் இருவரையும் பின்பற்றி, நாங்கள் இங்கே வராமல் தடுக்கப் பார்த்தார். எங்கள் இருவருக்கும் மாயவரம். ஒரு மாதத்துக்கு முன்பு இந்த ஊருக்கு வந்தோம்.

வீட்டில் சொல்லிக்கொள்ளாமல், பட்டணத்தில் வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன், வீட்டிலிருந்து ஐம்பது ரூபாயை எடுத்துக்கொண்டு வந்துவிட்டோம். பணம் பூராவும் காலியாகி விட்டது; வேலை மட்டும் கிடைக்கவில்லை. ஆனால், இன்னும் இரண்டு நாளில் ஒரு கம்பெனியில் வேலை தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இரண்டு நாள் எங்களுக்குத் தங்க இடமில்லை; கையில் பணமுமில்லை. உங்கள் வீடு பூட்டிக் கிடந்ததை ஒரு மாதமாகப் பார்க்கிறோம். ஆகவே, இங்கே இரகசியமாகத் தங்கிவிட்டு, வேலை கிடைத்ததும் வேறிடத்துக்குப் போகலாம் என்று நினைத்தோம். சாம்புவுக்கு அவ்வளவும் தெரியும்! எங்களைத் தடுத்து, திருப்பி அழைத்துப் போகவே அவர் இங்கே வந்தார். அதற்குள் யாரோ விரோதிகள் அவரையும் எங்களையும் இப்படிச் செய்துவிட்டார்கள்!' என்று விவரமாகக் கூறினான்.

வீட்டுக்காரர் சாம்புவின் பக்கம் திரும்பி, 'மிஸ்டர் சாம்பு! நான் ராவ்சாகிப் வேதாந்தம். என்னைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். நீங்கள் என் வீட்டுக்கு வந்த்து மிகவும் பெருமையாய் இருக்கிறது! உங்களை யாரோ கட்டிவிட்டது எனக்கு வருத்தமாகவும் இருக்கிறது!' என்றார்.

சாம்புவுக்கு எல்லாம் காதில் விழுந்தது. அங்கே இருக்க அவனுக்குப் பிடிக்கவில்லை. மெல்ல எழுந்து, 'சார்! எனக்கு உடனே வீட்டுக்குப் போகவேணுமே!' என்றான் அவசரமாக.

'அவசியமானால், உடனே செய்கிறேன்!' என்றார் வீட்டுக்காரர். சாம்பு அவசரமாக அப்படிச் சொன்னதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டுமென்று அவர் எண்ணினார். ஆகவே, அவர் தம் காரிலேயே கூட்டிச் சென்றார். சாம்பு, தன் வீட்டை அடைந்ததும் கண்ட காட்சி அவனைத் திகைக்க வைத்தது. எங்கே பார்த்தாலும் ஒரே போலீஸ்காரர்களாக இருந்தார்கள்!

சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் சாம்புவிடம் ஓட்டமாக வந்து கை குலுக்கி, 'சார்! உங்கள் பெயரைச் சொல்லி, நானே காரியத்தைச் சாதித்துக் கொண்டேன்!' என்றார் பரபரப்புடன்.

அப்போது மாடியிலிருந்து இருபுறமும், பாராவுடன் ராகவாச்சாரியும் அவர் நண்பர்களும் ஒருவர்பின் ஒருவராக இறங்கினார்கள். ராகவாச்சாரியுடன் ஏதாவது பேசலாமென்று சாம்பு எண்ணினான். ஆனால், அவர் ஏன் அவ்வளவு கோபமாகச் சாம்புவைப் பார்க்கிறார்! அவரையும் அவர் நண்பர்களையும் ஏன் போலீஸ்

வண்டியில் ஏற்றுகிறார்கள்! ஒன்றுமே புரியவில்லையே! ராகவாச்சாரி கண்ணியமான மனிதராயிற்றே! சாம்புவுக்கு ஒன்றுமே புரியவில்லை; திகைத்து நின்றான்.

சப் இன்ஸ்பெக்டர் சாம்புவிடம் விஸ்தரித்தார்: 'இந்தப் பக்கத்தில் இவர்கள் வழக்கமாகச் சூதாட்டம் நடத்துகிறார்கள் என்று போலீஸாருக்குத் தகவல் எத்தனையோ நாளாக இருக்கிறது. ஆனால், எங்கே என்றுதான் தெரியவில்லை. அடிக்கடி இடத்தை மாற்றிக்கொண்டு சாமர்த்தியமாக வேலை செய்கிறார்கள். நீங்கள் இங்கே ஜாகை வைத்திருக்கிறீர்கள் என்று நான் அப்போதே எண்ணிவிட்டேன். என் ஊகமும் இப்போது சரியாகி விட்டது. நான் இங்கே வந்து சாயந்திரம் உங்களைப் பற்றி விசாரித்தேனா? உடனே ஓர் ஆசாமி உண்மையை உளறி விட்டான். உங்களுக்கு எல்லாம் தெரியும்! இவர்களை அரெஸ்ட் செய்ய ஏற்பாடு செய்கிறீர்கள். அதற்காக நீங்கள் நெருங்க முடியாதபடி ஐந்தாறு ஆள்களை உங்கள் பின்னால் இவர்கள் அனுப்பியிருக்கிறார்கள்!' என்று எல்லாவற்றையும் ஒப்புக் கொண்டு விட்டான். உங்கள் பெயருக்கு அவ்வளவு மதிப்பு இருக்கிறது! உடனே இங்கே கான்ஸ்டபிள்களுடன் வந்து கப் கப் என்று பிடித்துவிட்டேன். உங்களைத் தேடச் சொல்லலாமென்று நினைத்தேன். அதற்குள் நீங்களே வந்து விட்டீர்கள்!'

சாம்பு நெற்றிப்பொட்டை அமுக்கிக் கொண்டான். 'சீ ஆரம்ப முதல் நாம் என்ன மடத்தனம் செய்திருக்கிறோம்!' என்று எண்ணி மனத்துக்குள்ளே நொந்துகொண்டான்.

சப் இன்ஸ்பெக்டரோ, 'சாம்பு சார்! உங்களுக்கு எப்படி இவர்கள் மேல் சந்தேகம் வந்து, நீங்கள் இங்கேயே ஜாகை வைத்துக் கொண்டு எப்படிக் கவனித்தீர்கள்? அதை முதலில் சொல்லுங்கள்! எனக்கு ஆச்சரியமாயிருக்கிறதே!' என்று கேட்டார்.

சாம்புவுக்குப் பிரமையாக இருந்தது. என்ன சொல்வதென்று தெரியவில்லை. இந்த சந்தர்ப்பத்தில் தப்பித்துக்கொள்ள அவனுக்கு ஒரே வழிதான் லகுவாக இருந்தது. அதை அவன் உடனே செய்தான்.

அங்கேயே சாம்பு மூர்ச்சையானான்!

8

சுண்டைக்காய் கேஸ்

துப்பறிபவர்களுக்கு எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒரு டெலிஃபோன் இருந்துதான் ஆகவேண்டும் என்பதை, சாம்பு பல துப்பறியும் கதைகளிலிருந்து தெரிந்து கொண்டிருந்தான். எந்தக் கதையை எடுத்தாலும் அதில் டெலிஃபோன் மணி கணகணவென்று அடித்தது என்று வந்திருந்ததென்றால், சாம்புவுக்கு டெலிஃபோன் வைத்துக் கொள்ள வேண்டுமென்ற ஆசை எப்படி ஏற்படாமல் இருக்கும்? ஆகவே, சாம்புவின் மேஜையை ஒரு புது டெலிஃபோன் கருவி அலங்கரிக்கலாயிற்று. அது அலங்காரமாக மட்டும் இருந்து விடவில்லை. கணகணவென்றும் அடித்தது!

'ஹலோ! சாம்புவா?' என்றது குரல்.

'ஆமாம், ஆமாம்!' என்றான் சாம்பு.

'நான் பேசுகிறது யார் என்று தெரிகிறதா?'

'தெரியவில்லையே! ஹி, ஹி!'

'நான்தான் பரமேஸ்வர முதலியார்! திரிபுராந்தகா பேங்க் டைரக்டர்!'

சாம்புவுக்கு ஏற்பட்ட ஆச்சரியத்தில் வாய் அடைத்துப் போயிற்று. அவன் மனக்கண்முன் பழைய ஞாபகங்கள் வந்தன. தான் பேங்கில் உத்தியோகம் பார்த்தது. மகரபூஷண ராவும் இந்த முதலியாரும் தன்னை முட்டாள் முட்டாள் என்றது, உத்தியோகம் போன காரணங்கள் எல்லாம், சலனப்படம் போல், தோன்றின. 'இவர் நம்மை எதற்குக் கூப்பிடுகிறார்?' என்று சாம்புவுக்குத் தெரியவில்லை. ஆனாலும், தான் இப்போது பெரிய மனிதனாகி விட்டதால் அதை வெளியில் காட்டிக்கொள்ளாமலேயே, 'இப்போது தெரிந்துகொண்டேன், சார்! சௌக்கியமாயிருக்கிறீர்களா?' என்று கேட்டான்.

'ஒன்றும் குறைவில்லை, சாம்பு! நீ உடனே புறப்பட்டு வந்தால் இன்னும் சௌகரியமாயிருக்கும்!' என்றார் அவர்.

சுமார் ஒரு வருஷத்துக்குப் பிறகு, தன் பழைய ஆபீஸுக்குள் மறுபடி இப்போதுதான் சாம்பு நுழைந்தான். அதுவும் சாம்புவின் உலகத்தில் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டிருந்தும், ஸ்ரீ திரிபுராந்தகா பேங்கில் மட்டும் ஒருவிதமான மாறுதலும் ஏற்பட்டிருந்ததாகத் தெரியவில்லை. அதே பழைய குமாஸ்தாக்கள். டைப்பிஸ்ட் சுப்புணி தலையை நட்டுக்கொண்டு டைப் அடித்துக் கொண்டிருந்தான். லெட்ஜர் கிளார்க் கேசவாச்சாரி அவன் இடத்தில் முன்போல் தூங்கி வழிந்தான். பழைய கேஷியர்தான் - பழைய டெஸ்பாட்ச் கிளார்க் தான் - ஏன், பழைய ப்யூன் கூட - எல்லாரும் அப்படி அப்படியே இருந்தார்கள். புதிதாக ஒரு மேனேஜர் மட்டும் வந்திருந்தார்.

சாம்பு, இவர்கள் ஒருவரையும் கவனிக்கவில்லை. அவனுக்குப் பழைய ஞாபகம் ஒன்றும் போய்விடவில்லை. இவர்கள் தன்னை எவ்வளவு அவமதித்திருக்கிறார்கள்! அவன் எவ்வளவு பொறுமையாக இருந்திருக்கிறான்! பொறுத்தவர் பூமி ஆள்வார் என்று யார் சொன்னது? அவர் வாயில் ஒரு ஜிலேபியைத்தான் போடவேண்டும் என்று எண்ணினான்.

இம்மாதிரி எண்ணங்களுடன்தான் சாம்பு பரமேஸ்வர முதலியார் அறைக்குள் நுழைந்தான். முன்பு, அவன் உத்தியோகம் செய்த காலத்தில் டைரக்டர் அறைக்குப் போவதென்றால் லகுவில் முடிகிற காரியமா? இப்போதோ, சாம்புவின் வருகைக்காக அவர் காத்திருந்தார்!

'வா, அப்பா! சாம்பு! இப்படி உட்கார்!' என்றார் முதலியார் உபசாரமாக.

தன்னை உட்காரச் சொன்னதில், சாம்புவுக்கு உடம்புக்குள்ளெல்லாம் ஒருவித ஆனந்தம் குளுகுளுவென்று பாய்ந்து ஊடுருவிச் சென்றது.

சாம்பு உட்கார்ந்தான். மேஜையை ஒருமுறை பார்த்து புன்னகை செய்தான். எல்லாம் முன்போலவே வைத்தது வைத்தாற்போல் இருந்தன, ஒன்றைத் தவிர. முதலியார் அடிக்கடி வெற்றிலை போடுபவராகையால், மேஜையின் ஒரு புறத்தில் வெள்ளி வெற்றிலைப் பெட்டி எப்போதும் இருக்கும். அதை மட்டும் இப்போது காணோம். அதையும் சாம்பு மறக்காததற்கு ஒரு காரணம் இருந்தது. அவருடைய சஷ்டியப்த பூர்த்திக்கு, ஆபீஸ் சிப்பந்திகளை வற்புறுத்தி வசூலித்து வந்த பணத்தில்தான், பழைய மேனேஜர் அந்த வெள்ளிப் பெட்டியை டைரக்டருக்குப் பரிசாக அளித்திருந்தார்.

'எங்கே, உங்கள் வெற்றிலைப் பெட்டியைக் காணவில்லையே!' என்று கேட்டான் சாம்பு.

முதலியார் அதைக் கேட்டதும் துள்ளிக் குதித்தார். 'சாம்பு! உனக்கு இக்ஷிணி உபாசனை ஏதாவது உண்டோ?' என்றார்.

'ஏன்?' என்றான் சாம்பு, தனது வழக்கமான அசட்டுப் புன்னகையுடன்.

'அதற்காகத்தானே உன்னை வரவழைத்திருக்கிறேன்! அதைத் தானே இப்போது காணவில்லை!' என்றார் அவர்.

சாம்புவுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. 'உம்! உம்!' என்று இழுத்தான்.

'சாம்பு! நீ சரியானபடி ஊகித்துவிட்டாய். பூரா விஷயத்தையும் நான் சொல்கிறேன். நான் ஒரு பெரிய முட்டாள்!' என்று தொடங்கினார் முதலியார்.

'நீங்களா சார்?' என்றான் சாம்பு. ஏ கடவுளே! எந்தச் சாம்புவை முட்டாள்! முட்டாள்! என்று இந்த முதலியார் எடுத்ததற்கெல்லாம் கூப்பிட்டாரோ, அதே சாம்புவிடம் 'தாமே ஒரு முட்டாள்' என்று ஒப்புக்கொள்ளும் காலமும் வந்ததே!'

'கேள் சாம்பு! நான் இன்று முட்டாள்தனமாக நடந்துகொண்டு விட்டேன். ராவ்சாகிப் வேதாந்தத்தை உனக்குத் தெரியும் அல்லவா? உன் சிநேகிதர் என்று என்னிடம் சொன்னார்.'

'என் சிநேகிதரா? அவர் அப்படிச் சொன்னாரா?'

'ஆமாம், அப்பா! மாம்பலத்தில்கூட நீ அவர் வீட்டுக்கு ஒருதரம் போயிருக்கிறாயாம்! அவர் என்னிடம் ஒரு முத்துமாலையைக் கொடுத்து, அதைத் தம் பெண்ணுக்கு நவராத்திரிக்கு வாங்கிக் கொடுக்கப் போவதாகவும், ஒரு மதிப்புப் போட்டுக் கொடுக்கும் படியும் சொன்னார். எனக்குத்தான் சோம்பேறித்தனம் ஜாஸ்தியா? மாலையை வாங்கிப் பெட்டியில் வைத்தேன். இன்று காலையில்தான் ஒரு சிநேகிதரோடு மதிப்பு போட்டு, ஐந்நூறு ரூபாய் வரை தாளும் என்று சொல்லலாமென முடிவு செய்தேன். முத்துமாலை என் சட்டைப் பையில் ஒரு ஜவ்வுக் காகிதத்தில் சுற்றியபடியே இருந்தது.'

'உம்'

'மத்தியானமாக ராவ்சாகிப் வேதாந்தம் என்னை டெலிபோனில் கூப்பிட்டு, நவராத்திரியில் பெண்டுகள் போட்டுக்கொள்ள மாலை சாயந்திரம் வேண்டுமென்று சொன்னார். அதற்குப் பிறகு நான் மாலையை, சட்டைப் பையிலிருந்து எடுத்து, கையில் வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தேன். அது இங்கே எல்லாருக் கும் தெரியும்.'

'சரி.'

'மறுபடி டெலிபோனில் யாரோ கூப்பிடவே, கையிலிருந்த மாலையைப் பொட்டலமாகக் கட்டி வெள்ளிப் பெட்டியில் வைத்து, அதை மேஜைக்குள் வைத்துவிட்டு டெலிபோனுக்குப் போனேன். ஒய்.எம்.ஐ.ஏ. - லிருந்து சில சிநேகிதர்கள் உடனே டிபன் சாப்பிட வரும்படி அழைத்தார்கள். முத்து மாலையை மறந்தேன்; வெற்றிலைப் பெட்டியை மறந்தேன்; மேஜையைப் பூட்ட மறந்தேன்; அப்படியே புறப்பட்டு விட்டேன். அப்போது மணி சரியாகப் பன்னிரண்டரை. திரும்ப ஒன்றரை மணிக்கு வந்து பார்த்தபோது, வெள்ளிப் பெட்டியை மேஜையினுள் காண வில்லை, அதோடு மாலையும் மறைந்துபோய் விட்டது.'

'உம். போய்விட்ட சமாசாரம் இங்கே யாருக்காவது தெரியுமோ?'

'இன்னும் ஒருவருக்கும் சொல்லவில்லை. எனக்குத் தெரியும், உனக்குத் தெரியும்!' என்றார் முதலியார்.

'அந்தத் திருடனுக்கும் தெரியும்.' என்றான் சாம்பு! இவ்வளவு சமத்காரமாகச் சாம்பு தன்னையும் அறியாமல் பேசிவிட்டான்.

'ஆமாம். இன்னும் நான் வேதாந்தத்தினிடங்கூடச் சொல்ல வில்லை. சொல்லிவிடலாமா? ஐயோ! எப்படிச் சொல்வது? நான் என்ன செய்வேன்? எனக்கு ஐந்நூறு ரூபாய்கூடப் பிரமாதமில்லை. பண்டத்தைத் திருப்பிக் கொடுப்பதுதானே நியாயம்!'

'வீணாக அலட்டிக் கொள்ளாதீர்கள். அவரிடம் விஷயத்தைச் சொல்லுவதால் ஒன்றும் பிசகில்லை. முதலில் சொல்லுங்கள்!' என்றான் சாம்பு.

முதலியார் சாப்பிடவிருக்கும் பையனைப்போல், வேண்டா வெறுப்புடன் டெலிபோனை எடுத்தார். அடுத்த நிமிஷம் வேதாந்தம் டெலிபோனில் பேசினார். முதலியார் மெல்லமாக வும் சுருக்கமாகவும் விஷயத்தைக் கூறினார். சாம்பு, முகத்தை வேறுபுறம் திருப்பிக்கொண்டு கேட்டான். தன் பெயரை முதலியார் சொல்வதையும் கவனித்தான்.

'ஆமாம். சாம்பு வந்திருக்கிறார். இங்கேதான் இருக்கிறார். இன்னும் அவர் ஒன்றும் நிச்சயமாகச் சொல்லவில்லை. எனக்கு ரொம்ப வருத்தமாக...

வேதாந்தம் டெலிபோனை வைத்துவிட்டார். முதலியார் சாம்புவின் பக்கம் திரும்பி, 'சாம்பு! நீ வந்துவிட்டாய் என்றவுடன், கைக்கு மாலை கிடைத்தாற் போலத்தான் என்று சொல்கிறார் வேதாந்தம்! உன்னிடம் அவ்வளவு நம்பிக்கை அவருக்கு!' என்றார் முதலியார் டெலிபோனை வைத்துவிட்டு.

சாம்பு, மூக்கைத் தேய்த்துக் கொண்டான். 'நான் மந்திரவாதியா? என் சக்தி பூராவையும் உபயோகித்துப் பார்க்கிறேன். இருக்கட் டும். உங்கள் அறைக்குள் வருவதென்றால் ஹாலைத் தாண்டிக் கொண்டு, மேனேஜர் அறையைக் கடந்துகொண்டுதானே வரவேண்டும்? இவ்வளவு தூரம் வந்து எடுக்க, வெளியிலிருந்து யாரும் திருட வர முடியாது. ஏனெனில், வரும்போதாவது போகும் போதாவது யார் கண்ணிலாவது பட்டுத்தான் இருக்க

கொழுமுபு தமிழச சங்கம்

வேண்டும். வேற்று மனிதராயிருந்தால் அகப்பட்டிருக்க வேண்டும். இதிலிருந்து மாலையை எடுத்தவன் ஆபீஸுக்குள் இருப்பவன்தான். அதுவும் அடிக்கடி இந்த அறைக்கு வருபவனாகவும் இருப்பவன்தான்!' என்று நிறுத்தினான்.

கடிகாரம் டாண் டாண் டாண் என்று மூன்றடித்தது. ஸ்ரீ திரிபுராந்தகா பேங்கின் ஆபீஸ், காலை ஒன்பது மணி முதல் மூன்று மணி வரையும், பிறகு மாலை நான்கு மணி முதல் ஆறரை மணி வரையும் வேலை செய்யும். சிப்பந்திகள் டிபனுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தார்கள். சாம்பு சட்டென்று எழுந்து போய், பேங்க் வாசற்படியில் நின்றுகொண்டு அவர்கள் போகும் போது ஒவ்வொருவராகக் கவனித்தான்.

புது மேனேஜர் கவலையற்ற முகத்துடன் போனார். கேசவாச்சாரி சாம்புவைப் பார்த்ததும், பேசப் பயந்துகொண்டு நடந்தார். சுப்புணி, சாம்புவைப் பார்த்த பார்வையில் பொறாமை இல்லை என்று சொல்ல முடியாது. தினம் தன்னிடம் குட்டுப்பட்ட ஆசாமி இன்று பிரபலஸ்தனாகிவிட்டதில் அவனுக்கு வயிற்றெரிச்சல் தான். முகம் சுருங்க, அவன் தலை குனிந்துகொண்டு போனதைச் சாம்பு கவனித்தான். அந்த நிமிஷமே சாம்புவுக்கு அவன் மேல் சந்தேகமும் வந்தது. கேஷியர், சாம்புவுக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டுப் போனார்.

கடைசியாக, ஆபீஸ் பையன் ரங்கன் சென்றான். அவன் தன்னைப் பார்த்துப் புன்னகை செய்ததையும், எப்படியாவது தனது திருஷ்டியில் பட முயன்றதையும் சாம்பு கவனித்தும், அவனைப் பார்க்காததுபோல் இருந்துவிட்டான். ஒரு ப்யூனைப் பார்த்து அடையாளம் தெரிந்துகொள்வதா என்பதுடன்கூட, முன்பு வேளையில் சாம்பு இருந்த காலத்தில் இதே ப்யூன் தன்னை எவ்வளவு அலட்சியம் செய்திருக்கிறான் என்பதையும் நினைத்துப் பார்த்துக் கொண்டான். தவிர, ஒரு ப்யூன் முத்துமாலை வரை எடுக்கத் துணிவான் என்பதில் அவனுக்குத் துளிகூட நம்பிக்கை இல்லை.

எல்லாரும் போன பிறகு சாம்பு திரும்ப முதலியாரின் அறைக்குள் சென்று, 'சார்! எனக்கு நீங்கள் ஓர் உதவி செய்ய வேண்டும். எல்லாரையும் கவனித்துக்கொண்டேன். இவர்கள் திரும்பி வரும் வரைக்கும் என்னைப் பேங்கில் தனிமையில் விட்டு வைக்க வேண்டும். சில இடங்களை நான் சோதனை செய்து பார்க்க விரும்புகிறேன்' என்றான்.'

'ரொம்ப சந்தோஷம்! நான்கூட அவசர காரியமாக ஒரு மணி நேரம் வெளியே போக வேண்டியிருக்கிறது. நான் இதோ போகிறேன். கதவைச் சாத்திக்கொண்டு ஒரு மணிக்கு இரண்டு மணியாக நீ சோதனை செய்1! எப்படியாவது கண்டுபிடித்துக் கொடுத்து என் மானத்தைக் காப்பாற்றுப்பா!' என்று சொல்லி விட்டு எழுந்துசென்றார் முதலியார்.

•

பேங்கில் சாம்பு மட்டுந்தான் இருந்தான். தனது பழைய நாற்காலியில் உட்கார்ந்தான். பிறகு எழுந்து அறையைச் சுற்றினான். ஒவ்வொருவர் மேஜையாகத் திறந்து பார்த்தான். திரும்ப மூடினான்.

சுப்புணியின் மேஜை டிராயர் ஒன்றில் ஒரு மில்லர் லாக் பூட்டாமல் மாட்டி இருக்கவே, அதை எடுத்து, டிராயரை இழுத்தான். மேலாக மடித்தபடி கிடந்த கடிதம் கண்ணில் பட்டது. அவன் படித்தது அதன் மத்திய பாகந்தான்.

ஆனால் அதுவே போதும் அவன் சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்ய! அதில் அப்படி எழுதியிருந்தது இதுதான்:

'எனக்கு இப்போது ஆயிரம் ரூபாய் அவசரமாக வேண்டி இருக்கிறது. அது உடனே கிடைக்காவிட்டால் என் நிலைமை என்ன ஆகும் என்று சொல்ல முடியாது. ஆயிரம் இல்லையென்றால் ஐந்நூறாவது வேண்டும். எப்படியாவது எந்த வகையிலாவது பணம் கிடைக்காவிட்டால் நான்...'

சாம்பு டிராயரை மூடினான்; பூட்டை மாட்டினான். அவன் கை அதைத் தானாக அழுத்தவே, பூட்டு உடனே பூட்டிக்கொண்டது. 'அடடே! பூட்டி விட்டோமே! மறுபடி ஒரு தரம் காகிதத்தை வெளியில் எடுத்து நன்றாகப் படிக்காமல் போனோமே!' என்று வருந்தினான் சாம்பு.

திரும்பத் தன் நாற்காலியில் வந்து உட்கார்ந்தான். 'சுப்புணிக்குப் பணக் கஷ்டம் என்பதற்கு ருசு கிடைத்துவிட்டது. அவன்தான் எடுத்திருக்கிறான் என்பதில் இனி எள்ளளவும் சந்தேகம் இல்லை. துரோகிப் பயல்! சரி! அவன் எங்கே எடுத்து ஒளித்திருப்பான்?' என்று சாம்பு மோட்டு வளையைப் பார்த்தான். யோசனை செய்பவர்கள் மோட்டு வளையைப் பார்ப்பது சகஜந்தான்.

ஆனால், அவர்களுக்கு மோட்டு வளையில் ஒன்றும் கிடைப்ப தில்லை. சாம்பு அபூர்வப் பிறவியாகையால் அங்கே அவனுக்கு ஒரு பதில் கிடைத்தது. பேங்க் பழைய ரிஜிஸ்டர் ஒன்று அங்கே புரண்டு கிடந்ததுதான் அது!

தான் உத்தியோகம் பார்த்த பதினேழு வருஷமாக சீந்துவாரற்றுக் கிடந்த அந்தப் புத்தகம் இப்போது நகர்ந்திருப்பானேன்?

சாம்பு, ஓர் ஏணியைக் கொணர்ந்து நிறுத்தி, அதன் மேல் ஏறி நின்று பார்த்தான். உயரம் போதவில்லை. சற்று எழும்பி உத்தி ரத்தைப் பிடித்தான். உடனே, ஏணி வழுக்கிவிடவே சாம்பு உத்தி ரத்தைப் பிடித்துக்கொண்டு கால்கள் பரவாமல் ஊசலாடினான்!

அந்த நிலைமையில் தொங்கியபோதுதான் சாம்பு ஷெல்பின் மேல்தட்டின் புத்தக வரிசைக்குப் பின்னால் பார்க்க நேர்ந்தது. கண்களை நன்றாக அகல விரித்துப் பார்த்தான்! ஆம்! முதலியாரின் வெள்ளிப் பெட்டி அங்கேதான் கிடந்தது! அதைப் போடும்போது தான் புத்தகம் சற்று நகர்ந்திருக்கிறது.

சாம்புவுக்கு இருந்த உற்சாகத்தில் ஒரே பாய்ச்சலில் அதைக் கைப்பற்றினான். அதற்காகத் தோள்பட்டையில் இடிபட்டுக் கொண்டதையும் தொப்பென்று விழுந்து காலைச் சுளுக்கிக் கொண்டதையுங்கூட, அவன் பொருட்படுத்தத் தயாராக இல்லை. பெட்டியைத் திறந்து பார்த்தபோது முத்துமாலை அப்படியே இருந்தது.

•

ஐந்து மணிக்குத்தான் டைரக்டர் பரமேஸ்வர முதலியார் வந்தார். சாம்பு அவர் அறையில் உட்கார்ந்து, மௌனமாக, யோசனையில் ஆழ்ந்திருந்தான். திரும்பி வந்த சிப்பந்திகள் சுறுசுறுப்பாகத் தங்கள் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். 'காயா, பழமா?' என்று கேட்டார் முதலியார், பரபரப்புடன் வந்ததும் வராததுமாக.

'காய்தான்!' என்றான் சாம்பு.

'மாலை கிடைக்கவில்லையா? உம்!' என்று சோர்வுடன் முதலியார் உட்கார்ந்தார்.

'மாலை கிடைத்துவிட்டது, சார்! இந்தக் கேஸ், எனக்குச் சுண்டைக்காய் என்றுதான் சொல்ல வந்தேன்!' என்றான் சாம்பு.

சாம்புவை, டைரக்டர் ஆலிங்கனம் செய்து கொண்டதையும், தம்மையும் மீறி அந்த மாலையை அவர் முத்தமிட்டதையும் இங்கே விவரிப்பது அநாவசியம். சாம்பு சற்றும் முகம் மாறாது இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தான். அவன்தான் அதிகம் பேசுவதில்லையே!

'சாம்பு, குற்றவாளி யார்? அதைச் சொல்லு எனக்கு, முன்னால்!' என்று முதலியார் கேட்டார்.

'மணியை அடியுங்கள், சொல்கிறேன்!' என்றான் சாம்பு.

ஆபீஸ் பையன் வந்ததும் அவனைவிட்டு டைபிஸ்ட் சுப்புணியை அழைத்து வரச் செய்து, அவன் மேஜையிலிருந்த கடுதாசியையும் வெளிப்படுத்தி, 'முட்டாள்' என்று தன்னை சொன்ன அதே வாயால் அவனை அழ வைக்கச் சாம்பு தீர்மானித்தான். அதற்காக இப்போது முதற்கொண்டே மிடுக்காக இருக்கவும் ஆரம்பித் தான்.

ஆபீஸ் பையன் ரங்கன் மணிச் சத்தம் கேட்டு உள்ளே நுழைந்த தும், மேஜைமீது வெள்ளிப் பெட்டியையும், கம்பீரமாகச் சாம்பு விறைத்து உட்கார்ந்திருப்பதையும், டைரக்டர் உறுமிக்கொண்டு இருந்ததையும்தான் கண்டான். அவன் முகம் பயத்தால் கறுத்துப் போய்விட்டது.

'இப்போ என்ன செய்யப் போகிறாய், சாம்பு?' என்று கேட்டார் முதலியார்.

சாம்பு, முதன் முதலாக அந்த ஆபீஸ் பையனுக்குத் தனது அந்த ஸ்தை வெளிப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று எண்ணம்.

முன்போல் தான் குமாஸ்தா இல்லை, முதலியாருக்குச் சம அந்தஸ்துள்ளவன் என காட்டிக்கொள்ள ஆவல் பிறந்தது. ஆகவே, அவனைப் பார்த்து, தலையை மெல்ல மேலும் கீழும் ஆட்டினான்.

சாம்புவின் தலை ஆட ஆட ரங்கன் உடம்பு ஏன் இப்படி நடுங்கு கிறது! அவன் ஏன் குனிகிறான்! அட, அவன் ஏன் நமஸ்காரம் செய்கிறான்! ஏன் இப்படிக் கதறுகிறான்? சாம்பு பிரமித்துப் போய்விட்டான். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை!

ரங்கன் கதறினான். 'எஜமான்! தெரியாத்தனமாகச் செய்துட்டே னுங்க! இனிமேல் அந்தப் பாக்குப் பொட்டணத்து வழி நான் வரதில்லீங்க! தினம் பொட்டணம் எடுக்கிறது வழக்கம். நீங்க வெச்சிருக்கிற பாக்குப் பொட்டணத்திலே ஒண்ணே ஒண்ணு, நீங்க இல்லாத சமயமா எடுப்பேன். அதே மாதிரி இன்னிக்கும் எடுத்தேன். அதற்குள்ளே நீங்க வந்துட்டீங்க. பெட்டியை உள்ளே வைக்க அவகாசம் இல்லீங்க. அப்படியே எடுத்து, பீரோ மேலே ஒளிச்சேனுங்க. கட்டாயமா திரும்ப வச்சிருப்பேன். சத்தியமா அதைத் திருடற எண்ணமில்லே..'

'அடடா! அநியாயமாகச் சுப்புணியை அழைத்துக் குற்றம் சாட்ட எண்ணிவிட்டேனே!' என்று சாம்புவின் மனத்தில் தோன்றிய போது சுப்புணியே அறையில் நுழைந்து டைரக்டரிடம், சார்! நீங்கள் ஒரு கடுதாசி தேடி எடுக்கச் சொல்லி இருந்தீர்களே! இதோ அது அகப்பட்டுவிட்டது!' என்று ஒரு லெட்டரை மேஜையில் வைத்தான். அது வேறெந்தக் கடிதமும் இல்லை. சாம்பு அவனு டைய மேஜை டிராயரில் பார்த்ததே! 'ஓஹோ! இதுகூடச் சுப்பு ணிக்கு வந்த கடிதம் இல்லையா? என்ன மடத்தனமாக முழுதும் கவனிக்காமல் அவசரப்பட்டு முடிவு செய்தேன்!' என்று சாம்பு மனத்துக்குள் வருந்தினான்.

நூறு ரூபாய்க்கு ஒரு செக் எழுதி, அதை வலுக்கட்டாயமாக முதலியார் சாம்புவிடம் கொடுத்தார். 'நீ திருட்டைக் கண்டுபிடிப் பாய் என்று எனக்குத் தெரியும். ஆனால் இவ்வளவு லகுவாய்ச் செய்வாய் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அப்பா! என் மானத்தைக் காப்பாற்றினாயே? அதற்கு ஆயிரம் ரூபாய் கொடுத் தாலும் தகும்!' என்றார்.

அன்று மாலை ராவ்சாகிப் வேதாந்தம் சாம்புவை வந்து பார்த்து, 'உங்கள் சாமர்த்தியத்தைக் கண்டு எனக்குப் பொறாமைதான் வருகிறது!' என்றார்.

'எனக்கு நீங்கள் ஓர் உதவி செய்ய வேண்டுமே!' என்று சாம்பு அவரை உடனே வேண்டினான்.

'என்ன வேண்டுமானாலும் கேளுங்கள்! ஆனால் உங்களைப் போன்ற மேதாவிகளுக்கு என்மாதிரி அற்பனால் ஆகக்கூடியது என்ன இருக்கப் போகிறது?'

'உங்கள் வீட்டில் அன்று என்னுடன் கட்டுண்டு கிடந்தார்களே, இரண்டு பையன்கள். அவர்களுக்குச் சிபாரிசு செய்து வேலை எதாவது பார்த்துக் கொடுங்கள்!' என்று கேட்டுக்கொண்டான் சாம்பு.

'வேலை கிடைத்துவிட்டது என்றே வைத்துக்கொள்ளுங்கள்!' என்றார் வேதாந்தம் உற்சாகத்துடன்.

9

ஒரு கல் இரண்டு மாங்காய்!

சென்னைப் பட்டணத்தில் ஒரு விசித்திர மான சம்பவம் நிகழ்ந்தது. மவுண்ட் ரோடில் வழக்கமாக நிற்கும் ஒரு டிராஃபிக் கான்ஸ்டபிள் லகுவில் ஏமாந்து போய் விட்டான். அந்தக் கான்ஸ்டபிள் சாதாரண மாகப் புத்திசாலிதான்; ஆனால், அவனை ஏமாற்றப் பார்த்தவன் பலே கைகாரனா யிருந்திருக்கிறான். திட்டம் போட்டு வேலை செய்திருக்கிறான். விஷயம் வருமாறு:

ஒரு நாள் மாலை ஒரு சின்ன சூட்கேஸைத் தூக்கிக்கொண்டு ஓர் ஆசாமி மவுண்ட் ரோடில் பீட் நின்ற அந்தக் கான்ஸ்டபிளிடம் சென்று, 'ஐயா! என்னுடன் கொஞ்சம் துணைக்கு வர முடியுமா?' என்று கேட்டான்.

'நீ என்ன பொம்பளையா?' என்று அந்தக் கான்ஸ்டபிள் பதிலுக்குக் கேட்டான்.

'அதற்கில்லை, ஐயா! காலம் கெட்டுக் கிடக் கிறது. என் கையிலோ நாலாயிரம் ரூபாய்க்கு

நோட்டுகளாக வைத்திருக்கிறேன். அதோ அந்தப் பேங்க் போய்ச் சேருமளவும் என்கூட வந்தால் கொஞ்சம் தைரியமா யிருக்கும்!' என்றான் அந்த ஆசாமி.

'நீ போ, ஐயா! ஒண்ணும் ஆபத்து வந்துடாது! நான் இங்கிருந்தே பார்த்துக் கொள்கிறேன். நான் பீட்டை விட்டுவிட்டு அந்தண்டை நவரக் கூடாது!' என்று சொல்லிவிட்டான்.

'சரி! அப்படியானால் இங்கேயிருந்தாவது கவனிச்சுக்குங்க! எனக்கு அந்தப் பேங்கிலே காஷியர் வேலை!' என்றான் அவன்.

இதே மாதிரி பதினைந்து தினங்களுக்கு அந்தக் கான்ஸ்டபிள் மாலை வேளையில் இதே ஆசாமி ஒரு சூட்கேஸுடன் போவதைக் கவனித்திருக்கிறான். தினம் அவன் கான்ஸ்டபி ளிடம் ஏதாவது ஒரு வார்த்தை பேசுவான்; சில சமயம் புன்னகை செய்வான்; சில சமயம் சலாம் செய்வான். கான்ஸ்டபிளுக்கு அவனை நன்றாகப் பழகிவிட்டது. பேங்க் குமாஸ்தா பணப்பெட்டியுடன் போனால் மணி ஐந்தரை என்றுகூட அவன் ஞாபகம் வைத்துக்கொள்ளத் தொடங்கி விட்டான்.

அவனுக்கு இவனைப் பார்க்கும்போதெல்லாம் சிரிப்புகூட வரும். 'எந்தத் திருடன் வந்து மறிக்கப் போகிறான்! சுத்தப் பயந்தாங்கொள்ளி!' என்று எண்ணிக்கொள்வான்.

இப்படி ஒரு மாதம் ஆகியிருக்கும். திடீரென்று ஒரு நாள் அந்தப் பேங்க் குமாஸ்தா வழக்கம்போல் வரவில்லை. நன்றாக அஸ்தமித்துவிட்டது. பீட் கான்ஸ்டபிளும் ட்யூட்டி முடிந்து வீட்டுக்குப் போக நினைக்கும் சமயம், 'ஐயோ, ஐயோ! கொள்ளை! கொள்ளை!' என்று சத்தம் கேட்டது. கான்ஸ்டபிள் நின்ற இடத்திலிருந்து சுமார் இருநூறு கஜ தூரத்தில் சற்று இருட்டான இடத்திலிருந்துதான் இந்தச் சத்தம் வந்தது. கான்ஸ்டபிள் ஓடிப்போய்ப் பார்த்தான். அவனுக்கு அறிமுக மான பேங்க் குமாஸ்தாவும் இன்னும் ஓர் ஆசாமியும் ஒருவரோ டொருவர் மல்லுக்கு நின்றுகொண்டிருந்தார்கள். அவர்களி டையே அகப்பட்டுக்கொண்டு அந்த சூட்கேஸ் திண்டாடியது.

ஒரு விநாடியில் கான்ஸ்டபிளுக்கு நிலைமை விளங்கிவிட்டது. இவ்வளவு இந்த ஆசாமி பயந்த விஷயம் இன்று நடக்கிறது. அவன் பணத்தைப் பிடுங்க இன்று ஒரு திருடன் வந்துவிட்டான்! ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து திருடன்மேல் விழுந்தான்

கான்ஸ்டபிள். பட்பட்டென்று நாலு அடி அடித்து அவனை இழுத்து சூட்கேஸைத் தனக்குப் பரிச்சயமான பழைய ஆளின் கையில் கொடுத்தான்.

'என்ன அக்கிரமம் இது! நடுத்தெருவில் கொள்ளையா அடிக்கிறாய்? ஹூம்!' என்று அதட்டினான் கான்ஸ்டபிள். அந்தத் திருடன் ஏதோ சொல்ல வாயெடுத்தபோது, கான்ஸ்டபிள் அவன் மண்டையில் ஒரு தட்டு தட்டவும் ஒய்ந்துவிட்டான்.

பெட்டியை வாங்கிக்கொண்டு அந்தக் குமாஸ்தா, 'பார்த்தீர்களா, ஐயா! நான் பயந்தபடியே ஆயிற்று! நீங்க வராவிட்டால் இவன் பிடுங்கிக்கொண்டே போயிருப்பான்!' என்றான்.

'இரண்டு பேரும் நேரே ஸ்டேஷனுக்கு வாங்க!' என்று கான்ஸ்டபிள், மற்றவன் கையைக் கெட்டியாகப் பிடித்து இழுத்துக்கொண்டு நடந்தான். பேங்க் குமாஸ்தாவும் பெட்டி யுடன் பின் தொடர்ந்தான்.

போலீஸ் ஸ்டேஷனை அடைந்ததும் கான்ஸ்டபிள் திரும்பிப் பார்த்தால். தன்னைப் பின் தொடர்ந்த ஆசாமி பெட்டியுடன் மறைந்துவிட்டான்! அவன் கைப்பிடியில் அகப்பட்டுக் கொண்டு வந்தவன், 'தலைவிதி! நான் நிஜத்தைச் சொன்னால் எங்கே நம்பினாய்? என் பேங்குக்குத் தயவுசெய்து டெலிஃபோன் செய்!' என்று கேட்டுக்கொண்டான்.

கான்ஸ்டபிளுக்கு அப்போதுதான் சிறிது சந்தேகம் வந்தது. பேங்குக்கு டெலிஃபோன் செய்ததும், பேங்க் உத்தியோகஸ்தர் கள் வந்து கான்ஸ்டபிள் பிடியிலிருந்த ஆசாமிதான் தங்கள் பேங்க் காகப் பணம் ஒருபோதும் கொண்டு வருவதில்லையென்றும், அன்று அவன் கொண்டுவந்த பணமே போயிருக்கிறதென்றும் தெரிவித்தார்கள். கான்ஸ்டபிள் பிரமித்துப் போனான். ஒரு கஜப் போக்கிரி ஒரு மாதமாகத் தன்னை ஏமாற்றிவந்து, கடைசியில் பணத்தையும் அடித்துக் கொண்டு போய்விட்டான் என்பது அப்போதுதான் அவனுக்குத் தெரிந்தது! அது மட்டும் அல்ல; திருடன் கையில் பணத்தைப் பிடுங்கிக்கொடுக்க, தானும்கூட உதவி செய்ததை நினைக்க நினைக்க அவன் நெஞ்சு வெடிவிடும்போல் இருந்தது.

இது நடந்து நாலு நாள்கள் ஆகியும், பணத்துடன் போனவனைப் பற்றி ஒரு தகவலும் கிடைக்கவில்லை. பேங்க் குமாஸ்தாவும்

கான்ஸ்டபிளுமாக ரயில்வே ஸ்டேஷன்களையும், பஸ் ஸ்டாண்டுகளையும், காபி ஹோட்டல்களையும் சல்லடை போட்டுச் சலித்தார்கள்.

இவ்வளவு சமாசாரங்களையுந்தான் இன்ஸ்பெக்டர் கோபாலன் ஆதியோடந்தமாகச் சாம்புவிடம் சொன்னார். 'மிஸ்டர் சாம்பு! நீங்கள்தான் உதவணும். அந்தக் குமாஸ்தா, பணம் இரண்டும் எக்கேடு கெட்டுப் போனாலும் போகட்டும். அந்தக் கான்ஸ்டபிளின் கஷ்டந்தான் சகிக்க முடியவில்லை!' என்றார்.

தாம் சொன்னபடி சாம்பு கேட்பான் என்று கோபாலனுக்கு அசாத்திய நம்பிக்கை.

ஆனால், சாம்புவோ உதட்டைப் பிதுக்கினான். 'இதெல்லாம் நம்மாலாகாது சார்! வேறு பார்த்துக் கொள்ளுங்கள்!' என்றான்.

கோபாலன் திடுக்கிட்டு, 'என்னங்காணும்? நிஜமாகத்தானா!' என்று கேட்டார்.

'ஆமாம். நிஜம்மாத்தான்! எனக்கு வேறு வேலை இருக்கிறது!' என்று கூறி, சாம்பு வீட்டுக்குள் போய்விட்டான். இதைச் சற்றும் எதிர்பாராத இன்ஸ்பெக்டருக்கு ஏமாற்றமும் கோபமும் வந்துவிட்டன. 'ஊம், ஹூம்! இது உம்மமேல் பிசகில்லை ஓய், இருக்கட்டும்! இனி உம்ம முகாலோபனம் செய்வதில்லை!' என்று சொல்லிவிட்டு வெளியே கோபமாகச் சென்றார்.

இன்ஸ்பெக்டர் கோபமாகப் போய்விடாமல் சற்று நேரம் நின்று பார்த்திருந்தாரானால், சாம்புவின் வீட்டிலிருந்து ஹார்மோனியச் சத்தத்தைக் கேட்டிருப்பார். மேலும் கவனித்திருந்தால் சாம்புவின் உண்மையான நிலைமையை அறிந்திருப்பார். ஒருகால் அவனை மன்னித்தும் இருப்பார்.

சாம்பு உண்மையில் ஒரு விநோதமான நிலைமையில்தான் இருந்தான். அவன் காதல் கொண்டுவிட்டான்! அவனை அறியாமல் காதல் அவன் ஹிருதயத்தைப் பிடித்துப் பறித்துக் கொண்டு போய்விட்டது. அப்படி அந்த ஹிருதயத்தைக் கவர்ந்த நாரீமணிதான் இப்போது சாம்புவை இம்மாதிரி பேச வைத்தாள்!

எல்லாக் கதைகளிலும் ஏற்படுவதுபோல் சாம்புவுக்குக் கடற்கரையில் காதல் ஆரம்பமாகவில்லை; சினிமாக் கொட்டகையில்

தொடங்கவில்லை. காதல்கொண்ட பிறகுதான் கடற்கரைக்கும், சினிமாவுக்கும் சாம்பு போனான்! ஒரு நாள் சாம்பு குடையைப் பிடித்துக்கொண்டு சென்றபோது அகஸ்மாத்தாக ஒரு வாழைப் பழத் தோலில் சறுக்கி விழவிருந்தான். அவனுடைய பிரிந்த குடை ஒரு பெண்மணியின் கூந்தலுக்குள் போய் சிக்கிக் கொண்டது. அதே நிமிஷத்தில் அவன் மனமும் அவள் ரூபத்தில் சிக்கிக்கொண்டது.

அடுத்து வந்த தினங்களில் அந்தப் பெண்ணும் சாம்புவும் அடிக்கடி சந்தித்தார்கள் கடற்கரையில்தான். அவள் ஒரு பள்ளிக் கூட உபாத்தியாயினி என்றும், பெயர் நீலா என்றும் சொன்னாள். அவள் எந்தப் புருஷனையும் கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை. தெய்வ சங்கல்பந்தான் சாம்புவை வழியில் கொண்டுவந்து விட்டு, ஒரு வாழைப் பழத்தையும் போட்டது என்றாள். அவள் கதையைக் கேட்ட சாம்பு சில சமயம் கண்ணீர் உகுத்தான்; சில சமயம் சிரித்தான். அவள் வாழ்க்கைச் சரிதை அவன் மனத்தைக் கவர்ந்துவிட்டது. அவள் பாட்டைக் கேட்டுப் பாகாய் உருகினான். சாம்பு, அவள் பாடும்போது ஒரு பழைய ஹார்மோனியத்தை வைத்துக்கொண்டு சுருதி கூட்டித் தாளம் போட்டுக் கொண்டு ரசித்தான் என்றால் கேட்கவா வேண்டும்! அவள் இல்லாமல் இனி அரைக்கணம் உயிர் வாழ முடியாதென்று அவன் நினைத்தான். தன் வாழ்க்கைத் துணைவியாகும்படி அவளை வேண்டிக்கொள்ளத் தீர்மானித்தான். இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்தில் ஓர் இன்ஸ்பெக்டர் இல்லை, எட்டு இன்ஸ்பெக்டர்கள் ஏக காலத்தில் வந்து அழைத்தாலும் சாம்பு வருவானா?

சாம்பு உள்ளே சென்றதும், நீலா இன்ஸ்பெக்டர் வந்த காரணத்தை விசாரித்தாள். சாம்பு, 'அது கிடக்கிறது. விடு!' என்றான்.

'சும்மா சொல்லுங்கள்!'

'அதெல்லாம் உனக்கென்ன! என்னைக் கூப்பிட்டார்; முடியாதென்று விட்டேன். அதோடு போச்சு! நம் விஷயமாகப் பேசுவோம்!' என்றான் சாம்பு. இதைச் சர்வ சாதாரணமாகவே சொன்னான்; ஒன்றையும் ஒளிக்கும் உத்தேசம் அவனிடம் இல்லை. ஆனால், நீலாவின் முகம் மாறியது. உதட்டைக் கடித்துக் கொண்டாள். சுருதி போட்டுக்கொண்டு முகத்தைத் திரும்பிக்கொண்டு இருந்த சாம்புவின் திருஷ்டியில் அது படவில்லை.

'அது என்ன, அப்படிச் சொல்லக்கூடாத ரகசியமோ?' என்று கேட்டாள் மீண்டும்.

'ரகசியம் ஒன்றுமில்லை, நீலா! ஒரு கேஸ் விஷயம்!' என்றான் சாம்பு. இப்போதெல்லாம் சாம்பு சற்று உஷாராகியிருந்தான். தத்துப் பித்தென்று யாரிடமாவது எதையாவது உளறிவிடக் கூடாதென்று அவனுக்கு ஒரு தீர்மானம். ஆனால், நீலாவிடமும் ஒளிக்கப் போகவே, அவள் சட்டென்று கிளம்பினாள். 'சரி, அப்புறமாக வருகிறேன். தலைவலி அதிகமாக இருக்கிறது!' என்று சொல்லிவிட்டு எழுந்து சென்றாள்.

அன்று இரவு ஒன்பது மணிக்கு, சாம்புவுக்கு ரயில்வே ஸ்டேஷனில் ஒரு நண்பனை ரயிலேற்ற வேண்டியிருந்தது. சாம்புவுக்கு, நீலா சட்டென்று சென்றது முதல் மனத்தில் ஒருவித ஏக்கம் வந்திருந்தது; பொழுதே போகவில்லை. 'சை! நீலாவிடம் போய் எதற்காக ஓர் அற்ப விஷயத்தை ஒளித்தோம்? இதைச் சொல்லி இருந்தால் என்ன மோசம் முழுகிவிடும்?' என்று வருந்தினான்.

இப்படி ஏதேதோ எண்ணியவனாக ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் குறுக்கும் நெடுக்குமாக அவன் போய் வந்தபோது, ஓர் இரண்டாவது கிளாஸ் வண்டியில் 'மிஸ் ஐயா' என்று ரிஸர்வ் செய்யப்பட்டு ஓர் அட்டை தொங்குவதைப் பார்த்தான். அகஸ்மாத்தாக வண்டிக்குள் பார்த்தபோது அவன் திடுக்கிட்டான்.

தன் காதலிதான் - அந்த நீலாதான் - சாய்ந்தவாறு படுத்து ஒரு நாவலில் மூழ்கியிருந்தாள். அடுத்த விநாடி, சாம்பு வண்டிக்குள் ஏறிவிட்டான். 'நீலா! நீலா! எங்கே போகிறாய்? என்மேல் கோபமா?' என்றான்.

அவள் திரும்பிப் பார்த்தாள். ஆனால், சாம்புவை அவள் அடையாளம் கண்டுகொண்டதாகவே தெரியவில்லை. 'நீர் யாரைத் தேடுகிறீர்? தவறி வந்துவிட்டாற் போல் இருக்கிறதே!' என்றாள். நீலாவின் குரல்தான்.

'என்ன நீலா? இதென்ன விளையாட்டு! நான் ஏதோ இன்றைக்கு ஒரு பிசகு செய்துவிட்டால் அதற்காகவா இப்படி?'

'யாரையா நீர், என்னை ரொம்ப அறிந்தவர்போல் பாசாங்கு செய்துகொண்டு? தயவுசெய்து வண்டியிலிருந்து இறங்குகிறீரா! போலீஸைக் கூப்பிடட்டுமா?' என்றாள் அவள்.

சாம்பு, அவளுடைய பெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டான் சுவாதீனமாக! 'போதும் வேடிக்கை! என் கண்ணே! இனிமேல் நான் ஒழுங்காக நடந்துகொள்வேன். இது சத்தியம்!' என்றான்.

'நீர் கஜப் போக்கிரியாக இருக்கிறீரே! பெட்டியைக் கீழே வையும், ஐயா! அயோக்கியத்தனம்! ஒரு பெண் பிள்ளை தனியாக இருந்தால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம், பேசலாம் என்று எண்ணிவிட்டீரா? இறங்கும், வண்டியை விட்டு! ஹூம்!' என்றாள் அவள்.

சாம்புவுக்கு மனத்துக்குள் ஒரு சிறு சந்தேகம். இவள் வேறு யாராகவாவது இருப்பாளோவென்று! ஆனால், தத்ரூபமாக இருக்கிறதே! இதென்ன வேடிக்கை! அவள் வார்த்தையை நம்புவதா, நம் சொந்தக் கண்களை நம்புவதா? எதற்கும் இறங்கிவிடலாமென்று எண்ணி, வண்டியிலிருந்து கீழே காலை வைத்தான். அவன் காலை வைத்த இடத்தில் வாழைப்பழத் தோல் இல்லை. ஆனால், ஓர் ஆரஞ்சுத் தோல் இருந்தது. மறுபடியும் சறுக்கிற்று.

இந்தத் தடவை சாம்புவுக்குப் பிடித்துக்கொள்ள, அங்கே போய்க்கொண்டிருந்த ஒருவருடைய தாடிதான் அகப்பட்டது. விழும்போதே அதைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டான். அதைப் பிடித்துக்கொண்டும் பயன் இல்லை. அந்தத் தாடி, மீசையுடன்கூடப் பிய்த்துக்கொண்டு அவன் கையோடு லகுவாய் வந்துவிடவே, சாம்பு பெட்டியைப் போட்டுக்கொண்டு விழுந்தான்! தாடி மீசைகளை இழந்த ஆசாமி ஒரு கணம் திகைத்து நிற்கும் போதே, சாம்பு அவன் முகத்தைப் பார்த்துவிட்டான். 'இவனைப் பிடியுங்கள்! பிடியுங்கள்!' என்று அவனையும் அறியாமல் கூச்சல் போட்டான்.

அந்த ஆசாமி வேறு யாருமில்லை. முன்பு சாம்புவின் மேனேஜராயிருந்து, ஒரு லட்சத்தை அடித்துக்கொண்டு ஓடிய மகரபூஷணராவ்தான்! அவர் ஏன், திரும்பச் சென்னைக்கு வந்தார்? ஏன், இப்படி மீசை தாடி வைத்துக் கொண்டு வேஷம் போடுகிறார் என்பது ஒன்றும் சாம்புவுக்கு விளங்கவில்லை.

'இவனைப் பிடியுங்கள்!' என்று அவன் சத்தம் போட்டதும் அவனை முதன்முதலாகப் பிடித்தவன் பேங்க் குமாஸ்தாதான்! ரெயில்வே ஸ்டேஷன்களிலும் பஸ் ஸ்டாண்டுகளிலும் அவன் திரிந்து, தன்னைத் தாக்கிக் களவாடியவனைத் தேடிக்கொண்டு வந்தான் அல்லவா? தாடி மீசை அகன்ற மகரபூஷணராவை

அவன் பார்த்ததும், தன்னைத் தாக்கிய பேர்வழி இவனேதான் என்று உடனே அடையாளம் கண்டுகொண்டான்! சாம்புவின் குரல் கேட்டதுமே ஒரே பாய்ச்சலில் பிடித்துவிட்டான்.

அடுத்த நிமிஷம் ஒரு பெரிய கூட்டம் கூடியது. ஒரு போலீஸ் காரன், சாம்புவின் கையிலிருந்த பெட்டியை வாங்கிக்கொண்டு ரயில்வே ஸ்டேஷன் அறை ஒன்றுக்குள் சென்றான். கீழே விழுந்த அதிர்ச்சியால் பெட்டி திறந்து கொள்ளவே, அதில் நகைகளும் ரூபாய் நோட்டுகளும் இருப்பதைக் கண்டு, அந்தக் கான்ஸ்டபிள் திரும்ப ஓடி வந்தான். சாம்பு எழுந்து நின்று, 'பெட்டி எங்கே? நீலா எங்கே?' என்று அலறிக் கொண்டிருந்தான். ரயில் வண்டியின் மறுபக்கமாக இறங்கிப் போக யத்தனித்த நீலாவை, அப்போது இரண்டு போலீஸ்காரர்கள் கொண்டுவந்து சாம்புவின் முன் நிறுத்தினார்கள்.

சாம்புவைப் பார்த்தவுடன், 'பாவி! என் பெட்டியைத் திறந்து விட்டார்களா?' என்றாள் அவள்.

'நீலா! நான் உன்னை விடுவேனா?' என்றான் சாம்பு.

'சீ! துரோகி! என்னைக் காண்பித்துக் கொடுத்துவிட்டாயே!' என்று சாம்பு மீது அவள் புலிபோல் பாய்ந்துகொண்டு வந்தாள். இரண்டு கான்ஸ்டபிள்கள் அவளைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ள, சாம்புவை ஒரு சப் இன்ஸ்பெக்டர் தனியே அழைத்துப் போனார். 'சார்! இவளை அரக்கோணத்தில் மடக்கலாமென்று இன்ஸ்பெக்டர் கோபாலன் முன்னால் போய்க் காத்திருக்கிறார். நீங்கள் என்னடாவென்றால் இங்கேயே கையும் களவுமாக மடக்கிவிட்டீர்கள். எத்தனை பேரை ஏமாற்றி, பணமும் நகையும் இவள் கொள்ளையடித்திருக்கிறாள் என்கிறீர்! பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயினி என்று சொல்லிக் கொண்டு, 'காதல் காதல்' என்று முடித்து, கடைசியில் ஆசாமியைக் கறந்து விடுவாள். இவள் பலே பேர்வழி, சார்!' என்று விவரித்தார் அவர். சாம்பு உதட்டைக் கடித்துக் கொண்டான். தான் காலையில் இன்ஸ்பெக்டருடன் ரகசியம் பேசியது, அவளுக்குச் சந்தேகம் உண்டாகித்தான் இப்படி அவசரப்பட்டுக் கிளம்பி இருக்கிறாள் என்பதை ஊகித்துக் கொண்டாள்.

அன்று மாலை இன்ஸ்பெக்டர் கோபாலன் வந்து சாம்புவைப் பார்த்தார். 'என்னை நீர் மன்னிக்கணும்! நான் தவறாக நினைத்து

விட்டேன். நீர் அந்தப் பெண்ணைப் பிடிக்க வேலை செய்து கொண்டிருந்தபோது, இந்தப் பேங்க் கேஸையும் கொடுத்துத் தொந்தரவு செய்துவிட்டேன். ஆனால், உம்ம மனத்தில் இருப்பது எனக்கு எப்படித் தெரியும்? நீர் மனிதப் பிறவிதானா, ஐயா! கடைசியில் இரண்டு கேஸையும் ஒரே இடத்தில் வைத்துப் பிடித்துக் கொடுத்தீரே!' என்று ஆச்சரியத்துடன் சொன்னார்.

•

சாம்புவின் டெலிஃபோன் அடித்தது. டைரக்டர் பரமசிவ முதலியார் பேசினார்: 'சாம்பு! அந்த அயோக்கியன் மகரபூஷணத்தைப் பிடித்துவிட்டாயாமே! நீ சூரன்தாண்டா!' என்றார் அவர்.

சாம்புவின் மனத்தில் மகரபூஷணராவ் அகப்பட்டதில் தன் அவதார காரியம் ஆகிவிட்டதுபோல் ஒரு திருப்தி மேல்நோக்கி இருந்தது.

10

ரங்கூன் ரங்கன்

சொற்ப காலத்துக்குள் சாம்புவின் பெயர் பட்டணப் பிரசித்தி பெற்றுவிட்டது. கீர்த்தி யினால் ஏற்படும் ஆனந்தத்தையும் தொல்லை களையும் ஒருங்கே அவன் அநுபவிக்கத் தொடங்கினான். அவனை இதுவரையில் கவனிக்காதவர்கள் எல்லாம் இப்போது கவனிக்க ஆரம்பித்தார்கள். சாம்பு போட்டுக் கொண்ட அங்கவஸ்திரம், அவன் வாங்கும் சட்டைத் துணி, அவன் உபயோகிக்கும் மூக்குப் பொடி அத்தனையும் எல்லாருக்கும் பிடிக்கலாயின.

சாம்புவின் அற்புதமான சக்திகளைப் பற்றி, பெரிய பெரிய வதந்திகள் கிளம்பின. சாம்பு கண்ணால் பார்க்காமல் காதால் கேட்டே பெரிய கேஸ்களை விளக்கி வைப்பதாகச் சொல்லிக் கொண்டார்கள். 'பார்த்தால் அசடாகத் தோன்றுகிறதே என்று நினைக் கிறீர்களோ? அவ்வளவும் வேஷம் சார்! மனுஷன் மண்டை முழுதும் மூளைதான்! பாருங்கள், மகாதானபுரம் ஜமீன்தார் வீட்டில் இவர் ஒரு வேலை செய்தார். திருடர்கள் கதறிக்கொண்டு களவாடின பொருள்களைக்

காலடியில் வைத்துவிட்டுப் போனார்கள்!' என்று இம்மாதிரி இல்லாத கதைகளை ஒருவருக்கொருவர் கட்டிவிட்டுக் கொண்டார்கள். சாம்பு எடுத்த கேஸ்கள் எல்லாவற்றிலும் வெற்றி பெற்றதாகத்தான் அவர்கள் பேச்சும் கற்பனையும் இருந்தன. போலீஸ் இலாகாவே சாம்புவுக்குக் கண்ட இடமெல்லாம் சலாம் வைத்தது.

போகுமிடமெல்லாம் தன்னைப் புதுவித மரியாதையுடன் நடத்துவதைக் கண்டான் சாம்பு. அவனை முன்பின் பார்த்திராதவர்கள்கூட உபசாரம் செய்வதை உணர்ந்தான். முன்பு சாம்பு குமாஸ்தாவாயிருந்த போது, தெருவில் பையன்கள் சாம்புவைக் கண்டதும் முகத்தை வலித்து அழகு காட்டுவதுண்டு. இப்போது சாம்பு வருகிறான் என்றால் அவர்கள் ஓட்டம் பிடித்தார்கள்!

அவன் இருந்த பேட்டையிலேயே சில விசேஷங்கள் ஏற்பட்டன. 'ஒருவித'மான சம்பாத்தியமும், தொழிலும் வைத்துக் கொண்டிருந்த நபர்கள் நாலைந்து பேர் திடீரென்று நினைத்துக் கொண்டு வேறு பேட்டைக்கு ஜாகை மாற்றிக் கொண்டார்கள். யோக்கியமான ஜனங்களுக்கோ, சாம்பு தங்கள் தெருவிலோ தங்களுக்குப் பக்கத்திலோ குடியிருப்பதே ஒரு தெம்பும் மகிழ்ச்சியும் பெருமையும் அளித்தது.

•

மாலை வேளை. நுங்கம்பாக்கம் ரஸ்தாவில் சாம்பு தன் கைத்தடியைச் சுழற்றிக்கொண்டு ஆனந்தமான எண்ணங்களில் ஈடுபட்டு கால்போன போக்கில் போய்க்கொண்டிருந்தான். இன்னும் கால் மணி நேரத்துக்குமேல் போனால், வீட்டுக்குத் திரும்புவதற்குள் இருட்டிவிடும். அப்போது ஒரு மோட்டார் வண்டி அவனைத் தாண்டி வேகமாகச் சென்றது. அது மறைவதற்குள் அதில் இரண்டு பேர் போலீஸ் உடை தரித்து உட்கார்ந்திருப்பதையும், ஒரு போலீஸ் ஆசாமியே ஓட்டிச் செல்வதையும் சாம்பு கவனித்தான். உடனே அவன் மனம் யோசனையில் ஆழ்ந்தது. மாலை வேளை, போலீஸ் வண்டி! என்ன காரணம் இருக்கலாம்? ஏதாவது சமீபத்தில் கொலை, களவு நடந்திருக்குமோ?

சாம்பு, ரஸ்தாவின் முன்னால் நோக்கினான். இன்னும் நான்கு பங்களாக்களுடன் ரஸ்தா முடிவு பெற்றது. ஒரு கால் மோட்டார் இவைகளில் ஒன்றுக்குத்தான் போகுமோ? எதற்கும் கடைசி பங்களா வரை நடந்துவிட்டுத் திரும்பலாம் என்று சாம்பு மெல்ல

நடந்தான். அவன் செய்த ஊகம் முற்றும் சரியாக இருந்தது. கடைசிப் பங்களாவின் வெளியே மோட்டார் நின்றது! வாசலில் ஒரு போலீஸ்காரன் காவல் நின்றான். சாம்பு உள்ளே நுழைய முயன்ற போது அவன் தடுத்து, 'யாரையா நீ?' என்று அதட்டினான்.

சாம்பு பதில் சொல்லுவதற்குள், இரண்டு போலீஸ்காரர்கள் பக்கத்திலிருந்த குரோடென்ஸ் செடிகளைத் தாண்டிக்கொண்டு அங்கே பிரவேசித்தார்கள். அவர்களுக்கிடையில் அகப்பட்டுக் கொண்டு பைத்தியக்காரன்போல் தோற்றம் அளித்த ஒருவன் திருட்டு விழி விழித்துக்கொண்டிருந்தான்.

'ஏன் ஐயா என்னை பிடிச்சு இளுக்கிறே?' என்றான் அவன்.

'சும்மா வரமாட்டே! கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லு, போதும்!' என்றான் அந்த இருவரில் ஒருவன். அவன் ஹெட் கான்ஸ்டபிளாயிருக்க வேண்டுமென்று சாம்பு ஊகித்தான்.

'ஒஹ்ஹோ! நீ கேட்டதுக்கு நான் பதில் சொல்லணுமோ? நீ என்னை என்ன கேட்கப் போறே, பார்க்கலாம்!' என்றான் அந்த ஆள்.

'மூடு வாயை! உன் பேர் என்ன?'

'வாயை மூடிக்கிட்டு எப்படிச் சொல்றது? சரி. பளனின்னு வச்சுக்க. அதுக்காவ என்னைத் தூக்கிலே போட்டுடுவியா?'

'எங்கேயிருந்து இங்கே வந்தே?'

'நான் பொறந்த ஊரு மரக்காணம். அங்கேயிருந்து சைதாப் பேட்டையிலே அத்தை ஊட்டுக்கு வந்து வளந்தேன்.'

'ஏய்! கேட்டதுக்குப் பதில் சொல்லு! இங்கே எதற்காக இந்த வேலைக்கு வந்தே?'

'தெரியலையா? உன் கையிலே மாட்டிக்கிட்டுச் சாவறதுக்குத்தான்!'

'முட்டாள்! இங்கே என்ன வேலையடா உனக்கு?'

'அதுவா? இந்த ஊட்டு எசமான் வரச் சொன்னாரு, வந்தேன்.'

'என்னத்துக்கு வரச் சொன்னாரு?'

'அவரைத்தான் கேட்டுக்கோயேன். நான் சொன்னாத்தான் நீங்க நம்ப மாட்டீங்களே!'

சாம்பு சிரித்து, 'பெரிய பைத்தியங்குளிபோலன்னா இருக்கு!' என்றான். ஹெட்கான்ஸ்டபிள் சாம்புவை இப்போது கவனித்து, 'நீ யாரையா?' என்று கேட்டான் அதிகாரமாக.

கையை நீட்டிக்கொண்டு போய் அந்தப் போலீஸ் அதிகாரியின் கரத்தைப் பற்றிச் சாம்பு குலுக்கினான். 'என்னைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். நான்தான் பிரசித்தி பெற்ற சாம்பு. போலீஸுக்கு எத்தனையோ உதவிகள் செய்திருக்கிறேன். உங்கள் இலாகாவில் என்னைத் தெரியாத பேர் சொற்பம்!' என்றான்.

'உம்!' என்று ஹெட்கான்ஸ்டபிள் மற்ற இரு சகபாடிகளையும் குறிப்பாகப் பார்த்தான்.

சாம்பு தொடர்ந்து, 'நான் வந்துகொண்டிருந்தபோது உங்கள் காரைப் பார்த்தேன். ஏதோ கேஸ் விஷயமாகத்தான் வருகிறீர்கள் என்று உடனே ஊகித்துவிட்டேன். நான் வந்ததும் சரியாகப் போய்விட்டது. உங்களுக்கு எந்த உதவி செய்யவும் சித்தமா யிருக்கிறேன்!' என்றான். சட்டைப் பையிலிருந்த ஒரு விஸிட்டிங் கார்டையும் சேர்த்து நீட்டினான்.

அவன் பேசிக்கொண்டிருந்தபோது, கான்ஸ்டபிள்களுக்குள் ஒரு விதச் சமிக்ஞை பாஷை நடமாடியதைச் சாம்பு கவனிக்கவில்லை.

ஹெட்கான்ஸ்டபிளினுடைய பேச்சும் தீர்மானமுந்தான் அங்கிருந்த மற்ற இருவரிடமும் சென்றன. அவன் ஒரு முடிவுக்கு வந்தவன்போல், 'வாருங்கள் மிஸ்டர் சாம்பு! உங்களுக்கு இங்கே ஒரு கேஸ் இருக்குமென்று எங்களுக்குத் தோன்றவில்லை. இருந் தாலும், நீங்கள் தரும் உதவியை வேண்டாமென்று சொல்லவும் எனக்கு இஷ்டம் இல்லை. இந்த ஆசாமியும்கூட வரட்டும்! இவன்மேல் எனக்குச் சந்தேகம் இருக்கிறது.' என்றான். வாசலில் காவலுக்கு நின்ற போலீஸ்காரன் அங்கேயே நிற்க, சாம்புவும் பைத்தியக்காரனும் முன்னால் செல்ல, அவர்களைப் பின் தொடர்ந்து இரு போலீஸ்காரர்களும் உள்ளே சென்றார்கள்.

சாம்புவும் மற்றவர்களும் பங்களாவுக்குள் சென்றபோது, அங்கே ஏற்கெனவே ஒருவர் போலீஸ் உடை தரித்து உட்கார்ந்திருந்தார். அவர் சப் இன்ஸ்பெக்டராயிருக்கலாம் என்று சாம்பு ஊகித்தான். புதிதாக இவரைத் தன் சகபாடிகள் கூட்டி வருவதைக் கண்டதும்,

அவர் கண்களை மலங்க விழித்தார். ஹெட்கான்ஸ்டபிள் அவரிடம், 'இவர் பெரிய துப்பறிபவராம்! பெயர் சாம்பு என்கிறார். நமக்கு ஒத்தாசைக்கு வந்திருக்கிறாராம். இந்தப் பேர்வழியைத் தோட்டத்திலே கண்டுபிடிச்சேன். இங்கே வேலை செய்ய வந்திருக்கிறானாம்!' என்றான்.

அவர் தலையை ஆட்டி, கடைக்கண்ணால் இருவரையும் ஒருமுறை பார்த்துக்கொண்டார்.

சாம்புவுக்கு அந்தப் பங்களாவில் என்ன விசேஷம் என்று தெரிந்து கொள்வதில் சிரமம் அதிகம் ஏற்படவில்லை. அன்றைக்கு முதல்நாள் வரையில் அந்தப் பங்களாவில் யாரோ ஒருவர் குடி இருந்திருக்கிறார். அவருடைய நடவடிக்கைகள் போலீஸா ருக்குத் திருப்தி அளிக்கவில்லை. அவரைப் பார்க்க வந்த நபர் களும் கஜப் போக்கிரிகள். திடீரென்று முதல் நாள் இரவு நான்கு பேர் அவரைப் பார்க்க வந்தார்கள். வந்த காரணம் என்னவென்று தெரியாது. பங்களாவில் அவரையும் ஒரு வேலையாளையும் தவிர வேறு யாருமே இல்லையாகையால் என்ன நடந்ததென்ப தும் யாருக்கும் தெரியாது. வேலையாள் பகல் வேளையில் மட்டுந்தான் பங்களாவில் தங்குவான். இன்று காலை அவன் வந்து பார்த்தபோது அந்த வீட்டுக்காரரைக் காணவில்லை. அவர் எங்கே போனார், வந்த நான்கு நபர்கள் அவரை என்ன செய்தார் கள், எங்கே சென்றார்கள் என்ற ஒரு விவரமும் தெரியவில்லை.

பங்களாவில் வைத்தது வைத்தபடி இருக்கின்றன. அவரும் வீட்டைவிட்டு வெளியே சென்றவரில்லையாதலால், அவரைப் பார்த்தவர்கள் யாரும் இல்லை. வேலைக்காரனை விசாரித்ததில் அவன் ஒன்றும் தெரியாதென்று கை விரிக்கிறான். போலீஸா ருக்குத் தகவல் கிட்டியதும் வீட்டில் காவல் போட்டார்கள். இரவு அங்கே தங்கி, நான்கு நபர்கள் திரும்புகிறார்களா என்று காத்திருந்து பார்ப்பதற்கே இந்தப் போலீஸ்காரர்கள் இங்கே வந்திருக்கிறார்கள்.

பங்களாவின் தோட்டத்தில் ஒருவன் ஒளிந்திருந்ததைக் கண்டு தான் ஹெட்கான்ஸ்டபிள் கண்டுபிடித்து இழுத்து வந்திருக் கிறான். அவன் அங்கே எப்படி நுழைந்தான் என்பது அவர்க ளுக்குத் தெரியாது. அவனைப் பார்த்தால் பைத்தியக்காரன் மாதிரி தான் இருந்தான். அவனை மேலும் சப்-இன்ஸ்பெக்டர் கேள்விகள் கேட்டதற்கு அவன் விசித்திரமான பதில்கள்தான் கொடுத்தான்.

'இந்த வீட்டு எஜமானை எப்போ பார்த்தே?' என்று கேட்டதற்கு, 'அவர் சாவுறதுக்கு முந்திதான்!' என்றான் அவன்.

'உனக்கு அவர் செத்த சமாசாரம் எப்படித் தெரியும்?'

'அவர் இருக்கிற சமாசாரம் உங்களுக்குத் தெரியுமா?' என்றான் அவன்.

'நீ கொல்லவில்லையே அவரை?'

'இல்லிங்களே!'

'நிச்சயந்தானா?'

'உங்களுக்கு நம்பகமில்லாட்டி இப்படித்தான் வச்சிக்கிங்க. அவருகூடப் பேசிக்கிட்டேயிருந்தேன். அவர் மூஞ்சி எனக்குப் பிடிக்கல்லே. அப்படியே தலையை வெட்டிப் போட்டுட்டேன். சரிதானே? என்னைத் தூக்கிலே போடுங்க!' என்றான். போலீஸ் காரர்களுக்குச் சிரிப்புதான் வந்தது.

'நீ இங்கே நுழையறதை யாரும் பார்க்கலையா?'

'இல்லிங்களே! அதனால்தானே நான் நுளைஞ்சேன்!'

'அடிமுட்டாள்! அடிமுட்டாள்!'

'யாருங்க?'

மறுபடி போலீஸ்காரர்கள் சிரித்தார்கள். 'சரி! இவன் முழுப் பைத்தியம். இவனை யாராவது கவனிக்க வேண்டியதுதான்! ஏ 93! இவன் கூடவே இரு!' என்று இன்ஸ்பெக்டர் உத்தரவு கொடுத் தார். பிறகு அவர்கள் அறை அறையாகப் பரிசோதனைக்கு ஆரம்பித்தார்கள். சாம்புவை அவர்கள் கவனித்ததாகவோ, அதிகம் லட்சியம் செய்ததாகவோ தெரியவில்லை. அவன் வராந்தாவில் சுற்றிச் சுற்றி வந்தான்.

சாம்புவின் மனத்தில் ஒருவிதமான தயக்கம் ஏற்பட்டிருந்தது. 'இவ்வளவு போலீஸ்காரர்கள் - எத்தனையோ வருஷம் அனுபவம் பெற்றவர்கள் - செய்யும் சூட்சுமமான ஆராய்ச்சியைவிட நாம் என்ன செய்துவிடப் போகிறோம்! முதலில் நமக்கு என்ன தெரியும்?'

பங்களாவின் அறைகளில் அவனுக்குப் புதிதாக ஒன்றும் தெரிய வில்லை. உக்கிராணத்தில் அடுப்புக்குள் நிறைய காகிதச் சாம்பல்

இறைந்து கிடந்தது. காகிதச் சாம்பலை வைத்துக்கொண்டு என்ன ஆராய்ச்சியைச் செய்வது? சாம்பு ஏதாவது சொல்வான் என்று எதிர்பார்ப்பவர்கள் போல் சப்-இன்ஸ்பெக்டரும், ஹெட்கான்ஸ் டபிளும் அவனை அடிக்கடி பார்த்துவிட்டுப் போனார்கள். சாம்புவுக்குச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. 'நீங்கள் கவனியுங் கள்! நீங்கள் கவனியுங்கள்!' என்று சொல்லிக்கொண்டு வந்தான்.

சாம்புவின் சந்தேகம் பைத்தியக்காரன்போல் பேசிய அந்த ஆசாமியிடம் விழுந்தது. அவனுடைய பேச்சிலும் நடத்தையி லும் அவனுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. அதுவும் இந்தப் போலீஸ்காரர்கள், சந்தேகத்துக்கிடமான சந்தர்ப்பத்தில் பிடித்து இருக்கும்போது அவன்மீது குற்றம் இல்லாமல் இருக்குமா? பங்களாவில் கவனிப்பதற்கு ஒன்றுமில்லை என்று சாம்புவுக்குப் பட்டதும், அந்தப் பேர்வழியையாவது கவனிக்கலாம் என்று திருஷ்டியை அவன் இருந்த திசையில் செலுத்தினான். அவன் அப்போது கான்ஸ்டபிள் 93 பின்தொடர வராந்தாவிலிருந்து இறங்கி, தோட்டத்தில் நடந்து கொண்டிருந்தான். ஏதோ அவன் பேசப் பேச, கான்ஸ்டபிள் பதில் கொடுத்துக்கொண்டே போனான். அவர்கள் கூப்பிடு தூரத்தைத் தாண்டிச் சென்றிருப்பார்கள். சாம்பு உட்கார்ந்து கொண்டு கவனித்தான். அஸ்தமித்து நேரமாகிவிட்ட தால், சாம்பு உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து இருவரும் செல்வது மங்கலாகத்தான் தெரிந்தது. ஒரு செடி மறைவை அவர்கள் நெருங்கும்போது சாம்பு திடுக்கிட்டான். ஏனென்றால், அந்த மறைவை நோக்கிப் போலீஸ்காரனை மற்றவன் பலாத் காரமாகத் தள்ளிக்கொண்டு போனதாகவே பட்டது! சாம்பு உற்றுக் கவனித்தான். செடி மறைவில் சென்ற இருவரும் ஒரு நிமிஷ நேரம் வெளியில் வரவில்லை. வராந்தாவிலிருந்து சாம்பு குதித்துச் சற்றுத் தூரம் ஓடிச் சென்று பார்த்தான். அவன் கண்ட காட்சி அவன் ஹிருதயத்தையே நிற்கச் செய்தது.

போலீஸ்காரனைக் கீழே தள்ளி, பைத்தியக்காரன் மேலே ஏறி உட்கார்ந்து, சாம்புவின் கண் முன்னாலேயே அவனைக் கயிற் றால் வரிந்து கொண்டிருந்தான்!

சாம்பு யோசித்தான். பங்களாவில் இருக்கும் இரு போலீஸ்காரர் களுக்கும் தகவலைத் தெரிவித்தாக வேண்டும். தெரிவித்து என்ன பயன்? முண்டனாயிருக்கும் எதிரி இரண்டு பேரையுங்கூட அடித்துப் போட்டுவிடுவான்! அவர்கள் இருவரையும் காப்பாற் றும் பொறுப்பு அவனுடையதாயிற்று. அதற்கு லகுவான வழி,

அவர்களை ஓர் அறையில் பத்திரமாகப் பூட்டிவிட்டு, ஓட்டமாக ஓடி வாசலில் நின்ற மூன்றாவது போலீஸ்காரனையும் அழைத்து வருவதுதான் என்று அவன் புத்தியில் உதயமாயிற்று. யோசித்துக் கொண்டும் விவரித்துக் கொண்டும் நிற்கப் பொழுதில்லை! சாம்பு பங்களாவுக்குள் வந்தபோது சந்தர்ப்பம் சரியாக இருந்தது. சப்-இன்ஸ்பெக்டரும் ஹெட்டும் ஏதோ பேச்சில் ஆழ்ந்து ஓர் அறையின் நடுவில் நின்றுகொண்டிருந்தார்கள். சட்டென்று சாம்பு அந்த அறைக் கதவை இழுத்து வெளியில் தாழ்ப்பாள் போட்டுவிட்டான்! அதைப் பூட்டுவது எப்படி என்ற கவலை அதன் பிறகுதான் சாம்புவுக்கு ஏற்பட்டது.

அப்போது சாம்புவுக்கு வேறொரு திகிலும் பற்றிக்கொண்டது. ஒரு போலீஸ்காரனைப் 'பங்கீடு' செய்துவிட்டு, அந்தப் பைத்தியக் காரன் சாம்புவை நோக்கி ஓடி வந்துகொண்டிருந்தான். சாம்பு கதவைத் தாழ்ப்பாள் போட்டிருப்பதைக் கவனித்ததும் ஏனோ திரும்பி, அவன் வாசலை நோக்கி ஓடத் தொடங்கினான்.

பங்களாவுக்கும் வாசலுக்கும் சுமார் ஐம்பது கஜமாவது இருக்கும். உள்ளே நடப்பதொன்றையும் அறியாமல் காவல் நிற்கும் போலீஸ்காரனைத் தாக்கவே அவன் ஓடுகிறான் என்று சாம்புவுக்குப் பளிச்சென்று தோன்றியது. அவனை எச்சரித்து, காப்பாற்ற வேண்டுமென்ற ஆவலுடன் சாம்புவும் வாசலை நோக்கிக் குறுக்கு வழியாக ஓடலானான். அதிகமாக ஓடிப் பழக்க மில்லாதவனாகையாலும், தேகத்தில் ஏற்பட்ட பதற்றத்தினா லும் இருட்டில் மண்ணிலும் கல்லிலும் சென்றதாலும் பத்தடி செல்வதற்குள் காலில் ஒரு கல் இடறவே, சாம்பு கீழே சாய்ந்துவிட்டான். அடுத்த நிமிஷம் நினைவு அவனைக் கைவிட்டது.

•

சாம்பு மெத்தையில் படுத்திருந்தான். அவன் மனக் கண்முன் அவன் செய்ததெல்லாம் வந்தது. கண் விழிப்போமா வேண் டாமா என்று யோசனை செய்தான். 'போலீஸ்காரர்கள் இருவரை வைத்துப் பூட்டியது எவ்வளவு பெரிய குற்றம்? ஒரு போலீஸ் காரன் தாக்கப்பட்டதைப் பார்த்ததும் உடனே தெரிவிக்காததும் ஒரு பிசகு அல்லவா? ஒன்று, சட்ட விரோதமான காரியம். ஒன்று, மனசாட்சிக்கு விரோதமான காரியம்.'

சாம்பு, கண்ணைச் சற்றே திறந்து பார்த்தான். படுக்கையைச் சுற்றிப் போலீஸ் உடையில் பத்துபேர் நின்று கொண்டிருந் தார்கள். சாம்புவுக்குப் பகீரென்றது. அவர்கள் பேச்சைச் சிறிது கவனிக்கலாமென்று பொறுமையுடன் காத்திருந்து பார்த்தான். அப்போது இன்ஸ்பெக்டர் கோபாலனின் குரல் கணீரென்று கேட்டது.

'இந்த ரங்கூன் ரங்கன் பெரிய அயோக்கியன். இவனுக்கு நாலு கூட்டாளிகள். ரங்கூனில் முதன்முதலாகக் குண்டு போட்ட அன்று இந்த ஐந்து பேருமாக ஒரு பேங்கி முதலாளி வீட்டைக் கொள்ளையடித்தார்கள். அன்றே ரங்கூனை விட்டு நழுவியும் விட்டார்கள். ஐந்து பேருமாகச் சேர்ந்து போனால் அகப்பட்டுக் கொள்வது சாத்தியமாகுமென்று, கொள்ளை அடித்த எல்லாப் பணத்தையும் ரங்கனிடம் கொடுத்து, நம்பிக்கையாக முன்னால் அனுப்பினார்கள். ரங்கன் திருடர்களிலும் திருடன்! தன் கூட்டாளி கள் வாயிலும் மண்ணைப் போட எண்ணி, இந்தப் பங்களாவில் வந்து மறைந்துகொண்டான்.

'அவன் கூட்டாளிகள் நாலு பேரும் சாமான்ய ஆசாமிகள் இல்லை. எறும்பு நுழையாத இடமெல்லாம் நுழைந்து புறப்படு பவர்கள். அவர்களுக்கும் ரங்கனைக் கண்டுபிடிக்க மாதம் எட்டு பிடித்திருக்கிறது. நேற்றிரவு நாலு பேருமாக வந்து கொள்ளை யில் தங்கள் பங்கைக் கேட்டிருக்கிறார்கள். ரங்கன் மறுத்திருக் கிறான். இவர்கள் அவன் வாயில் துணியைத் திணித்து, ஓர் அறையில் போட்டு அடைத்து இருக்கிறார்கள். காலையில் வேலைக்காரன் வந்ததும் அவனுக்கும் அதே கதிதான்! பிறகு வீடெல்லாம் தேடிப் பார்த்திருக்கிறார்கள். பணம் ஒளித்திருக்கு மிடம் தெரியவில்லை.

'பகல் வேளையில் தேடுவதைவிட இரவில் தேடுவது சிலாக்கிய மென்றும், போலீஸ்காரர்களின் உடையணிந்து வந்தால் இன்னும் தைரியமாக, பிறர் சந்தேகத்தைக் கிளப்பாமல் தேடலாமென்றும் வந்திருக்கிறார்கள். இன்று பகல் பூராவும் இவர்களில் ஒருவன் காவல் இருந்திருக்கிறான். நம்ம சங்கரன் பைத்தியக்காரன்போல் அவன் அறியாதபடி பங்களா நந்தவனத் தில் புகுந்துவிட்டான். ஆனால், மாலையில் மூன்று பேரும் வந்த வுடன் அவர்கள் கண்களில் படாமல் இருக்க முடியவில்லை. அசந்தர்ப்பமாகச் சாம்புவும் அப்போது வந்துவிட்டார். இவர்களை வெளியே விட்டுவிட்டால், தங்கள் விஷயம்

வெளியே பரவிவிடுமென்று இந்தப் பேர்வழிகள் உள்ளே அழைத்துச் சென்றிருக்கிறார்கள். இவர்கள் சற்று அஜாக்கிரதை யாகயிருந்தால், மண்டையை 'டணார்' என்று உடைத்துப் போட்டிருப்பார்கள். என்ன, சங்கரன்!' என்று நிறுத்தினார்.

சங்கரனை, சாம்புவுக்கு நன்றாகத் தெரியும். சி.ஐ.டி. இலாகா வில் சங்கரன் அசகாய சூரனாயிற்றே!

'அவனா அந்தப் பைத்தியக்காரன் மாதிரி இருந்தவன்! அடை யாளமே தெரியவில்லையே!' என்று எண்ணிச் சாம்பு வியந்து கொண்டான்.

சங்கரன் இன்ஸ்பெக்டருக்குப் பதில் சொல்லி, 'நான்தான் இந்தப் பயல்களைக் கவனித்துக்கொண்டே வருகிறேனே! ஆனால், இன்று சாம்புவின் உதவி இல்லாவிட்டால் இந்தக் கேஸை இவ்வளவு திருப்திகரமாக முடித்திருக்கவே முடியாது. அவர் முதன்முதலில் இந்த அயோக்கியப் பயல்களிடம் விஸிட்டிங் கார்டை ஒன்றும் அறியாதவர்போல் கொடுத்ததைப் பார்த்திருக்க வேண்டுமே! எனக்குச் சிரிப்புப் பொத்துக்கொண்டு வந்து விடும்போல் இருந்தது. சிரமப்பட்டு அடக்கிக்கொண்டேன். அந்தப் பயல்களே இவரை நம்பிவிட்டார்கள் என்றால்! மிஸ்டர் சாம்பு என்னை அடையாளம் கண்டுகொண்டதைத் துளி காண் பித்துக்கொள்ள வேண்டுமே! அந்தப் பயல்களுக்கு அனுகூலமா யிருப்பது போலவே இருந்தது. சமயத்திலே கதவைத் தாழ்ப்பாள் போட்டாரே! ஆஹா! எலியைப் பொறியால் பிடிக்கிறார் போல் அல்லவா லகுவாகப் பிடித்துவிட்டார்!'

'சாம்பு சார், சாம்பு சார்! கண்ணை விழித்துப் பாருங்கள்!' என்றார் இன்ஸ்பெக்டர் கோபாலன் அன்பு நிறைந்த குரலில்.

'ஆல் ரைட், இன்ஸ்பெக்டர்! இப்போ என்னைத் தொந்தரவு செய்யாதேங்கோ! நான் செத்துப்போய் அரைமணி ஆகி விட்டது!' என்றான் சாம்பு.

11

தலைக்கு வந்தது

சாம்பு எத்தனையோ பெரிய பெரிய திருடர் களுடனும் முரடர்களுடனும் பழகியிருக் கிறான். அவர்களைப் பற்றி அவனிடம் இப்போது விசாரித்தால், சும்மா நாக்கை நீட்டி வெகு அலட்சியமாகத்தான் பதில் சொல்லுவான். ஆனால், யாராவது மிஸ் அருந்ததி என்ற பெயரை அவன் முன்னிலை யில் சொல்லிவிட்டால் போதும்; அவன் உடம்பு ஒருமுறை குலுக்கிப்போடும். 'அடே அப்பா! எமகாதகியாச்சே அவள்! என்பான். பல்லைக் கடித்துக்கொண்டு கஞ்சனூர் ஜமீன்தாரை உடனே ஒருமுறை திட்டுவான்.

எதிர்பாராத ஒரு சம்பவம், அவனைக் கஞ்சனூர் ஜமீன்தாரை நெருங்கி அவருடைய ஆத்மார்த்தமான விஷயங்களைக் கேட்க வைத்தது. ஒரு மிடுக்கான மோட்டார் டிரைவர் ஒருநாள் சாம்புவிடம் வந்து, 'சாம்பு எங்கே இருக்கிறார்?' என்று கேட்டான். 'நான்தான் சாம்பு. என்ன சமாசாரம்?' என்று சாம்பு திருப்பிக் கேட்டான். 'என்ன ஐயா விளையாடு கிறே? சாம்பு ஐயா பேரு ஊரெல்லாம் பிரபலமாயிருக்குது! உன் மாதிரியாயிருப்பார்

அவரு?' என்றான் அவன். சாம்பு எவ்வளவோ வற்புறுத்தி, தான் சாம்புதான் என்று தெரிவித்துக்கொண்ட பிறகு, அவனை அந்த டிரைவர் கஞ்சனூர் ஜமீன்தார் அவசரமாகப் பார்க்க விரும்புவதாகச் சொல்லி, சென்னையில் அவர் மாளிகைக்கு அழைத்துக் கொண்டு போனான்.

ஜமீன்தார் அங்குமிங்கும் கூண்டில் அடைபட்ட புலி போல் உறுமிக்கொண்டு உலாத்திக்கொண்டிருந்தார். கடித்துக் கடித்து அவர் கட்டை விரல்களில் நகம் இருந்த சுவடே தெரியாமல் போயிருந்தது. சாம்புவைப் பார்த்தவுடன், 'நீ யாரையா! எங்கே வந்தே? போ வெளியே! ஏ டிரைவர்! சாம்புவைக் கூட்டிக் கொண்டு வரச்சொன்னால் யாரோ பைத்தியக்காரனைக் கூட்டி வந்தாயா? ஹூம்!' என்றார்.

சாம்பு, அவர் குரலைக் கேட்டு நடுங்கிவிட்டான். ஆனால் ஒருவாறு தைரியத்தை வருவித்துக்கொண்டு, 'டிரைவரைக் கோபிக்க வேண்டாம்; நான்தான் துப்பறியும் சாம்பு! ஹிஹி!' என்றான்.

'ஹூம்! அப்படி உட்காரும்!' என்றார் ஜமீன்தார் ஒரு சோபாவைக் காண்பித்து. தன்னைப் பைத்தியக்காரன் என்று குறிப்பிட்ட ஜமீன்தார் மன்னிப்புக் கேட்டுக்கொள்வார் என்று எதிர்பார்த்த சாம்பு ஏமாற்றம் அடைந்தான். என்றாலும், 'இதுதான் பெரிய மனிதர்கள் சுபாவம்' என்ற தக்ஷணமே அவரை மன்னித்தான். சாம்பு உட்கார்ந்த பிறகும் சிறிது நேரம் ஜமீன்தார் மேலும் கீழும் நடந்துவிட்டு, சட்டென்று அவன் பக்கத்தில் கிடந்த ஒரு சோபாவில் வந்து உட்கார்ந்தார்.

'சாம்பு! அந்தரங்கமான ஒரு விஷயத்தை உம்மிடம் ஒப்படைக்கிறேன். எனக்கு அதைத் திருப்திகரமாக முடித்துத் தருவீரா?' என்றார் இடி போன்ற குரலில்.

'என்னால் முடிந்தவரையில்!' என்றான் சாம்பு தயக்கத்துடன்.

'இதுதான் வேண்டாமென்கிறது! முடியும், முடியாது என்று சொல்ல முடியாமல் என்ன ஆசாமி ஐயா நீர்!' என்று கத்தினார் ஜமீன்தார்.

விஷயத்தைச் சொல்லாமல், எருமை மாட்டைத் தண்ணீரில் போட்டுக்கொண்டு விலை பேசுவதுபோல், இப்படிக் கேட்டால்

அவரு?' என்றான் அவன். சாம்பு எவ்வளவோ வற்புறுத்தி, தான் சாம்புதான் என்று தெரிவித்துக்கொண்ட பிறகு, அவனை அந்த டிரைவர் கஞ்சனூர் ஜமீன்தார் அவசரமாகப் பார்க்க விரும்புவதாகச் சொல்லி, சென்னையில் அவர் மாளிகைக்கு அழைத்துக் கொண்டு போனான்.

ஜமீன்தார் அங்குமிங்கும் கூண்டில் அடைபட்ட புலி போல் உறுமிக்கொண்டு உலாத்திக்கொண்டிருந்தார். கடித்துக் கடித்து அவர் கட்டை விரல்களில் நகம் இருந்த சுவடே தெரியாமல் போயிருந்தது. சாம்புவைப் பார்த்தவுடன், 'நீ யாரையா! எங்கே வந்தே? போ வெளியே! ஏ டிரைவர்! சாம்புவைக் கூட்டிக் கொண்டு வரச்சொன்னால் யாரோ பைத்தியக்காரனைக் கூட்டி வந்தாயா? ஹூம்!' என்றார்.

சாம்பு, அவர் குரலைக் கேட்டு நடுங்கிவிட்டான். ஆனால் ஒருவாறு தைரியத்தை வருவித்துக்கொண்டு, 'டிரைவரைக் கோபிக்க வேண்டாம்; நான்தான் துப்பறியும் சாம்பு! ஹிஹி!' என்றான்.

'ஹூம்! அப்படி உட்காரும்!' என்றார் ஜமீன்தார் ஒரு சோபாவைக் காண்பித்து. தன்னைப் பைத்தியக்காரன் என்று குறிப்பிட்ட ஜமீன்தார் மன்னிப்புக் கேட்டுக்கொள்வார் என்று எதிர்பார்த்த சாம்பு ஏமாற்றம் அடைந்தான். என்றாலும், 'இதுதான் பெரிய மனிதர்கள் சுபாவம்' என்ற தக்ஷணமே அவரை மன்னித்தான். சாம்பு உட்கார்ந்த பிறகும் சிறிது நேரம் ஜமீன்தார் மேலும் கீழும் நடந்துவிட்டு, சட்டென்று அவன் பக்கத்தில் கிடந்த ஒரு சோபாவில் வந்து உட்கார்ந்தார்.

'சாம்பு! அந்தரங்கமான ஒரு விஷயத்தை உம்மிடம் ஒப்படைக்கிறேன். எனக்கு அதைத் திருப்திகரமாக முடித்துத் தருவீரா?' என்றார் இடி போன்ற குரலில்.

'என்னால் முடிந்தவரையில்!' என்றான் சாம்பு தயக்கத்துடன்.

'இதுதான் வேண்டாமென்கிறது! முடியும், முடியாது என்று சொல்ல முடியாமல் என்ன ஆசாமி ஐயா நீர்!' என்று கத்தினார் ஜமீன்தார்.

விஷயத்தைச் சொல்லாமல், எருமை மாட்டைத் தண்ணீரில் போட்டுக்கொண்டு விலை பேசுவதுபோல், இப்படிக் கேட்டால்

'வெளியில் திடீரென்று மோட்டார் நின்றுபோய் விட்டது, உள்ளே நுழைந்தேன்!' என்றான் சாம்பு, சற்றுத் திடம் வந்ததும்.

'இங்கே வந்தவுடன்தான் என்ன சொல்லலாமென்று யோசித்தீர் களாக்கும்?' என்றாள் அருந்ததி. சாம்பு திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான். அவள் மேலும், 'இந்த மாதிரி இந்த மழைக் காலத்தில் மோட்டார் நிற்பது சகஜந்தான். என்ன சொல்வதென்று தோன்றாமல் போகிறதும் வழக்கம்தான்!' என்றாள்.

சாம்புவுக்கு, தான் வந்த காரியம் ஞாபகம் வந்தது. இவ்வளவு அழகான பெண்ணை அவன் ஏமாற்றப் போகிறான்! இது என்ன தொழில்? அவனுக்கு மனசே வரவில்லை. அறையில் ஒரு கண்ணோட்டம் விட்டு, 'ஸ்டூடியோ மாதிரி இருக்கிறது அலங் காரமெல்லாம்!' என்றான்.

'என்னைப் பார்த்தால் ஸ்டார் மாதிரி இருக்காக்கும்!' என்று, வெள்ளி மணிகள் ஓசை செய்வதுபோல் நகைத்தாள் அந்தப் பெண்.

சாம்பு, தன் ஜரிகைக் குல்லாவைக் கழற்றி கோட் ஸ்டாண்டில் மாட்டினான். பிறகு அருந்ததியைப் பார்த்து, 'ஆட்சேபம் என்ன? உன் மாதிரி ஒரு பெண் நடித்தால் திவ்யமாகத்தான் இருக்கும்!' என்றான்.

'எனக்கெல்லாம் நடிப்பு வருமா?' என்று நாணிக்கொண்டாள் காரிகை.

சாம்புவுக்கு, பொழுதைப் போக்கிக் கொண்டிருப்பதில் இஷ்டம் இல்லை. அவன் கண்கள் அந்த ஹாலில் இருந்த பீரோப் பக்கம் சென்றன. ஒருகால் தேடிவந்த கடிதம் அங்கிருக்குமோ?

அதென்ன ஆச்சரியம்! அருந்ததி அந்தப் பீரோவை உடனே திறந்தாள், சொல்லி வைத்தாற்போல்! அது காலியாக இருந்தது!

ஒருகால் வேறு அறைகளில் எதிலாவது இருக்குமோ? எப்படிப் போய்ப் பார்ப்பது?

அப்போது அருந்ததி, 'ஸ்வாமி! நீங்கள்தான் காத்திருக்கீங்க! உங்க மோட்டார் வரத்தான் நாழி பிடிக்கும்போல் இருக்கிறது. நம்ம வீட்டைச் சுற்றிப் பார்க்கிறீங்களா?' என்று கேட்டாள்.

இதென்ன இக்ஷிணி வேலையா? சாம்பு மனத்தில் நினைத்ததெல் லாம் நடக்கிறதே! அருந்ததி முன்செல்ல, சாம்பு அறை அறையாகப் பார்த்துக்கொண்டு வந்தான். இரண்டொரு வேலைக் காரர்கள் ஆங்காங்கே கண்ணில் பட்டார்கள். 'அருந்ததிக்குத்தான் என்ன கபடமற்ற மனம்?' என்று சாம்பு எண்ணினான்.

அருந்ததி ஒவ்வோர் அறைக்குள் சென்றதும், பீரோக்களையும் பெட்டிகளையும் திறந்து திறந்து காண்பித்தாள். 'இது மைசூரில் வாங்கினேன், இது திருவனந்தபுரம் வேலைப்பாடு!' என்று காண்பித்தாள். உள் அறையில் இருந்த ஓர் இரும்புப் பெட்டியைக்கூடத் திறந்துவிட்டாள். சாம்புவுக்கு எல்லாம் ஆச்சரியமாக இருந்தது. 'நாம் வந்த காரியம் இப்படி லகுவா கிறதே! இவளிடம் ஒளிவு மறைவே இல்லாமல் இருக்கிறதே! ஜமீன்தாரிடம் போய், கடிதம் அவளிடம் இல்லை! நான் அங்கே பார்க்காத பெட்டி பேழை கிடையாது என்று சொல்லிவிட வேண்டியதுதான்!' என்று தீர்மானித்தான்.

அருந்ததி, அவனைக் கூர்ந்து கவனித்தாள். 'ஸ்வாமி நல்லா பார்த்தீங்களா? நம் வீடெல்லாம் எப்படி?'

'ரொம்ப நன்னாயிருக்கிறது! ரொம்ப திருப்தியாயிருக்கிறது!' என்றான் சாம்பு.

'உங்கள் முகத்தைப் பாத்தால் திருப்திக் குறைவு இருக்கிறாற் போல் எனக்குப் படுகிறது!' என்றாள் அவள் ஒரு குலுக்கலுடன்.

சாம்பு, அங்கேயே ஒரு சோபாவில் உட்கார்ந்து கொண்டான். 'முன்பின் தெரியாத எனக்கு, இந்த ராத்திரி வேளையில் சற்று தங்க நீ இடம் கொடுத்தது எவ்வளவோ பெரிய உபகாரம்! ரொம்ப நாள் பழகின மாதிரி அவ்வளவு நன்றாகப் பேசுகிறாய்!' என்றான்.

'அதை விட்டுத் தள்ளுங்க! நீங்க பெரியவங்க! ஏழைவீடு தேடி வந்தது எவ்வளவு பெரிசு?'

சாம்புவுக்கு இந்தப் பதில் சப்பென்று பட்டது.

'வேணும்னுதானே வந்திருக்கீங்க! அதனாலேதானே நானும் உங்களுக்கு வீடு பூராவும் காட்டினேன்!' என்றாள் தொடர்ந்து.

அவள் முகத்தில் ஒரு குறும்புப் புன்னகை தவழ்ந்து கொண்டு இருந்தது. 'உங்களுக்குச் சிரமம் கொடுத்து, உங்களையே தேட விட்டா, எவ்வளவு கஷ்டம்?' என்றாள்.

'என்னது! எனக்குப் புரியவில்லையே!' என்றான் சாம்பு.

'என்னங்க நீங்க! என்னை நடிக்கச் சொல்லிச் சிபாரிசு பண்ணி னீங்க! எனக்கு மேலே நீங்க நடிக்கிறீங்களே! உங்க மூஞ்சி எனக்குத் தெரியாதா?'

'என்ன? என்ன?' சாம்புவுக்குப் பகீரென்றது.

'ஜமீன்தார் ஐயா அனுப்பிச்ச சாம்பு இல்லிங்களா நீங்க? உங்களுக்குத் தொந்தரை கொடுக்கப்படாதுன்னுதானே நானாகவே எல்லாம் திறந்து திறந்து இத்தனை நேரம் காட்டினேன்! நீங்க, இப்போ ஐயா கொடுத்த பணத்தை இப்படிக் கொடுத்துடுங்க!' என்று சொல்லிக்கொண்டு நாசூக்காக எதிரில் நின்றாள்.

ஒரு விநாடி சாம்பு மீண்டும் பேச்சு மூச்சற்றுப் போனான். ஒரு பெண்பிள்ளை - இவ்வளவு பிரசித்தி பெற்ற ஒரு துப்பறிபவனை - எவ்வளவு எளிதில் மடக்கிவிட்டாள் என்று சாம்பு உட்கார்ந் திருந்தான். 'சீ! இவளை ஒரே தள்ளாகத் தள்ளிவிட்டு ஓட எத்தனை நேரம் பிடிக்கும்? இவளிடம் வந்த காரியத்தையும் தோற்றுவிட்டு, பணத்தையும் பறிகொடுத்துவிட்டுப் போவதா?' என்று எண்ணினான். ஆனால் ஓடுவதும் அவ்வளவு எளிதாக இல்லை. வாசற்படியில் மீசையை முறுக்கிக்கொண்டு ஓர் ஆள் நின்றான். அவனைக் கவனித்த சாம்பு, மறுபேச்சின்றிப் பணத்தை எண்ணிவைக்க முடிவு செய்தான்.

ஆபத்தான சமயத்தில்தான் சாம்புவுக்கு புது யோசனைகள் தோன்றும். பணத்தை எடுத்துக்கொடுத்துவிட்ட மாத்திரத்தில், தான் வெளியேற அவள் அனுமதிப்பாளா என்ற திகில் அவன் மனத்தைப் பற்றிக்கொண்டது. உடனே, சாம்பு ஒரு காரியம் செய்தான். பக்கத்தில் ஸ்டாண்டில் ஜரிகைத் தொப்பி மாட்டி யிருந்தது. அதை விட்டுச் சென்றால், நாளைக்கு அதுவே ஜமீன் தாருக்கு எதிராக ருசு ஆகலாம் அல்லவா? குபீரென்று கிளம்பி, இடது கரத்தால் அந்தக் குல்லாவைப் பற்றினான். மறுகணம், அந்த ஆளை ஒரே தள்ளாகத் தள்ளிக்கொண்டு அறைக்கு வெளியே வந்துவிட்டான்.

அங்கிருந்து மூன்றாவது நிமிஷம் வீட்டு வாசலுக்கு வந்தான். அப்புறம் சந்துகள் வழியே, தெருக்கள் வழியே ஓடினான். டிராம்கள் நின்றுவிட்டன; ரிக்ஷாக்காரர்கள் விழித்துப் பார்த்தார் கள். சாம்பு நிற்கவில்லை. அதாவது, அவனது கால்கள் நிற்க வில்லை. சுமார் ஒரு மைல் ஓடியிருப்போம் என்று நினைத்து நின்று, திரும்பிப் பார்த்தான். அவனை யாரும் துரத்தி வந்ததாகத் தெரியவில்லை.

'என்ன அவமானம்! என்ன அவமானம்! ஒரு பெண் பிள்ளையிடம் பிரபல துப்பறிபவன் அவமானப்படுவதா?' சாம்புவுக்கு நினைக்க நினைக்க ஆத்திரம் மூண்டது. 'அருந்ததி சும்மா விட மாட்டாள். நம்மை அவமானப்படுத்த, போலீஸில் அறிவிக்க லாம். அந்த ஜரிகைக் குல்லாயே அவனைக் காட்டிக் கொடுக்கும். போதும் ஜமீன்தார் விவகாரம்! அவன் எக்கேடோ கெட்டுப் போகட்டும்! இந்தக் குல்லாவை, திரும்ப ஜமீன்தாரிடம் சேர்ப்பித்துவிட்டுக் கையைக் கழுவிக்கொள்ள வேண்டும், - உடனே!' என்று நினைத்தான்.

அப்போது தப்பித் தவறி, ஒரு பஸ் அந்தப் பக்கம் வந்தது. 'ஹோல்டான்! ஹோல்டான்!' என்று கத்தினான். அது பஸ் நிற்குமிடமில்லையானாலும், டிரைவர் வண்டியைச் சற்று மெது வாக ஓட்டவே, சாம்பு ஓடிப்போய்த் தொற்றிக் கொண்டான்.

•

ஆஞ்சநேயன்பேட்டையைப் பஸ் அடைந்ததும் சாம்பு இறங்கி, நேரே கஞ்சனூர் ஜமீன்தாரின் பங்களாவை நோக்கி நடந்தான். கதவு சார்த்தப்படும் சமயம். 'ஜமீன்தார் ஐயா படுக்கப் போகிறார்!' என்றான் வேலையாள்.

'கூப்பிடு ஐயாவை!' என்றான் சாம்பு. ஐயாவே, மாடிப்பக்கம் போனவர் சாம்புவை உள்ளே அழைத்துப் போனார்.

சாம்பு தனியாக ஜமீன்தாரைக் கண்டதும், 'இந்தாரும் உம்ம குல்லா!' என்று அதை நீட்டினான்.

'என்ன? விஷயம், காயா பழமா?' என்றார் ஜமீன்தார்.

'இந்தக் குல்லாவை முதலில் பிடியுங்கள்!' என்றான் சாம்பு.

'கேட்டதற்குப் பதில் சொல்லாமல்?'

'இதுதான் அதற்குப் பதில்! நான் போய் வருகிறேன். இனிமேல் அவள் வீட்டில் கால் வைக்கமாட்டேன்.'

'என்ன உளறுகிறீர்? கடுதாசி எங்கே, ஐயா?'

குல்லாயை உங்களிடம் கொடுத்தாகி விட்டதென்றால், கடுதாசிக்கும் நமக்கும் சம்பந்தமில்லை என்றுதான் அர்த்தம்! நான் வருகிறேன்!' என்று திரும்பி, சாம்பு நாலு அடி நடந்திருப்பான்.

'இதென்ன பித்துக்குளித்தனமாயிருக்கிறது! இந்தக் குல்லாயை யார் கேட்டது உம்மை?' என்று அதை இரு கையாலும் பற்றி ஆத்திரத்துடன் இழுத்துக்கொண்டு, ஜமீன்தார் அவன் பின்னால் சென்றார். அப்போது ஓர் ஆச்சரியம் நடந்தது. குல்லாயில் 'டக் டக்' கென்று நாலைந்து புதிய தையல்கள் விட்டுக்கொண்டன. அதனால் ஏற்பட்ட சந்தின் வழியாக ஒரு காகிதம் துருத்திக் கொண்டிருந்தது. ஜமீன்தார் அவசர அவசரமாக அதை இழுத்துப் பிரித்தார். ஒரே பார்வையில் தமது கடிதந்தான் என்று தெரிந்து கொண்டார். சந்தோஷம் தாங்காமல் சாம்புவின் பின்னால் பாய்ந்துசென்று அவனைப் பின்புறமாகத் தழுவிக்கொண்டார்.

கட்டி, கீழே தள்ளி உதைக்கத்தான் அவர் அப்படிச் செய்கிறார் என்று நினைத்த சாம்பு திமிறிக்கொண்டு, 'இப்போது விடுகிறீரா, என்னை! விட்டுவிடும்! ஆமாம், சொல்கிறேன்!' என்று கத்தினான்.

12

வேஷம் பலித்தது!

சாம்புவின் வாழ்க்கையில் மீண்டும் ஒரு முறை ஒரு நீண்ட ஓய்வு ஏற்பட்டது. பத்திரிகைகளெல்லாம் அவனுக்குச் சப்பென்று ரஸமற்றுப் போயின. எவனாவது தற்கொலை செய்துகொண்டாலும்கூட, தான் ஏன் அப்படிச் செய்யத் துணிந்தேன் என்று ஒரு காகிதத்தில் எழுதி வைத்துவிட்டுத்தான் செய்துகொண்டான்! எங்கேயாவது கொலை என்றால், கொலையாளி கையும் பிடியுமாக அகப்பட்டுக் கொண்டான். ஏன், நல்ல திருட்டாகக் கூட ஒன்றும் நடக்கவில்லை என்றால்! 'சீ! இதென்ன முட்டாள் உலகம்!' என்று சாம்புவுக்கு அப்போது தோன்ற ஆரம்பித்ததில் ஆச்சரியம் என்ன?

சாம்புவின் மனம் வேறு உபயோகமான காரியங்களில் திரும்பியது. துப்பறியும் தொழிலுக்கு அவசியமான மாறுவேஷங்களைப் போட்டுப் பார்த்துக்கொள்ளத் தொடங்கினான். ஒரு பத்துப் புது பீரோ வாங்கினான். அதில் பலவித வர்ணங்கள், விதவிதமான மீசைகள், தாடிகள், தலைப்பாக்கள் ஆகியவை இடம்பெற்றன. சாம்பு, நிலைக்கண்ணாடியின் முன்பு உட்கார்ந்து



அந்த வர்ணங்களைப் பூசிக் கொண்டும், உடைகளை அணிந்து கொண்டும் எவ்வளவு தூரம் அவை பொருத்தமாக இருக்கின்றன என்று பார்த்துக் கொள்வான்.

அவன் வீட்டில் பால் கொடுக்கும் ஒருத்தி ஒருநாள் அகஸ்மாத்தாக உள்ளே நுழைந்து, சாம்புவின் வேஷங்களில் ஒன்றைப் பார்த்துவிட்டு அலறிக்கொண்டு ஓடி, அதே பயத்தில் ஜுரமாகப் படுத்துக்கொண்டு விட்டாள். அன்று முதலாக, அவன் வேஷம் போட்டுப் பார்த்துக்கொள்வதை நிறுத்திக் கொண்டான். ஆப்த நண்பர்களாகக் கிடைக்கும்போது, அவர்களுக்குப் போட்டுப் பார்ப்பதென்று முடிவு செய்தான்.

இப்போதெல்லாம் சாம்பு பலருடன் நெருங்கிப் பழகவும் பேசவும் ஆரம்பித்தான். ஆனால், மற்றவர்கள் சாம்புவுடன் பேசத் தயாராக இல்லை. அதற்குக் காரணம், அவனிடம் அவர்கள் வைத்திருந்த பக்தியும் மதிப்புந்தான்.

முன்பு சாம்புவை ஜனங்கள் முட்டாள் என்று ஒதுக்கி வைத்தார்கள்; இப்போதோ அவர்கள் அவன் அதிமேதாவி என்று அவனிடம் நெருங்குவதற்குத் தயங்கினார்கள். அன்றும் இன்றும் என்றும் சாம்புவுக்குக் கிடைத்தது ஏகாந்தந்தான்.

ஒருநாள் தினசரிப் பத்திரிகையை வைத்துக்கொண்டு சாம்பு 'கோபால பவனில் உட்கார்ந்து காபி சாப்பிட்டுக் கொண்டிருந்தான். 'இரண்டாவது வகுப்பு வண்டியில் இரண்டாயிரம் களவு போயிற்று!' என்ற செய்தி பிரசுரமாகி இருந்ததைச் சாம்பு கவனித்துப் படித்தான்.

'நேற்று இரவு திருச்சி எக்ஸ்பிரஸில் இரண்டாவது வகுப்பில் ராவ்சாகிப் முருகேசம் பிள்ளை பிரயாணம் செய்யும்போது, அவருடைய பெட்டியிலிருந்து ரூபாய் இரண்டாயிரம் களவு போயிருக்கிறது. ராவ்சாகிப் முருகேசம் பிள்ளையுடன் பிரயாணம் செய்த ஒரு செட்டியார்தான் அதை எடுத்திருக்க வேண்டுமென்பதில் சந்தேகம் இல்லை. திருச்சியில் ரயிலேறிய செட்டியார் எங்கே இறங்கினார் என்பதை யாரும் கவனித்ததாகத் தெரியவில்லை. அவர் விட்டுப் போன ஒரு கைப்பெட்டியிலிருந்து, போட்டோ ஒன்று கிடைத்திருக்கிறது. போலீசார் புலன் விசாரித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

'இது ஒரு கேஸ்!' என்று சாம்பு நினைத்தான். மறுகணம், 'இது நமக்கு ஏற்ற கேஸ் இல்லை!' என்று அதைக் கைவிட்டான்.

'ஏதோ போட்டோவாம்! அதை வைத்துக்கொண்டு திருடனைக் கண்டுபிடிப்பதாம்! வேடிக்கைதான்! அந்தக் கெட்டிக்கார இன்ஸ்பெக்டர் கோபாலன் கண்டுபிடிக்கட்டுமே இந்தத் திருட்டை!' என்று சிரித்துக்கொண்டான். இந்த நினைவுகளி லிருந்து சாம்பு சட்டென்று கலைக்கப்பட்டான்.

'சார்!' என்று பக்கத்தில் ஒரு குரல் கேட்டது. யாரோ ஒரு புதிய மனிதர் அவனுக்குப் பக்கத்து நாற்காலியில் வந்து உட்கார்ந்தார். 'பத்திரிகையில் என்ன விசேஷம்?' என்று கேட்டார் அந்த ஆசாமி.

சாம்பு திரும்பிப் பார்த்தான். 'என்ன சமாசாரமா? ஒன்றையும் காணோம்! யாரோ திருடிக்கொண்டு போனானாம். இங்கே போலீஸ்காரர்கள் அவன் போட்டோவை வைத்துக்கொண்டு அவனைத் தேடிப் பிடிக்கப் போகிறார்களாம்! எப்படி இருக்கிறது?'

சாம்புவிடம் பேசிய மனிதருக்கு நடுத்தர வயதிருக்கும். பார்வைக்குக் கண்ணியமாகத் தோன்றினார். மழமழவென்று கூவரம் செய்துகொண்ட முகம்; ஸில்க் சொக்காய்; அரையில் ஜரிகைக்கரை வேஷ்டி. இதற்குமுன் சாம்புவுக்கு அவரைப் பார்த்ததாக நினைவில்லை.

சாம்புவின் வார்த்தைகளைக் கேட்டதும் அவர் சிரித்தார். 'நீங்கள் சொல்வது வாஸ்தவமான வார்த்தை. பெட்டியைப் பறி கொடுத்துவிட்டு, சாவியை வைத்துக்கொண்டிருக்கிற மாதிரி தான் இருக்கிறது இந்தச் சமாசாரம். போட்டோவே கையில் இருக்கிறதென்று வைத்துக்கொள்ளுங்கள்; திருடின ஆளும் பக்கத்திலேயே இருக்கிறான். கண்டுபிடித்துவிடுவது லகுவென் கிறீர்களா?' என்றார் அவர்.

'ரொம்ப சரி, நீங்கள் சொல்வது!'

'அந்த மாதிரி ஆள், அந்த மாதிரியே டிரஸ் செய்துகொண்டு போட்டோவுக்கு நிற்கிறாற்போல் நின்றால், ஒருகால் முடிய லாம். அதுவும் 'ஒருகால்' தான்!'

'ரொம்ப ரைட்!' என்று ஒப்புக்கொண்டான் சாம்பு. ஆனாலும் உண்மையில் சாம்புவுக்கு அவர் சொல்லிய வார்த்தைகளில் அவ்வளவு நம்பிக்கை இல்லை.

அந்த மனிதர் சாம்புவுடன் பேச்சுக் கொடுத்தார். 'என் பெயர் குமரவேல் என்பார்கள். எனக்கு நாகப்பட்டணம். இன்று காலையிலேதான் பட்டணத்துக்கு வந்தேன், ஒரு பிசினஸ்ஸாக' என்றார் அவர் தம்மைப் பற்றி.

'ரொம்ப சந்தோஷம்! என்ன பிசினஸ்ஸோ?' என்று கேட்டான் சாம்பு.

'ஏதாவது செய்தாகவேண்டி இருக்கிறது, பாருங்கள்! அதுவும் இந்த யுத்த காலம், புத்திசாலிகளுக்குச் சரியான காலம்! முட்டாள் கள்தான் இப்போது சம்பாதிக்காமல் உட்கார்ந்து கொண்டிருப் பார்கள்!' என்றார் அவர்.

சாம்புவுக்குச் 'சுருக்'கென்றது. சாம்பு மூன்று மாதமாக ஒன்றும் செய்யாமல் சும்மா அல்லவா உட்கார்ந்திருக்கிறான்? அப்படி யானால் அவன் முட்டாள்தானா?

அவர் மேலும் சொன்னார்: 'பாருங்கள்! கையில் சின்ன முதல் இருந்தால்கூட இரண்டே மாதத்தில் அதைப் பத்து மடங்காக்கி விடலாம். இப்போது நான் ஐந்நூறு ரூபாயில் வியாபாரம் ஆரம்பித்துவிட்டால், மூன்று தினங்களில் அதை இரண்டாயிர மாக்கிக் காண்பிப்பேன். அதற்கு நான் வீட்டை விட்டு அசையக் கூட வேண்டியதில்லை.'

'அதெப்படி?' என்றான் சாம்பு. அவன் கையில் சேர்ந்திருந்த ஆயிரத்தைந்நூறு ரூபாய்க்கு தலையை அப்போதே 'முணுக் முணுக்'கென்று வலிக்க ஆரம்பித்துவிட்டது.

'எப்படியா? இன்று ஐந்நூறு ரூபாய்க்கு ஒரு பண்டத்தை வாங்குவேன். அது என்ன பண்டம் என்பது வியாபாரத்தில் அடிபட்ட எனக்குத்தான் தெரியும். அதை வைத்துக்கொண்டே இருப்பேன். அதன் விலை மளமளவென்று ஏறும். என் சரக்குக்குக் கிராக்கி, என் வீட்டைத் தேடிக்கொண்டு வரும். லாபம் பைசா வுக்குப் பைசாதான்!' என்றார் அவர்.

சாம்புவின் நாக்கில் ஜலம் ஊறிற்று. 'இதென்ன துப்பறியும் தொழில்! உயிருக்கு ஆபத்தான காரியங்களைச் செய்தும் எங்கே அதற்குத் தகுந்த ஊதியம் கிடைக்கிறது! பெருமை, கியாதி எல்லாம் காசாகுமா?' என்று தனக்குள் எண்ணிக்கொண்டான்.

'நீங்கள் இன்னும் எத்தனை நாள் இந்த ஊரில் தங்குவீர்கள்?' என்று கேட்டான் சாம்பு.

'அதை ஏன் கேட்கிறீர்கள்?'

'சும்மாதான் கேட்டேன். இங்கே உங்களைச் சந்திக்கலாமோ என்பதற்குத்தான் கேட்டேன்.'

'நான் ஒரு வாரம் அல்லது பத்து நாள் இருப்பேன். என் பிசினஸ் முடிகிறமட்டும் இருந்துவிட்டுத்தான் போவேன்.'

'சரி, அப்புறம் பார்ப்போம்!' என்று சாம்பு எழுந்தான். எழுந்திருக்கும்போது ஹோட்டலில் இரண்டு பேருக்கும் கொடுத்திருந்த பில்களை அவனே எடுத்துக்கொண்டு கிளம்பினான். 'ஸாரி! ஸாரி! நீங்கள் கொடுக்கக் கூடாது! நான்தான் கொடுப்பேன்!' என்று குமரவேல், சாம்புவைத் துரத்திக்கொண்டு போய் ஹோட்டல் முதலாளியிடம் நீட்டினார். சாம்பு சிரித்து, 'பலே கைகாரராக இருக்கிறீரே!' என்றான்.

அன்று சாம்புவுக்கும் குமரவேலுவுக்கும் ஏற்பட்ட சிநேகிதம் நாளுக்கு நாள் முற்றியது. சாம்பு, தான் ஒரு துப்பறிபவன் என்று குமரவேலுக்குச் சொல்லிக்கொள்ளவே இல்லை. அவரும் சாம்புவை என்ன தொழில் என்று கேட்கவில்லை. கையில் ரொக்கமுள்ள ஓர் உல்லாசப் பேர்வழி என்றுதான் மதித்தார்.

தினம் காலையில் ஏழாவது மணிக்குத் தவறாமல், சாம்புவும் குமரவேலுவும் சேர்ந்தாற்போல் காபி அருந்தினார்கள். இரண்டாம் வேளை டிபனுக்கும் அநேகமாக அவர்கள் சந்தித்துக் கொள்வதுண்டு. சாம்பு புத்திசாலித்தனமாக நடந்துகொண்டான். மெல்ல மெல்லத்தான் அவன் தனது காரியத்தை வெளியிட்டுக் கொண்டான். அதை வெளியிடும்போது, குமரவேலுவும் சாம்புவும் ஆப்த நண்பர்களாகி நகமும் சதையும்போல் ஆகிவிட்டனர்.

குமரவேல் சாம்புவின் வீட்டுக்கு வருவதும் மணிக்கணக்காக அளவளாவிக் கொண்டிருப்பதும் சகஜமாயின. இவர்கள் பேச்சும் சிரிப்பும் முழங்கிய முழக்கத்தில் தங்கள் தூக்கம் கெட்டுப் போவதாகக்கூடப் பக்கத்து வீட்டுக்காரர்கள் சொல்லிக் கொண்டார்கள். குமரவேல் தாராளமாகச் செலவு செய்தார். அவருடைய வியாபாரம் திருப்திகரமாக இருப்பதாகவும் எதிர்பார்த்த அளவுக்கு மேல் லாபம் கிடைப்பதாகவும் வெளியிட்டார். சாம்புவிடம்

அவர் காட்டிய அன்பை, உடன்பிறந்த சகோதரனிடமும் எதிர்பார்க்க முடியாது.

ஒருநாள் அந்யோந்யமாகப் பேசிக்கொண்டிருந்தபோது, 'என் கையிலே பணம் கொஞ்சம் தேக்கமாயிருக்கிறது. அதை உங்கள் மூலமாகக் கொஞ்சம் விருத்தி செய்யலாம் என்று பார்க்கிறேன்!' என்று சாம்பு மெல்ல வெளியிட்டான்.

'நானே உங்களிடம் சொல்லலாமென்றிருந்தேன். எனக்குக்கூட ஒரு பிசினஸ்ஸில் இரண்டாயிரம் ரூபாய்வரை அநாமத்தாக வேண்டி இருக்கிறது. உங்களைக் கேட்கலாமா வேண்டாமா என்று நினைத்தேன். என்றைக்கும் என் பிசினஸ்ஸில் போட்ட முதலுக்கு அழிவு கிடையாது. பலித்ததோ அதை ஆறாயிரமாகத்தான் காண்பீர்கள்!' என்றார்.

'நான் ரெடி! இதோ தருகிறேன் ஒரு செக்!' என்று சாம்பு துள்ளி எழுந்தான். உடனே ஆயிரம் ரூபாய் கைமேல் கிடைத்துவிட்டதாகவே அவன் மனம் ஆனந்தித்தது.

அப்போது குமரவேல் சாம்புவின் வீட்டு ஹாலில் உட்கார்ந்திருந்தார். இரவு மணி எட்டு அடித்திருக்கும். சாம்பு எழுந்து சென்று பீரோவைத் திறந்தான். குமரவேலுவும் பின் தொடர்ந்தார். அந்தப் பீரோவுக்குள்தான் எத்தனையோ விதமான உடைகளும், மாறுவேஷத்துக்கு வேண்டிய பொருள்களும் வைத்து நிரப்பி இருந்தான் சாம்பு.

'இதெல்லாம் என்ன ஓய்?' என்று கேட்டார் குமரவேல்.

சாம்பு, இப்போது தன் தொழில் என்னவென்று வெளியிட வேண்டியிருக்குமோ என்று பயந்தான். ஒரு யோசனை பளிச் சென்று தோன்றியது. உடனே, 'எனக்கு நாடகம் என்றால் ஒரு காலத்தில் ஒரே பைத்தியம்! எத்தனையோ வேஷங்கள் போட்டிருக்கிறேன். அந்த உடைகள்தான் வைத்திருக்கிறேன்!' என்றான்.

சொன்னதோடு நில்லாமல் பீரோவுக்குள்ளிருந்த ஒரு பெரிய ஜரிகை முண்டாசை அவர் தலையில் வைத்து அழுத்தினான். ஒரு டிராயரிலிருந்து ஒரு பொய் மீசையை எடுத்து, குமரவேல் மூக்குக்கு அடியில் வைத்தான். அது ஸ்பிரிங் மீசையாதலால், கப்பென்று பிடித்துக்கொண்டது. சாம்பு, ஒரு பட்டை ஜரிகை

அங்கவஸ்திரத்தை எடுத்து அவர் மேலே வீசி மார்புக்கு முன்பாக அலங்காரமாக நீட்டினான். பிறகு அவர் எதிரில் நின்றுகொண்டு, 'சார்! உம்மை இப்போது பார்த்தால் எப்படி இருக்கிறது தெரியுமோல்லியோ! அசல் மாப்பிள்ளைதான்! ஊர்வலத்துக்குத் தயார்தான்! நம்ம கோபாலன் பார்த்தால் உம்மைக் கொண்டே போய்விடுவார்' என்றான்.

'அது யார் கோபாலன்?'

'நம்ம இன்ஸ்பெக்டர் கோபாலன்தான். அடேடே! கொஞ்ச நாளாக அவர் வரவே இல்லையே! நீங்கள் வந்த பிறகு அவரை நான் அடியோடு மறந்துவிட்டேன்! நான் பார்க்கவில்லை என்று கூடக் கோபித்துக்கொண்டு இருப்பார். சொல்லியனுப்பி, உங்களை அறிமுகம் செய்து வைக்கணும்.'

'அதெல்லாம் வேண்டாம் சாம்பு சார், எனக்குப் புது சிநேகம்!' என்றார் குமரவேல்.

'கோபாலனை நீங்கள் என்னமோ என்று நினைத்துவிட்டீர்கள்! உங்களைக் கண்டால் அவர் விடவே மாட்டார்!' என்றான் சாம்பு.

அந்த க்ஷணம் சொல்லி வைத்தாற்போல் வாசற் கதவைத் திறந்துகொண்டு அந்த இன்ஸ்பெக்டர் கோபாலனே நுழைந்தார். ஒரே விநாடியில் ஒரே பார்வையில் சாம்புவையும் அவன் முன்பு நின்ற குமரவேலையும் பார்த்தார். அவருக்குப் பளிச்சென்று என்னமோ தோன்றியது. சட்டென்று தமது சட்டைப் பையில் கையை விட்டு ஒரு போட்டோவை எடுத்து, குமரவேலையும் போட்டோவையும் மாறி மாறிப் பார்க்கத் தொடங்கினார்.

'நீங்கள் வந்துவிடுவீர்கள் என்று இப்போது நினைத்தேன். உடனே வந்துவிட்டீர்கள். இல்லாவிட்டால், இவரை உங்களிடம் நானே அழைத்து வருவதாக இருந்தேன்!' என்றான் சாம்பு.

'சரி, பார்த்துவிட்டேன்! இனி இவர் வேஷத்தைக் கலைத்து விட்டு என்னோடு அனுப்புங்கள், சாம்பு!' என்றார் கோபாலன். பிறகு குமரவேல் பக்கம் திரும்பி, 'என்ன சார்! மரியாதையா நடக்கிறீங்களா? இல்லை, போலீஸ் மரியாதையோட ஊர்கோலமாகத்தான் வரீங்களா?' என்றார் இன்ஸ்பெக்டர் இடி போன்ற குரலில்.

சாம்புவுக்குப் பகீரென்றது. 'இதென்ன விபரீதம்!' என்று வாயடைத்துப் போய் நின்றான்.

'மிஸ்டர் சாம்பு! இந்த உதவிக்குப் போலீஸ் இலாகாவே உமக்குக் கடமைப்பட்டிருக்கிறது! இந்த ஆளை ஊர் பூராவும் சல்லடை போட்டுச் சலித்தாகி விட்டது.. ரயிலில் மாறுவேஷத்தில் முருகேசம் பிள்ளையைக் கொள்ளை அடித்துவிட்டு, வேண்டுமென்றே இதே வேஷத்தில் ஒரு போட்டோவையும் வைத்துவிட்டு, இவன் தப்பித்துக்கொண்டு விட்டான். வேஷத்தைக் கலைத்து இங்கே ஹாய்யாக இருக்கலாம் என்று நினைத்தான். இங்கே 'துப்பறியும் சாம்பு' இருப்பது இந்த முட்டாளுக்குத் தெரியாது! நீங்கள், இவன் ரயிலில் கொள்ளை அடிப்பதற்குப் போட்டுக்கொண்ட அதே வேஷத்தைப் போட்டுக் காட்டி, என்னிடம் பிடித்துக் கொடுத்திருக்கிறீர்கள். மிஸ்டர் சாம்பு! நீர் மட்டும் இந்த வேஷம் இவனுக்குப் போட்டுக் காண்பிக்காமல் 'இவன்தான் குற்றவாளி' என்று பிடித்துக் கொடுத்திருந்தால்கூட, நான் நிச்சயமாக நம்பியிருக்க மாட்டேன்!' என்றார் கோபாலன்.

சாம்பு திணறிப் போனான். அவன் மூளை குழம்பியது! ஒன்றும் தெளிவாகத் தெரியவில்லை. 'அன்று பேப்பரில் பார்த்தேன் - ரயிலில் ஒருவரைக் கொள்ளையடித்துவிட்டு ஒருவன் போட்டோவை விட்டுவிட்டுப் போனான் என்று...' சாம்பு ஏதோ சொல்ல ஆரம்பித்தான்.

கோபாலன் குறுக்கிட்டு, 'ஆமாம். இவன் போட்டோவை விட்டுச் சென்றதற்குக் காரணமே நம்மைத் திகைக்க வைப்பதுதான்! பணத்தைப் பறிகொடுத்தவரும், போலீஸாரும் முண்டாசும் மீசையும் வைத்த ஆளைத் தேடிக்கொண்டிருக்கும்போது, இவன் ஜோராக வேறு எங்கேயாவது புது பிசினஸ் செய்வதற்குச் சௌகரியமாயிருக்குமல்லவா? உங்களை இந்தக் கேஸில் சிரமப்படுத்தக் கூடாதென்று எனக்கு எண்ணம். எவ்வளவோ முயன்று பார்த்தும் இவனைப் பிடிக்க முடியவில்லை. கடைசியில் உங்களைத்தான் தொந்தரவு செய்ய வேண்டும் என்று ஏற்பட்டே இங்கே வந்தேன். இங்கே என்னடாவென்றால், நான் சொல்வதற்கு முன்பு நீர் ஆசாமிக்கு மீசையும் முண்டாசும் வைத்துப் பழைய வேஷத்திலேயே அவனை ஆஜர்ப்படுத்துகிறீர்!' என்றார்.

சாம்பு மௌனம் சாதித்தான். மௌனம் ஸர்வார்த்த ஸாதகம் என்று பெரியோர் சும்மாவா சொல்லி இருக்கிறார்கள்!

குமரவேல் சாம்புவை வாயாரத் திட்டினான். 'படுபாவி! கடைசிவரையில் ஏமாற்றினானே! நான் அவனுக்கு வேஷம் போட்டுக்கொண்டிருந்ததாக எண்ணியிருந்தபோதெல்லாம், அவன் அல்லவா எனக்கு வேஷம் போட்டுக்கொண்டிருக்கிறான்! அவன் அசட்டு மூஞ்சியில் இடி விழ!' என்றான்.

ஆனால், சாம்புவைப் போலீஸ் இலாகாவையும்விட அதிகம் போற்றியவர் ஒருவர் இருந்தார். தாம் பறிகொடுத்த பணத்தைத் திரும்பப் பெற்ற ராவ்சாகிப் முருகேசம் பிள்ளைதான் அவர். சாம்புவுக்கு ஒரு வைர மோதிரம் இனாம் தந்தார். அதோடு சாம்புவைப் போல் தத்ரூபமாக ஒரு சிலை தயாரித்து அதையும் அவனுக்கு இனாமாக அளித்தார்!

அதைப் பெற்றுக்கொண்டபோது, சாம்புவின் முகத்திலும், சிலையின் முகத்திலும் ஏக காலத்தில் அசடு வழிந்தது!

13

சிங்கப்பூர் சிங்கம்

பட்டணத்து ஜனங்கள் திடீரென்று ஒருநாள் 'சிங்கப்பூர் சிங்க'த்தைப் பற்றிக் கேள்விப்பட்டார்கள். அவர்களுடன் கூடவே சாம்புவும் கேள்விப்பட்டான். ஆனால், சாதாரண ஜனங்களுக்கும் சாம்புவுக்கும் வித்தியாசம் இல்லையா? சாம்பு அந்த வித்தியாசத்தை நிரூபித்துக்கொள்வதற்காகவே போலும் ஒரு கட்டுரை எழுதினான். கட்டுரையின் அடியில் தன் பெயரைப் போட்டுக்கொள்ளாமல் 'பொடியன்' என்ற புனைப் பெயரைப் போட்டுக்கொண்டான்.

'சிங்கப்பூர் சிங்க'த்தின் வேலைகள் போலீஸ் இலாகாவை எத்தனையோ இடங்களில் திணற அடித்திருக்கின்றன. இத்தனைக்கும் அந்தச் சிங்கத்தினிடம் ஒளிவு மறைவு என்பதே இல்லை! இதோ கொள்ளை அடிக்க வருவேன் என்பான். அதே நேரத்தில் வருவான். தன் காரியத்தைச் சாதித்துக்கொண்டு போவான். அவனைக் குறுக்கிட்ட பேர் மதிகெட்ட பேர்தான்! போலீஸார் ஒவ்வோர் இடத்திலும் அவனைப் பிடிக்க எத்தனையோ முயற்சிகள் செய்து பார்த்தார்கள். கையில்

அகப்படுவது போல் இருப்பான்; சமயத்தில் எப்படியோ கழன்று கொண்டு விடுவான்.

அப்பேர்பட்ட சிங்கப்பூர் சிங்கம் பம்பாயில் கிட்டத்தட்டச் சிக்கிக்கொண்டவன் தப்பித்துக்கொண்டான் என்ற செய்திதான் பத்திரிகைகளில் வெளியாயிற்று. அதனுடன் ஒரு வதந்தியும் கிளம்பியது. சிங்கப்பூர் சிங்கம் பட்டணத்துக்கு வந்திருக்கிறான் என்பதுதான் அந்த வதந்தி.

பட்டணத்து ஜனங்கள் பீதி அடைந்தார்கள் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. போலீஸார் ஜரூர் அடைந்தார்கள். சாம்பு முன் கூறியபடி 'பொடியன்' என்ற புனைப்பெயரில் அந்தக் கட்டுரையை எழுதினான். அவனை போலீஸ் இலாகா உதவி கோரி இருந்தது. அன்று, தான் பம்பாயிலும் இருந்திருந்தால் சிங்கப்பூர் சிங்கம் இன்று பட்டணம் வந்திருக்க மாட்டான்! சர்க்கார் சாப்பாடு சாப்பிட்டுக்கொண்டு, அரசாங்கத்துக்குக் கல் உடைத்துக் கொடுத்துக் கொண்டிருந்திருப்பான் என்று தைரிய மாக எழுதிவிட்டான். பத்திரிகையில் அது வெளியான அன்று, சாம்பு மார்பைப் பார்த்துக்கொண்டு வெளியே உலாவச் சென்றான். சாம்புவின் மனத்தில் பெருமை நிரம்பியிருந்தது.

அஸ்தமித்த பிறகுதான் சாம்பு வீட்டுக்குத் திரும்பினான். உதடுகளைக் குவித்து ஏதோ ஒரு பாட்டை மனம் வந்தவாறு ஊதிக்கொண்டு வீட்டில் நுழைந்தான். அந்த ஊதல் சட்டென்று நின்றது. ஏனென்றால், அறையில் மின்சார விளக்கு அவன் ஏற்று முன்பே ஏற்றப்பட்டது. திகைத்து நின்ற சாம்புவின் பின்புறம் ஓர் ஆள் ஆஜானுபாகுவாக நின்றான். திடீரென்று உடலிலிருந்த ரத்தம் அனைத்தும் சாம்புவின் மண்டைக்கேறியது. வயிற்றில் பளிச்சென்று ஓர் அக்கினி ஜ்வாலை வீசிய உணர்ச்சி ஏற்பட்டது! அந்த ஆளின் கையில் ஒரு கைத் துப்பாக்கியைக் கண்டதும், சாம்பு அலறிக்கொண்டு உள்ளே ஓடலானான்.

'டேய்! நில்!' என்று உத்தரவு கொடுத்தான் அந்த மனிதன்.

சாம்பு, ஒரு சிறு அபிநயக் கச்சேரி செய்து அசையாமல் நின்றான்.

'திரும்பு!' என்று மற்றோர் உத்தரவு பிறந்தது.

சாம்பு திரும்பினான். வாயைத் திறக்கவும் அவனுக்குச் சக்தி இல்லை.

'அடே! என்னைத் தெரியுமா உனக்கு? நான்தான் சிங்கம்! சிங்கப்பூர் சிங்கம்! என்னைப் பிடித்துக் கொடுத்துவிட முடியும் என்று எழுதினாயே! அதற்கு உனக்குத் தைரியம் இருந்தால் ஏண்டா புனைப்பெயரில் எழுதினாய்? ஊம்!'

சாம்புவுக்கு உடம்பு உதற ஆரம்பித்தது. பற்கள் 'வெட வெட வெட' என்று நடுங்கிக் கிட்டின. 'அது ஹிஹிஹி! விளையாட்டுக்கு ஹிஹி!' என்றான். ஆனால் முடிக்கவில்லை!

'எச்சக்கலை நாயே! நீ துப்பா கண்டுபிடிப்பவன்? உன் மூஞ்சியிலேயே துப்புகிறேன், பார்! என்மேலே கை வைக்க உன் முப்பாட்டன் வந்தாலும் முடியாது தெரியுமா?'

'தெரியும்னா. உங்கமேலே.. எனக்கு ரொம்ப... பக்தின்னா!'

'நீ பேசாதே! உன் முட்டாள் மூஞ்சியை இப்போதே நான் சிதற அடித்து விடுவேன். ஆனால், அநாவசியமாக ஒரு நாயையும் நான் கொல்லுவதில்லை. இனி என் குறுக்கே வந்தாயென்று தெரிந்தால், நீ அங்கேயே செத்தாய் தெரியுமா! ஆமாம், அங்கேயே தீர்த்துவிடுவேன்!'

'இது சத்தியம். நான் வரதில்லை. முன்னாலேயே நான் முடிவு செய்துவிட்டேனே அதை!'

'பேசாதே! நான் சொல்வதைக் கேளு. உன் வேலை எனக்குத் தெரியும். நீ முட்டாள். கட்டுரை எழுதினதுகூட ஏதோ தந்திரமாயிருக்கும்னு சொன்னார்கள். இப்போ முட்டாள் வேஷம் போட்டுவிட்டு ஏதாவது விஷமம் செய்தாயோ...' என்று அவன் சொல்லும்போது துப்பாக்கி பயங்கரமாக ஆடியது.

சாம்பு சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்துவிட்டான். 'நீங்கள் இருக்கும் திசை நான் திரும்புவதில்லை!' என்றான்.

'என்னைப்பற்றி என்ன கேள்விப்பட்டாலும், போலீஸுடன் நீ சேர்ந்துகொள்ள மாட்டாயே?'

'இல்லை. இது சத்யம், சத்யம், சத்யம்!'

'தவறினாயோ தீர்ந்தாய்! என் ஆள்கள் என்னைச் சுற்றியிருக்கிறார்கள்! சாம்பு! உன் உசிரை வேம்பாயடித்துக் கொள்ளாதே!'

விளக்கு டக்கென்று அணைக்கப்பட்டது. சாம்பு இரண்டு நிமிஷங்கள் பிரமித்து நின்றான். மறுபடி சாம்பு விளக்கைப்

போட்டுப் பார்த்தபோது அறை காலியாயிருந்தது. கண்ணைச் கசக்கிக்கொண்டான். 'இதெல்லாம் உண்மையாக இருக்குமா? அல்லது கெட்ட சொப்பனமாயிருக்குமா? பித்த உபரியினால் ஏற்பட்ட பிராந்தியாக இருக்குமா? உண்மை! உண்மை! இல்லாவிட்டால் உடம்பு ஏன் இப்படித் துடிக்கிறது? துப்பறியும் தொழிலே! நீ என் உயிருக்கல்லவா உலை வைத்துக்கொண்டிருக்கிறாய்? உன்னை இன்றே ஒழித்துத் தீருவேன்! நாளைக் காலை நான் பெங்களூர் போகிறேன். போலீஸ் இலாகா தேடித் தேடி ஓய்ந்த பிறகு திரும்புவேன்!' என்று முடிவு செய்தான்.

அவன் மனம் அடைந்திருந்த வேதனையில், வாசலில் ஒரு மோட்டார் வண்டி வந்து நின்றதையும் இன்ஸ்பெக்டர் கோபாலன் பக்கத்தில் வந்து நின்றதையும் அவன் கவனிக்கவில்லை.

கோபாலன், சாம்புவின் முதுகைத் தடவிக் கொடுத்தார். 'உம்மால் இன்று ஒரு காரியம் நடக்க வேண்டியிருக்கிறது!' என்றார்.

'நான் பெங்களூர் வரைக்கும் இப்போது ஓடவேண்டியிருக்கிறது!' என்றான் சாம்பு.

'யாராவது கேட்டால் சிரிப்பார்கள்! குளிர்காலத்தில் யாராவது போவார்களா? தவிர, இங்கே உமக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கிறது. இன்றைக்குப் பேப்பர் படித்தீர்களா சாம்பு?' என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

'பேப்பரில் என்ன இருக்கிறது மண்ணாங்கட்டி? அதையும் நான் கொஞ்ச நாள் தொடப்போவதில்லை!'

'நான் சொன்னதைப் புரிந்துகொள்ளாமல் பேசுகிறீர்களே, சாம்பு! யாரோ ஒரு முட்டாள் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறான். அவன் யார் என்று இன்னும் விசாரிக்கவில்லை. அந்த முட்டாள் சொல்கிறான்: சிங்கப்பூர் சிங்கத்தை அவன் பிடித்துவிடுவானாம்! எப்படி இருக்கிறது?'

சாம்புவுக்கு, தன்னை இன்ஸ்பெக்டர் இப்படி மறைமுகமாக முட்டாள் என்றது மிகவும் மனத்தை வருத்தியது. கட்டுரை எழுதியது நான்தான் என்பதை அப்போதே வெளிப்படுத்தி அந்த முட்டாள் பட்டத்தை ஸ்திரப்படுத்திக்கொள்ள சாம்பு விரும்பாததால், பல்லைக் கடித்துக்கொண்டு நின்றான்.

இன்ஸ்பெக்டர் சற்று பரபரப்புடன், 'அதிருக்கட்டும், சாம்பு! இன்று ராத்திரி நீர் போலீஸ் ஆபீஸுக்கு வந்துவிடுங்கள். சிங்கப்பூர் சிங்கம் இங்கே வந்திருக்கிறான் என்று தகவல் கிடைத்திருக்கிறது. சி.ஐ.டி.கள் ஜரூராகச் சல்லடை போட்டு அலசி வருகிறார்கள்.'

'சரி, சந்தோஷம்! அவர்கள் பிடித்து விடுவார்கள்!'

'சேச்சே! அதுபாட்டுக்கு அது! நீர்பாட்டுக்கு நீர்! எழுந்திரும், சொல்கிறேன்!'

சாம்பு அசைந்து கொடுக்கவில்லை. 'நான் வரவில்லை!' என்றான்.

'என்ன விளையாட்டு? உம்! எழுந்திரும்!' என்றார் இன்ஸ்பெக்டர்.

'நான் சொல்லிவிட்டேன்!'

'என்ன சொல்லிவிட்டீர்? நீர் இந்த மாதிரி இருந்ததே கிடையாதே! பயப்படுகிறீரா என்ன!' என்று வினவினார் கோபாலன்.

சாம்புவுக்கு உண்மையில் இன்ஸ்பெக்டர் வந்ததே பிடிக்கவில்லை. சிங்கப்பூர் சிங்கம் இதைத் தவறாக எண்ணிக்கொண்டு, போகிற போக்கில் தன்னை ஏதாவது செய்வானோவென்ற பயம் வேறு பற்றிக்கொண்டது, 'பயப்படுகிறீரா?' என்று கோபாலன் கேட்டபோது, ரோஷம் பற்றிக்கொண்டு வந்தது. 'இன்ஸ்பெக்டர் என்னையா கேட்கிறீர்கள் அந்த வார்த்தை?' என்றான்.

'பின் ஏன் தயங்குகிறீர்?'

'எனக்கு இஷ்டமில்லை, அவ்வளவுதான்! இஷ்டமில்லாவிட்டால் நான் வேலை செய்வதில்லைதான்! நான் யாருக்கும் சேவகன் இல்லை; ஞாபகம் இருக்கட்டும்!' என்றான் வீறாப்பாக.

'ஹூம்!' என்றார் கோபாலன் 'இஷ்டம் இருந்தால்தான் நகருவீராக்கும்'

'நகருவேனா? அந்த சிங்கப்பூர் சிங்கத்தை என் வீட்டு வாசலில் வரவழைத்து உம்மைக்கொண்டு விலங்குமாட்டச் சொல்வேன், தெரிந்ததா? ஆனால், எனக்கு இஷ்டம் இல்லை!'

இதற்குப் பிறகு எவ்வளவோ மன்றாடிப் பார்த்தார் இன்ஸ்பெக்டர். பேச்சு முற்றியது. சாம்புவை இன்ஸ்பெக்டர் திட்டினார். இன்ஸ்பெக்டரை, சாம்பு திட்டினான். 'உம்மை முகாலோபனம் செய்ய மாட்டேன்!' என்றார் கோபாலன். 'நான் துப்பறியும் வேலையையே விட்டுவிடுகிறேன். உம் தயவு எனக்கு வேண்டாம்!' என்றான் சாம்பு. கடைசியில் கோபாலன் கோபமாக வீட்டுக்கு வெளியே வந்தார்.

மோட்டாரில் ஏறுமுன்பு ஒரு யோசனை தோன்றியது. சாம்பு இதற்கு முன்பு இப்படி இருந்ததே இல்லையே! இதில் என்ன மர்மம் இருக்க முடியும்? சாம்பு சொன்ன வார்த்தை : 'இஷ்டமிருந்தால் அந்த சிங்கப்பூர் சிங்கத்தை என் வீட்டு வாசலுக்கு வரவழைப்பேன்!' என்றது நினைவுக்கு வந்தது. 'ஒருகால் அப்படிச் சாம்பு ஏதானும் செய்வானோ? எதற்கும் சாம்புவின் உதவிக்கு இரண்டொரு போலீஸ்காரர்கள் மப்டியில் இருக்கட்டும்!' என்று எண்ணினார். உடனே இரண்டுபேரை வாசலில் காவலுக்கு வைத்துவிட்டு மோட்டாரில் போய் விட்டார்.

•

இன்ஸ்பெக்டர் கோபாலன் சாம்புவின் வீட்டுக்குள் நுழைந்ததை வெளியில் ஓர் ஆசாமி கவனித்துக்கொண்டேயிருந்தான். அவன் உடனே சிட்டாகப் பறந்து சென்று, சிங்கப்பூர் சிங்கத்திடம் தான் கண்டதை உடனே சொன்னான். சிங்கம் தலையை ஆட்டிக் கொண்டான்.

அன்றிரவு அவன் வஞ்சபுரம் ஜமீன்தார் மாளிகையைப் பார்த்திருந்தான். அதை முடித்துக்கொண்டு, பிறகு சாம்புவை முடிக்கலாம் என்று உறுமினான். சாம்புவின் முகம் ஒரு சமயம் சிங்கப்பூர் சிங்கத்துக்குச் சிரிப்பு மூட்டியது. 'என்ன அசடு வழிகிறது! இவன் எங்கே, நாம் எங்கே! என்று எண்ணினான். 'அது வேஷமாயிருக்கலாமோ? உண்மையில் சாம்பு அவ்வளவு அசடுமாதிரி வேஷம் போட்டிருந்தானானால் அவன் எமகாதகனாயல்லவா இருப்பான்?' என்று எண்ணியபோது சிங்கப்பூர் சிங்கத்துக்கே சிறிது திகில் உண்டாயிற்று. இன்ஸ்பெக்டர் கோபாலன் வந்து சாம்புவைப் பார்த்தது அவனை மேலும் கவலைக்குள்ளாக்கியது. ஆனால், அந்தச் சிங்கம் இதற்காகவெல்லாம் வஞ்சபுரம் ஜமீன்தார் மாளிகையை மறக்கவில்லை.

இன்ஸ்பெக்டர் கோபாலன் சாமான்யமான ஆசாமி அல்லவே! சிங்கப்பூர் சிங்கம் ஏற்பாடுகள் அவருக்குச் சிறிது கிடைத்தன. அவைகளைக் கொண்டு வஞ்சபுரம் ஜமீன்தார் வீட்டுக்கு ஆபத்து நெருங்குகிறதென்று கண்டுகொண்டார். சிங்கப்பூர் சிங்கம் ஜமீன்தாரை எழுப்பி இரும்புப் பெட்டிச் சாவிக்காக அதட்டிக் கொண்டிருந்த அதே சமயம், இருபது போலீஸ்காரர்கள் வீட்டைச் சூழ்ந்துகொண்டிருந்தார்கள்.

தனக்கு ஆபத்து நெருங்குகின்றதென்பதை, சிங்கப்பூர் சிங்கம் தெரிந்துகொள்ள வெகுநேரம் பிடிக்கவில்லை. ஜமீன்தார் உடல் வெடவெடவென்று நடுங்க சாவிகளை எடுத்துக் கொண்டிருந்த போது, அவன் ஜன்னல் வழியே கீழே பார்த்தான். போலீஸ் உடையணிந்த ஓர் உருவம் மெல்லச் செடிகளினூடே குனிந்து வருவது தெரிந்துவிட்டது. 'சாம்பு துரோகம் செய்து விட்டான்!' என்று உடனே அவன் மனம் கூறியது.

பம்பாயிலும், டில்லியிலும், கல்கத்தாவிலும் பெரிய பெரிய பேங்கிகளில் அவன் புகுந்தபோதுகூட அவனை மறிப்பார் யாரும் இல்லை. அவன் எங்கே கொள்ளையடிக்கப் போகிறான் என்பது கொள்ளையடித்து முடியும்வரை மர்மமாகவே இருக்கும். இங்கே என்னடாவென்றால், யாரோ நாசமாகப் போகிற சாம்புவினால் முன்கூட்டிப் போலீஸ்காரர்கள் அவனை வளைத்துக்கொள்கிறார்கள் என்றால்! காயம் அடைந்த சிம்மத்தின் கோபம் இந்த சிங்கப்பூர் சிங்கத்துக்கு வந்தது. இப்போது கொள்ளையைக் கைவிட்டுவிட்டு உயிர் பிழைப்பது தான் பெரிது என்று அவன் தெரிந்துகொண்டான். தான் உயிர் பிழைப்பதை விட வேறொரு பெரிய காரியம் இருக்கிறது; சாம்புவை உயிருடன் வைப்பதில்லை!

சிங்கப்பூர் சிங்கம் யாரும் எதிர்பாராத விதமாக ஜன்னல் வழியே குதித்து ஓடினான். அவன் பின்னால் போலீஸ்காரர்கள் சுட்டார்கள். போலீஸ் சைக்கிள் ஒன்றிலேயே சிங்கம் தப்பித்துக் கொண்டு விட்டான்.

•

சாம்புவுக்குத் தூக்கம் வரவில்லை. இன்ஸ்பெக்டர் கோபாலனுடன் எதிர்த்துக்கொண்டது அவனுக்கு மனத்தைப் பெரிதும் புண் செய்தது. 'இனி, கோபாலன் சிநேகம் கிடையாது! அவரால் எவ்வளவு உபயோகம்! எனக்கு வந்த பெருமைகளுக்கு ஆதி காரணம் அவர்தானே?' என்றது ஒரு மனம். மற்றொரு மனம், 'சீச்சி! அவரோடு இப்போது போயிருந்தால் சிங்கப்பூர் சிங்கத்துக்கு இரையாக வேண்டியதுதான். நாம் செய்ததே சரி!' என்று கூறியது. சாம்பு வெளியே எட்டிப் பார்த்தான். அந்தச் சமயம், யாரோ ஒருவன் தெருமுனையில் உலாவி வருவது தெரிந்தது. சுமார் பத்து நிமிஷங்களுக்குப் பிறகு பார்த்தபோது அதே ஆள் வேறுபுறமாக உலாவிக் கொண்டிருந்தான்.

'இவன் யார்?'

சாம்புவுக்குச் சிம்ம சொப்பனமாயிருந்தது. பயத்தால் உடம்பு குலுங்கியது. ஜன்னல் கதவைத் தாழிட்டுகொண்டு படுக்கையில் படுத்தான். அவன் நெஞ்சும் மார்பும் திக்திக்கென்று அடித்துக் கொண்டன. ஒரு மணி நேரம் பொறுத்து மறுபடி பார்த்தான். மறுபடி அதே ஆள்! இப்போது சாம்புவின் வீட்டு வாசலில் அவன் நின்றான்! சாம்புவைக் கொல்லத்தான் காத்திருக்கிறானோ? - அவன் மனம் நடுங்கியது. இன்ஸ்பெக்டர் கோபாலனுடைய ஆள்தான் அவன் என்று சாம்புவுக்கு எப்படித் தெரியும்?

மிகமிக ஆபத்தான சமயங்களில், தலைக்கு மீறி அபாயம் நெருங்கும்போது நெஞ்சில் அசாதாரணமான தைரியம் ஏற்படுவது சகஜம் அல்லவா? சாம்புவுக்கு அதுதான் இப்போது ஏற்பட்டது. அந்த எதிரியை அடித்துப் போடுவது என்பதுதான் அது. ஆனால், எதனால் அடிப்பது?

அறை முழுதும் கண்களை ஓட்டினான். முருகேசம் பிள்ளை கொடுத்திருந்த சாம்புவின் சிலை கீழே கிடந்தது. நல்ல கனமான சாமான். அதைத் தூக்கி ஓங்கி ஒரே அடியாக அடித்து அந்த ஆளை வீழ்த்தினால் என்ன? சாம்பு சிலையைத் தூக்கினான். தனது தலை மட்டத்துக்கு அதை உயர்த்திக்கொண்டு, அடிமேல் அடி வைத்துச்சென்று மெல்ல வாசற்கதவைத் திறந்தான்.

வெளியில் நட்சத்திரங்களின் சிறு வெளிச்சத்தில், அந்த ஆள் பின் கையைக் கட்டிக்கொண்டு சாம்புவைக் கவனிக்காமல் நின்றான். சரியான சமயம்!

சாம்பு, சிலையைத் தலைக்குமேல் தன் முழுப் பலத்தையும் உபயோகித்துத் தூக்கினான். அடுத்த கணம், சிலை அந்த ஆளின் தலையைச் சிதள் சிதளாக அடித்திருக்கும்!

ஒரு சைக்கிள் வேகமாக வந்தது. அதிலிருந்து சிங்கப்பூர் சிங்கம் இறங்கினான். அவன் இடது கையிலிருந்த டார்ச் விளக்கைச் சட்டென்று ஏற்றி, சாம்புவின் முன் பிடித்தான். சிலைமீது வெளிச்சம் பளீரென்றுபட்டது. சாம்புவின் முகத்தைப் போலவே அதிலும் அசடு வழிந்துகொண்டிருந்தது.

சிங்கம் பல்லைக் கடித்தான். வலது கரத்திலிருந்த துப்பாக்கியை உயர்த்திச் சிலையை நோக்கிச் சுட்டான். டுமீல்! டுமீல்! என்று இரு வெடிச் சத்தங்கள் கேட்டன. சாம்பு கையிலிருந்த சிலை கீழே விழுந்தது. சாம்பு அதிர்ச்சி தாங்காமல் கீழே சாய்ந்து, நினைவிழந்தான்.

ஆனால் சிங்கத்தின் பின்னால் ஒரு மோட்டாரிலிருந்து பதினைந்து போலீஸார் இறங்கினார்கள். அவன் கையில் விலங்கை மாட்டி, போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு சென்றார்கள்.

காவல் இருந்த போலீஸ் சேவகன் சொன்னான் : 'நான் வேறு புறம் திரும்பிக் கொண்டிருந்தேன். சிங்கம் என்னைக் கொன்று போட்டே இருப்பான். இந்தச் சாம்பு சார் குறுக்கே சிலையை நீட்டி உயிரைக் காப்பாற்றினார்!' என்றான்.

இன்ஸ்பெக்டர் கோபாலன் அன்று கமிஷ்னரிடம் பேசியபோது, 'சாம்பு முடியாதென்று சொன்னார். வேடிக்கைக்குத்தான் சொல்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. பேச்சுவாக்கில், திருடனை என் வீட்டு வாசலுக்கு வரவழைத்து விலங்கை மாட்டி அனுப்புகிறேன்!' என்றார். அது சாத்தியமென்று அப்போது நான் நம்பவில்லை. மனுஷர் சொன்னபடி நடத்திக் காண்பித்தார் என்றால்!' என்று ஆச்சரியத்துடன் விவரித்தார்.

14

குறட்டையும் கோட்டாவியும்

ஆனந்தமான நித்திரையில் ஆழ்ந்திருந்தான் சாம்பு. டணார் டணார் என்று பதினொரு தடவை கடிகாரம் மணி அடித்துங்கூட அவன் நித்திரை கலையவில்லை. படுக்கையில் புரண்டுகூடப் படுக்காமல், இந்த உலக சிந்தனையே இல்லாமல் அவன் தூங்கினான். திருட்டுக் கேஸ்களும் கொள்ளைகளும் கொலைகளும் துப்பறிதலும் அபாயங்களும் துப்பாக்கிகளும் அவன் சிந்தனையில் இப்போது இல்லை. ஆனால், ஒரு 'சிறந்த துப்பறிபவன்' தூங்கினால் இந்தப் பாழும் உலகம் அதைப் பார்த்துச் சகித்துக்கொண்டு இருக்குமா? அவனை எழுப்பித்தானாக வேண்டும் என்பதற்கேபோல் இன்ஸ்பெக்டர் கோபாலன் வீட்டில் டெலிஃபோன் மணி அடித்தது. அப்போதுதான் 'ட்யூட்டியில் இருந்து திரும்பி உத்தியோக உடைகளைக் கூடக் களைந்தெறியாத கோபாலன், ரீஸீவரைத் தூக்கிக் காதில் வைத்துக் கொண்டார்.

'இன்ஸ்பெக்டர் கோபாலன் இருக்கிறாரா?' என்று கேட்டது ஒரு குரல்.

'நான்தான் பேசுகிறேன்! என்ன விசேஷம்?' என்றார் கோபாலன்.

'பங்களூர் ஹவுஸிலிருந்து கேதாரிலால் பேசுகிறேன். நீங்கள் உடனே இங்கு வரவேண்டும்.'

பெயரைக் கேட்டவுடன் கோபாலனின் பேச்சிலும் பாவனையிலும் ஒரு மாறுதல் ஏற்பட்டது. பரிவும் மதிப்பும் அவற்றில் தோன்றின. 'இதோ வந்துவிட்டேன்! என்ன விசேஷம்?' என்று கேட்டார் அவர்.

கேதாரிலால்: நீங்கள் வருவது உத்தியோக தோரணையில் அல்ல. நான் ஒரு தர்மசங்கடமான நிலைமையில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறேன். வாயைத் திறந்தால் கெட்ட பெயர் வரும்! சும்மா இருந்தால் முட்டாள் பட்டமும், பொருள் நஷ்டமும் வரும். நீங்கள் வந்தால்...

கோபாலன்: இன்னும் விஷயத்தைச் சொல்லவில்லையே!

கேதாரி: இன்று என் வீட்டில் விருந்து ஒன்று ஏற்பாடு செய்திருந்தேன். நான் வியாபாரம் ஆரம்பித்து இன்றோடு இருபத்தைந்து வருஷம் ஆகிறது. அதற்குச் சில முக்கியமான நண்பர்களை வருவித்திருந்தேன். அது முதல் மடத்தனம். சாப்பாட்டுக்கு முந்தி என்னிடம் இருக்கும் மதிப்புள்ள வைரங்களையும் இதர கற்களையும் அவர்களிடம் காண்பித்தேன். அது இரண்டாவது மடத்தனம். என்னிடம் புளியங்கொட்டை பிரமாணத்தில் ஒரு வைரம் இருந்தது, உங்களுக்குத் தெரியும்! அந்தக் கல்லை இப்போது திடீரென்று காணவில்லை. இங்கேயே விருந்தினர்கள் எல்லாரும் இருக்கிறார்கள்.

கோபாலன்: விருந்துக்கு வந்தவர்களில் ஒருவர்தான் எடுத்திருக்க வேண்டுமென்று நினைக்கிறீர்களா?

கேதாரி: ஆமாம். ஆனால் இதைச் சொல்ல முடியவில்லை. அவ்வளவு பேரும் பெரிய மனிதர்கள், உறவினர்கள். நான் சொன்னால், ஒவ்வொருவரும் தங்களைத்தான் நான் சந்தேகிப்பதாக எண்ணிக்கொள்ளுவார்கள். இவர்களை நான் ஏதாவது சாக்குபோக்கு சொல்லி இன்னும் ஒரு மணி அவகாசம் வீட்டில் தங்கச் சொல்லலாம். நீங்கள் வந்து ஒரு கண்ணோட்டம் போட்டுக் கொண்டீர்களானால், பிறகு சாவகாசமாகப் பார்த்துக் கொள்ளலாம்.

கோபாலன்: வருகிறேன். ஆனால், ஒரு விஷயம்! எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. நீங்கள் 'சாம்பு சாம்பு' என்று ஒரு பேர்வழியைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

கேதாரி: தெரியாது.

கோபாலன்: என்ன போங்கள்! நீங்கள் எந்த உலகத்தில் இருக்கிறீர்கள்? சாம்புவின் பெயர் ஜகப்பிரசித்தி பெற்றுவிட்டதே! அவனிடம் கேஸைச் சொல்லிவிட்டால் போதும். ஆசாமியைப் பார்க்காமலேயே, இருந்த இடத்திலிருந்தே குற்றவாளியைப் பிடித்துவிடுவான். அவன் எனக்கு மிகவும் ஆப்தன்.

கேதாரி: ரொம்ப சந்தோஷம். அவரையும் கூட்டி வாருங்கள்.

கோபாலன்: ஆனால் ஒரு விஷயம்! அவர் போலீஸ் இலாகாவைச் சேர்ந்தவர் அல்ல. ஆகையினால் அவர் உங்கள் வைரத்தைத் தேடிக் கொடுத்துவிட்டால், நீங்கள் அவருக்குத் தகுந்த சன்மானம் செய்ய வேண்டும்.

கேதாரி: அதை நீங்கள் சொல்ல வேண்டுமா, சார்! திருட்டுப் போயிருக்கும் கல் பல ஆயிரம் ரூபாய் பெறும். அதை அவர் கண்டுபிடித்துக் கொடுத்தால் ஐந்நூறு ரூபாய்க்குக் குறையாமல் ஒரு வைர மோதிரத்தை விரலில் உடனே போட்டு அனுப்புவேன், சீக்கிரம் புறப்படுங்கள்!

கோபாலன் அழைக்க வந்தபோது, சாம்பு சொப்பன லோகத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்தான். ஒரு திருடன் அவனைத் துரத்துகிறான். மாடிக்கு அவன் ஓடுகிறான். கதவைத் தாழ்ப்பாள் போடப் பார்க்கிறான். அது கழன்று கொள்கிறது. திருடன் வந்துவிடுகிறான். சாம்பு மேலும் ஒரு மாடியின் கைப்பிடிச் சுவரின்மீது ஏறுகிறான். திருடன் விடுவதாயில்லை. கீழே குதித்தால் மண்டை உடையும்; அகப்பட்டுக்கொண்டால் திருடனின் தடி மண்டையை உடைத்துவிடும். இதுதான் சாம்புவின் சொப்பனம். இந்த ஆபத்தான நிலைமையில் கோபாலன் அவனுடைய முதுகில் தட்டி, 'ஓய்! கும்பகர்ணரே! எழுந்திரும், சொல்கிறேன்!' என்றார்.

சாம்பு திடுக்கிட்டு உளறிக்கொண்டு படுக்கையில் எழுந்து உட்கார்ந்து, 'ஐயோ! நான் வந்துடறேன்!' என்றான் சொப்பனத்தில் கண்ட திருடனிடம்.

இன்ஸ்பெக்டர் சிரித்து, 'அவ்வளவும் பொய்த் தூக்கமா? நம்மிடம் உம்முடைய வேலையைக் காண்பிக்கிறீரே! கிளம்பும் சொல்கிறேன்!' என்றார்.

சாம்புவுக்கு நன்றாக விழிப்புக் கொடுத்தது. அவன் கையைப்பற்றி இழுத்துக்கொண்டு காரில் அவனை ஏற்றி, தாமும் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார் கோபாலன்.

போகும் வழியில் சாம்புவுக்குக் கேஸின் விவரங்களை விஸ்தரித்தார் கோபாலன். 'கேதாரிலாலை உமக்குத் தெரியுமா? இந்த ஊரில் அவரைவிடப் பெரிய வைர வியாபாரி கிடையாது!' என்று தொடங்கினார்.

சாம்புவுக்கும் வைரத்துக்கும் வெகு தூரம். அவன் ஆயுளில் அவன் ஒரு வைர நகையைத் தொட்டுப் பார்த்ததுகூடக் கிடையாது. இருந்தாலும் கௌரவமாக, 'ஆகா!' என்று தலையை ஆட்டினான்.

'அவரிடம் விலை மதிக்க முடியாத ஒரு வைரக்கல் இருந்தது. அதன் பிரமாணம் ஒரு சுண்டைக்காயத்தனை இருக்கும். அதைச் சமீபத்தில் ஒரு மகாராஜா விலைக்குக் கேட்டுப் பார்த்தும், கேதாரி விற்க மறுத்துவிட்டார். அதை எப்படியாவது அடைவதென்று மகாராஜா கங்கணம் கட்டிக்கொண்டு எவ்வளவோ வேலைகள் செய்து பார்த்துவிட்டார். கேதாரி தமது பிடிவாதத்திலிருந்து தளரவேயில்லை.'

'உம்!' என்றான் சாம்பு. இந்த வைரக் கதை அவனுக்கு சுவாரஸ்யப்படவே இல்லை. நல்ல தூக்கத்தில் கிளப்பிவிடப் பட்டதால் அவனுக்கு மீண்டும் தூக்கம் கண்ணைச் சுற்றியது. சற்று சாய்ந்துகொண்டு கேட்டு வரலாமே என்று மோட்டார் சீட்டில் சௌக்கியமாகச் சாய்ந்து கொண்டான். கோபாலன் அவனை அதிகம் கவனியாமல், கேஸின் விவரங்களைச் சொல்லிக்கொண்டு வந்தார். சாய்ந்துகொண்ட சாம்பு கண்ணை மூடிக்கொண்டான்; தலை சுழன்று ஒருமுறை மூடியது. அவனையும் அறியாமல் நித்திராதேவி அவனை ஆலிங்கனம் செய்துகொண்டாள். மோட்டாரின் 'உர்ர்' சப்தம் அவன் தூக்கத்துக்கு ஒத்து ஊதியது போலவே இருந்தது.

மோட்டார் பங்களூர் ஹவுஸ் வாசலில் போய் ஒரு குலுக்கலுடன் நின்றது. சாம்புவின் தலை மோட்டார் முனையில் மோதிக் கொள்ளவே, அவன் திடுக்கிட்டு மீண்டும் விழித்துக் கொண்டான்.

இன்ஸ்பெக்டர் அவன் கையைப் பற்றிக்கொண்டு இறங்கி, அவன் காதோடு, 'ஒன்றும் தெரிந்ததாகக் காண்பித்துக்கொள்ள வேண்டாம். ஏதோ எதேச்சையாக நாம் வந்ததாகவே இருக்கட்டும். ஆசாமிகளை மட்டும் நன்றாகக் கவனித்துக் கொள்ளும்!' என்று எச்சரித்தார்.

சாம்பு கண்களை மலர விழித்து, பிரசித்தி பெற்ற முட்டாள் பார்வை பார்த்தான். 'சரியான வேஷம், ஐயா! என்னையே இப்படி ஏமாற்றி விடுவீர்போல் இருக்கிறதே!' என்றார் கோபாலன்.

கேதாரி, பின்கையைக் கட்டிக்கொண்டு மாடி ஹாலில் உலாவி வந்தார். விருந்தினர்கள் கீழே விரித்திருந்த ரத்தினக் கம்பளத்திலும், அங்கங்கே கிடந்த சோபாக்களிலும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். கோபாலனும் சாம்புவும் நுழைந்ததும் கேதாரி, 'ஏது! அபூர்வமாக இருக்கிறதே!' என்று வரவேற்றார்.

இன்ஸ்பெக்டர் புரிந்துகொண்டவராக, 'ஒரு கேஸ் விஷயமாக இந்தப் பக்கம் வந்தேன். உங்கள் வீட்டு மாடியில் வெளிச்சம் தெரிந்தது; நுழைந்தேன். ஏதோ விசேஷம் போல் இருக்கிறது!' என்றார்.

'ஒன்றுமில்லைன்னா! இவாள் ரொம்பச் சிநேகிதர்கள். குஷியாக ஒருநாள் விருந்து வைத்து எல்லாரும் சேர்ந்து ஆனந்தமாகப் பொழுது போக்கலாமென்று நினைத்தேன்.'

'நம்மைக் கூப்பிட மறந்துட்டீரே!' என்றார் கோபாலன் குறும்பாக.

'நான் கூப்பிடாமல்தான் நீரே வந்து விடுகிறீரே! உம்மை நான் எதற்குக் கூப்பிடுவது?' என்று கேட்டார் கேதாரி.

சாம்புவுக்கு அங்கிருந்தவர்களைப் பார்த்ததும், தனக்குகந்த சிநேகிதர்கள் அவர்கள் அல்லவென்று பட்டது. எல்லாரும் வைரப் பொத்தான்களும், மோதிரங்களும், கடுக்கன்களும் அணிந்துகொண்டு, படே படே ஆசாமிகளாக இருந்தார்கள். அந்த நிசியிலும் கண் விழித்திருந்த ஒரு குழந்தைதான் சாம்புவுக்குச் சரியான சிநேகிதன் ஆனான்.

அந்தப் பயலுக்கு ஏழு வயதிருக்கும். விஷமக் கொடுக்கு. சாம்புவைப் பார்த்தவுடனேயே ஐந்தாறு தடவை முகத்தை

வலித்து வலித்து அவனுக்கு அழகு காட்டினான். சாம்பு வேறு புறம் பார்த்திருந்தபோது அவன் மூக்கைப் பிடித்து இழுத்து, விளாங்காய்த் தலையில் ஒரு குட்டும் குட்டினான். பிறகு உள்ளே ஓடுவதும், அங்கிருந்த பீரோவுக்கிடையில் ஒளிந்து பாய்ச்சுக் காட்டுவதுமாக இருந்தான். சாம்புவுக்கு இதெல்லாம் வேடிக்கையாக இருந்தது. சாம்பு இப்படிப் பொழுது போக்கி வந்தபோது, விருந்தினர்கள் ஒவ்வொருவராகக் கிளம்பத் தொடங்கினார்கள். கேதாரியும் கோபாலனும் வாசற்படியில் நின்றுகொண்டு வழி அனுப்பினார்கள். கோபாலனின் கண்கள் ஒவ்வொருவர் மேலும் ஊடுருவிப் பாய்ந்தது. கேதாரி, ஒவ்வொருவராகக் கோபாலனுக்கு அறிமுகம் செய்துவைத்து அனுப்பி வந்தார்.

ஹால் நடுவில் வந்து சாம்பு நின்றான். அங்கே இரண்டொருவரே பாக்கி இருந்தனர். அவர்களில் ஒருவர் சாம்புவைத் திரும்பக் கவனித்துவிட்டு, 'உங்களை எங்கேயோ பார்த்திருக்கிறேன்!' என்றார்.

'என்னைப் பத்திரிகையில் பார்த்திருக்கலாம்!' என்றான் சாம்பு பெருமையாக.

'அப்படிச் சொல்லுங்கள்! நீங்கள்தானே சாம்பு? ரொம்ப கேள்விப்பட்டிருக்கிறேன் ஸார், உங்களைப் பற்றி!' என்றார் அவர், சாம்புவின் கைகளைப் பற்றிக்கொண்டு.

'சற்று உட்காரலாமே!' என்றான் சாம்பு.

'டயம் ஆகிவிட்டது. இருந்தாலும் நீங்கள் கூப்பிடும்போது எப்படி மறுப்பது?' என்று அந்த ஆசாமி ஒரு சோபாவில் உட்கார்ந்து கொண்டார்.

'நீங்கள் எதற்கு வந்திருக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும்!' என்றார் அவர் ரகசியமாக.

சாம்பு புன்னகை செய்து கொண்டான். 'தெரிந்தால் சொல்லுங்களேன், பார்ப்போம்!' என்றான். சாம்புவுக்கு, தான் வந்த காரியம் என்னவென்று தெரியாது. இந்த ஆசாமியின் மூலம் அதைத் தெரிந்துகொள்ள ஆவல் ஏற்பட்டது சகஜந்தானே?

'கேதாரிலால் டெலிபோனில் பேசும்பொழுது நான் இருந்தேன். நான் அவருடைய ஷட்டகன். எனக்கு எல்லாம் தெரியும். என்னிடம் நீங்கள் தாராளமாகப் பேசலாம்!' என்றார் அவர்.

சாம்பு திணறினான். 'சொல்வதற்கென்ன இருக்கிறது? எல்லாம் தெரிந்த விஷயந்தானே!' என்றான் திருப்பி.

'என்ன! திருடியவனை அதற்குள் நீங்கள் கண்டுபிடித்து விட்டீர்களா? என்று கேட்டார் ஷட்டகர்.

'நான் கண்டுபிடிப்பானேன்? நான் போடுகிற வலையில் அவனாகவே விழுகிறான்!' என்றான் சாம்பு, குருட்டாம் போக்கில்.

'என்னிடம் சொல்லலாமா, அந்த ஆசாமியின் பெயரை?'

'ஏது' நீர் பெரிய திருடராயிருக்கிறீரே? என் வாயிலிருந்து வார்த்தையைத் திருடப் பார்க்கிறீரே!' என்று சாம்பு கூறி, தப்பித்துக்கொள்ள முயன்றான்.

அவன் கூட இருந்த ஆசாமி அவனை விடுவதாக இல்லை. குற்றவாளி யார் என்று அறிந்துகொள்ள அவர் முயன்று கொண்டிருந்தார். இவரிடமிருந்து எப்படியாவது தப்பித்துக்கொள்ள, தனக்குத் தூக்கம் வருகிறதென்ற பாவனையில் சாம்பு ஒரு கொட்டாவி விட்டான். கோபாலனும் அப்போது அவன் பக்கம் திரும்பினார்.

கொட்டாவி என்றைக்காவது தள்ளிப்போனது உண்டா? சாம்பு கொட்டாவி விடவே, அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஆசாமியும் அகல வாயைத் திறந்து ஒரு கொட்டாவி விட்டார். கோபாலன் ஏனோ உடனே புருவத்தை நெறித்து அவரைப் பார்த்தார்.

சாம்பு இரண்டாம் தடவையாக இன்னும் பெரிய கொட்டாவி விட்டான். அந்த ஆசாமி தம்மை அறியாமல் மறுபடி கொட்டாவி விட்டான். சாம்பு தலையைக் குனிந்துகொண்டு, தன்து விளாங்காய் மண்டையை ஆட்டினான். பிறகு பக்கவாட்டில் பார்த்தான்.

அந்தச் சின்னப் பயல் பீரோ இடுக்கில் விஷமம் செய்வது அவனுக்குத் தெரிந்தது. ஒரு பெரிய கொய்யாப் பழத்தைத் தன் சின்ன வாயில் திணித்துக்கொண்டு திக்குமுக்காடிக் கொண்டிருந்தான் அவன். சாம்பு அதைக் கவனிக்கும்போதே, கோபாலன் வேகமாக வந்து, சாம்புவின் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவரின் முன்பு நின்றுகொண்டார்.

சாம்பு குனிந்த தலையுடனேயே கடைக்கண்ணால் சின்னப் பையனைப் பார்த்து, 'உம்! இனிமேல் செல்லாது! துப்பிவிட வேண்டியதுதான்! உம்!' என்றான். பிறகு கண்ணை இறுக மூடிக்கொண்டு தலையைக் குலுக்கினான்.

பக்கத்திலிருந்த ஆசாமி முஷ்டியை ஓங்கி, சாம்புவின் தலையை நோக்கி ஒரு குத்து விட்டார். அந்தக் குத்து விழுந்திருந்தால், சாம்புவின் மண்டை விளாம்பழம் போல நொறுங்கிப் போயிருக்கும். இதை எதிர்பார்த்த கோபாலன், அவர் கையைக் கெட்டியாகப் பிடித்து கன்னத்தில் பளாரென்று ஓர் அறை கொடுத்தார். அவர் வாயிலிருந்து ஒரு வைரக்கல் வெளிப்பட்டு, ரத்தினக் கம்பளத்தில் விழுந்தது. மின்சார வெளிச்சத்தில் பப்பள பளபளவென்று ஆயிரம் வர்ணங்களை வாரி இறைத்தது. கேதாரி ஓடிப்போய் அதை எடுத்துக்கொண்டு, 'அடப் பாவி! என் சொந்தக்காரனாயிருந்தும் நீயா திருடினாய்?' என்றார் ஆச்சரியத்துடன்!

சாம்பு, அசந்தர்ப்பமாகத் தூக்கம் கலைந்தவனாக ஒன்றும் புரியாமல் முழித்தான். கோபாலன், 'சபாஷ் சாம்பு! இவன் வாயைத் திறக்க எந்த சந்தர்ப்பத்தில் கொட்டாவி விட்டீர்! இவனை நீர் தனியாக அழைத்துச்செல்லும்போது நான் சந்தேகப் பட்டேன். இவன் கொட்டாவி விடுவதற்காக எவ்வளவு தத்ரூபமாக - நிஜம்போல் - நீரும் கொட்டாவி விட்டீர்! இவன் முதலில் வாயைத் திறந்தபோது, கடைவாயில் பளிச்சென்று கல் தென்பட்டது. இரண்டாவது தடவை அது ஊர்ஜிதமாகி விட்டது. அதற்குள் நீரே, 'துப்பிவிடு! இனிச் செல்லாது!' என்று சொல்லிவிட்டீர். சபாஷ்! சபாஷ்!!' என்று சாம்புவின் முதுகில் ஓங்கி ஓங்கித் தட்டினார். சாம்பு, வலி தாங்காமல் துள்ளினான்.

காலில் விழுந்து, ஷட்டகர் மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். 'அந்த மகாராஜாவின் பசப்பு வார்த்தையில் மயங்கி உங்களுக்குத் துரோகம் செய்துவிட்டேன். என்னை விட்டுவிட வேண்டும். சாம்புவை நான் என்னவோவென்று நினைத்துவிட்டேன்!' என்றார்.

கோபாலன், முகத்தை வேறுபுறம் திருப்பிக்கொண்டு, 'அது உமக்கும் உம்ம ஷட்டகருக்கும் எப்படியோ, நமக்குத் தெரியாது!' என்று கேதாரியைப் பார்த்தார்.

கேதாரி கையில் எதையோ கொண்டுவந்து கோபாலனிடம் கொடுத்தார். வழக்கமாக விலங்குகளே மாட்டிப் பழக்கப்பட்ட தமது கையினால், கோபாலன் சாம்புவின் விரலில் அதை மாட்டினார். அது ஒரு விலையுயர்ந்த நவரத்தின மோதிரம்!

கேதாரி சாம்புவின் பக்கம் வந்து, 'நீங்கள் எங்கே கண்டுபிடிக்கப் போகிறீர்களென்று முதலில் எண்ணிவிட்டேன்; அது பெரிய அபசாரம். நீங்களோ, எல்லா விருந்தினர்களுக்கும் எதிரில் என் குடும்பத்தானாகிய இவனை வெளியாக்கி அவமானப்படுத் தாமல், அவ்வளவு பேரும் போனபிறகு திருட்டை வெளிப் படுத்தியிருக்கிறீர்கள். இதற்குப் பிரதி நான் என்ன செய்தாலும் தகும்!' என்றார் உணர்ச்சியுடன்.

சிறிது நேரத்துக்கெல்லாம், சாம்புவை கேதாரிலாலின் சொந்த மோட்டார் அவன் வீட்டில் கொண்டுவிட்டது.

அவன் மறுபடி கட்டிலில் படுத்தபோது டாண் என்று கடியாரம் ஒன்றரை மணி அடித்தது. தூக்கம் கண்ணைச் சுழற்றியது. தலையைச் சார்த்திய மூன்றாவது நிமிஷம் அவன் குறட்டை விடத் தொடங்கினான்.

மறுநாள் காலையில் சாம்பு எழுந்தபோது, இரவு நடந்த சம்பவங்கள் அவனுக்குச் சொப்பனம் என்றே தோன்றின. நடந்த தெல்லாம் உண்மையே என்று நம்பிக்கை உண்டாக்குவதேபோல் அவன் கையில் நவரத்தின மோதிரம் பளபளவென்று ஜொலித்தது!

15

முந்திரிப் பருப்பு – பருப்புத் தேங்காய்

ராவ்சாகிப் நடராஜய்யர் பிள்ளைக்குக் கல்யாணம் நிச்சயமாகி நீடாமங்கலத்தில் அதிவிமரிசையாக நடந்ததை சென்னைவாசி கள் அத்தனைபேரும் அறிவார்கள். நடராஜய் யர் நூற்றுக்கணக்கில் பத்திரிகைகள் அச்ச டித்து விநியோகம் செய்ததால் அந்தக் கல்யா ணம் அப்படிப் பிரபலமாகிவிடவில்லை. துப்பறியும் நிபுணர் ஸ்ரீமான் சாம்பு அந்தக் கல்யாணத்துக்கு விஜயம் செய்து, திருவிளை யாடல்களில் ஒன்றை நடத்திக் காண்பித்தது தான் அதற்குக் காரணமாகும்.

முதலில் சாம்பு கல்யாணத்துக்கு வருவதற்கு மறுத்தான். 'எனக்குக் கல்யாணச் சாப்பாடு ஒத்துக்கொள்ளாது, ஸார்!' என்றான். நடரா ஜய்யருக்குச் சாம்புவை விட்டுப்போக இஷ்டம் இல்லை. 'உங்களுக்கு வீட்டுச் சமையல் மாதிரி செய்துபோடச் சொல் கிறேன்!' என்று வற்புறுத்தி அழைத்துக் கொண்டு போனார். எங்கே கல்யாணச் சாப்பாடே கிடைக்காமல் போய்விடுமோ என்று பயந்த சாம்பு, 'அதற்காகச் சொல்ல வில்லை! எனக்காக ஸ்பெஷலாக ஒன்றும்

தயார் செய்ய வேண்டாம்!' என்று சொல்லிவிட்டு, வர ஒப்புக் கொண்டான்.

நீடாமங்கலத்தில், சாம்பு ஒரு கண்காட்சியாக இருந்தான். அவன் பிரபல துப்பறிபவன் என்று அறிந்தவர்கள் மரியாதையுடன் நடந்துகொண்டார்கள். அப்படி இல்லாமல் சாதாரணமாகப் பார்ப்பவர்கள், சாம்புவை ஒரு நூதனப் பிராணி என்று நினைத் தார்கள். முன்போலில்லாமல் இப்போது சாம்பு ஒண்டி ஒடுங்காமல், நாலுபேர் முன் தைரியமாக வந்து உட்கார ஆரம்பித்துவிட்டான். ஆகையால், எல்லார் கண்ணிலும் பட்டான். மாப்பிள்ளை மணப்பெண்ணைவிட, சாம்பு அதிகம் கவனத்தைக் கவர்ந்தான். முக்கியமாக, சம்பந்தி வீட்டாருக்குச் சாம்பு இன்னான் என்று தெரிந்ததும் அவர்களுக்கு நடராஜய்ய ரிடமே மதிப்பு அதிகம் ஏற்பட்டது. சாம்பு வரும் போதெல்லாம் அவர்கள் பிரமாதமாக உபசரித்தார்கள்.

கல்யாணத்துக்கு முதல் நாள் அன்று சம்பந்தி வீட்டில், தடபுடலில் ஓர் இரட்டை வட கடிகாரச் சங்கிலி எங்கேயோ தவறிவிட்டது.

இப்போது பவுன் விற்கும் விலையில் பதினைந்து பவுன் சங்கிலி காணாமல் போனது பெரும் நஷ்டம் என்றாலும், சாம்புவிடம் இந்த அற்ப விஷயத்தைச் சொல்லிக்கொண்டிருப்பதா என்று சம்பந்தி யோசனை செய்தார். ஒருசமயம் சொல்வோமென்று நினைத்தார்; சாம்புவை நேரில் பார்த்தபோது வேண்டாமென்று எண்ணினார். சாம்பு ஒன்றும் அறியாதவனாக, சுற்றும்முற்றும் பார்த்துக்கொண்டு, பிள்ளை வீட்டுக்கும் பெண் வீட்டுக்கும் நடைபோட்டுக் கொண்டிருந்தான். மற்ற வேளைகளில் ஓரமாக இருக்கும் தூணாகப் பார்த்து, சாய்ந்து கண்மூடி உட்கார்ந்தான். இப்படி அவன் கண்மூடி உட்கார்ந்த சமயம் ஒரு போக்கிரிப் பயல் சாம்புவின் அங்கவஸ்திரத்துக்கும் தூணுக்கும் சேர்த்து முடி போட்டுவிட்டான்.

இவ்வளவு தூரம் சாம்புவை மெய்ம்மறக்க வைத்தது ஓர் அற்புதமான விஷயந்தான். அது மணமக்கள் ஊஞ்சலாடும்போது கொண்டுவந்து வைக்கப்பட்ட ஒரு ஜோடி முந்திரிப் பருப்பு - பருப்புத் தேங்காய்தான். சாம்புவுக்கு, முந்திரிப் பருப்பு என்றாலே பைத்தியம். சென்னை ஹோட்டல்களில் அவன் ஓரணாப் பொட்டலங்கள் வாங்கிச் சாப்பிடுவதுண்டு. ஆனால்

இவ்வளவு முந்திரிப் பருப்பு சர்க்கரைப் பாகுடன் ஒரு கும்பமாக நிற்பதைப் பார்த்தவுடன், அவன் வாயில் நீர் சுரந்தது. எப்படி யாவது ஒரு விள்ளல் அதில் எடுத்து வாயில் போட்டுக்கொள்ள வேண்டுமென்ற அவா பிறந்தது. ஆகவே, பருப்புத் தேங்காயின் மீது அவன் வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தான். அதற்குப் பிறகு அவனுக்கு வேறொன்றிலும் கவனம் செல்லவில்லை.

அவனைக் கவனித்து, வேளாவேளைக்குக் காபி பலகாரம் கொடுத்தவள் ஸ்ரீமதி தர்மாம்பாள். அவளுக்கு ஐம்பது வயதிருக்கும். சிலருக்கு எல்லாருடனும் சொந்தம் கொண்டா டும் சக்தியை ஈசுவரன் கொடுத்திருக்கிறான். எப்படியோ பல மூலை முடுக்குகளில் தேடி ஓர் உறவைச் சொல்லி, அவர்கள் உறவினர்கள் என்ற பாக்கியதையைக் கொண்டுவந்து விடுவார்கள். சம்பந்தி வீட்டுக்கு அம்மாதிரி உறவினளான தர்மாம்பாள், அதேபோல் நடராஜய்யர் அகத்திலும் ஓர் உறவை ஏற்படுத்திக்கொண்டு, இரண்டு சம்பந்தி வீட்டுக்கும் நடந்து கொண்டிருந்தாள். ஆகவே, சாம்பு எங்கிருந்தாலும் அவளுடைய கண்ணுக்குத் தப்பவில்லை. கல்யாணக் காரியங்கள் அனைத்திலும் பங்கெடுத்துக்கொண்டு செய்தவளாகையால் சம்பந்தி வீட்டில் அவளுக்குச் சகல உரிமைகளும் இருந்தன. சம்பந்திக்கு இவ்வளவு வேண்டியவள், நடராஜய்யர் வீட்டிலும் தாராளமாகப் புழங்கினதில் ஆச்சரியமில்லை.

சாம்பு, தன் ஸ்மரணை இல்லாமல் இருந்தான். அவனுடைய ஒரே குறி பருப்புத் தேங்காயில் ஒரு பகுதியை விண்டுகொள்ள வேண்டுமென்பதுதான். பருப்புத் தேங்காய், நடராஜய்யர் வீட்டில் இருந்தபோது அதன் அருகாமையிலேயே சுற்றிப் பார்த்தான். அதைத் தொடுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படவில்லை. பிறகு அது பெண் வீட்டுக்கு வந்து, அங்கே ஓர் அறையின் மூலையில் வைக்கப்பட்டது. இங்கேயும் அதைத் துளி விண்டு கொள்ள சாம்பு முயன்று வந்தான். ஆனால், கல்யாண வீட்டில் மனிதர்கள் நடமாட்டம் இல்லாமல் இருக்குமா?

சாம்பு, அந்த அறைக்குள் சந்தர்ப்பம் பார்த்து நுழைந்து விட்டான். ஆனால், எதிர்பாராதவிதமாக அப்போது சம்பந்தி வீட்டு ஸ்திரீகள் இரண்டொருவர் வந்துவிட்டார்கள். கிட்டத் தட்ட அதைத் தொடப் போனவன், சட்டென்று ஒதுங்கிக் கொண்டான்.

சாதாரண மனிதர்கள் யாராவது அப்படிச் செய்திருந்தால், அதை யாரும் கவனித்திருக்கவே மாட்டார்கள். கவனித்திருந்தாலும் பொருட்படுத்தியிருக்க மாட்டார்கள். ஆனானப்பட்ட சாம்பு ஒரு துரும்பை எடுத்துக் கிள்ளிப் போட்டாலும், அதற்கு ஓர் அர்த்தத்தை ஜனங்கள் கற்பிக்க மாட்டார்களா? இது விஷயம் ஒரே நிமிஷத்தில் சம்பந்தியின் காதுக்கு எட்டியது.

'சாம்பு, பருப்புத் தேங்காயின் மீது ஒரு கண் போட்டிருக்கிறார்! இதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும்!'

சம்பந்தி இப்படி அபிப்பிராயப்பட்டபோது அங்கே தர்மாம்பாள், 'அதெல்லாம் ஒன்றும் இராது. அவர் பாவம், ஏதோ யோசனை யாக இருக்கிறார். நான் பார்த்துப் பார்த்து எல்லாம் செய்து வைத்திருக்கிறேன்!' என்றாள். சம்பந்தியும் இருக்கலாமென்று ஒப்புக்கொண்டார்.

அடுத்தபடியாக, சம்பந்தியின் காதில் சாம்புவைப் பற்றிச் செய்தி விழுந்தது. சாம்பு, கல்யாண வீட்டுச் சமையற்காரனை, 'இந்த வீட்டுப் பட்சணங்கள் செய்தது யார்?' என்று விசாரித்தானாம். பிறகு, 'பருப்புத் தேங்காய் செய்தது யார்?' என்று குறிப்பிட்டுக் கேட்டானாம். சமையற்காரன் தனக்குத் தெரியாதென்று சொன்னானாம். இந்த விவரங்களை அந்தப் பரிசாரகனே சம்பந்தியிடம் தெரிவித்தான். அப்போது அங்கே வந்த தர்மாம் பாள், 'நம்ப கல்யாணத்துச் சமையல், பக்ஷணங்கள் எல்லாம் வெகு தரமாக இருக்கிறதோல்லியோ! சாம்பு அதற்காக விசாரித்திருப்பார்!' என்று சொன்னாள்.

மறுபடியும் சம்பந்தி அந்த விஷயத்தை அதோடு விட்டு விட்டார். சாம்பு மட்டும் பருப்புத் தேங்காயை அதோடு விட வில்லை. சர்க்கரைப் பாகுடன் கம்பீரமாக நிற்கும் அந்தப் பருப்புத் தேங்காயில் துளியாவது விண்டு வாயில் போட்டுக் கொள்ளாவிட்டால் அவன் மனம் நிம்மதி அடையாதுபோல் இருந்தது. அதற்கு அவன் இரவு வேளையையே எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

அன்று விருந்து நடந்து படுத்துக்கொள்ளும்போது மணி பன்னிரண்டு. கல்யாண வீட்டு ஹாலில் ஒரு காஸ்லைட் வர வர மங்கிக்கொண்டு எரிந்துகொண்டிருந்தது. கூடத்தில் நாற்புறமும் விருந்தாளிகள் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தார்கள். அவர் களின் குறட்டைச் சத்தங்கள் ஒன்றுடன் ஒன்று போட்டி

போட்டுக் கொண்டிருந்தன. அவன் மனக் கண்முன், அந்த முந்திரிப் பருப்பு - பருப்புத் தேங்காய் அப்போதும் நின்றது.

மெல்ல, சாம்பு எழுந்தான். தூங்குபவர்களைத் தாண்டிக் கொண்டு, பருப்புத் தேங்காய் வைத்திருக்கும் அறையை நோக்கி நடந்தான். அறைக்குள் யாரும் இல்லை. சரியான சமயம், திருடன் நுழைவதுபோல் சாம்பு நுழைந்தான்.

ஒரு கணம் சாம்பு தன்னைப்பற்றி நினைத்துக்கொண்டான். தன் கௌரவம் என்ன, தான் செய்யப் போகிற காரியம் என்ன? பெரிய ஜமீன்தார்கள், வியாபாரிகள், ஏன் போலீஸ் அதிகாரிகள் அவனுக்கு எத்தனை கௌரவம் வைத்தார்கள்? இப்போது கேவலம் ஒரு பருப்புத் தேங்காய்க்காக அவ்வளவையும் மறப்பதா?

சாம்பு சற்று நின்றான். அவன் தயங்கியபோது, அந்தப் பண்டம் அவன் கண்முன் நின்றது. உடனே அவன் மன உறுதி தளர்ந்தது. 'யாருக்குத் தெரியப்போகிறது இப்போது நாம் செய்வது?' என்று மேலே நடந்து சென்றான்.

எதிரில் பருப்புத் தேங்காய்! இடது கையால் அதைப் பிடித்துக் கொண்டு வலது கையால் அதை முறிக்கப் போனான். அந்த அறையின் மூலையில் யாரோ அசையும் சத்தம் கேட்டது. அடுத்த கணம் அவன் கையை மற்றொரு கை பற்றிக்கொண்டது. 'விடு அதை!' என்ற அதட்டல் கேட்டது.

சாம்பு நிமிர்ந்து பார்த்தான். தர்மாம்பாள்தான் அதைப் பிடித்திருந்தாள். அவள் அந்த அறையில் படுத்திருந்ததை அவன் கவனிக்கவில்லை. 'என்ன மடத்தனம்!'

'விடு அதை!' என்றாள் அவள்.

'நீதான் விடு! எனக்கு வேண்டும்!' என்றான் சாம்பு.

'நன்றாயிருக்குதடி இது! திருடன் மாதிரி வந்து...'

'யாரைப் பார்த்து திருடன் என்கிறாய்? நீதான் திருடி மாதிரி வந்திருக்கிறாய்!' என்றான் சாம்பு.

கூடத்தில் படுத்திருந்தவர் ஒருவர் தூக்கம் கலைந்து கண்ணை விழித்துப் பார்த்தார். அவருக்கு அரைத் தூக்கத்தில் ஒரு ஸ்திரீயும்

புருஷனும் வாக்குவாதம் செய்துகொண்டு நிற்பது கேட்டது. சடேரென்று எழுந்தார். சாம்புவின் பிடரியில் ஓங்கி ஓர் அறை அறைந்து, கையைப் பிடித்திழுத்து வெளியே வீசினார்.

சாம்பு நிலை கலங்கி, வெளியே வந்து, அவருடன் மோதிக் கொண்டான். அவன் கண் முன்னால் அவுட் வாணம் விட்டது போல் நட்சத்திரங்கள் பறந்தன. அவன் கையில் கெட்டியாகப் பிடித்திருந்த அவன் உள்ளத்தைப் பறிகொடுத்த பருப்புத் தேங்காய், துப்பாக்கியிலிருந்து விடுபட்ட குண்டுபோல் கிளம்பி, ஒரு கல் தூணில் மோதி மூன்று சுக்கலாக விழுந்தது.

இந்தக் களேபரங்கள் நடப்பதற்குள் கூடத்தில் படுத்திருந்தவர் கள் அவ்வளவு பேரும் எழுந்துவிட்டார்கள்.

சாம்புவுக்கு அடிபட்ட ஆயாசத்தைவிட, இவ்வளவு பேர் முன்னிலையில் அவமானப்படப் போவது அதிக வேதனையை உண்டாக்கியது. அவன் தலை கிறுகிறுவென்று சுற்றி மயக்கமே வந்துவிட்டது. ஒன்றிரண்டுபேர் ஓடிப்போய் அவனைப் பிடித்துக்கொண்டார்கள். அவர்கள் பிடியிலேயே சாம்பு மூர்ச்சை அடைந்தான்.

பருப்புத் தேங்காய்ச் சுக்கல்களை எடுக்கப்போன ஒருவர், இரண்டு சுக்கல்கள் சேர்ந்தாற்போல் வருவதைக் கவனித்தார். அவைகள் இரண்டையும் இணைத்தது ஒரு தங்கச் சங்கிலி என்பதை அவர் கண்டதும், ஒரு கூச்சலே போட்டுவிட்டார். துரிதமாக நடந்த இந்தச் சம்பவங்களினால் திகைத்துப் போயிருந்த தர்மாம்பாள், அதைப் பொறுக்க இப்போதுதான் ஓடி வந்தாள். சங்கிலியை எடுத்துக் காண்பித்துக்கொண்டு ஒருவர் நிற்பதைப் பார்த்தவள் அப்படியே சிலையாக நின்றுவிட்டாள்.

ஏதோ கலவரம் என்று கேள்விப்பட்டு, சம்பந்தி ஓடோடியும் வந்தார். சாம்பு மயங்கிக் கிடப்பதையும், தங்கச் சங்கிலி பருப்புத் தேங்காயிலிருந்து வெளிப்பட்டதையும், தர்மாம்பாள் கையைப் பிசைந்துகொண்டு நிற்பதையும் பார்த்தார்.

அவர் முகத்தைப் பார்த்ததுமே தர்மாம்பாள் எதிர்பாராத விதமாகக் கதறிவிட்டாள். 'என் மேல்தான் குற்றம். நான்தான் சங்கிலியைத் திருடினேன். அதை இந்தப் பருப்புத் தேங்காயில் ஒளித்து வைத்தேன். இங்கேயிருந்து இதைக்கொண்டு போகலாம் என்று நினைத்தேன். நீங்கள் சாம்புவை வரவழைத்தீர்கள். அவர்

கண்டுபிடித்து, இந்தப் பருப்புத் தேங்காயிடம் குறிப்பாக வந்தார். அதை அவர் எப்படித்தான் கண்டாரோ? அவர் மந்திர வாதியோ இட்சிணியோ, என்னைத் 'திருடி' என்று சொல்லிவிட் டார். என்னை என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளுங்கள். இந்தச் சாம்புவின் முகத்தில் விழிக்காமல் கொண்டு போங்கள்!' என்றாள்.

சம்பந்தி மூக்கின்மேல் விரலை வைத்துக்கொண்டார். 'அடாடா! சாம்பு எத்தனை பெரிய மேதாவி! நான் சொல்லவேண்டா மென்றிருந்த திருட்டை எப்படியோ கண்டுபிடித்து, சங்கிலியை யும் எடுத்துவிட்டாரே!' என்று வியந்து போனார். சாம்புவை ஜாக்கிரதையாகத் தமது வீட்டுக்குக் கொண்டுபோகச் சொல்லி, தம் கட்டிலிலேயே படுக்க வைத்தார். சாம்பு நிம்மதியாகக் கிடந்தான்.

காலையில் சம்பந்தி சாம்புவைப் பார்க்க வந்தபோது, படுக்கை காலியாக இருந்தது! விடியற்காலை பஸ்ஸில் அவன் சொல்லா மலேயே புறப்பட்டு விட்டான்! சாம்புவுக்கு நினைவு வந்த பிறகு, மேலும் அங்கே தங்குவது பிசகென்றுதான் அவன் கிளம்பியது. ஆனால் சம்பந்திக்கு, சாம்பு போய்விட்டதன் காரணம், தன் வீட்டில் சரியானபடி அவனை நடத்தாததுதான் என்று தோன்றியது.

தன் விளாங்காய் மண்டையில், ஒரு சிறு விளாங்காயளவு வீக்கத்தைத் தடவி விட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்த சாம்பு வுக்கு ஒரு பார்சலும் கடிதமும் வந்தன. பார்சலில் கல்யாண பட்சணங்கள் இருந்தன. முக்கியமாகச் சாம்புவுக்குப் பிடித்த முந்திரிப் பருப்பு - பருப்புத் தேங்காய் இருந்தது! இதெல்லாம் எங்கிருந்து வந்ததென்று ஆச்சரியப்பட்டுக்கொண்டே கவரை உடைத்தான். நூறு ரூபாய்க்கு ஒரு செக்கு, தம் வீட்டில் திருட்டுப் போன சங்கிலியை எடுத்துக் கொடுத்ததற்கு நடராஜய்யரின் வந்தனம், தம் பார்வையில்லாமல் நடந்த சிறு அவமானத்துக்கு மன்னிப்புக் கோரி வேண்டுகோள் - இவ்வளவும் அடங்கிய ஒரு கடிதமும் அதில் இருந்தன.

சாம்பு, ஆச்சரியத்துடன் வாயைப் பிளந்து உட்கார்ந்து கொண்டிருந்தான்.

16

மகாராணியின் முத்துமாலை

சாம்பு தனது மூக்கின் நுனியை ஒருமுறை தடவிவிட்டுக் கொண்டான். ஒரு முடிவுக்கு வரும்முன் அவன் அம்மாதிரிச் செய்வது வழக்கம் என்பதை, சாம்புவுக்குப் பரிச்சய மானவர்கள் அவ்வளவு பேரும் அறிவார்கள். ஆனால், அப்போது சாம்புவுடன் பேசிக் கொண்டிருந்த சோளிங்கர் சமஸ்தானத்துத் திவான் எப்படி அதை அறிவார்? சாம்புவிடம் தாம் வந்த காரியத்தை மறுபடி ஒருமுறை திரும்பச் சொன்னார். 'நீங்கள் இதில் யோசனை செய்ய வேண்டியது ஒன்றும் இல்லை. மகாராணியாருடன் நீங்கள் போய், உங்களுக்கு இஷ்டப்பட்ட இடத்தில் தங்கியிருங்கள். மகாராணியின் முத்துமாலை மீது ஒரு கண் வைத்துக்கொள்ள வேண்டும். அந்த முத்துமாலை குடும்பத்தின் பதினாறு தலைமுறையாக வந்திருப்பது. அது காணாமல் போனால் ஏற்படும் வருத்தம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லி முடியாது. அது காணாமல் போவதற்கும் ஒரு பிரமேயமுமில்லை. எதற்கும் உங்களைப் போல் பிரபல துப்பறிபவர் கூட இருப்பது



நல்லதென்று தங்களை அழைக்கச் சொன்னார். முதல் கிராஸில் உங்களுக்கு ஒரு பெர்த் ரிசர்வ் செய்துவிடுகிறோம். உங்களுக்குச் சன்மானமாக நானூறு ரூபாய் கொடுக்கும்படி உத்தரவாகியிருக்கிறது. ஒரு வாரந்தான் மகாராணியார் பங்களூரில் தங்குவார். நீங்கள் உடனே திரும்பி விடலாம்!' என்றார். சாம்பு மூக்கை மறுபடி தடவிக் கொண்டான். 'நானூறு ரூபாய், வேலை ஒன்றுமில்லை. முத்துமாலை இன்னும் காணாமல் போகவில்லை. அப்படிப் போகும் என்ற நிச்சயமுமில்லை. கையிலும் வேலை இல்லை!' என்று எண்ணினான். திவான் தொடர்ந்து, 'நீங்கள் அவசியம் வர வேண்டும்! எந்த வேலை இருந்தாலும் ஒத்திப் போடவேண்டும்!' என்றார்.

'சரி!' என்றான் சாம்பு.

•

ஷோலிங்கர் மகாராணியும் பரிவாரங்களும் பங்களூரில் ஒரு பெரிய மனிதரின் பெரிய பங்களாவில் விருந்தினராகத் தங்கினர். பங்களாவைச் சுற்றியிருந்த விஸ்தாரமான நந்தவனத்தில் சாம்பு உல்லாசமாக உலாவினான். அவனை யார் என்று கேட்பார் கிடையாது. எல்லாருக்கும் அவன்தான் பிரசித்தி பெற்ற சாம்பு என்று தெரியும். பங்களாவின் சொந்தக்காரர் வீட்டில் நடக்க விருந்த கல்யாணத்துக்கும், மகாராணி இருக்கும் உத்தேசத்துடன் வந்திருந்தாள். கல்யாணம் நெருங்க நெருங்க, பங்களாவுக்கு வருகிறவர் போகிறவர் எண்ணிக்கையும் அதிகமாகி வந்தது. சாம்புவுக்கு இப்போது ஏகாந்தமாக இருக்க, நந்தவனத்தில் வசதி குறைய ஆரம்பித்தது. காம்பவுண்டுக்கு வெளியில் அங்கும் இங்கும் நின்று பொழுது போக்கினான். எந்த மகாராணியாரின் முத்துமாலையைப் பாதுகாக்கச் சாம்பு வந்திருந்தானோ அந்த மகாராணியை, சாம்பு கண்ணால் காணவில்லை! எப்போதாவது அவள் மாடிமேல் நிற்பதும் விரைந்து தாழ்வாரத்தில் செல்வதும் அவன் திருஷ்டியில் விழும். அவ்வளவுதான். சாம்புவும் அதற்காக ஒன்றும் வருந்தவில்லை. நாம் என்ன செய்யப் போகிறோம் என்று ஒருவிதத் திருப்தி அவன் மனத்தில் இருந்தது. தவிர, அவன் ஒரு புது சிநேகமும் பிடித்தான். அவனுடன் பழகவே சாம்புவுக்கு ஒரு பெரிய 'உண்மை' வெளியாயிற்று!

காம்பவுண்டுக்குப் பின்னால், பின்கையைக் கட்டிக்கொண்டு அவன் ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டு நின்றபோது, அவன்

கொழும்பு தமிழ்ச் சங்கம்

நூலகம்

முதுகை யாரோ தொடுவதைக் கண்டு திடுக்கிட்டுத் திரும்பினான். உயரமாக வற்றிப்போன ஓர் ஆசாமி நின்றுகொண்டிருந்தான்.

'என்ன பார்க்கறீங்க?' என்று கேட்டான் அந்த ஆசாமி.

'இந்த மாமரம் என்ன காய்க்கும் என்று பார்க்கிறேன்!' என்றான் சாம்பு.

அந்த ஆசாமி கடகடவென்று சிரித்து, 'என்னங்க! நம்மகிட்டே விளையாடறீங்களே! இது மாமரமா! நெட்டிலிங்க மரம் இல்லையா?' என்றான்.

சாம்புவும் சிரித்தான்.

அந்த ஆசாமி, 'உங்களை எனக்குத் தெரியும். நீங்க சாம்பு இல்லீங்களா?' என்று கேட்டான்.

சாம்புவுக்கு மறுபடி தூக்கிவாரிப் போட்டது, எங்கே போனாலும் அவனைத் தெரிந்தவர்களே இருக்கிறார்களே! எப்படி இனி, துப்பறிவது? நாசமாப் போவது!

'நீங்கள் முத்துமாலையைப் பார்த்துக்க வந்திருக்கீங்க. அதுவும் தெரியும்!' என்றான் அவன்.

சாம்புவுக்கு ஏற்படும் ஆச்சரியத்தில் மூச்சே போய்விடும் போல் இருந்தது. 'ஹ¨ம்!' என்றான்.

'இதெல்லாம் கண்டுபிடித்ததில் எனக்கு ஒன்றும் சிரமமே இல்லை. ஏனென்றால், நானே ஒரு துப்பறிகிறவன்தான்!' என்று முடித்தான் அந்த ஆசாமி.

சாம்புவின் மனத்திலும் பொறாமை தோன்றியது. 'இந்தத் திவான் என்னை - பிரசித்திபெற்ற சாம்புவை - ஒரு காரியத்துக்கு நியமித்துவிட்டு, அது போதாதென்று வேறொருவனையும் எனக்குத் தெரியாமல் ஏற்பாடு செய்வதா? இதுவரை யாரும் அப்படிச் செய்ததில்லையே!' என்று ரோஷமும் பிறந்தது. நேரே திவானிடம் போய், 'ஒய்! நீர் வைத்திருக்கிற அந்தத் துப்பறிகிறவன் உம்ம அற்ப வேலைக்கு எதேஷ்டம். என் போன்ற பெரிய ஆசாமிகள் இந்தக் கேவலமான காரியங்களில் பொழுதுபோக்க முடியாது!' என்று சொல்லிவிடுவதென்று தீர்மானித்தான். பங்களாவை நோக்கி ஓர் அடியும் எடுத்து வைத்து விட்டான்.

அந்த ஆசாமி, சாம்புவின் மனத்தில் எண்ணியதை எல்லாம் அறிந்துகொண்டவனாக, சட்டென்று சாம்புவின் கையைப் பற்றிக்கொண்டு, 'அவசரப்படாதேயும் சாம்பு! நான் சொல்வதைக் கேட்டுவிட்டுப் போம். என்னை இந்த வேலைக்கு இங்கே அமர்த்தியிருப்பது உங்கள் திவானும் இல்லை; மகாராணியும் இல்லை!' என்றான்.

'பின் யார் அது?'

'இந்தப் பங்களாவின் சொந்தக்காரர் ராஜாபாதர் முதலியார்தான். முத்துமாலை அவர் வீட்டில் காணாமல் போனால் அவருக்கும் அதனால் அபக்யாதி உண்டாகுமல்லவா? அப்படி ஏற்படாமல் இருக்கத்தான் என்னை அமர்த்தினார்.'

'உம்!' என்றான் சாம்பு, கோபம் தணிந்து.

'நான் எதற்காக உம்மிடம் பேச வந்தேன் என்றால் நாம் இருவரும் வெவ்வேறு இடங்களில் அமர்த்தப்பட்டாலும், ஒரே காரியமாக இங்கே இருக்கிறோம்! நாம் ஏன் ஒத்துழைத்து ஒருவருக்கொருவர் உதவியாக இருக்கக் கூடாது?'

'தாராளமாக இருக்கலாம்' என்றான் சாம்பு.

'அதனால் உமக்குக்கூடச் சிரமம் குறையும்!'

'ஆட்சேபம் என்ன!'

'நீர் இதுவரை என்ன கண்டுபிடித்திருக்கிறீர், சொல்லும்!' என்று கேட்டான் அந்த ஆசாமி.

சாம்பு, மூக்கு நுனியைத் தடவிக்கொண்டான். அவன் கண்டு பிடித்திருந்ததெல்லாம் பங்களாவின் சமையல் வெகு தரம். பட்சணங்கள் அதி சுகம்; அவ்வளவுதான்!

சாம்புவின் பதிலை எதிர்பாராதவனாக அந்த ஆசாமி, 'சாம்பு! நான் ஓர் இரகசியம் சொல்லுகிறேன், ஞாபகத்தில் வைத்துக் கொள்ளும். இந்தக் காலத்தில் திருடனைப் பார்த்துத் திருடன் என்று சொல்ல முடியாது. திருடன் ஒருவனே போலீஸ் உடையில் வரலாம். அது உமக்குத் தெரியாததல்ல! ஆகவே, போலீஸார் உடையணிந்தவர்களை நான் உடனே நம்பிவிடுவதில்லை. அவர்கள்மீது முக்கியமாகக் கவனம் செலுத்துவேன்.

நீரும் அப்படிச் செய்து, அவர்களுடைய நடவடிக்கைகளை என்னிடம் ஒப்புவிக்க வேண்டும். நானும் அவ்வப்போது உம்மிடம் விஷயங்களைச் சொல்லி வருவேன்! தெரிந்ததா?'

'உம்!' என்றான் சாம்பு. இந்தத் துப்பறிபவன் மகாகெட்டிக்காரன் என்று சாம்பு உடனே எண்ணிக் கொண்டான். 'எனக்கு இன்று இரவே திருட்டு நடக்கலாம் என்ற ஒரு சந்தேகம் இருக்கிறது. இன்று மாப்பிள்ளை அழைக்கிறார்கள். ஆகையால், கொஞ்சம் கலாட்டா இருக்கும். மகாராணியும் முத்துமாலையை அணிந்து கொள்ளுவாள். நீர் கவலைப்பட வேண்டாம். மகாராணியின் வேலைக்காரியை அதிஜாக்கிரதையாக இருக்கச்சொல்லி இருக்கிறேன். என்னையும் அடிக்கடி தனிமையில் கலந்துகொள்ளச் சொல்லி இருக்கிறேன்.'

'உம்!' என்றான் சாம்பு.

'நீர் முக்கியமாகப் போலீஸ் உடையில் இருப்பவர்களைக் கண் காணித்துக் கொள்ள வேண்டியது. மற்றபடி நீர் ஒன்றுமே செய்ய வேண்டியதில்லை!'

'ஏன், நீரும் பங்களாவுக்குள் வாருமேன்!' என்று சாம்பு அழைத்தான்.

'நான் இப்போது வரக் கூடாது. நான் வருவதால் திருடன் ஜரூராவான். இந்தக் கோணல் வேலை செய்வது யாருக்கும் தெரியக் கூடாது. மகாராணியின் வேலைக்காரி வருவதைப் பார்த்தால், எனக்கு விஷயம் வருகிறது என்பதை நீர் தெரிந்து கொள்ளும். முத்து மாலை களவு போய்விட்டது என்று நீர் கேள்விப்பட்டால் கூட லட்சியம் செய்ய வேண்டியதில்லை. என்னை மீறிக்கொண்டு அது எங்கேயும் போய்விடாது. தெரிந்ததா? நீர் இப்போது பார்த்து வந்து யாராவது போலீஸ் காரன் இருக்கிறானா என்ற விவரத்தை எனக்குச் சொல்லும். நான் இங்கே மரத்தின் பின்னாலேயே இருப்பேன்.'

'உம்!' என்றான் சாம்பு. அப்போது பாண்டுகளின் கோஷமும் இதர முழக்கங்களும் கேட்கவே, சாம்புவை அவனுடைய புதிய நண்பன் அனுப்பிவிட்டு, சற்று விலகி ஒரு மரத்தின் பின்னால் ஒதுங்கிக் கொண்டான்.

சாம்புவுக்கு, எல்லாம் கதை போல் இருந்தது. தனக்குக் கடவுள் உதவி செய்வார் என்பதில் அவனுடைய நம்பிக்கை அதிகமா யிற்று. சமயத்தில் ஒரு புதிய நண்பன் தோன்றி அவனுக்கு உதவி செய்யப் போகிறான்! அவனுடைய வேலை சரி பாதிக்கும் குறைந்துவிட்டது.

பங்களாவின் கேட்டை அவன் அணுகியபோது, ஒரு பெரிய கூட்டமாகப் பங்களாவாசிகள் வெளிப்பட்டார்கள்.

மோட்டார்கள் வெளிவந்தன. அவ்வளவு பேரும் போன பிறகு சாம்பு உள்ளே நுழைந்தான். வாசற்படியண்டை ஒரு பெரிய மோட்டாரையும் அதன் பக்கத்தில் ஒரு போலீஸ் சேவகன் நிற்பதையும் சாம்பு கவனித்தான். போலீஸ்காரன், சாம்புவை ஒருமுறை பார்த்துவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

'ஹூம்!' என்றான் சாம்பு. துப்பறியும் நண்பன் சொன்ன புத்திமதி பளிச்சென்று ஞாபகத்துக்கு வந்தது. 'ஓஹோ! வேஷமா போடறே? உன்னைக் கவனிக்கிறேன்!' என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். உடனே பங்களாவின் பின்புறம் விரைந்து சென்று சமிக்ஞை செய்யவே, நண்பன் தலையை நீட்டி, 'எத்தனை நேரமாக்கிவிட்டீர்?' என்றான்.

'நான் என்ன செய்வது? வாசற்படியில் போலீஸ்காரன் நிற்கிறான். அவன்மீது எனக்கு நம்பிக்கையில்லை!' என்றான் சாம்பு.

'அவனை நன்றாகக் கவனித்துக்கொள்ளும். மகாராணியிடமோ வேலைக்காரியிடமோ அவன் நெருங்காமல் பார்த்துக் கொள்ளும், போம் சீக்கிரம்!'

சாம்பு நண்பனுடன் பேசிக்கொண்டிருந்தபோது, மகாராணியும் வேலைக்காரியும் பங்களா வாசலுக்கு வந்தார்கள். போலீஸ் காரன் இரண்டு பேரையும் கவனித்தான். மகாராணியின் கழுத்தை அவன் நன்றாக உற்றுப் பார்த்தான். முத்துமாலை இருந்தது. ஒரு புன்னகையுடன், மோட்டார் போகும்வரை பார்த்துக்கொண்டிருந்தான். மகாராணியை சர்வாலங்கார பூஷிதையாக மோட்டாரில் ஏற்றிவிட்டு வேலைக்காரி விறைப் பாகப் பங்களாவுக்குள் நுழைந்தாள்.

சாம்பு, திரும்பி வந்தவுடன் போலீஸ்காரனை அணுகாமல் தூர நின்றபடி கண்காணித்தான். சாம்பு நெருங்கும் சமயங்களில் அவன் ஒதுங்குவதும், சாம்பு ஒதுங்கும் சமயங்களில் அவன் நெருங்குவதுமாகச் சுமார் ஒருமணி நேரம் நடந்தது. போலீஸ் ஜவானுடைய திருட்டு விழியும், அவன் பதுங்கிப் பதுங்கிப் பார்ப்பதும் சாம்புவின் சந்தேகத்தை அதிகரித்தன. இரண்டொரு சமயம் அவன் ஜன்னல் வழியாக உள்ளே எட்டிப் பார்ப்பது சாம்புவின் திருஷ்டிக்குத் தப்பவில்லை. மறுபடி ஒருதரம் ஓடிப் போய், வெளியில் இருக்கும் தன் நண்பனிடம் இவனைப் பற்றிச் சொல்லுவோமா என்று எண்ணினான். அப்படி அவன் நினைத்து பங்களாவின் பின்புறம் சென்றபோது, மகாராணியின் வேலைக்காரி அங்கிருந்து புறப்பட்டதை அவன் கண்டான். அதில் அவனுக்கு ஒன்றும் ஆச்சரியமில்லை. இவள் அவனுக்குச் செய்தி சொல்லப் போகிறாள்; அவ்வளவுதான்! சாம்புவைக் கண்டதும் அவள் சற்று பயந்தாள். சாம்பு அவள் காதோடு, 'பயப்படாதே! போலீஸ்காரனை நான் கவனித்துக் கொள்ளுகிறேன். நீ போய் வா!' என்றான்.

அடுத்த நிமிஷம், அவள் தோட்டத்துப் பக்கமாக வெளியேறி னாள். அவள் வெளியே சென்றதை மட்டும் போலீஸ்காரன் உடையில் இருப்பவன் கண்டுகொண்டான்.

சாம்பு ஒரு பெஞ்சியில் உட்கார்ந்துகொண்டு யோசித்தான். கண்களை மூடிக்கொண்டான். இவ்வளவு நேரம் அங்குமிங்கும் அலைந்தது அசதியாக வந்தது. பெஞ்சியின் சாய்மானத்தில் நெற்றிப்பொட்டை வைத்துக்கொண்டு தூங்கலானான். இந்தத் தூக்கம் அரைமணிக்கெல்லாம் முடிவடைந்து விட்டது. திடுக் கிட்டு உட்கார்ந்தான் சாம்பு. போலீஸ்காரன் ஓர் உயரமான ஜன்னலின் மீது ஏறுவதற்கு முயன்று கொண்டிருந்ததைச் சாம்பு பார்த்தான். அடுத்த நிமிஷம் அவன் எழுந்து நின்றான்.

இந்தப் போலீஸ்காரனைத் தாக்குவதற்கு அவனுக்குச் சக்தி யில்லை. அப்படித் தாக்கினாலும், அவன், தான் போலீஸைச் சேர்ந்தவன் என்று சொல்லி சாதித்துத் தப்பித்துக் கொள்ளலாம். சாம்புவுக்கு உதவி வேண்டும்! சரியான உதவியை அவனுடைய நண்பன் - புதிய துப்பறிபவன்தான் - அளிக்க முடியும்.

அவனை எங்கே பார்ப்பது? எங்கே இருப்பான்? வேலைக் காரியைக் கேட்கலாம் என்றால், அவள் எங்கே இருப்பாள்?

சாம்பு மெல்ல வாசற்பக்கம் வந்தான். இதற்கு முன் சரியான சந்தர்ப்பங்களில் அதிர்ஷ்டம் அடித்திருக்கிறதே! அது இப்போது உதவக் கூடாதா? அது உதவிற்று! வேலைக்காரி வாசற்பக்கம் வந்தாள். சாம்பு அவளை நெருங்கி, 'ஆபத்து வந்து விட்டது! வெளி ஜன்னலில் போலீஸ்காரன் நிற்கிறான். அவனிடம் சொல்லவேண்டும். சீக்கிரம் சொல். அவன் எங்கிருக்கிறான்? நான் ஓடிப்போய் எச்சரிக்கிறேன். உம்!' என்றான்.

அவள் ஒரு நிமிஷம் யோசித்தாள். 'உடனே சொல்லுவீங்களா?' என்று கேட்டாள்.

'இதோ போய்க்கொண்டே இருக்கிறேன்.'

'மெயின் ரஸ்தாவில் ஓடுங்கள். திருப்பத்தில் தெரியும் மூன்றா வது பங்களா!'

சாம்பு நிற்கவில்லை. திரும்பி ஓடினான். தெருவை அடைந்ததும் மெயின் ரஸ்தாவில் ஓடினான். சுமார் நூறு கஜம் ஓடுவதற்குள், பின்னால் பூட்ஸ் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தால், போலீஸ்காரன் வருகிறான். சட்டென்று சாம்புவுக்கு ஒரு யோசனை தோன்றியது. ரஸ்தாவில் ஓடினால் இன்னும் பத்து நிமிஷங்களில் போலீஸ்காரன் வந்து பிடித்துக்கொண்டு விடுவான். வயலில் இறங்கிவிட்டால், பூட்ஸ் காலுடன் அவன் வரத் திண்டாடுவான். சாம்பு மறுநிமிஷம் வயலில் இறங்கி விட்டான். போலீஸ்காரன் விடாமல் துரத்தினான். சாம்புவும் அங்கவஸ்திரம் காற்றில் பறக்க, மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க ஓடினான்.

போகும்போதே, 'திருடன்! திருடன்!' என்று அவன் கூவிக் கொண்டே சென்றான். வயலை விட்டு மறுபடி ரஸ்தாவில் அவன் ஓடிய இடத்தில் ஒரு சாவடி இருந்தது. இங்கே சற்றுக் களைப்பாறினால் ஒழிய, இனி ஓட முடியாதென்று சாம்புவுக்குத் தோன்றவே அதனுள் புகுந்தான்.

அங்கே அவன் சந்தித்தது அவனுடைய புதிய நண்பன்தான். அவனுக்கு ஏற்பட்ட ஆனந்தத்தில், சாம்பு அவன்மீது பாய்ந்து இறுகத் தழுவிக் கொண்டான். 'திருடன்! திருடன்!' என்பதைத் தவிர வேறு ஒரு வார்த்தையும் அவனால் சொல்ல முடியவில்லை. புதிய நண்பனோ, தன்னை விடுவித்துக்கொள்ள எவ்வளவோ முயன்றும் சாம்பு விடவில்லை.

'திருடன்! திருடன்' என்று மேலும் கத்தினான் சாம்பு. அவன் சொல்ல விரும்பியது, 'திருடன் துரத்துகிறான்!' என்பதுதான். ஓடிவந்த வேகத்தில் அதைச் சொல்ல முடியவில்லை. அதற்குள் துரத்திவந்த போலீஸ் ஜவான், 'நீங்கள் நகருங்கள்!' என்று சாம்புவை நகர்த்திவிட்டு, அந்த ஆளைக் கைப்பிடியாகப் பிடித்துக்கொண்டான்.

சாம்புவின் மீது போலீஸ்காரன் கைபட்டதும் அவன் நடுநடுங்கி, தொண்டை அடைத்துப்போய் உட்கார்ந்து விட்டான். போலீஸ் சேவகன், சாம்புவின் நண்பன் கன்னத்தில் அறைந்து, கோட்டுப் பையிலிருந்து ஒரு முத்துமாலையை எடுத்தபோது சாம்பு திடுக்கிட்டுப் போனான்.

'மகாராணி போட்டிருக்கிற மாலை என்ன?' என்று கேட்டான் ஜவான்.

'இமிட்டேஷனுங்க! என்னை மன்னிக்கணுமுங்க. இந்தப் படுபாவியை நம்பி இறங்கிப்புட்டேன். இவனே புடிச்சுக் கொடுத்துட்டான்!' என்று அவன் சாம்புவைச் சுட்டிக் காட்டினான்.

'ஏ! பேசாதே! உன் ஆளு, மகாராணிகிட்டே வேலைக்கு இல்லே? அவ யாரு, உன் பெண்சாதிதானே?'

'ஆமாமுங்க!'

'எனக்கு அவளை, பழைய கேஸ் ஒண்ணிலேயே தெரியும். இங்கே கண்டதும், ஏதோ வேலை நடக்குதுன்னு ஊகிச்சுக் கிட்டேன். இந்தச் சாம்பு ஐயாவும் இருக்கச்சே, 'சரிதான்! பெரிய திருட்டு இருக்குதுன்னு கண்டுன்னுட்டேன். ஆனா, நீ சம்பந்தப் பட்டிருக்கேன்னு இப்பத்தான் தெரிஞ்சிக்கிட்டேன். இவரு முன்னே ஓடிவந்து பிடிச்சுக் கொடுக்காட்டி, நீ இத்தனை நேரம் மைசூரு போயிருப்பே இல்லே?'

சாம்பு விழித்தான். போலீஸ்காரன் - நிஜப் போலீஸ்காரன்தான். அவனுடைய நண்பன்தான் திருடன். மகாராணியின் வேலைக் காரி அவனுக்கு உள் கை. திருடன், சாம்புவையே கையில் போட்டுக்கொண்டு போலீஸ்காரன் மீது தன்னைச் சந்தேகப் படும்படிச் செய்து, அவனுக்குக் காவலாகவும் போட்டிருக் கிறான். வேலைக்காரியோ, அவனை வேறு எங்கேயோ

அனுப்பி, தானும் அவனுடன் தப்பித்துக்கொள்ளப் பார்த்திருக் கிறாள். போலீஸ்காரனுக்குத் தப்பித்துக்கொள்ளச் சாம்பு வயல் வழியாகக் குறுக்கே ஓடி இந்தச் சாவடிக்கு அகஸ்மாத்தாக வந்திருக்கவே, நண்பன் பிடிபட்டிருக்கிறான். இந்த உண்மைகள் சாம்புவின் மனத்தில் தோன்றின.

'எழுந்திருங்க, ஸார்! பங்களாவுக்குப் போய், இந்த ஆசாமியை யும் அந்தப் பொம்பளையையும் ஸ்டேஷனுக்கு அனுப்பலாம். இந்த மாலையை நீங்க பிடியுங்க!' என்ற போலீஸ்காரரின் குரல் சாம்புவை எழுப்பியது.

•

சாம்புவின் நோட்டுப் புத்தகத்தில், 'மகாராணியின் முத்து மாலை' என்று ஒரு தலைப்புப் போட்டு இந்த விவரங்கள் இருக்கின்றன. ஆனால் சாம்பு, தான் புதிய நண்பனை நம்பியதாக அதில் குறிப்பிடவில்லை. அவன் அவ்வளவு முட்டாள் இல்லை. கடைசியில் மகாராணியார் ஆயிரம் ரூபாய் அளித்ததாகவும், தன்னைச் சமஸ்தானத் துப்பறிபவனாக வரச் சொன்னதாகவும், தான் வர மறுத்ததாகவும் எழுதி இருக்கிறான்.



17

பங்களா மர்மம்

'சாம்பு ஸார்! நீங்கள் இன்னும் மோட்டார் ஓட்டக் கற்றுக் கொள்ளாமல் இருக்கப் படாது!' என்றார் கோபாலன் ஒருநாள் திடுதிப் பென்று.

தன்னைப் பரிகாசம் செய்யத்தான் இன்ஸ் பெக்டர் அப்படிச் சொல்லுகிறாரோவென்று சாம்பு அவர் முகத்தைக் கூர்ந்து கவனித்தான். உண்மையில் கோபாலன் எதார்த்தத்தையே சொன்னார். 'ஆமாம், சாம்பு! உங்கள் தொழி லுக்கு மோட்டார் விடத் தெரியவேண்டியது அவசியம். ஒன்றுமில்லை, பாருங்கள். சைதாப்பேட்டையில் ஒரு கொள்ளை நடக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் பஸ்ஸையும் ரயிலையும் நம்பிக் கொண்டிருக்க முடியுமா அல்லது மோட்டார் டிரைவருக்காகத்தான் காத்துக்கொண்டிருக்க முடியுமா?' என்று கேட்டார்.

'அப்படியெல்லாம் நமக்கு எங்கே சார் ஏற்படப் போகிறது? ஏதோ அதிர்ஷ்ட வசமாக...' என்று சாம்பு ஆரம்பித்தான்.

'அதுதான் வேண்டாமென்கிறேன்! உம்முடைய மூளை இருக்கிற போது, அதிர்ஷ்டம் என்னங்காணும் வந்தது? மோட்டார் ஓட்டக் கற்றுக்கொள்கிறீரா? ஒரு வார்த்தை சொல்லும்! நான் ஏற்பாடு செய்கிறேன்!'

சாம்பு பதில் சொல்லவில்லை. உச்சந்தலையைச் சொறிந்து கொண்டான். மூக்கு நுனியை இழுத்துவிட்டுக் கொண்டான். சாம்புவின் இந்தப் பழக்கங்கள் எல்லாம் இன்ஸ்பெக்டருக்குச் சகஜமானவையாகையால், அவர் சாம்புவின் பதிலை எதிர் பார்க்காமல் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து ஒரு மோட்டாரையும், கற்றுக்கொடுக்க மோட்டார் விடத் தெரிந்த ஒரு கான்ஸ்டபிளை யும் மறுநாளே அனுப்பிவிட்டார்.

சாம்புவுக்குப் பயிற்சி ஆரம்பமாயிற்று. அன்று முதலாகப் பட்டணத்துப் பாதசாரிகளுக்கும் அபாயம் அதிகரிக்கலாயிற்று. சாம்புவுக்கு, மோட்டாரை வடக்கே திருப்ப உத்தேசம் இருக்கும். கை இடது பக்கம் அதைத் திருப்பும். அதை நிறுத்த எண்ணுவான்; உடனே மோட்டார் கடும்வேகத்தில் கிளம்பும். ஒருதரம் மோட்டார் கவிழ்ந்து மூன்று முறை உருண்டு பின் எழுந்து நின்றது. கற்றுத்தரவந்த கான்ஸ்டபிள் நடுங்கிப் போய், 'சார், சார்! முதல்லே வண்டியை ஓட்டக் கத்துக்குங்க! இந்த மாஜிக் வேலைகளைப் பின்னாடிப் பழகிக்கலாம்' என்று வேண்டிக் கொண்டான்.

சுமார் பதினைந்து நாள்கள் சாம்பு பழகியிருப்பான். சுமாராக மோட்டார் வண்டியும் அவன் சொன்னதைக் கேட்கத் தொடங்கி இருந்தது. அந்தச் சந்தோஷத்தில் சாம்பு தன்னை மறந்திருந்தான். அப்போதுதான் சாம்புவுக்குத் தன் சுய நினைவை உண்டாக்கிய ஒரு சிறு சம்பவம் நடந்தது.

அன்று, சாம்பு ஒரு சினிமாவுக்குப் போயிருந்தான். திரையில் சுவாரசியமற்ற கட்டம். காதலியும் காதலனும் உட்கார்ந்து பேசி, பொழுதைப் போக்கிக்கொண்டிருந்த காட்சி நடந்து கொண் டிருந்தது. சாம்புவுக்கு முன்சீட்டில் இருவர் பேசிக் கொண்டிருந் தார்கள். இருட்டில் அவர்கள் முகத்தைக் கவனிக்க முடியாமல் போனாலும், பேச்சு மட்டும் கணீரென்று சாம்புவின் காதில் விழுந்தது.

'ஊரெல்லாம் எத்தனை திருட்டு, கொள்ளை என்கிறீர். கையிலே இருக்கிற குடையை அழுத்திக்கொண்டு போய்விடுகிறேன்

என்கிறான்! இனிமேல் துப்பறியும் சாம்புவைத் தான் வரவழைக்க வேண்டியிருக்கும்போல் இருக்கிறது!' என்றார் ஒருவர்.

'சாம்பு வந்து, என்னத்தைப் புரட்டிவிடுவான் காணும்! கொஞ்ச நாளாக அவன் பேரைக்கூடக் காணோம்! இந்தப் பட்டணத்தில் எத்தனை கேஸ் பிடிக்கலாம்? எத்தனை பேர் அரிசி மூட்டையும் கோதுமை மூட்டையும் வீட்டில் சேர்த்து அடுக்கி வைத்துக் கொண்டிருக்கிறார்கள்?'

'சாம்பு அது விஷயம் கவனித்திருக்கலாம் அல்லது கவனித்துக் கொண்டிருக்கிறாரோ என்னவோ?' என்றது மற்றொரு குரல்.

'ஹூம்! சாம்புவா! தலையைச் சீவிவிட மாட்டான்களா, சாம்பு அங்கெல்லாம் தலையை நீட்டினால்! இதிலே பெரிய பெரிய கைகள் எல்லாம் சம்பந்தப்பட்டிருக்கு, தெரியுமா?'

'எத்தனையோ பெரிய கைகளை, சாம்பு விலங்கு மாட்டிக் கொண்டு போயிருக்கிறார். அது தெரியுமா உமக்கு?'

'சும்மா இருங்காணும். சாம்பு மட்டும் சைதாப்பேட்டை யிலேயே...'

இவ்வளவு நேரம் மூக்கைச் சொறிந்து கொண்டிருந்த சாம்பு முன்னால் சாய்ந்து, சைதாப்பேட்டையில் என்ன விசேஷம் என்று அறிய முயன்றான். ஆனால் அப்போது, வெள்ளித் திரையில் காதலனும் காதலியும் கர்லாக் கட்டைகளைத் தூக்கிக்கொண்டு ஒருவரை ஒருவர் தாக்கிக்கொள்ளும் ரசமான சந்தர்ப்பம் வந்திருந்தது. ஜனங்களின் சந்தோஷம் எல்லை மீறிப்போய், சிரிப்பும் கரகோஷமும் கொட்டகையே இடிந்துவிடும்போல் எழுந்தன. அந்தச் சத்தத்தில் சாம்பு என்ன முயன்றும், அவர்கள் பேச்சைக் கேட்க முடியாமல் போயிற்று. இண்டர்வெலுக்கு விளக்கு போட்டபோது, தன் முன் சீட்டுகள் காலியாக இருந்ததைச் சாம்பு கவனித்தான்.

இரவு பத்து மணிக்கு மேலாக, சாம்பு சைதாப்பேட்டையில் வீதி வீதியாக நடக்கத் தொடங்கினான். எங்கேயாவது மூட்டைகள் வந்து இறங்குகின்றனவா என்று கண்ணோட்டம் விட்டான். இது மிகவும் ஆபத்தான வேலை. ஒரு கால் மாட்டிக்கொண்டு உயிர் விடவேண்டி வந்தாலும் வரலாம் என்ற பயம் சாம்புவுக்கு இருந்தது. ஆகவே, இன்ஸ்பெக்டர் கோபாலனிடம் ஒரு

வார்த்தை போட்டு வைப்பது நல்லது என்று எண்ணினான். அதில் இன்னொரு சிரமமும் இருந்தது. தான் எடுத்த காரியத்தில் ஐயம் பெறாவிட்டால், கோபாலன் என்ன எண்ணுவார்? 'வரவரச் சாம்பு சுத்த சாம்பார்! என்று அவர் முடிவு செய்யலாம். அதற்கு இடங் கொடுக்கக் கூடாதென்று சாம்பு சிந்தனை செய்து ஒருவித முடிவுக்கு வந்தான். கோபாலனிடம் போய், 'சைதாப்பேட்டை யில் ஓர் அலுவல் இருக்கிறது. அதைப் பற்றி இப்போது ஒன்றும் சொல்வதற்கில்லை. என் சந்தேகம் உண்மையாகுமானால் பிறகு உமது உதவி வேண்டியிருக்கும்!' என்று சொல்லி வைத்தான்.

'என் உதவியா? போலீஸ் இலாகா முழுவதுமே உமக்கு உதவி செய்யக் காத்திருக்கிறதே, மிஸ்டர் சாம்பு! உத்தரவு போடும். காத்திருக்கிறோம்!' என்றார் கோபாலன்.

சாம்பு திரும்பினான். அவன் வந்துபோன பதினைந்து நிமிஷத்துக் கெல்லாம் கோபாலன் டெலிபோனில் சைதாப்பேட்டை போலீஸ் ஸ்டேஷனைக் கூப்பிட்டு, 'மிஸ்டர் சாம்பு ஒரு கேஸ் விஷயமாகச் சைதாப்பேட்டையில் வேலை செய்ய வருகிறார்!' என்றார்.

டெலிபோனில் பதில் சொன்ன அதிகாரி துள்ளிக் குதித்தார். 'வரட்டும், சார்! இங்கே சாம்பு வருவாரா? எப்போது வருவார்? எங்களாலான உதவியை...'

'அவர் எப்போது வருவார் என்று நான் சொல்ல முடியாது. அவர் வரும்போது வேண்டிய உதவி செய்யுங்கள். உடனே எனக்கும் தெரிவியுங்கள். அவரை யாரும் அநாவசியமான கேள்விகள் கேட்க வேண்டாம். அவர் செய்யும் ஒவ்வொன்றிலும் ஏதாவது உள்ளர்த்தம் இருக்கும். தெரிந்ததா?' என்றார் கோபாலன்.

சைதாப்பேட்டை போலீஸ் ஸ்டேஷனில் ஜவான்களெல்லாம் சாம்புவின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். என்ன கேஸோ, என்ன ஆச்சரியமான மர்மமோ, என்ன அவசரத்தில் அவர் வருவாரோ என்று அவர்கள் ஆவலுடன் காத்திருந்தார்கள்.

இதையெல்லாம் அறியாத சாம்பு, சைதாப்பேட்டை ரஸ்தாவில் நடந்து கொண்டிருந்தான்.

மணி பதினொன்று அடித்திருக்கும். அவன் ஒரு பெரிய பங்களாவின் முன்பு நின்றுகொண்டிருந்தான். சந்திரன் இன்னும் கிளம்பவில்லை. பங்களாவின் மாடியில் ஒவ்வொரு ஜன்னலி

லிருந்தும் பளீரென்று மின்சார வெளிச்சம் அடித்துக் கொண்டிருந் தது. மாடி அறையில் அத்தனை விளக்குகளும் ஏற்றப்பட்டிருந் தனவென்று அவன் ஊகித்தான். சுற்றுப்புறத்தில் எங்கும் அந்த காரம்! இந்த வீட்டில் மட்டும் பதினொரு மணி வேளைக்கு என்ன வேலை இருக்க முடியும்?

சாம்பு மனத்தைத் திடம் செய்துகொண்டு உள்ளே நுழைந்தான். காம்பவுண்டு இரும்பு கேட் சும்மா திறந்தபடி இருந்தது. சாம்பு நுழைந்ததை யாரும் கவனிக்கவில்லை. பங்களாவின் முன் வாசலில் சிறிது தயங்கினான். அங்கேயும் அவனைத் தடுப்பவர் யாருமில்லை. ஹாலைத் தாண்டி உள்ளே எட்டிப் பார்த்தான். ஒரு கணம் திகைத்துப் போனான். மங்கலாக இருந்த வெளிச்சத்தில், சுவரோரமாக வரிசை வரிசையாக மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டு இருந்தன! அவ்வளவும் என்ன மூட்டைகள்? இது பெரிய கேஸாகவல்லவா போய்விடும்போல் இருக்கிறது? மூட்டைகளை நெருங்க சாம்பு காலை ஓர் அடி எடுத்து முன் வைத்தான். ஹால் ஓரத்திலிருந்த மாடியில் ஆஜானுபாகுவாக ஓர் ஆசாமி அப்போது இறங்கி வந்துகொண்டு இருந்தான்.

'யார் ஐயா நீ?' என்ற இடிபோன்ற குரலில் அவன் கேட்கவே, சாம்பு பயந்து, சிலையாகச் சமைந்து போய்விட்டான். திருடன் என்று எண்ணிவிட்டால் என்ன செய்வதென்று நடுங்கினான். நல்ல சமயத்தில் ஒரு யோசனை தோன்றியது. 'நான் ஏ.ஆர்.பி.யைச் சேர்ந்தவன். மணி பதினொன்றாகியும் மாடியில் வெளிச்சம் தெரிகிறதே என்று பார்க்க வந்தேன்!' என்றான் சாம்பு.

அந்த மனிதன், 'அட! பதினொரு மணியாகிவிட்டதா? சரி! அணைக்கிறோம், சார்! வேலையில் கவனமாக இருந்ததிலே மணி போனதே தெரியவில்லை!' என்று சற்றுப் படிமானமாகப் பதில் சொல்லவே, சாம்புவும் சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் வாசலைப் பார்க்க நடையைக் கட்டினான். விறுவிறுவென்று சிறிது தூரம் நடக்கிறார்போல் நடந்து, பங்களாவிலிருந்து நூறு கஜத்துக்கு அப்பால் போய் நின்றுகொண்டான். அந்த மூட்டைகளில் இருப்பது என்ன? அதைத் தெரிந்துகொள்ளாமல் போக சாம்புவுக்கு இஷ்டப்படவில்லை. போலீஸ் உதவியைக் கோரலாமா? இந்த யோசனை உடனே கைவிடப்பட்டது. இத்தனை நாளாகப் போலீஸுக்கு உதவி செய்தது போக, இப்போது இந்த அற்ப கேஸுக்காக ஊம்! ஹூம்! போகவே கூடாது.

சாம்புவின் கால்கள் தாமாகவே திரும்பின. பங்களாவின் மாடியில் இன்னும் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. சாம்பு காம்பவுண்டுக்குள் நுழைந்தான். யாரிடமாவது மறுபடி சிக்கிக் கொண்டால் என்ன செய்வது? பங்களாவைச் சுற்றிக் குரோட் டென்ஸ் செடிகள் செழிப்பாக வளர்ந்திருந்தன. அவைகளில் மறைந்தவாறு, ஓரமாகப் பங்களாவைப் பாதிப் பிரதட்சிணம் செய்திருப்பான். சுவரில் சுமார் ஒன்பதடி உயரத்தில் வெண்டி லேட்டர் துவாரம் இருப்பது சாம்புவுக்குத் தெரிந்தது. அதை எட்டிப் பிடித்தால், கூடத்து ஹாலில் இருக்கும் மூட்டையை அதன்மூலம் பரீட்சிக்கலாம். உண்மையில் ஒரு மூட்டை, வெண்டிலேட்டர் துவாரத்தில் பாதியை அடைத்துக்கொண் டிருந்தது.

சாம்பு சுற்றுமுற்றும் பார்த்தான். எதிரில் திறந்தபடி மோட்டார் கேரேஜ் இருந்தது. அதில் ஒரு பழைய மோட்டாரும் நின்றது. எங்கும் நிசப்தம். சாம்பு மனத்தைத் திடமாக்கிக் கொண்டு, ஜன்னலில் கால் வைத்து ஏறினான். ஜன்னலில் நின்று கையை உயர்த்தியபோது, வெண்டிலேட்டரை எட்டிப்பிடிக்க முடிந்தது. ஒரே எழும்பலில் தாவி விடலாம். சாம்பு இந்த முயற்சியைச் செய்யலாமா, அது நம்மால் சாத்தியமா என்று தயங்கியபோது, அவன் தயக்கத்தை நீக்குவதுபோல் சற்றும் எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்தது.

அடுத்த வீட்டு மொட்டை மாடியில் உலாவ வந்திருந்த ஒருவர், பங்களாவின் பக்கம் நோக்கி இருக்கிறார். இருட்டில் ஏதோ அசைவதைக் கவனித்து ஊன்றிப் பார்க்கவே, வெள்ளைச் சுவரின் மீது ஓர் ஆளின் உருவம் ஏற முயல்வதைக் கண்டு விட்டார். 'ஐயோ! திருடன்! திருடன்! முதலியார்வாள் உங்கள் வீட்டில் திருடன்!' என்று கூச்சல் போடத் தொடங்கிவிட்டார். சாம்பு, அதே க்ஷணம் தன் யோசனையைக் கைவிட்டான். இப்போது அகப்பட்டுக் கொண்டால், ஜெயிலுக்குப் போகவேண்டியது தான்! முதலில் ஒரு தடவை அந்த வீட்டுக்குள் போய் ஏ.ஆர்.பி.காரன் போல் வேஷம் போட்டதற்காக வேறு நாலு தெப்பல் கூடவே விழும், சந்தேகமில்லை.

அடுத்த வீட்டில் கூக்குரலோ அதிகமாகி வந்தது. அந்த ஆளுடன் இப்போது ஒரு ஸ்திரீயும் சேர்ந்துகொண்டு, தன் கீச்சுக் குரலில் கூடவே கத்தினாள்.

எப்படியாவது தப்பித்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் சாம்புவைப் பலமாகப் பிடித்துக் கொண்டது. ஓடினால் வாசற்படி தாண்டுமுன் பிடிபடவேண்டியதுதான். அதற்குள்ளாகவே பங்களாவில் சந்தடியும் சலசலப்பும் கேட்டன. தப்பித்துக் கொள்ள மோட்டார் வேண்டும். கேரேஜில் அதற்காகவேபோல் ஒரு மோட்டார் வண்டி காத்திருந்தது. சாம்பு அதை உபயோகிக்க முடிவு செய்தான். ஒரே நிமிஷத்தில் அதனுள் பாய்ந்து அதைக் கிளப்பி விட்டான்.

எப்படி அவன் தப்பித்தான் என்று கேட்டால் இன்றைக்கும் சாம்பு வால் சரியான பதில் சொல்ல முடியாது. சாம்பு கற்றுக்கொண் டிருந்த சொற்ப மோட்டார் ஓட்டும் அநுபவமும் அந்த நெருக்கடி யில் அவனைக் கைவிட்டது. எதையோ அமுக்கினான்; மோட்டார் இன்னும் வேகமாக ஓடிற்று. எதையோ இப்படியும் அப்படியும் திருப்பினான். மோட்டார் வலது புறமும் இடது புறமும் ஓடிற்று. எந்த இடத்தைத் தவிர்க்க வேண்டுமென்று நினைத்தானோ அங்கெல்லாம் அது சென்றது. கடைசியாக, ஒரு பெரிய வீதியில் திரும்பி போலீஸ் ஸ்டேஷனை நோக்கி ஓடியது. உண்மையில் சாம்பு மோட்டாரை ஓட்டவில்லை; மோட்டாரே சாம்புவை இழுத்துக்கொண்டு போயிற்று! போலீஸ் ஸ்டேஷனைக் கண்ட சாம்புவுக்குத் துணுக்கென்றது. அதன் பக்கம் போகாமல் வேறு புறமாகப் போய், மோட்டாரையும் விட்டுவிட்டு ஓடித் தப்ப வேண்டும். ஆனால் சாம்பு ஒன்று நினைக்க, மோட்டார் வேறொன்று நினைத்தது. போலீஸ் ஸ்டேஷன் வாசலில் இருந்த ஒரு லாந்தல் கம்பத்தை நோக்கிச் செல்லவே, சாம்பு பதறிப்போய் எதையோ பிடித்து உதைத்தான். மோட்டார் அந்த லாந்தல் கம்பத்தைத் தொட்டவாறு சடேரென்று நின்றது.

அதே சமயம் மோட்டாரின் பின் சீட்டின் அடியிலிருந்து ஓர் ஆசாமி தடுமாறிக்கொண்டு எழுந்தவன், மோட்டார் நின்ற அதிர்ச்சியில் வெளியே தூக்கி எறியப்பட்டான். சாம்புவை எதிர்பார்த்து வாசல் பக்கம் வந்த இரண்டு போலீஸ் ஜவான்கள், அந்த ஆளைக் கப்பென்று பிடித்து நிறுத்தினார்கள். ஒருவன் விளக்கை அவன் முகத்தில் பிடித்து, 'என்ன அப்பேன்! கில்லாடி முனிசாமின்னா! நீ எங்கேப்பா வந்தே? வா உள்ளே!' என்றான்.

மோட்டார் சத்தம் கேட்டு அவசரமாக வந்த சப்-இன்ஸ்பெக்டர், சாம்புவைக் கைலாகு கொடுத்து அழைத்துச் சென்றார்!

மோட்டார் பின்னால் வேறோர் ஆள் வந்தான் என்பது சாம்புவுக்குத் தெரிந்ததும், அவன் ஆச்சரியமும் பயமும் அதிகரித்தன. அந்த ஆசாமி பங்களாவில் தன் திருட்டுக் காரியங்களைக் கவனித்திருக்க வேண்டும். இன்ஸ்பெக்டரிடம் எல்லாவற்றையும் அவன் சொல்லி விடுவான். இனி, தப்பிக்க வழி இல்லை!

ஆனால், சாம்புவை இன்ஸ்பெக்டர் ஒன்றுமே கேட்கவில்லை. கில்லாடி முனிசாமியின் பக்கம் திரும்பினார். 'என்னடா!' என்றார்.

'எல்லாம் அவரையே கேளுங்க!' என்றான் சாம்பு.

'அவனே சொல்லட்டும்!' என்றான் சாம்பு.

முனிசாமி வெளியாக்கிய விவரம் சப்-இன்ஸ்பெக்டரை ஒருவிதத்தில் ஆச்சரியப்படுத்தியதென்றால், சாம்புவை அது பதினாயிரம் விதத்தில் வியப்படையச் செய்தது. முனிசாமி தந்த வரலாற்றின் சாராம்சம் இதுதான்.

பங்களாவின் சுவான்தாரர் காமாக்ஷி முதலியார் அன்றுதான் பேங்கிலிருந்து ஒரு லட்ச ரூபாய் வாங்கியிருந்தார். அதைப் பேங்கிலிருந்தே உளவறிந்து, கில்லாமுனிசாமியும் சோதா சொக்கனும் பங்களாவுக்குள் வந்திருக்கிறார்கள். சொக்கன் உள்ளே புகுந்துவிட்டான். முனிசாமி வெளியே வேவு பார்த்துக் கொண்டு கேரேஜுக்குள் ஒண்டிக்கொண்டிருந்தான். முதல் தடவை சாம்பு வந்து உள்ளே பார்த்துவிட்டு ஏதோ பேசிவிட்டு வந்தார். பிறகு, சுவர் வழியாக ஏறிப் பார்த்தார். முனிசாமி உடனே மோட்டாருக்குள் பின் சீட்டின் அடியில் பதுங்கிக் கொண்டான். உள்ளே சொக்கன் இருப்பதைப் பார்த்துக்கொண்டு சாம்பு மோட்டாரில் பாய்ந்து, அதைப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுவந்து விட்டார். நடுவில் முனிசாமி குதித்துத் தப்பித்துக் கொள்ள முடியாதபடி மோட்டாரைக் கோணல்மாணலாகக் குலுக்கிக் குலுக்கி அவர் ஓட்டி வந்தார். சொக்கனும் ஓடிவிடாதபடி பக்கத்து வீட்டில் சொல்லி, கூச்சல்போட வைத்திருக்கிறார்:

சாம்புவுக்குத் தைரியம் வந்தது. அதிர்ஷ்ட தேவதை அவன் பக்கந்தான் இருந்தாள்! 'பங்களா கூடத்தில் மூட்டைகளில்...' என்று அவன் ஆரம்பித்தான்.

'ஆமானுங்க! மூட்டைக்குப் பின்னாலே ஒளிஞ்சிக்கிட்டிருந்தானுங்க சொக்கன்! இந்நேரம் அவனும் மாட்டிக்கிட்டிருப்பானுங்க!' என்றான் முனிசாமி.

போலீஸ் ஸ்டேஷன் வாசலில் தடபுடல் பட்டது. ஒரு காரில் பங்களா சொந்தக்காரரும் அவர் ஆள்களும் சொக்கனைக் கைப்பிடியாகக் கொண்டு வந்தார்கள். காமாக்ஷி முதலியார், 'இவன் எங்கள் வீட்டில் மணல் மூட்டைகளுக்குப் பின்னால் இருந்தான்!' என்றார்.

'மணல் மூட்டைகளா அவை?' என்று சாம்பு மனத்தில் எண்ணி, வாயைப் பிளந்தான்.

'நாங்களே அங்கு வருவதாக இருந்தோம். மிஸ்டர் சாம்பு, முனிசாமியைக் கொண்டுவந்து விட்டுவிட்டு, சொக்கனைப் பிடிக்க எங்களை அழைக்கத்தான் மோட்டாரில் அவசரமாக வந்திருக்கிறார். இவரால்தான் உங்கள் பணம் இன்றைக்குத் தப்பியது!' என்றார் சப்-இன்ஸ்பெக்டர்.

அப்போது விஷயங்களைக் கேட்டுக்கொண்டே நுழைந்த கோபாலன், சாம்புவின் முதுகில் தட்டி, 'பலே, சாம்பு சார்! உம்மை நம்பவே கூடாது!' என்றார்.

18

சாம்புவும் வேம்புவும்

சாம்புவுக்கு அதிர்ஷ்டத்தின் மேல் அதிர்ஷ்ட மாக வந்தது. அவனைப் பெரிய உத்தி யோகஸ்தர்கள் எல்லாரும் மதிப்புடன் நடத்தினார்கள். சிலருக்கு, அவனிடம் உள்ளூறப் பயம் உண்டென்று கூட வதந்தி இருந்தது. ஒரு நல்ல நாள், பெரிய நாள் என்றால் சாம்புவின் வீட்டில் இவர்கள் அனுப்பிய பழங்களும் பட்சணங்களும் குவிந்து மிதியலாடின.

சாம்புவுடன் பேசினால் ஒரு பெருமை என்று அண்டை அயல் வீட்டுக்காரர்கள் மதித்தார் கள். அவனுக்கு உதவி செய்ய அவர்கள் சந்தர்ப்பம் கிடைக்காதாவென்று காத்துக் கிடந்தார்கள். சுவாமி, வீதியில் புறப்பட்டு வந்தால், சாம்புவின் வீட்டு வாசலில் நாயனக்காரர் அரைமணி கச்சேரி செய்வார். கோயில் அர்ச்சகர், சுவாமியின் மேலிருந்து ஒரு பெரிய மாலையைக் கழற்றிவந்து சாம்புவின் கழுத்தில் சூட்டுவார். சாம்பு, தம் ஹோட்டலில்தான் சாப்பிடுவதாக ஒரு ஹோட்டல்காரர் விளம்பரம் செய்தார். 'சாம்பு கபே', 'சாம்பு மளிகை வியாபாரம்', 'சாம்பு

டெய்லரிங் ஓர்க்ஸ்', 'சாம்பு லாண்டரி', 'சாம்பு லஞ்ச் ஹோம்', 'சாம்பு பேக்கரி', 'சாம்பு ரிக்ரியேஷன் கிளப்' - இப்படிக் கிளம்பின. 'சாம்பு நகர்' என்று ஒரு பேட்டையும், 'சாம்பு பார்க்' என்று ஒன்றும் ஏற்படப்போவதாகப் பலமான பிரஸ்தாபம் வேறு இருந்தது. சாம்புவின் முக லக்ஷணங்களில் ஏதாவது ஒன்று படைத்திருந்தவர்களுக்குச் சாம்பு என்ற பட்டப்பெயர் வைத்து அழைக்கவும் தொடங்கிவிட்டார்கள். பெரிய காரியங்களில் தலையிட முயற்சிப்பவர்களைக் கேலி செய்யும்போது, 'போங்காணும் பேசாமல்! உம்ம மனத்துக்குள் நீர் பெரிய சாம்பு என்ற எண்ணமோ!' என்று கேட்பார்கள்.

இப்படியாகச் சாம்புவின் பெயர் நாளுக்கு நாள் பிரபலமாகி வந்தபோது, சாம்புவின் மனத்தில் மட்டும் விவரிக்க வொண்ணாத ஓர் ஏக்கம் சூழ்ந்துகொண்டிருந்தது. அவனுக்குக் கேஸ்கள் அதிகம் வரவில்லை. அவை வந்தாலாவது, அதில் சிறிது தனது கவனத்தைச் செலுத்தலாம் என்று எண்ணினான். ஒருசமயம், சாம்பு நேரே போலீஸ் கமிஷ்னர் ஆபீஸுக்குப் போய் இன்ஸ்பெக்டர் கோபாலனைச் சந்தித்தான். 'ஏதானும் கேஸ்-கீஸ் இருந்தால் இப்படித் தள்ளி விடுமேன்!' என்று கேட்டான்.

'நீர் பார்க்கும்படியான கஷ்டமான கேஸ் ஒண்ணும் இல்லைங் காணும்!' என்றார் கோபாலன்.

'என்னமோ உற்சாகமாகவே இல்லை. இன்னதென்று சொல்ல முடியாத ஒரு கவலை வந்து சூழ்ந்துகொள்கிறது, சார்!' என்று சாம்பு சொன்னான்.

'பணம் நிறையச் சேர்த்துவிட்டீர். உமக்கு ஏதுக்குக் கவலை? உம்ம வீட்டில் வந்து அதை அபகரிக்கக்கூட ஒருத்தனுக்கு இந்த உலகத்தில் தைரியம் இருக்கிறதா?'

'அதற்கில்லை சார்! என்னமோ ஒன்றும் ரசமாயில்லை. எதைப் பார்த்தாலும் வேம்பாயிருக்கிறது. வேம்பாகத் தோன்றுகிறது.'

'சரிதான்! அதற்கு வழிசெய்ய வேண்டியதுதான்!' என்றார் கோபாலன்.

சாம்பு, வீட்டுக்குத் திரும்பியபோது வீட்டு வாசலில் யாரோ ஒருவர் அவனுக்காகக் காத்திருப்பதைக் கவனித்தான். எது வேண்டுமென்று சாம்பு கேட்டுக்கொண்டு கோபாலனைத் தேடிப்

போனானோ, அதையே இவர் வைத்துக்கொண்டு காத்திருந்தார். சாம்புவைக் கண்டதும் ஒரு கும்பிடு போட்டு, 'ஒன்றுமில்லை. இந்தக் கடுதாசி ஒன்று பஸ்ஸில் கிடந்தது. அகஸ்மாத்தாகப் படித்தேன். ஏதோ மர்மம் இருக்குமென்று உங்களிடம் உடனே கொண்டு வந்தேன்!' என்று வந்தவர் ஒரு காகிதத்தை அவனிடம் நீட்டினார்.

சாம்பு அதைப் படித்தான். அதில் கையெழுத்துமில்லை, விலாசமுமில்லை.

'தம்பி, வீணாகக் காலம் கடத்தாதே! நாளை மாலை ஆதிபுரீசுவரர் பிரகாரத்தில் என்னை வந்து பார். அங்கே ஒரு முடிவு செய்து கொண்டு, நாளைக்கே வேலை தொடங்கிவிட வேண்டும். தோப்பில், ராவுக்கு ராவே வெட்டிப்போட வேண்டியதுதான். இரண்டாம் பேருக்குத் தெரிய வேண்டியதில்லை. தோப்பின் கோடியிலேயே ஒரு பள்ளம் வெட்டிக் கொள்ளலாம். ஏற்பாடு செய்து கொள்ளலாம்.'

சாம்பு இரண்டு முறை படித்தான். மூக்கைத் தடவிக் கொண்டான். அவன் மூளையில் ஒன்றும் எட்டவில்லை. சாம்பு கனைத்து விட்டுக்கொண்டு வந்தவரைப் பார்த்து, 'சார்! நீங்கள் போய் வாருங்கள். ஏதாவது தகவல் இருந்தால் உங்களுக்குத் தெரிவிக் கிறேன்!' என்று அவரை அனுப்பினான்.

'இதென்ன துப்பறியும் வேலை! கேஸ் இல்லையென்றால் அது வேண்டும்போல் இருக்கிறது. கேஸ் வந்தால் அது வேண்டாம் போல் இருக்கிறது. 'வெட்டுதல், இரண்டாம் பேருக்குத் தெரியாமல் வைத்தல், குழி தோண்டுதல் - இதில் என்ன சந்தேகம்?' - சாம்பு இப்படி யோசிக்கும்போதே ஒரு திடமான முடிவும் செய்தான். 'இது போலீஸ்காரர் செய்யவேண்டிய வேலை. நேரே கோபாலனிடம் அனுப்பிவிடலாம்!' என்பதுதான் அந்த முடிவு. அப்படியே செய்தான். நிம்மதியாக, போய்ப் படுத்துக்கொண்டான்.

மறுநாள் மாலை சாம்பு எவ்வளவோ மனத்தைத் திடம் செய்து கொண்டு, அந்தப் பொல்லாத கடிதத்தை மறக்க முயன்றான். ஆனால், அது திரும்பத் திரும்ப அவன் கண்முன் வந்தது. அவன் உடல் வீட்டில் தரிக்க மறுத்தது. சரியாக ஐந்து மணிக்கெல்லாம் சாம்பு கோவிலுக்குக் கிளம்பினான்.

அன்று செவ்வாய்க்கிழமை. கோயில் பிரகாரத்தில் கூட்டமே இல்லை. சாம்புவுக்கும் கோயிலுக்குப் போகும் வழக்கம் கிடையாது. வெகுநேரம் நின்று, கோபுரத்தில் இருந்த பொம்மைகளைப் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தான். சுமார் ஐந்தரை மணிக்குமேல் ஒவ்வொருவராக யார் யாரோ பிரகாரத்தைச் சுற்றலானார்கள். அவர்கள் ஒவ்வொருவரையும் சாம்புவின் தீட்சண்யமான பார்வை துழாவியது. யார் மீதும் அவனுக்குச் சந்தேகம் விழவில்லை. சுமார் ஆறு மணிக்கு சில்க் ஷர்ட் அணிந்த ஒருவன் வந்து, சாம்புவுக்கு எதிர்த்தாற்போல் யாருக்காகவோ காத்திருப்பவன்போல் நின்றான். ஒருகால் இவனாக இருக்குமோ என்று சாம்பு நினைத்தான். 'சீ! இவன் கொலை செய்பவனாகத் தோன்றவில்லையே!' என்று அந்த யோசனையைத் தள்ளினான்.

அடுத்தபடியாக ஒருவர் வந்து பிரகாரத்தில் நின்றார். அந்த ஆசாமி சீட்டி அடித்துக்கொண்டிருந்ததையும், சுற்றிச் சுற்றிப் பார்த்ததையும் கவனித்த சாம்பு, அவர்மீது உடனே சந்தேகம் கொண்டான். அதற்கேற்றார்போல் அவருடன் சுமார் நாற்பது வயதுள்ள ஒரு ஸ்திரீயும் வந்து சேர்ந்துகொண்டாள். ஒரு பொம்மனாட்டி, கொலையில் சம்பந்தப்படுவாளா என்ற சம்சயம் சாம்புவுக்கு ஒரு கணம் ஏற்பட்டது. உடனேயே அவன் சொந்த அனுபவம், 'ஸ்திரீகள் கொலைகாரிகள்' என்று வற்புறுத்தியது. சாம்பு ஒருமுறை அந்த ஸ்திரீயின் முகத்தைப் பார்த்தான். அவன் சம்சயம் உடனே மாயமாய் மறைந்தது. சட்டென்று அவர்களைப் பின்தொடர்ந்தான்.

ஸ்திரீதான் பேசினாள். 'இதைவிட அந்தப் பெண்ணை நாளைக்கே ஒரு பாழுங்கிணற்றில் தள்ளிவிடலாம். ஆமாம், அப்படித்தான் நான் சொல்லுவேன்.'

அவளுடன் சென்ற மனிதன் உடனே, 'உன் பிள்ளை எதற்கெடுத்தாலும் குறுக்கே நிற்கிறான். தெரிகிறதா? ஒரு வழியாக முன்னையோ பின்னையோ முடித்துவிட்டு, அப்பாடா என்றிருப்பதா? காலத்தை ஓட்டுவதா? ஊரிலே நாலுபேர் என்ன பேசிக் கொள்ளுவா!' என்றான்.

'ஆமாங்கறேன்! எனக்கு அவன் காரியம் பிடிக்கவேயில்லை. ரொம்பப் பயப்படறான். நான் நாளைக்குக் கும்பகோணம் போறேன்; நீயும் வா. அவன் இருந்தால் இருக்கட்டும். இல்லாவிட்டால் போகட்டும். வெட்டொன்று துண்டு ரெண்டாக...'

சாம்புவுக்கு அதற்குமேல் கேட்கவில்லை. மிகவும் நெருங்கினால் அவர்கள் சம்சயப்படுவார்களோ என்று தயங்கியதில் வார்த்தையை விட்டுவிட்டான். அவனுக்கு இனிச் சந்தேகமில்லை. இந்த இரண்டு பேரும் யாரையோ - ஏதோ ஒரு பெண்ணை - பாழுங்கிணற்றில் தள்ளப் போகிறார்கள் அல்லது வெட்டிப் போடப் போகிறார்கள். குறுக்கே அந்த ஸ்திரீயின் பிள்ளை இருக்கிறான். இன்னும் சமீபத்தில் நெருங்கக் கூடாதென்று சாம்பு ஒரு யுக்தி செய்தான். அப்பிரதக்ஷிணமாக ஓடி, அவர்கள் வரும் முன்னால், கோயில் கல்யாண மண்டபத்தைப் போய் அடைந்தான். அங்கே உத்சவங்களுக்குப் புறப்படும் பூத பொம்மைகள் நாலைந்து இருந்தன. சட்டென்று ஒரு பூத பொம்மைக்குள் புகுந்துகொண்டு அவர்கள் வருகைக்குக் காத்திருந்தான்.

ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் அவர்களும் வந்தார்கள். இப்போதும் ஸ்திரீதான் மெல்லிய குரலில் பேசினாள். 'யாரோ இங்கே துப்பறியும் சாம்புவாம். அவனை விசாரிக்கச் சொல்லியிருக்கிறானாம். எதற்கும் ஜாக்கிரதையாக நாம் இந்தக் காரியத்தில் இறங்க வேண்டும். பாரு! உனக்குத் தெரியுமா அவனை?'

சாம்பு திடுக்கிட்டான். அவர்கள் பேசுவதை இன்னும் நிதானித்துக் கேட்டான்.

அந்த ஆசாமி சொன்னார்: 'நான் அவனை நேரில் பார்த்ததில்லை. ரொம்பக் கெட்டிக்காரன், யமகாதகன் என்று இந்த ஊரிலே பேரு. பார்க்கலாம். எதற்கும் நீ சொல்றாப்போலே...' - சாம்புவுக்கு இதற்குமேல் கேட்கவில்லை. சட்டென்று பூதத்தினுள்ளிருந்து கிளம்பி அவர்களைப் பின்தொடரலாம் என்று நினைத்தான். ஆனால் துரதிருஷ்டவசமாக, யாரோ ஓர் அம்மாள் தன் சிறு பிள்ளையுடன் பிரதக்ஷிணம் செய்துகொண்டு அங்கே வந்தாள். சின்னப்பிள்ளை அந்தப் பூதங்களைக் கண்டவுடன் அவற்றை வேடிக்கைப் பார்த்துக்கொண்டு நின்றுவிட்டது.

பையன் நகர்ந்த பிறகே சாம்புவுக்கு வெளியேற முடிந்தது. ஓட்டமாக ஓடிப்போய்ப் பார்த்தான். பிராகாரம் காலியாக இருந்தது. எப்படியோ அவன் கையில் அகப்பட்டவர்கள் நழுவிவிட்டார்கள்.

இருந்தாலும் சாம்பு விடுவதில்லை என்று தீர்மானித்தான். மறுநாள் கும்பகோணம் கிளம்ப ஆயத்தமானான். அது

விஷயமாக அவன் கோபாலனிடம் போயிருந்தால் வேறு பல விஷயங்களும் சாம்புவுக்குத் தெரிந்து இருக்கும். ஏனெனில், கோபாலனுடைய ஆள் ஒருவன், மேற்படி ஆசாமிகள் கோயிலைவிட்டுப் போகும்போது அவர்களைப் பின் தொடர்ந்து சென்று, அவர்கள் பெயரையும் விலாசத்தையும் தெரிந்து கொண்டு போயிருந்தான்.

கும்பகோணத்தில் சாம்பு தெருத் தெருவாக அலைந்தான். எங்கும் அவன் தேடி வந்த ஸ்திரீயைக் காணமுடியவில்லை.

அலுத்துச் சலித்து, 'சீ! இது கைவிட வேண்டிய காரியந்தான்!' என்று எண்ணி, கும்பேசுவரஸ்வாமி கோயில் வாசற்படியில் உட்கார்ந்தான். பட்டென்று அவன் முதுகில் ஒரு ஷொட்டு விழுந்தது. சாம்பு தூக்கிவாரிப் போட்டுக்கொண்டு எழுந்து திரும்பிப் பார்த்தான். இன்ஸ்பெக்டர் கோபாலன்!

'என்ன ஒய்! என்னிடம் சொல்லாமல் வந்துவிட்டால் உம்மை விட்டுவிடுவேன் என்று நினைத்தீரோ? ஹூம்! என்னைத் தோழனாகக்கூட வைத்துக்கொள்ளமாட்டீர் போல் இருக்கிறதே!' என்றார்.

சாம்பு திணறிப் போனான். சமாளித்துக்கொண்டு, 'அதெல்லாமில்லை!' என்று ஆரம்பித்தான்.

'நீர் ஒன்றுமே பேச வேண்டாம். இந்தக் கேஸை என்னிடம் விட்டுவிட வேண்டியது. இத்தனை நாளாக எங்கள் கேஸ்களை உம்மிடம் கொடுத்தோம்! இது உங்கள் கேஸ். நாங்கள்தான் பார்ப்போம்.'

'சரி!' என்றான் சாம்பு.

'சாம்பு! நீர், வேறு வேஷ்டி கட்டிக்கொண்டு முகத்தை அலம்பிக் கொண்டு முறுக்காய் வாரும்! அவர்கள் உம்மைப் பார்த்தால் பயப்பட வேண்டாமா?' என்றார் கோபாலன்.

'சரி!' என்றான் சாம்பு.

அரைமணிக்கெல்லாம் சாம்புவும் கோபாலனும் லக்ஷ்மி விலாஸ் தெருவை நோக்கி நடந்தார்கள். போகும்போது கோபாலன், 'ஒய்! உமக்குத்தான் அந்த வீட்டு விலாஸம் தெரியும் என்று

எண்ணிக்கொண்டிராதேயும், நம்ம ஆள் விசாரித்துக்கொண்டு வந்துவிட்டான். நீர் பேசாமல் வாரும்!' என்றார்.

சாம்புவுக்கு ஆச்சரியமாயிருந்தது. அவனுக்கு எங்கே போனால் அந்த ஆசாமிகள் அகப்படுவார்கள் என்று தெரியாது. இந்தக் கோபாலன் என்னடாவென்றால், அவனையும் அங்கே அழைத்துக் கொண்டுபோய், சரிதானா என்று பார்க்கச் சொல்லுகிறார்!

'என்ன சாம்பு யோசிக்கிறீர்? லகுவாய் வேலையை முடித்து, உம்ம கையில் பேர்வழியைப் பிடித்துத் தருகிறேன்; நீர் பேசாமல் இரும்!' என்றார் கோபாலன்.

லக்ஷ்மி விலாஸ் தெருவில் ஒரு மாடி வீட்டுக்குள் கோபாலன் சாம்புவை அழைத்துக்கொண்டு போனார். கூடத்து ஹால்வரைக் கும் சென்றதும், அங்கிருந்து சுமார் இருபது வயதுள்ள ஒரு மங்கை அதிவேகமாக அடுப்பங்ககரையை நோக்கி ஓடினாள்.

'பார்த்துக்கொள்ளும், சாம்பு! இந்தப் பேர்வழியைப் பற்றித் தானே நீர் கேள்விப்பட்டதெல்லாம்!' என்றார் கோபாலன்.

சாம்பு, ஒரு பெருமூச்சு விட்டான். அவர்கள் இன்னும் அந்தப் பெண்ணைப் பாழுங்கிணற்றில் தள்ளவில்லை போல் இருக்கிறது. ஆனால், அதற்காக அவர்களைச் சும்மா விட்டு விடுவதா? ஒருகாலும் இல்லை.

விடுவிடுவென்று உள்ளே இருந்து ஓர் ஆள் வந்து கூடத்தில் ஜமுக்காளத்தை விரித்துவிட்டு வெளியே போனான். கோபாலன், அதில் சாம்புவை உட்கார்த்தித் தாமும் உட்கார்ந்தார். சிறிது நேரத்துக்கெல்லாம் சமையல் அறையிலிருந்து ஒரு ஸ்திரீ வந்தாள். கோயிலில் சாம்பு கண்ட அதே ஸ்திரீதான் அவள்! 'முகத்தில் கொஞ்சமாவது பயம் இருக்க வேண்டுமே! என்ன நெஞ்சழுத்தம்!' என்று சாம்பு எண்ணினான். 'சற்று இருங்கள். என் பிள்ளையை அழைத்துவர ஆள் போயிருக்கிறான்' என்றாள் அவள்.

சாம்புவுக்கு ஆத்திரமாக வந்தது. 'அவர் வருகிறபடி வரட்டும். பெண்ணைப் பார்த்து, எனக்குச் சில கேள்விகள் கேட்டாக வேண்டும்!' என்றான் சாம்பு.

'அவசரப்படாதீர்கள், சாம்பு சார்! முன்னை பின்னை கல்யாணம் ஆகியிருந்தால் அல்லவா உமக்கு இதெல்லாம் தெரியப் போகிறது!' என்று கோபாலன் சிரித்தார்.

சாம்பு என்ற பெயரைக் கேட்டதும் அந்த அம்மாள் திடுக்கிட்டாள். 'நீங்கள் பெண் பார்க்க வந்திருக்கிறீர்கள் என்று சொல்லுங்கள்!' என்றாள் உடனே.

சாம்பு, உடனே ஏதோ சொல்ல வாயெடுத்தான். கோபாலன் அவனை அடக்கி, 'ஆமாம், ஆமாம், ஆமாம். உங்கள் பிள்ளை சொல்லவில்லையா சமாசாரம்?' என்றார்.

'சொன்னான். ஆனால், நீங்கள் இன்று வருவதாக ஒன்றும் என்னிடம் பிரஸ்தாபிக்கவில்லை.'

'அதற்கென்ன! பெண்ணை எப்போது பார்த்தால் என்ன? எங்கள் சாம்பு, சென்னையில் உங்களைக்கூடத் துப்பறிந்து விட்டார். கோயிலில் பின்னாலேயே வந்து...'

'ஆமான்னா. இப்போதான் ஞாபகம் வரது. என் தம்பியோட பேசிண்டு போனேன். இந்தப் பெண்ணைக் கொண்டுபோய் இரண்டாம் தாரமாக யாராவது கிழவனுக்குக் கட்டறதுக்குக் கொல்லையிலே பாழுங்கிணற்றிலே தள்ளிவிடலாம்னுகூடச் சொல்லிண்டு போனேன். சாம்பு ஐயர் என்கிறவருக்குக் கொடுக்கணும் என்பது என் பிள்ளை அபிப்பிராயம். அதைக் கூடப் பேசிண்டு போனேன்!' என்றாள் அந்த ஸ்திரீ.

சாம்பு உதட்டைக் கடித்துக்கொண்டான். அவர்கள் பேச்சைப் பற்றி எவ்வளவு பெரிய தப்பர்த்தம் செய்துவிட்டான் அவன்! சாம்பு, தன் கல்யாணத்தைப் பற்றி இதுவரை நினைத்ததுகூட இல்லை. இப்போது கோபாலன் கூட்டிக்கொண்டு உட்கார்த்திப் பெண்ணைப் பார்க்கச் சொல்லி வற்புறுத்தும்போது, வேறென்ன செய்வது? தன் பிசகை ஒப்புக்கொள்வதைவிட, பெண்ணைப் பார்த்து வைப்பதே மேல் என்று அவனுக்குத் தோன்றியது.

கோபாலன்கூட அல்லவா அவன் பெண் பார்க்க வந்ததாக எண்ணிப் பின் தொடர்ந்திருக்கிறார்!

இந்தச் சிந்தனைகளில் இருந்தபோது சாம்புவின் முன்பு ஒரு பெண்மணி நிறுத்தப்பட்டாள். சாம்பு நிமிர்ந்து அவளைப் பார்த்தான். எந்தப் பெண்ணையும் அவன் அப்படிப் பார்த்தது கிடையாது. அவன் உடம்பெல்லாம் என்னவோ செய்தது. அந்தப் பெண் குனிந்தபடி ஒரு புன்னகை வேறு செய்து, சாம்புவின் உள்ளத்தைக் கொண்டே போய்விட்டாள்.

'என்ன சாம்பு! எப்படி?' என்றார் கோபாலன்.

'சும்மா இருங்காணும்!' என்றான் சாம்பு.

'இதிலெல்லாம் என்னங்காணும் வெட்கம்? பெண்ணுக்கு உம்மைப் பண்ணிக்கொள்ள இஷ்டந்தானாம். அதை அவள் முகமே சொல்லுகிறது. உம்ம சம்மதத்தைச் சொல்லிவிட்டால்...'

சாம்பு பதில் சொல்லவில்லை. அவன் சிரித்தான். வழக்கம்போல் அதில் அசடு வழிந்தது. அதைக் கண்டு, கோபாலனும் சாம்புவின் சம்மதத்தைத் தெரிந்துகொண்டார்.

சாம்புவின் கல்யாணம் சுவாமிமலையில் முருகன் சந்நிதியில் அமர்க்களமாக நடந்தது. ஊஞ்சலில் அவன் பெண்ணைப் பார்த்த பார்வையும், நலங்கின்போது கோபாலன் செய்த கலாட்டாவும் நாளைக்கும் சுவாமி மலைவாசிகள் சொல்லிக் கேட்கலாம்.

சாம்புவின் முகத்தில் ஆனந்தம் பொங்கிக்கொண்டிருந்தது. எந்த ஸ்திரீயைக் கொலைக் குற்றத்துக்கு அரெஸ்ட் செய்வதென்று வந்தானோ, அதே ஸ்திரீயை அவன் வழிமறித்து, மாமியார் என்பதற்காக விழுந்து விழுந்து நமஸ்காரம் செய்தான். துப்பறியும் சாம்பு கல்யாணத்தில் போலீஸ் நடமாட்டம் இருந்தது. போலீஸ்காரர்கள் விசிறினார்கள். சர்க்கரை, சந்தனம், தாம்பூலம் வழங்கினார்கள். பெரிய பெரிய ஸர்க்கிள்கள், டெபுடிகள் கல்யாணத்துக்கு ஆஜராகி இருந்தார்கள். அவனுக்குப் பெரிய இடங்களிலிருந்து பரிசுகள் வந்து குவிந்தன.

'ஓய்! வாழ்க்கை வேம்பாயிருக்கிறது என்றீரே இனி! மேலும் உம் வாழ்க்கை முழுவதும் ஒரே வேம்பாகத்தான் இருக்கப் போகிறது!' என்றார் கோபாலன்.

சாம்பு, அதற்குக் கோபித்துக் கொள்ளவில்லை. கோபாலன் வார்த்தையில் உண்மை இருந்தது. சாம்புவின் மனைவியின் பெயர் வேம்பு! அவனுக்கு, எதுவும் இனி வேம்பு மயமாகத் தோன்றுவது சகஜம்தானே!

சாவகாசமாக, சாம்பு கோபாலனிடம், 'என்ன சார், நான் ஒரு கடிதம் அனுப்பினேனே! அதை நீங்கள் பார்க்க அவகாசப் பட்டதோ?' என்று கேட்டான்.

'அது ஒன்றுமில்லை, ஓய்! யாரோ வாழைக் கொல்லைக்காரன் தார் வெட்டுவதையும், குழியில் போட்டு மூடி குடகாப்பு வைப்பதையும்பற்றி எழுதி இருக்கிறான். வேறொன்றுமில்லை!' என்றார் கோபாலன்.

19

புது வருஷப் பரிசு

சாம்புவின் வீரப் பிரதாபங்களைப் பற்றி ஊரெல்லாம் பேசிக் கொண்டார்கள். ஆனால், சாம்புவுக்கு ஏற்பட்டதென்னவோ முழுசான - பூரணமான - திருப்தி என்று சொல்லிவிட முடியாது. அவன் எடுத்த காரியங்கள் எல்லாமே ஒன்றைப் பார்த்தாற் போல் அமோகமாக வெற்றி பெற்றுக் கொண்டுதான் வந்தன. அவன் கையில் பெரிய பெரிய தொகைகளுக்குச் செக்குகள் வந்து குவிந்தன. சாம்புவின் சிநேகிதத்தை அடைய எத்தனை பிரமுகர்கள், எத்தனை பிரபுக்கள் துடித்துக் கொண்டிருந்தார்கள்! காலையில் எழுந்தால் பன்னிரண்டு மணி வரை ஒருவர் மாற்றி ஒருவர் சாம்பு தரிசனத் துக்காக அவன் வீட்டு வாசலில் காத்துக் கொண்டிருப்பார்கள்.

இதெல்லாம் சாம்புவுக்குப் பெருமையாகத் தான் இருந்தன. ஆனால், அவன் மனத்துக் குள் கூடக்கூடவே ஒரு போராட்டமும் நடந்து கொண்டிருந்தது. நடப்பதெல்லாம் அவன் திறமையினால் நடக்கின்றதா? அவன்

துறமை உபயோகிக்கப்பட வேண்டுமென்றல்லவா அவன் விரும்பியதெல்லாம்? படிப்படியாக அதில் அபிவிருத்தி அடைய வேண்டியதல்லவா அவன் ஆவல்? அதற்கெல்லாம் எங்கே வசதி இருந்தது?

ஏதோ அவன் அறியாத ஒரு சக்தி அவனைப் பற்றிக்கொண்டு முன்னே தள்ளிச் சென்றது. கடலில் ஒரு படகில் இருப்பவன் நிலையைப்போன்று இருந்தது அவன் நிலையும். முன்னே போக விரும்புகிறான்; துடுப்பு அவனிடம் இல்லை. ஒரு பெருங்காற்று அவனைப் பக்குவமாக முன் தள்ளிக்கொண்டு போகிறது. இதுவரை அது படகைக் கவிழ்க்கவில்லை. ஆனால், அதைக் கவிழ்க்காமல் அடக்கும் சக்தி அவனிடம் இல்லை! இனிப் பின் வாங்குவோம் என்பதற்கும் இல்லை.

சாம்புவுக்கு, இந்த நிலையானது கலக்கத்தையே உண்டாக்கிற்று. ஒரு நாளாவது ஒரு தொல்லை இல்லாமல் கழிப்போமா என்பது அவனுக்குச் சந்தேகமாகிவிட்டது. ஒருநாள் இரவு வேம்புவுடன் பேசும்போது, 'அடியே! ஒன்று சொல்லுகிறேன், கேட்கிறாயா?' என்றான்.

'சட்டுன்னு சொல்லுங்கள்; எனக்குத் தூக்கம் வருகிறது!' என்றாள் வேம்பு.

'ஒன்றுமில்லை. நாளைக்கு யார் வந்தாலும் நான் இல்லை என்று சொல்லி அனுப்பிவிடு. ஒரு நாளாவது அக்கடா என்று இருக்க வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது.'

'எனக்கென்ன, சொல்கிறேன்! ஆனால், நீங்கள் பெரிய முந்திரிக் கொட்டையாச்சே!'

'நீ பாரேன் நாளைக்கு, நான் எப்படி அடக்கமாக இருக்கிறேன் என்று!' என்றான் சாம்பு.

மறுநாள் காலை அவன் அறை ஜன்னல் கதவையே திறக்க வில்லை. அறைக் கதவையும் சார்த்திவிட்டுச் சமையல் உள்ளே உட்கார்ந்திருந்தான். யாராவது வாசலில் வரும் சத்தம் கேட்டால், உடனே ஓடிப்போய் ஒரு பீரோவின் இடுக்கில் ஒண்டிக்கொள் வான். அன்று அவன் முக்கியமாகத் தவிர்க்க விரும்பிய பேர்வழி இன்ஸ்பெக்டர் கோபாலன்தான். மனுஷர் எப்போது வந்தாலும் ஏதானும் புதுக் கேஸ் சம்பந்தமாக வந்து, சாம்புவின் பிராணனை வாங்கிக் கொண்டிருந்தார்.

'சாம்பு சார்!' என்று வாசலில் சத்தம் கேட்டது. சாம்பு திடுக் கிட்டுத் துள்ளினான். மான்போல் ஓடி, பீரோவுக்குப் பின்னால் போய் ஒளிந்துகொண்டான். வேம்புதான் வாசல் பக்கம் சென்று விசாரித்தாள். இரண்டு நிமிஷம் கழித்து ஒரு கூடை ஆப்பிள் பழங்களுடன் வந்தாள். 'வாருங்கோன்னா! வந்தவர் போய்ட் டார். ராவ்சாகிப் ராஜமாணிக்கம் உங்களுக்கு இதை அனுப்பினா ராம். ஜனவரி முதல் தேதியோன்னோ?' என்றாள்.

சாம்பு, வெளியில் வந்து தைரியமாக சம்சாரத்தின் பக்கத்தில் உட்கார்ந்து, ஓர் ஆப்பிளை நறுக்கத் தொடங்கினான்.

'நீங்க எதுக்குன்னா பீரோ பின்னாலே ஓடறேள்? நான்தான் யாரையும் உள்ளே விடாமல் பேசுகிறேனே! இன்ஸ்பெக்டர் வந்தால் இதுவரைக்கும் தாராளமா வருவார். அப்போ நீங்க ஒளிஞ்சிட்டாப் போறாதா?'

'ஆமாண்டி!' என்று இளித்தான் சாம்பு.

அந்தச் சமயம் பார்த்து வாசலில், 'மிஸ்டர் சாம்பு!' என்று ஒரு கம்பீரமான குரல் கேட்டது.

சாம்பு பீரோவுக்குள் ஓட மறந்து விட்டான். தன்னையும் அறியாமல், 'யார் அது?' என்றும் கேட்டுவிட்டான்.

'இருக்கிரா உள்ளே? சம்சாரத்தோட ஏகாந்தமோ? எங்கேயானும் போய்ட்டீரோ சமயத்திலேன்னு கவலைப் பட்டுண்டே வந்தேன். வாசல் ரூம் சாத்தியிருக்கவே பகீர் என்றது. நல்ல வேளை!' என்று இன்ஸ்பெக்டர் கோபாலன் உள்ளே நுழைந்தார்.

சாம்பு, பரிதாபமாக வேம்புவின் முகத்தைப் பார்த்தான். அவள் பல்லைக் கடித்துக்கொண்டு, 'குடுகுடுப்பை! யார் உங்களைப் பேசச் சொன்னது? நான்தான் ஒருத்தி வாசலுக்கும் உள்ளுக்கும் ஓடிக் கொண்டிருக்கிறேனே! அதுக்குள்ளே அவசரம் என்ன?' என்று சாம்புவின் முகத்தில் இடித்தாள்.

கோபாலன் சுவாதீனமாக உள்ளே வந்து, சாம்புவின் கையைப் பிடித்துக்கொண்டு, வாசல் பக்கம் இழுத்தார்.

'வாரும் ஓய்! ரொம்ப அர்ஜென்டான விஷயம். கோட்டை எடுத்துப் போட்டுக்கொள்ளும்! உம்ம ஒத்தாசை இல்லாவிட் டால் நடக்காது! ஹூம்! போகிறபோதே எல்லாம் சொல்லு கிறேன்!' என்றார்.

வேறு வழியில்லாமல் போகவே, வேம்புவை மற்றும் ஒருமுறை பரிதாபமாகப் பார்த்துவிட்டு, யாகத்துக்கு இழுத்துச் செல்லப் படும் ஆடுபோல், கோபாலனுடன் சாம்பு போலீஸ் காரில் ஏறிக்கொண்டான். கார் உடனே புறப்பட்டது.

சாந்தோம் திருப்பத்தில் ஒரு பாழடைந்த பங்களாவை நாளைக் கும் பார்க்கலாம். அது ஒரு மூலை என்பது மட்டுமல்ல; அங்கே விளக்கும் கிடையாது. இருபுறத்திலும் நூறு கஜ தூரத்துக்கு அப்பால்தான் கார்ப்பரேஷன் லைட்டுக் கம்பங்கள் இருக்கின் றன. அதுவும் இந்தக் கம்பங்களிலிருந்த பல்புகளை யாரோ அடிக்கடி உடைத்து வருவதனால், இந்தப் பிரதேசம் நிரந்தரமாக இருள் சூழ்ந்து காணப்படுவதில் ஆச்சரியம் இல்லை. இந்தப் பங்களாவுக்கு உடைமையாளர் யார் என்பதைப் பற்றி சென்ற மூன்று வருஷங்களாக வியாஜ்யம் ஒன்று நடந்து வருவதாலும், இந்தக் கட்டடத்தில் ஏதோ கொலை நடந்து பிசாசு நடமாடுவ தாக யாரோ வதந்தி ஒன்று கட்டிவிட்டபடியாலும், இது பூட்டப் பட்டே இருக்கிறது. இரவுக் காலங்களில் இதன் அருகாமையில் கூட யாரும் செல்வதில்லை.

கொஞ்ச நாளாக இந்த பங்களாவைப் பற்றி ஒரு சமாசாரம் புதிதாகக் கிளம்பியது. இரவு வேளையில் இதன் மாடியில் இரண்டொரு தடவை வெளிச்சம் தெரிந்ததாம், பேச்சுக்குரல் கேட்டதாம். அக்கம் பக்கத்துக்காரர்கள் இதைக் கவனித்து, 'பிசாசு நடமாட்டம்' இருப்பதை ஊர்ஜிதம் செய்தார்கள். ஆனால் ஆள் நடமாடியதாகவோ, வாசற் கதவு வழியாக வெளியேறிய தாகவோ ஒருவரும் சொல்லவுமில்லை; கண்டதுமில்லை. இது விஷயம் போலீஸ் இலாகாவுக்கு, 'அரசல் புரசலாக எட்டிற்று. ஆனால் அப்போது இதற்கு அங்கே யாரும் மதிப்பு கொடுக்க வில்லை.

சென்ற மாதத்தில் ஒரு வைர வியாபாரியை அடித்துப் போட்டு விட்டு, இருபதினாயிரம் ரூபாய் வைரங்களுடன் கந்தப்பன் என்கிற பக்காத் திருடன் ஓடிய செய்தியை, எல்லாரும் பத்திரிகையில் படித்தார்களே! அப்போது போலீஸ் இலாகா அது சம்பந்தமாகத் திணறியது அல்லவா? அந்தக் கந்தப்பனைப் போல் ஓர் ஆசாமி அடிக்கடி சாந்தோம் பக்கம் வருவதாக வதந்தி கள் கிளம்பின. ஒருநாள் அவன் மேற்படி பங்களாவின் அருகில், இருட்டில் யாருக்காகவோ காத்து நின்றதைக் கண்டதாகவும் போலீஸுக்குச் செய்தி எட்டியது. ஆகவே, முதல் நாள் இரவு

அந்தப் பங்களாவைச் சுற்றிப் பார்ப்பதென்று சிலரை இன்ஸ் பெக்டர் கோபாலன் அனுப்பியிருந்தார்.

போனவர்களெல்லாம் மப்டியில்தான் சென்றார்கள். பங்க ளாவையும் சூழ்ந்து கொண்டார்கள். ஹெட்கான்ஸ்டபிள் குணசிங் தைரியமாகச் சந்தடி செய்யாமல் உள்ளே நுழைந்திருக்கிறான். அங்கே அப்போது கந்தப்பனும் வேறோர் ஆளும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்களாம். ஹெட்கான்ஸ்டபிள் நின்று கேட்டானாம்.

'இனிமேல் ஒரு நிமிஷங்கூட இந்த இடத்தில் இருக்கக் கூடாது, தம்பி! இதோடு நாலு மாசமாக நான் அந்தக் கொலைக் கேசுக்குத் தப்பி இருக்கேன். அதோடு வைர வியாபாரி சமாசாரம் வேறே ஒன்று சேர்ந்துக்கிட்டது. இப்போ நாம் இந்தப் பக்கம் எங்கேயோ இருக்கிறதைப் போலீசு கண்டுக்கிட்டிருக்காங்க. ஒரு நாளில்லாட்டா ஒரு நாள் இந்த இடத்தையும் பார்த்துடுவாங்க. நான் இன்னிக்கு ராவே புறப்பட்டுப் போயிடலாமுன்னு இருக்கேன்' என்றான் கந்தப்பன்.

'திடுதிப்புனு சொல்றயே?'

'என்ன பண்றது? ஆபத்தாயிருக்குதே! நான் வரப்போகூட, சில பேர்வழிங்க இப்படியும் அப்படியுமா நின்னாங்க. சந்தேகப் பட்டுது, பாரு! அவ்வளவு நகை, வைரம் எல்லாத்தையும் இடுப்பிலேயே வைச்சிருக்கேன். இதோ பம்பாய்க்குக் கிளம் பறேன். அங்கே போய் ஓர் ஏற்பாடு பண்ணிக்கிட்டுத் தயாரா யிருக்கேன். நீயும் அடுத்த ஞாயிற்றுக் கிழமை புறப்பட்டு...'

ஹெட் கான்ஸ்டபிள் மெல்லக் கீழே வந்து மற்றவர்களைக் கூப்பிட்டான். அவசர அவசரமாக எல்லாரும் பங்களாவுக்குள் பாய்ந்துகொண்டு வந்தார்கள். கடும் கட்டுக்காவல்களை மீறித் தப்பித்துக்கொண்ட கந்தப்பனுக்கு இது ஒரு பிரமாதமா? எங்கேயோ மறைந்துவிட்டான். அவன் எங்கே போனான், எப்படிப் போனான் என்று யாரும் சொல்ல முடியவில்லை. அரை மைலுக்கு அப்பால் யாரோ ஓர் ஆள் தலைதெறிக்க ஓடியதைக் கண்டதாக ஒரு வழிப்போக்கன் சொன்னான். கந்தப்பனின் கூட்டாளி மட்டுந்தான் பிடிபட்டான். அதில் ஒன்றும் உபயோக மில்லை. ஏனென்றால், திருட்டுப் பண்டங்கள் எல்லாம் கந்தப்பன் இடுப்பில் இருந்தன. தவிர, கூட்டாளிக்கும் மற்றவனைப்பற்றி அதிகம் சொல்லத் தெரியவில்லை.

விஷயம் இவ்வளவுதான். இன்ஸ்பெக்டர் கோபாலன் இவ்வளவையும் சொல்லி, 'முதலிலேயே இந்தக் கேஸை உம்மிடம் விட்டிருக்க வேண்டும், மிஸ்டர் சாம்பு! எங்கள் இலாகாவுக்கே அவமானம், மிஸ்டர் சாம்பு! வெட்கக் கேடு, சார்! தும்பைவிட்டு வாலைப் பிடிப்பது போல் கந்தப்பன் ஊரைவிட்டு ஓடிவிடாமல் பல இடங்களில் காவல் போட்டிருக்கிறேன்!' என்றார்.

'ரொம்ப சரி! இதில் நான் இப்போ என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டான் சாம்பு.

'என்ன செய்ய வேண்டுமா? அவனைப் பிடித்துத் தரவேண்டும்!'

சாதாரணமாக, எந்தத் துப்பறிபவராக இருந்தாலும் இன்ஸ்பெக்டர் கோபாலன் சொன்னதற்குச் சிரித்திருப்பார். 'அழகுதான்! போலீஸ் கண்ணைத் திறந்துகொண்டு பிசகு செய்ய வேண்டியது! நான் போய் ஓடுகிற திருடனைப் பிடிக்க வேண்டியது! பேஷ்!' என்று சொல்லியிருப்பார். சாம்புவுக்கும் அப்படித்தான் தோன்றியது. ஆனால், ஏனோ தைரியம் வரவில்லை. மூக்கை ஒருமுறை இழுத்துவிட்டுக்கொண்டு, ஆட்டு விழி விழித்தான். சாம்புவின் சுபாவம் தெரிந்த இன்ஸ்பெக்டர் சற்றும் அவனைக் கவனிக்காமல், 'இப்போ எங்கே போகிறோம், தெரியுமா?' என்று கேட்டார்.

'சொல்லுங்கள்!' என்றான் சாம்பு.

'அந்தப் பங்களாவைப் பார்த்து, அதில் உமக்கு ஏதாவது தடயம் கிடைக்கிறதா, பாரும்! அப்புறம் உம் யோசனைப்படி செய்யும்!'

'ஹூம்!' என்றான் சாம்பு. திருடனை அவன் பார்த்ததுமில்லை. அவன் ஓடிப்போய் எத்தனையோ மணி அவகாசமும் ஆகிவிட்டது. திருப்பதியில் மொட்டைத் தாதனைக் கண்டுபிடி என்றால் என்ன செய்வது? சாம்புவின் யோசனைகள் இப்படித்தான் சென்றன. அவன் மனத்தை அறிந்த இன்ஸ்பெக்டர், 'சிரமமான கேஸ்தான், மிஸ்டர் சாம்பு! இல்லாவிட்டால், உம்மைப் போய் ஏன் கூப்பிடுகிறேன்?' என்றார்.

மோட்டார் சட்டென்று திரும்பி நின்றது. பாழடைந்த பங்களா வந்துவிட்டது!

சாம்புவும் கோபாலனும் பங்களாவைப் பலமுறை சுற்றிச் சுற்றி வந்தார்கள். அறைகள் எல்லாம் தூசும் துப்பட்டையுமாக இருந்தன. சிலவற்றில் காலடிச் சுவடுகள் இருந்தன. பல இடங்களை அகாரணமாகச் சாம்பு கூர்ந்து கூர்ந்து பார்த்தான். அங்கே அவன் வந்ததில் ஒன்றும் உபயோகமில்லை என்றும், அவன் கண்டு பிடிக்கப்போவது ஒன்றுமில்லை என்றும், அவனுக்குத் தெரியும்.

இன்ஸ்பெக்டர் கோபாலன் மடமடவென்று பேசினார். கந்தப்பன் எப்படிக் குதித்து ஓடியிருக்கக்கூடும் என்று அவர் ஹேஸ்யங்கள் சொன்னார். 'எப்படி ஓடினாலென்ன? இப்போ என் பிராணனைன்னா வாங்குகிறான்கள்!' என்று சாம்பு மனத்தில் எண்ணி ஏங்கினான்.

ஒருவழியாகப் பார்த்துக்கொண்டு இறங்கினார்கள். தன்னால் ஒன்றும் முடியாது என்று சொல்லிவிடச் சாம்பு துடித்தான். ஆனால், ஏனோ அந்த வார்த்தைகள் வாயிலிருந்து வர மறுத்தன. 'கந்தப்பன் கூட்டாளியைப் பார்க்கிறீரா?' என்று கோபாலன் கேட்டதற்கு மட்டும், 'அவசியமில்லை' என்றான் சாம்பு. அதனால் ஒரு பலனும் தனக்கு ஏற்படப் போவதில்லை என்று தான் அப்படிச் சொன்னான். கோபாலன் வேறுவிதமாக அதை அர்த்தம் செய்துகொண்டு, வேறு நல்ல தடயம் அகப்பட்டு விட்டதாகவும் எண்ணிக்கொண்டால் அவனா ஜவாப்தாரி? கோபாலனின் கார் சாம்புவைத் திரும்ப வீட்டில் விட்டுச் சென்றது.

'உம்மைத்தான் நம்பியிருக்கிறேன்!' என்று சொல்லிவிட்டு, கோபாலன் போனார்.

சாம்புவுக்குத் தலை சுழன்றது; மூளை வேலை செய்ய மறுத்தது. ஒரு சிமிட்டாப் பொடி போட்டுக் கொள்ளலாமென்று கோட்டுப் பையில் கையை விட்டான். மறு நிமிஷம் திடுக்கிட்டான். பிறகு அவசர அவசரமாக இதர பைகளையும் தேடினான், எங்கும் பொடி டப்பியைக் காணவில்லை. என்ன! தங்கப் பொடி டப்பியாச்சே! மோஸூர் மகாராஜாவே கொடுத்ததல்லவா அது? அதை அந்தப் பங்களாவில் எங்கேயோ ஞாபக மறதியாக அல்லவா வைத்து விட்டு வந்துவிட்டேன்! என்ன மடத்தனம்! வேம்புவிடம் விஷயத்தைச் சொல்லுவோமா என்று நினைத்தான். 'பெரிய துப்பறிபவர் என்று பேர்தான்; தன் பொடி டப்பி போன இடம் எது என்று தெரியவில்லை!' என்று அவள் சிரிக்க மாட்டாளா?

சாம்புவுக்குப் பங்களாவை மறுபடி பார்க்க ஆசைதான். ஆனால், அதில் பிசாசு இருப்பதாகச் சொல்கிறார்களே! மேலும், என்ன காரணத்தைச் சொல்லிக்கொண்டு அங்கே போவது? யாரை யாவது கூட அழைத்துச் சென்றால் அவர்கள் கண்ணில் பொடி டப்பி படாதா? அது எவ்வளவு பெரிய அவமானம்! சாம்பு மேலும் யோசித்தான். கடைசியில் ஒரு யோசனை மிகச் சரியானதாகத் தோன்றியது. அஸ்தமித்த பிறகு இரண்டு ஜவான்களுடன் பங்களாவுக்குப் போவது. ஏதோ புதிய தடயம் தேடப் போவதாகச் சொல்லிவிட்டால் போகிறது. ஜவான்களை வெளியே நிறுத்திவிட்டு, ஹாலில் போய் டப்பியைத் தேடி எடுத்துக்கொண்டு, தடயம் ஒன்றும் இல்லை என்று சொல்லிக் கொண்டு வந்துவிடுகிறது. சபாஷ்! சரியான யோசனை! என்று முடிவு செய்தான். அவன் மனத்தில் சற்று அமைதி ஏற்பட்டது.

•

அன்று மாலை நன்றாக அஸ்தமித்ததும், சாம்பு இரண்டு பேரை அழைத்துக்கொண்டு சாந்தோம் பங்களாவை அடைந்தான். எங்கேயும் இருள் சூழ்ந்து கொண்டிருந்தது. ஜவான்களை மாடிப் படியில் நிறுத்திவிட்டு, சாம்பு தனியே மேலே சென்றான். டார்ச் விளக்கை ஏற்றி, கீழே சுற்றிச் சுற்றிப் பார்த்தான். பிறகு விளக்கு வெளிச்சத்தை அறையைச் சுற்றி ஒரு வீச்சு விட்டான்.

'ஐயோ! அதென்ன! பிசாசா?' சாம்புவின் கை கால்கள் வெட வெடத்தன. கத்த விரும்பினான், நாக்கு ஒட்டிக் கொண்டது. அந்தப் பிசாசு கோரமாக விழித்துக்கொண்டு அவனை நெருங் கியது!

உருவம் நெருங்கியதும் கையை ஓங்கியது. அதில் ஒரு தடி இருந்தது. ஓங்கின வேகத்துடன் அந்த அடி விழுந்திருந்தால், சாம்புவின் மண்டை விளாம்பழம் போல் நொறுங்கி இருக்கும்! அந்தச் சமயம் பார்த்து, திடீரென்று அறைக்கு வெளியிலிருந்து இரண்டு டார்ச்சுகளின் வெளிச்சம் அறைக்குள் சேர்ந்தாற்போல் அடித்தது.

'கந்தப்பா! அவரை அடித்தாயோ உடனே சுட்டு விடுவோம்!' என்றார்கள் ஜவான்கள் இடிபோன்ற குரலில்.

சாம்பு, கண்ணை மூடிக் கொண்டான். யார் இதில் கந்தப்பன்? அவன் எங்கே வந்தான்? இப்போது கையை ஓங்குவது பிசாசு அல்லவா?

சாம்பு மறுபடி கண்ணைத் திறந்தபோது, 'என்னங்க! எங்களையும் கூட அழைச்சுக்காமே தன்னந்தனியா வந்துட்டீங்களே! என்ன தான் தெரிஞ்சிருந்தாலும் இவன் ஆபத்தான ஆள் இல்லீங்களா?' என்று கேட்டான் ஒரு ஜவான். மற்றவன், அப்போது கந்தப்பனின் கையை மேல்துண்டால் கட்டிக் கொண்டிருந்தான்.

சாம்பு, அதற்குப் பதில் சொல்லத் திணறினான். மாடியில் திமுதிமுவென்று ஒரு போலீஸ் படையே ஏறி வந்து கொண்டிருந்தது. எல்லாருக்கும் தலைவரான இன்ஸ்பெக்டர் கோபாலனே வந்துவிட்டார்.

'என்ன சாம்பு! என்ன இது?' என்று கேட்டுக்கொண்டே கோபாலன் அவன் அருகில் வந்தார். ஸ்டேஷனில் சாம்புவுடன் இரு ஜவான்கள் வந்திருப்பதைக் கேள்விப்பட்டுத்தான் அவர் ஓடி வந்திருந்தார். சாம்பு நாற்புறமும் பொடி டப்பியைப் பார்க்கத் திருதிருவென்று விழிக்கும்போதே ஒரு ஜவான், 'இவர் இங்கே தனியாகவே வந்துட்டாரு!' என்று தொடங்கினான்.

சாம்பு, ஹி ஹி. அதனாலே என்ன! நான் வந்த காரியம் இங்கே பொடி!' என்று குறுக்கிட்டான் அசட்டுத்தனமாக. அவனைப் பேசவிட்டிருந்தால், உண்மையாக வந்த காரணத்தையே உளறி இருப்பான். அவனை இன்ஸ்பெக்டர் பேசவிட்டால்தானே? 'உமக்கு இது பொடியான காரியமாக இருக்கலாம். உம்ம உயிர் எங்களுக்கு எவ்வளவு ப்ரீசியஸ் தெரியுமோ?' என்றார் கோபாலன் உத்சாகமாக.

'இங்கே எங்கேயோ என் பொடி டப்பி விழுந்து...' என்று நிறுத்தினான் சாம்பு.

'கிடக்கிறது. அது போனால் போகிறது, சார்! நான் புது வருஷப் பரிசாக ஒரு தங்கப் பொடி டப்பி வாங்கித் தருகிறேன்!'

கந்தப்பன் உண்மையை ஒப்புக்கொண்டான். தன் கூட்டாளி பிடிபட்டவுடன், போலீஸார் ஸ்டேஷன்களில் காவல் போட்டு விட்டார்கள். தப்பிக்க வழி இல்லை. கூட்டாளி, தான் பம்பாய்க்குப் போவதை ஒப்புக்கொண்டிருப்பானாதலால் போலீ ஸாரும் இனி இந்தப் பங்களாவைக் கவனிக்க மாட்டார்கள்; இங்கே தான் இனி வர மாட்டேன் என்று நம்புவார்கள். ஆகையால் இதுதான் சரியான இடம் ஒளிந்து கொள்ள என்று அவன் நிச்சயித்து, யாரும் பார்க்காத சமயம் அங்கு வந்து

விட்டான். அவன் ஊகமும் சரிதான். போலீஸார் அந்தப் பங்களாவுக்கு அவன் மறுபடியும் வருவான் என்று எதிர்பார்க்கவே இல்லை. 'இந்தப் படுபாவி சாம்புதான், எப்படியோ யோசனை செய்து, என் எண்ணத்தில் மண்ணைப் போட்டு ஜவான்களையும் அழைத்துக்கொண்டு வந்துவிட்டான்!' என்று முடித்தான் அவன்.

கந்தப்பன் பிடிபட்ட செய்தியும், சாம்பு கண்டுபிடித்த விவரங்களும் அதற்குள் பல இடங்களில் பரவிவிட்டன. ஆகவே, சாம்பு கிளம்புவதற்குள்ளேயே அவனைச் சுற்றி ஒரு சிறு கூட்டம் கூடிவிட்டது!

•

'நீங்கள் ஏன் தனியாகத் திருடன் இருக்கும் இடங்களுக்கெல்லாம் போறேள்? அவன் உங்கள் மண்டையில் போட்டிருந்தானானால்?' என்று வேம்பு கேட்டு, சாம்புவின் மண்டையைத் தடவிக் கொடுத்தாள்.

'இல்லையடி! அதிருக்கட்டும். என் தங்கப் பொடி டப்பி - மோஸூர் மகாராஜா கொடுத்தது இருந்ததே, அது எங்கேயோ தொலைந்துவிட்டது!' என்று சாம்பு ஒப்புக்கொண்டான்.

'நன்னாயிருக்கு! காலம்பர என்னண்டை கொடுத்துப் பத்திரமா வைக்கச் சொன்னேளே! அதுகூட மறந்துட்டதா? நல்ல துப்பறிபவர் நீங்க! ஹூம்!' என்றாள் வேம்பு.

20

வேம்புவின் படம்

ஒரு நாள் உல்லாசமாக இருந்த சமயத்தில் வேம்பு எதற்காகவோ

சாம்புவைப் பார்த்து அழகு காட்டினாள். 'வெவ் வெவ் வெவ் வெவ்வே! மூஞ்சியைப் பார்க்கலை!' என்றாள்.

சாம்புவுக்குச் சிரிப்பு வந்தது. 'அடியே! உன் மூஞ்சியை இப்போதான் போட்டோ எடுக்கணும்!' என்றான்.

'ஆமாம்! சுருக்க எடுத்துடுவேள்! கல்யாணம் ஆனதிலேர்ந்து நானும்தான் கேட்டுக் கொண்டிருக்கேன். நம்ம இரண்டு பேருமாச் சேர்ந்து ஒரு போட்டோ எடுத்துக்கணும்னு! உங்களண்டை சொல்லி எந்தக் காரியம் உருப்படியாக நடந்திருக்கிறது?' என்று கேட்டாள்.

இது சாம்புவின் கௌரவத்துக்குப் பங்கம் விளைவித்திருக்க வேண்டுமென்றுதான் தோன்றுகிறது. ஏனென்றால், அவன் மறுநாளே ஒரு புத்தம் புதுக் கேமிராவும், இரண்டு ரோல்கள் ஃபிலிமும் வாங்கிக்கொண்டு வந்துவிட்டான்.

'அடி வேம்பு! போட்டோ எடுக்கவில்லை என்றுதானே ரோஷப் பட்டாய்? உன்னைப் பதினாறு தினுசாகப் போட்டோ எடுக்கறேன். உன் மூஞ்சியை எப்படியெல்லாம் வைத்துக் கொள்ளலாமோ வைத்துக்கொள்!' என்றான்.

வேம்பு விடுவிடென்று பாசாங்குக் கோபத்துடன் உள்ளே சென்றாள். ஆனால் சிறிது நேரத்துக்கெல்லாம் வந்து, 'எத்தனை போட்டோ எடுக்கப்போறேள்?' என்று கேட்டுக்கொண்டு நின்றாள்.

'ஒரு ரோல் முழுதும் நீ! இன்னொரு ரோலை வெளியில் கொண்டுபோய்..!'

'உங்களுக்குப் பிடித்த பெண்களாக எடுப்பீர்களோ?'

'அடச் சீ! ஊரிலுள்ள நல்ல காட்சிகளை எடுப்பேன். பத்திரிகை களுக்கு அனுப்புவேன், அவர்கள் பிரசுரிப்பார்கள். எனக்குப் பணம் அனுப்புவார்கள்!' என்று சொன்னான் சாம்பு.

அதற்குப் பிறகு வேம்பு பலவிதமான உடைகளை உடுத்திக் கொண்டு சாம்புவிடம் அரை நாள் வேலை வாங்கினாள். ஒரு ரோல் முழுதும் அவள் போட்டோதான்! 'அடியே! நான் இப்போ வெளியில் போகிறேன். இன்னொரு ரோலில் வெளியில் சில காட்சிகளை எடுத்து இரண்டையும் சேர்த்து, கம்பெனியில் டெவலப் செய்யக் கொடுத்துவிட்டு வருகிறேன்!' என்று கிளம்பினான்.

எதை எடுத்தால் பத்திரிகைக்காரர்களுக்கு உபயோகமாக இருக்கும் என்பது சாம்புவுக்குத் தெரியவில்லை. முதல் முதலாகக் கேமிராவை ஆகாயத்தை நோக்கித் திருப்பி, ஒரு பெரிய மேகத்தைப் படம் பிடித்தான். ஒரு கன்று பால் குடிக்கும் படம் அடுத்தது; ஒரு குழந்தை சறுக்கி விழுந்து அழும் காட்சி மூன்றாவது - இப்படி எடுத்துக்கொண்டே சுற்றினான். கடைசியில் அவன் ஹைகோர்ட் பீச்சுக்கு வந்து சேர்ந்தான்.

இனிமேல் இரண்டு படங்கள்தாம் எடுக்கலாம். ஹைகோர்ட் கட்டடத்தை ஒரு படம் எடுத்தான். கடைசிப் படம்தான் பாக்கி. யாரை எடுக்கலாம்? சற்று தூரத்தில் ஒரு சுந்தர புருஷன் சில்க் ஜிப்பா, மல்வேஷ்டி, கையில் ஒரு பிரம்பு, வாயில் ஒரு சிகரெட், ஒய்யார நடை இவைகளுடன் நின்று கொண்டிருந்தான். சாம்பு பார்த்தபோது, அவன் கடற்பரப்பைப் பார்த்தவாறு சிறிது நின்றான்.

சரியான தருணம் என்று நினைத்தான். சாம்பு, கேமிராவை அவனை நோக்கிக் காண்பித்தான். ட்ர்ர்..ரப் என்ற சப்தம்.; படமும் பிடித்தாகிவிட்டது. இரண்டாவது ரோல் காலியுமாகி விட்டது.

கேமிராவைக் கோட் பையில் போட்டுக்கொண்டு கிளம்பினான். சாம்பு திரும்பியபோது, அந்த மனிதன் அவனைக் கவனித்து விட்டான்!

சாம்பு வேகமாக நடந்து சென்றான். பின்னாலே அந்த மனிதனும் வந்தான். அதிக ஜன சந்தடி இல்லாத இடத்தில் அவன், 'சார்! சார்! நில்லுங்கள்!' என்று கூப்பிடவே, சாம்பு நின்றான். 'நீங்கள் என்னைப் போட்டோ எடுத்தீர்களா?' என்று கேட்டான்.

'உம். இல்லை ஆமாம். அதாவது, சும்மா...' என்று குழறினான் சாம்பு.

'நீங்கள் அதை என்ன செய்வீர்களோ?'

'பத்திரிகைக்கு அனுப்பலாம்னு எடுக்கிறது. ஹிஹி!' என்றான் சாம்பு.

'ஒன்றுமில்லை! என் போட்டோ காப்பி ஒன்று எனக்குக் கிடைத்தால் தேவலை!' என்றான் அவன்.

'அதற்கென்ன! நாளைக்கே டெவலப் செய்தவுடன் தருகிறேன்!'

'அது சரிப்படாதே!'

'ஏன், நிச்சயம் தரேன் சார்!'

'உம்ம பேரில் அவநம்பிக்கை இல்லை. நான் இன்று சாயந்தரமே பம்பாய்க்குப் போகிறேன்.'

'ஓஹோ! என்ன செய்யலாம்?' என்று சொல்லிவிட்டு சாம்பு மேலே நடந்தான்.

'அந்த ரோல் பூராவையுமே எனக்குக் கொடுத்துவிடுங்களேன்! நான் பம்பாயில் டெவலப் செய்து கொள்கிறேன்!' என்று கேட்டுக்கொண்டே பின்தொடர்ந்தான் அந்த ஆசாமி.

'அதெப்படி முடியும்? நான் வேறு எத்தனையோ படம் எடுத்திருக்கிறேனே!'

'அதற்கெல்லாம் சேர்த்து நான் பணம் கொடுத்து விடுகிறேன். இருபது ரூபாய் கொடுக்கிறேன். என்ன சொல்கிறீர்?'

சாம்பு இதற்கென்ன சொல்வதென்று சிறிது யோசித்தான். சாம்புவின் தயக்கத்தைக் கண்ட அந்த ஆசாமி, 'சரி! முப்பது ரூபாய் தருகிறேன்! எடும் அந்த ரோலை!' என்றான் பரபரப்புடன்.

சட்டென்று சாம்பு கோட்டுப் பையில் கைவிட்டு, அங்கே கிடந்த ரோலை எடுத்துக்கொடுத்து முப்பது ரூபாயை வாங்கிக் கொண்டான். போகும்போது அந்த ஆசாமி, 'ரொம்ப தேங்க்ஸ், சார்! உம்மகிட்டே இன்னும் படம் இருந்தாலும் வாங்கிக் கொள்கிறேன்! எங்கே உம்ம ஜாகை?' என்று கேட்டான்.

சாம்புவுக்கு உச்சி குளிர்ந்தது. எடுத்த எடுப்பில் தனக்கு போட்டோ எடுப்பதில் இவ்வளவு பெரிய வெற்றி ஏற்படு மென்று அவன் கனவிலும் எதிர்பார்க்கவில்லை. இன்னும் இதே பேர்வழியிடம் எடுக்கிற படங்களை எல்லாம் செலவழிக்கலாம் என்ற நம்பிக்கையும் உண்டாகவே, தன் விலாசத்தைச் சொல்லிவிட்டு நடந்தான்.

பதினைந்து நிமிஷங்களுக்குப் பிறகு வீடு நோக்கிச் சென்று கொண்டிருந்த சாம்புவுக்குப் பகீர் என்றது. அவன் மனத்தில் அப்போது தோன்றிய ஒரு நினைவு, அவன் தலையைச் சுழல வைத்தது! அவசர அவசரமாகக் கோட்டுப் பையிலிருந்து கேமராவை எடுத்துவிட்டு, பைகளையெல்லாம் துழாவினான். பிறகு கேமராவைத் திறந்து பார்த்தான். அதற்குள் அவன் இரண்டாம் முறையாகப் படம் எடுத்த ரோல் அப்படியே இருந்தது!

என்ன மடத்தனம் செய்துவிட்டான்! வேம்புவைச் சிரமப்படுத்தி எடுத்த போட்டோ ரோலை அல்லவா அந்த ஆளிடம் கொடுத்து விட்டான் அவசரத்தில். இப்போது அவன், அவளுக்கு என்ன பதில் சொல்லுவது? வந்த வழியே திரும்பி ஓடினான். இதற்குள் அஸ்தமனமாகிவிட்டபடியால், கூட்டம் கலைந்து கொண் டிருந்தது. கூட்டத்தில் புகுந்து, எங்கும் தேடினான். அவனிடம் ரோல் வாங்கின ஆசாமியை எங்குமே காணவில்லை. மாயமாக மறைந்துவிட்டான்.

சாம்புவின் மனம் வேதனைப்பட்டது. மறுபடியும் சந்தேகம் வந்து, கோட்டுப் பையிலிருந்து கேமராவை எடுத்துப் பிரித்துப்

பார்த்துக்கொண்டு நின்றபோது, யாரோ தோள்பட்டையைத் தொடுவது தெரிந்து திரும்பிப் பார்த்தான். ஒருவர் போலீஸ் உடையுடன் அவனையே பார்த்துக்கொண்டு நின்றார். அவர் ஏறி வந்த மோட்டார் சைக்கிள் சற்றுத் தொலைவில் நிறுத்தப் பட்டிருந்தது. 'என்னய்யா! இங்கே போட்டோ எடுக்கப்படா துன்னு உமக்குத் தெரியாது?' என்றார் அவர்.

'ஹி! ஹி நான்...'

'என்னய்யா! எடு வெளியே அந்தக் கேமராவை முதலிலே!'

சாம்பு, ஏதோ மறுத்துக்கூற விரும்பினான். அவன் அதைச் சொல்ல, அவன் வாய் மறுக்க, கை தானாகவே கேமராவை எடுத்து அந்தப் போலீஸ்காரரிடம் கொடுத்தது. அவர் அதை அலட்சியமாக வாங்கிப் பிரித்து, அதிலிருந்த ரோல் ஒன்றையும் தமது பையில் போட்டுக்கொண்டு, 'ஓய்! இந்தத் தடவை கேமராவைக் கொடுக்கிறேன். இனிமேல் இந்தப் பக்கம் வந்தீரோ...' என்று தொடங்கினார்.

'நான் ஏன் வரேன்? ஹி, ஹி!' என்றான் சாம்பு. எப்படியாவது அவரிடமிருந்து தப்பித்துக்கொண்டால் போதுமென்றிருந்தது அவனுக்கு.

போலீஸ்காரர் அவன் தோளில் கை வைத்து, 'உம் பெயர்?' என்று அதட்டினார்.

சாம்பு பெயரையும் விலாசத்தையும் சொன்னான்.

'போம்! உம். நான் பார்த்துக்கொண்டே இருப்பேன். மூன்று நிமிஷத்தில் இந்த இடத்தைவிட்டு ஓடிவிட வேண்டும்; போம்!'

சாம்புவைப் பிடித்திருந்த திகில் சிறிது அகன்றது. ஒரு மூச்சு தாராளமாக வந்தது. போலீஸ்காரர் அவனையும் இட்டுச் சென்றிருந்தால் எவ்வளவு பெரிய அவமானம்! நாளைக்குப் பத்திரிகைகளில் அல்லவா வந்துவிடும்? அவன் கௌரவம் கப்பலேறிவிடுமே! கோபாலன்கூடச் சிரிப்பாரே! எவ்வளவு கேவலம்!

பாதி ஓட்டமும் பாதி நடையுமாகப் போய் ஒரு ரிக்ஷாவில் ஏறிக் கொண்டான். வீட்டை அடைந்த பிறகுதான் அவனுக்குப் பூரா பயமும் நீங்கியது. ஆனால், அதற்குப் பதிலாக வருத்தமே குடிகொண்டது.

என்ன வீண் பிரயாசை! அவன் எடுத்த அத்தனை போட்டோக் களும் போய்விட்டனவே! வேம்பு புன்னகையுடன் இருப்பது போல் காலையில் அவன் ஒரு படம் எடுத்திருந்தான்; அது ரொம்ப நன்றாக விழுந்திருக்குமென்று எவ்வளவோ ஆசை யுடன் இருந்தான்.

வேம்பு வந்து, 'என்ன! படங்களைக் கொடுத்தீர்களா? எப்போ கிடைக்கும்?' என்றாள்.

'சரிதான், போ!' என்றான் சாம்பு எரிச்சலுடன்.

'ஒன்றும் நன்னா விழலையா? நீங்களும் நானும் போட்டோ எடுத்தால் எப்படி விழும்?' என்றாள் வேம்பு.

சாம்புவுக்குக் கோபம் பற்றிக்கொண்டு வந்தது. 'ஏதாவது பேசினாயோ அந்தக் கேமராவையே உடைத்து வாசலில் எறிந்து விடுவேன்!' என்றான்.

'குரங்கின் கையில் பூமாலை அகப்பட்டால் அப்படித்தான்!' என்றாள் வேம்பு விடாமல்.

'ஏதாவது அதிகப் பிரசங்கித்தனமாகப் பேசினாயோ, தெரியும் சேதி!'

'அடே அப்பா! பயமான்னா இருக்கு!'

'என்னிடம் விளையாடாதே! உனக்கு வேண்டியது உன் படம்தானே?'

'எனக்குப் படம் வேண்டாம்! நீங்கள் எடுத்த அழகான போட்டோவைப் பார்க்கணும்!' என்று அழகு காட்டினாள் வேம்பு.

சாம்பு தலையைத் தடவி விட்டுக்கொண்டான்; மூக்கு நுனியை யும் ஸ்பரிசித்துக் கொண்டான். ஒருகால் அவன் கோழைத்தன மாக நடந்துகொண்டு விட்டானோ? அந்தப் போலீஸ் அதிகாரியிடம் தான் இன்னார் என்று சொல்லியிருந்தால், ஒருகால் சும்மா விட்டிருப்பாரோ? விட்டிருந்தால்தான் என்ன? அவன் படங்கள்தான் வேறோர் ஆசாமியிடம் அகப்பட்டுக் கொண்டு போய்விட்டனவே!

தன் பெயரையும் விலாசத்தையும் போலீஸ்காரரிடம் கொடுத்தது அவனுக்கு ஞாபகம் வந்தது. 'அடடே! அந்தப் போலீஸ்காரர்

அதைக் கோபாலனிடம் காண்பித்து, நடந்த விஷயத்தைச் சொல்லிவிட்டால், வெட்கக் கேடு வெட்கக் கேடு.. அவர் சொல்வதற்கு முன் நாமே கோபாலனிடம் சொல்லிவிட வேண்டும். அதுதான் சரி!' என்று எண்ணி, சாம்பு டெலிபோனை எடுத்தான்.

'ஹலோ! மிஸ்டர் கோபாலன்? ஆமாம். இன்ஸ்பெக்டர் கோபாலன் இருக்கிறாரா?' என்று கேட்டான் சாம்பு.

'ஏன், யாரது பேசறது? நான்தான் கோபாலன்தான்!'

'இங்கே சாம்பு பேசறேன். இன்னிக்கு ஒரு விஷயம் நடந்தது.'

'தெரியும், சொல்லுங்கள்!'

'பீச்சிலே நடந்தது என்னன்னா...'

'அதெல்லாம் தெரியும். சொல்லுங்கள்! உடனே நான் செய்ய வேண்டியதை!'

சாம்புவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. இந்தக் கோபாலன் 'தெரியும் தெரியும்' என்கிறாரே! அவருக்கு எந்த மட்டும் தெரியும்? எதற்கும் தான் சொல்கிறபடி சொல்லி வைக்கலா மென்று, 'ஒரு போலீஸ்காரர் வந்து...' என்று தொடங்கினான்.

'அவ்வளவுதானே! ஒருத்தர் இல்லை, நாலு பேரோடு பதினைந்து நிமிஷத்திலே அங்கே வருகிறேன்! சரிதானே!' என்றார் கோபாலன் அவனை மேலே பேசவிடாமல்.

இதென்ன கண்றாவி! இந்த மனுஷன் ஒன்றுகிடக்க ஒன்று கேட்டுக்கொண்டு, இங்கே எதற்கு வருகிறார்? சாம்பு அவசர அவசரமாக, 'இல்லை, இல்லை! வேண்டாம்! நான் அதைச் சொல்ல வரவில்லை!' என்று கத்தினான். அதற்குள் கோபாலன் அங்கே ரிஸீவரை வைத்துவிட்டு, கீழே அவசரமாக ஓடிவிட்டார்.

சாம்புவுக்குத் திகிலாயிற்று. எதற்காகப் போலீஸ்காரர்கள் நாலு பேர் வரவேண்டும்? கிணறு வெட்டப் போய், பூதம் புறப்படுகிற கதையாக அல்லவா இருக்கிறது! இந்தக் கோபாலனுக்குப் பூராவும் கேட்டுக்கொள்கிறதற்குள் என்ன அவசரம்? போறாத காலம்! போறாத காலம்!

அந்தச் சமயம் பார்த்து அந்த அறைக்குள் ஓர் ஆசாமி நுழைந்தான். அவன் வேறு யாருமில்லை! பீச்சில் அவனிடம் ரோல் வாங்கிக் கொண்டு போன அதே ஆசாமிதான்! அவனைக் கண்டதும் சாம்புவுக்குப் பகீர் என்றது.

'உம்ம விலாசம்கூடப் பொய்யாக இருக்குமோ என்று நினைச் சேன். என்னை ஏமாற்றத்தானே பார்த்தீர், ஹூம்?' என்று கேட் டான் அவன்.

'இல்லை. கைத் தவறுதலாக...'

'அந்தப் பேச்சு வேண்டாம்! நல்லவேளை! நான் உடனே அந்த ரோல் படங்களை டெவலப் செய்து பார்த்தேன். ஏதோ ஓர் அசிங்கம் பிடித்த மூதேவியின் படம் அத்தனையும்! உடனே வந்தேன் இங்கே!' என்றான் அவன். தன் அருமை மனைவியை - அழகு மிகுந்த வேம்புவை - இந்தத் தடியன் 'அசிங்கம் பிடித்த மூதேவி' என்பதா? சாம்புவின் மூக்கு நுனி சிவந்தது. ஆனால், இவனை என்ன செய்யமுடியும் சாம்புவால்? தவிர, இப்போது இவன் என்ன செய்துவிடுவானோ என்ற பயம் வேறல்லவா வந்துவிட்டது அவனுக்கு! சாம்பு இந்தச் சிந்தனைகளில் இருந்தபோது, 'எங்கே? எடும் சீக்கிரம் அந்த ரோலை! வீண் பொழுது போக்கவேண்டாம்!' என்றான் அவன் அதிகாரமாக.

'அது இல்லையே! போலீஸ்காரர் ஒருவர் பிடுங்கிக்கொண்டு விட்டாரே!' என்றான் சாம்பு.

அதைக் கேட்டதும் அவன் முகத்தில் ஏற்பட்ட மாறுதல், சாம்புவைத் திடுக்கிடச் செய்தது.

'பிடுங்கிக் கொண்டானா? பொய்! அயோக்கியப் பயலே! நீதான் கொண்டுபோய்க் கொடுத்திருக்கிறாய்! நீ போலீஸ்காரருக்கு உளவு! நான் உன்னை விடப்போகிறதில்லை! நில் அப்படியே!' என்றான்.

சாம்பு ஸ்தம்பித்து விட்டான்.

'நில் அப்படியே, மிஸ்டர் மாணிக்கம்!' என்ற குரல் கேட்டுச் சாம்புவும் அந்த ஆசாமியும் திடுக்கிட்டார்கள்.

கோபாலன் வந்துவிட்டார்! அவர் பின்னால் சாம்புவிடமிருந்து போட்டோ ரோலைப் பறிமுதல் செய்த போலீஸ் அதிகாரியும்

இருந்தார். கான்ஸ்டபிள்கள் நாலைந்து பேர் அவர்களின் பின்னால் நுழைந்தார்கள்.

'மோசக்காரப் பயலே!' என்று சாம்புவின் மேல் அவன் ஆத்திரத்துடன் பாய்ந்தான். கோபாலன் தடுப்பதற்குள் சாம்புவின் தலையில் இலேசாக ஒரு குத்தும் விழுந்துவிட்டது. அதைச் சாக்காக வைத்துக்கொண்டு, சாம்புவும் பிரக்ஞை இழந்து விட்டான். அதே நிலையில் அரைக்கண் திறந்து, அந்த ஆசாமிக்கு போலீஸ் அதிகாரி விலங்கு பூட்டுவதைக் கவனித்து ஆச்சரியப்பட்டான். 'சாம்பு நல்ல வேலை செய்தார். இவன் படத்தைத் தந்திரமாகப் பிடித்து வைத்துக்கொண்டிருக்கிறார். நேற்று இவன் இங்கே வருவது அவருக்கு எப்படித் தெரிந்ததோ தெரியவில்லை! பம்பாய்ப் பத்திரிகைகளில் இவன் படம் வந்திருக்கிறது. ஒரு பேங்கில் இருபதாயிரம் ரூபாய் அபேஸ் செய்துகொண்டு, இங்கே நழுவிவிட்டான்!' என்று அவர் போலீஸ் அதிகாரியிடம் விவரமாகச் சொல்லிக் கொண்டிருந் தார்.

அந்த ஆசாமியின் பைகளைச் சோதித்து, வேம்புவின் படங்களை ஒரு கான்ஸ்டபிள் எடுத்துப் போட்டான். 'ஒஹோ! இப்போது தெரிகிறது! இவனிடம் தன் படங்களைக் கொடுத்து, இவன் படத்தைச் சாம்பு தந்திரமாக அழுத்திக்கொண்டிருக்கிறார். இவன் தன்னைத் தேடிக்கொண்டு வருவான், அப்போது நம்மிடம் பிடித்துக் கொடுக்கலாம் என்பது இவர் ஐடியா. அதேமாதிரி நடந்திருக்கிறது.'

'ஏன் சார்! உங்கள் சாம்பு என்னிடம் விஷயத்தைச் சொல்லக் கூடாதா? என்னிடம் கொடுத்துவிட்டு ஓடியே போய்விட்டாரே! ஏன்?' என்று கேட்டார் போலீஸ் அதிகாரி.

'சார்! முதலாவது நீங்கள் இந்த ஊருக்குப் புதிசு; சாம்புவைத் தெரியாது. இரண்டாவது, சாம்புவுக்குப் பெரிய கேஸ்களை என் மூலமாக நடத்துவதில்தான் பிரியம் (கோபாலனுக்கு இதில் சிறிது பெருமையே). மூன்றாவதாக, இவர் யோசனையே அபாரம்! நமக்கெல்லாம் அது முதலில் புரிகிறதே இல்லை. அப்படிக் கொடுத்திராவிட்டால், இப்போது க்ளீனாக - காதுங் காதும் வைத்தாற்போல் வேலை நடக்குமா? சரியான டயத்தில் டெலிஃபோன் செய்திருக்கிறாரே! அதிலிருந்தே தெரிய வில்லையா?'

'சரி! பம்பாய் போலீஸுக்குத் தகவல் சொல்லி, இரண்டாயிரம் ரூபாய் வெகுமதியையும் மிஸ்டர் சாம்புவுக்கே வாங்கிக் கொடுத்துவிட வேண்டியதுதான்!' என்றார் அந்த அதிகாரி.

சாம்பு கண்ணை மெல்ல விழித்தான். 'என்ன வேணும்?' என்று கோபாலன் கேட்டார்.

'எங்க வேம்புவின் படங்கள் இருக்கா?' என்று அவன் கேட்டான் ஈனஸ்வரத்தில்.

அவைகளை அவன் கையில் கொடுத்தவுடன் அவன் புன்னகை யுடன் எழுந்து உட்கார்ந்து, 'அடி வேம்பு! அடி வேம்பு!' என்று தன்னை மறந்து கூப்பிட ஆரம்பித்துவிட்டான்.

21

தேடி வந்த தனம்

கோட்டுப் பைக்குள் கையை விட்டுக் கொண்டு சாம்பு சைனாபஜார் பக்கத்தில் திரிந்துகொண்டிருந்தான். வீட்டில் வேலை ஒன்றும் இல்லை. தவிர, வேம்புவுடன் வேறு ஒரு சின்னத் தகராறு. அவளுடைய பெரியம்மாவின் பெண் மாம்பலத்துக்கு வந்திருப்பதாகவும், போய்ப் பார்த்துவிட்டு வரவேண்டுமென்றும் அவள் பிடிவாதம் பிடித்தாள்.

'பெரியம்மா பெண்தான் இங்கே வரட்டுமே!' என்றான் சாம்பு.

'அசடுமாதிரி இருந்துகொண்டு பிடிவாதத்தில் ஒண்ணும் குறைச்சலைக் காணோம்!' என்றாள் வேம்பு.

'யாரைப் பார்த்து அசடு என்கிறாய்? நானா அசடு - ஹூம்?' என்று சாம்பு கம்பீரமாகப் பார்க்க முயன்றபோது, அவன் முகத்தில் வழிந்த அசட்டுத்தனத்தைக் கண்டு வேம்பு வுக்குக்கூடச் சிரிப்பு வந்தது. சாம்புவைக் கோபப்படுத்தினால் உபயோகமில்லை என்று அனுபவத்தில் அறிந்த அவள், 'பாருங்கோ,

பாருங்கோ! உங்களை நான் அசடன் என்றா சொன்னேன்? பெரியம்மா பெண் தஞ்சாவூரிலிருந்து வந்திருக்கிறாள். முன்னேயே 'ஒரு படி முந்திரிப் பருப்பு வாங்கிண்டு வான்னு சொல்லியிருந்தேன். கட்டாயம் கொண்டு வந்திருப்பாள்' என்றாள்.

சாம்புவை எப்படி மயக்குவதென்று தெரிந்த வேம்பு, 'முந்திரிப் பருப்பு' என்ற மோகனாஸ்திரத்தை வீசவே, அவன் மயங்கி விட்டான். 'சரி, சாயந்திரம் போய்விட்டு நாளைக்கு விடியற் காலம் வந்து சேர்!' என்று அனுமதி கொடுத்தான்.

சாம்பு அன்று பிற்பகல் மூன்று மணி சுமாருக்கு சைனாபஜார் பக்கம் சுற்றிக்கொண்டிருந்தான். யாரோ இடிப்பது போன்ற உணர்ச்சி ஏற்பட்டதும், தன் பையிலிருந்து எதையாவது கிளப்ப முயற்சி நடக்கிறதோவென்று திரும்பிப் பார்த்தான். ஓர் ஆசாமி, கையில் ஓர் மோதிரத்தை வைத்துக்கொண்டு விலைகூறத் தொடங்கிவிட்டான். 'சார், கல் மோதிரம்! அவசரமாகப் பங்களூருக்குப் போகவேண்டி வந்துவிட்டது. அதனால்தான் விற்கிறேன். ரயில் சார்ஜுக்குப் பத்து ரூபாய் கொடுங்கள்!' என்றான் அவன்.

சாம்பு மோதிரத்தைக் கையில் வாங்கிப் பார்த்தான். பித்தளைபோல் அழுக்கடைந்து கிடந்தது அது. சைனா பஜார் வியாபாரம் என்றால் படுமோசமாக விலையைக் குறைத்துக் கேட்கவேண்டுமென்று யாரோ சொன்னது ஞாபகம் வரவே, 'இதற்கு ரெண்டு ரூபாய்க்குமேல் என்ன?' என்று திருப்பிக் கொடுக்கப் போனான். ஆனால், அந்த மனிதனோ மோதிரத்தைக் கையில் வாங்கிக் கொள்ளவில்லை. 'சரி! எடு ரூபாயை!' என்று சொல்லிவிட்டான். 'எனக்கு எதற்கு, மோதிரம்?' என்று சொல்ல விரும்பிய சாம்பு, அந்த ஆளின் முகத்தில் தோன்றிய கடு கடுப்பைப் பார்த்து ஒடுங்கிப் போய்விட்டான். இரண்டு ரூபாயைப் பேசாமல் கொடுக்கவும், வியாபாரி அங்கிருந்து உடனே நடந்தான்.

அவன் திரும்பியதும் சாம்புவுக்குச் சற்றுத் தைரியம் வந்தது. மோதிரத்தைப் பார்த்தான். 'இரண்டணாகூட பெறாது; ஏமாந்து விட்டோம்!' என்று தோன்றவே, 'ஏய்! ஏய்! இது எனக்கு வேண்டாம்!' என்று கூவினான்.

அந்த ஆசாமி திரும்பிப் பார்த்து, உதாசீனமாக, 'போ ஐயா! போ! போ!' என்று சொல்லிவிட்டு விடுவிடுவென்று நடந்து போயே போய்விட்டான்.

வீட்டுக்கு வந்த சாம்புவுக்கு, அந்த மோதிரத்தைச் சாவகாசமாகத் தேய்த்துப் பார்க்க வேண்டுமென்று ஆசை. ஒருகால் நல்ல தாகவே இருந்துவிட்டால் லாபந்தானே! ஆனால், வேம்புவுக்கு இந்த முட்டாள் வியாபாரம் தெரியவந்தால் எப்படிச் சிரிப்பாள்? ஏற்கெனவேயே அவள் ஜாடையாக 'அசடன்', 'முட்டாள்' என்றெல்லாம் சொல்கிறாளே!

சாம்பு தன் அறைக்குள் சென்று பெட்டியடியில் உட்கார்ந்து அதைப் பரிசோதித்தான். தேய்த்ததில் சிறிது பளிச்சென்று ஆயிற்று. அதில் பதிந்திருந்த கல் மிகப் பழமையாக எண்ணெய் இறங்கித் தோன்றியது. ஒரு பெருமூச்சு விட்டு, 'இரண்டு ரூபாயைக் கிணற்றில் போட்டாப் போலத்தான்!' என்று எண்ணியபோது, 'ஏன்னா! சத்தப்படுத்தாமே வந்து இங்கு என்ன பண்ணிண்டிருக்கேள்?' என்று கேட்டுக்கொண்டு வேம்பு அந்த அறைக்குள் நுழைந்தாள்.

கண்மூடிக் கண் திறப்பதற்குள், சாம்பு அந்த மோதிரத்தைத் தன் பெட்டிக்குள் வைத்து மூடிவிட்டு, 'ஒன்றுமில்லை!' என்றான்.

அவன் விழித்த திருட்டு முழியைப் பார்த்துவிட்டு, 'ஏன் புளுகறேள்? அந்தப் பெட்டியைத் திறவுங்கள்!' என்றாள் வேம்பு.

'அதில் ஒன்றுமில்லை!'

'ஒன்றுமில்லாவிட்டால், அதைத் திறக்க ஏன் பயப்படணும்?'

'அதை நீ பார்க்கப்படாது!'

வேம்பு உடனே சாம்புவை அப்பால் தள்ளிவிட்டு, பெட்டியைத் திறக்கப் பார்த்தாள். இரண்டு பேரும் கீழே உருண்டு புரண்டார் கள். என்ன இருந்தாலும் சாம்பு ஆண்பிள்ளை அல்லவா? எப்படியோ ஒரே பிடிவாதமாக அவளைப் பெட்டியண்டைப் போகவிடாமல் தடுத்துவிட்டான். 'எப்படியாவது நான் மட்டும் அதைப் பார்க்காமல் விடுகிறதில்லை!' என்று கருவிக்கொண்டு அவள் கீழே சென்றாள்.

அவள் சென்ற சிறிது நேரத்துக்கெல்லாமே சாம்புவுக்கு வேறுவிதமான கவலை ஒன்று வந்து சேர்ந்தது. அந்தக் கவலை

ஒரு தடித்த உயரமான ஆசாமியின் மூலமாக வந்தது. அவன் வரும்போதே மாடிப்படி அதிர்ந்தது. அவனைப் பார்த்ததுமே சாம்புவுக்கு மனத்தில் சிறிது அச்சமும் தோன்றியது. தலையில், சிப்பாய்கள் போல் குஞ்சம் வைத்த முண்டாக, கூர்மையாக முறுக்கிவிடப்பட்ட மீசை, தொள தொளவென்ற நிஜார், முனையில் வளைத்து விடப்பட்ட வெல்வெட் சோடுகள். அறைக்குள் நுழைந்ததும் அவன் சாம்புவை வெட்டி விடுகிறாற் போல் ஒரு பார்வை பார்த்து, 'சார்! இன்றைக்கு நீர் ஒரு மோதிரம் வாங்கினீரா?' என்றான்.

'ஆமாம்!' என்றான் சாம்பு.

'அது வெறும் பித்தளை, அதில் நீர் ஏமாந்து போய்விட்டீரே!'

'இவன் யார் தம் ஏமாற்றத்தைப் பற்றிச் சொல்வது?' என்று சாம்புவுக்குக் கோபம் வந்தது. ஆனால், இந்தப் பேர்வழியிடம் கோபித்துக்கொண்டால் ஆபத்து என்று எண்ணி, 'சரி!' என்றான் சாம்பு.

'அந்த மோதிரம் எனக்கு வேண்டும்!' என்றான் வந்தவன்.

'பித்தளை உங்களுக்கு எதற்கு?' என்று கேட்டுவிட்டான் சாம்பு. அவனையும் அறியாமல்தான் அந்த வார்த்தை வாயிலிருந்து வந்துவிட்டது.

'அதைப்பற்றி என்ன? நான் ஐந்து ரூபாய் கொடுக்கிறேன்; கொடுத்துவிடும்!' என்றான் அந்தப் பேர்வழி.

சாம்பு தலையை ஆட்டினான். 'அது எனக்கு வேணும்!' என்றான்.

'சரி! இருபது ரூபாய் தருகிறேன்; இப்படிக் கொடும்!'

சாம்பு மீண்டும் தலையை அசைத்தான். இவனிடம் அதை விற்கப் போய், பின்னும் ஆபத்தில் மாட்டிக்கொண்டால் என்ன செய்வதென்ற பயமே அவனுக்கு வந்துவிட்டது.

'கடைசியாகச் சொல்கிறேன்; நூறு ரூபாய் தருகிறேன்!' என்று கேட்டான் அவன்.

சாம்பு கண்களை மூடிக்கொண்டு மண்டையை ஆட்டினான். வந்த பேர்வழி எழுந்து நின்று, 'ஓய்! நான் மரியாதையாகக் கேட்டால் வழிக்கு வரமாட்டேனென்கிறீர்! அப்புறம் இதற்காக நீர்

வருத்தப்படப் போகிறீர்! பொன்னான உடம்பைப் புண்ணாக அடித்துக்கொள்ளப் போகிறீர்!' என்றான். தன்னை அவன் அறையப் போகிறான் என்று எதிர்பார்த்த சாம்பு ஏமாந்து போனான். ஏனெனில், மறு பேச்சின்றி அந்த ஆசாமி தடதட வென்று வந்த வழியே கீழே இறங்கிப் போய்விட்டான்.

சுமார் அரைமணி நேரத்துக்குப் பிறகு வேறோர் ஆசாமி வந்தான். அவன் பார்வைக்குச் சர்வ சாதாரணமாகத்தான் இருந்தான்.

'மிஸ்டர் சாம்பு! உம்மிடம் ஒரு மோதிரம் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். சற்றுமுன் ஒருவர் நூறு ரூபாய் தருவதாகச் சொன்னாராம். நான் முந்நூறு தருகிறேன். அதை எனக்குக் கொடுத்துவிடும்!' என்று கேட்டான் அவன்.

'அந்த மோதிரம் விலைக்குக் கொடுப்பதில்லை!' என்றான் சாம்பு.

'சரி! ஐந்நூறு ரூபாய்! ஒரே விலை!'

'வீணாகப் பொழுதைப் போக்க வேண்டாம்!' என்றான் சாம்பு.

'மிஸ்டர்! நீங்கள் இதற்காக ரொம்ப சிரமப்படப் போகிறீர்கள். எச்சரிக்கையாக இருங்கள்!' என்று அவன் பல்லைக் கடித்து விட்டுப் போனான்.

இந்த மோதிரத்துக்காக இன்னும் என்னவெல்லாம் நடக்கப் போகிறதோ என்று சாம்பு தலையைச் சொறிந்துகொண்டான். 'கொடுத்துத்தான் தொலைத்துவிடுவோமா?' என்று அவன் மனம் சொல்லிக்கொண்டது. 'சரி! அடுத்த ஆசாமி வரட்டும்! அவன் கையில் மோதிரத்தை வைத்து அனுப்பிவிடுவது!' என்று முடிவு செய்தான்.

அடுத்த ஆசாமி எதிர்பார்த்தபடி இல்லை! அவன் வீட்டு வாசலில் ஒரு பெரிய மோட்டார் வந்து நின்றது. அதிலிருந்து பெரும்பாடி யான ஆசாமி ஒருவர் இறங்கி, 'மிஸ்டர் சாம்பு இருக்காரா?' என்று விசாரித்தார்.

அவர் பின்னால், குமாஸ்தா போல் காணப்பட்ட ஒருவரும் வந்தார்.

வேம்பு, இவர்களை மாடிக்குப் போகும்படி சொல்லவும் இருவரும் மேலே ஏறி வந்தனர்.

குமாஸ்தா போல் இருந்தவர், 'மிஸ்டர் சாம்பு! இவர்கள்தாம் பிப்பூர் ஜமீன்தார்! தங்களைப் பார்க்க - ஓர் அவசரக் காரியமாக - வந்திருக்கிறார்கள்!' என்று அறிமுகம் செய்துவைத்தார்.

சாம்புவுக்கு மனத்தில் மோதிர ஞாபகமே பெரிதாக இருந்த படியால், அவனையும் மீறி தலையைச் சொறிந்து கொண்டு, 'ஏதாவது மோதிர விஷயமோ?' என்று யோசனையின்றிக் கேட்டுவிட்டான்!

ஜமீன்தாரும், காரியஸ்தரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். 'இவர் மந்திரவாதி மாதிரி பேசுவார் என்று நாம் கேள்விப்பட்டது சரியாகப் போச்சு!' என்றார் ஜமீன்தார் தம் குமாஸ்தாவிடம். பிறகு சாம்புவைப் பார்த்து, 'நீங்கள் எப்படிக் கண்டுபிடித்தீர்களோ? ஆச்சரியமாக இருக்கிறது! மோதிரம் காணாமற்போன விஷயமாகத்தான் இப்போது நான் வந்திருக் கிறேன்!' என்றார் அவர்.

'உம்!' என்றான் சாம்பு.

'அது ஒரு பெரிய கதை. எங்கள் ஜமீன் ரொம்பப் புராதனமானது. மகாகாளிதான் குலதெய்வம், சார்! உங்களுக்கு ஒருகால் நம்பிக்கை இல்லாமல் இருக்கலாம். எங்கள் குலத்தைக் காப்பாற்றி வருபவள் அந்தப் பராசக்திதான்.'

'சரி, சொல்லுங்கள்.'

'மனத்துக்கு மிகவும் சஞ்சலம் அளிக்கக்கூடியதாக ஒரு காரியம் இரண்டு நாள் முன்பு நடந்துவிட்டது. என்னுடைய மெட்ராஸ் பங்களா தேனாம்பேட்டையில் இருக்கிறது. அங்கே நாங்கள் காளி பூஜை நடத்தினோம். பூஜை முடிவில், காளி பாதத்தில் வைத்திருந்த ஒரு மோதிரம் காணப்படவில்லை. அது சாதாரண மோதிரம் இல்லை. நூறு வருஷமாக எங்கள் வம்சத்தில் ரக்ஷைபோல் இருந்திருக்கிறது. அது யாரிடம் இருக்கிறதோ அவர்கள்தாம் தலைமுறை தலைமுறையாக ஜமீன்தாராக இருப்பார்கள் என்றுகூட ஓர் ஐதீகம் இருக்கிறது. அந்த மோதிரம் திடீரென்று காணப்படவில்லை. எங்கள் தாயாதிகள் ரொம்ப பேர் அதை அடையப் பிரயத்தனப்படுகிறார்கள். காணாமல் போன செய்தி கூடப் பரவிவிட்டது. அவர்கள் கையில் அகப்படும் முன்பு எனக்கு நீங்கள் அதை எடுத்துத் தரவேண்டும்.'

சாம்பு யோசித்தான். சட்டென்று பெட்டியைத் திறந்து, மோதிரத்தைக் காண்பித்து, 'இதுதானா அது?' என்று கேட்டுவிட வேண்டுமென்பது அவன் அவா. பின் யோசனையில், 'அவ்வளவு சீக்கிரம் கொடுக்கப்படாது. இன்னொருதரம் வரச் சொல்லி அப்போது கொடுக்கலாம்!' என்று எண்ணினான். வேறு இருவர் எதற்காக அந்த மோதிரத்தை அடைய விரும்பியிருக்கிறார்கள் என்பதும் சாம்புவுக்கு ஒருவாறு புரிந்தது. ஜமீன்தாருடன் ஏதாவது பேசவேண்டுமே என்று, 'இதற்கு முன்பு எப்போதாவது அந்த மோதிரம் காணாமல் போயிருக்கிறதோ?' என்று கேட்டு வைத்தான்.

'முன்பு என் தகப்பனார், பார்வைக்கு இதேபோல் ஒரு மோதிரம் செய்தாராம். அதை, சில தாயாதிக்காரர்கள் அசல் மோதிரமாக்கும் என்று திருடிக்கொண்டு போய்விட்டு, திரும்பவும் போட்டு விட்டுப் போயிருக்கிறார்களாம். உங்களுக்கு அடையாளத்துக்கு அதையும் கொண்டு வந்திருக்கிறேன்!' என்று ஜமீன்தார் சொல்லி தமது பணப்பையை எடுத்து, ஒரு மோதிரத்தைச் சாம்புவிடம் கொடுத்தார். அது கிட்டத்தட்ட, தான் வாங்கிய மோதிரம் போலவே இருக்கக் கண்டு சாம்பு திடுக்கிட்டான்.

'சரி. நான் முயற்சி செய்து பார்க்கிறேன்!' என்றான் சாம்பு.

'உங்களால்தான் முடிய வேண்டும். இந்த மோதிரம் உங்களிடமே இருக்கட்டும். இது நாலணா பெறாத பண்டம். இருந்தாலும் அடையாளத்துக்கு!'

'அப்படியே இருக்கட்டும்!'

'நாளை, நான் என் குமாஸ்தாவை அனுப்பி...'

'செய்யுங்கள்!' என்றான் சாம்பு.

இருவரும் எழுந்து சென்றார்கள். சாம்பு மீண்டும் அறையில் தனியாகவே இருந்தான்.

வேம்பு மாடிக்கு வந்தாள். தன் புருஷனின் கையிலிருந்த மோதிரத்தை வாங்கி தன் கையில் போட்டுக்கொண்டு, 'இதை நான் போட்டுண்டிருக்கேனே!' என்றாள்.

'ஊஹூம்! கீழே வை! இது ஜமீன்தார் மோதிரம்!' என்றான் சாம்பு.

'இருந்தால் என்ன? நாளைக்குக் காலம்பற எங்க பெரியம்மா வாத்திலேருந்து வந்தப்புறம் வாங்கி, உங்க ஜமீன்தாருக்குக் கொடுங்கோ. அது சரி. பெட்டியிலே என்ன இருக்குன்னு சொல்லமாட்டேளோ?' என்று கேட்டாள்.

'பேசாமே போ!' என்று சாம்பு அவளைக் கீழே அனுப்பினான்.

அதற்குப் பிறகு, சாம்புவை இரண்டொரு நண்பர்கள் பார்க்க வந்தார்கள். ஒருவர் அவனைத் தம் வீட்டுக்கு சாப்பாட்டுக்கு அழைத்துச் சென்று திரும்பக் கொண்டுவந்து விட்டார். அவன் வந்தபோது, வேம்பு மாம்பலத்துக்குக் கிளம்பிக் கொண்டிருந்தாள். 'நான் போய்ட்டு வரேன். காலம்பற வந்துடறேன். ஜாக்கிரதையாக இருங்கோ!' என்று சொல்லிவிட்டுப் போனாள். சாம்பு, மறுபடி மாடி அறைக்குப் போய் படுத்துக்கொண்டான்.

சாம்பு கண் விழித்தபோது, எங்கேயோ மணி பன்னிரண்டு அடித்தது. ஜன்னல் வழியே வெளியே பார்த்தால், நகரம் பிளாக்-அவுட்டில் மூழ்கி ஆழ்ந்த நித்திரையில் இருந்தது. சாம்பு மறுபடி தூங்கப் போனவன், ஏதோ அரவம் கேட்டுக் கவனித்தான். மாடிப்படியில் சிறிது சத்தம் கேட்டது. யாராயிருக்கும்? வாசற்கதவைத் தாழ்ப்பாளிட்டிருக்கும்போது யார் வருவது சாத்தியம்? ஒருகால் பூனையோ!

சாம்பு விளக்கைப் போட்டுவிட்டு, அறைக் கதவைத் திறந்தான். அடுத்த நிமிஷம், அவன் உடலிலுள்ள உதிரம் அனைத்தும் தோய்ந்துபோகிற உணர்ச்சி உண்டாயிற்று. மாடிப்படியில் கடோத்கஜர்கள்போல் மூன்று முரட்டு ஆசாமிகள் நின்றார்கள். ஒவ்வொருவர் கையிலும் ஒரு பெரிய தடிக்கம்பு இருந்தது. இவர்களுக்குத் தலைமையில் இருந்தவன், மாலையில் தன்னைப் பார்க்க வந்தவன்தான் என்று ஒரு கணத்தில் சாம்பு கண்டான்.

'அடே! உன்னை மரியாதையாகக் கேட்டுப் பார்த்துவிட்டேன். நீ வழிக்கு வரவில்லை. இப்போதாவது, உயிரோடு அதைக் கொடுத்துவிடுகிறாயா? அல்லது உன் மண்டையைப் பிளந்து விட்டு நாங்களாக அதைக் கொண்டுபோகலாமா?' என்று கேட்டான் அவன்.

சாம்பு தலையைத் தடவி விட்டுக்கொண்டான். அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. அவன் நினைத்தபடி ஏதாவது நடந்தால்தானே! இவ்வளவு பேருக்கு எதிராக அவன் ஒருவன்

நின்று சண்டை போடுவதென்பது சாத்தியமா? போடுவதால் தான் உபயோகம் உண்டா? எப்படியும் அவர்கள், மோதிரத்தை எடுத்துக்கொண்டு போகப் போகிறார்கள். அதை உடம்பு நலுங்காமல் தானே கொடுத்துவிட்டால் என்ன!

இப்படி நினைத்தபடியே சாம்பு மெல்ல மெல்லப் பின்வாங்கி, ஒரு மூலைக்குப் போய்விட்டான். அவன் எதிரில் தலைவனாக இருந்தவன் நின்று, 'உம். வீண்போது போக்க வேண்டாம்! எங்கே வைத்திருக்கிறாய் அதை?' என்றான் இடிபோன்ற குரலில்.

அவன் முகத்தை நிமிர்ந்து பார்க்கக்கூடச் சாம்புவுக்குத் தைரியமில்லை. வாய் திறவாமல் கைப்பெட்டியைச் சுட்டிக் காண்பித்தான். அவர்களில் ஒருவன் குதித்து, பெட்டியைத் திறந்து மோதிரத்தைத் தலைவனிடம் எடுத்துக் கொடுக்கவே, அவர்கள் ஒருவர் பின் ஒருவராக வெளியேறினார்கள்.

அவர்கள் சென்ற பிற்பாடும் சாம்புவுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. மோதிரத்தை இழந்தது அவனுக்கு வருத்தத்தை அளித்தது. நல்லவேளை! இந்தத் தடியர்கள் வந்த சமயம் வேம்பு வாவது வீட்டில் இல்லாமல் இருந்தாளே என்று ஆறுதல் மட்டும் ஏற்பட்டது.

காலை எட்டு மணிக்கெல்லாம் வேம்பு வந்துவிட்டாள். அவளிடம் நடந்தவற்றைச் சொல்லலாமா வேண்டாமா என்று அவன் மனத்துக்குள் விவாதித்துக்கொண்டிருக்கும் போதே வாசலில் பிப்பூர் ஜமீன்தாரின் மோட்டார் வந்துவிட்டது!

'அடியே! ஓடிப்போய், நான் வீட்டிலில்லை என்று சொல்லு! உன் கையிலிருக்கும் மோதிரத்தையும் கொடுத்து அனுப்பிவிடு! போ சீக்கிரம்!' என்று துடித்தான் சாம்பு.

'என் கையிலிருப்பதையா?'

'ஆமாம். உன் கையிலிருப்பதைத்தான்!'

'பெட்டியிலிருப்பதை' என்று வேம்பு ஆரம்பித்தாள்.

'போடி! பெட்டியில் மண்ணாங்கட்டி இருக்கிறது! உன் கையிலிருப்பதையே கொடு! சீக்கிரம் போ!'

மறுபடி வேம்பு வந்து பார்த்தபோது, சாம்பு தலையில் கை வைத்துக்கொண்டு வாய் திறவாமல் உட்கார்ந்திருப்பதைக் கண்டாள்.

'என்மேல் கோபமா?' என்று கேட்டாள் வேம்பு.

'உன்னைக் கோபித்துக்கொண்டு என்ன உபயோகம்?'

'உங்களுக்குத் தெரியாது என்றுதான் செய்தேன். நீங்கள் பார்த்து விட்டீர்கள் போல் இருக்கிறது.'

'என்னத்தை?'

'நேற்று, பெட்டியில் மறைத்து வைச்சேளோல்லியோ? நீங்கள் வெளியில் போனவுடன் பார்த்தேன். அதில் இருந்தது நல்ல மோதிரமாயிருந்தது. உங்கள் ஜமீன்தார் கொடுத்த மோதிரத்தை அதில் வைத்துவிட்டு, அதற்குப் பதிலாகப் பெட்டியிலிருந்த மோதிரத்தைப் போட்டுக்கொண்டு மாம்பலம் போனேன். எங்கே போய்விட்டது? சரியான சமயத்தில் நான் கொண்டுவந்து நீங்கள் கேட்பதற்கு முன் கொடுத்தேனோ, இல்லையா?'

சாம்புவுக்குத் தன் காதுகளை நம்பவே முடியவில்லை. என்ன! நேற்றிரவு அந்தப் போக்கிரிகள் கொண்டுபோனது இமிடேஷன் மோதிரமா? நிஜமாகவா? சற்றும் எதிர்பாராதவிதமாக எவ்வளவு பெரிய உதவி செய்துவிட்டாள் இவள்!

அந்தச் சமயத்தில் ஜமீன்தார் நுழைந்தார் அறைக்குள். உடனே, வேம்பு ஒதுங்கிக்கொண்டாள்.

'மிஸ்டர் சாம்பு! நீங்கள் செய்த உபகாரம் ஈடு செய்ய முடியாதது. ஒரு ராத்திரிக்குள் நீங்கள் அந்த மோதிரத்தை எப்படி எடுத்தீர்கள் என்பதே ஆச்சரியமாயிருக்கிறது. லட்ச ரூபாய் கொடுத்தாலும் தகும்! என் குடும்பமே உங்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறது. ஒரு சிறிய தொகையை மட்டும் தயவு செய்து பெற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும்' என்றார் அவர் உணர்ச்சியுடன்!

அவர் பின்னால் வந்த குமாஸ்தா ஒரு செக்கை அவனிடம் நீட்டினார். அதை வாங்கின சாம்பு, அதில் 5,000 ரூபாய் என்று எழுதியிருப்பதைக் கண்டு திடுக்கிட்டான்.

ஜமீன்தார் போன உடனேயே வேம்பு நுழைந்தாள். செக்கைக் கையிலெடுத்துப் பார்த்தாள். அடுத்த கணம், 'எனக்கு வைர அட்டிகை வாங்கிக்க இது!' என்று சொல்லி, அதை தூக்கிக்கொண்டு கீழே ஓடினாள்.

'அடியே! இங்கே கொண்டா சொல்றேன், அதை! என்னண்டை கொடுத்துவிடு, ஆமாம்! எனக்குக் கெட்ட கோபம் வரும்!' என்று அசடு வழியக் கூவியவாறு சாம்பு அவளைத் துரத்திக்கொண்டு ஓடினான்.

22

மடையன் செய்கிற காரியம்

ஒரு நாள் மத்தியானம் சாம்புவுக்குக் கோபம் பற்றிக்கொண்டு வந்தது. வேம்புவுக்காகக் காத்திருந்து காத்திருந்து அவன் கண்கள் பூத்துப்போய், உள்ளமும் உளுத்துப் போய் விட்டது. ராவ் பகதூர் நடேசய்யர் சம்சாரம் தான் அவளை அழைத்துக்கொண்டு போய் இருந்தாள். போயிருந்தால்தான் என்ன? நாள் பூராவும் அங்கேயே தங்கி விடுகிறதா? அவள் இல்லாதபோது வீடே கொள்ளை போனால் கூடக் கேள்விமுறை இல்லை. அவனுக்கும் அவசரமாக ஓர் இடத்துக்குப் போய்விட்டு வரவேண்டும். வீட்டைத் தனியே போட்டு விட்டா போகிறது? பூட்டிக்கொண்டு போனால், நடுவில் அவள் திரும்பி வந்தால் எங்கே நிற்பாள்? ஹும்! அவளைக் கண்டித்துவைக்க வேண்டியதுதான். இடம் கொடுத்து இடம் கொடுத்து மகா மோசமாகப் போய்விட்டது!

கடைசியில் அவள் இனி வரவே மாட்டாள் என்று சாம்பு எண்ணி ஒரு பெரிய பெருமூச்சு விட்ட சமயம், ஒரு மோட்டார் வந்து நின்றது வாசலில். அதிலிருந்து வேம்பு மட்டும்

இறங்கி, மோட்டாரிலிருந்த ராவ் சாகிப் நடேசய்யர் சம்சாரத் திடம், 'போய்ட்டு வரேன், மாமி! அடுத்த ஞாயிற்றுக்கிழமை வரேன், மாமி!' என்று சொல்லிவிட்டுக் குதூகலமாகக் குதித்துக் கொண்டு உள்ளே வந்தாள்.

சாம்பு, அவசர அவசரமாக அவளை வரவேற்கத் தயாராகிக் கொண்டிருந்தான். ஒரு நாற்காலியில் உட்கார்ந்து, புருவங்களை உயர்த்தி, நெற்றியைச் சுளித்து, கண்களை விரித்து, உதட்டை இறுக்கி, மிகவும் கோபத்தை அடைந்துவிட்டாற்போல் ஓர் இரைச்சல் போடக் காத்துக்கொண்டிருந்தான். அறைக்குள் நுழைந்த வேம்பு, அவனைப் பார்த்ததும் சற்றுத் திடுக்கிட்டாள். ஆனால், அதைக் கவனிக்காதவள்போல் ஒருவித நர்த்தனம் செய்து அவனைத் தாண்டிக்கொண்டு உள்ளே செல்ல முயன்றாள்.

'நிறுத்து, சொல்றேன்! இதென்ன இது! ஹூம்?' என்றான் சாம்பு கம்பீரமாக! அதாவது, அவன் அதைக் கம்பீரம் என்று நினைத்துக் கொண்டானே ஒழிய, வேம்புவை நேருக்கு நேர் சந்தித்துவிட்ட தனாலோ என்னவோ, அவன் குரலில் ஒரு குழைவு ஏற்பட்டு விட்டது.

'இதுவா? இது பரத நாட்டியம்!' என்று சொல்லி, வேம்பு அவன் எதிரில் இடுப்பில் கையை வைத்துக்கொண்டு நின்றாள். சாம்பு மட்டும் அனுமதித்திருந்தால் ஒரு தில்லானாவுக்குக்கூட அவள் தயார் என்றுதான் தோன்றியது.

'அது சரிதாண்டி! எங்கே போனே? யாரைக் கேட்டுண்டு போனே? போனால் எத்தனை நாழி? உனக்கென்ன புத்தி கித்தி எதானும் இருக்கா?' என்றான் சாம்பு.

'ரொம்பப் பேசறேளே! நடேசய்யர் ஆம்படையாளோட சதிர்க்கச்சேரிக்குப் போயிருந்தேன். நாள் பூராவுந்தான் உங்களுக்குச் சதிர் பண்ணிண்டிருக்கேனே! இதுக்கென்ன பிரமாத இரைச்சலாம், கோபமாம்! மூஞ்சியைப் பார்க்கலை, மூஞ்சியை! எத்தைக் கண்டு நீ இச்சை கொண்டாயடி மகளே!' என்று ஒரு சிறு அபிநயக் கச்சேரியுடன் நிறுத்தினாள்.

'ஒஹோ! அவ்வளவுக்கு வந்துட்டதா?' என்றான் சாம்பு.

வேம்பு துளிக்கூடப் பயந்துவிட்டதாகத் தெரியவில்லை. 'ஏதுக்கு இத்தனை மோடி?' என்று அபிநயம் பிடித்தாள். பிறகு தனது

கையை அவன் மோவாய்க் கட்டையைத் தொடுகிறாப்போல் நீட்டி விரல்களால் அவன் கன்னத்தையும் வழித்துவிட்டாள்.

சாம்பு, கடைசித் தடவையாக ஒருமுறை பிடியை விடாமல் இருக்க முயலவும், வேம்பு குபீரென்று சிரித்து, 'எத்தனை சொன்னாலும் இது தெரியாதவருடன்!' என்று அபிநயம் பிடித்தாள். அதற்கு மேலும் அவனால் பழைய முறுக்கை வைத்துக் கொண்டிருக்க முடியாமல் போகவே, 'சரி! சரி! நீ சதிர்க்கச்சேரி பார்த்தது போதும். எனக்கு அதைப் பார்க்க வேண்டாம்! இது ஒண்ணும் பிடிக்கவில்லை! ஆமாம், என்னால் சகிக்க முடிய வில்லை! நிஜம்மா நான் சந்நியாசம் வாங்கிண்டு விடப் போறேன்!' என்றான்.

'நானும் உங்களோட வந்துடறேன்!' என்றாள் வேம்பு, நாற்காலியின் கைப்பிடியில் சுவாதீனமாக உட்கார்ந்துகொண்டு.

சாம்பு சிரித்தான். 'என்னவோ சொல்ல நினைத்தேன்; எங்கேயோ போகிறது! வீட்டில் ஒரு பெரிய காரியம் நடந்துவிட்டது!' என்றான் அவன்.

'என்ன செய்துட்டேள்?' என்று வேம்பு கேட்டு, அவனுடைய பின் தலையை அருமையாகத் தடவிக் கொடுத்தாள்.

'நானும் நீயும் தோள்மேல் கைவைத்து நின்று கொண்டிருக்கிறாப் போல் ஒரு போட்டோ எடுத்தோம் அல்லவா? அதை நான் இங்கே 'விக்ரமசிங்கன் கொலை' என்கிற நாவலில் வைத்துப் படித்துக் கொண்டிருந்தேன்.'

'சரி! அந்த நாவலை என்ன செய்தேளாம்?'

'நான் ஒன்றும் செய்யவில்லை. ஒரு பழிகார வக்கீல் வந்தான். அவன் வீட்டில் ஏதோ திருட்டு போச்சாம். அவன் பேர் என்னவோ ராஜாராம சர்மா என்றான். பெரிய வக்கீலாம். கட்சிக்காரன் கொடுத்திருந்த உயில் ஒன்றை மேஜைமேல் வைத்துவிட்டுப் பக்கத்து அறைக்குப் போகிறதற்குள்ளே அந்த சுருளையே காணோமாம். யாரும் வீட்டை விட்டுப் போக வில்லையாம்; புதிதாக யாரும் வரவில்லையாம். அது கிடைக் காமல் போனால் பிழைப்பே போய், ரொம்ப அபக்யாதி வந்து விடுமாம். நீயும் இல்லை! வாசல் கதவைப் போய்த் திறந்தேன். அவன் கையில், வகையாக அகப்பட்டுக்கொண்டு விட்டேன்.

என்னை உடனே அழைத்துக்கொண்டு போக ஆனமட்டும் பார்த்தான். ஒரே பிடிவாதமாக நீ வந்த பிறகுதான் கிளம்ப முடியுமென்று சொல்லி அனுப்பினேன்.'

'அது எங்கே போச்சாம்?'

'நன்றாயிருக்குடி கேள்வி! அதைக் கண்டுபிடிக்கத்தானே என்னைக் கூப்பிடறான்?'

'போய்க் கண்டுபிடியுங்களேன்!'

'ஊரிலிருக்கிறவன்கள் மடத்தனமாய் எதையாவது கெட்டுப் போக்கி வைக்கிறது; நான் போய் எடுத்துக் கொடுப்பதாம்! அது போகிறது! நான் வருவேனோ மாட்டேனோ என்கிற சந்தேகத்தில், நான் கட்டாயம் வரவேண்டுமென்று இங்கிருந்த 'விக்ரமசிங்கன் கொலை'யைக் கையோடு அந்த வக்கில் கொண்டு போய்விட்டானே!'

'போனால் போகிறான்! நீங்கள் போகவேண்டாம்! என்னோடு பேசிக்கொண்டிருங்கள்! வேறே ஏதானும் நாவல் வாசியுங்கள்!'

'அடி அசடே! அதில்தான் நம் போட்டோ அகப்பட்டுக்கொண்டு இருக்கிறது! அவன் பார்த்து அதை நாலு பேரிடம் காட்டினால் ரொம்பக் கேவலம்டி! எனக்கிருக்கிற கௌரவத்துக்கு, உன்னைக் கட்டிக்கொண்டு நிற்கிறாப்போல் படம்! எங்கேயானும் ஒரு பத்திரிகையிலும் வந்துவிட்டால்...'

'அப்படின்னா, உடனே போய் வாங்கிண்டு வாருங்கோ! பண்றது அத்தனையும் அசட்டுக் காரியம்! புத்தகத்தைக் கொடுப்பானேன்! கொடுத்தவாளுக்கு உள்ளே படம் இருப்பது தெரியாதா? அசடு, அசடு! எதையாவது பண்ணிவிட்டு, என்னைப் பிடித்து இரைச்சல் போடறது! என்னடாப்பான்னு பார்த்தேன்! ஹூம்! இதுதானா! அசடுன்னு கண்டுண்டான். புத்தகத்தையும் போட்டோவையும் கொண்டு போய்விட்டான்! இப்போ அவனைத் துரத்திண்டு ஓடுங்கோ' என்று வேம்பு கேலியும் கோபமுமாக, பழிக்குப் பழி வாங்கிக்கொண்டாள்.

சாம்புவுக்குச் சொரேர் என்றது. என்ன பைத்தியக்காரத்தனம்! வேம்பு சொன்னது அவனை மேலும் கலக்கியது. உடனே கிளம்பினான். போகும்போதே அவன் மனம் பலவாறு சஞ்சலப் பட்டது. 'அந்த வக்கீலை, எப்படிப் போய்ப் புத்தகத்தைக்

கேட்பது? கேட்டவுடன் அவரே புத்தகத்தைப் புரட்டி, போட்டோவைப் பார்த்துவிட்டார் என்றால்! இந்த மாதிரி போட்டோவெல்லாம் எடுப்பது எவ்வளவு முட்டாள்தனம்? ஒருகால் புத்தகமே அவர் கைமாறிப் போயிருந்தால்!' - இப்படி யெல்லாம் எண்ணியவாறு பஸ் ஏறி மாம்பலம் வந்து சேர்ந்தான். மாலை மணி ஏழு. கையெழுத்து மறைந்துவிட்டது. அதிகச் சிரமம் இல்லாமல் சாம்பு வக்கீலின் வீட்டைக் கண்டுபிடித்துவிட்டான்.

சாம்பு, அதைப் போய் அடைந்தபோது வாசலில் யாருமே இல்லை. உள்ளே நுழைந்து ஹாலில் எட்டிப் பார்த்தான். அங்கும் ஈ காக்காய் இல்லை. 'சார்! சார்!' என்று கூப்பிட்டான். பதில் இல்லை. இப்படி நிர்மானுஷ்யமாக இருக்கிற வீட்டில் எதுதான் கொள்ளை போகாது என்று அவனுக்குத் தோன்றியது. வலக்கைப் புறத்தில் மாடியில் இருப்பார்களோ என்று மெல்ல மாடியில் ஏறினான். ஒரு ஹாலைக் கடந்ததும் ஒரு பெரிய அறை தென்பட்டது. அதில் சுற்றிலும் சுவரையொட்டிப் பீரோக்கள். ஒவ்வொன்றிலும் பெரும் பெரும் புத்தகங்கள். ஒரு பெரிய மேஜையும் அதன்முன் பல நாற்காலிகளும் போட்டிருந்தன. இதுதான் வக்கீலின் 'ஆபீஸ் ரூம்' என்று சாம்பு ஊகித்தான். அந்த அறையிலுங்கூட யாருமே இல்லை!

மேஜைமீது பல புத்தகங்கள் கிடந்தன. ஓர் ஓரமாக, சாம்புவின் 'விக்ரமசிங்கன் கொலை'யும் கிடந்தது. அதன்மேல் வக்கீலின் தோல் 'மணிபாக்ஸ்' வைக்கப்பட்டிருந்தது. சாம்புவுக்கு மின்னல் வேகத்தில் ஒரு யோசனை தோன்றியது. சட்டென்று அந்தப் புத்தகத்தை எடுத்துப் பிரித்து, போட்டோவைப் பத்திரப்படுத்திக் கொள்வது என்பதுதான் அந்த யோசனை!

சாம்பு, உள்ளே ஓர் அடி எடுத்துவைத்து மணிபாக்ஸை அப்பால் நகர்த்த அதன்மேல் கை வைத்தான். அவன் காரியம் முற்றுப் பெறுமுன், மாடிப்படியில் இரண்டு மூன்று பேர் பேசிக்கொண்டு வரும் சத்தம் கேட்டது. ஒன்று, வக்கீலின் குரல்! இப்போது என்ன செய்வது? 'என்ன செய்கிறீர்!' என்று வக்கீல் கேட்டுவிட்டால், என்ன பதில் சொல்வது? சாம்புவுக்குத் திகில் பற்றிக்கொண்டது. கையில் பற்றிய மணிபாக்ஸுடன் துள்ளிக் குதித்தான். எங்கேயாவது ஒளிந்துகொள்ள வேண்டியது மிக அவசியம்!

அறையில் மற்றொரு பக்கம் வாசற்படி இருந்தது. அதன் வழியாக ஓடினான். ஓர் ஒழுங்கை வந்தது. ஒளிந்துகொள்ள வேண்டுமே!

சீக்கிரம்! சீக்கிரம்! சாம்புவின் கண்ணில் வக்கீலின் ஆபீஸ் ரூமுக்குப் பின்புறமிருந்த ஓர் அறை தென்பட்டது. அங்கே ஓடினான். தட்டுமுட்டுச் சாமான்கள் நிரம்பி, குப்பையும் கூளமுமாக இருந்தது அந்த அறை. தற்போதைக்கு அங்கே ஒளியலாம் என்று நாற்புறமும் பார்த்தான்; தன்னையும் நோக்கிக் கொண்டான். இதென்ன கண்றாவி! ஓடிவந்த அவசரத்தில் அவருடைய மணிபாக்ஸையும் அல்லவா தூக்கிக்கொண்டு வந்துவிட்டான்! பக்கத்து அறையில் வக்கீலின் பேச்சுக்குரல் இப்போது கேட்டது. ஒரு நிமிஷத்தில் அவர் பணப்பை திருட்டு போயிருப்பதைக் கண்டுபிடித்து விடப் போகிறார். சாம்புவைக் கையும் களவுமாகப் பிடிக்கப் போகிறார்! எத்தனை பெரிய அபகீர்த்தி! சாம்பு - தேசப் பிரசித்தி பெற்ற - சாம்பு - போலீஸார் கண்டு பயப்படும் சாம்பு - எத்தனையோ திருடர்களைப் பிடித்துத் தந்த சாம்பு - துப்பறியும் நிபுணன் சாம்பு - கேவலம் மணிபாக்ஸைத் திருடியதாக அல்லவா வெளியாகப் போகிறது?

அறை நடுவே நின்று அதை எங்கே ஒளிக்கலாம் என்று யோசித்தான். அவனுக்கு இருந்த அவகாசமோ வெகுசொற்பம். எந்த க்ஷணமும் வக்கீல் தேடிக்கொண்டு வந்துவிடலாம். எங்கே ஒளிக்கலாம்? எங்கே? எங்கே? சாம்பு, சுவரைப் பார்த்தான். பல படங்கள் - பெரிய பெரிய படங்கள் - சுவரில் மாட்டப்பட்டு இருந்தன. 'ஏதாவது ஒரு படத்துக்குப் பின்புறம் இந்த மணி பாக்ஸைப் போட்டு விடுவது. தற்போதைக்கு அங்கே கிடக்கட்டு, அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்!' என்று அவனுக்குத் தோன்றியது. நின்றபடியே சற்று கைக்கெட்டாத உயரத்தில் இருந்த படத்தின் பின்னால் அதைப் போட்டு விட்டான்.

ஒரு காரியம் ஆயிற்று. ஆனால், அவனுக்கு வேறு ஒரு கவலை வந்தது. தான் போட்ட பண்டம் சரியாக விழுந்திருக்கிறதா என்று பார்க்க வேண்டுமென்பதுதான் அந்தக் கவலை. அதுவரை யாரும் அவன் இருந்த அறைக்கு வரவில்லை. ஆகவே, அந்தச் சந்தேகத்தையும் தீர்த்துக்கொள்ள மூலையிலிருந்த ஒரு முக்காலியை படத்தின் பக்கமாக இழுத்தான். ஆனால், அந்தக் காரியம் நிறைவேறுவதற்குள் அவன் சற்றும் எதிர்பாராத ஒரு சம்பவம் நடந்துவிட்டது.

கதவு மூலையில் இதுகாறும் ஒளிந்துகொண்டிருந்த ஒரு பேர்வழி வெளிப்பட்டு சாம்புவை நெருங்கினான். பார்வைக்கு வக்கிலீன் குமாஸ்தாவாகவே அவன் தோன்றினான். சாம்புவுக்குப்

பகீர் என்றது! தன் திருட்டு அவ்வளவையும் இவன் பார்த்திருக்க வேண்டுமே!

'என்ன?' என்றான் சாம்பு.

'என்ன?' என்று பதிலுக்கு இளித்தான் அவன்.

மேற்கொண்டு என்ன பேசுவது என்று தெரியாமல் இரண்டு பேரும் விழித்தார்கள். சாம்பு முக்காலியை இழுத்து ஏறி, மணி பாக்ஸை எடுத்துவிட முயன்றான். அந்த ஆசாமி, சாம்புவின் கையைப் பிடித்துக்கொண்டு ஏறவொட்டாமல், 'வேண்டாம்!' என்றான்.

'என்ன வேண்டாம்? விடு கையை!' என்றான் சாம்பு. அவன் விட மறுத்து, இன்னும் இறுகப் பிடித்துக்கொள்ளவே, 'சரிதான், நம் மானம் கப்பலேறிவிட்டது!' என்று சாம்புவுக்குத் தீர்மானமாகி விட்டது. எதற்கும் திமிறிப் பார்க்கலாமென்று அவன் ஒரு அடி பின்னால் வைக்கவே, அந்த முக்காலியின் மேல் கால் பட்டு, அது தடாரென்ற சத்தத்துடன் குப்புற விழுந்தது. சாம்புவும் நிலை தடுமாறினான். அடுத்த நிமிஷம், அந்த அறைக்கு வெளியில் வக்கீலும் அவர் மனைவியும் மைத்துனனும் நின்றார்கள். அவர்கள் முகத்தில் ஆச்சரியம் குடிகொண்டிருந்தது!

'என்னடா சாமா! என்ன சத்தம்? மிஸ்டர் சாம்புவா? எப்போது வந்தார்? அவர் கையைப் பிடித்துக்கொண்டு என்னடா செய்கிறாய்?' என்று கேட்டார் வக்கீல்.

சாம்பு, நிலைமை தன்னையும் மீறிப்போவதை உணர்ந்தான். வக்கீல் குமாஸ்தா சொல்லுமுன் தானே நடந்ததைச் சொல்லி விடுவது சிலாக்கியமென்று அவனுக்குப்பட்டது. குமாஸ்தாவின் மூஞ்சியைப் பார்த்துவிட்டு, 'நானே சொல்லிவிடுகிறேன்!' என்று தொடங்கினான் சாம்பு.

'இல்லை. நானே சொல்லி விடுகிறேன்!' என்று குமாஸ்தா சொல்லி, சாம்புவின் வாயை அடக்கிவிட்டு, 'இதோ சாம்பு இருக்கிறாரே, இவர் மகா புத்திமான்! நான் ஒரு பெரிய மடையன்! ஒரு மடையன் எப்படிக் காரியம் செய்வானோ அப்படி இவர் இங்கே ஒரு காரியம் செய்தார்!' என்று ஆரம்பித்தான்.

'ரொம்ப சரி! ஒரு மடையன் எப்படி...' என்று சாம்பு குறுக்கிடவே குமாஸ்தா, 'சற்று இருங்கள்! எனக்குத் தெரிந்ததை நான் சொல்லி

என் குற்றத்தை ஒப்புக்கொண்டு விடுகிறேன். நான்தான் அந்த உயிலை நேற்று எடுத்தேன். கேட்பார் பேச்சைக் கேட்டு உங்களுக்கு அந்தத் துரோகம் செய்துவிட்டேன்!' என்றபோது சாம்பு திடுக்கிட்டான். வக்கீலும் வாயைத் திறந்து, 'ஹா!' என்றார்.

'ஆமாம். பெரிய பாதகம் செய்தேன். ஆனால், கடவுளுக்கு அது இஷ்டமில்லை. என் மன சாட்சியே அதற்கு எதிராக இருந்தது. நான் உங்கள் மேஜையிலிருந்து நேற்று உயிலை எடுத்தவுடன் அறைக்கு வெளியில் உங்கள் குரல் கேட்டது. சட்டென்று இந்த அறைக்குத்தான் ஓடி வந்தேன். அதை உடனே ஒளிக்க வேண்டும். அமளி அடங்கிய பிறகு அப்புறப்படுத்திக் கொள்ள லாம் என்று என் மனத்தில் அப்போது தோன்றியது. இங்கே வந்ததும், படங்கள்தான் முதலில் என் கண்ணில் பட்டன. ஒரு படத்துக்குப் பின்னால் அதை ஒளித்தேன். சற்று முன்னால் வரை, யாரும் அதை அங்கே தேடவுமில்லை. கண்டுபிடிக்கவுமில்லை!

'இன்று சாம்பு வருவார் என்று எனக்குத் தெரியும். வீட்டுக்குள் எங்கே இருந்தாலும் அவர் கண்டெடுத்து விடுவார் என்று எனக்கு ஒரு பயம். அவர் வருமுன் இதை அப்புறப்படுத்தத்தான் இங்கே வந்தேன். சாம்பு சார் உங்கள் அறைக்கு வந்து, ஒரு திருடன் எப்படியெல்லாம் செய்வான் என்று நடித்துப் பார்த்து, நான் ஒளிந்திருக்கும் இடத்தையும் கண்டுபிடித்துவிட்டார்! உங்கள் மணிபாக்ஸை எடுத்துக்கொண்டு இந்த அறைக்கு வந்தார். அதேமாதிரி சந்தர்ப்பத்தில், அவருடைய நிலைமையில் ஒரு திருடன் என்ன செய்வான் என்று யோசித்தார். படத்தின் பின்னால்தான் அதை ஒளிப்பான் என்று அவருடைய கூர்மையான புத்தி சொல்லிற்று. படத்தின் பின்னால் அதைப் போட்டுவிட்டு, முக்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு, உயிலையும் எடுக்கப் போனார். நான் அவர் கையைப் பிடித்துக்கொண்டு, மன்னிப்பு கேட்கிறேன். அதற்குள் நீங்களும் வந்துவிட்டீர்கள்!' என்றான் குமாஸ்தா.

சாம்பு பின் தலையைச் சொறிந்துகொண்டு மூக்கையும் இழுத்து விட்டுக்கொண்டான். 'மடத்தனம்! சுத்த மடத்தனம்!' என்றான். அப்போது அவன் குறிப்பிட்டுக் கொண்டிருந்தது தனது சொந்த மடத்தனத்தைத்தான்! ஆனால், கேட்பவர்களுக்கு அப்படித் தோன்றுமா?

'இவன் மடத்தனம் ஒன்றும் ஆச்சரியமில்லை. ஒரு மடையன் திருடிவிட்டு இந்த சந்தர்ப்பத்தில் எப்படி 'ரி-ஆக்ட்' செய்வான் என்று நீங்கள் யோசித்து நடித்தீர்களே, அதுதான் பெரிய ஆச்சரியம்!' என்றார் வக்கில், சாம்புவின் கையைக் குலுக்கி.

•

இந்த அமளியில் சாம்பு, தான் வந்த காரியத்தை மறந்து சீக்கிரமே வீட்டுக்குத் திரும்பிவிட்டான்.

போனதும் போகாததுமாக, 'என்ன!' போட்டோ இருந்ததா?' என்று கேலியாகக் கேட்டாள் வேம்பு.

'உஸ்ஸ். என்ன மறதி! என்ன முட்டாள்தனம்!' என்று சாம்பு உதட்டைக் கடித்துக்கொண்டு தலையைச் சொறிந்தான்.

'அது எப்படி அகப்படும் என்கிறேன்?' என்றாள் வேம்பு.

'ஏன்?'

'இங்கே 'பன்னியூர் மிட்டாதார்' என்கிற நாவலிலே அதை வைத்துவிட்டு, 'விக்ரமசிங்கன் கொலை'யிலே இருக்கான்னு பார்க்கப்போனால் எப்படி அகப்படும் என்கிறேன்! நீங்கள் அன்னண்டை போனவுடனேயே இன்னண்டை படம் அகப்பட்டு விட்டது. கூப்பிடலாமென்று வாசலில் ஓடிவந்து பார்த்தேன். அதற்குள் மூலை திரும்பிவிட்டேள்!' என்றாள் அவள்.

'இருந்தாலும், எப்படி வரமுடியும்? எனக்கு, அங்கே வேற முக்கியமான வேலையும் இருந்ததேடி, வேம்பு!' என்று சாம்பு பதில் சொன்னான்.

23

குழந்தை விளையாட்டு

மாம்பலத்துக்குப் போய் இரண்டாம் தடவையாகத் தன் பெரியம்மா பெண்ணுடன் சீராடிவிட்டு வந்தபோது வேம்பு வெறுங்கையுடன் வரவில்லை. அவளைக் கண்ட சாம்பு புருவத்தைச் சுளித்துக்கொண்டு, வெறித்து வெறித்து அவளையும், அவள் கைப்பிடியாகக் கூடவே அழைத்து வந்ததையும் பார்த்தான்.

வேம்பு ஒன்றையும் கவனிக்காதவள்போல் அவனைத் தாண்டிக்கொண்டு போய், 'என்ன பார்க்கறேள்? யாரையும் கூட்டிக்கொண்டு வந்துடலை! என் பெரியம்மா பெண் கோமுவோட பிள்ளை இவன். இது அடிக்கிற லூட்டி தாங்கலை. இரண்டு நாளைக்கு வைத்துக்கொள்ளடி என்றாள். வாடா, பிச்சை, காபி தரேன்!' என்று சொல்லி, ஒரு சின்னப் பிள்ளையைத் தரதரவென்று உள்ளே இழுத்தாள். சுமார் ஏழு வயதுள்ள அந்தப் பிள்ளை சாம்புவைப் பார்த்து முகத்தை வலித்து அழகு காண்பித்தது.

பிச்சை என்ற அந்தப் பிள்ளை வந்தப்புறம் சாம்புவுக்கு ஒரு நிமிஷமாவது ஓய்ச்சல்

கொமும்பு தமிழ்ச் சங்கம்

ஒழிவு கிடையாது. அவனுடைய பெட்டி, சட்டைப் பைகளை யெல்லாம் பிச்சை சோதனை போட்டான். சாம்புவின் முதுகுச் சரிவில் ஏறிச் சறுக்கி விழுவது அவனுக்கு வெகு வேடிக்கையாக இருந்தது. எல்லாவற்றையும் விட, சாம்பு கோபித்துக்கொள்வது தான் பிச்சைக்கு அசாத்திய தமாஷாக இருந்தது.

'அடியே வேம்பு! இந்தச் சனியனை உள்ளே கூப்பிடு!' என்று இரைச்சல் போட்டான் சாம்பு.

'யாரைச் சனியன் என்கிறேள்? குழந்தையையா? நன்னாயிருக்கு! அவன் என்ன பண்ணினான் உங்களை?' என்றாள் வேம்பு.

'என்ன பண்ணினானா? அவன் என் உயிரைத்தான் வாங்கு கிறான்.'

'அழகுதான்! நீங்கள் என் உயிரை வாங்குகிறதை விடவா?'

'அதிகப் பிரசங்கி! விஷமம் பண்றான் என்றால், ஏன்னென்னமோ பேசறியே!'

'குழந்தை என்றால் விஷமம்தான் பண்ணும். உங்க மாதிரி மண்டையைத் தடவி விட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்குமா?' என்று கேட்டாள் வேம்பு.

உட்கார்ந்து மண்டையைத் தடவி விட்டுக்கொண்டிருந்த சாம்பு சட்டென்று எழுந்து, 'உன் செல்லப்பிள்ளை உன்னிடமே இருக்கட்டும். எனக்குச் சித்தே பேப்பர் வாசிக்கணும்!' என்று சொல்லி, பிச்சையின் கையைக் கரகரவென்று இழுத்து உள்ளே கொண்டுவிட்டு வந்தான்.

பிச்சை அதிக நேரம் உள்ளே இல்லை. வாசலுக்கு வந்து விட்டான். அன்றைக்கு முதல்நாள் மழை பெய்திருந்ததால் மழைத் தண்ணீர் இங்கும் அங்கும் தேங்கியிருந்தது. அதை உதைத்து உதைத்து, போகிற பேர் வருகிற பேர்மேல் வாரி இறைத்து, அதனால் கிடைத்த ஆனந்தத்தை அநுபவித்துக் கொண்டிருந்தான். கடைசியில், அவனே ஒரு சிறு குழியில் விழுந்து எழுந்த பிறகுதான், அந்த விளையாட்டை நிறுத்தினான். அடுத்த விளையாட்டுக்கு, அவன் கையில் ஒரு கவையும் ரப்பர்துண்டும் அகப்பட்டன. கவையில் ரப்பர் துண்டைக் கட்டி, சிறு கற்களை வைத்து அடித்துக்கொண்டிருந்தான். கல் ஒன்று, ஒரு முரட்டுப் பேர்வழியின் மேல் அகஸ்மாத்தாகப்பட்டு அவன்

விழித்துப் பார்த்தபோது, பிச்சை வீட்டுக்குள் ஒரே ஓட்டமாக ஓடி வந்துவிட்டான்.

பேப்பர் படித்துக்கொண்டு உட்கார்ந்திருந்த சாம்புவுக்கு, வாசிப்பு மும்முரத்தில் பிச்சை வந்ததே தெரியாது. ஆனால், பிச்சை அவன் பின்னால் உட்கார்ந்துகொண்டு இரண்டு சிறு கற்களைக் குறி பார்த்து விடவும், அவசர அவசரமாகக் கழுத்தைத் தடவி விட்டுக்கொண்டு சாம்பு திரும்பிப் பார்த்தான். ஆத்திரம் பற்றிக்கொண்டு வரவே, அந்த விஷமக் கொடுக்கின் மென்னியை முறித்துவிடலாமென்று ஆவேசமாக எழுந்தான்.

'வேண்டாம், சார்! போனால் போறான், சார்!' என்று சொல்லிக் கொண்டே இன்ஸ்பெக்டர் கோபாலன் அப்போது நுழைந்தார்.

'சிறு பயல்கள் அப்படித்தான் இருப்பார்கள்! சரி! நீங்கள் கொஞ்சம் என்கூட வந்துவிட்டுப் போகணுமே இப்போ!' என்றார் கோபாலன்.

'இதென்னடா கழுத்தறுப்பு!' என்று சாம்புவின் முகம் விளக்கெண்ணெய் சாப்பிட்டாற்போல் மாறியது. தலையையும், கை தானாகவே தடவி விட்டுக்கொண்டது.

'ஒன்றுமில்லை. ரொம்ப அற்பக் கேஸ். நீங்கள் வந்து பார்த்து விட்டுத் திரும்பினீர்களானால் போதும், எங்கே இருக்கிறது என்று சொல்லிவிடுவீர்கள்!' என்றார் கோபாலன்.

'நான் என்ன மந்திரவாதியா?' என்று கேட்டான் சாம்பு.

'உங்களுக்கு இது குழந்தை விளையாட்டு மாதிரி சார்!'

'ஹூம்!'

'நம்ம டெபுடி கலெக்டர் பஞ்சாபகேசய்யர் வீட்டில் கல்யாணம் முந்தாநாள். உங்களுக்குக்கூடப் பத்திரிகை அனுப்பினதாகச் சொன்னார் அவர். கல்யாணத்தன்னிக்குப் பெண்ணுக்கு வைர மாலை போட்டிருந்தார்கள். நேற்று சாயந்திரம் வரைக்கும் அது இருந்தது. சாயந்திரம், பெண் மாடியில் படுத்துக்கொண்டு தூங்கி யிருக்கிறாள். அவளை எழுப்பி, சாஸ்திரிகள் ஔபாஸனத்துக்கு அழைத்திருக்கிறார். அவசரமாகப் போயிருக்கிறாள். ராத்திரி ஊஞ்சலின்போது, கழுத்தில் பார்த்தால் நகையைக் காணோமாம்!'

'தொலைந்து போகிறது, சார்! டெபுடி கலெக்டர்! பணம் ஏராளமா யிருக்கு. வேறே பண்ணிப் போடட்டும்!' என்றான் சாம்பு.

'வேறு பண்ணிப் போட அவர் தயாராகத்தான் இருக்கிறார். ஆனால், இந்த நகை இரவல் வாங்கினது. கொடுத்தவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டுமே! புறப்படுங்கள், மிஸ்டர் சாம்பு! பஞ்சாபகேசய்யர் தவியாய்த் தவிக்கிறார். பெண் அழுது அழுது மூஞ்சியெல்லாம் வீங்கிப் போய்விட்டது. இவர்கள் நமக்கு ரொம்ப வேண்டியவர்கள், சார்!' என்று கோபாலன் சாம்புவின் கையைப் பிடித்து அவசரப்படுத்தினார்.

சமையற்கட்டிலிருந்து ஜாடையாக வேம்பு கூப்பிடுவதைக் கவனித்த சாம்பு உள்ளே போனான்.

'இந்தாருங்கோ! குழந்தையையும் கூட அழைத்துக்கொண்டு போங்கோ! அவன் மோட்டாரிலே வரணும்னு ஆசைப்படறான்!' என்றாள் வேம்பு.

'ஊஹூம்! அதெல்லாம் இப்போ முடியாது. இது பெரிய துறுதுறுப்பை! என் வேலையைக் கெடுத்துடும்!'

'மகா வேலை பொறட்டப் போறேள்! அதைக் கெடுத்துடப் போறானாக்கும் இவன்! இப்படிக் குழந்தைகளைக் கரிச்சா, பகவான் எங்கேர்ந்து குழந்தை கொடுப்பார்! அடே பிச்சை! நீ சித்தப்பாவோட சமத்தாப் போயிட்டு வாடா!'

'முடியாது, முடியவே முடியாது! முடியாது!' என்றான் சாம்பு.

'இந்தப் பிடிவாதந்தானே வேண்டாங்கிறது! நீ போடா, பிச்சை!' என்றாள் வேம்பு.

சாம்பு பிடிவாதமாகத்தான் சமையற்கட்டிலிருந்து வந்தான். அவன் கோட்டைப் பிடித்துக்கொண்டு பிச்சை, தத்தித் தத்திக் கொண்டு பின் தொடர்ந்தான்.

'உள்ளே என்ன தகராறு?' என்று சிரித்தார் கோபாலன்.

எப்படியும் வேம்பு சொன்னபடி கடைசியில் கேட்டாக வேண்டும் என்று சாம்புவுக்குத் தெரியுமாகையால், கோபால னிடம் விஷயத்தை மாற்றிச் சொன்னான். 'இந்தப் பயல் கூடவே இருக்கட்டும் என்கிறேன். அவள் வேண்டாம் என்கிறாள்!' என்றான்.

'எதற்கு சார் இவன்?' என்று கோபாலன் பிச்சையை விறைக்க வும், அவன் சாம்புவின் பின்னால் ஒளிந்துகொண்டு அவரை எட்டி எட்டிப் பார்த்தான்.

'இருக்கட்டும்! ஒரு காரியமாக இவனும் இருக்கட்டும்!' என்று சாம்பு மழுப்பினான்.

வழியெல்லாம் மோட்டாரில் பிச்சை படுத்திய பாடு இத்தனை அத்தனை இல்லை. கோபாலனின் சட்டைப்பையெல்லாம் குடைந்தான். சேற்றில் விழுந்தபடியே வந்திருந்தானாகையால், அவர் உடுப்புகளில்கூட அழுக்கு பட்டது. சாம்புவை உத்தேசித்துத்தான் அவர் பொறுத்துக்கொண்டிருக்க வேண்டும்!

வாஸ்தவமாகவே பஞ்சாபகேசய்யர் மிகவும் ஆடிப்போயிருந் தார். இருந்திருந்தால் இரண்டாயிரம் ரூபாய் பெறும் மாலைக்காக அவர் அப்படிக் கவலைப்படவில்லை. வாங்கின பண்டத்தை நாணயமாகக் கொடுத்தோம் என்றில்லையே என்றுதான் அவர் மனம் வருத்திக்கொண்டிருந்தார். சாம்புவைப் பார்த்தபோதுகூட அவருக்குத் தைரியம் ஏற்படவில்லை. மனத்துக்குள், இந்த அசடு என்ன செய்யப் போகிறது' என்றுதான் தோன்றியது.

வீட்டைச் சுற்றிப் பார்த்தார்கள். கீழ்க்கட்டு பூராவும் சாம்பு சுற்றி வந்தான். புழக்கடையில் இரண்டு பூவரச மரங்கள். அவைகளின் அடியில் ஓர் அம்பாரம் பாத்திரங்களைப் போட்டுக்கொண்டு வேலைக்காரி தேய்த்துக் கொண்டிருந்தாள்.

சாம்பு, திரும்பி மாடிப்படி ஏறினான். அவன் கோட்டைப் பிடித்துக்கொண்டு, 'குப்குப்'பென்று வாயால் ஓசைப்படுத்திக் கொண்டு பிச்சையும் ஏறினான். பஞ்சாப கேசய்யர் கோபாலனைத் தனியே இழுத்து, உதட்டைப் பிதுக்கினார். சாம்புவால் உபயோகமில்லை என்பதுதான் அவர் கூற வந்தது.

'அப்படிச் சொல்லிவிடக்கூடாது! சாம்புவை எனக்குத் தெரியும். அவர் மனத்தில் என்ன இருக்கிறதென்று நம் யாராலும் சொல்ல முடியாது! காரியம் செய்வது என்னவோ பைத்தியக்காரன் மாதிரி இருக்கும்; கடைசியில் ரிஸல்ட் பிரமாதமாயிருக்கும்!' என்றார்.

பஞ்சாபகேசய்யருக்கு நம்பிக்கை இல்லை. பார்க்கலாம்! என்றார். மாடி பூராவும் ரத்ன கம்பளங்கள் விரித்திருந்தது. சாம்பு வுக்கு அவைகளை மிதிக்கக்கூட அச்சமாயிருந்தது. பல வெள்ளிப்

பாத்திரங்கள் அங்கும் இங்கும் இறைந்து கிடந்தன. சந்தனமும் பாக்கும் வெற்றிலையும் சிதறிக் கிடந்தன. சாம்புவையும் அவன் பின்னால் சேறுபடிந்த நிஜாருடன் ஒரு சிறு பையனையும் பார்த்த அங்கிருந்த ஒருத்தி களுக்கென்று சிரித்து விட்டாள். சாம்பு நிமிரவும் அவள்தான் கல்யாணப் பெண் என்று ஊகித்தான். பிச்சையைக் கூட்டி வந்ததால்தானே இந்த அவமானம்? சனியன் பிடித்த வேம்பு பிடிவாதத்தினால் வந்தது எல்லாம்!

ஒரு சோபாவில் தனியே உட்கார்ந்து, மூக்கைச் சொறிந்துவிட்டுக் கொண்டு மோட்டு வளையைப் பார்த்தான் சாம்பு. பஞ்சாப கேசய்யரும், கோபாலனும் ஹாலின் வேறொரு மூலையில் நின்று ரகசியமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். சாம்புவும் யோசனையில் ஆழ்ந்தான். 'சீ! எவ்வளவு கேவலமான பிழைப்பு! க்ஷணம் தப்பினால் அவமானம்! இந்தக் கோபாலன் சிநேகமே பெரிய தொந்தரவாகப் போச்சுது! ஒதுங்குவோமென்றால் கூடப் பிடரியைப் பிடித்தல்லவா இவர் உந்திக்கொண்டு வருகிறார்!' - சாம்பு, சட்டென்று தன் பிடரியைப் பிடித்துக்கொண்டான். அங்கே ஒரு சிறு கவண்டிக்கல், சொரேர் என்று அப்போதுதான் பாய்ந்தது! திரும்பிப் பார்த்தால், பிச்சை சிரித்துக்கொண்டு நிற்கிறான்!

சாம்பு அவன் பக்கத்தில் போனான். கோபத்தையெல்லாம் அடக்கிக்கொண்டு, அவன் கையிலிருந்த கவைக் குச்சியைப் பிடுங்கி இரண்டாக ஒடித்து எறிந்துவிட்டு அவன் காதோடு, 'ஏ நாயே! நீ மாடியிலிருந்து இறங்கி இப்போதே கீழே போய் நில்! ஆமாம்! இங்கே இன்னும் ஒரு நிமிஷம் இருந்தாயோ, உன் மென்னியை முறித்துவிடுவேன்! உடனே போ! ஹூம்!' என்று ரகசியமாக அதட்டினான். சாம்புவின் கண்களில் தோன்றிய கோபாக்னியைக் கவனித்த பிச்சைக்கு, இன்னும் அங்கே தாமதித்தால் நிஜமாகவே சாம்பு சொன்னபடியே செய்து விடுவான் என்று தோன்றியது. ஆகவே, ஏதோ வைத்ததை எடுக்கப் போகிறவன்போல் வேகமாக கீழே சென்றான். சாம்பு ஏதோ ரகசியம் சொல்லி பையனை அனுப்புவதை, தொலைவிலிருந்து கவனித்த கோபாலனும் பஞ்சாபகேசய்யரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். பிறகு சாம்புவை நோக்கி வந்தார்கள்.

'ஏதாவது தெரிகிறதா, சார்?' கேட்டார் ஐயர்.

சாம்பு மூக்கை இழுத்து விட்டுக்கொண்டு தலையைத் தடவினான். பிறகு தலையை மெல்ல ஆட்டி, மோவாய்க் கட்டையில் கையைக் கொடுத்து ஆகாயத்தைப் பார்த்து வாயைப் பிளந்து கொண்டு விழித்தான். பஞ்சாபகேசய்யருக்கு இதைச் சகிக்க முடியவில்லை.

ஹாலில் குறுக்கும் நெடுக்குமாக வேலைக்காரர்களும் உறவினர்களும் போய்க்கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரும் சாம்புவை ஏதோ ஒரு புதுவித மிருகத்தைப் பார்ப்பது போல் பார்த்தார்கள். பஞ்சாபகேசய்யர், அடேய்! ராமா! என்றார். ஓர் ஆள் வந்து நின்றான்.

'சமையற்கார ஐயாகிட்டச் சொல்லி, டிபன் கொண்டுவரச் சொல்!' என்றார். ராமன், சாம்புவைப் பார்த்துக்கொண்டே உள்ளே சென்றான்.

பாதி டிபன் சாப்பிடும்போது கோபாலன், 'சார்! உங்கள்கூட வந்த பயல் டிபன் சாப்பிடவில்லையே!' என்று ஞாபகப்படுத்தினார்.

'அவன் கீழேயே இருக்கட்டும்! ஒரு காரியமாகத்தான் அவனை அனுப்பினேன்!' என்றான் சாம்பு. கோபாலன் பஞ்சாப கேசய்யரைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டினார்.

பிச்சையைப் பற்றி சாம்பு குறிப்பிட்ட அதே சமயத்தில், மாடிப்படியில் வேலைக்காரி திடுதிடுவென்று ஓடிவந்து, 'ஐயா! ஐயா! பிள்ளையை வந்து பாருங்க! ஓடி வாங்க! சாக்கடையிலே குதிச்சிடுத்து! வாங்க!' என்று கத்தினாள்.

சாம்புவின் மனத்தில் ஏற்பட்ட வெறுப்பு இவ்வளவு அவ்வளவில்லை. கீழே போய் அந்தப் பிள்ளையை வெளுத்து வாங்கி விடுவதென்று எழுந்து, மாடிப்படியில் வேகமாக இறங்கினான். கோபாலனும் பஞ்சாபகேசய்யரும் தொடர்ந்தார்கள். சமையற்காரனும், வேலைக்கார ராமனும், வீட்டில் வந்திருந்த உறவினர்களும் கூடவே சென்றார்கள்.

கொல்லையில் மழை ஜலமும் சாக்கடை ஜலமும் தேங்கியிருந்த ஒரு பள்ளத்திலிருந்து பிச்சை மெல்ல எழுந்திருக்க முயன்று கொண்டிருந்தான். ராமன் அவனுடைய ஒரு கையைப் பிடித்து வெளியே தூக்கினான். பிச்சையின் மற்றொரு கை, விடாப்பிடியாக ஒரு கவைக் குச்சியைப் பிடித்திருந்தது.

கவைக் குச்சியோடு ஒரு நீண்ட கயிறும் வந்தது. கரையேறிய பிச்சை கயிற்றை மேலும் இழுத்தான். நீண்ட கயிற்றின் மற்றொரு முனையில் ஒரு சிறு துணிப்பை கட்டியிருந்தது!

இந்தப் பிள்ளையை அடிப்பதற்கு முன்னால், இவனைக் குளிப்பாட்டியாக வேண்டும். சாம்பு சுற்றிலும் பார்த்தான். வேலைக்கார ராமன்தான் கண்ணில் பட்டான். 'ஏ ராமா! இங்கே வா!' என்றான் சாம்பு.

ராமன் அந்தக் குரலுக்கு வந்திருப்பானோ மாட்டானோ, கோபாலன் ராமன் நின்ற பக்கம் பாய்ந்து அவன் கையைப் பிடித்து, 'நில்!' என்றார். பிச்சை கையில் அகப்பட்ட கவைக் குச்சியில் கட்டியிருந்த பையை அவிழ்த்த வேலைக்காரி, வைர மாலையை அதனுள்ளிருந்து வெளியே எடுத்துக் காண்பித்தாள்.

பஞ்சாபகேசய்யர் தம் கண்களை நம்ப முடியாமல், 'சாம்பு மந்திரவாதிதான், சார்!' என்றார். சாம்புவும் வாயடைத்துப் போய் நின்றபோது, பிச்சை தன் கையிலிருந்த கவைக் குச்சியை அவனிடம் வெற்றியடைந்த வீரனைப்போல் காண்பித்தான். வீட்டுக்கார அம்மாள் ஒருத்தி பிச்சையை ஸ்நான அறைக்கு அழைத்துச் சென்றாள்.

சாம்பு மெல்லத் திரும்பி, கோபாலன் பக்கம் பார்த்தான். சாம்புவின் பார்வை வீழ்ந்ததுமே ராமன் அலறிவிட்டான்.

'சாமி! நேத்திக்குக் குழந்தை தூங்கி எளுந்த உடனே ஜமுக்காளத்தை உதறினேனுங்க. மாலை கிடந்திச்சு! மனதிலே கெடுதல் நினைச்சுட்டேன். என் வெத்திலைப் பையிலே போட்டு இந்தச் சாக்கடையிலே மறைச்சு வைச்சேன்! மன்னிக்கணுங்க!' என்றான்.

'உன் வீட்டைச் சோதனை போடுவாங்களேன்னு இங்கே போட்டியோ, ஹூம்? இதைக் கவைக் குச்சியிலே கட்டு வானேன்?' என்றார் இன்ஸ்பெக்டர். அதற்குப் பஞ்சாபகேசய்யர் பதில் சொல்லிவிட்டார்.

'பூவரசங்குச்சி எத்தனையோ சாக்கடையிலே மிதக்கிறது. அதுமாதிரி இதுவும் கிடந்தால் யாரும் கவனிக்கமாட்டான்னு போட்டிருக்கிறான். அப்புறம் இவனுக்கு இதை எடுக்கிறதும் லகுவாயிருக்கும். உங்க பயலுக்கு நீங்க சரியான இன்ஸ்ட்ரக்ஷன்

கொடுத்திருக்கிறீர்கள், சாம்பு! பார்த்துப் பொறுக்கிவிட்டான், விரைப்பயல்! ஏன் சார், நீங்க பயல்கிட்ட என்ன சொல்லி அனுப்பிச்சீர்கள்? பெரிய காரியத்தை குழந்தை விளை யாட்டாகவே நடத்திட்டேளே!' என்று முடித்தார் பரவசத்துடன்.

'அதெல்லாம் கேட்காதீங்கோ!' என்று சொல்லி, அசடு வழிய, சாம்பு தலையைச் சொறிந்துகொண்டான்.

•

'சித்தி! இந்தச் சித்தப்பாவை நீ நன்னா அடி, சித்தி! என் கவைக் குச்சியை இது ஒடிச்சு எறிஞ்சுடுத்து, சித்தி! மூஞ்சியைப் பாரு, சித்தப்பா, சொத்தப்பா, வெவ் வெவ் வெவ் வே!' என்று அழகு காட்டினான் பிச்சை.

குழந்தையை வேம்பு அணைத்துக்கொண்டு, 'ஏன்னா குழந்தை யின் சாமானெல்லாம் உடைக்கிறேள்! ஆனாலும் நீங்கள் முசுடு! ஒரு குழந்தையைக் கண்டு இப்படி கரிக்கப்படாது! அதுதான் பகவான் ஒரு குழந்தையைக் கொடுக்கல்லை!' என்றாள் சாம்புவைப் பார்த்து.

'இவன் சொல்றான்னு நீயும் பேசறியே, வேம்பு? இவன் கவைச் குச்சியை நான் ஒடித்து இவனையும் கீழே விரட்டாவிட்டால், இவன் சாக்கடையில் மிதந்த வேறே ஒரு குச்சியைப் பொறுக்கப் போவானா? அதை இவன் பொறுக்காட்டா, அந்த நகைதான் அப்படி அகப்பட்டிருக்குமோ?' என்றான் சாம்பு.

'அதெச் சொல்ல வந்துட்டேளே பெரிசா? அந்தக் குழந்தையை அவ்வளவு கட்டாயப்படுத்தி உங்களோடே நான்மட்டும் அனுப்பாட்டா என்ன ஆகியிருக்கப் போறது? அது கிடக்கட்டும்! அந்த ராமனை என்ன பண்ணுவா சொல்லுங்கோ!'

'ராமனைக் காட்டுக்கு அனுப்புவா. பேசாமே நீ உன் வேலையைப் பார்த்துண்டு போ!' என்றான் சாம்பு.

24

தலைக்கு மேல் வெள்ளம்

வேம்புவின் பெரியம்மாவின் பெண்ணும் மாப்பிள்ளையும் வந்து சாம்புவின் வீட்டில் ஒரு நாள் தங்கினார்கள். மறுநாள் காலையில் அவர்கள் கிளம்பும்போது, வேம்புவும் தன் புடைவைகளில் இரண்டை எடுத்து ஒரு சூட்கேஸில் வைத்துக்கொள்வதைக் கவனித்த சாம்பு, 'என்ன விசேஷம்?' என்று விசாரித்தான்.

'பெரிய துப்பறிகிறவராச்சே நீங்கள்! இது தெரியவில்லையா? நானும் எங்கக்காவுடன் மாம்பலம் போய்விட்டு வருகிறேன்!' என்றாள் அவள்.

'ஏது! தலைக்குமேல் போய்விட்டாப்போல் இருக்கிறதே! நீ போகிறது, அவர்கள் பதிலுக்கு வருகிறது, அதற்குப் பதில் நீ போகிறது.'

'ஆ...மாம்! யார் காதிலேயாவது விழப்போகிறது! வாயை மூடிக்கோங்கோ!' என்றாள் சாம்புவின் சம்சாரம்.

பிச்சை, 'சித்தி! நீ வா, சித்தி! இது சொல்றதைக் கேட்கவே கேட்காதே!' என்று சொல்லி

விட்டு, சாம்பு கைக்கு எட்டாத தூரத்தில் நின்றுகொண்டு அழகு காட்டினான்.

'என்ன மாப்பிள்ளை! நீங்கள் நம்மாத்துக்கு வரதே இல்லை. இப்பதான் வாருங்களேன்!' என்று சொல்லிக்கொண்டே வேம்புவின் பெரியம்மாள் மாப்பிள்ளையும் அங்கே வந்தார்.

'எங்கே ஒழியறதுன்னா!' என்றான் சாம்பு.

'ஆமாம்! ஒழியலை! ஊரிலிருக்கிற வம்பெல்லாம் விலைக்கு வாங்கிக்கொண்டால் எங்கிருந்து ஒழியும்?' என்று கேட்டாள் வேம்பு.

'எதற்கும் சாயந்திரம் நீங்கள் வரணும், சார்!' என்றார் ஷட்டகர்.

'பார்க்கிறேன். நிச்சயம் சொல்வதற்கில்லை. ஹி, ஹி! எனக்காக ஒண்ணும் பண்ணவேண்டாம். ஹிஹி!' என்றான் சாம்பு.

வேம்பு தன் சூட்கேஸை எடுத்துக்கொண்டு, 'ஆத்தைப் பார்த்துக் கோங்கோ, சாயந்திரம் வந்து சேருங்கோ!' என்று கிளம்பினாள்.

சாம்புவின் மனத்தில் இரண்டு தினங்களாகவே ஒரு பயம் குடிகொண்டு, அவனை ராத் தூக்கம் இல்லாமல் அடித்து வந்தது. முதல் கவலை, சைனா பஜாரில் ஒரு பெரிய வைரக் கடையில் நடந்திருந்த துணிகரமான திருட்டு. சுமார் அறுபதாயிரம் ரூபாய் பெறுமான வைர நகைகள் களவு போயிருந்தன. ராக் காவல்காரன் கைகால் கட்டுண்டு, வாயில் துணி அடைக்கப்பட்டு நினைவின்றிக் கிடந்தான். சாம்புவின் பயம், எப்போது கோபாலன் வந்து தன்னைக் கட்டி இழுத்துக்கொண்டு இந்தக் கேஸைக் கவனிக்கச் சொல்வாரோ என்பது ஒன்று.

இரண்டாவது, பத்திரிகையில் வந்த ஒரு செய்தி: சாம்புவால் பிடிக்கப்பட்ட கந்தப்பன், இன்னும் அவனுக்கு நாலரை வருஷத் தண்டனை பாக்கியிருக்கும்போதே எப்படியோ ஜெயிலிலிருந்து தப்பித்துக்கொண்டு விட்டான்! முன்பு அவன் சிறைக்குக் கொண்டு செல்லப்படும்போது தன்னைப் பார்த்து முஷ்டியை ஆட்டி, 'அடே பதரே! உன்னை ஒரு நாள் கண்காணாத இடத்துக்குக் கொண்டுபோய் உன் விளாங்காய் மண்டையை நொறுக்காவிட்டால் பார்!' என்று சவால் கூறிவிட்டுப் போனதை, சாம்பு மறக்கவே இல்லை. பத்திரிகையில் அவன் வெளிக் கிளம்பிய செய்தியைப் பார்த்ததுமே, சாம்பு தலையைத் தடவி

விட்டுக்கொண்டான். 'ஒரு பாவமும் அறியாத நமக்கு ஏன் இவ்வளவு ஆபத்தான நிலைமை ஏற்பட வேண்டும்!' என்று கலங்கினான். இந்தக் கந்தப்பன் மீண்டும் பிடிபட்டுச் சிறைக்குப் போகும் வரையில், எப்படி இவன் கையில் சிக்காமல் இருப்பது, எங்கே ஒளிந்திருப்பது என்று சஞ்சலம் அடைந்தான்.

இந்த மாதிரியான சந்தர்ப்பத்தில்தான் சாம்புவைத் தேடிக் கொண்டு ஒரு புதிய ஆசாமி வந்தான். பார்வைக்கு ஆஜாநுபாகுவாக இருந்த அவன், தனது தொழில் வைர வியாபாரம் என்றான். 'ஸார்! நீங்கள் மகா மேதாவி என்று கேள்விப்பட்டிருக்கிறேன். உங்களால் ஒரு காரியம் ஆக வேண்டும்!' என்றான்.

'எனக்கு இப்போ வைரம் ஒன்றும் தேவை இல்லையே!' என்றான் சாம்பு, மூக்கை இழுத்துவிட்டுக்கொண்டு.

'தங்களிடம் நான் வியாபார விஷயமாக வரவில்லை. எனக்கு ஒரு பெரிய ஆபத்து நேரவிருக்கிறது.'

'எனக்குந்தான் அதைவிடப் பெரிய ஆபத்து வர இருக்கிறது!' என்று சொல்ல வாயெடுத்த சாம்பு, ஏனோ அடக்கிக்கொண்டு 'உம்' என்றான்.

'என்னை இரண்டு நாளாக ஓர் ஆசாமி கொல்வதற்கு முயன்று வருகிறான்!' என்றான் அவன்.

'ஐயையோ!'

'ஆமாம். எனக்கு நன்றாகத் தெரிகிறது! முந்தாநாள் ஒரு பெரிய கட்டடத்தின் அடியில் போகும்போது இரண்டு செங்கல்கள் என் மண்டையில் விழ இருந்தன, மயிரிழை தவறிற்று. இன்று காலையில் ஒரு மோட்டாரில் அகப்பட இருந்தேன். என்னை யாரோ ஒருவன் தொடர்ந்து வருகிறான் என்று...'

'ஐயையோ! அவன் இங்கேயும் வந்து...'

'பயப்பட வேண்டாம். நான் வேண்டுமென்றே பல சுற்றுச் சுற்றி, சந்து பொந்துகளில் புகுந்து இங்கே வந்திருக்கிறேன். என்னிடம் லட்ச ரூபாய் பெறுமான வைரம் இருக்கிறது. நாளைக்கு நான் வடக்கே போகிறேன். இன்று ராத்திரி வரைக்கும் என்னை நீங்கள் பாதுகாத்து.'

'அதுமட்டும் முடியாது!'

'நீங்கள் மாட்டேனென்றால் நான் விடமாட்டேன். என்னை நீங்கள் இந்த வீட்டில்தான் எங்கேயாவது ஒளித்து வைத்துக் கொண்டு நாளைக்கு அனுப்பவேண்டும். நான் போக மாட்டேன். என்னை வெளியே விட்டீர்களோ, என்னைக் கொன்றுவிடுவான் எதிரி. அந்தப் பாவம் உங்களைத்தான் சேரும்!' என்றான் அவன்.

சாம்பு திணறினான். 'இதென்ன கூத்து! கந்தப்பன் நம்மைக் கொன்று போடாமல் இருக்க எங்கே ஒளிந்துகொள்ளலாம் என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கும்போது இவனை நாம் காப்பாற்றுவதாமே என்று மோவாய்க் கட்டையைத் தடவினான். ஆனால், வந்த ஆசாமி தன் படுக்கையை அறை ஓரத்தில் விரித்து, அதன் தலையணைக்கடியில் ஒரு தோல் பெட்டியையும் வைத்துக்கொண்டு, அங்கே தங்குவதற்கான ஆயத்தங்கள் செய்யத் தொடங்கினான்.

வாயடைத்துப் போய் உட்கார்ந்திருந்த சாம்புவிடம், 'சார்! இன்னொரு விஷயம். நான் இங்கே இருக்கிற விஷயம் உங்கள் போலீஸ் நண்பர்களுக்குக்கூடத் தெரியக்கூடாது. ஏனென்றால், என் விரோதிக்கு போலீஸில்கூட உளவாளிகள் இருக்கிறார்கள்!' என்று கேட்டுக்கொண்டான்.

சாம்பு வாயைப் பிளந்தான்! ஆனால், ஒன்றும் சொல்லவில்லை.

மத்தியானம் மாலையாயிற்று; மாலை கருத்து, அஸ்தமனம் வந்தது. சாம்புவும், அவனிடம் அடைக்கலம் புகுந்த ஆசாமியும் மட்டும் அறையில் இருந்தார்கள். மணி ஆக ஆக, சாம்புவின் உள்ளத்திலும் திகில் அதிகமாகிக்கொண்டு வந்தது. ஆனால், அன்று ஏனோ யாருமே சாம்புவைக் காண வரவில்லை! ஏன், கோபாலனைக்கூடக் காணோம். ஊரில் இவ்வளவு பெரிய திருட்டு நடந்திருக்கிற போது கோபாலன் ஏன் வராமலிருக்கிறார் என்று சாம்பு ஆச்சரியப்பட்டான்! ஆனால், அந்த ஆச்சரியம் அதிக நேரம் நீடிக்கவில்லை. வாசற்கதவு தடதடவென்று தட்டப்பட்டது.

'யார்?' என்றான் சாம்பு, உட்கார்ந்த இடத்திலிருந்து அசையாமல்.

'இன்ஸ்பெக்டர் கோபாலன் கூப்பிடுகிறார்! ஒரு நிமிஷம் வாருங்கள். வெளியில் காரில் இருக்கிறார்!' என்றது குரல்.

சாம்பு எழுந்தான். 'சார்! நான் இருப்பது தெரிய வேண்டாம்!' என்றான் வியாபாரி.

சாம்பு யோசித்தான். தான் வருவதற்குள் இவனுக்கு ஆபத்து நேர்ந்துவிட்டால் என்ன செய்வது? அறைக்கு வெளியே வந்ததும் சிறிது தயங்கினான். ஒரு முடிவுக்கு வந்து, அந்த அறையை இழுத்துத் தாழ்ப்பாளிட்டுப் பூட்டிக்கொண்டு, மாடிப்படி இறங்கி வாசற்கதவைத் திறந்தான்.

போலீஸ் உடையுடன் ஓர் ஆள் மங்கலான வெளிச்சத்தில் நின்றான். வாசலில் சிறிது தூரத்தில் ஒரு பெரிய கார் நின்றது. 'வாருங்கள், சார்! இன்ஸ்பெக்டர் வண்டியில் காத்திருக்கிறார்!' என்றான் ஆள்.

சாம்பு காரண்டை சென்று, கதவைத் திறந்தான். கூடவே பின் தொடர்ந்த ஆள், திடீரென்று ஆவேசம் வந்தவனைப் போல் சாம்புவின் கழுத்தில் ஒரு கையைக் கொடுத்து, குப்பென்று காருக்குள் தள்ளினான். வண்டிக்குள் இரு வலுவான புஜங்கள் அவனைப் பற்றி உள்ளே இழுத்துக்கொண்டன. போலீஸ் உடையில் இருந்த ஆளும் ஏறிக்கொண்டான். காரின் கதவு படேர் என்று சாத்தப்படவும், வண்டி புறப்பட்டது.

இதையெல்லாம் சற்றும் எதிர்பாராத சாம்பு நடுநடுங்கிப் போனான். அவன் நாக்கு புரள மறுத்தது. கார் நிற்காமல் மவுண்ட் ரோடில் பறந்தது. அந்த சமயத்தில் சாம்புவை யாராவது கத்தச் சொல்லியிருந்தால்கூட அவனால் முடிந்திருக்குமா என்பதும் சந்தேகந்தான்!

பதினைந்து, இருபது நிமிஷங்கள் அத்தனை யுகங்களாகக் கழிந்தன. சாம்புவின் இரு பக்கத்திலும் இருவர் உட்கார்ந் திருந்தார்கள். 'என்ன! இத்தனை நேரம் வைர வியாபாரி காலியாகி இருப்பானா?' என்று சிரித்தான் ஒருவன்.

'சாம்பு சார் காப்பாத்தறேன் என்று வாக்குக் கொடுத்தா ரோல்லியோ? அதனாலே சாம்பு சார் மாதிரியே ஓர் ஆள் போயிருக்கான்னு இவருக்குச் சொல்லுங்கோ!' என்று கிண்டல் செய்தான் மற்றொருவன். சாம்புவுக்குப் பகீர் என்றது. வைர வியாபாரியின் எதிரிகள்தான் அவனைக் கொண்டு செல்கி றார்கள்! அவன் வீட்டில், அவனைப் போலவே வேஷம் போட்டுக்கொண்டு வேறோர் ஆசாமி நடித்து, அந்த வியாபாரி

யிடம் கொள்ளையடித்து, கொலையும் செய்யப் போகிறான். சாம்புவின் உடல் நடுங்கியது.

இந்தச் சமயம், பின்னால் வரும் வேறொரு மோட்டாரின் வெளிச்சம் பளீரென்று படவே ஒருவன் டிரைவரிடம், 'ஏ பக்கிரி! வண்டியைக் காலம்பற ஏற்பாடு செய்தபடி மாம்பலத்துப் பக்கமாக விடு!' என்றான்.

மாம்பலம் வந்தது. சாம்பு சென்ற மோட்டார் பெரிய ரஸ்தாவை விட்டு, சந்துகளிலும் சிறு தெருக்களிலும் நுழைந்தது. போலீஸ் கண்ணில் படாமல் செல்வதற்காகவே இவ்வாறு அது சென்றது என்று சாம்பு ஊகித்தான். கடைசியில், ஒரு சிறு தெருவில் திரும்பிச் சென்றதும் சட்டென்று நின்றது. ஏனென்றால், முன்னால் தெருவின் குறுக்கே, மூங்கில்களால் மறைத்து ஒரு சிவப்பு வெளிச்சமும் போட்டிருந்தது. ரோட் ரிப்பேர்!

'அட சனியனே! காலையிலே இது இங்கே இல்லையே!' என்றான் டிரைவர் எரிச்சலுடன்.

'வண்டியைத் திருப்பு!' என்று அதிகாரம் செய்தான் சாம்புவின் பக்கத்திலிருந்த ஆள்.

'வண்டி திரும்பாது! தெரு ரொம்பக் குறுகல். பின்னேதான் ஓட்டணும்!' என்றான் டிரைவர். ஆனால் அவன் உடனே அவ்வாறு செய்ய முடியாதபடி, பின்னால் ஒரு வீட்டுக் குள்ளிருந்து ஒரு பெரிய மோட்டார் கிளம்பிக் கொண்டிருந்தது! தாமதம்! அநாவசியமான தாமதம்! சாம்புவின் எதிரி துடியாகத் துடித்தான்.

அந்தச் சமயம் சாம்புவின் காதில் மிக இனிமையான சப்தம் கேட்டது: 'சித்தப்பா வந்துட்டா! சித்தப்பா வந்துட்டா! அப்பா, ஓடி வா! அம்மா, ஓடி வா! சித்தப்பா! சித்தப்பா!' என்று பிச்சை கத்தும் குரல்தான் அது.

மோட்டார் நின்ற வீட்டுக்குள்ளிருந்து இரண்டு மூன்று பேர் வந்தார்கள். ஒருவர் மோட்டாரின் கதவைத் திறந்து, 'வாருங்கள், மாப்பிள்ளை! எங்கே வராமல் இருந்து விடுகிறீர்களோ என்று நினைத்துவிட்டோம்! இந்தப் பயல் மட்டும் நீங்கள் வருவீர்கள் என்று வாசலோடு நிற்கிறான்! வழி தெரியாமல் ரொம்பச் சிரமப்பட்டீர்களோ? மகாலக்ஷ்மி தெரு என்று யாரைக்

கேட்டாலும் சொல்லியிருப்பார்களே!' என்று சாம்புவின் கையைப் பிடித்து அவர் இறக்கினார்.

சாம்பு தைரியமாக இறங்கினான். அதற்குள் மோட்டாரைச் சுற்றி, பத்து பன்னிரண்டு பேர் - பிரபல துப்பறியும் - சாம்புவைக் காண அங்கே கூடிவிட்டார்கள்.

கீழே இறங்கிய சாம்பு மோட்டாரைப் பார்த்து அசடு வழியச் சிரித்தான்.

'இவாள் யாரு?' என்று கேட்டார் சாம்புவின் ஷட்டகர்.

'இவாள் பிரெண்ட்ஸ்!' என்று சொல்லி, தன்னைப் பிடித்துக் கொண்டு வந்தவர்களைப் பார்த்து, 'நான் வரேன், சார்! ரொம்ப தேங்க்ஸ்! என்று கூறிவிட்டு, தலை நிமிர்ந்து கம்பீரமாக, சாம்பு ஷட்டகர் வீட்டுக்குள் நுழைந்தான்! மோட்டாரிலிருந்தவர்கள் இந்த எதிர்பாராத சம்பவத்தினால் திகைத்திருக்கும்போதே சாம்பு மறைந்துவிட்டான்.

•

சாம்பு மோட்டாருக்குள் தள்ளப்பட்ட அதே சமயம், சாம்புவைப்போல் ஓர் ஆசாமி உடை உடுத்து சாம்பு வீட்டுக்குள் நுழைந்து நேரே மாடிக்கு ஏறினான். சாம்பு மாதிரியே நடித்து வைர வியாபாரியிடமிருந்து வைரங்களைக் கைப்பற்றிக் கொள்ளத்தான் அவன் சென்றான். மாடி அறைக் கதவு பூட்டப்பட்டிருப்பதைக் கண்டதும் சிறிது தயங்கினான். பிறகு கோட்டுப் பையில் கைவிட்டு கள்ளச் சாவி ஒன்றை எடுக்கப் போன சமயம், கண்மூடிக் கண்திறப்பதற்குள் அங்கே ஓர் ஆச்சரியம் நடந்தது.

சாம்புவைப் பழி வாங்க, கந்தப்பனும் அவன் கூட்டாளியும் வீட்டின் பின்புறமாக நுழைந்து மாடி ஏறி வந்தவர்கள், சாம்புவைப் போன்ற ஜாடையுள்ள ஒருவன் பூட்டைத் திறக்கும் தருவாயில் இருப்பதைக் கண்டார்கள். மறுநிமிஷம் கந்தப்பன் ஒரு துணியை அவன் முகத்தைச் சுற்றி வீசி இறுக்கி, தலையின் பின்னால் கட்டினான். அவன் நிமிராதவாறு மற்றவன் இறுகப் பிடித்துக்கொண்டான்.

அகப்பட்டுக்கொண்ட ஆசாமி பேச முயன்றான்; குதித்தான்; உதைத்தான். 'தடிப் பயலே! உன்னை நான் கண்காணாத

இடத்தில் கொண்டுபோய் உன் மண்டையை உடைக்கா விட்டால் பார்! கட்டு இவன் காலையும் கையையும்!' என்றான் கந்தப்பன். ஒரு மூட்டை தூக்குவது போல் அவனைத் தூக்கிக் கொண்டு போய், கொல்லைப்புறம் நின்ற ஒரு மோட்டாரில் போட்டார்கள். அவன் அசையாமல் பார்த்துக் கொண்டு கூட்டாளி பின்னால் உட்கார்ந்தவுடன், கந்தப்பன் வண்டியை ஓட்டினான்.

கந்தப்பனுடைய காரியங்கள் கிட்டத்தட்டக் கடைசி வரையில் யார் கண்ணிலும் படவில்லை. ஆனால், கடைசியில் சாம்பு வேஷக்காரனை வண்டியில் கொண்டுபோகும்போது மூன்று வீடுகளுக்கு அப்பால், மேல் மாடிக்கு அகஸ்மாத்தாக வந்த ஒருவர் கவனித்தார். அவருக்குச் சாம்பு விஷயத்தில் தலை யிட்டுக் கொள்ளவோ, அப்புறம் போலீஸுக்கும் வீட்டுக்கும் நடக்கவோ இஷ்டம் இல்லை. ஆகவே டெலிபோனை எடுத்து, இன்ஸ்பெக்டர் கோபாலனைக் கூப்பிட்டு, 'சார்! யாரோ இரண்டு பேர், சாம்புவைக் கட்டித் தூக்கிக்கொண்டு மோட்டாரில் போகிறார்கள். உடனே கவனித்தால் தேவலை!' என்று சொல்லிவிட்டு, தாம் யார் என்று வெளியிட்டுக் கொள்ளாமல் ரிஸிவரைக் கீழே வைத்துவிட்டார்.

அடுத்த நிமிஷம் போலீஸ் ஸ்டேஷன் பரபரப்படைந்தது. பல ஸ்டேஷன்களுக்கு விஷயம் போனில் சொல்லப்பட்டது. கால் மணிக்குள், கோபாலனே ஒரு காரில் சாம்புவைத் தேடிக் கொண்டு அவசரமாகக் கிளம்பிவிட்டார்.

•

ஷட்டகர் வீட்டு விருந்துக்குப் பின், மாம்பலம் பஸ் ஸ்டாண்டில் வெகு நேரம் காத்திருக்க வேண்டி வந்த சாம்பு, டெலிஃபோனை எடுத்துக் கோபாலனைக் கூப்பிட்டான். அவர் இல்லை. ஓர் இளம் சப்-இன்ஸ்பெக்டர்தாம் பேசினார்.

'மிஸ்டர் சாம்புவா? நிஜமாகவா? உங்களுக்கு ஆபத்து என்று யாரோ சொன்னார்களே! கோபாலன்கூட உங்களைத் தேடிக் கொண்டுதானே புறப்பட்டுப் போனார்!' என்றார்.

'எனக்கோர் ஆபத்துமில்லை. வேறொரு முக்கியமான விஷயம்..'

'சொல்லுங்கள், உடனே கவனிக்கிறேன்!'

'எனக்கு இங்கே பஸ் கிடைக்கவில்லை. என் வீட்டில், ஓர் அறையில் ஓர் ஆளைப் பூட்டி வைத்தேன்!'

'இதோ கிளம்பியாச்சு! நீங்கள் போய்ச் சேருவதற்குள் நான் போய்க் கவனித்துக்கொள்கிறேன். மெல்ல வாருங்கள்!' என்று சப்-இன்ஸ்பெக்டர் டெலி ஃபோனை வைத்துவிட்டார்! ஒரு கவலை நீங்கினவனாக, சாம்பு பஸ்ஸைத் தேடிச் சென்றான்.

சாம்பு, தன் வீட்டைப் போய்ச் சேர்ந்தபோது அவன் எதிர்பார்த்தபடியே திடுக்கிட்டான். அங்கே வாசலில் ஒரு சிறு கூட்டம் கூடியிருந்தது. வைர வியாபாரியாக வந்தவன் விலங்கிடப்பட்டிருந்தான். சப்-இன்ஸ்பெக்டர் ஏதோ அவசர அவசரமாகக் குறித்துக் கொண்டிருந்தவர் சாம்புவிடம், 'அவ்வளவு வைரமும் இரண்டு நாள் முன் சைனா பஜாரில் திருட்டுப் போனவைதான். இவனும், இன்னும் ஓர் ஆளுமாக எடுத்திருக்கிறார்கள். அவனுக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு, உங்களிடமும் இவன் ஒரு கதை கட்டியிருக்கிறான். நீங்கள் இந்தக் கேஸைக் கவனிக்காதபடி உங்களைக் கண்காணித்துக் கொள்ள இங்கே வந்திருக்கிறான். சரக்குடன் அகப்பட்டுக் கொண்டுவிட்டான்! நீங்களா ஏமாறுகிறவர்!' என்றார்.

சாம்பு திரும்பினான். இன்ஸ்பெக்டர் கோபாலன் பெரிய போலீஸ் வண்டி ஒன்றில் வந்திறங்கிக் கொண்டிருந்தார். அவர் தலையில் ஒரு பாண்டேஜ் இருந்தது. 'என்ன சார் காயம்?' என்று சாம்பு ஆச்சரியத்துடன் கேட்டான்.

'நீர் கைகாரர், சாம்பு! கந்தப்பன் உம்மை அடிக்க வந்தால் உம்மைப்போல் வேறொருவனைக் காட்டிவிட்டு நீர் தப்பித்துக் கொள்கிறீர்! எனக்கு அந்தச் சாமர்த்தியம் எங்கே இருக்கிறது? அந்தப் பயலின் மோட்டாரை வழிமறித்தபோது, எதிர்பாராத சமயம் அடித்துவிட்டான். அவனையும், அவன் கூட்டாளியையும், உம்ம வேஷக்காரனையுங்கூடப் பிடித்து விட்டேன்! எல்லாரும் லாக்கப்பில் இருக்கிறார்கள்!' என்று மேலும் விவரமாகக் கூறினார்.

சாம்பு வேஷக்காரன், தான் ஒரு கூட்டாளியுடன் திருடியதையும், அவன் தன்னை ஏமாற்றிவிட்டுச் சாம்புவிடம் அடைக்கலம் புகுந்துகொண்டதையும், சாம்புவை அப்புறப்படுத்தி, சாம்புவைப்

போல் நடித்து வைரங்களைக் கொண்டுபோக எண்ணியபோது தான் கந்தப்பனிடம் அகப்பட்டுக் கொண்டதையும் சொல்லி ஒப்புக்கொண்டானாம்.

'அப்பவே சந்தேகப்பட்டேன்! சாம்பு இவ்வளவு லகுவாக அகப்பட மாட்டானேன்னு! ரொம்ப சரியாப் போச்சு!' என்று கந்தப்பன் உண்மை தெரிந்ததும் குறைபட்டுக் கொண்டானாம்.

'இவர்கள் கோஷ்டியையே பிடித்துவிட்டேன். அத்தனை பேரும் அகப்பட்டுக்கொண்டார்கள்!' என்று முடித்தார் கோபாலன்.

எதற்கும், சாம்பு வாயைத் திறக்காமல் தலையைத் தடவிக் கொண்டு சிலைபோல் நின்றான்.

'ஒரு சந்தேகம். நீங்கள் ஆபத்தில் இருப்பதாக எனக்கு யார் டெலிஃபோன் செய்தது?' என்று கேட்டார் கோபாலன்.

இதற்கு நாளது வரையில் யாருமே பதில் சொல்லவில்லை!

•

'மிஸ்டர் சாம்பு! என்ன இருந்தாலும் பூனை மாதிரி இருந்து கொண்டு, நீர் எமகாதகர், ஒய்!' என்றார் கோபாலன்.

'ஒன்றா! கந்தப்பன் பிடிபட்டது ஒன்று; சைனா பஜார் கொள்ளைக் காரர்கள் பிடிபட்டது இரண்டு இரண்டும் மிக மிகப் பெரிய விஷயங்கள் இல்லையோ?'

'நான் அதையெல்லாம் சொல்ல வரவில்லை! என் ஷட்டகர் வீட்டுக்கு, சொன்னால் சொன்னபடி நான் சாப்பிடப் போனதைச் சொல்கிறேன்!' என்று இளித்தான் சாம்பு.

25

சிங்காரம் ஐ.சி.எஸ்.

இன்னிக்காவது எங்கம்மாவுக்கு நான் எழுதின கடுதாசைத் தபாலில் சேர்த்தியளோ!' என்று கேட்டுக்கொண்டே வந்தாள் வேம்பு.

'உஷ். வேலைத் தொந்தரவில் மறந்தே போய் விட்டேன்!' என்று சாம்பு மோவாய்க் கட்டையைத் தடவிவிட்டுக் கொண்டான்.

'எனக்குத் தெரியுமே, உங்கள் மனத்திலே இருக்கிற எண்ணம்!' என்றாள் வேம்பு குரோதமாக.

'என்ன எண்ணம்?'

'கெட்ட எண்ணந்தான்! மூஞ்சியைப் பார்த் தால் தெரியவில்லையா? கடுதாசியைப் போட்டாலே எங்கம்மா புறப்பட்டு வந்துடு வாள். இங்கே உட்கார்ந்துகொண்டு விடு வாள். உங்கள் ஆஸ்தி செலவழிந்து போய் விடும், அதுதானே?'

சாம்பு திருதிருவென்று விழித்தான். அவ னுக்கு ஆச்சரியமாக இருந்தது. தான் மனத் தில் நினைப்பதையெல்லாம் அப்படி



அப்படியே சொல்லக்கூடிய சாமர்த்தியம் இவளுக்கு எங்கிருந்து வந்தது என்று திகைத்துப் போனான்.

'நீங்கள் ஒண்ணும் அந்தக் கடுதாசைப் போடவேண்டாம். எங்கம்மா உங்காத்துச் சாதத்துக்கு ஆசைப்பட்டுக் காத்துக் கிடக்கவில்லை. இப்படிக் கொடுங்கள் அதை. நான் வெந்நீர் அடுப்பில் போடுகிறேன்!' என்ற வேம்பு அதிவேகமாகச் சாம்பு நின்ற திசையை நோக்கி முன்னேறினாள்.

'அடி இருக்கட்டும்டி! இன்னிக்குக் கட்டாயம் நான் சேர்ப்பிக்கா விட்டால் அப்புறம் சொல்லு! இதோ இன்னொரு தடவை இந்த வெயிலிலே நான் போய்ப் போடாவிட்டால் பாரு!' என்று சாம்பு பின்வாங்கினான்.

'இங்கே யார் சார் சாம்பு?' என்று வாசலில் ஒரு குரல் கேட்கவே, அவன் திரும்பிப் பார்த்தான்.

'வந்துட்டான் எவனோ கடன்காரன்! போங்கோ! ஊரான் எழவை எடுக்க எடுத்த ஜென்மம்!' என்று வேம்பு தன் யுத்த முஸ்தீபுகளை ஒத்திவைத்துச் சமையற்கட்டை நோக்கிப் பின்வாங்கினாள்.

வாசலில் ஒரு பெரிய கார் நின்றது. பளபளவென்று பித்தான் களுள்ள காக்கிச் சட்டையும் தொப்பியும் அணிந்த ஒருவன்தான், கதவை இடித்துச் சாம்புவைக் கூப்பிட்டது. சாம்பு வெளியே வந்து பார்த்தபோது மோட்டாருக்குள் ஒரு பெரிய மனிதர் உட்கார்ந்திருந்தார்.

'மிஸ்டர் சாம்பு தாங்கள்தானா?' என்று கேட்டார் அவர்.

'ஆமாம்!'

'ஹ¨ம்! இப்படி வண்டிக்குள் கொஞ்சம் வருகிறீர்களா? உங்களிடம் முக்கியமான விஷயம் ஒன்று பேசவேண்டும்.'

சாம்பு தயங்கினான். பிறருடைய மோட்டாருக்குள் ஏறுவ தென்றாலே அவனுக்கு இப்போதெல்லாம் பயம் தோன்றத் தொடங்கிவிட்டது!

'சொல்லுங்களேன்!' என்றான் சாம்பு.

'பரவாயில்லை வாருங்கள்.'

'பரவாயில்லை சொல்லுங்கள்.'

'ஒரு கேஸ் விஷயமாக நான் பேச வந்திருக்கிறேன். ரொம்ப அந்தரங்கமான விஷயம்!'

'சரி. ஆனால், நான் இன்ஸ்பெக்டர் கோபாலன் அன்னியில் தனியாகக் கேஸ்களில் சம்பந்தப்பட்டுக் கொள்கிறதில்லை!' என்றான் சாம்பு.

தான் மிகவும் சாமர்த்தியமாக நடந்துகொள்கிறதாக அவன் எண்ணம். வந்திருப்பவர் போக்கிரியாக இருந்தால் கோபாலன் பெயரைக் கேட்டதும் ஓடிவிடலாம் என்றும் எதிர்பார்த்தான்.

அவர், 'அதனால் என்ன! கோபாலனையே கூப்பிட்டுக்கொண்டு வருகிறேன்!' என்று கிளம்பினார். அவர் அப்புறம் திரும்ப மாட்டார் என்று நினைத்திருந்த சாம்புவை, அவர் பதினைந்து நிமிஷத்தில் கோபாலனுடன் திரும்பிவந்து திடுக்கிட வைத்தார்.

'மிஸ்டர் சாம்பு! இவர் மிஸ்டர் சிங்காரம், ஐ.சி.எஸ். - கேள்விப்பட்டிருப்பீர்களே!' என்று கோபாலன் அறிமுகம் செய்துவைத்து, காருக்குள் வரும்படி அழைத்தார்.

'மிஸ்டர் சாம்பு, என்னைக் கன்ஸல்ட் செய்யாமல் கேஸ்கள் எடுத்துக் கொள்கிறதில்லை. நீங்கள் வித்தியாசமாக நினைத்துக் கொள்ளக் கூடாது!' என்று அவருக்கும் சமாதானம் சொன்னார்.

பெரிய மனிதர் டிரைவருக்கு உத்தரவு கொடுத்ததும் மோட்டார் மெல்ல நகர்ந்தது.

'மிஸ்டர் சாம்பு! மிஸ்டர் கோபாலன்! நான் சொல்லப்போகிற விஷயம் மிக அந்தரங்கமானது. என்னுடைய சொந்த கௌரவம் பாதிக்கப்படக்கூடாதென்கிற காரணத்தினாலேயே இதுவரை நான் இந்த சமாசாரத்தைப் போலீசுக்கு அறிவிக்காமல் இருந்தேன். நாளைக்கும் அப்படித் தெரிவிக்க எனக்கு இஷ்டமில்லை. என் நண்பர்கள் என்ற ஹோதாவில் இந்த மர்மத்தை நீங்கள் எனக்கு விளக்கிவைக்க வேண்டும்!' என்றார் சிங்காரம் ஐ.சி.எஸ்.

'சொல்லுங்கள்!' என்றார் கோபாலன்.

'சில நாள்களாகவே எனக்கு அநாமதேயக் கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு கடிதத்திலும் நான் அப்படிச் செய்தேனென்றும் இப்படிச் செய்தேனென்றும் பொய்யும்

புளுகுமான விஷயங்கள் வந்துகொண்டிருந்தன!' - இப்படிச் சொல்லிவிட்டுச் சிங்காரம் தமது கோட்டுப் பையிலிருந்து சில கடிதங்களை வெளியே எடுத்தார். மேலும் தொடர்ந்து, 'இதோ பாருங்கள்! இந்தக் கடிதத்தில் எழுதியிருப்பதென்னவென்றால் - நீர் சினிமா நடிகை கோமதிபாயுடன் சென்ற திங்கள்கிழமை ஹோட்டலில் தங்கியது உண்டா? சிறிது காலமாகவே உம்மை நான் கவனித்து வருகிறேன்!' - இதைப் படிக்கும் எவரும் நான் கெட்ட நடத்தையுடையவனென்று சகஜமாகச் சந்தேகிக்கக் கூடும். அன்று அகஸ்மாத்தாக நான் இந்த ஹோட்டலில் தங்கியிருக்கிறேன். ஆனால், நாளது வரையில் இந்த நடிகை அங்கே இருந்தாள் என்ற விஷயம் எனக்குத் தெரியாது!'

'ஹூம்!' என்றார் கோபாலன்.

'அப்புறம், இந்தக் கடிதத்தையும் பாருங்கள் - 'உமக்குக் கடன் உடன்கள் அதிகமாகி வருவதையும், வரவுக்கு மீறி நீர் செலவு செய்வதையும் யாருமே கவனிக்கவில்லை என்று நினைக்க வேண்டாம். சில பெரிய செட்டிமார்களைக் கடன் விஷயமாக நீர் சென்று பார்த்துவருவதும் எனக்குத் தெரியும். - நான் சில செட்டிமார்களைப் பார்த்தது வாஸ்தவமே. ஆனால், கடன் விஷயமாக என்று சொல்ல முடியாது.'

'இந்தக் கடிதங்கள் எழுதுவதனால் இவனுக்கு என்ன உபயோகம் ஏற்படப்போகிறது?' என்று கேட்டார் கோபாலன்.

'முதலில் நானும் அப்படித்தான் நினைத்தேன். வரவரக் கடிதங்களின் போக்கு வேறு மாதிரியாகி வந்திருக்கிறது. ஏ மிருகமே! உன்னால் கவரிப்பட்டில் ஒரு குடும்பம் குட்டிச் சுவராகிவிட்டதே! இந்தப் பாபத்தை எங்கே கொண்டு தொலைக்கப்போகிறாய்? இதற்கு ஒரு சரியான வழி உடனே செய்யாவிட்டால், உன் மானத்தை உடனே வாங்கிவிடுவேன். - இந்தக் கடிதம் சென்ற மாதக் கடைசியில் வந்தது. இதில் கண்ட விஷயங்கள் முற்றும் பொய் என்று உங்களுக்கு நான் சொல்ல வேண்டியதில்லை.'

'வேடிக்கையாக இருக்கிறது, அப்புறம் சொல்லுங்கள்!' என்றார் கோபாலன்.

'கடைசியாக வந்த இந்தக் கடிதத்தைப் பாருங்கள் உன் மனைவிக்கு விஷம் வைத்துக் கொல்ல நீ முயலுகிறாய். உன்

குமாஸ்தாவை விட்டு விஷம் வாங்கி வைத்திருப்பது எனக்குத் தெரியும், ஜாக்கிரதை! ஏதாவது அந்த அம்மாளுக்கு ஆபத்து நேர்ந்ததோ, உன்னை ருசுவுடன் காண்பித்துக் கொடுத்து விடுவேன்!

'நீங்கள் விஷம் வைத்திருக்கிறீர்களா என்ன?' என்று குறும்பாகக் கேட்டார் கோபாலன்.

'நாசமாகப் போச்சு! மனைவிபேரில் நான் உயிராக இருப்பவன், மிஸ்டர் கோபாலன்! இந்தக் கடிதங்களைப் பற்றி நான் கொஞ்சமும் கவலைப்படவில்லை. இவ்வகளில் வருபவை எல்லாம் வெறும் அபத்தம், பெரிய புளுகுகள் என்பது குழந்தைகளுக்குக்கூடத் தெரியும். ஆனால், எனக்கு ஏன் இம்மாதிரி தபால்கள் வரவேண்டும்? இப்படி என்னை வருத்த யாருக்கு அக்கறை? ஏதானும் பத்திரிகைகளில் செய்தி வந்தால் நன்றாயிராதே! இதைத் தடுக்கத்தான் உங்கள் உதவி வேண்டும்!' என்றார் சிங்காரம். அவர் முகம், பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

இவ்வளவு நேரம் மோட்டாரில் சாய்ந்து வெளியே பார்த்தவாறு ஓடும் மரங்களையும் எலெக்ட்ரிக் கம்பங்களையும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த சாம்பு ஒரு பெருமூச்சுடன் திரும்பி, 'இவ்வளவு நேரம் படித்த கடுதாசிகளெல்லாம் நீங்கள் எழுதியதுதானே?' என்று கேட்டான்.

கோபாலனும் சிங்காரமும் திடுக்கிட்டார்கள். 'என்ன சார்?' என்றார் கோபாலன் வியப்புடன்!

சாம்பு அசட்டுச் சிரிப்பு சிரித்துவிட்டு, 'அதாவது, உங்களுக்கு வந்த கடிதங்கள்தானே?' என்றான்.

'இவ்வளவு பெரிய முட்டாளும் உண்டோ?' என்ற குறிதான் சிங்காரத்தின் முகத்தில் அப்போது தோன்றியது.

அதைக் கவனித்த கோபாலன்கூட, ஒரு நிமிஷம் சாம்புவைப் பரிதாபமாகப் பார்த்தார். 'இவ்வளவு கெட்டிக்காரனான மனுஷன், நடுநடுவில் அசட்டுத்தனமாக நடந்துகொண்டு விடுகிறானே!' என்றுதான் அவருக்கு வருத்தம்.

குரோம்பேட்டையில் ஒரு பெரிய பங்களாவின் வாசலில் போய் கார் நின்றது. பங்களாவிலிருந்து ஒரு சேவகன் ஓடிவந்து கதவைத் திறக்கவும், சிங்காரம் இறங்கினார். கோபாலனும்

சாம்புவும் பின்தொடர, மாடியில் ஆபீஸ் அறைக்குச் சென்றார்கள். அங்கிருந்த ஜபர்தஸ்துகளைக் கண்டு, ஒரு நிமிஷம் சாம்பு பிரமித்துவிட்டான்.

ஒரு டைப்ரைட்டிங் மெஷின் முன்பு உட்கார்ந்திருந்த ஒரு குமாஸ்தா இவர்களைக் கண்டதும் எழுந்திருந்தான்.

'இவர்தான் என் ஆபீஸிலும் குமாஸ்தா. ரொம்ப யோக்கியர், அந்தரங்கமானவர். இவர் பெயரைத்தான் இழுத்திருக்கிறது என் பெயருடன்!' என்று சிரித்தார் சிங்காரம், தம் கோட்டைக் கழற்றி மாட்டிக்கொண்டே!

சாம்பு மூக்கை இழுத்து விட்டுக்கொண்டு நாலுபுறமும் பார்த்து அசட்டு விழி விழித்தான்.

'இதுதான் என் ஆபீஸ் ரூம். இங்கே நானும் என் குமாஸ்தாவுந்தான் இருக்கிறது! குடும்பம் எல்லாம் கீழே. ஒரொரு சமயங்களில் முக்கியமான ஆபீஸ் வேலைகளை நான் வீட்டில் கொண்டுவந்து செய்வதுண்டு; அப்போது என் கிளார்க்கும் வருவார்.'

'தெரிகிறது' என்றார் கோபாலன். பிறகு சாம்புவின் பக்கம் திரும்பி, 'என்ன சார்! விஷயங்களைக் கேட்டுக்கொண்டு வருகிறீர்கள் அல்லவா?' என்றார்.

மேஜையின்மேல் கிடந்த ஒரு கவரின் மூலையில், கிளி மூக்கைப் போல் பென்ஸிலால் சித்திரம் வரைந்துகொண்டிருந்த சாம்பு திடுக்கிட்டு, 'என்ன?' என்றான்.

இவன் இவ்வளவு அசிரத்தையாக இருக்கிறானே என்ற கோபாலன் மறுபடி கூர்ந்து கவனித்தார். ஒரு முக்கியமான கேஸ் விவரங்களை ஒரு பெரிய மனிதர் சொல்லி வரும்போது இவன் கிளி பொம்மை போட்டுக்கொண்டிருந்தால் எப்படி இருக்கும்? ஒரு கிளி பொம்மை மட்டுமா? அங்கிருந்த பல கவர்களின் ஓரத்திலும் அவன் கிளி மூக்கு போட்டிருந்தான்!

'வருகிறீர்களா? நம் பங்களாவைச் சுற்றிக் காண்பிக்கிறேன்!' என்றார் சிங்காரம்.

'நானும் போய் வருகிறேன். இன்று தபால் ஏதாவது போட வேண்டி இருக்குமா?' என்று குமாஸ்தா, சிங்காரத்தைக் கேட்டான்.

'சற்று நேரங்கழித்துப் பாரேன். என் கோட்டுப்பையில் இருக்கிற தபாலைக் கொண்டு போ!' என்றார் சிங்காரம் அலட்சியமாக. குமாஸ்தா வெளியே சென்றபின் சிங்காரம் முன்செல்ல, கோபாலனும் சாம்புவும் கீழே இறங்கினார்கள்.

சாம்புவுக்குச் சட்டென்று ஞாபகம் வந்தது. தன் மாமியாருக்குச் சேர்ப்பிக்க வேண்டிய கடிதத்தையும் இந்தச் சிங்காரத்தின் தபால்களோடு சேர்த்துவிட்டால் என்ன? தானே தபாலில் போடத்தான் கை வரவில்லை. வேம்புவுந்தான் தினமும் சண்டை போடுகிறாள்!

சட்டென்று திரும்பி, ஆபீஸ் அறைக்கு வந்தான். சிங்காரத்தின் கோட்டின் வலது பாக்கெட்டில் அந்தக் கடிதத்தைப் போட்டுவிட்டு, அவர்களுடன் திரும்ப வந்து சேர்ந்துகொண்டான். சாம்பு சென்றதையும் மறுபடி வந்ததையும் அவர்கள் கவனிக்கவில்லை.

இன்ஸ்பெக்டர் கோபாலனும் சாம்புவும் அங்கே அருமையான டிபன் சாப்பிட்டார்கள். சிங்காரம் வேடிக்கையாகவும் விளையாட்டுமாகப் பல கதைகள் சொன்னார்: 'இந்த மாதிரிக் கடிதங்கள் வருகிறதுகூட எனக்கு வேடிக்கையாக இருக்கிறது. ஆனால், நான் பேசாமல் இருந்து இதற்கு இடங்கொடுத்து வந்தால், இதை ஒப்புக் கொள்கிறாற்போல ஆகிவிடும்!' என்றார் அவர்.

சிங்காரத்தின் மனைவி கலகலவென்று சிரித்தாள். சுமார் இருபத்தெட்டு வயது நிரம்பியிருக்கும். அவள், வைர ஆபரணங்கள் ஏகமாய் அணிந்திருந்தாள். அவளை நிமிர்ந்து பார்க்கக்கூடச் சாம்புவுக்குப் பயமாக இருந்தது.

'பெரிய துப்பறிபவர் நீங்கள்! ரொம்ப சங்கோசப்படுகிறீர்களே!' என்று அவள் சொன்னவுடன், சாம்புவின் சங்கோசம் இன்னும் பன்மடங்கு அதிகமாகி அவன் முகம், பார்க்கச் சகிக்காத விகாரத்தை அடைந்தது.

சுமார் அரை மணி நேரம் பேசிக்கொண்டிருந்த பின், சிங்காரம் எழுந்திருந்தார். 'சார்! உங்களிடம் சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டேன். குற்றவாளியைக் கண்டுபிடிக்க வேண்டியது உங்கள் பொறுப்பு!' என்றார்.

'சாம்பு இருக்கிறார்!' என்றார் கோபாலன்.

சாம்பு அசடு வழியச் சிரிக்க முயன்று, அது பலிக்காமல் எல்லாரையும் அழகு காட்டுகிறார்போல் முகத்தை வைத்துக்கொண்டான்.

'மிஸ்டர் கோபாலன்! இப்போதுதான் ஞாபகம் வருகிறது! இன்று தபாலுக்குச் சேரவேண்டிய லெட்டர் ஒன்றிருக்கிறது. அதைக் கவனித்துவிட்டு ஒரு நொடியில் வருகிறேன். அதற்குள் நம் தோட்டத்தில் இருங்கள்!' என்று கூறி, சிங்காரம் மாடிக்குப் போனார்.

கோபாலன் சாம்புவைக் கூப்பிட்டு, 'என்னய்யா இது! அரைத் தூக்கமாயிருக்கிறீரே!' என்றார்.

'விஷயம் ஒண்ணுமில்லை!' என்றான் சாம்பு.

'என்ன ஒண்ணுமில்லை? ஒரு பெரிய மனுஷனை இப்படிக் கேவலமாய் யாரோ ஒருத்தன் தொந்தரைப் படுத்துகிறதென்றால்...'

'அதற்காக அவர் நம்மைத் தொந்தரைப்படுத்துகிறதா?' என்றான் சாம்பு. அவனுக்கு எரிச்சல்தான் வந்தது.

'எனக்கு உம்ம வழியே புரியவில்லை!' என்றார் கோபாலன்.

மேற்கொண்டு அவர்கள் சம்பாஷணை நடக்க முடியாமல், 'என்ன புரியவில்லை?' என்று கேட்டுக்கொண்டு சிங்காரம் வந்துவிட்டார்.

சிங்காரத்தின் மனைவியும் வந்தாள். அவள் உடம்பிலிருந்த வைரங்கள் அஸ்தமன வெயிலில் முன்னிலும் ஜாஜ்வல்யமாகத் தோன்றின.

'அவர் என்னவோ இந்தக் கடுதாசிகளைக் கண்டு பயப்படுகிறார். இதை இங்கே யார் நம்புவார்கள்?' என்றாள் அவள்.

'அப்படி இல்லை. ஆரம்பத்திலேயே ஜாக்கிரதையாக இருந்துவிட்டால்!' என்றார் சிங்காரம்.

சாம்பு தலையைத் தடவிக்கொண்டு மௌனம் சாதித்தான். சிங்காரம் ஹாஸ்யச் சுவை நிரம்பியவராகையால், அவர் எல்லாரையும் சிரிக்கச் சிரிக்க வைத்தார். அவர்கள் எழுந்தபோது இருட்டிவிட்டது.

சிங்காரம் தமது காரில் கொண்டுவிடுவதாகச் சொல்லி, கோட்டையும் போட்டுக்கொண்டு வந்தார்.

அவ்வளவு பெரிய மனுஷரைச் சிரமப்படுத்தக் கூடாதென்று கோபாலன், 'சார்! எங்களைத் தாம்பரம் ஸ்டேஷனில் விடுங்கள்; போதும்!' என்று கேட்டுக்கொண்டார்.

போகும் வழியில் சிங்காரம், 'என்ன போங்கள்! பணம் கொடுத்தாலும் பால், தயிர் கிடைக்கிறதில்லை! விறகு கிடையாது! ஒரு மனுஷாள் வெளியூரிலிருந்து பட்டணம் வந்தால் பட்டினிதான்!' என்றார்.

சாம்புவுக்குச் சொரேர் என்றது. அவன் மாமியாரை வரச் சொல்லி, வேம்பு எழுதிய கடிதத்தைப் போட்டுவிட்டானே! அவள் வந்தால் சிரமந்தானே? ஒருகால் அது இன்னும் தபாலில், சேராமல் அவர் கோட்டிலேயே இருந்தால் திரும்ப வாங்கி விடலாமே!

அவரை அதை எப்படிக் கேட்பது? சாம்பு சிந்தித்தான். மனத்தைத் திடம் செய்து கொண்டான். தாம்பரம் வந்து இறங்கியதும், 'போய் வாருங்கள்! ஞாபகம் இருக்கட்டும்,' என்றார் சிங்காரம்.

'ஒரு சின்ன விஷயம்!' என்றான் சாம்பு.

கோபாலன் புருவத்தை நெரித்து ஆச்சரியத்துடன் கவனித்தார்.

'உங்கள் கோட்டுப் பையிலிருக்கும் ஒரு தபாலைக் கொடுத்து விடுங்கள்!' என்றான் சாம்பு.

அவர் திடுக்கிட்டு, 'தபாலா என் பையிலா?' என்றார்.

'ஆமாம். உங்கள் பையில்தான். இன்று தபாலில் போட எழுதினது! அநேகமாகப் போயிராது!'

கோபாலனுக்கு விழிப்பு வந்தது. சாம்பு இவ்வளவு நேரம் போட்ட வேஷம் இதற்காகத்தானோ? அவர் சிங்காரத்தைப் பார்த்து, 'இருந்தால் எடுத்துக் கொடுங்களேன்!' என்றார்.

சிங்காரம் பையில் கைவிட்டு எடுத்தார். அதில் ஒரு கவர் இருந்தது! அதை வெடுக்கென்று பிடுங்கினார் கோபாலன். கவரின் மேல் விலாசம், சிங்காரத்தினுடையதுதான்! அதன் மூலையில் சாம்பு போட்ட கிளி மூக்கு பொம்மையும் இருந்தது!

ஒரே நிமிஷத்தில் கோபாலனுக்கு உண்மை புலனாயிற்று. 'இந்தப் பெரிய மனிதர் தமக்குத் தாமே லெட்டர் போட்டுக்

கொள்கிறார்!' என்று ஊகித்துவிட்டார். இதை ஊர்ஜிதம் செய்வதற்காகத்தானா, சாம்பு கவரில் முன்கூட்டி பொம்மை போட்டுக்கொண்டிருந்தான்?

சிங்காரம் திகைத்தார். 'எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது!' என்றார். ஆனால், அவர் பொய் சொல்லுகிறார் என்பது அவர் முகத்தில் நிதரிசனமாகத் தெரிந்தது. குற்றவாளிகளின் முகத்தை ஊடுருவிப் பார்க்கும் கோபாலனின் கண்களுக்கு அது எப்படித் தப்பிவிடும்?

கவரை உடைத்த கோபாலன் அதில் படித்தது இதுதான்: 'ஓய்! உம் வீட்டில், உம் மனைவியின் நகைகள் இன்றிரவு கொள்ளை போகப் போகின்றன. அவைகளைக் கொள்ளையடிக்கப் போவது வேறு திருடர்கள் அல்ல - நீரேதான்! அது எனக்குத் தெரியும்!'

கோபாலன் சிங்காரத்தைப் பார்த்த பார்வையில் கோபம் ஜ்வலித்தது. 'மிஸ்டர் சிங்காரம்! நீர் பெரிய உத்தியோகஸ்தராயிருந்து கேவலமான காரியம் செய்கிறீர்! இதுவரை உமக்கு நீரே கடிதம் போட்டுக்கொண்டு வந்திருக்கிறீர். அதில் கண்ட விவரங்கள் எல்லாம் பொய். ஆனால், இன்று போடப் போகும் கடிதத்தில் இருப்பது மட்டும் மெய்யாகப் போயிருக்கும்! அதை மறைக்கத்தான் இத்தனை பொய்க் கடிதங்கள் எழுதிக் கொண்டிருக்கிறீர்! அவைகள் எப்படிப் பொய்யோ அப்படி இதுவும் பொய் என்று ஸ்தாபிக்கப் பார்க்கிறீர்! அதற்காகத்தான் எங்களையும் கூட்டி வந்து, பரம யோக்கியர்போல் நடித்தீர்! போய் வாருங்கள்! உங்கள் வீட்டில் ஏதாவது திருட்டு நடந்தால் அது நீர் நடத்தியதுதான் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை! இது விஷயம் நாங்கள் வெளியில் சொல்லப்போவதில்லை. இனிமேல் ஒழுங்காக இருங்கள்!' என்றார்.

சிங்காரம் பேச வாயெடுத்தார். அவரால் முடியவில்லை. கோபாலன் வெறுப்புடன் சாம்பு கையைப் பற்றிக்கொண்டு, ஸ்டேஷனுக்குள் நுழைந்தார். சாம்புவிடம், 'இவருக்கு ஏகப்பட்ட கடன். இப்படி லெட்டர் போட்டுக்கொண்டு, தம் மனைவி நகையையே எடுக்கப் பார்த்திருக்கிறார். அது சரி! அந்தக் கடிதத்தை அப்படி நீங்கள் வெளிப்படுத்தியது மட்டும் பிரமாதம், சார்! எடுத்த உடனேயே, இதெல்லாம் நீங்கள் போட்ட கடிதங்களா? என்றீர்களே, உங்களுக்கு எப்படித் தெரிந்தது?' என்று கேட்டார்.

கோபாலனுக்குக் கிடைத்த பதில் சாம்புவின் அசட்டுப் புன்னகைதான்!

சிங்காரம், தன் குமாஸ்தாவைக் கடிந்தார். 'படுபாவி! என் காரியத்தைக் கெடுத்தாயே! உன்னைக் கையாளாக வைத்துக் கொண்டது மடத்தனம். தபாலை, கையோடு கொண்டு போடு வதற்கென்ன?' என்றார்.

'ஐயோ! நான் ஒரு தபால் போட்டேனே! உங்கள் கோட் வலது பையிலிருந்து!' என்றான் அவன்.

'அது, அந்தப் படுபாவி சாம்பு வைத்த வேறு தபாலாக இருக்க வேண்டும்! நான் இடது பக்கத்து ஜேபியில் அல்லவா தபாலைப் போட்டேன்? நான் எவ்வளவோ யோசித்துப் போட்ட திட்டம் பலிக்காமல் போச்சு! இரண்டு நாளில் அந்த ஸாவ்கார் கடனைத் தீர்க்காவிட்டால் என்ன ஆகும்! அவமானம்! அவமானம்!' என்று தலையில் அடித்துக்கொண்டார்.

•

'ஊரில் சாப்பாட்டுக் கஷ்டம் வந்துவிட்டது! எங்கம்மா இங்கே வந்தால் கஷ்டப்படுவாள்! அவளுக்கு அந்தக் கடுதாசியைப் போடாததே நல்லது!' என்றாள் வேம்பு.

சாம்பு விழித்தான்.

'ஏன்? போட்டுவிட்டீர்களோ! என்று கேட்டு வேம்பு வெட்டு கிறாற்போல் பார்த்து, எதை எப்போது செய்யக் கூடாதோ அதைச் செய்துவிடுவேளே!' என்று அவன் மூஞ்சியில் இடித்தாள்.

சிங்காரத்தின் சட்டைப் பையில் போட்ட கடிதம், அவர் கடிதத்துக்குப் பதிலாகப் போஸ்ட் செய்யப்பட்ட விவரம் சாம்புவுக்கு நினைவுக்கு வந்தது.

வேம்புவுக்கு அவன் பதில் சொல்லுமுன்பே, அவள் தாயார் ஒரு மூட்டையும் முடிச்சுமாக நுழைந்து, 'ஏண்டி! எனக்கென்ன, பட்டணம் தெரியறதா? கடுதாசி போட்டேனே! ரயிலடிக்கு யாராவது சித்தே வரப்படாதோ?' என்று கேட்டாள்.

26

பழம் பெருச்சாளி

'மூன்று நாளைக்குள்ளாக ஆறு இடங்களில் இது மாதிரி நடந்துவிட்டதாம், சார்! தெருவில் தடி எடுத்துக்கொண்டு போகிறதென்றாலே ஆபத்தாக இருக்கிறதாம்!' என்றார் டிராமில் ஒருவர்.

'என்னய்யா இது, வேடிக்கையாக இருக் கிறது! தடியைப் பிடுங்கிக்கொண்டு போய் அந்தத் திருட்டுத் தடியன்கள் என்ன செய் கிறார்களாம்?' என்று கேட்டார் பக்கத்தி லிருந்தவர்.

ஒரு தினசரிப் பத்திரிகைக்குள் முகத்தை மறைத்துக்கொண்டு சாம்பு இவர்கள் பேச்சைக் கவனித்தான். முதலில் பேசினவர் சொன்னார்: 'இரண்டு நாளைக்கு முந்தி மவுண்ட் ரோடிலே ஒரு பெரியவர் அன் றைக்குத் தான் வாங்கின கைத்தடியை எடுத்துண்டு அஸ்தமன வேளையிலே வாக்கிங் போயிருக்கார். யாரோ ஒரு பயல் பின்னாலேயே வந்து குப்பென்று பாய்ந்து, தடியைப் பிடுங்கிண்டு போயே போய்ட்டா னாம்! அப்புறம் கேளுங்கோ! அக்ரகாரத்திலே

சுப்ரமணிய தீக்ஷிதர் ஒரு தடி வாங்கி இருக்கார். அவர் இல்லாத சமயத்தில் ஒருத்தன் வந்தானாம். இரண்டு தடிக் கம்பைக் காண்பிச்சு, 'அம்மா! எங்க வீட்டிலே சிராத்தம். மூணு தடி கொடுக்கணும். உங்கள் வீட்டிலே இருக்கிறதைக் கொடுக்க முடியுமா?' என்று கேட்டு இருக்கான். அதற்குள்ளே தீக்ஷிதரே அகஸ்மாத்தாக வரவே, 'அதெல்லாம் கொடுக்கிறதில்லை!' என்று சொல்லி இருக்கிறார். 'சரி' என்று திரும்புகிறாற்போலே திரும்பினவன், அவர் கையிலிருந்த தடியை வெடுக்குனு பிடுங்கிண்டு ஓட்டம் பிடிச்சுட்டானாம்!'

'ஆச்சரியம், சார்! இதை அந்தப் பேர்வழி ஒருத்தன், அவன் பேரென்ன சாம்புவா, வேம்புவா அவனை விட்டு யாரானும் கவனிக்கச் சொல்றதுதானே!' என்றார் மற்றவர்.

'நான் சொல்றேன்! சாம்புதான் வரட்டும். அவன் பிரபிதாமகாள் தான் வரட்டும், தடுக்க முடியாது! சில விஷயங்கள் நடந்துண்டு தான் இருக்கும்!' என்று குறுக்கே ஒரு கனபாடிகள் விளக்கினார்.

'அப்படிச் சொல்லப்படாது! இந்தச் சாம்பு என்கிறவன் கவனிச்சு ஒரு காரியத்தைப் பார்த்தான் என்றால், கண்டுபிடிக்காமல் விடுகிறதில்லை. எல்லாரையும் சொல்கிறாற்போல் சாம்புவை யும் சொல்லாதீங்கோ!' என்றார் ஒருவர் உஷ்ணமாக.

இவர்களுக்குள் பேச்சு தடிக்கும்போல் இருப்பதைக் கவனித்த சாம்பு, முகத்தை நன்றாக மறைத்துக் கொண்டான். யாராவது தன்னை அடையாளம் கண்டுபிடித்துச் சந்தியில் இழுத்து மானத்தை வாங்கினால் என்ன செய்வதென்ற திகில் பற்றிக் கொண்டது. அடுத்தபடி டிராம் நின்றவுடன், சந்தடியின்றி இறங்கிவிட்டான்.

அஸ்தமிக்க இன்னும் அவகாசம் இருந்தது. பொழுதைப் போக்க என்ன செய்யலாமென்று அவன் பார்த்தபோது, அவன் இறங்கிய இடம் ஒரு சங்கீத சபைக்கு அருகாமையாக இருந்தது. சாம்புவுக் கும் சங்கீதத்துக்கும் ஏணி வைத்தாலும் எட்டாதென்றாலும், பிறர் தொந்தரை இல்லாமல் சிறிது நேரம் நிம்மதியாக உட்கார்ந்து விட்டு வரலாமென்று பட்டது. சட்டென்று சபைக்குள் நுழைந்தான்.

சபைக் காரியதரிசிக்குச் சாம்புவை நன்றாகத் தெரியும். அவன் கையைப் பிடித்து உள்ளே அழைத்துக்கொண்டு போகத் தொடங்கி

விட்டார். 'சார்! சார்! என் போக்கில் விடுங்கள்!' என்று சாம்பு சொன்னபோது, 'மிஸ்டர் சாம்பு! ஏதாவது முக்கிய விஷயமாக இங்கே வந்திருக்கிறீர்களோ?' என்று அவர் அந்தரங்கமாகக் கேட்டார்.

'ஒரு விஷயமுமில்லை, சார்! இந்தப் பக்கம் வந்தேன்!' என்று அசடு வழியச் சாம்பு சிரித்தான்.

'இல்லை, நான் நம்ப மாட்டேன். இத்தனை நாளாக நீங்கள் வந்தீர்களா? விஷயம் ஏதோ இருக்கிறது!' என்றார் காரியதரிசி.

'இதென்ன கஷ்டமாயிருக்கிறதே! நான், பாட்டு கேட்கப் படாதா?' என்றான் சாம்பு.

சாம்பு சபைக்குள் நுழைந்த சமயம், கச்சேரி செய்துகொண்டிருந்த சங்கீத வித்வான் கூடச் சிறிது நேரம் பாட்டை நிறுத்த வேண்டியிருந்தது. தெரிந்தவர்கள் தெரியாதவர்களுக்குச் சொல்ல, தெரிந்தவர்களும் தெரியாதவர்களும் சாம்பு இருந்த திசையை நோக்கினார்கள். குப்பென்று சாம்புவின் முகம் வியர்த்துத் தலை சுழன்றது. 'இதேதடா! எங்கு போனாலும் தொல்லை!' என்று, அவன் சமீபத்தில் காலியாகத் தென்பட்ட ஒரு நாற்காலியில் சட்டென்று உட்கார்ந்துகொண்டான்.

படபடப்பு அடங்கியபின் பார்த்தபோது, அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஆசாமி அறிமுகமானவனாகவே காணப் பட்டான். வெள்ளை வெளேரென்று சட்டை வேஷ்டி, சரிகை அங்கவஸ்திரம், ரிஸ்ட் வாட்சு, காலில் ஸ்லிப்பர், விரல்களில் மோதிரம், ஒரு வெள்ளிப் பூண் போட்ட தடி - இவைகளுடன் பார்க்க மைனர்போல் தோற்றம் அளித்தான். யார் இவன்? எங்கே பார்த்திருக்கிறோம்? சாம்புவுக்கு, பாட்டின் மீது கவனம் செல்லவில்லை. அடிக்கடி அந்த ஆசாமியின் பக்கம் திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தான். அந்தப் பேர்வழியும் முதலில் சாம்பு கவனிக்கிறானாவென்று கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டு வந்தவன், பிறகு தைரியமாக முறைக்கத் தொடங்கினான்.

'என்னைத் தெரியவில்லையா?' என்று அவனே கடைசியில் சாம்புவைக் கேட்டான்.

'அதுதான் பார்க்கிறேன்!' என்றான் சாம்பு அசடு வழிய

'உங்க இன்ஸ்பெக்டர் கோபாலன் இருக்கிறாரே, அவருக்குத் தெரியும்!, இன்றைக்குக் காலையிலேகூட நம்ம வீட்டுக்கு வந்துவிட்டுப் போனார்!' என்றான் அவன்.

'ஓஹோ!' என்றான் சாம்பு மரியாதையாக.

'வந்து, என்ன தம்பி!? என்றார். 'என்ன விசேஷம்? எங்கே இப்படிக் கால் திரும்பியது? நான் செய்த பாக்கியம் என்ன?' என்றேன். 'சும்மாதான். நீ ஒழுங்காயிருக்கியோன்னு பார்க்கத் தான் வந்தேன்!' என்றார். 'நீங்க வராமே இருந்தாலே ஒழுங்காயிருக்கிறதாகத்தான் அர்த்தம்!' என்றேன். நம்ம வீட்டை ஒரு கண்ணோட்டம் போட்டுட்டுப் போனார். நம்ம பேரிலே அவருக்கு அநாவசியமான சந்தேகம். மடியிலே கனமிருந் தான்னா வழியிலே பயம்! நம்ம வியாபாரம் நாலு பேருக்குத் தெரிஞ்சது! என்ன நான் சொல்றது?' என்றான் அவன்.

சாம்புவுக்கு ஞாபகம் வந்தது. முன்பு ஒரு சமயம் ஒரு பெரிய மோசடி வழக்கில் இந்த ஆசாமியை மடக்கிக்கொண்டு வந்தும், போதுமான ருசுவில்லாமல் விடவேண்டி வந்ததைச் சாம்பு வுக்குச் சொல்லியிருக்கிறார் கோபாலன். இவனை 'பழம் பெருச்சாளி' என்றுகூடக் குறிப்பிட்டுச் சொல்லுவார்.

சாம்புவுக்கு மனத்தில் பயம் தோன்றியது. இந்த மாதிரி ஆசாமிகளிடம் பழகுவதில் ஆபத்து இருக்கும். 'இவனுடன் நமக்கென்ன விரோதம்? எதற்கும், ஆமாம் சாமி போட்டு விடலாமே! கோபாலன் என்ன சாதிக்கப் போகிறார், இவன் அதைச் சாதிக்காமலிருந்து விடப் போகிறான்?' என்று சாம்பு மனத்தில் எண்ணினான்.

'என்ன யோசிக்கிறீங்க? நம்மகிட்டே யாரும் அண்ட முடியாது. ஒளிவு மறைவு கிடையாது. வரும்படி வந்தது. நல்லா டிரஸ் பண்ணிக்கணும், சாப்பிடணும். வரும்படி இல்லை, பட்டினி கிடக்கவும் நான் தயார்!'

'ரொம்ப சரி!' என்று சாம்பு சொல்லி, அவனை முறைக்காமல் பார்த்துக்கொள்ள அவன் கைத்தடியைப் புகழ்ந்தான். 'ரொம்ப நன்னாயிருக்கு சார் இது! எங்கே வாங்கினீங்க?' என்று கேட்டான்.

'இது ஸ்பெஷலாகத் தருவிச்சது! இங்கே எங்கேயும் கிடைக்காது! உங்களுக்குக் கோபாலன் தருவார், சார்! நம்மளை ஏன் கேக்கணும்?'

'சேச்சே! ஒண்ணு தருவிச்சுக் கொடுங்க! இல்லாட்டா, இதையே எடுத்துக்கிறேனே!' என்று சாம்பு தடியைப் பிடித்தான்.

'கையை எடுங்க, சார்! உங்களுக்கு வேணா, எழுதி அனுப்பறேன் வேறே!' என்று தடியை விடாமல் பிடித்துக்கொண்டான் பெருச்சாளி.

சாம்புவின் கௌரவத்துக்கு, இது சிறிது பங்கமாகத்தான் பட்டது. ஒவ்வொருத்தர், சாம்பு பார்த்த பண்டத்தைக் காணிக்கையாகக் கொடுக்கக் காத்துக்கொண்டிருக்கிறார்கள்! சாம்பு வாயைத் திறந்து கேட்கமாட்டானா என்று துடிதுடித்துக் கொண்டிருக் கிறார்கள்! தான் வாயைத் திறந்து கேட்டதைக்கூடக் கொடுக்க இவன் தயங்குகிறான்! ஹூம்!

அவனுக்கு வந்த ஆத்திரத்தில், சிறிது நேரங்கூட அங்கே இருப்பதற்கு இஷ்டமில்லை. 'இவன் கண்ணெதிரில் இதே மாதிரி தடி ஒன்றை வாங்கி வைத்துக்கொண்டு அடுத்த கச்சேரி யில் வந்து உட்காராவிட்டால் நான் சாம்பு இல்லை!' என்று மனத்துக்குள் ஒரு சபதம் செய்துகொண்டான்.

சிறிது நேரம் விறைப்பாக உட்கார்ந்திருந்துவிட்டு, நிம்மதியற்ற மனத்துடன் வெளிக் கிளம்பினான் சாம்பு. வெளியில் வந்தவன் ஒரு நிமிஷம் திகைத்து நின்றுவிட்டான். இன்ஸ்பெக்டர் கோபாலன், தமது பிரம்பைக் கட்கத்தில் வைத்துக்கொண்டு காரியதரிசியுடன் ஏதோ பேசிக்கொண்டு நின்றார். சாம்புவைப் பார்த்ததும், 'ஓய்! உமக்கு நூறு வயதில்லை; நூற்றெட்டு வயது! வீட்டில் விசாரித்தேன். இல்லையென்றதும், எங்கேடா பார்க்க லாமென்று வருகிறேன். அகஸ்மாத்தாகச் சபையில் விசாரித் தால், நீரே புறப்படுகிறீர். நான் வந்த காரியம் ஜயந்தான்!' என்றார்.

'என்ன காரியம் அது?' என்று கேட்டான் சாம்பு.

'பிரமாதமான காரியம் ஒன்றுமில்லை. பிளாக்கர்ஸ் ரோடில் ஒரு கம்பெனியில் ஸெர்ச் நடத்தணும். கூட இருந்தீரானால் உபயோகமாக இருக்கும்.'

'நான் என்னத்துக்குன்னா? எனக்கு இப்போ ரொம்பத் தலைவலி யாக இருக்கு!' என்றான் சாம்பு.

'எனக்குந்தான் தலைவலி. இரண்டு பேருமாகக் காபி சாப்பிட லாம், வாரும்!'

'அதோடு வீட்டுக்கு அவசரமாகப் போகணும்!'

'என் காரிலேயே அனுப்புகிறேன் சீக்கிரமாக!'

எதற்கும், இந்தக் கோபாலன் அசைகிற வழியாகத் தோன்ற வில்லையாதலால் சாம்பு விழித்தான். அவன் விழித்துக் கொண்டிருக்கும்போதே, கோபாலன் அவனைப் போலீஸ் வேனில் ஏற்றித் தாமும் பக்கத்தில் அமர்ந்துகொண்டார். வண்டி யில் மேலும் ஐந்தாறு போலீஸ்காரர்கள் இருந்தார்கள். கோபாலன் விவரித்தார்.

'விஷயத்தைச் சொல்கிறேன், கேளும்! நாம் போகிற இடம் விமலா அண்ட் கம்பெனி. மரச் சாமான்கள் விற்கும் இடம். இது சில நாள்களாக நம்ம கவனத்துக்கு வந்திருக்கிறது. சந்தேகாஸ் பதமான பேர்வழிகள் இங்கே நடமாட்டம் வைத்துக் கொண் டிருக்கிறார்கள். மர வியாபாரத்துடன் ஏதோ திருட்டு வியாபார மும் நடக்கிறதென்று மட்டும் தெரிகிறதே ஒழிய, அது என்ன என்று சொல்ல முடியவில்லை.

'இன்று காலையில், நான் பழம்பெருச்சாளி முத்துசாமி வீட்டுக்குப் போயிருந்தேன். அவன் எமகாதகன்; நம் கண்ணெதிரி லேயே போர்ஜரி செய்பவன். இந்தப் பயல் அடிக்கடி இந்தக் கம்பெனிக்கு வருவதும் போவதுமாக இருக்கிறான் என்று கேள்வி. என்னிடம் திமிராகப் பேசினான். 'என்ன சார்! உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால் நாங்கள் ஓடிவிட வேண்டுமா, சார்? சாதாரணமாக ஓர் இடத்துக்குப் போனால்கூட அதிலே ஒரு சந்தேகமா?' என்று கேட்டான். என் சந்தேகம் மட்டும் தீரவில்லை. இன்றுபோய் அந்தக் கம்பெனியிலேயே ஒரு ஸெர்ச் போடுவது என்று வந்துவிட்டேன். உம்ம ஒத்தாசையும் கூட இருந்தால்...'

போலீஸ் வான் நின்றது. சாம்பு எழுந்தான். இன்ஸ்பெக்டர் வண்டியிலிருந்து குதித்து, அந்தக் கம்பெனியில் நுழைந்தார். அப்போது மாலை சுமார் ஆறு மணி இருக்கும். கடை மேனேஜர் சிப்பந்திகளை அனுப்பிக்கொண்டு, கடையை மூடும் சமயம்.

'சார், நாங்கள் போலீஸ்!' என்றார் கோபாலன்.

'வாருங்கள். என்ன விசேஷம், தெரியவில்லையே!' என்றார் மேனேஜர்.

'விசேஷம் இல்லாமல் வருவோமா? இருக்கிறது விசேஷம்! தானே வெளிப்படுகிறது!' என்று சொல்லி, தம்கூட வந்தவர்களுக்கு, 'நடக்கட்டும்!' என்று உத்தரவு கொடுத்தார் கோபாலன்.

'சார், சார்! இதென்ன அக்கிரமம்! ஒரு காரணமும் இல்லாமல், இப்படி எங்களை.. கௌரவமுள்ள வியாபாரிகளை.. அவமானப் படுத்துவது..' என்றார் மேனேஜர்.

'ஒன்றும் எங்களுக்கு அகப்படாவிட்டால் உமக்கென்ன அவமானம்? எங்களுக்குத்தானே அவமானம்!' என்றார் கோபாலன்.

'ஒன்றும் உங்களுக்கு அகப்படாது, சார்!'

'அதை நாங்கள் பார்த்துக்கொள்கிறோமே! நீர் ஏன் சிரமப் படுகிறீர்?'

'இல்லை, சார்! நீங்கள் போலீஸ் ஆபீஸர்தான். இருந்தாலும்..'

'ஷட் அப்!' என்றார் கோபாலன் கம்பீரமாக. 'மேலே நடக்கட்டும்!' என்று மற்றவர்களை முடுக்கினார்.

சோதனை துரிதமாக நடந்தது. சாம்பு பின்பற்றி வர, கோபாலன் மேற்பார்வை செய்தார். பீரோக்கள், மேஜைகள், மர அலமாரிகள், சோபாக்கள், கட்டில் எல்லாம் புரட்டப்பட்டன. ஒரு மூலை விடாமல் சோதனை போட்டாயிற்று. ஒன்றும் அகப்படவில்லை. வேறொரு பகுதியில் பலவிதமான கைத்தடிகள் அடுக்கப்பட்டிருந்தன. அவைகளைப் புரட்டினார்கள். மௌனமாகப் பார்த்து வந்த சாம்புவுக்கு, சட்டென்று ஒரு கைத்தடியைப் பார்த்ததும் மகிழ்ச்சி பொங்கியது. பெருச்சாளி வைத்திருந்த அதே மாதிரியான தடி அது!

சோதனை முற்றுப்பெற்றபோது, கோபாலன் முகம் சுண்டித்தான் இருந்தது. பெரிதாக எதையோ எடுக்கப் போகிறோம் என்று உற்சாகமாக வந்த அவர், ஏமாற்றமே அடைந்திருந்தார். மேனேஜர் முகத்திலோ கோபமும் ஒருவிதப் பெருமிதமும் தென்பட்டன.

'உங்களுக்கு வீண் சிரமம்!' என்றார் அவர். குரலில் கூட எகத்தாளம்!

'எங்கள் ட்யூட்டியைச் செய்தோம்!' என்றார் கோபாலன்.

சாம்பு அசடு வழிய, 'சார்! வந்ததுதான் வந்தோம். நான் ஒரு வாக்கிங் ஸ்டிக் எடுத்துக்கொள்கிறேன்!' என்றான் மேனேஜரிடம்.

'எது சார் அது?'

சாம்பு காண்பித்ததும் மேனேஜர் உதட்டைப் பிதுக்கி, 'இது ஏற்கெனவே ஆர்டருக்கு வந்ததாயிற்றே!' என்றார்.

சாம்புவின் முகம் இறங்குவதைக் கவனித்த கோபாலன், 'யார் ஆர்டர் அது?' என்று அதட்டினார்.

'கருப்பய்ய நாடார்.'

'நான் சொல்லிக்கொள்கிறேன் அவருக்கு! வாரும் சாம்பு, தடியை எடுத்துக்கொண்டு!'

'ஊஹூம். இது கூடாது, சார்! நீங்கள் இப்படி எங்கள் பிசினஸ்ஸில் தலையிடுவது அநியாயம்!' என்று மேனேஜர் மன்றாடினார். கோபாலன், அதைக் கவனிக்கவே இல்லை. சாம்புவைத் தள்ளிக்கொண்டு, வண்டியில் ஏற்றி வீட்டில் இறக்கிவிட்டுப் போனார்.

•

சாம்பு வீட்டில் நுழைந்தபோது, அங்கே திமிலோகப்பட்டுக் கொண்டிருந்தது. வேம்பு ஒரு பெஞ்சியின் மேல் நின்றுகொண்டு, ஒரு மூலையைப் பார்த்துக் கையை ஆவேசம் வந்தவள்போல் ஆட்டிக்கொண்டிருந்தாள். நாற்புறமும் சாமான்கள் இறைந்து உருண்டு கிடந்தன.

'என்ன?' என்றான் சாம்பு திகைத்து!

'பெருச்சாளி!' என்று அவள் பயத்துடன் குழறினாள்.

சாம்பு, கைத்தடியால் மூலையில் கிடைத்த சாக்கைத் தட்டினான். மறுவிநாடி ஒரு பெரிய பெருச்சாளி அதிலிருந்து புறப்பட்டு ஓடியது. சாம்புவுக்கு அது தன் மீதே திரும்புமோ என்று உள்ளூறப் பயம்தான். இருந்தாலும், வேம்பு இருந்த தைரியத்தில், தடியை ஓங்கித் தலைமேல் சுழற்றி, பெருச்சாளி ஓடிய திசையில் பலமாக அடித்தான்.

அந்த அடி பெருச்சாளியின் மீது பட்டிருந்தால், அது அப்போதே பரலோகத்தை எட்டிப் பார்த்திருக்கும்! ஆனால் அதன் தலையில் பிரம்மன் வேறுவிதமான சாவு எழுதி இருந்தபடியாலோ என்னவோ, உயிர் தப்பி ஓடிவிட்டது. சாம்பு புதிதாக வாங்கின தடி தரையில் மோதவே, அதன் பூண் தெறித்து ஒரு மூலையில் போய் விழுந்தது. பூண் கழன்ற இடத்தின் வழியாக, தடியிலிருந்து ஒருவிதப் பொடி கொட கொடவென்று கொட்டியது.

'உளுத்த தடி!' என்றாள் வேம்பு.

சாம்பு அதைப் பரீட்சிக்கும் முன்பு மீண்டும் கோபாலன் நுழைந்தார்.

'உம்மைத் தனிமையில் கண்டு பேசவே வந்தேன். ஸெர்ச் பண்ணினோமே, ஏதாவது சந்தேகம் ஏற்பட்டதோ?' என்று படபடப்பாகக் கேட்டுக்கொண்டே வந்தவர், சாம்புவின் கையிலிருந்த தடியைப் பார்த்து பிரமித்தார். மறுவிநாடி அதைப் பிடுங்கிப் பரிசோதித்தார். அவர் முகம் பிரகாசம் அடைந்தது. சாம்புவின் முதுகில் பளார் என்று ஒரு ஷொட்டு வைத்து, 'இது கஞ்சாத் தூள்! இப்படி வாக்கிங் ஸ்டிக்கில் ஒட்டை செய்து ஒளித்து வைத்து, ஸ்பெஷல் ஆர்டர்களுக்குக் கொடுத்து வந்திருக்கிறார்கள் பேர்வழிகள்! லைஸென்ஸ் வாங்காமல் ஏமாற்ற இது வழி! ஹும்! இதுமாதிரி கழி இருக்கிற இடங்களை இனிமேல் தேடணும்!' என்றார் கோபாலன்.

'பெருச்சாளியை ஓர் அடி போட்டு' என்று தான் செய்த காரியத்தைச் சாம்பு விவரிக்கப் போனபோது, 'என்ன சார்!' காலம்பற பெருச்சாளி வீட்டில் போய்ப் பார்த்தேனே, அங்கே கூட ஒரு தடி இதுமாதிரி இருந்ததே!' என்றார் அவர்.

'இந்த நிமிஷமே போய்ப் பிடியுங்கள் சங்கீத சபாவில்!' என்று சாம்பு யோசனை கூறினான். சாம்புவின் ஆயுளில் முதன் முதலாக ஒரு யோசனை கூறியது இப்போதுதான்!

சாம்பு வீட்டுப் பெருச்சாளி என்னவோ அன்று அடிக்குத் தப்பித்துக்கொண்டது. ஆனால் பழம் பெருச்சாளியோ கோபாலன் கைச்சாட்டைக்குத் தப்ப முடியவில்லை.

லைஸென்ஸ் இல்லாமல் கஞ்சா, அபினி முதலிய லாகிரி வஸ்துகளைத் தடிக் கம்பின் மூலம் திருட்டு வியாபாரம்

செய்ததாம் அந்தக் கம்பெனி. முதலில் ஒரு புதுச் சிப்பந்தி செய்த தவறுதலால், இந்தத் தடிக் கம்புகளில் ஐந்தாறு, சம்பந்தப்படாதவர்களுக்கு விற்கப்பட்டுவிட்டன. அவை ஒவ்வொன்றையும் பார்த்து இரவுக்கிரவே பிடுங்கி இருக்கிறார்களாம். இவ்வளவையும் அரைமணிக்குள் கோபாலன், பெருச்சாளியைக் கக்க வைத்து, சாம்புவையும் டெலி போனில் கூப்பிட்டார். 'சார் ஒரு கோடி காண்பித்தீர்களே, அதுவே போறும், சார். வெளுத்துப் பிட்டேன், பெருச்சாளியை! அதிருக்கட்டும்! அந்தத் தடிக் கம்புப் பூணைக் கழட்டணும்னு எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?' என்று கேட்டார்.

'எல்லாம் பெருச்சாளி படுத்தின பாடுதான்!' என்று, சாம்பு தன் வீட்டுப் பெருச்சாளியை நினைவுபடுத்திக் கொண்டான்.

'அடேடே! முன்னாலேயே அவன் மேலே உங்களுக்குச் சந்தேகம் விழுந்துடுத்தா?' என்று ஆச்சரியப்பட்டார் இன்ஸ்பெக்டர்.

'நம்ம வீட்டிலேயே ஒரு பெருச்சாளி அட்டகாசம் பண்றது! என் ஒய்ப் ரொம்பப் பயப்படறா, சார்! நீங்க வந்து இதையும் அடித்தால்கூடச் சௌகரியமாயிருக்கும்!' என்றான் சாம்பு. கோபாலன் சிரித்தார்.

டெலிபோனை வைத்துவிட்டு உள்ளே வந்த சாம்பு, 'அடியே! கழியை நான் உடைத்தது எவ்வளவு நல்லதாகப் போச்சு பார்த்தாயா!' என்றான் வேம்புவிடம்.

'அதை நீங்கள் உடைக்காமலிருந்தால்கூட, நானே உடைக்கிறதாகத்தான் இருந்தேன். நீங்கள் இருக்கிற அழகுக்கு ஒரு தடிக்கம்புதான் குறைச்சல்! அதை எடுத்துக்கொண்டு நீங்க வந்தபோது எனக்குப் பற்றிக்கொண்டுதான் வந்தது! நானே அதை முறித்து, விறகில்லாத சமயத்திலே வெந்நீர் அடுப்பிலே போடலாம் என்றுதான் நினைத்தேன்!' என்றாள்.

/

27

பெரியவாள் ஆசிர்வாதம்

'இதோடு உங்களுக்கு லட்சம் தரம் சொல்லி விட்டேன்!' என்று வேம்பு அதட்டினாள்.

தன் மேஜையின் முன்னால் உட்கார்ந்து, அன்று அவனுக்கு வந்திருந்த ஒரு கடிதத்தைப் படித்துப் படித்து ரசித்துக்கொண்டிருந்த சாம்பு, 'என்னத்தைச் சொல்லிப்பிட்டே?' என்று கேட்டான்.

'அஸ்தமனம் ஆயிட்டா வீட்டுக்குத் திரும்பி விடுங்கோன்னுதான்! வெளியிலே போன புருஷன் வீடு வந்து சேருகிற வரைக்கும் 'திக் திக்'குனு இருக்கு!' என்றாள் அவள்.

'நாளையிலேர்ந்து உன் சட்டத்தை அமலுக்குக் கொண்டு வா!' என்றான் சாம்பு, அவளைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டிக் கொண்டு.

'நாளைக்கென்ன லக்னம் பார்த்து வச்சிருக்காம்?'

'அதெல்லாம் உனக்குப் பின்னால் தெரியும். நாளைக்குக் காலம்பரவே தெரியும். நான் என்னமா வரேன்னு பாரு அப்போ!'

'அழகுதான்!' என்று வேம்பு மோவாய்க் கட்டையைத் தோளில் இடித்துக் காட்டிவிட்டு உள்ளே போனாள். சாம்பு மறுபடி அந்தக் கடிதத்தை எடுத்துப் படித்தான்:

'மிஸ்டர் சாம்பு அவர்களுக்கு, கீழ்க்கண்ட அன்பர்கள் நமஸ்காரம் செய்து வணக்கமாகத் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால்...

தாங்கள் அபார சாமர்த்தியத்தினால் செய்திருக்கும் சேவைகள் இவ்வளவு அவ்வளவல்ல. அவைகளை இந்த நகரம் நன்கு அறியும். எந்தச் சேவைக்கும், தாங்கள் பிரதிபலன் எதிர்பார்த்தாலும் எதிர்பார்க்காவிட்டாலும், நகரவாசிகள் தங்கள் பாராட்டு தலை அளித்தாக வேண்டும். இது அவர்கள் கடமையாகும்.

இதை முன்னிட்டுத் தங்களைக் கௌரவித்து ஒரு பட்டமும் அளிக்கவேண்டும் என்று நாங்கள் தீர்மானித்திருக்கிறோம். இது சம்பந்தமாகப் பூர்வாங்கமான காரியங்களை வெகு ரகசியமாக நடத்தி, பட்டம் அளிப்பையும் திடீரென அறிவித்து, ஒரு வைபவத்தைக் கொண்டாட வேண்டுமென்பது எங்கள் அபிப்பிராயம். தாங்கள் இன்றிரவு 8.30 மணிக்கு நுங்கம்பாக்கம் ஹைரோட்டில் 1078-ஆம் நம்பர் பங்களாவுக்கு வந்து எங்களைச் சந்திக்க வேணுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

நாம் ஒரு முடிவுக்கு வரும்வரை, விஷயம் மிகவும் ரகசியமாக இருப்பது உசிதம் என்று நாங்கள் மீண்டும் சொல்ல வேண்டியதில்லை.'

இந்தக் கடிதத்தின் அடியில் சுமார் பத்து கையொப்பங்கள் இருந்தன.

சாம்பு, தனது மூக்கைத் தடவி விட்டுக்கொண்டான். அவனுக்கு ஆட்சேபணை இல்லை. இது விஷயத்தை, கோபாலனுக்கும் சொல்வதில்லை; வேம்புவுக்குக்கூடச் சொல்வதில்லை! இரண்டு பேரும் அப்புறம் ஆச்சரியப்படட்டுமே! கோபாலன் என்ன சொல்லப் போகிறார்? 'மிஸ்டர் சாம்பு! நீர் அழுத்தமான பேர்வழி, ஓய்! எனக்குக்கூடச் சொல்லாமல் இருக்கிறீரே!' என்பார். அதற்கும் பதில் சொல்லிவிட்டால் போகிறது! 'நீர் அப்போ மும்முரமாக ஹைதராபாத் கூட்டத்து ஆசாமிகளைப் பிடிக்க முயன்று கொண்டிருந்தீர். அந்தச் சமயத்தில் போய் அற்ப விஷயங்களைச் சொல்லிக்கொண்டிருக்க வேண்டாமென்று இருந்தேன்!' என்று சொல்லிக்கொள்ளலாம். 'என்ன கோபாலன்

வேண்டியிருக்கு! மூன்றாம் மனிதர்களுக்குத் தோன்றியதுகூடத் தோன்றவில்லையே அவருக்கு! இந்தப் பட்டமளிப்பு ஏற்பாடு செய்யவேண்டியது யார்? கோபாலன் அல்லவா! அவருக்குத் தான் எத்தனை உபகாரமாக இருந்திருக்கிறோம்?' என்று சாம்புவின் சிந்தனைகள் சென்றன.

'எங்கே போறேள்?' என்று கேட்டாள் வேம்பு.

'பீடை! போகிறபோது எங்கே போறேங்கறது! போகிற காரியம் உருப்பட்டாப்பலேதான்!' என்றான் சாம்பு.

'ஆமாம்! பிரமாத காரியம் வேறே வச்சிருக்கு! எவனாவது வந்து கேட்டான்னா என்னத்தைச் சொல்லி அழறது என்கறதுக்காகக் கேட்டேன்!'

சாம்பு யோசித்தான். கோபாலன்கூடப் பின்பற்றாதபடி தொலைவாக ஏதாவது ஓர் இடத்தைச் சொல்ல வேண்டுமே! 'ஆ.. உ.. உம்.. குரோம்பேட்டை வரைக்கும் போரேன்னு சொல்லி அழு!' என்றான்.

நுங்கம்பாக்கம் சாம்புவுக்குப் புதிதல்ல. எத்தனையோ தடவை அந்தப் பக்கத்தில் அவன் வாக்கிங் போயிருக்கிறான். எழும்பூர் ஸ்டேஷனிலிருந்து மெல்ல நடந்து சென்றால் அரை மணியில் போய்ச் சேரலாம். ஆனால், நுங்கம்பாக்கம் என்ற நினைவு வந்ததும் அங்கே ஒரு திருப்பத்தில் இருந்த பங்களாவும் ஒரு சிறு பையனின் விளையாட்டும் அவனுக்குத் தொடர்ந்து ஞாபகத்துக்கு வந்தன.

என்றைக்குமே சின்னப் பையன்களுக்கும் அவனுக்கும் ஒத்துக் கொள்கிறதில்லை. அவர்கள் அவனிடம் என்ன வேடிக்கையைக் கண்டார்களோ, தெருவில் அவன் கிளம்பினால் அவனைப் பின்தொடர ஆரம்பித்துவிடுவார்கள். சிலர் அவன் மூக்கை வெறித்துப் பார்ப்பதுபோல் அவனுக்குத் தோன்றும். அதேபோல் நுங்கம்பாக்கத்திலும், சாம்பு ரஸ்தாவோடு செல்லும்போது, இந்தப் பங்களாவிலிருந்து ஒரு சின்னப் பயல் கிளம்பி அவனைத் துரத்திக்கொண்டு வருவான். ஆறு அல்லது ஏழு வயதுதான் அவனுக்கு இருக்கும். பார்வைக்குப் பணக்கார வீட்டுப் பிள்ளை போல் தோன்றும். முகத்தில் குறும்பும் போக்கிரித்தனமும் சொட்டும். சாம்பு, அவனைக் கவனிக்காததுபோல் பாசாங்கு செய்திருக்கிறான். ஆனால், அவன் விடுகிறவனாக இல்லை.

அந்தப் பங்களாவின் பக்கம் போகும்போது சாம்பு, நடையைத் தன்னையும் அறியாமல் துரிதப்படுத்துவான். பங்களாவை நெருங்கினால் ஓட்டமே எடுப்பான்.

ஆனால், அன்று சாம்பு போக வேண்டியிருந்தது இருட்டுக்கு மேல்தான். ஆகவே, சின்னப் பையன் அநேகமாக வாசலில் இருக்க மாட்டான். அப்படி இருந்தாலும், இவனைப் பார்க்க முடியாது என்ற தைரியத்தில்தான் சாம்பு சுமார் எட்டு மணிக்கு அந்தப் பக்கம் அச்சமின்றி மெதுவாக நடந்தான்.

பங்களா வாசலில் அப்போது யாருமே இல்லை. உள் வராந்தாவிலும் மங்கலான வெளிச்சமே எரிந்து கொண்டிருந்தது. திடமான மனத்துடன் சாம்பு அதைக் கடந்து சென்றான். மேலும் நான்கு கஜம் சென்றபின், 'அப்பாடா!' என்று ஒரு பெருமூச்சுவிட்டான். இதுவரை ஒரு நாளாவது பையன் உபத்திரவமில்லாமல் அந்தப் பக்கம் தாண்டியதில்லை. அவன் பெருமூச்சு விட்ட மூன்றாவது நிமிஷமே, அவசரப்பட்டு விட்டோம் என்று உணர்ந்தான். 'ஏய்! ஏய்!' என்று பின்னால் ஒரு குரல் கேட்டது. அடுத்த நிமிஷம், அந்தச் சின்னப் பயல் சாம்புவைத் துரத்தத் தொடங்கினான். சாம்பு ஓடினான். வேறு வழியில்லை. சுமார் நூறு கஜம் ஓடிய பிறகு திரும்பிப் பார்த்தான். பையன் பின் தொடரவில்லை.

ஓட்டத்தை நிறுத்தி, கொஞ்ச தூரம் மெல்ல நடந்து கொண்டிருக்கையில், 'ஏய்! ஏய்!' என்று மறுபடி சத்தமும், சிறு காலடிகள் பின்தொடரும் ஓசையும் வந்தன. 'அடப்பாவி!' என்று சாம்பு ஓடினான். ஹைரோடு வந்த பிறகுதான் நின்றான். ஓடிப் பழக்கமில்லையாகையால் சாம்புவுக்கு மார்பு படபடத்து, மேல்மூச்சு வாங்கிற்று. அவன் போகவேண்டிய பங்களா வாசலும் அப்போது வந்துவிட்டது.

நேரே உள்ளே போனால், அவனுக்கு மூச்சு வாங்குவதற்குக் காரணம் சொல்ல வேண்டியிருக்கும் என்று தோன்றவே, வெளியில் சிறிது தயங்கி நின்றான்.

சாம்பு ஆசுவாசப்படுத்திக்கொண்டிருக்கும்போதே, மீண்டும் 'ஏய் ஏய்!' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டான். நாசமாகப் போக! இங்கேயுமா வந்துவிட்டான் அவன்? அந்தப் பையனின் மென்னியைத் திருகினால்தான் என்ன? என்று கோபம் வந்தது சாம்புவுக்கு!

'அட! போக்கிரிப் பயலே! இப்போ ஓடிப் போகிறாயா? என்ன!' என்று அதட்டினான்.

ஆனால், அவன் பயப்படுகிறவனாகத் தோன்றவில்லை. கிட்ட வந்து, 'ஏய்! ஏய்!' என்றான்.

இதேதடா தர்ம சங்கடம்! கௌரவமாக ஓர் இடத்துக்குக் காதும் காதும் வைத்தாற்போல் வந்துவிட்டுப் போகலாமென்றால், இவன் எங்கிருந்து வந்தான் வால் மாதிரி! இப்போது என்ன செய்யலாமென்று சாம்பு யோசித்தபோது, வாசலில் ஒரு மோட்டார் வந்து நின்றது. ஒரு முடிவுக்கு வர, சாம்புவுக்கு அரை நிமிஷமேதான் இருந்தது.

மூலையில் செழிப்பாக வளர்ந்திருந்த குரோட்டன்சுகளுக்கு மறைவில் சட்டென்று அந்தப் பையனைத் தள்ளி, 'ஏலே! பயலே! இங்கே வாயைத் திறந்தாயோ உன் மண்டை இரண்டாகப் போயிடும்! இங்கேயெல்லாம் நிறையப் பூச்சாண்டிகள் இருக்கா. நான் திரும்பிப் போகிற மட்டும் அங்கேயே இரு! ஹும்!' என்று ஓர் அதட்டல் போட்டுவிட்டு, மறுபடி வந்து வழியில் நின்றான். சாம்புவின் காரியத்தைச் சிறிதும் எதிர்பாராத பையன் முதலில் திடுக்கிட்டான். பிறகு பயந்தே போனான். ஏதாவது சொல்லலாம் என்று அவன் முயன்றுகொண்டிருக்கும் போதே, மோட்டாரில் இறங்கினவர்கள் மூன்று பேர் அவசர அவசரமாக உள்ளே வந்தார்கள். வழியில் சாமபுவைப் பார்த்ததும், 'ஒஹோ! அதற்குள் வந்துவிட்டீர்களா, மிஸ்டர் சாம்பு!' என்றான் அவர்களில் ஒருவன்.

மோட்டார் சத்தத்தைக் கேட்டு, பங்களாக் கதவைத் திறந்து கொண்டு ஓர் முரட்டுப் பேர்வழியும் வெளியில் வந்தான்.

'சாம்பு வந்திருக்கிறார். கவனித்து, இவருக்குப் பட்டத்தைக் கொடு!' என்றான் முதலில் பேசினவன் கேலியாக.

முரட்டு ஆசாமி சாம்புவின் கைகளைப் பின்புறமாகப் பிணைத்தான். ஏதோ பேச முயன்ற சாம்புவின் வாயில் ஒரு துணிப் பந்தை மற்றொருவன் அடைத்தான். அப்புறம் நடந்ததெல்லாம் சாம்புவுக்கு ஒரு கனவுபோல்தான் தோன்றியது. மோட்டாருக்கு அவனை அவர்கள் நடத்திச் சென்றபோது ஓர் இயந்திரம்போல் நடந்து சென்றான். 'இவர்கள் யார்? எதற்காக நம்மைக் கட்டிக்கொண்டு போகவேண்டும்? பட்டம் கொடுக்கப்

போவதாகச் சொன்னது புரளியா? நம்மைப் பிடித்துக் கொள்வதற்குச் செய்த சூழ்ச்சியா?' - இப்படியெல்லாம் சாம்புவின் மனம் கலங்கியது. மோட்டார் புறப்பட்டது.

சாம்பு, அன்று மாலையில் தனக்கு வந்த கடிதத்தை வைத்துக் கொண்டு ஆனந்தப்பட்டுக்கொண்டிருந்த அதே சமயத்தில், இன்ஸ்பெக்டர் கோபாலன் வேறொரு கடிதத்தை வைத்துக் கொண்டு கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். ஹைதராபாதிலிருந்து சில போக்கிரிகள் கொண்ட ஒரு கோஷ்டியார் பட்டணத்துக்கு வந்து பலவிதப் பேத்து மாத்துகள் செய்து வந்திருக்கிறார்கள். வைர வியாபாரிகள்போல் நடித்து, ஒரு தனவந்தர் வீட்டில் இருந்த நகைப் பெட்டியையே கொண்டுபோய் விட்டார்கள். ஓரிடத்தில் கம்பெனிச் சிப்பந்திகள்போல் நுழைந்து, இரும்புப்பெட்டியைக் காலி செய்துவிட்டார்கள். இதுமட்டும் அல்ல! பணக்கார வீட்டுக் குழந்தைகளைத் தூக்கி வைத்துக் கொண்டு பெரிய கட்டணம் கொடுத்தாலொழியத் திரும்பக் கொடுக்க முடியாதென்று மிரட்டிக் கொள்ளை அடிப்பதும் இவர்கள் தொழில் என்றும் தெரியவந்தது. இந்தக் கோஷ்டி, எங்கே கூடுகிறது, எப்போது கூடுகிறது என்று யாராலும் சொல்ல முடியவில்லை. ஏனென்றால், ஒரு சமயம் கூடின இடத்தில் மறு சமயம் கூடுவதில்லை.

இன்று கோபாலன் கையிலிருந்த கடிதத்தில், ரகசியப் போலீஸ் காரர் ஒருவர் அரசல்புரசலாகக் காதில் பட்ட செய்தியைத் தெரிவித்திருந்தார். இரவு எட்டரை மணிக்கு நுங்கம்பாக்கத்தில் ருத்ரா என்ற பங்களாவில் ஒரு குழந்தையைத் தூக்கிக்கொண்டு போவதாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள், இந்தக் கோஷ்டியார். ருத்ராவில் இருப்பது யார் என்று கோபாலன் விசாரித்தார். 'நெல்லிக்கோடு ஜமீன்தார் அந்தப் பங்களாவில் ஆறு மாதமாகக் குடி வந்திருக்கிறார்!' என்று பதில் கிடைத்தது.

அப்போது சரியாக ஏழரை மணி. கோபாலன் மூன்று கான்ஸ்டபிள்களுடன் கிளம்பினார். வழியில் சாம்புவின் வீட்டில் விசாரித்து, அவன் இருந்தால் பார்க்கலாம் என்று அவன் வீட்டுப் பக்கமாகச் சென்றார்.

வாசலில் நின்று கொண்டிருந்த வேம்பு ஒரு தூணைப் பார்த்து, 'அவர் அரை மணி முந்தியே வெளியிலே போயாச்சே!' என்றாள்.

கோபாலன் அந்தத் தூணையே வெறித்து, 'எங்கே போகிறதாகச் சொன்னாரோ?' என்று கேட்டார்.

'எங்கேயோ குரோம்பேட்டை என்றார்' என்று மேற்படி தூணுக்கே வேம்பு பதில் சொல்லிவிட்டு, தலைப்பை இழுத்துப் போர்த்துக்கொண்டு உள்ளே சென்றாள்.

கோபாலன் அடுத்தபடி, ருத்ரா வாசலில் வந்து இறங்கினார். அவர் வந்த சமயம், அங்கே அமளி துமளிப் பட்டுக் கொண்டு இருந்தது. நெல்லிக்கோடு ஜமீன்தார் எங்கேயோ போயிருந்தார். வாசலில் விளையாடிக்கொண்டிருந்த அவர் சின்னப் பிள்ளையைக் காணோம்! வேலைக்காரன், அந்தப் பையனை வாசலில் விட்டுவிட்டுப் புழக்கடைப்பக்கம் வேஷ்டிகள் உலர்த்தப் போயிருக்கிறான். திரும்பி வந்தபோது வாசலில் ஒரு மோட்டார் கிளம்பிக் கொண்டிருந்ததாம். அதில் தடியர்களாக மூன்று பேர் இருந்தார்களாம். அதற்குப்பின் குழந்தையை வீட்டில் காணோமாம்.

பையனின் தாயார் கண்ணீரும் கம்பலையுமாக இருந்தாள். 'என் கண்ணனை எப்படியாவது கொண்டு வாருங்கள், பதினாயிரம் கொடுக்கிறேன். ஜகதாம்பிகே! திரிபுரசுந்தரி! உனக்கு என் வைர அட்டிகையைச் சாத்துகிறேண்டி! என் நெஞ்சைக் குளிர வை! சுப்ரமண்யம்! உனக்கு லட்சார்ச்சனை செய்கிறேன்!' என்று கதறிக் கொண்டிருந்தாள் அந்த அம்மாள்.

அங்கே தாமதிப்பதில் உபயோகமில்லை என்று கோபாலன் உடனே கிளம்பினார். ஒருகால் சாம்பு இதில் வேலை செய்கிறாரோ? குரோம்பேட்டையில் இந்தச் சமயம் அவருக்கு வேறு என்ன வேலை இருக்க முடியும்? 'விடு காரை, குரோம் பேட்டைக்கு!' என்று உத்தரவு கொடுத்தார் கோபாலன்.

மோட்டார் கிளம்பிற்று. ரஸ்தா, ஜன சஞ்சாரமற்று அரை வெளிச் சத்தில் பயங்கரமாகத் தோன்றியது. இரண்டு பர்லாங் சென்றபின் ஒருவன் எதிரில் வந்தான். வண்டியை நிறுத்தி, 'இங்கே ஏதாவது கார் போயிற்றா, சற்று முன்பு?' என்று விசாரித்தார் கோபாலன்.

'இப்போதுதான் அந்த பங்களா வாசலில் நின்றுவிட்டு ஒரு வண்டி கிளம்பிற்று!' என்றான் அவன்.

கோபாலன் அந்தப் பங்களாவுக்குச் சென்றபோது, சின்னப் பையன் ஒருவன் குரோட்டன்சுக்குப் பக்கத்தில் திருதிருவென்று முழித்துக்கொண்டு நிற்பதைக் கண்டார்.

'பூச்சாண்டி வந்து மாமாவைப் பிடிச்சுண்டுட்டான்!' என்று அவன் விக்கினான். ஒரு கான்ஸ்டபிளிடம் அந்தப் பையனை ஜமீன்தார் வீட்டில் கொண்டு காண்பிக்கும்படிச் சொல்லிவிட்டு, 'வண்டி மேலே போகட்டும்! சாம்புவுக்கு ஏதாவது ஆபத்து வராமல் பார்க்க வேண்டும்!' என்று துரிதப்படுத்தினார் கோபாலன். அவர் மனம் துரிதமாக வேலை செய்தது.

மோட்டார் காற்றாகப் பறந்தது. பதினைந்து நிமிஷங்களுக்குப் பிறகு, முன்னால் போகும் வண்டியின் பின்விளக்கு வெகு தொலைவில் தென்பட்டது. போலீஸ் மோட்டாரை ஓட்டிய டிரைவர் அனுபவஸ்தன். இப்படிப் போனால் எதிரிகள் தப்பித்துக் கொள்ளலாமென்று, குறுக்கு வழியில் சடேரென்று காரைத் திருப்பினான். அரை மணி நேரம் வண்டி அறுபது மைல் வேகத்தில் ஓடிற்று. கடைசியில், குறுக்குப் பாதை மெயின் ரஸ்தாவில் வந்து சேர்ந்து கொண்டதும் டிரைவர் வண்டியை நிறுத்தி, 'இன்னும் அவர்கள் இதைத் தாண்டிப் போயிருக்க முடியாது, சார்! ஐந்து நிமிஷத்தில் காரை எதிர்பார்க்கலாம்' என்றான்.

எப்படியோ ஆபத்தை எதிர்பார்த்து அந்த மோட்டார் ஓட்டியும் அதிவேகமாக வந்திருக்க வேண்டும். ஏனெனில், அவன் சொல்லி வாய் மூடு முன்பே தொலைவில் மோட்டார் வரும் சப்தம் கேட்டது. ஒரு நிமிஷத்துக்கெல்லாம் அது நெருங்கி விட்டது.

'நிறுத்து! நிறுத்து!' என்று குறுக்கே பாய்ந்தார் கோபாலன்.

அவர்கள் ஏன் நிறுத்துகிறார்கள்? அன்று கோபாலன் அந்த மோட்டாரில் அகப்படாமல் தப்பியதே பெரிய ஆச்சரியந்தான். அவர் கையிலிருந்த ரிவால்வரிலிருந்து உடனே டுமீல் என்ற சப்தம் கேட்டது.

மோட்டார் டயர் துளைக்கப்பட்டு அதிலிருந்து காற்று புஸ்ஸென்று வெளியேற, வண்டி அதிர்ச்சி தாங்காமல் வரப்பில் இறங்கி, ஒரு குட்டிக் கரணம் அடித்துவிட்டு நின்றது.

சாம்பு கண்ணை விழித்தபோது, அவன் வீட்டில் படுக்கையில் கிடந்தான். பக்கத்தில் வேம்பு இருந்தாள். 'பின்னால் தெரியும் என்றீர்களே, இதைத்தானா?' என்று கேட்டாள் அவள். சாம்பு, கையை காலை நீட்டிப் பார்த்தான். எல்லாம் முழுசாகவே இருந்தன.

'நாளைக்குக் காலம்பர எப்படி வரேன்னு பாரு என்றீர்களே, இந்த அழகைத்தானா?' என்றாள் வேம்பு மீண்டும் பல்லைக் கடித்து.

சாம்பு தலையைத் தூக்கினான். வேம்பு அதை அழுத்தி, 'பேசாமல்தானே கிடவுங்கோ! யாரோ வரா!' என்றாள். சாம்பு கண்ணை மூடிக்கொண்டான். வந்தவர்கள் கோபாலனும், ஒரு புதிய தம்பதியும். அவர்கள் அந்தச் சின்னப் பையனின் பெற்றோர்கள் என்று அவன் ஊகித்தான். 'ஐயோ! அந்தக் குழந்தையைப் பயமுறுத்தி இருட்டில் செடி மறைவில் தள்ளினேனே! என்ன ஆகியிருக்குமோ!' என்று எண்ணி, சாம்பு நடுங்கினான்.

கோபாலன் கேட்டார் : 'எப்படி இருக்கிறது? சாம்பு விழித்துக் கொண்டாரா, பேசினாரா?'

'இப்படியேதான் இருக்கிறார்!' என்று பதில் அளித்தாள் வேம்பு.

'ஒன்றும் கவலைப்பட வேண்டாம். தெய்வாதீனமாகத் தப்பினார், அம்மா! மற்றவர்களுக்கெல்லாம் நல்ல அடி! இவருக்கு வெறும் ஷாக்தான்; மூர்ச்சையாயிருக்கிறார். என்ன இருந்தாலும் பெரிய போக்கிரிகளோடு சண்டை போட, இவர் தனியாகப் போகக் கூடாது!'

'இவர்கள் வந்த சந்தர்ப்பத்தில் போனாரே?' என்றார் ஜமீன்தார் (கோபாலனுடன் வந்தவர்கள் நெல்லிக்கோடு ஜமீன்தாரும் அவர் மனைவியுந்தான்). 'அந்தத் திருடர்கள் கையில் சிக்காமல் எங்கள் பையனையும் அழைத்துக்கொண்டு போய், மூச்சுவிடக் கூடாதென்று செடி மறைவில் அவனை இவர் ஒளித்திருக்கிறார், பாருங்களேன்! இவர் அப்படிச் செய்திராவிட்டால் கட்டாயம் அவனை நேற்று அவர்கள் கொண்டே போயிருக்க மாட்டார்களா?'

'ஆமாம்னா! குழந்தைகூடச் சொல்றானே! நம்ம குழந்தையோட இவருக்கு ரொம்ப நாளாகவே சிநேகமாம்! அவர்கள் எதிரில் இவன் பேசி, இருக்கிற இடத்தை வெளிப்படுத்திக்கக் கூடாதுன்னு ஒளிச்சு வைச்சு, பேசாதே! பூச்சாண்டி வருவான்! என்று அதட்டினாராம்!' என்றாள் அம்மா.

கோபாலன் விவரித்தார் : 'எல்லாந்தான் திருட்டுப் பசங்கள் ஒப்புக்கொண்டு விட்டார்களே! நேற்று இந்தக் கோஷ்டியார் மூன்று வேலைகளைச் செய்கிறதாயிருந்தார்களாம். முதலில்

டவுனில் ஒரு திருட்டு; வழியில் உங்கள் குழந்தையைத் தூக்கிக்கொண்டு போவது; மூன்றாவது, சாம்புவையும் குரோம் பேட்டைக்குக் கொண்டுபோய் விடுவது. இவ்வளவும் சாம்புவுக்குத் தெரிந்திருக்கிறது. பையனை இவர்கள் கையில் விடாமல் தப்பவைக்க வேண்டியதுதான் முக்கியமென்று சாம்பு இப்படிச் செய்திருக்கிறார்! தாமும் அசடுமாதிரி பாசாங்கு செய்து கொண்டு இவர்களுடன் போயிருக்கிறார். மேற்கொண்டு என்ன பிளான் வைத்திருந்தாரோ? டவுனில் ஒரு நகைக் கடையில் திருடிக் கொண்டு வந்த பண்டங்களுடன், ரொம்ப நாளாக டிமிக்கி கொடுத்துக் கொண்டுவந்த ஆசாமிகள் கையும் களவுமாக மாட்டிக்கொண்டார்கள்.'

'எப்படியோ, நம்ம குழந்தையைக் காப்பாத்தினவர் இவர்!'

'அம்மா! இவ்வளவு பெரிய உபகாரத்துக்கு உனக்கு நல்ல பிள்ளைக் குழந்தையாகப் பொறக்கணும்! இப்போ ஸ்நானம் பண்ணிண்டிருக்கியோ?' என்று வேம்புவைப் பரிவுடன் கேட்டாள் அம்மாள்.

'இல்லை, ஏழு மாசமாச்சு!' என்று வெட்கம் தோன்றச் சொல்லி விட்டு வேம்பு தலையைக் குனிந்துகொண்டாள்.

அவர்கள் போன பிறகு, சாம்பு எழுந்து உட்கார்ந்து மிரள மிரள விழித்தான். இனிமேயாவது அஸ்தமிச்சவுடனே வீட்டுக்குத் திரும்புகிறேளா?' என்று அதட்டினாள் வேம்பு.

'ஆகட்டும்!' என்பதற்கு அடையாளமாக, சாம்பு பலமாகத் தலையாட்டினான். 'அவன் தலையில்கூட ஒன்றும் அடிபட வில்லை என்பதை வேம்பு கண்டுகொண்டாள்.

சரியாக மூன்று மாதத்துக்குப் பிறகு டவுன் ஹாலில் ஒரு முதல் தரமான டீ பார்ட்டி நடந்தது. அழகாகத் தோரணங்கள் கட்டி இருந்தன. வெளியில் ஏகப்பட்ட மோட்டார்கள் வந்து நின்றன.

'என்ன விசேஷம்?' என்று விசாரித்த ஒருவரிடம், பாரா நின்ற போலீஸ்காரன், 'இன்றைக்கு மிஸ்டர் சாம்புவுக்குப் பட்டம் கொடுக்கிறாங்க. பெரிய துரை வந்திருக்காரு. பிரசங்கம் எல்லாம் நடக்குது!' என்று பதில் சொன்னான்.

உள்ளே நாற்காலியில் பிரும்மாண்டமான பூமாலையைச் சுமக்க முடியாமல் சுமந்துகொண்டு சாம்பு உட்கார்ந்திருந்தான். ஒரு

புறம் ஆனந்தமே அவதாரமாக, கோபாலன் உட்கார்ந்து பிரசங் கத்தை ரசித்துக் கொண்டிருந்தார்.

கமிஷ்னர் துரை பேசிக்கொண்டிருந்தார். 'மிஸ்டர் சாம்பு இருக்கிறாரல்லவா? இவரைப் பார்த்தால் யாரும் இவ்வளவு பெரிய காரியங்கள் செய்தவர் என்று சொல்ல முடியுமா? பார்த்தால் பரம சாதுதான்; பாய்ந்தால் புலிதான்! நமக்கெல்லாம் இவர் செய்திருக்கும் சேவை என்றும் மறக்க முடியாது. இவருக்கு ஒரு பட்டம் அல்ல, பதினாயிரம் பட்டங்கள் கொடுக்க வேண்டும். தற்போது நான் இந்த நகரவாசிகளின் சார்பாக முதலாக, 'கம்பீர ஸாகரம்' என்ற பட்டத்தை மகிழ்ச்சியுடன் அளிக்கிறேன்!' என்றார். சபையோர் கரகோஷம் அமோகமாக எழுந்து, பத்து நிமிஷத்துக்குப் பிறகு ஓய்ந்தது.

அந்தச் சமயம் ஒரு கான்ஸ்டபிள் தந்தி ஒன்றைக் கொண்டுவந்து சாம்புவிடம் கொடுத்தான்.

'என்ன விசேஷம்!' என்று கேட்டார் கோபாலன்.

சாம்பு மூஞ்சியில் அசடு வழிந்தது. முகத்தை ஆயிரம் கோணல் செய்துகொண்டு தந்தியைக் கோபாலனிடம் காண்பித்தான்.

அடுத்த விநாடி கோபாலன் எழுந்து, 'சபையோர்களே! இன்னொரு சந்தோஷமான சமாசாரம்! இன்று நம் சாம்புவுக்குப் பிள்ளைக் குழந்தை பிறந்திருப்பதாக இதோ தந்தி வந்திருக் கிறது!' என்றார்.

மறுபடி எழுந்த கரகோஷம் பதினைந்து நிமிஷம் ஆகியும் ஓயவில்லை.

28

அதிர்ஷ்டம் துரத்துகிறது!

அதிகார தோரணையில் சாம்புவுக்கு ஒரு கடிதம் வந்தது. சமீப காலத்தில், அவனை அதிர்ஷ்ட தேவதை வந்து அரவணைத்துக் கொண்ட பிறகு, அவ்வளவு கண்டிப்பாகக் கடிதம் எழுத - ஒருவரைத் தவிர - எல்லாருமே பயப்பட்டிருப்பார்கள். அது வேறு யாரும் இல்லை. வேம்புதான்!

'அநேக நமஸ்காரம். உபயக்ஷேமம். எனக்கு ஒரு கடுதாசி கூடப் போடமுடியாமல் உங்களுக்கு ஜோலிகள் அதிகமாகப் போய் விட்டது போலிருக்கு! இருக்கட்டும்! நான் அங்கே இருக்கிறபோதே ஊரான் காரியமாக உடம்பைப் புண்படுத்தியிருப்பேன்; இப்போ, தனிக் காட்டு ராஜாவாக இருக்கிற போது கேட்கவே வேண்டாம். எப்படியோ உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொண்டு இருந்தால் சரி!

பெரிசா ஒரு பீரோ பார்த்து வாங்கும்படி அம்மா உங்களிடம் முந்திச் சொல்லியிருந் தாளே, அதை அப்பவே மறந்து போய் விட்டீர்கள் அல்லவா? மறுபடியும் கேட்டு

மாப்பிள்ளைக்கு எழுதாதே என்றுதான் அம்மா சொல்கிறாள். நானும் எழுதவில்லை. அவாளவாளுக்கு மனசிருந்து செய்ய ணும். ஒரு பீரோவை வாங்கி, லாரியில் போட்டால் மறுநாள் காலம்பற இங்கே வாசலில் கொண்டுவந்து இறக்குகிறான். அதையுந்தான் நான் ஏன் எழுத வேண்டும்?

உங்கள் பிள்ளை கையையும் காலையும் உதைத்துக்கொண்டு மோட்டு வளையைப் பார்த்துச் சிரிக்கிறான். எல்லாரும் அவன் அப்பாவை உரிச்சு வைச்சிருக்கு என்கிறார்கள். அதென்னமோ, அவன் மூக்குமட்டும் அப்படியே உங்களதுதான்!

கடுதாசி போடுங்கோ. 'ஆம்' பத்திரம்.'

உங்கள் பிரியமுள்ள,

வேம்பு.'

இந்தக் கடிதத்தைப் படித்ததும் சாம்புவுக்கு உண்மையாகவே கோபம் வந்தது. ஆனால், கோபம் வேம்புவின் மேல் அல்ல; இன்ஸ்பெக்டர் கோபாலன்மீது!

'என்ன மனுஷன் இவர்! எப்போதும் சுய காரியந்தான்! தமக்குக் காரியம் இருந்தால் சாம்பு, சாம்பு என்று நூறு தடவை வருகிறது. காரியம் இல்லை என்றால் தலை காட்டுவதில்லை!' என்று எண்ணிக் கொண்டான்.

வேம்பு முதன்முதலாக ஒரு பெரிய பீரோ வேண்டுமென்று பிரஸ்தாபித்த உடனேயே, சாம்பு கோபாலனைக் கண்டு சொன்னான். அப்போது கோபாலன் ஒரு பெரிய கொலைக் கேஸ் புலன் விசாரணையில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார். அடிக்கடி சாம்புவை வந்து பார்ப்பதும் அழைத்துச் செல்வதும் சகஜமாக இருந்தன. 'அதற்கென்ன, மிஸ்டர் சாம்பு! முதல் தரமான பீரோவாக நான் வாங்கித் தருகிறேன். புதிதாகச் செய்து கொண்டிருக்க வேண்டியது கூட அநாவசியம்! ஜயலக்ஷ்மி அண் கோ என்று மவுண்ட் ரோடில் பெரிய ஏலக் கம்பெனி இருக்கிற தல்லவா? அதன் முதலாளி எனக்கு வேண்டியவர். ஒருநாள் போய்ப் பார்த்து உமக்குப் பிடித்த பண்டம் எது என்று காண்பித்து விடும். நான் பார்த்து முடித்துத் தருகிறேன்!' என்றார்.

அன்றைக்கு இரண்டு நாள்களுக்கு முன் ஒருநாள் மாலையில்தான் சாம்புவும் கோபாலனும் ஏலக் கம்பெனிக்குப் போனார்கள். அது

மிகப் பெரிய கம்பெனிதான். எங்கே பார்த்தாலும் ஸோபாக்க ளும், ஸோபா நாற்காலிகளும், மேஜைகளும், ஸ்பிரிங் கட்டில் களுமாகக் கிடந்தன.

ஜயலக்ஷ்மி அண் கோவின் முதலாளி, இன்ஸ்பெக்டரை வரவேற்று உட்காரவைத்தார். சாம்பு அறிமுகம் செய்யப்பட்ட போது, ஓஹோ! அப்படியா? என்று ஒரு மாதிரியாகப் பார்த்தார் அவனை.

'ஒன்றுமில்லை; யோசிக்க வேண்டாம். இவர் சொந்த காரிய மாகத்தான் வந்திருக்கிறார். மிஸ்டர் சாம்புவுக்கு ஒரு...' என்று கோபாலன் சாம்புவைப் பார்த்தார்.

என்னமோ தெரியவில்லை. பீரோ வேண்டும் என்று அப்போது சொல்வது சாம்புவுக்குக் கௌரவக் குறைச்சலாகத் தோன்றியது. 'ஒரு ஸோபா ஸெட் வேண்டும்!' என்றான் அவன்.

கோபாலன் புருவத்தை நெரித்து அவனைப் பார்த்தார். சாம்பு அவர் கண்ணில் அகப்படாமல் வேறு பக்கம் திரும்பிக் கொண்டான்.

முதலாளி மணி அடித்ததும், ஒரு குமாஸ்தா வந்து நின்றான். 'அடே பஞ்சு! மிஸ்டர் சாம்புவை அழைத்துக்கொண்டு போய் ஸ்டோர் ரூமில் இருக்கிற குப்பைகளை எல்லாம் காண்பி!' என்றார்.

'குப்பையா?' என்றான் சாம்பு. விளக்கெண்ணெய்ச் சிரிப்புடன்.

'ஆமாம். நான் இதையெல்லாம் அப்படித்தான் சொல்லுவது! பஞ்சு, நல்ல குப்பைகளாகக் காண்பி!' என்றார் அவர் தொடர்ந்து.

கோபாலன், 'ஏன் ஸார்! குப்பை என்கிறீர்களே, குப்பை விற்கும் விலைக்கு அவைகளைக் கொடுப்பீர்களா?' என்று கேட்டு விட்டுச் சிரித்தார். இந்த ஹாஸ்யம் சாம்புவுக்குப் புரியவு மில்லை; பிடிக்கவுமில்லை. 'மிஸ்டர் கோபாலன்! நீங்களும் கொஞ்சம் வருகிறீர்களா, பார்க்கலாம்?' என்றான்.

கோபாலன் அசைந்து கொடுக்க வேண்டுமே! ஊஹூம்!''மிஸ்டர் சாம்பு! போய்ப் பார்த்து உங்களுக்குப் பிடித்ததைப் பொறுக்கி எடுங்கள். நான் இப்போதே பார்க்க வேண்டியது அவசிய மில்லை!' என்று சொல்லிவிட்டு, முதலாளியுடன் வேறு

விஷயங்கள் பேச ஆரம்பித்தார். ஒரு நிமிஷம் தயங்கிப் பார்த்துவிட்டு, கோபாலன் வேறு கவனமாயிருப்பதைக் கண்டு கோபம் பொங்க, சாம்பு குமாஸ்தாவைப் பின்பற்றினான்.

சாம்புவுக்கு நெஞ்சில் பற்றி எரிந்தது ஆத்திரம். அவனுக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. இப்படியும் அவனை அலட்சியம் செய்வதா? பல ஸோபாக்களைக் குமாஸ்தா காண்பித்தபோது சாம்பு அரை மனத்துடன் பார்த்தான்.

'ஒன்றும் பிடிக்கவில்லையே!' என்றான் அவன் கடைசியில்.

'என்னைக் கேட்டால் இந்தச் சமயத்தில் இதெல்லாம் வாங்குவதே உசிதமில்லை!' என்றான் குமாஸ்தா.

'ஏன்?'

'நான் சொன்னதாகச் சொல்ல வேண்டாம், ஸார்! இப்போ கைவசம் நல்ல ஸ்டாக்குகளும் இல்லை. கொஞ்சம் பொறுத்தீர் களானால் நல்லது.'

இதையே ஒரு சாக்காக ஏற்றுக்கொண்டு சாம்பு, 'ஸோபா பின்னால் ஆகட்டும். நல்ல பீரோக்கள் இருக்குமா?' என்று கேட்டான்.

ஹாலின் ஒரு மூலையில் இருந்த சிறு அறைக்கு அழைத்துப் போய்க் காட்டினான் குமாஸ்தா. ஆறு பீரோக்கள் அங்கே இருந்தன. சாம்பு நுழைந்தபோது, யாருமே அங்கே தலைகாட்டி மாதக் கணக்காகியிருக்கும் என்பதற்கு அறிகுறியாக, தரையி லிருந்து குப்பென்று புழுதி கிளம்பிற்று. உயரச் சுவரில் ஒரே ஒரு வெண்டிலேட்டர் மூலம் மட்டும் சிறிது வெளிச்சம் வந்தது. ஒவ்வொன்றாக பீரோக்களைத் திறந்து பார்த்தான். 'இதெல்லாம் என்ன விலை ஆகும்? என்று அவன் கேட்டதற்குக் குமாஸ்தா, உங்களுக்குப் பிடித்ததைப் பார்த்துக்கொள்ளுங்கள்! விலையை முதலாளி சொல்லுவார்!' என்றான்.

சாம்புவுக்குப் பிடித்த பீரோ ஒன்றும் இருந்தது. ஆனால், அதை அப்போதே - கோபாலன் எதிரிலேயே சொல்ல அவனுக்கு இஷ்டமில்லை. அவர் இவ்வளவு அலட்சியமாக இருக்கும் போது, எதற்காகச் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும்?

'ஒன்றும் சுகமில்லை!' என்று சாம்பு முதலாளியிடம் வந்து உதட்டைப் பிதுக்கினான்.

'இப்போ நல்ல குப்பைகளாக வர்றதில்லை!' என்றார் முதலாளி.

'அதற்கென்ன! சாம்புவுக்கும் அவசரமில்லை. நல்ல குப் - அதாவது, நல்ல பண்டமாக வரும்போது சொல்லுங்கள். ஏன், நீங்களேகூட அவர் விலாசத்துக்கு அனுப்பி விடலாமே!' என்றார் கோபாலன்.

சாம்புவும் கோபாலனும் கிளம்பினார்கள். சாம்புவுக்கு அடக்க முடியாமல் ஆத்திரம் வந்தது. தன் காரியம் என்றால் எவ்வளவு அலட்சியம்! சாம்புவுக்கு அவசரமில்லையாம்! நல்ல குப்பையாக வரும்போது சொல்வதாம்! ஹூம்!

அன்று சனிக்கிழமை. மாலை ஆறு மணியிருக்கும்; கோபாலனும் சாம்புவும் மோட்டாரிலிருந்து போலீஸ் ஸ்டேஷனில் இறங் கினார்கள்.

மறுதினம் ஞாயிற்றுக்கிழமையாகையால், சென்னையில் தங்கி விட்டுப் போகலாமென்று தஞ்சாவூரிலிருந்து ஸி.ஐ.டி. இன்ஸ் பெக்டர் தங்கவேல் வந்து, அப்போது ஸ்டேஷனில் தங்கியிருந் தார். கோபாலன் அவருக்குச் சாம்புவை அறிமுகம் செய் விக்கவே, சாம்புவின் கையைக் குலுக்கி, 'ரொம்ப சந்தோஷம், ஸார்! உங்களைப் பற்றி ரொம்பக் கேள்விப்பட்டிருக்கிறேன்!' என்றார்.

கோபாலன் மற்றச் சிப்பந்திகளுடன் பேசிக்கொண்டிருந்தார். இதற்கு முன்னெல்லாம் சாதாரணமாக யாராவது தன்னைக் கொண்டாடும்போது கூடவே கலந்து கொள்ளும் கோபாலன், இன்று தங்கவேலுவுடன் சேர்ந்து புகழாதது சொரேர் என்றது சாம்புவுக்கு. 'சரி, இருக்கட்டும்!' என்று குரோதத்தை அடக்கிக் கொண்டிருந்தான் சாம்பு.

தங்கவேல் சாம்புவை ஒன்பது மணிவரை விடவில்லை. பழைய கதைகளையெல்லாம் உற்சாகத்துடன் சொன்னார். சாம்பு கிளம்பிய சமயம் ஸ்டேஷன் வாசலில் பரபரப்பு ஏற்பட்டது. இரண்டுபேர் பின்தொடர ஒரு பருத்த ஸேட் ஸ்டேஷனுக்குள்ளே நுழைந்து, நாற்காலியில் தொப்பென்று உட்கார்ந்தார்.

கோபாலன், 'என்ன மிஸ்டர் ஹரிசந்த் லால்! என்ன சமாசாரம்?' என்று கேட்டார்.

'கொள்ளை போய்விட்டது, ஸார்! இன்று வந்த பெரிய பாக்கெட் போய்விட்டு, ஸார்!' என்றார் அவர் தலையில் படேரென்று அடித்துக்கொண்டு.

'பதறாமல் சொல்லுங்கள்! மிஸ்டர் சாம்பு, நீங்களும் உட்காருங்கள்!' என்றார் கோபாலன். அரை மனத்துடன் வேறுபக்கம் திரும்பிக்கொண்டு சாம்பு உட்கார்ந்தான்.

'ஸ்வாமி, வைரம் இன்றைக்குக் காரெட் எண்ணூறு ரூபாய் விற்கிறது. நான் இருபத்தாறு காரெட்டைப் பறி கொடுத்துவிட்டேன். ஒழிந்தேன் இதோடு!' என்றார் ஸேட்.

'இதென்ன! விஷயத்தைச் சொன்னாலல்லவா கவனிக்கலாம்?'

'ஐயோ, இன்ஸ்பெக்டர் ஸார்! ஒரு மாதமாக நான் பாலஸ்தீனிலிருந்து வைரப் பாக்கெட் எதிர்பார்க்கிறேன். அது இன்று காலையில்தான் வந்தது. அதில் 26 காரெட் கற்கள் இருப்பதாக லெட்டர் முன்னாலேயே வந்துவிட்டது. இன்று சனிக்கிழமையா? ஆபீஸ் மத்தியானம் ஒரு மணியோடு சாத்துகிறோம். பாக்கெட்டை வாங்கிவைத்துப் பூட்டிவிட்டு, திங்கட்கிழமை பார்த்துக் கொள்ளலாமென்று வந்தேன். சற்று முன்பு, அட பார்க்கத்தான் பார்ப்போமே என்று ஆபீஸுக்கு நானும் இந்தக் கோவிந்தலாலும் போனோம். பாக்கெட்டையே காணோம்!' என்று தலையில் கையை வைத்துக் கொண்டார்.

தங்கவேல் சொன்னார்: 'இதோ சாம்பு இருக்கிறார். ஒன்றும் நீங்கள் கவலைப்பட வேண்டாம்! உங்கள் சரக்கைக் கையோடு எடுத்துக் கொடுத்து விடுவார்!'

சாம்பு பதில் சொல்லாமல், எச்சிலைக் கூட்டி லபக்கென்று விழுங்கினான். வழக்கமாகச் சாம்புவின் பெயரை உடனே சொல்லும் கோபாலன் இப்போது சொல்லவில்லை. அவன் பக்கங்கூடத் திரும்பிப் பார்க்கவில்லை. குதிரை கீழே தள்ளியதுமல்லாமல் குழியும் பறித்ததாம்! என்கிறதுபோல், 'ஸப் இன்ஸ்பெக்டர் தர்மராஜைக் கூப்பிடு!' என்று அவர் ஒரு கான்ஸ்டபிளுக்கு உத்தரவிட்டார். அவர் வந்ததும், 'உங்களுக்கு இதோ ஒரு நல்ல சான்ஸ் வந்திருக்கிறது!' என்றார்.

சாம்பு சட்டென்று எழுந்தான். அவன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. இவ்வளவு பெரிய அவமானம்

அவனுக்கு இதுவரை ஏற்பட்டதாக ஞாபகம் இல்லை. எல்லாருக்கும் விறைப்பாக ஒரு கும்பிடு போட்டுவிட்டு, வெளியே வந்தான். வீட்டுக்குச் சென்று படுக்கையில் படுத்தபோதும் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. இந்தக் கோபாலனைப் பதிலுக்குப் பதில் எப்படி அலட்சியம் செய்வது என்றே அவன் மனம் தீவிரமாக யோசனையில் ஆழ்ந்தது.

அப்போது அவன் செய்யக்கூடியது ஒன்றுதான். காலையில் எழுந்ததும், கோபாலனின் சிபாரிசு இல்லாமலேயே, அந்தப் பீரோவை வாங்கிவிடுவது. ஐம்பது, அறுபது ரூபாய் அதிகம் கொடுக்கவேண்டி வந்தாலும் வரட்டும் லட்சியமில்லை. இந்த முடிவுக்கு வந்த பிறகுதான் சாம்புவுக்குத் தூக்கம் வந்தது.

•

அன்றிரவு ஸப் இன்ஸ்பெக்டர் தர்மராஜ்கூட வெகுநேரம் தூங்கவே இல்லை. ஹரிசந்த் லாலுடைய கம்பெனியைப் பரிசோதித்தார். வைரங்கள் கொண்ட பாக்கெட் வைக்கப்பட்ட டிராயர், கள்ளச் சாவி போட்டுத் திறக்கப்பட்டிருந்ததென்பதைக் கண்டுகொண்டார். திருடன் எப்படி உள்ளே வந்தான் என்பது பெரிய மர்மமாக இருந்தது. ஏனென்றால், கடைசிவரையில் கதவு வெளிப்புறமே பூட்டப்பட்டிருந்திருக்கிறது. அவன் எப்படி வெளியே போயிருக்க முடியும் என்பது அதைவிடப் பெரிய மர்மமாக இருந்தது! ஆபீஸுக்குள் நுழைந்துவிட்டால் சுவரின் நாலு புறத்திலும் நாலு வெண்டிலேட்டர்களும் ஒரு பெரிய ஜன்னலும் இருந்தன. இவற்றில் ஒரு வெண்டிலேட்டர் மட்டும் பக்கத்துக் கட்டடத்துக்குப் பொதுவாக இருந்தது.

தர்மராஜுக்கு ஒரு சந்தேகம் வந்தது. 'ஒருகால் பாக்கெட் வைக்கப்படுமுன்பே திருட்டுப் போயிருக்கமோ?'

'நிச்சயம் இல்லை!' என்றார் ஸேட். 'என் குமாஸ்தா நாகநாதன் கடைசிவரை கூடவேதான் இருந்தான். அவன் கையிலிருந்து வாங்கி, நானே வைத்துப் பூட்டினேன்!'

'ஹு... இந்த நாகநாதன் என்பவர் யோக்கியர்தானா?'

'பதினைந்து வருஷமாக நம்மிடம் இருக்கிறார். அவர்மீது அப்படிக்குச் சொல்ல முடியாது.'

நாகநாதனுடைய விலாசத்தைக் கேட்டு இன்ஸ்பெக்டர் வாங்கிக் கொண்டார். எத்தனையோ விதமாக யோசனைகள் செய்தார்

தர்மராஜ். பொழுது விடிந்ததுமே சென்றவர், பல இடங்களைப் பார்த்துக்கொண்டு திரும்பியபோது மணி பன்னிரண்டு. நேரே ஹரிசந்த் லாலின் கடைக்கு வந்தார். ஓர் ஏணியை வாங்கி ஏறி, வெண்டிலேட்டர் வழியாக அடுத்த கட்டடத்துக்குள் எட்டிப் பார்த்துவிட்டு, ஏதோ திருப்தியடைந்தவர்போல இறங்கினார். அப்போதுதான் ஹரிசந்த் லால் கடைக்குள் நுழைந்தார்.

'என்ன இன்ஸ்பெக்டர்! எல்லாந்தான் தீர்ந்து போச்சே! இன்னும் என்ன பாக்கிறீங்க அங்கே?' என்று கேட்டுக்கொண்டே வந்தார் அவர்.

அன்று காலையில் சாம்பு எழுந்தவுடன் முதல் காரியமாக, பீரோ வாங்குவதென்று தீர்மானித்து, காபி சாப்பிட்டவுடனே மவுண்ட் ரோடுக்குப் போனான். ஆனால், பாவம் அந்தக் கம்பெனி திறப்பது 9.30-க்குத்தான் என்பதை அவன் அப்போது அறிய வில்லை. ஆகவே, அவன் வந்தபோது கம்பெனி பூட்டியிருந்தது. இப்படியும் அப்படியும் உலாவிக்கொண்டே காத்திருந்தான். அன்று பத்து மணிக்குத்தான் குமாஸ்தா கடை திறந்தான்.

உள்ளே நுழைந்த சாம்பு, நேரே பீரோக்கள் இருந்த அறைக்குச் சென்றான். தான் பார்த்து வைத்த பீரோவில் தொங்கிக் கொண் டிருந்த சாவியை ஒரு திருப்புத் திருப்பி அதைப் பூட்டிக்கொண்டு, 'ஸார், இதை என் அட்ரஸுக்கு அனுப்பி விடுங்கள்!' என்றான்.

'அப்படியே! முதலாளி வரட்டும்!' என்றான் குமாஸ்தா. பிறகு, 'இன்ஸ்பெக்டருக்குச் சொல்லிவிட்டீர்களா?' என்று கேட்டான்.

'நான் பணம் கொடுக்கப் போகிற விஷயத்தில் கோபாலன் தயவு என்ன?' என்று சாம்புவுக்குக் கோபம் வந்தது. அதைக் காண் பித்துக் கொள்ளாமல், 'அதற்கென்ன, நானே சொல்லிவிடு கிறேன்!' என்று கிளம்பினான் சாம்பு.

சாம்பு சென்ற முப்பது நிமிஷத்துக்கெல்லாம் முதலாளி வந்தார். சாம்பு வந்து போன விவரத்தைச் சொல்லி முடித்திருப்பான்; இன்ஸ்பெக்டர் கோபாலனே இரண்டு கான்ஸ்டபிள்களுடன் நுழைந்தார்.

சாம்பு ஏலக் கம்பெனியிலிருந்து கிளம்பினவன் நேரே கோபால னிடந்தான் போனான். அவனுக்கு ஆத்திரம் உச்ச நிலையை

அடைந்திருந்தது. கோபாலனிடம், தான் பீரோ வாங்கின விஷயத்தைச் சொல்லி பழி தீர்த்துக் கொண்டாலொழிய அவனுக்கு மண்டை வெடித்துவிடும் போல் இருந்தது. போலீஸ் ஸ்டேஷனுக்கு ரிக்ஷாவில் சென்று அவன் இறங்கியபோதுதான் கோபாலன் வெளியே கிளம்பிக்கொண்டிருந்தார்.

'மிஸ்டர் கோபாலன், நான் பீரோ வாங்கிவிட்டேன்!' என்றான் சாம்பு. அதைக் கேட்டவுடனே கோபாலன் திகைத்துத் தடுமாறிப் போய் மன்னிப்பு கேட்பார் என்றுதான் அவன் எதிர்பார்த்தான். ஆனால், அது ஒன்றும் ஏற்படவில்லை.

'ரொம்ப சந்தோஷம்!' என்றார் அவர் வெகுநிதானமாகவே.

'உங்கள் தயவில்லாமலேயே நடத்தி விட்டேன்!' என்றான் மேலும்.

'இதில் என் தயவென்ன?'

'ஆனால், என் தயவுமட்டும் உமக்கு வேண்டியிருக்கும்!' என்றான் வெகு திமிராகச் சாவியைச் சுழற்றிக்கொண்டே.

இந்த வார்த்தை கோபாலனைத் திகைக்க வைத்தது. சாம்பு இப்படிப் பேசினதே இல்லை.

'வேண்டுமானால், போய்ப் பார்த்துவிட்டு வாரும்!' என்றான். சாவியை மேஜைமேல் வைத்தான்.

'உமக்குத் திருப்தியானால் எனக்கும் சரிதான்!'

நான் சொல்கிறேன். 'இதுவே உம்ம காரியம் என்று இருந்தால் இப்படி அசிரத்தையாக இருப்பீரா? கேட்கிறேன்!' என்று கேட்டான் சாம்பு குரோதத்துடன்.

'இதென்ன! இன்று காலை உமக்கு உடம்பு சௌகரிய மில்லையா?'

'எனக்கு உடம்பு ஒன்றுமில்லை! உமக்குத்தான் ஒன்றும் புரியவில்லை! நேற்று ராத்திரி என்ன நடந்ததென்று யோசித்துப் பாரும்! பார்த்தேன். நான் போய்ச் சாவியைக் கொண்டு வந்து விட்டேன். எனக்கு நீர் சொல்லும்வரை காத்திருக்க வேண்டிய அவசியமில்லை, பாரும்!' சாம்பு கிளம்பினான்.

'இருங்கள், மிஸ்டர் சாம்பு!'

'அவசியமில்லை, நான் போகிறேன்!' - சாம்பு போய்விட்டான்.

இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு மேஜைமீது சாவியை அவன் வைத்துவிட்டுப் போனது கோபாலனுக்கு ஞாபகம் வந்தது. 'எதற்காக இந்த மனுஷன் இப்படி இரைச்சல் போடுகிறார்? நிஜமாகவேதான் கோபிக்கிறாரா? நேற்று இங்கே என்ன நடந்தது? ஒருகால் கேஸை இவரிடம் ஒப்பிக்கவில்லை என்ற காரணமோ?' என்று எண்ணி சிரித்துக் கொண்டார். 'சரி, போகிறார். நாம்தான் பீரோவைப் பார்த்து, அதற்கு விலை பேசி, இரண்டு கான்ஸ்டபிள்களிடம் வீட்டுக்கு அனுப்பிவிட்டு, ஒரு விதமாகச் சமாதானப்படுத்தலாமே!' என்று எண்ணி, உடனேயே கிளம்பினார். அவர் நுழைந்தபோதுதான் கம்பெனி முதலாளியிடம் குமாஸ்தா சொல்லிக் கொண்டிருந்தான்.

கோபாலன் நுழைந்ததும், 'எங்கே அந்தப் பீரோ, சாம்பு பூட்டினது?' என்று கேட்டார்.

குமாஸ்தா சென்று காண்பிக்கவும், ஒரு கான்ஸ்டபிள் முன்னால் போய் அதைத் திறந்தவன், திடுக்கிட்டு, 'ஸார்! ஸார்!!' என்று கூச்சல் போட்டுவிட்டான். பத்தடி பின்னால் வந்த கோபாலனும் இன்னொரு ஜவானுங்கூடத் திகைத்துப் போனார்கள். ஏனென்றால், பீரோவுக்குள்ளிருந்து ஓர் ஆள் இறங்கினான்.

அவன் யார் என்று சொல்லாமலேயே கோபாலன் புரிந்து கொண்டார். அவன் கையில் தபாலில் வந்த பாக்கெட் ஒன்று இருந்தது.

'தம்பி! உன்னைச் சாம்பு போட்டுப் பூட்டிவிட்டாரா? வேடிக்கை மனுஷன் ஸார், அவர்! என்னண்டை வந்து நிஜமாச் சண்டை போடறாப்பிலே போட்டு, சாவியையும் கொடுத்துட்டுப் போயிருக்கார், பாருங்கோ!' என்றார் கோபாலன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒருவர் அவசரமாக நுழைந்தார். 'ஸார்! பீரோக்களைப் பார்க்கலாமா!' என்றார் அவர். கோபாலன் நிற்பதைக் கண்டதும், திடுக்கிட்டுத் திரும்பிச் செல்லப் பார்த்த போது, பீரோவிலிருந்து வெளிப்பட்ட மனிதன், 'இவனையும் விடாதீங்க! இவன் பேச்சைக் கேட்டுக் கெட்டவன்தான் நான்!' என்றான் அவசரமாக.

'காட்டு மிருகங்களை அடைக்கிறாப்பலே கூண்டிலேன்னா அடைச்சுட்டார் இவனை!' என்றார் கோபாலன்.

'ஐயோ! அவரு காலை ஏழு மணியிலேர்ந்து வெளியே உலாத்தி இங்கேயே வட்டமிட்டிருந்தாரே! சாவி ஓட்டை வழியாப் பார்த்து அப்பவே தெரிஞ்சிக்கிட்டேன்!' என்றான் கைதியானவன்.

'நேற்று ராத்திரி உனக்கு இங்கே ஸோபாவிலே படுக்கை; இன்னி ராத்திரி ஜெயிலிலேயே கோரைப்பாயிலே உனக்குப் படுக்கை!' என்றான் ஒரு கான்ஸ்டபிள்.

சாம்பு வீட்டுக்குத் திரும்பினான். நேரம் செல்லச் செல்லக் கோபாலனுடன் தான் அதிகம் பேசிவிட்டதாக உணர்ந்தான். 'போலீஸ்காரர் விரோதம் அபாயம்!' என்று பயம் அப்போதுதான் அவனுக்கு வந்தது. அன்று தபாலில் வேம்புவிடமிருந்து வந்த கடிதத்தில், 'பீரோ இப்போது அவசரமில்லை என்று அப்பா சொல்கிறார். தவிர, ஸ்டீல் ஷெல்ப் வாங்கினால் இன்னும் சிலாக்கியம் என்று அபிப்பிராயப்படுகிறார். ஆகையால், அவசரப்பட்டு நீங்கள் பாட்டுக்குக் குப்பை ஒன்றையும் வாங்கிச் சேர்க்க வேண்டாம்' என்று கண்டிப்பாக எழுதியிருந்தான்.

என்ன அவசர புத்தி! என்ன காரியம் செய்து விட்டான்?

கோபாலனை டெலிபோனில் கூப்பிட்டான் சாம்பு. 'பீரோவைப் பார்த்தீர்களா?' என்று நயிச்சியமாகவே ஆரம்பித்தான்.

'பார்த்தேன். விஷயம் நீங்கள் சொல்லவே இல்லையே! திறந்து பார்த்தாலல்லவா தெரிகிறது!' என்றார் கோபாலன் வெகு சகஜமாக.

'பீரோகூட தேவையில்லை!'

'அதுதான் தெரிந்துவிட்டதே! நீங்கள் சாவியை என்னிடம் வைத்துவிட்டுப் போனதிலிருந்தே! எப்படி ஸார் திருடன் வைரப் பாக்கெட்டுடன் அந்தப் பீரோவில் இருந்தான் என்று உங்களுக்குத் தெரிந்தது?'

கோபாலன் காதில் டெலிஃபோன்மூலம் சில விசித்திர சத்தங்கள் கேட்டன. அவைகள் என்ன என்று அவருக்குப் புரியவில்லை. அவர் நேரில் பார்த்திருந்தாரானால், சாம்புவின் குட்டு ஒருகால் உடைபட்டிருந்தாலும் பட்டிருக்கும்.

'மிஸ்டர் சாம்பு! கொஞ்ச நாளாகவே என் டிபார்ட்மெண்டில் சிலருக்கு என்பேரில் கோபம். அதாவது நான் உங்களை மிகவும்

போற்றிக்கொண்டு, தங்களுக்கெல்லாம் சரியான சந்தர்ப்பம் அளிக்கவில்லையாம்! அதற்காக வேண்டுமென்றே நேற்றெல்லாம் இவர்கள் எதிரில் உம்மிடம் நான் ஒரு மாதிரி நடந்து கொண்டேன். இப்போது அவர்களே பார்த்துக்கொள்ளட்டும். நீங்கள் திருடனைக் கூண்டில் அடைத்துக் கையில் கொடுத்து, காதுங் காதும் வைத்தாற்போல் நடத்திவிட்டீர்கள்! இன்னும் தர்மராஜைக் காணவில்லை!' என்றார் கோபாலன்.

அந்தச் சமயம் தர்மராஜ், ஹரிசந்திடம் சொல்லிக் கொண்டிருந்தார்: 'நாகநாதன் யோக்கியன்தான். என்றாலும், அவன் மைத்துனன் பெரிய நஷ்டமடைந்து ஆபத்தில் சிக்கிக்கொண்டு விட்டான். அவனைக் காப்பாற்றத்தான் இந்தத் திருட்டில் இறங்கினான். ஓர் ஆளைக் கம்பெனியில் மறைத்து வைத்து, அவனை வைரப் பாக்கெட்டுடன் அடுத்த ஏலக் கம்பெனியில் இறக்கி பீரோவில் ஒளிந்துகொள்ளச் சொல்லியிருக்கிறான். இன்று பீரோ வாங்குகிறார்போல் வந்து அவனைத் தப்ப வைத்திருப்பான். இந்தத் தகவல்களைக் கண்டுபிடிக்கத்தான் இன்று பூராவும் அலைந்தேன். விஷயங்களைச் சேகரித்துக்கொண்டு இங்கே வந்து வெண்டிலேட்டர் வழியாகப் பார்த்தபோது, புதிய கால் சுவடு அடுத்த வீட்டு பீரோவின் மேல் தெரிந்தது!' என்று முடித்தார்.

'எல்லாம் சரிதானுங்க. இதெல்லாம் சுத்து வழி!' என்றார் ஹரிசந்த் லால்.

'இருக்கலாம். இந்த வழியிலும் கடைசியில் திருடன் அகப்பட வேண்டியவன்தானே?'

'திருடன் அகப்படுவான்; இல்லைன்னு சொல்லலே! குறுக்கு வழியிலே சாம்பு பிடித்திருக்கிறதுக்கும் இதுக்கும் வித்தியாசம் இல்லீங்களா? அதைத்தான் சொன்னேன்!' என்றார் ஹரிசந்த் லால்.

29

இஷ்டம் போல் பிரயாணம்

வாழ்க்கையே வெறுத்துவிட்டது சாம்புவுக்கு. வேம்பு இல்லாத உலகம் வியர்த்தம் என்று அவன் நினைக்கலானான். காலையில் அவள் காபியை ஆற்றி ஆற்றிக் கொடுக்கிற ஆனந்தம் என்ன, நாற்காலிக்குப் பின்னால் நிற்கும் அழகென்ன, கூப்பிட்ட குரலுக்கு ஓடிவரும் தன்மையென்ன, ஒவ்வொன்றுக்கும் ஒரு சிரிப்புச் சிரித்துச் சமத்காரமாகப் பதில் சொல்லும் திறமைதானென்ன! சை! இப்போது வாழ்வதும் ஒரு வாழ்க்கையா? வேம்பு வருவதற்கு முன்பு இருந்ததும் ஒரு ஜன்மமா? இரண்டும் இல்லை!

அவள்தான் என்ன! குழந்தை பிறந்து மாதம் மூன்றாகியும், வருகிறேன் என்று ஒரு வார்த்தை எழுத வேண்டாம்? கிடையாது! உடனே புறப்பட்டு வா. தவறினால் இங்கே நீ வரவேண்டியதே இல்லை. நான் ஒருத்தன் இருப்பதாகக் கூட நீ மறந்துவிடலாம்!' என்று அவன் எழுதியிருந்தான். வேம்பு அதற்கு ஒன்றும் பயந்துவிடவில்லை. சாம்புவின் உருட்டல்கள் எல்லாம் உள உளாக்காட்டிக்குத்தான் என்று அவள் அறிவாள்.



நாலைந்து நாள் கழித்துச் சாவகாசமாக, 'உங்கள் கடுதாசி கிடைச்சது. உங்கள் ஒருத்தருக்குத்தான் கோபம் வரும் என்று காண்பித்துக் கொண்டிருக்கிறீர்கள்! இங்கே அம்மாவுக்கு உடம்பு சரியில்லை; துரும்பாகப் போயிருக்கிறாள். கூடமாட ஒத்தாசைக்கு ஒரு நாதி கிடையாது. நானும் குழந்தைக்காரி. வீடு கிடக்கிற கிடையில் உங்கள் கோபம் ஒண்ணுதான் பாக்கி என்று வருத்தப் பட்டுக் கொள்கிறார்கள். நல்ல துணையாகக் கிடைத்ததும் நான் வந்துவிடுகிறேன். ஒரு வாரம், பத்துநாளில் புறப்பட்டு வருகிறேன். அதுவரையில் கோபத்தை அடக்கிக்கொண்டு பொறுமையாக இருங்கோ!' என்று எழுதினாள்.

சாம்புவுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. 'உடனே வருகிறாயா, என்ன?' என்று பதில் போட்டான். இதற்கும் அங்கே அசைந்து கொடுத்ததாகத் தெரியவில்லை.

இன்னொரு பெரிய கவலை சாம்புவைச் சமீப காலமாகப் பிடித்துக்கொண்டிருந்தது. அது அவன் தொழிலைப் பற்றியது. இப்போதெல்லாம் துப்புத் துலக்குவதில் அவனுக்கு நம்பிக்கையோ அக்கறையோ போயே போய்விட்டது. ஏதோ நடக்கிறது. என்னவோ எல்லாரும் கொண்டாடுகிறார்கள், அதெல்லாம் பிறப்புரிமை என்று எண்ணிக்கொண்டு விட்டான். ஆனால், அவன் ஐயம் பெறப் பெறப் புதுப் புது எதிரிகள் அல்லவோ ஏற்பட்டுக் கொண்டிருந்தார்கள்?

நாளாக ஆக இந்தப் பயம் வளரத் தொடங்கியது. 'இனியும் ஏன் தொடர்ந்து எதிரிக் கூட்டத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டும்?' என்று நினைத்தான். இரவு வேளைகளில் ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டுத் திரும்பும்போது கூடப் பயந்துகொண்டுதான் அவன் வந்தான். எந்த மூலையில் எந்தத் திருடன் பழைய ஆத்திரத்தை வைத்துக்கொண்டு மேலே விழுந்து சித்ரவதை செய்யக் காத்திருக்கிறானோ என்று எண்ணும்போது அவன் மெய் சிலிர்த்தது. வீட்டுக் கதவைத் திறக்கும்போது, அறைக்குள் முன்னதாகவே யாராவது ஒளிந்துகொண்டிருந்து தாக்குவார் களோ என்று அஞ்சினான்.

கிட்டத்தட்ட ஒரு மாதமாகக் கோபாலனும் அவனை அதிகம் பார்க்க வரவில்லை. பெரிய கேஸ்களுக்கு மட்டுந்தான் சாம்புவைச் சிரமப்படுத்துவதென்று அவர் முடிவு செய்திருந் தார். ஒவ்வொரு நாளும் எங்கே கோபாலன் வந்துவிடுவாரோ

என்ற திகிலுடன்தான் சாம்பு எழுந்திருந்தான். இப்படியே அநேக மாக ஒரு மாதத்தை ராஜா போல் காலங் கழித்தாகிவிட்டபடி யால், அடுத்தபடி வரப் போகிறது பெரிய பெரிய கேஸாகத்தான் இருக்கும் என்று சாம்பு எதிர்பார்த்தான். வேம்பு வருவதற்குக் குறைந்த பக்ஷம் ஒருபத்துநாள் பிடிக்குமாகையால், யாரிடமும் சொல்லாமல் கிளம்பி ரயிலில் மனத்தில் தோன்றிய இடங் களுக்குச் சென்று, ஒரு சுற்று சுற்றிக் கொண்டு வரலாமென்று தீர்மானித்தான். அன்று மாலை ஒரு சிறு கைப்பெட்டியில் தன் சட்டை, துணிமணிகளை அடைத்துக் கொண்டான். கையோ டிருக்கட்டுமென்று மாறுவேஷத்திற்கான சில பொருள்களையும் எடுத்து வைத்துக் கொண்டான். மூன்று வருஷங்களுக்கு முன்பு துப்பறியும் தொழிலில் இறங்கிய ஆவேசத்தில் வாங்கியவை அவை. நாளதுவரை அவற்றை உபயோகித்துக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விட்டது. அன்று மாலை எழும்பூர் ஸ்டேஷனில் ரயிலேறினான். அப்போது அவனுக்கு எந்த ஊர் போகிறோமென்று ஒரு நிச்சயமுமில்லை.

'எங்கே போறீங்க?' என்று கேட்டார் அவன் பக்கத்தில் உட்கார்ந் திருந்த ஒருவர். சாம்பு சீக்கிரம் இறங்கினான் என்றால், காலை நீட்டிக்கொண்டு சௌகரியமாகப் படுக்கலாமென்பது அவர் ஆசை.

'மதுரை வரை போகிறேன்' என்றான் சாம்பு. அவன் கையில் திருச்சிக்குத்தான் டிக்கெட் இருந்தது. சும்மா சொல்லி வைத்தான்.

'ஏதானும் சொந்த அலுவலாகப் போறீங்களோ?'

'சொந்த அலுவல் ஒன்றுமில்லை.'

இந்தச் சமயம் சாம்புவுக்குப் பரிச்சயமான ஒரு சாஸ்திரிகள் வண்டிக்குள் இடமிருக்கிறதா என்று எட்டிப் பார்த்ததும், சாம்பு இருப்பதைக் கவனித்து, 'என்ன, சாம்பு! இங்கேயும் இடமில்லை போலிருக்கிறதே!' என்று கேட்டுவிட்டு மேலே நடந்தார்.

'சாம்பு!' என்ற பெயர் வண்டியில் மின்சார சக்தியைப் பாய்ச்சியது போன்ற ஓர் உணர்ச்சியை உண்டாக்கியது. அவ்வளவு பேரும் அவனையே நோக்க ஆரம்பித்தார்கள்.

'சாம்பு! சாம்பு!' என்று இருபது வாய்கள் உச்சரித்தன. விழி பிதுங்கிவிடுகிறாற்போல் பார்த்தார்கள் எல்லாரும். உயரப்

படுக்கை விரித்துக்கொண்டு படுத்திருந்த ஓர் ஆசாமி நிமிர்ந்து சாம்புவை வெறிக்கப் பார்த்தான். சாம்பு திரும்பப் பார்த்தான் அவனை.

'இப்போதும் கேஸ் விஷயமாத்தானே போறீங்க?' என்று விசாரித்தார் ஒருவர், பேப்பரை மடித்துப் படுக்கையில் வைத்துக் கொண்டு.

'ஆமாம்!' என்றான் சாம்பு. பொய்தான் அது.

'நினைத்தேன்! பெரிய கேஸ்தானோ?'

சாம்பு யோசித்தான். அதற்குள் கேள்வி கேட்டவரே, 'அதெல் லாம் ரகஸ்யமாயிருக்கும்! துப்பறிகிறவர்களைக் கேட்டால் இலகுவில் சொல்லிவிடுவார்களா? அதுவும் சொல்லத்தான் முடியுமா?' என்று தாமே பதில் சொல்லிக் கொண்டார்.

அப்புறம் அவனைச் சல்லடைக் கண்ணாகக் கேள்விகள் கேட்டுத் துளைத்தார்கள், ஒவ்வொருவரும். 'இந்த எக்ஸ்பிரஸ் வண்டி யிலே குற்றம் செய்தவன் எவனாவது வருவான்' என்று ஹேஷ்யம் விட்டார் ஓர் ஆசாமி. சாம்பு பதில் சொல்லாமல் இருக்கவே, 'பாருங்கள், பேசாமல் இருக்கிறார்! அதோ சிரிக் கிறார் - நான் சொன்னது சரியாய்ப் போச்சு! மிஸ்டர் சாம்பு, என் யோசனை சரி தானே?' என்று அவர், வரவர ஸ்வரத்தை ஏற்றிக்கொண்டுபோய்க் கடைசியில் தம் துடையில் முத்தாய்ப்பு வைத்துக் கொண்டார்.

இந்தத் தொல்லை தாங்க முடியாமல் போகவே, விழுப்புரம் ஸ்டேஷனில் சாம்பு இறங்கிக் கொண்டான். திருவண்ணா மலைக்குப் போய்த் தரிசனம் செய்துகொண்டு, அதே வண்டியில், மறுநாள் பிரயாணத்தைத் தொடர்ந்து நடத்துவது என்பது அவன் யோசனை. அந்த ஸ்டேஷனில் அந்தப் பெட்டியிலிருந்து இறங்கின பேர் இரண்டு பேர்தான். சாம்பு ஒருவன்; உயரப் படுக்கை விரித்துப் படுத்திருந்தவன் மற்றவன். இரண்டு பேரும் வெயிட்டிங் ரூமில் போய்த் தங்கினார்கள்.

விடியற்காலை வண்டியில் சாம்பு திருவண்ணாமலைக்கு ரயில் ஏறினான். சுமார் ஒன்பது மணிக்கு வண்டியிலிருந்து இறங்கிய போது, வெயிட்டிங் ரூமில் இருந்த அதே ஆசாமி முன்னால் செல்வதைப் பார்த்தான். சாம்புவுக்கு அச்சான்யமாக இருந்தது. அன்று பூராவும் திருவண்ணாமலையில் கழித்துவிட்டுத் திரும்ப

இரவு விழுப்புரம் வெயிட்டிங் ரூமுக்கே வந்த சாம்பு மறுபடி அந்த ஆசாமி கூடவே நுழைவதைப் பார்த்ததும் திடுக்கிட்டான். 'இவன் என்ன, என்னைப் பின்தொடருகிறானா? இன்னும் பொறுத்துப் பார்க்கலாம்!' என்று சாம்பு சிந்தித்தான்.

வேண்டுமென்றே சாம்பு ரயிலில் வேறொரு கம்பார்ட் மெண்டைப் பார்த்து ஏறினான். விடியற்காலை நான்கு மணிக்குத் திருச்சியில் இறங்கி யார் கண்ணிலும் காணாதபடி ஒதுங்கி நின்று விட்டு, ஸ்டேஷனுக்கு வெளியே வந்தான். அந்தப் பேர்வழி இல்லையென்று நிச்சயப்படுத்திக்கொண்டு ஒரு ஹோட்ட லுக்குச் சென்று தங்கினான். காலையில் மலைக்கோட்டை, திருவானைக் காவல், ஸ்ரீரங்கம் முதலிய இடங்களுக்கு விஸிட் செய்ய, புரோகிராம் போட்டுக்கொண்டு நல்ல தூக்கம் ஒன்று போட்டான்.

ஸ்நானத்தை முடித்துக்கொண்டு, சாப்பிட்டுவிட்டுக் கை அலம்ப வந்த இடத்தில், சாம்பு திடுக்கிட்டுப் போனான். பழைய பேர் வழி அவன்கூட அதே இடத்தில் கை அலம்பிக்கொண்டிருந்தான்! அதோடு நிறுத்திக்கொள்ளாமல் சாம்புவைப் பார்த்ததும் ஒரு புன்னகை செய்தான். கொஞ்சம் நஞ்சம் சாம்புவுக்கு இருந்த சந்தேகமும் இப்போது பறந்தது. இந்த ஆள் இப்படிப் பின் தொடர்வதில் ஏதோ மர்மம் இருக்க வேண்டும்!

எதையும் காண்பித்துக்கொள்ளாமல் சாம்பு, 'என்ன! எங்கே போகிறீர்கள்?' என்று கேட்டான்.

அவனும் தயங்காமல், 'ஸ்ரீரங்கத்தைப் பார்த்துக்கொண்டு, திருவானைக்காவல், கோட்டை இரண்டுக்கும் போவதாக உத்தேசம்!' என்றான். பிறகு, 'நீங்கள் எங்கேயோ?' என்று விசாரித்தான்.

'நான் கோட்டைக்கு முதலில் போகிறேன். அப்புறம் சௌகரியம் போல்தான். இந்த ஊரில் நான் குறைந்தது இரண்டு நாள் தங்கப் போகிறேன்!' என்று பதில் சொல்லிவிட்டு, மிகச் சாமர்த்தியமாக நடந்துகொண்டதாகச் சந்தோஷப்பட்டுக் கொண்டான் சாம்பு.

அஸ்தமிக்கும் வரை தலைமறைவாக இருந்துவிட்டு, சாம்பு ஒரு டாக்ஸியில் திருச்சி ஜங்ஷனுக்குச் சென்றான். திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் முண்டியடித்துக் கொண்டு ஏறி, ஒரு கதவோரத் தில் நின்றுகொண்டான். தன்னைப் பின்பற்றிய ஆசாமி இதை

எதிர்பார்த்திருக்கவே முடியாதென்பதில் அவனுக்குச் சந்தேக மில்லை; மடையன் திருவானைக்காவலிலோ கோட்டையிலோ சாம்புவைத் தேடி எந்தப் பாறாங்கல்லிலாவது தலையை முட்டிக் கொண்டிருப்பான்! அதை நினைத்தபோது அவனுக்குச் சிரிப்புக் கூட வந்தது.

மணியடித்து, ரயிலும் ஊதியது. வண்டி மெல்ல நகரவும் தொடங் கியது. அதிகமாக முகத்தை வெளிக்காட்டாமல் சாம்பு வெளியே பார்த்தவன். பார்க்கும்போதே அவன் முகம் பயங்கரமாக மாறியது. இதென்ன அபாயம்! அதே ஆள் அதோ தலைவிரி கோலமாக ஓடி வருகிறானே! ரயில் வேகமாக நகரத் தொடங்கி விட்டது! கூடவே அவனும் ஓடி வருகிறான். சாம்பு இருந்த பெட்டிக்கு இரண்டு பெட்டிகளுக்கு அப்பால் ஒன்றில் ஏறியும் விட்டான்!

ஸப்த நாடியும் ஒடுங்கிவிட்டது சாம்புவுக்கு. இனிமேலும் சந்தேகம் உண்டா? எப்படியோ வேவு பார்த்து, அவனும் போகுமிடமெல்லாம் கூடவே வருகிறான். ஆபத்து வெகு அருகாமையில் இருக்கிறது என்பதை நினைத்தபோது தலை சுழன்றது. இப்போது என்ன செய்யலாம்?

•

அதே சமயத்தில் இன்ஸ்பெக்டர் கோபாலனும் மன நிம்மதி இல்லாமல் தலை மயிரைப் பிரி பிரியாக இழுத்து விட்டுக் கொண்டு யோசனை செய்தார். பெரிய கேஸ் ஒன்று வரவிருக் கிறது. அதற்குத் தப்ப வேண்டும் என்று சாம்பு நினைத்தது என்னவோ சரியாகப் பலித்துவிட்டது. சாம்பு கிளம்பிய மறுநாள் பத்திரிகைகளில் கொட்டை எழுத்துகளில், 'ஐம்பதாயிரம் ரூபாய் களவு! காஷியரைக் காணோம்!' என்ற தலைப்புகள் தாங்கிய செய்திகள் வெளியாகிவந்தன. விவரமாக வெளிவந்த செய்தி ஒன்று. ம்ருத்யுஞ்ஜய பேங்க்' என்ற பிரபல வங்கியில் காஷியராக யிருந்த விசுவேசுவரன் என்பவர் திடீரென்று ஆபீஸுக்கு வராமையால் கணக்குகளைப் பரிசோதித்தபோது சுமார் 50,000 ரூபாய்கள் வரை குறைவாகத் தெரிந்தது. சமீப காலமாகவே விசுவேசுரன் வங்கிப் பணத்தைக் கையாடி வந்திருக்கிறார் என்பதுடன், முதல் நாள் முல்லைப் பட்டணம் ஜமீன்தார் கட்டிய டெபாஸிட் தொகை நாற்பதினாயிரம் ரூபாயையும் எடுத்துச் சென்றிருக்கிறாரென்பது வெளியாகிறது. குற்றவாளி இருக்கும்

இடத்தை உளவு சொல்பவர்களுக்கு ரூபாய் 2,000 வரை பரிசு அளிப்பதாகப் பேங்க் நிர்வாகஸ்தர்கள் அறிவிக்கிறார்கள்' என்று அறிவித்திருக்கிறது.

இன்ஸ்பெக்டர் கோபாலனை உடனே சாம்புவைப் பற்றித்தான் நினைத்தார். காஷியர் வெகு முன்னேற்பாடுகளுடன் ஓடியிருப்பதால், அவன் இலகுவில் கிடைப்பான் என்பதில் அவருக்கு நம்பிக்கை இல்லை. அதிக நாள் ஓட்டினாலும் அதற்குள் பணம் கரைந்துவிடும். சாம்புவைத் தேடிக்கொண்டு அவன் வீட்டுக்குப் போனார். கதவு பூட்டிக் கிடந்தது. 'சரி. வெளியே போயிருப்பான், அரை மணி கழித்து வந்துவிடுவான்!' என்று நினைத்து, ஒரு மணி சென்றபின் திரும்பினார். அப்போதும் கதவு பூட்டியிருந்தது. ஒரு காகிதத்தில் தாம் வந்த காரியத்தை எழுதி, சுவரில் போட்டு ஓட்டி ஜன்னல் வழியாக உள்ளே தள்ளினார். பிறகு ஸ்டேஷனுக்குத் திரும்பினார்.

போலீஸ் கண்காணிப்புகளும் ஜரூராக ஆரம்பமாயின. சாம்புவின்மீது அதிக நம்பிக்கையுடன் சென்ற கோபாலன் சிறிது ஏமாற்றம் அடைந்தார். ஏனென்றால், கடிதம் போட்டுவிட்டு வந்த மறுநாள் கூட சாம்பு வந்து பார்க்கவில்லை, ஏன்? ஒருகால் அவன் பார்க்கவே இல்லையோ? வெளியூருக்குப் போவதாக இருந்தால்கூட ஒரு வார்த்தை சொல்லிக்கொள்ளாமல் போக மாட்டானே!

•

சாம்புவும் இதே மாதிரிதான் வேதனையுடன் தவித்தான். 'கோபாலனிடம் சொல்லிவிட்டு வந்திருந்தோமென்றாலும் எங்கேயாவது செத்துக் கிடந்தால்கூடக் கவனித்துக்கொள்வாரே! என்று கவலைப்பட்டான். இப்பொழுது என்ன செய்யலாம்? மறுபடி எங்கேயாவது இறங்கி ஒரு நாள் தங்க வேண்டும்; மறுபடி அந்த ஆளுக்கு டிமிக்கி கொடுக்க வேண்டும்!'

•

விடியற்காலை திண்டுக்கல் ஸ்டேஷன் வந்தது. சாம்பு இருட்டோடு இருட்டாக இறங்கினான். சந்தடியின்றி, தலையில் முக்காடு போட்டுக்கொண்டு ஸ்டேஷனுக்கு வெளியே சென்றான். காலதாமதமின்றி வண்டியை வைத்துக்கொண்டு, ஒரு சத்திரத்துக்கு விடச் சொன்னான். ஹோட்டல்களில் சாதாரணமாக ஒருகால் அவனும் வந்தால் அவன் கண்ணில்பட

வேண்டாமென்பது சாம்புவின் முன் ஜாக்கிரதையான எண்ணம். சத்திரத்து அறை ஒன்றுக்கு அரை ரூபாய் வாடகை கொடுத்துவிட்டு சாம்பு வெளியில் தலைகாட்டாமல் பகல் பொழுது முழுதையும் உள்ளேயே கழித்தான். அஸ்தமிக்கும் வரையில் பொழுது போவது யம வேதனையாக இருந்தது. 'ஐயோ! இஷ்டம்போல் பிரயாணம் செய்து ஆனந்தப்படலாம் என்று வந்துவிட்டு இப்படிச் சிறைவாசம் அனுபவிக்கவேண்டி வந்ததே!' என்று ஏங்கித் தவித்தான். கடைசியில், எப்படியும் வெளியில் வந்து சிறிது உட்காரலாமென்று கதவிடுக்கின் வழியாகப் பார்த்தபோது, அவன் வயிற்றில் சொரேர் என்றது.

சத்திரத்து வாசல் திண்ணையில் சில சாக்கு மூட்டைகள் அடுக்கியிருந்தது, கதவிடுக்கில் பார்த்தபோது தெரிந்தது. முதலில் வெறும் மூட்டைகள்தான் தென்பட்டன. உற்றுக் கவனித்தபோது ஒரு கை இருப்பதும், தலையின் ஒரு பகுதி மெல்ல முன்நோக்கித் துருத்திக் கொள்வதும் அவன் கண்களுக்குப் புலப்பட்டன. அடுத்த நிமிஷம் சாம்புவின் கால்கள் தொய்ந்தன. பழைய பேர் வழிதான் வாசலில் ஒளிந்துகொண்டு உள்ளே பார்த்துக் கொண்டிருந்தான்.

வாசற்புறம் அசட்டுத் தைரியத்துடன் சாம்பு வந்தான். ஏதோ காரியம் இருப்பதுபோல் திரும்பிப் பார்க்காமல் சிறிது தூரம் சென்று, வேறு தெருவில் திரும்பி சத்திரத்தின் புழக்கடைப் பக்கத்தை வந்தடைந்தான். வெகுநேரம்வரை, தன்னை எதிரி பின் தொடரவில்லை என்று பார்த்து ஸ்திரப்படுத்திக்கொண்டு உள்ளே வந்து, கைப்பெட்டியுடன் மீண்டும் புழக்கடை வழியாகவே வெளியேறினான். பெட்டியில் சில சாமான்கள் குறைந்திருந்தன. மாறுவேஷத்துக்கான அவன் வைத்திருந்த பொருள்களைக் காணோம். அந்த ஆசாமிதான் களவாடி இருக்க வேண்டும். ஆனால், அது கூட அவனை அதிகம் கலக்கமடையச் செய்யவில்லை.

ரயில்வே ஸ்டேஷனில் அப்போதுதான் கிளம்பிக் கொண்டிருந்த ஒரு பாஸஞ்சர் வண்டியில் டிக்கெட் வாங்காமலேயே அவசரமாக ஏறிவிட்டான். அடுத்த ஸ்டேஷனில் ஒவ்வொரு வண்டியாகப் பார்த்து, அவன் எதிரி எதிலும் இல்லை என்று நிச்சயப்படுத்திக் கொண்டான். ஒரு வழியாகத் தொல்லை விட்டது. மேலும் தொல்லையை நீக்கி, எதிரி பின்பற்றாமல் செய்ய

வேறொரு வேலையும் செய்தான். சென்னையை விட்டு, கோபாலனின் பாதுகாப்பில்லாமல் இருப்பது அபாயம் என்று படவே, கொடைக்கானல் ரோட்டில் இறங்கி, எதிர்ப்புறம் செல்லும் எக்ஸ்பிரஸுக்கு மாறிக் கொண்டான். உயர ஏறி, பலகையில் சௌக்கியமாகத் துண்டை விரித்துப் படுத்து நிம்மதியாகத் தூங்கினான் சாம்பு. மறுநாள் காலை பொழுது பொலபொலவென்று விடியும்போது மதராஸ் எழும்பூரை எக்ஸ்பிரஸ் வந்தடைந்தது. தலையை வெளியே நீட்டிய போது, ஸ்டேஷனுக்குக் கோபாலனே வந்து நின்றதைக் கண்டு ஆச்சரியப்பட்டுப் போனான்.

வண்டியிலிருந்து குதித்து, சாம்பு அவரிடம் ஓடினான். கையைப் பிடித்துக் குலுக்கிக் கொண்டிருக்கும்போதே, வெளி கேட் வழியாக அதே பழைய பேர்வழி வெளிச்செல்ல முண்டிக்கொண்டு இருப்பதைப் பார்த்துவிட்டான். கோபாலன் அருகில் இருந்ததைரியத்துடன்கூட ரோஷமும் பொத்துக்கொண்டு வர, 'இன்ஸ்பெக்டர் அதோ போகிறான்! நிறுத்துங்கள் அவனை! அவன் பெட்டியில் மீசை தாடியெல்லாம் இருக்கிறது!' என்றான். அவன் வாய்கூடக் குழறியது.

கோபாலன் கேட்டுக்கொண்டு நிற்கவில்லை. இரண்டு தாவலில் போய் அவன் பிடரியைப்பற்றி இழுத்து நிறுத்தினார். சாம்புவிடம், 'இவனை நான் கவனித்துக் கொள்கிறேன். நீர் போய் உங்கள் சம்சாரத்தை இறக்கி, வெளியில் டாக்ஸியில் கொண்டு ஏற்றுங்கள்!' என்றார்.

சாம்பு பார்த்தபோது, வேம்பு ஒரு வண்டியிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தாள். கூட அவளுடைய தாயார் கையில் ஒரு சிறு மூட்டையுடன் கீழே நின்றுகொண்டிருந்தாள். வேம்பு எழுதியிருந்தபடி அவள் ஒன்றும் துரும்பாக இல்லை! இவர்கள் எங்கே அதற்குள் வந்தார்கள்? 'ஏன், தந்தி கிடைத்ததா?' என்று கேட்டாள் வேம்பு.

'ஏது தந்தி?' என்று விழித்தான் சாம்பு.

'அதுதான், நாங்கள் புறப்படுவதாக நேற்று அடித்தோமே!'

'நானே இந்த வண்டியில்தானே வந்து இறங்குகிறேன்!' என்று சாம்பு மூக்கைத் தடவிவிட்டுக் கொண்டான். பிறகு நாற்புறமும் பார்த்து, பேந்தப் பேந்த விழித்தான்.

பின்னால் நின்ற கான்ஸ்டபிள், 'ஐயா, கேஸ் விஷயமா வெளியூர் போயிருந்தாங்க. இப்பத்தான் வராங்க! இன்ஸ்பெக்டர்தான் உங்க தந்தியைப் பார்த்துட்டு, நேரே அவரே வந்துட்டாரு. வெளியே டாக்ஸி நிற்கிறது! வாங்க!' என்றான்.

வேம்பு பார்த்த பார்வையில் சாம்பு அங்கேயே இரண்டு துண்டாக விழாதது ஓர் ஆச்சரியந்தான். பின் தலையைத் தடவிவிட்டுக் கொண்டு, யாகசாலைக்குப் போகும் ஆடுபோல் வேம்புவை மௌனமாகப் பின்தொடர்ந்தான்.

வீட்டுக்குப் போனபோதுதான் ஜன்னல் வழியாகக் கோபாலன் போட்டிருந்த காகிதத்தை அவன் முதல் தடவையாகப் பார்த்தான். டெலிஃபோன் மணியும் அடித்தது.

மிஸ்டர் சாம்பு! இந்த ஆளைக் கொன்னுட்டீர், போம்!' என்றார் கோபாலன் உத்ஸாகமாக.

'நானா கொன்னேன்? அவன் அல்லவா கொன்னுட்டான் என்னை!' என்றான் சாம்பு.

கோபாலன் உரத்துச் சிரிக்கும் சத்தம் கேட்டது 'இந்த ஆள் பேங்க்ப் பணத்தோடு ரயில் ஏறும்போது நீரும் கூடவே அதே வண்டியில் ஏறிவிட்டீராமே! என் கடுதாசியைக்கூட முந்திக் கொண்டு விட்டீர். விழுப்புரம், திருவண்ணாமலை, மறுபடி விழுப்புரம், திருச்சி, திண்டுக்கல் என்று அவன் போகுமிடமெல்லாம் ஓர் இடம் விடாமல் துரத்தியடித்து, அவன் திணறிப் போய் பட்டணத்துக்கே உமக்குத் தெரியாமல் திரும்பினால் அங்கேயும் எமன் மாதிரி பின்னாலே வந்து விட்டீராம்! உம்ம பேரைச் சொன்னால் கதறுகிறான் ஒய், அவன்!'

'அவன் பெட்டியில் மீசை தாடி செட் இருந்ததா?' என்று கேட்டான் சாம்பு. வேறு என்ன பேசுவதென்று அப்போது அவனுக்குத் தெரியவில்லை. 'நம்மை ஓர் ஆள் துரத்துவதாக எண்ணிக்கொண்டு உதறியடித்துக்கொண்டு ஊருக்கு ஊர் நாம் ஓடிக்கொண்டிருந்தபோது, அந்த ஆசாமி துரத்தப்படுவதாக எண்ணிக்கொண்டால், யாரை என்ன சொல்வது?' என்று சாம்பு திகைத்துப் போனான். அதிர்ஷ்ட தேவதையின் விளையாட்டைத் தவிர இது வேறென்ன!

கோபாலன், 'எல்லா மாறுவேஷச் சாமானும் இருந்தன. அதை அவன் போட்டுக்கொள்ளலாமென்றுதான் போகும்போதே

கொண்டு போனானாம். உம்மை அடுத்தடுத்து நாலு இடத்தில் பார்த்த பிறகு, அதைப் போட்டுக் கொள்வதும் போட்டுக் கொள்ளாததும் ஒன்றுதான் என்று தோன்றிவிட்டதாம். அவன் பெட்டியில், கடைசியாக அவன் எடுத்த ஐம்பதினாயிரம் ரூபாயும் அப்படியே இருக்கிறது. முல்லைப் பட்டணம் ஜமீன்தார் அதிர்ஷ்டசாலிதான். நீங்கள் வரும்போது வெறுங்கையுடன் வரமாட்டீர்கள் என்று மட்டும் எனக்குத் தெரியும். ஆனால், அந்தக் காஷியரையும் முன்னால் தள்ளிக்கொண்டு வருவீர்கள் என்று மட்டும் எதிர்பார்க்கவில்லை, ஸார்! அதிருக்கட்டும். உம்ம பையன் எப்படி இருக்கிறான்?' என்று கேட்டார்.

சாம்புவுக்குச் சங்கோசம் சூழ்ந்து கொண்டது. 'இன்னும் சரியாகப் பார்க்கவில்லை!' என்றான்.

அப்போது வேம்புவே சின்னச் சாம்புவைக் கொண்டுவந்து அவன் முகத்துக்கு நேர் நீட்டவும், குழந்தை தன் பிஞ்சுக் காலால் சாம்புவின் மூக்கைப் பார்த்து விண்ணென்று ஒரு உதை விட்டது.

'நான் வருகிறேன். அரை மணியில் உங்கள் பயலுக்கு ஒரு பிரஸெண்ட் உள்பட!' என்றார் கோபாலன்.

அவர் கையால் சாம்புவின் குழந்தைக்குக் கிடைத்த முதல் பரிசு ஒரு தங்கப் பாலாடை!

'எல்லாம் சரிதான்! நம் டிரங்குப் பெட்டியிலிருந்த மீசை, தாடி வகையறாக்களை எடுத்தது யார்?' என்று சாம்பு யோசித்தான். அதற்கு பதில் அவனுக்குக் கிடைக்கவில்லை; கிடைப்பதற்கு வழி ஏதும் இருப்பதாகவும் தெரியவில்லை.

ஏனென்றால், சாம்பு திண்டுக்கல் சத்திரத்து அறையில் தூங்கிக் கொண்டிருந்தபோது, அந்தச் சத்திரித்துத் தர்மகர்த்தாவின் வாண்டுப்பயல் நுழைந்து, திறந்திருந்த பெட்டியைச் சோதனை போட்டு, அவைகளைக் கொண்டு போய்விட்டான். நாளைக்கும் அவைகளைத் தன் முகத்தில் ஒட்ட வைத்துக்கொண்டு, தன் சகாக்களுடன் அவன் திருடன் விளையாட்டு விளையாடிக் கொண்டிருக்கிறான்.

30

பச்சை வைரம்

வேம்பு வந்த பிறகு சாம்புவுக்கு வெளி அலுவல்கள் வெகுவாகக் குறையத் தொடங்கி விட்டன. வேம்புவுக்குச் சுசுருஷை செய்வது, குழந்தையைப் பார்த்துக் கொள்வது - இவைகளுக்கே பொழுது சரியாகப் போய் விட்டது. மேலும், அவன் கிளம்ப முடியாத படி பலர் அவனைப் பார்க்க வந்துகொண்டும் இருந்தார்கள். சாம்புவின் பிள்ளைக்குக் காணிக்கைகள் வந்து குவிந்தது போல் ஒரு நவாபின் பிள்ளைக்கு வந்திருக்குமா வென்பது சந்தேகந்தான்.

இப்போது சாம்புவின் வீட்டுக்கு இரட்டிப்பு ஜாக்கிரதை வேண்டியிருந்தது. சாம்புதான் பிள்ளை வேறு பந்தோபஸ்தாக இருக்க வேண்டுமே என்று உள்ளூறக் கவலைப்பட் டான். ஒரு நாய் வளர்க்கலாமென்றும் எண்ணி னான். பிரபலத் துப்பறிபவர்கள் நாய் வைத்திருக்கிறார்கள் என்று படித்திருக் கிறான். கோபாலனிடம் சொல்லியிருந்தால் அவர் முதல் தரமான ராஜபாளையம் நாயை இனாமாகவே கொண்டு தள்ளி இருப்பார். கோபாலனிடம் ஒன்று கேட்கப்போனால்,

அதைச் சாக்காக வைத்துக்கொண்டு அந்த மனுஷன் ஒரு கேஸையே கொண்டு வந்துவிட்டால் என்ன செய்வது? ஆகவே, வேறு ஒரு இடத்தில் சொல்லியிருந்தபடி ஒருவன் சாம்புவுக்கு நாய் ஒன்றைக் கொண்டு வந்துவிட்டான். அது பார்ப்பதற்கு லட்சணமாக இல்லை. கேவலம் வீதியில் திரியும் நாய்தான் அது. 'என்ன கொடுக்க வேண்டும்?' என்றான் சாம்பு. அதை வாங்க அவனுக்கு இஷ்டமே இல்லை. ஆனால் அதைக் கொண்டுவந்த முரடனிடம் வாக்குவாதம் செய்ய அஞ்சினான்.

'கொடுத்ததைக் கொடுங்கள்' என்றான் அவன்.

சாம்பு இரண்டு ரூபாயைக் கொடுத்ததும் அவன் பரமானந்தத்துடன் போய்ச் சேர்ந்தான். அவனுக்கு ஒரு சிரமமுமில்லை. 'ஒரு பேட்டையிலிருந்த தெரு நாயை இன்னொரு பேட்டையில் கொண்டுவிட்டு இரண்டு ரூபாய் சம்பாதிப்பதென்றால், இந்தத் தொழிலில் மாதம் 500 ரூபாய் சம்பாதிக்கலாமே!' என்று எண்ணிக்கொண்டான்.

நாய்க்கு நெய்யும் சாதமும் இரண்டு வேளையும் போட்டான் சாம்பு. வேம்பு அடித்துக் கொண்டாள். 'இந்தச் சொறி நாய் இந்த வீட்டுக்குள் வரப்படாது! என்றாள். உங்களுக்கு வர வர இந்த நாய்க்கு இருக்கிற புத்திகூட இல்லை' என்று ஏசினாள். சாம்புவுக்கு ரோஷம் பிறக்கவில்லை. 'இது சிங்கம்! என்றான் அவன். பார்த்துக் கொண்டே இரு. இங்கே நல்ல சாப்பாடு சாப்பிட்டு, இரண்டு மாதத்தில் இது எப்படி ஆகப் போகிறது!' என்று மார் தட்டிக்கொண்டான்.

அதை நல்ல வழிக்குக் கொண்டுவர, சாம்பு பாடுபட்டான். அவன் பாடுபட்டதெல்லாம் வியர்த்தமாகி வந்தது. நெய்ச் சாதம் பாதி சாப்பிட்டுக்கொண்டிருக்கும்; தொப்பென்று எங்கேயாவது எச்சில் இலை விழும் சத்தம் கேட்டதோ, அந்தச் சுவானம் தன்னை மறந்து நாலு கால் பாய்ச்சலில் கிளம்பிவிடும். எங்கேயாவது சமாராதனை என்றால், அதன் மூக்கில் வியர்த்தது. எப்படியோ ஊகித்துக்கொண்டு, அந்த வீட்டு வாசலில் போய்க் காத்திருக்கும்!

சாம்பு வெளியில் கிளம்பினால், நாயும் கூடவே பின் தொடரத் தொடங்கியது. இது சாம்புவுக்குக் கௌரவக் குறைவாகப் படவே, இரண்டொரு நாள் அதை நன்றாக உதைத்துத் தள்ளி விட்டுப் போனான். அப்புறமும் அது விடாமல் தெரு ஓரமாகச்

சற்றுப் பின்தங்கித் தொடரலாயிற்று. ஆகவே, சாம்பு கிளம்ப வேண்டுமென்றால், அதை ஏமாற்றிவிட்டுத்தான் புறப்பட வேண்டும். அது கொல்லையிலோ, புழக்கடையிலோ வேறு காரியமாக இருக்கும்போது சட்டென்று கிளம்புவான். இப்படியாகச் சாம்புவின் வாழ்க்கையில் ஒரு நாய் புகுந்து கொட்டமடிக்கும்போது, கோவிந்தராஜ பிள்ளை என்பவரும் எதிர்பாராத விதமாக நண்பரானார்.

ஒருநாள் ஹோட்டலில் இருவரும் சாப்பிட்டுவிட்டுக் கிளம்பிய போது, இந்தக் கோவிந்தராஜ பிள்ளை சாம்புவின் பின்னாலேயே வந்து, 'ஸார்! சோலையப்பன், முதலித் தெருவுக்கு வழி சொல்ல முடியுமா?' என்று கேட்டார்.

'வாருங்கள் என் பின்னாலேயே! நான் அதற்குப் பக்கத்துத் தெருவுக்குத்தான் போகிறேன்' என்றான் சாம்பு.

'ஓ அப்படியா? நான் இந்த ஊருக்குப் புதுசு, ஸார்!' என்றார் அவர் பேச்சுக் கொடுத்து.

சாம்பு பதில் சொல்லவில்லை. ஆனால் அந்தப் பேர்வழி, 'உங்களுக்குப் பக்கத்துத் தெருவென்றால், நம் ரூமுக்கு வாருங்கள் ஸார்! எனக்கும் பொழுது போக வேண்டும், பாருங்கள்!' என்றார். சாம்பு அந்த ஆசாமியை ஏற இறங்கப் பார்த்தான். சர்வ சாதாரணமாக இருந்தார் அவர். வழுக்கைத் தலை; சுமார் ஐம்பது வயது இருக்கும்; முகம் பரம சாத்துவிகமாக இருந்தது. சாம்புவின் முகத்தைப்போல் கொஞ்சம் அசடுகூட வழிந்தது. அந்த ஒற்றுமையினால்தானோ என்னவோ அவரை அவனுக்கு உடனே பிடித்துவிட்டது.

மறுநாள் சாம்பு அவர் அறைக்குப் போய்ப் பேசிவிட்டு வந்தான். அவருடைய பேச்சும் அவனுக்கு ரம்யமாயிருந்தது. பழங்கதைகளை அவர் சலிப்பின்றிச் சொன்னார்.

சாம்பு அவரைத் தன் வீட்டுக்கு அழைத்தான். கோவிந்தராஜ பிள்ளை ஒரு முறை வந்தவர், பிறகு அடிக்கடி வந்தார். இருவரும் ஓயாமல் பேசினார்கள்; சிநேகமும் வலுத்தது.

'போலீஸ் இலாகா இப்போது எவ்வளவு சக்தியுள்ளது தெரியுமா?' என்று கூறி, சாம்பு தனக்கு மிகவும் பரிச்சயமான விஷயம் அது என்று காட்டிக் கொள்ளுவான்.

'அதிருக்கட்டும், மிஸ்டர் சாம்பு. ஒரு முப்பது வருஷத்துக்கு முந்தி, இந்த ஊரிலே சுப்பராவ் என்று ஒரு ஸப் இன்ஸ்பெக்டர் இருந்தார்...' என்று பழங்கதை ஒன்றை ஆரம்பிப்பார் கோவிந்த ராஜ பிள்ளை.

சாம்பு பேச்சை மாற்றி, 'ஒரு வீடு கட்ட வேண்டும்!' என்று தொடங்குவான்.

'என்ன வீடு ஸார்! எல்லாமே வீடாகுமா? இந்தப் பேட்டையிலே முத்துக்குமார முதலியார்னு ஒரு மெர்ச்சண்ட் இருந்தார். வீடு கட்டினார், பாருங்கள்! அஸ்திவாரம் இருபத்துநாலு அடி தோண்டினார்; அதுன்னா வீடு!' என்பார்.

இப்படியாகச் சாம்பு எந்த விஷயத்தைப்பற்றிப் பேசினாலும் கோவிந்தராஜ பிள்ளை பழைய சமாசாரம் ஒன்றைப்பற்றி ஒரு கதை ஆரம்பிப்பார். சாம்பு இதை எப்படித்தான் சகித்தானோ? ஆனால், வேம்புவுக்குப் பொறுக்க முடியவில்லை. ஒருநாள் பொறுமையிழந்து, அவனை அதட்டி உள்ளே கூப்பிட்டாள்.

சாம்பு உள்ளே வந்ததும் அவள், 'நன்னாயிருக்கு காரியம்! உங்களுக்கும் இந்த வெட்டிப் பேச்சு வேண்டியிருக்கே!' பொழுது விடிஞ்சு ஒரு காரியம் ஆகலை! நன்னாப் பேசினேள்!' என்றாள்.

'நான் என்னடி பண்ணுவேன்! அவர் வந்துவிட்டார். எப்படிப் போகச் சொல்கிறது?' என்று சாம்பு கெஞ்சினான். 'நல்ல பயந்தாங்கொள்ளி; அசடு என்று கண்டுகொண்டான். பழங்கதையெல்லாம் சொல்லுகிறான். நீங்களும் கேட்டுக் கொண்டு...'

'அடி இரையாதேடி! அவர் காதில் விழப்போகிறது! நான் மெல்ல போகச் சொல்கிறேன்!' என்று கூறிவிட்டு, சாம்பு வந்தான்.

சாதாரணமாகக் காது படைத்த யாருக்கும் அந்த வீட்டுக்குள் சாம்பு தம்பதிகளுக்கிடையே நடந்த சம்பாஷணை கட்டாயம் காதில் விழுந்திருக்கும். ஆனால், கோவிந்தராஜ பிள்ளையின் காதில் எதுவும் விழுந்ததாகத் தெரியவில்லை. அவர் எங்கேயோ ஆகாயத்தைப் பார்த்து யோசனை செய்தவாறு இருந்தார்.

சாம்பு வந்தவுடன் அவர், 'மிஸ்டர் சாம்பு! இப்போதான் ஞாபகம் வருகிறது. பதினைந்து வருஷத்துக்கு முந்தி இதே வீட்டில் மல்லாரி ராவ் என்று ஒருவர் இருந்தார். அவர் பெரிய பைத்தியம்.

அதற்காக அவர் கல்லை கில்லை விட்டெறிந்து கொண்டிருக்க மாட்டார். அவர் சம்சாரம் அவரை ரொம்பப் படுத்தி வைச்சதனாலேதான் பைத்தியம் பிடித்ததாகச் சொல்லிக்கொள்கிறார்கள். எது உண்மையோ கடைசியில் அவர் இதே வீட்டில் செத்து வைத்தார்!' என்றார்.

சாம்பு அசட்டுச் சிரிப்பு சிரித்து, 'நான்கூட ஸ்நானம் செய்யப் போகணும்!' என்றான்.

'நீங்கள் போங்கள். நான் இப்படி உட்கார்ந்திருக்கிறேன். மெல்லப் போகிறேன்!' என்றார் பிள்ளை.

இப்படி விடாக்கண்டனாகச் சாம்புவுடன் கோவிந்தராஜ பிள்ளை ஒட்டிக்கொண்டார்.

'உங்கள் சிநேகிதனைப் பார்க்கலை, சிநேகிதனை! கண்டால் பத்திக்கிறது!' என்றாள் வேம்பு.

'நான் என்ன செய்வேன்? ஹோட்டலுக்குப் போனால்கூடப் பின்னால் வந்துவிடுகிறார்; சாப்பிட்டுவிட்டு முன்னால் விடுவிடென்று போய்விடுகிறார். இரண்டு பேருக்கும் நான்தான் பில் கொடுக்கவேண்டி வந்திருக்கிறது. டிராம், பஸ்ஸில்கூட என்னைத்தான் கொடுக்கச் சொல்கிறார்!'

'சரியான அசடு என்று தெரிந்துகொண்டு விட்டான்!' போங்கள்!'

'நீ என்ன வேண்டுமானாலும் சொல்லு. மனுஷன் ஒட்டுதலாயிருக்கிறான்; சொந்தத் தம்பிகூட அப்படி இருக்க மாட்டான்!' என்றான் சாம்பு.

'சொந்தத் தம்பியாகவே இருக்கட்டும். உங்கள் அப்பா சொத்தில் பாதி பிரித்துக் கொடுங்கள். ஆனால், குழந்தை அழுகிறதுகூடக் கவனிக்காமல் பேச வேண்டுமா? தூளியை ஆட்டிக் கொண்டாவது பேசிக்கொண்டிருங்கள். குழந்தையாவது தூங்கட்டும்!' என்றாள் வேம்பு.

அதுமுதல் சாம்புவுக்குத் தூளி ஆட்டும் வேலை கிடைத்தது! கோவிந்தராஜ பிள்ளை ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு, 'ஸார், பதினேழு வருஷத்துக்கு முன்னே கேளுங்கள்...' என்று பழங்கதை பேசுவார். சாம்பு அசடு வழியக் கேட்டுக்கொண்டிருப்பான். நாயும் நாற்காலி அடியில் சுருட்டிக் கொண்டு படுத்திருக்கும்.

இப்படி எத்தனையோ நாள்கள் சென்றன. எதிர்பாராதவிதமாக ஒருநாள் அதற்கும் முற்றுப்புள்ளி வந்தது.

சின்னவேலி ராஜா தமது அருமந்தப் பிள்ளைக்குக் கல்யாணம் செய்தார். பட்டணத்தில் ஒரு பெரிய விருந்துச் சாப்பாடு வைத்து, பெரிய மனிதர்கள், பிரமுகர்கள் பலரை அழைத்திருந்தார். சாம்புவுக்கும் ஓர் அழைப்பு வந்திருந்தது. அவன் அதைப் பெருமையாகச் சொல்லிக் கொண்டு, அழைப்பு டிக்கெட்டையும் கோவிந்தராஜ பிள்ளைக்குக் காட்டினான். பிள்ளை கண்ணை அகல விரித்து, 'மிஸ்டர் சாம்பு! நானும் அந்த டின்னர் பார்ட்டிக்கு வருகிறாற் போல் ஏற்பாடு செய்யுங்கள்!' என்று கேட்டார்.

சாம்பு பார்த்த அலட்சியப் பார்வை கோவிந்தராஜ பிள்ளை மறக்கக்கூடியதல்ல. 'நான் எவ்வளவு பெரிய துப்பறிபவன்! இவன் யார் பிஸாத் பேர்வழி! இவன் என்கூட ராஜா வீட்டு விருந்துக்கு வருகிறதாமே! பொழுது போக்குக்குப் பேசிக்கொண்டிருந்தால் நமக்குச் சமம் என்று நினைத்துக் கொண்டு விடுகிறானே! ஹூம்!' என்ற அர்த்தம் அதில் தொனித்தது. 'இந்த அசட்டு ஆசையை எல்லாம் விடும்!' என்றான் சாம்பு.

இரண்டு நாள்கள் சென்றன. டின்னர் அன்று மாலை தான். வெகு டாம்பீகமாகச் சாம்பு கிளம்பியபோது, கோட்டுப் பையில் பார்த்தால், அந்த டிக்கெட்டைக் காணோம்! கோவிந்தராஜ பிள்ளையிடம் அன்று கொடுத்ததைத் திருப்பி வாங்கிக்கொள்ளாதது ஞாபகம் வந்தது. சாம்பு ஓட்டமாகக் கோவிந்தராஜ பிள்ளை வீட்டுக்குப் போனான். அவர் இல்லை. 'அறையையே காலி செய்துகொண்டு போய்விட்டார். வாடகைப் பாக்கியையும் கொடுத்துத் தீர்த்து விட்டார். இனி வரப்போவதில்லை!' என்று வீட்டுக்காரன் சொன்னான். சாம்புவுக்கு ஆச்சரியமாக இருந்தது. 'என்ன மனுஷன்! இவ்வளவு அந்நியோந்நியமாகப் பழகிவிட்டுக் கடைசியில் ஒரு வார்த்தை சொல்லிக் கொள்ளாமல் போவதாவது!' என்று திகைத்தான். பிறகு, போய்த்தான் பார்க்கலாமென்று அங்கிருந்து கிளம்பினான்.

சாம்பு போய்ச் சேர்ந்தபோது பங்களா வாசலில் கோபாலனே நின்றுகொண்டிருந்தார். சாம்புவைக் கையைப் பிடித்து உபசாரம் செய்து மாடியில் கொண்டுவிட்டார். நேரே ஒரு மேஜையில் உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்து விட்டான் சாம்பு. ஜாஜ்வல்யமான வர்ண விளக்குகளிடையே நூற்றுக்கணக்கான மேஜைகளில்

விருந்தினர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். உள்ளே வேறு பலருக்குத் தாட் இலை போட்டுச் சாப்பாடு நடந்து கொண்டிருந்தது. தன் சாப்பாடு முடிந்த பிறகுதான் சாம்பு நிமிர்ந்தான்.

உள்ளே சாப்பிட்டவர்கள் கை அலம்ப வந்தார்கள். அவர்களிடையே கோவிந்தராஜ பிள்ளையும் இருந்தார் என்பதைச் சாம்பு கண்டான்!

பிள்ளை கையலம்பும் வரையில் எப்படித்தான் சாம்பு பொறுத்திருந்தானோ? போய் அவரைப் பிடித்துத் தனிமையில் இழுத்துச் சென்றான். பிறகு ஆத்திரத்தை வார்த்தைகள் மூலம் கொட்டி விட்டான். 'ஓய்! உம் அறையில் போய் விசாரித்து விட்டேன்!' என்றான்.

'என்ன விசாரித்தீர்?' என்றார் பிள்ளை.

சாம்பு சொன்னான்: அப்படிப் போகிறவர் என் டிக்கெட்டையும் தூக்கிக்கெண்டு வருவானேன்?''

'மேலே சொல்லும்!' என்றார் பிள்ளை. ஏனோ அவர் முகம் முன்னவ்வளவு அசடு வழியவில்லை!

'எத்தனை தரம் உமக்காக நான் ஹோட்டல்களில் பில் கொடுத்திருக்கிறேன்? பஸ்களிலும் டிராம்களிலும் சினிமாக்களிலும் டிக்கெட் வாங்கியிருக்கிறேன்? அவர்கள் ஒவ்வொருவரையும் கேட்டாலும் சொல்லுவார்களே!'

'ஆகையினாலே?'

'அதற்கு இப்படித்தான் செய்வதா? என் டிக்கெட்டையும் எடுத்துக்கொண்டு இங்கே வந்து சாப்பிட்டுவிட்டு, எனக்கும் தெரியாமல் ஊரைவிட்டே போகப்போகிறீரே! அதைத்தான் சொல்கிறேன்!'

கோவிந்தராஜ பிள்ளையின் முகம் சாந்த மயமாக இருந்தது. ஒரு புன்னகையுடன் சாம்பு முதுகில் தட்டினார். 'சாம்பு! எல்லாம் ஒரு காரணார்த்தமாகச் செய்தது. கேட்டால் ஆச்சரியப்படுவீர்!' என்றார்.

'என்ன காரணம், கேட்போம்!'

'பதறாமல் கேளும். இது ராஜாவின் பங்களா. இங்கே லட்சக் கணக்கான ரூபாய்க்கு நகைகள் இருக்கின்றன. அவைகளிலே

பச்சை வைரம் என்று பிரசித்தி பெற்ற வைரம் இந்த ராஜாவிடம் ஐந்து தலைமுறைகளாக இருக்கிறது. அதைப் பார்க்கத்தான் நான் வந்தேன்!' என்றார் பிள்ளை. அவர் முகத்தில் விஷமக்குறி தென்பட்டது. சாம்புவைப் பார்த்து ஏளனமாய்ப் புன்னகை ஒன்றும் அவர் செய்தார்.

'சரி சொல்லும்! என்னிடம் ஏதோ கட்டுக் கதை விடுகிறீர்.'

'கதை இல்லை. கேட்டுக்கொண்டு வாரும்! அதை இந்தத் தேசத்தை விட்டே கொண்டுபோக ஒருத்தர் காத்துக் கொண்டிருக்கிறார். இந்த ராஜா அதை என்ன கிரயம் கொடுத்தாலும் விற்க மாட்டேனென்கிறார். ஆகையால், அந்த ஒருத்தருக்கு அதைத் திருடுவதைத் தவிர வேறு வழி இல்லை. தெரிந்ததா?'

'ஹூம். கதை!'

'கேளும், மிஸ்டர் சாம்பு! துப்பறியும் சாம்பு! அதைத் திருடத்தான் அவர் என்னை நியமித்தார்! நான் அதற்காக உம்முடன் சிநேகம் செய்துகொண்டேன். மகா மூடனான உம்முடன் ரஸித்துப் பேசுகிறாற்போல் பாவனை செய்தேன். நீர் என்னை நம்பினீர். உம்மைப் போல் சர்வ முட்டாள் கிடையாதென்பதை நாலே நாளில் கண்டுகொண்டேன். முட்டாள் வேஷம் போடுகிறீரோ என்று சில சமயம் சந்தேகித்ததுண்டு! ஆனால், நீர் உண்மையான மடையன் தான் என்று இன்றைக்கு எங்கேயும் நான் சத்தியம் பண்ணுவேன்!'

'ஓய்! நீர்...'

'முழுக்கக் கேளும். உம் கூடவே வந்தேன். உம்மை எனக்காக ஒவ்வோர் இடத்தில் பணம் செலவு செய்யச் சொன்னேன். என்னைக் கவனித்தவர்கள் எல்லாரும் எனக்காகச் செலவு செய்யும் உங்களை அவ்வளவு ஆப்தர் என்றுதான் எண்ணிக் கொண்டிருப்பார்கள். உம் டிக்கெட்டை வைத்துக்கொண்டு, நீர் அனுப்பிய ஆசாமியாகவே வந்திருக்கிறேன் இங்கேயும். சற்று நேரத்திற்கெல்லாம் பச்சை வைரம் களவுபோன சமாசாரம் வெளியாகும் போது, என்மீது யாரும் சந்தேகப்பட மாட்டார்கள்! நான் உமது நண்பன், நீர் அனுப்பிய ஆள் அல்லவா?'

சாம்பு வாயடைத்துப் போனான். என்ன துணிச்சல்! நாவல்களில் இதை எழுதினால்கூட நம்ப மாட்டார்களே! கோவிந்தராஜ பிள்ளை மேலும் சொன்னார்:

'வைரம் வெளியே போய்விட்டது. நான் வேண்டுமென்றே இலையில் உட்கார்ந்து சாப்பிட்டேன். முதல் தரமான மைசூர்ப் பாகைச் சாப்பிடாமல் எறிந்தேன். அதில் ஓட்டை செய்து, அந்த வைரத்தை அதில் போட்டு மூடிவிட்டேன். இலை வாசலுக்குப் போய்ப் பதினைந்து நிமிஷமாகிறது. என் கூட்டாளி வாசலில் தோட்டிபோல் காத்திருந்து, இத்தனை நேரம் அந்த முழு மைசூர்ப்பாகை அடையாளமாகப் பொறுக்கிக்கொண்டு போயே போயிருப்பான்!'

'நான் உம்மை இப்போதே...' என்று குதித்தான் சாம்பு.

'யோசித்துச் செய்யும்! என்னைப் போலீஸ்காரரிடம் பிடித்துக் கொடுப்பதாகத்தானே சொல்கிறீர்! அதைவிட மடத்தனம் வேறில்லை. என்னை நீர்தான் இங்கே அனுப்பியிருக்கிறீர் என்பது ஞாபகம் இருக்கட்டும். இத்தனை நாளாக நண்பராகப் பழகினீர் என்பதும் நினைவிருக்கட்டும். என் கையில் வைரமும் இல்லை; உம்மால் ருசு ஒன்றும் செய்ய முடியாது. நீர் ஏமாந்தீர் என்பதைத் தவிர இப்போது ஆகிற காரியம் என்ன! அதை யோசித்துக் கொண்டிரும். நான் வருகிறேன்!'

கோவிந்தராஜ பிள்ளை யாருக்கோ சமிக்ஞை செய்தார். கிளிக்கென்ற சத்தம் கேட்டது. எல்லா எலெக்ட்ரிக் தீபங்களும் அணைந்து, ஒரு நிமிஷத்துக்குப் பின் மறுபடி எரிந்தன.

•

கோபாலன் வந்து பார்த்தபோது சாம்பு ஒரு மூலையில் மோவாய்க் கட்டையில் கை வைத்துக்கொண்டு சிந்தாக்கி ராந்தனாக நின்றான். கோவிந்தராஜ பிள்ளை மறைந்து விட்டார். இது சாம்பு எதிர்பார்த்ததுதான். ஆனால், அவரை அப்போது வெளியாக்கினால், யாருக்கு அவமானம்? அல்லது என்ன உபயோகம்? வைரமோ போய்விட்டது. சாம்புவுக்கு மனசாட்சி துன்புறுத்தியது. அவனே உடந்தையாயிருந்த களவு அல்லவா இது? 'கோபாலனை வீட்டுக்குத் தனிமையில் அழைத்துச் சென்று இரகசியமாக விஷயத்தைச் சொல்லி, வைரத்தைத் திரும்பப் பெற ஏற்பாடு செய்யச் சொல்வதுதான் ஒரே வழி!' என்று தீவிரமாக எண்ணினான்.

கோபாலன் வந்ததும் சாம்பு நிமிர்ந்து பார்த்தான். 'மிஸ்டர் சாம்பு! விஷயம் தெரியுமா?' என்று கோபாலன் கேட்டார்.

'தெரியும் பச்சை வைரம்' களவு போனதுதானே?'

கோபாலன் திடுக்கிட்டார். 'உமக்கெப்படி அதற்குள் தெரியும்?'

'அதைப் பிற்பாடு சொல்லுகிறேன். இங்கே நிற்பதில் உபயோக மில்லை, கோபாலன்! தயவு செய்து என் வீட்டுக்கு வருகிறீரா? ஓர் அவசரமான - அந்தரங்கமான விஷயம்!' என்றான் சாம்பு பரபரப்புடன்.

சில ஏற்பாடுகளை அவசரமாகச் செய்துகொண்டு, கோபாலன் கிளம்பி, சாம்பு பின்தொடர, வாசலில் ராஜாவின் பெரிய மோட்டாரில் ஏறினார். மோட்டார் புறப்படும் சமயம் உயர்ந்த உடுப்புகளும் ஜரிகை முண்டாசும் அணிந்த ஒருவரும் அவசரமாக ஏறி, சாம்புவின் பக்கத்தில் அமர்ந்தார். சாம்புவுக்குத் திக்கென்றது. கோபாலனைத் தனிமையில் அழைத்தால், இவனும் ஏன் வருகிறான்?

கோபாலன், 'மிஸ்டர் சாம்பு! இவர் ராஜாவின் குமாரர். வைரம் களவு போனதில் மிகவும் கலங்கி இருக்கிறார். இந்தக் குடும்பத்துக்கு அது ஒரு ரக்ஷமாதிரி இருந்தது. நாற்பதாயிரம், ஐம்பதாயிரம் செலவாகிறதென்றாலும் லட்சியமில்லை. அதைத் திரும்பக் கண்டுபிடிக்க வேண்டும் என்கிறார்!' என்று சொன்னார். சாம்புவின் நெஞ்சு மேலும் பதறிற்று.

ஐந்தாவது நிமிஷம் சாம்பு வீட்டு வாசலில் கார் சந்தடியின்றி நின்றது. உள்ளே வேம்புவின் குரல் அப்போது உரத்துக் கேட்டுக் கொண்டிருந்தது. அவரே வரட்டும், வந்து நேரே இதையெல் லாம் கண்ணால் பார்க்கட்டும்!' என்றாள் அவள். அடுத்த நிமிஷம், உதை வாங்கியது மூஞ்சியில் தெரிய, வெளியே சாம்பு வின் நாய் ஓடி வந்தது.

அறைக்குள் நுழைந்த சாம்பு, அங்கிருந்த அலங்கோலத்தைக் கண்டு திகைத்தான். மூன்று எச்சிற்கலைகள் தாறுமாறாகக் கிடந்தன. எங்கும் சோற்றுப் பருக்கைகள், முருங்கைக்காய்த் தான்கள். ஒரு முழு மைசூர்ப்பாகு மேஜைக்கடியில் கிடந்தது. அதை அவசரமாக எடுத்துப் பரபரப்புடன் விண்டான். உள்ளே இருந்தது வைரம்! அதைக் கோபாலன் கையில் கொடுத்து, 'இதுதானா பாருங்கள்!' என்றான்.

இளையராஜா பார்த்தார். அடுத்த கணம் சாம்புவை அவர் ஆலிங்கனம் செய்துகொண்டார். 'மும்பு தமிழ்ச் சங்கம்'

'என் நாய் செய்த வேலை, ஸார்!' என்றான் சாம்பு பெருமிதத்துடன்.

சாம்பு சென்றபோதே, எங்கோ நல்ல சாப்பாட்டுக்குப் போகிறான் அவன் என்று நாய் ஊகித்திருக்க வேண்டும். இப்படி எத்தனையோ விருந்துகளுக்குச் சாம்பு போனதுண்டு. அந்தச் சமயங்களில் நாயும் முண்டியடித்துக்கொண்டு போய் வந்ததுண்டு. ஆகவே, அது பங்களாவை அடைந்து, ஒரு குப்பைத் தொட்டி அருகில் காத்திருந்தது. அதன் ஹேஷ்யம் சரியாக இருந்தது. எச்சிற்கலைகள் மலைபோல் வந்து விழுந்தன. அவைகளைப் பொறுக்குவதில் சிங்கமாகிய சாம்புவின் நாய் பாய்ந்து, முழுப் பக்ஷணங்களுடன் விழுந்த மூன்று எச்சிற்கலைகளை ஒரே வாயாகக் கவ்விக்கொண்டு விட்டது. போட்டோ போட்டி மிகுந்த அந்த இடத்தில், இதர நாய்களுடன் வாக்குவாதம் வைத்துக்கொண்டு, யுத்தம் நடத்த அதற்கு இஷ்டமில்லை. வாயில் கவ்விய மூன்று இலைகளுடன் நேரே வீட்டை வந்து அடைந்தது.

தொந்தரவின்றி அவ்வளவு உயர்ந்த இராஜ போஜனத்தைச் சாப்பிடும் இடம் சாம்புவின் அறைதான் என்று அதன் புத்தியில் படவே, திறந்திருந்த கதவு வழியாக அங்கேயும் நுழைந்து விட்டது. ஆனால், வேம்பு இதைக் கவனித்துவிட்டாள். நாயை உதைத்து வெளியே தள்ளி, கதவையும் சாத்தியபோதுதான், சாம்புவும் நுழைந்தான்.

கதையை வளர்த்துவானேன்? எச்சிற்கலைகளைக் கிளறிக் கொண்டிருந்த ஓர் ஆசாமி சிறிது நேரத்தில் கைதியானான். அவன் மூலம் கோவிந்தராஜ பிள்ளை என்ற பெயரில் வந்திருந்த பக்காத் திருடன் தங்கவேலு கைதியானான்.

எவ்வளவுதான் அடித்து விரட்டினாலும் சாம்புவின் வீட்டை விட்டு அந்த நாய் போக மறுத்தது.

'நான் என்ன செய்வேன்? இதை விரட்ட நீதான் ஒரு வழி சொல்லு!' என்று வேம்புவைக் கேட்டான் சாம்பு.

அவள் கன்னத்தில் இடித்து, 'துப்பறிகிறவராம், துப்பறிகிறவர்! ஒரு எச்சிற்கலை நாயை விரட்டப் பொண்டாட்டி யுக்தி சொல்லித் தர வேண்டியிருக்கிறது! வேறே வீட்டுக்கு ஜாகை போய் விட்டால் போகிறது! ஆனால், நாய்க்குத் தெரியாமல்

போகணும். தெரிந்தால் அங்கேயும் இது வந்துவிடும்!' என்றாள் வேம்பு.

சாம்புவுக்கு வேறு வீடு தேடும் வேலையை இளைய ராஜா வைக்கவில்லை. சாம்புவுக்கு அவர் ஒரு பங்களாவே கட்டிக் கொடுத்துவிட்டார்.

சாம்பு பயந்து பயந்துதான் அதற்கு ஜாகை மாற்றினான். அந்த நாய் பார்த்துவிடாமல் இருக்க வேண்டுமென்பதுதான் அவன் பயம்!

31

பெங்களூர் விஜயம்

சாம்புவுக்குப் பொழுது போகவில்லை. திடீரென்று பட்டணத்தில் கேசு குறைந்து போய்விட்டது போன்ற உணர்ச்சி அவனுக்கு ஏற்பட்டது. அதுவும் இன்ஸ்பெக்டர் கோபாலன் மூன்று மாத ரஜாவில் பெங்களூருக்குப் போய்விட்ட பிறகு எல்லாமே வெறிச்சென்று தோன்றின.

வேம்புகூட இப்போதெல்லாம் முன்னைப் போல் இருக்கிறாளா? சதா சாம்புவின் மேஜையையும் நாற்காலியையும் வட்டமிட்டுக் கொண்டு நின்றவள், இப்போது குழந்தையின் தொட்டிலைச் சுற்றிக்கொண்டிருந்தாள்! எப்போதும் அதன் சுகுருஷைதான். 'இங்கே சட்டுனு வந்து பாருங்கோன்னா பாப்பாவை! உங்கள் மூக்கையே உரிச்சு வைச்சிருக்கு!' என்பாள். அவள் குறும்புப் பார்வையையும் கேலிப் புன்னகையையும் பார்க்கும்போது சாம்புவுக்கு மூக்குக்கு மேல் கோபம் வரும்.

எதற்காகவாவது அவசரமாக, 'அடி வேம்பு!' என்று குரல் கொடுப்பான்.

'எல்லாம் வரேன்; குழந்தைக்குப் பால் போட்டுண்டிருக்கேன்!' என்று இருந்த இடத்திலிருந்தே வேம்பு பதில் சொல்லுவாள்.

'எத்தனை தரம் பால் போட்டுக்கிறது அவனுக்கு! ஹ்ம்?'

பேசாமேதானே இருங்கோ! நீங்களெல்லாங்கூட அப்படிக் குடித்துக் குடித்து வளர்ந்த பேர்தான்!'

'வர வர நீ ரொம்ப அதிகப் பிரசங்கியாகப் போய்விட்டே, வேம்பு! உன்னால் எனக்கு ஓர் உபயோகமும் கிடையாது!' என்று முகத்தைக் காட்டுவான் சாம்பு.

குழந்தையும் தூக்கிக்கொண்டு வந்து நின்று, 'என்ன அப்படி ஒரு வார்த்தை சொல்றேள்! இந்தப் பாப்பாவின் மூஞ்சியைப் பார்த்துவிட்டு அதை மறுபடி சொல்லுங்கள்!' என்பாள் வேம்பு.

சாம்புவுக்கு இந்த மாதிரியான வாழ்க்கை பிடித்திருந்தது. ஒரொரு சமயங்களில் பொழுது போகாமல் இருந்தபோது கோபாலன் வரமாட்டாரா என்று எண்ணுவான். அதே சமயம், 'அவர் ஏதாவது புதுக் கேசுகளைக் கொண்டுவந்து கழுத்தை அறுக்காமல் இருக்கிறமட்டும் க்ஷேமந்தான்' என்று சமாதானமும் செய்து கொள்ளுவான்.

ஒரு நாள் பகல் பத்து மணி இருக்கும். சாம்பு சாப்பிட்டாகி விட்டது. சமையல் கட்டில் வேம்பு அப்போதுதான் இலையில் உட்கார்ந்தாள். கொட்டாவிகளை வருவித்துக் கொண்டு பொழுது போக்க வகை தெரியாமல் இருந்த சாம்புவின் காதில், தொட்டிலில் படுத்துக்கொண்டிருந்த குழந்தையின் அழுகுரல் கேட்டது. எழுந்திருப்போமா, வேண்டாமா என்று முடிவு செய்வதற்குள், 'ஏன்னா! உங்களைத்தானே! அங்கே என்ன பண்ணறேள்? தொட்டிலை ஆட்டுங்களேன் சித்தே!' என்றாள் வேம்பு.

'இது என்ன பெருந் தொந்தரை! பிறக்கிறபோதே சண்டித் தனமா?' என்று முணுமுணுத்துக்கொண்டே கூடத்துக்கு வந்தான் சாம்பு.

'குழந்தையை ஏன் கரிக்கறேள்? பெத்த பேர் குணம் போய் விடுமா?' என்றாள் வேம்பு இலையில் இருந்தபடியே.

'என்ன சொல்றே நீ இப்போ?'

'ஒண்ணும் சொல்லிடலே. குழந்தைக்கு ஏதானும் விளை யாட்டுக் காட்டுங்கோ; நிமிஷம் சாப்பிட்டுவிட்டு வந்து விடறேன். குழந்தைக்கு மேலே நீங்களும் படுத்தாதீங்கோ!' என்று வேம்பு அதட்டினாள்.

குழந்தைக்கு விளையாட்டுக் காட்டி அதைச் சாந்தப்படுத்தும் முயற்சியில் சாம்பு தீவிரமாக ஈடுபட்டான். தொட்டிலைச் சுற்றிப் பலமுறைகள் தத்தித் தத்தி ஓடினான். முகத்தை எத்தனையோ கோணங்கிகள் செய்து அதற்குச் சிரிப்பு மூட்டப் பார்த்தான். நூறு விதமாகப் பாய்ச்சுக் காட்டினான். ஒரு பழைய பத்திரிகைத் தாளைப் பந்துபோலச் சுருட்டி, அதைத் தூக்கிப்போட்டுப் பிடித்தான். பிறகு அதை இங்கும் அங்குமாக வீசி எறிந்து அதன் பின்னாலேயே தாவினான். குழந்தை தன் பொக்கை வாயைத் திறந்து திறந்து சிரித்தது; சாம்புவுக்கு உத்ஸாகம் வளர்ந்தது; பந்தை இன்னும் வேகமாக வீசினான். அது விர் என்று பறந்து போய் வேம்புவின் இலைக்கு இரண்டு அங்குலத்துக்கு அருகாமையில் விழுந்தது. 'நன்னாயிருக்கு அமர்க்களம்! பிள்ளை இல்லாத வீட்டில் கிழவன் துள்ளி விளையாடினானாம். எச்சிலில் விழுந்துடப் போகிறது!' என்றாள் அவள்.

சாம்பு மின்னல் வேகத்தில் அதைப் பொறுக்கிக்கொண்டு திரும்பி, 'நீ சும்மா இரு! பயல் சிரிக்கிறான்!' என்றான்.

'அதுக்கும் உங்கள் கோணங்கியெல்லாம் வேண்டித்தான் இருக்கு. கண்ணிலே மூக்கிலே பார்த்து அடிக்காமே இருங்கோ!' என்றாள் வேம்பு.

அவள் சொல்லி வாய் மூடுமுன் சாம்பு காகிதப் பந்தை வேகமாக வீசி விட்டான். அப்போதே மெல்ல வாசற்கதவைத் திறந்து கொண்டு கோபாலன் தலையை நீட்டினார். குறிபார்த்து அடித் தாற்போல் அந்தப் பந்து கோபாலனின் நெற்றியில் அடித்தது!

'என்ன ஓய்! வருகிறபோதே அடிக்கிறீர்?' என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தார் கோபாலன்.

அவரை அப்போது சற்றும் எதிர்பாராத சாம்பு துள்ளிக் குதித்தான். 'ஒண்ணுமில்லே! நம்ம பயல்...' என்று தடுமாற்றத்துடன் குழறத் தொடங்கினான்.

'எமகாதகராச்சே நீர்! நான் தொந்தரைப் படுத்த வருகிறேன் என்று தெரிந்துகொண்டே வேலை செய்கிறீரோ! சரி, டயம் அதிக

மில்லை. இரண்டு சட்டை வேஷ்டியை எடுத்துக்கொண்டு கிளம்பும். நாம் பெங்களூருக்குப் போக வேண்டும்!' என்றார்.

'பெங்களூரா? நானா?' என்றான் சாம்பு.

'ஆமாம், ஓய்! நீங்கள் இரண்டு மூன்று நாளாவது தங்கியிருந்து விட்டு வரலாம். முக்கியமாக ஒரு வேலையும் செய்ய வேண்டாம்! வழியிலேயே பேசிக்கொண்டு போகலாம். புறப்படும்!' என்றார் கோபாலன்.

சாம்புவுக்குப் பகீர் என்றது. எதையோ மனத்தில் வைத்துக் கொண்டுதான் கோபாலன் இப்படிக் கூப்பிடுகிறார் என்று சந்தேகப்பட்டு விட்டான். எப்படியாவது தட்டிக் கழிக்கும் உத்தேசத்துடன், 'இப்போ சௌகரியமில்லை, கோபாலன்! இன்னொரு சமயம்...' என்றான்.

'சரிதான், பிகு பண்ணிக்காதேயும்! இரண்டு மூன்று நாள் இருந்தால்போதும் என்கிறேனே! பெங்களூர் இப்போ வெகு சுகமாக இருக்கிறது, ஓய்! அதுவும் கனகசபைச் செட்டியார் பங்களா இந்திரலோகந்தான்!' என்றார்.

'இருக்கட்டும். இப்போ வேண்டாம்!'

'இதுதானே உம்மிடம் எனக்குப் பிடிக்கிறதில்லை!'

'பிடிக்காததை விட்டுவிடுங்கள், ஸார்!' என்று சொல்லி, சாம்பு காகிதப் பந்தைப் பொறுக்கப் போனான்.

கோபாலன் விடவில்லை. 'மணி பத்தேகால் ஆகிவிட்டது, சாம்பு! இன்னும் 20 நிமிஷத்திலே ரயிலில் இருக்க வேண்டும்!'

'மன்னித்து விடுங்கள், ஸார்! இங்கிருந்தே ஏதாவது செய்யச் சொல்லுங்கள், செய்கிறேன்!' என்றான்.

'என்ன விளையாட்டங்காணும்; நான் கூப்பிடுகிறேன் இரண்டு நாளைக்கு!'

'எனக்கு வருகிற சமயம் தெரியும், அப்போது அங்கே வருகிறேன்!' என்றான் சாம்பு.

'இதுதான் அந்தச் சமயம்! கனகசபைச் செட்டியார்னு கேள்விப் பட்டிருக்கிறீரா? அவருக்கு ஆப்பிரிக்காவிலிருந்து பத்து லட்ச

ரூபாய்க்குப் புதிதாக வைரம் ஸ்டாக் வியாபாரத்துக்கு வந்திருக்கிறது. கொஞ்சம் பயப்படுகிறார். ஏஜெண்டுகளிடம் விநியோகம் செய்யும்வரை இரண்டு மூன்றுநாள், அது அவர் பங்களாவில் இருக்க வேண்டும். அது மட்டும் நீர் வந்திருந்தால்போதும், அதுவே பந்தோபஸ்து என்கிறார் செட்டியார்.'

'அழகுதான்! அதிலே இரண்டு வைரத்தை வாயிலே போட்டுக்கச் சொல்லுங்கள்! அதுவும் பந்தோபஸ்துதான்!'

கோபாலன் எத்தனையோ முறை, சாம்பு முரட்டுப் பிடிவாதமாக இருந்து பார்த்திருக்கிறார். ஆனால், இதுவரை இவ்வளவு நேரம் அவன் வாதாடினதே இல்லை.

'எனக்காக வரப்படாதா?'

'எனக்காக வராமல் இருக்கப்படாதா?'

'சொல்கிறதைக் கேளும்!'

'சொல்றதையே சொல்லிக்கொண்டிருந்தால்...' சாம்பு பந்தாட ஆரம்பித்துவிட்டான். சாப்பாட்டை முடித்துக்கொண்டு அப்போது வேம்பு கூடத்துப் பக்கம் வந்தாள். அந்தச் சமயம் கோபாலன், 'நேரமாகிறது, ஓய்! முடிவாகச் சொல்லிவிடும்! உம்மை எப்படியாவது அழைத்து வருவதாகச் சொல்லிவிட்டு வந்தேன். வெறுமனே தங்கிவிட்டு வந்தீரானால், உம்ம பயலுக்கு ஒரு வைரமாலையே பண்ணிப் போடுவார் செட்டியார்! உமக்கும் நல்ல மதிப்பு!' என்று சொல்லிக்கொண்டிருந்தார்.

'என் பிள்ளைக்கு மாலையும் வேண்டாம்; எனக்கு மதிப்பும் வேண்டாம்! மிஸ்டர் கோபாலன், நீங்கள் நம்மாத்திலே இரண்டு நாளாவது தங்காமல் போகப் படாது!' என்றான் சாம்பு.

'சரி! நான் போகிறேன். நீர் வருகிறதாயிருந்தால் ஸ்டேஷனுக்குச் செட்டியார் கார் அனுப்புவார். வண்டி நெம்பர் 38883. எப்போ வந்தாலும் சரி!' என்று கோபாலன் எழுந்தார்.

'ஒரு போதும் நான் வரவில்லை. நீங்கள்தான் இங்கே சீக்கிரம் வந்து சேருங்கள்!' என்றான் சாம்பு.

•

கோபாலன் ஏமாற்றத்துடன்தான் போனார் என்பதில் சந்தேகமில்லை. சாம்பு நிச்சயம் வரமாட்டான் என்று அவருக்குத்

தோன்றிவிடவேதான் அவ்வளவோடு நிறுத்திக்கொண்டார் அவர்.

சாம்புவை மட்டும் மனத்தில் வைத்து முடிவு செய்திருந்தாரானால் அந்தத் தீர்மானம் சரியானதுதான். ஆனால் வேம்புவின் காதில் இது பட்டதுதான் வேறுவிதமான முடிவுக்குக் காரணமாயிற்று. கோபாலன் போனதுமே வேம்பு புடைவைத் தலைப்பால் மோவாய்க் கட்டையைத் துடைத்துக்கொண்டு சாம்புவின் பக்கத்தில் வந்து நின்று, 'என்னவாம் பெங்களூரிலே?' என்று கேட்டாள்.

'உன் மாமனார் வந்திருக்கிறாராம்!' என்று சீறினான் சாம்பு.

'இல்லை! அவ்வளவு பெரிய மனுஷன் வந்து கூப்பிடுகிற போது...'

'நீ பேசாமே போ! உனக்கொன்றும் தெரியாது!'

'நீங்கள் பேசினதெல்லாம் தெரிஞ்சு பேசினதாகத்தான் நினைவாக்கும்!'

'என்ன நீ! இவன் நைஸாகப் பேசி என்னை எதிலாவது மாட்டிவிட்டுவிட்டு நகர்ந்துகொள்வான். இவனாலே முடியாத காரியமாக இருக்கக் கொண்டுதானே என்னண்டை வரான்?'

'என்ன காரியம் அது?'

'என்னவோ? அதை முழுக்கச் சொல்கிறானா அவன்?'

'ஒன்றுமே இருக்காது! பழைய சிநேகிதர் என்று கூப்பிட வந்திருப்பார். உடனே நீங்கள் பயந்து நடுங்கி, மையல்கட்டை விட்டு நகரமாட்டேன்னு சொல்லி...'

'உனக்கென்ன இதைப்பற்றி?'

'எனக்கென்னவா! குழந்தைக்கு ஏதோ வைரஸெட்டாகப் பண்ணிக் கொடுத்துவிடுவார் என்று சொன்னாரே என்றுதான் கேட்டேன்!'

'போய்விட்டுத்தான் வாருங்களேன்!' என்று ஆரம்பித்தாள்.

'எங்கே?'

'நான் நாசமாய்ப் போகலையா! பெங்களூருக்குத்தான்!'

'எதற்காகப் பெங்களூருக்கு?'

'குழந்தை வைரஸெட் ஒன்று கொண்டுவரத்தான்!'

'தரித்திரம், தரித்திரம்!'

'யார் தரித்திரம்? கொண்டுவருகிற பேரா, வராத பேரா?'

'அவன் கொடுக்கப் போகிறானென்று என்ன நிச்சயம்?'

'நீங்கள் போகாமல் இருந்தால் கொடுக்கப் போகிறதில்லை என்பதுமட்டும் நிச்சயந்தானே!'

'வாயை மூடிக் கொள்!'

'ஏன், வேம்பு இப்போ அவ்வளவு கசக்கிறாளோ?'

மேலும் ஒரு நாள் சென்றது. வேம்பு மூன்றாம் முறையும் அதே பேச்சை எடுத்தபோது சாம்புவினால் சகிக்க முடியவில்லை. 'நான் போகிறேன், போகிறேன், போகிறேன், போயே போயிடறேன்!' என்று வாய்விட்டுக் கத்தினான்.

'உங்கள் பிள்ளைக்கு இந்தப் பழக்கம் வந்துவிடப் படாதே என்று இப்பவே எனக்குக் கவலையாக இருக்கிறது!' என்றாள் வேம்பு.

•

இந்தக் காலத்தில் ரயில் பிரயாணம் செய்வதன் சுகத்தை அறிந்தவர்கள், சாம்பு பெங்களூர் எக்ஸ்பிரஸில் பட்ட அவஸ்தையைப் பற்றி ஆச்சரியப்பட்டிருக்க முடியாது. முதலில் அவன், ரயிலில் ஸூட்கேஸை உள்ளே தள்ளிவிட்டான். அப்புறம் மெல்லத் தொற்றிக்கொண்டு, அங்குலம் அங்குலமாக முன்னேறினான். அரக்கோணம் வரும்வரையில் ஒற்றைக்காலில் நின்றவன், காட்பாடிக்குப் பிறகு இரண்டு காலில் நிற்க முடிந்தது.

மாலை ஏழு மணிக்குப் பெங்களூரை நெருங்கிக் கொண்டிருந்த சமயம், வண்டியில் உட்கார வசதி சிறிது கிடைத்தது. ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்டு, பெட்டியிலிருந்து ஒரு சவுக்கத்தை எடுத்து முகத்தைத் துடைத்துக்கொள்ளும் நோக்கத்துடன் சாம்பு அதை மெதுவாகத் திறந்து, கையை உள்ளேவிட்டுத்

துழாவினான். கையில் புதிய வஸ்துகள் தட்டுப்பட்டன. அவன் ஸப்த நாடியும் ஒடுங்கிவிட்டது.

அவன் கொண்டுவந்திருந்த பண்டங்களுக்குப் பதிலாக, பெட்டி நிரம்பச் செங்கல் துண்டுகள் இருந்தன! யார் வைத்திருப்பார்கள் இதை? எப்போது வைத்திருப்பார்கள் இதை? பெட்டியைப் பார்த்தாலோ அவனுடைய பெட்டி போலவே இருந்தது.

இம்மாதிரி திருடர்கள் பெட்டி மாற்றுவதைப்பற்றி சாம்பு கதைப் புத்தகங்களில்தான் படித்திருந்தான். இது அவனுக்கே நேர்ந்து விட்டதென்பது மிக அவமானமாக இருந்தது. பக்கத்தில் யாரிட மாவது கேட்போமென்றாலும் கேலிக்கிடமாகவல்லவோ போய் விடும்? அதுவும் சாம்பு - கேவலம் ஓர் அற்பத் திருடனிடம் தன் அஜாக்கிரதை காரணமாகப் பெட்டியைப் பறிகொடுத்துவிட்டுச் செங்கற்களை வாங்கிக்கொண்டான் என்றால் அதைவிட வெட்கக்கேடான விஷயமும் உண்டா?

மோவாய்க் கட்டையை ஒருமுறை வழித்துவிட்டு, சாம்பு மூக்கைப் பிடித்து இழுத்துக்கொண்டான். யோசனை செய்து பார்த்ததில், அவன் அப்போது செய்யக்கூடியது - பெங்களூரில் இறங்கி, செட்டியார் கார் அனுப்பியிருந்தால் அதில் ஏறிக் கொண்டுபோய்க் கோபாலனைப் பார்ப்பதுதான். பிறகுதான் மேற்கொண்டு நடக்க வேண்டியவைகளை யோசிக்க வேண்டும். பெட்டியை மூடிக்கொண்டு உட்கார்ந்தவன் அதே கவலையாகக் குன்றிப்போய், பெங்களூர் எப்போது வருமென்று துடிதுடிப் புடன் காத்திருந்தான்.

ஸ்டேஷனுக்கு வெளியே வந்தான் சாம்பு. குறுக்கும் நெடுக்கும் ஜனங்கள் நடப்பதும் பேசுவதுமாக ஒரே அமர்க்களமாக இருந்தது. ரயில் பிரயாணத்தினால் வந்த களைப்பு, பெட்டியைத் திருட்டுக் கொடுத்து ஏமாந்து போனதனால் ஏற்பட்ட சோர்வு எல்லாம், சாம்புவை ஏககாலத்தில் அழுத்தின. செட்டியார் ஒரு கால் கார் அனுப்பியிருக்கலாமோ என்று கார்களின் நம்பர்களைக் கூர்ந்து பார்த்துக்கொண்டே வந்தவன், ஓரமாக நின்ற ஒரு பெரிய கறுப்புக் கார் பக்கத்தில் வந்ததும் நின்று விட்டான். அதன் நம்பர்: 38883. கோபாலன் சொன்ன அதே வண்டிதான்! கதவைத் திறந்து கொண்டு பெட்டியுடன் ஏறி பின் ஸீட்டில் உட்கார்ந்து கொண் டான். கோபாலன் ஸ்டேஷனில் தன்னைத் தேடிக்கொண்டிருக்க வேண்டும். அங்கே காணாமல், வரவில்லை என்று நினைத்துக்

கொண்டு வருவார். இங்கே வந்து பார்த்து ஏமாந்து போவார். வேடிக்கையாக இருக்கும் என்று தனக்குத்தானே சிரித்துக் கொண்டான் சாம்பு. அப்படியே மெத்தையில் சாய்ந்து கண்ணை யும் மூடிக்கொண்டான். அவன் மறுபடி கண் விழித்தபோது அந்த மோட்டார் ஓடிக் கொண்டிருந்தது.

சாம்பு திடுக்கிட்டு உற்று நோக்கினான். சுமார் நாற்பது மைல் வேகத்தில் வண்டி மழமழவென்றிருந்த ரோட்டில் போய்க் கொண்டிருந்தது. வழி நெடுக மின்சார விளக்குக் கம்பங்கள் குப் குப்பென்று நெருங்குவதும், பின்னால் ஓடி மறைவதுமாகத் தோன்றின. ஒரே நிமிஷத்தில் சாம்பு தன் நிலைமையை உணர்ந்தான். 'யார் வண்டியை ஓட்டுவது? கோபாலனா?' என்று தலையைத் தூக்கிப் பார்த்தவன் திகைத்துப் போனான். ஆஜாநு பாகுவான ஒரு மனிதன் டிரைவர் ஸ்தானத்தில் உட்கார்ந்து வண்டியைச் செலுத்திக்கொண்டே பக்கத்திலிருந்த ஒரு ஸ்திரீ யுடன் உல்லாசமாகப் பேசிக்கொண்டிருந்தான். அவள் கட்டு மஸ்தான தேகத்துடன் அலங்காரமாக உடுத்தியிருந்தாள். அவளு டைய தலையிலிருந்த புஷ்பக்கட்டு, கார் பூராவும் சுகந்த மணத்தைப் பரப்பிக் கொண்டிருந்தது.

சாம்பு எழுந்து உட்கார்ந்து கொண்டான். 'இதேதடா தர்மசங்கட மாய்ப் போச்சு! அசந்தர்ப்பமாக அல்லவா மாட்டிக் கொண்டிருக் கிறோம்? இனிமேலும் இவர்கள் பேச்சைக் கேட்டுக் கொண் டிருக்கப்படாதே!' என்று சாம்பு எண்ணி சற்றே கனைத்தான். சட்டென்று திடுக்கிட்ட அந்த மனிதன் காரை நிறுத்தித் திரும்பிப் பார்த்தான். அந்த ஸ்திரீயும் பயந்துபோய்த் தலையைத் திருப்பி, 'ஐயோ! திருடன்!' என்று கூவினாள்.

'நான் திருடன் இல்லை!' என்றான் சாம்பு, அசடு வழிய.

'பின் யாரையா நீ?'

'நீ சும்மா இரு! இவனுடன் நான் பேசுகிறேன்! என்று அவளை அடக்கிவிட்டு, நீ யார்? எங்கே வந்தே? எப்படி வந்தே? உண்மையைச் சொல்!' என்று சாம்புவை அந்த மனிதன் அதட்டினான்.

சாம்பு கண்ணைப் பரபரவென்று துடைத்துக் கொண்டான். 'இது செட்டியார்வாள் கார்தானே? நான் தூங்கியே போய்விட்டேன் போல் இருக்கிறது!' என்றான் அசடு வழிய.

அந்த மனிதன் அவனை நம்பவில்லை என்று முகக்குறி காட்டியது. வெட்டுகிறாற்போல் ஒரு பார்வை பார்த்து, 'நீ நிஜமாவா தூங்கிக்கொண்டு வந்தாய்? வெறும் புளுகு! யாரை ஏய்க்கிறே?' என்று கர்ஜித்தான்.

சாம்புவுக்குத் துடைகள் நடுங்கின. 'வாஸ்தவமாகச் சொல்லு கிறேன். ஸ்டேஷனுக்கு வண்டி அனுப்புறதாகக் கனகசபைச் செட்டியார் சொல்லியிருந்தார். இது அவர் வண்டிதானாக்கும் என்று ஏறி உட்கார்ந்துகொண்டேன். நான் வந்தபோது யாருமே இல்லை. அயர்ந்துட்டேன். நீங்க என்ன பேசிக்கொண்டு வந்தீர்க ளென்றுகூட எனக்குத் தெரியாது!'

அதற்குள் அந்த ஸ்திரீ, 'இதை நீங்க நம்புகிறீங்களா!' என்றாள், சிறிது தணிந்த குரலில்.

'ஐயோ! ஐயோ! நான் ஒரு பாவமும் அறியாதவன். என்னை ஒண்ணும் செய்துவிடாதீர்கள், சத்தியமாக நான் இன்று எக்ஸ்பிர ஸில் இறங்கினேன்!'

'அப்படியானால் நாங்கள் வந்ததுகூடத் தெரியாது என்கிறாய்?'

'நிச்சயமாகத் தெரியாது. வண்டி கிளம்பினதும் தெரியாது!'

'இவன் வார்த்தையை நம்பி...' என்று ஆரம்பித்தாள் ஸ்திரீ.

'நீ சும்மா இரு, விஜயம்! இவனுடன் நான் பேசிக்கொள்கிறேன்!' என்று அவளை அடக்கிவிட்டு, அந்த மனிதன், 'உமக்குக் கனக சபைச் செட்டியாரைத் தெரியுமா?' என்று கேட்டான்.

'தெரியவே தெரியாது! இனிமேல்தான் பார்க்க வேண்டும்!'

சாம்புவின் முகத்தை ஒரு நிமிஷம் அவன் கூர்ந்து பார்த்தான். அது பரிதாபமாக இருந்தது.

'சுத்த மடையனாக இருக்கிறீரே! வண்டியில் ஏறினால், அதில் யார் வந்திருக்கிறார்கள் என்று விசாரிக்க வேண்டாம்? இப்போது அநாவசியமாக இரண்டு மைல் வந்துவிட்டீரே!'

'நானே உம்மைத் திருப்பிக் கொண்டு போய்விடுவேன். ஆனால், நாங்கள் இப்போது செய்வது ஒரு ரகசியமான விஷயம். இவள் செட்டியாருடைய பெண். நான் அவர் மாப்பிள்ளை. பெண்ணை விடமாட்டேன் என்று எங்களைப் பிரிச்சு வைத்துக்கொண்டு செட்டியார் ரொம்பச் சங்கடப்படுத்தி விட்டார்.'

'ஐயோ பாவம்!' என்றான் சாம்பு உண்மையான அநுதாபத்துடன்.

'இவளுக்கானால் என்னோடு வந்துவிட வேண்டுமென்று ஆவல். அதற்காக அவருக்குத் தெரியாமலே புறப்பட்டு விட்டாள். அவர் காரிலேயே போகிறோம். மெட்ராஸில் குடித்தனம் போடப் போகிறோம்.'

'ரொம்ப சந்தோஷம்!' என்றான் சாம்பு.

'நீர் இது விஷயமாகச் செட்டியாரைப் பார்த்தால் பிரஸ்தாபிக் கவே கூடாது, தெரியுமா?'

'நன்றாயிருக்கிறது! நான் ஏன் பேசுகிறேன்?'

சாம்பு இறங்குவதற்கு எத்தனித்தான். காலடியில் பெட்டி தடுக்கியது. சட்டென்று, தான் சூட்கேஸ் கொண்டுவந்தது ஞாபகம் வரவே, சாம்பு குனிந்து எடுத்துக் கொண்டான்.

'நாழியாவுது! சுருக்க இவனை விரட்டுங்க! எங்கேயாவது அப்பாரு, ஆளை அனுப்பித் தேடச் சொல்லப் போறாரு!' என்றாள் விஜயம்.

எப்படியோ தன்னை விடுவித்துக் கொண்டால் போதுமென்று சாம்பு அவசர அவசரமாக இறங்கினான். கீழே இறங்கும்போது கால் தடுக்கி, ஒருமுறை பெட்டியைப் போட்டுக்கொண்டு விழுந்தான். அவசரமாக எழுந்து, திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே நடந்தான். சற்று நேரம் வரையில் மோட்டாரில் வந்த மனிதன் கீழே நின்று அவனைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, 'ஏதோ அரைப் பைத்தியம்! முகத்தைப் பார்த்தால் தெரிய வில்லையா? போகட்டும்!' என்று சொல்லியவாறு, திரும்ப வண்டியில் உட்கார்ந்தான்.

கனகசபைச் செட்டியார் பங்களாவைத் தேடிச் சாம்பு போய்ச் சேரும்போது மணி பதினொன்றரை. நல்ல வேளையாக மோட்டார் கிளம்பிய சிறிது நேரத்திற்குள்ளாவது விழித்துக் கொண்டோமே என்று சாம்பு சந்தோஷப்பட்டுக் கொண்டான்.

பங்களா வாசற்படியை மிதித்ததுமே ஒரு குமாஸ்தா ஓடி வந்தான். ' செட்டியார்வாள் இருக்கிறாரா?' என்று அவனை விசாரித்தான் சாம்பு.

'இருக்கிறாரா! நீங்க சாம்பு இல்லீங்களா? ரொம்பக் கவலையாக உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்!' என்றான் அவன்.

'கோபாலன்?'

'சாயந்திரம் போனவர் இன்னும் திரும்பவில்லை!'

சாம்பு உள்ளே சென்றான். செட்டியார் ஒரு ஸோபாவில் சோகமே உருவாகத் தலையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதைக் கண்டான். 'இருக்காதா, அருமைப் பெண் சொல்லிக் கொள்ளாமல் போய்விட்டாள் என்றால்...' என்று சாம்பு ஊகித்தான். சாம்புவைக் கண்டதும் அவர் முகம் சிறிது பிரகாசமாகத் தோன்றியது.

'என்ன! அவர்கள் யாரையாவது பார்த்தீர்களா?' என்று கேட்டார் செட்டியார் தீனமான குரலில்.

சாம்பு வரும்போது செய்துகொண்டு வந்திருந்த தீர்மானம் செட்டியாரின் சோகம் நிறைந்த முகத்தைக் கண்டதும் சிதைந்தது. பிரும்மாண்டமான அவர் பங்களாவையும், பிரமாதமான ஐஸ்வரியத்துக்குரிய அறிகுறிகளையும் பார்த்த பின்னால், தனக்குத் தெரிந்த விஷயத்தை அவரிடம் வெளியிட்டு, பெருமை பெறவும் ஆசை தோன்றியது. ஆகவே, அவருக்குத் திருப்தி அளிக்கும் தோரணையில் பேச எண்ணி, 'இரண்டு பேரையுமே பார்த்தேன்!' என்றான்.

'என்னது! நிஜமாகவா? இரண்டு பேரா? எங்கே? எங்கே அவர்கள்?'

'பதறாதீர்கள்! எங்கும் போய்விடவில்லை அவர்கள்!' என்றான் சாம்பு சமாதானமாக.

'சீக்கிரம் சொல்லுங்கள் ஐயா! அவர்களைப் பார்த்தால் ஏன் ஐயா விட்டீர்?'

'விடாமல் அவர்களை நான் பிடித்துக் கொள்வதா? நீங்கள் கோபப்படக்கூடாது. இந்தக் காரியம் முழுதும் விஜயத்தின் இஷ்டத்தின் பேரிலேயேதான் நடந்திருக்கிறது.'

'அது யார் விஜயம்?'

'என்னைச் சோதனை பண்ணுகிறீர்களே! விஜயம் உங்கள் வீட்டிலிருந்து போகவில்லையா இன்றைக்கு? விஜயம், ஸார்! உங்கள் பெண் விஜயம்! மாப்பிள்ளையோடுதானே...'

'இவர் யார் ஐயா பைத்தியக்காரனாய் இருக்கிறார். மூன்று லட்ச ரூபாய் வைரத்தை அப்படியே பெட்டியோடு பறிகொடுத்து விட்டு நான் நிற்கிறேன். பெண் மாப்பிள்ளை என்று பேத்துகிறீரே!'

'ஓஹோ! பின்னே அது வேறு கனகசபைச் செட்டியாராக இருக்க வேண்டும்! அப்படியானால் உங்களுக்குக் கெட்டுப்போனது வைரந்தானே? சரி!' என்றான் சாம்பு.

செட்டியார் உதட்டைக் கடித்துக் கொண்டார். 'இவரைப்பற்றி இன்ஸ்பெக்டர் சொன்னது சரியாப் போச்சு!' என்றார் செட்டியார்.

'இன்ஸ்பெக்டர் என்ன சொன்னார்?'

'அவரே வருகிறார், கேட்டுக் கொள்ளுங்கள்!'

கோபாலனே வந்துவிட்டார். வந்தவர் சாம்புவைக் கவனிக்காமலேயே, 'செட்டியார்வாள்! கவலைப்பட வேண்டாம்! இரண்டு ஆசாமிகள் காரில் போகிறதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. சரக்குப் பூராவும் கையோடுதான் கொண்டு போகிறார்கள். அந்தப் பெண் பிள்ளை பலே, கைகாரி என்று சொல்கிறார்கள். பெங்களூர் விஜயம் என்று பெயராமே அவளுக்கு! என்ன சாமர்த்தியமாயிருந்தாலும் மடக்கி விடலாம். வழியில் அவர்கள் ஓர் ஆசாமியை இறக்கிவிட்டதாகவும் தெரிகிறது. அவனையும் தேடிக் கொண்டிருக்கிறார்கள்!' என்று சொல்லி வந்தவர், சாம்புவைப் பார்த்து விட்டார்.

'என்ன ஸார்! எப்போ வந்தீர்கள்? கடைசியில் கருணை வைத்து விட்டீர்களா?' என்றார் உத்ஸாகமாக.

சாம்புவுக்கு எரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது. செட்டியாரும் இன்ஸ்பெக்டரும் தன்னைப்பற்றி ஏதோ கேவலமாகப் பேசிக் கொண்டிருப்பதாக ஊகித்தான். 'கருணையாவது மண்ணாவது! உங்கள் பேச்சுக்காக நான் பட்டிருக்கிற சிரமம் என்ன என்கிறீர்கள்? கால் கெஞ்சுகிறது! மோட்டாரில் ஏறி, எமன் வாயில் புகுந்து வந்தாற்போல் இறங்கி இரண்டு மைல் நடந்திருக்கிறேன். முதலில் இந்தப் பெட்டிக்குள் பார்த்துக் கொள்ளுங்கள். அதுவும்

ஒரு பெரிய கதை சொல்லும்! அவ்வளவும் கல்!' என்று படபட வென்று பெட்டியைக் கீழே வைத்துத் திறந்து காட்டினான்.

அப்போது மற்றவர்களைப் போலவே சாம்புவும் திடுக்கிட்டுப் போனான். அதனுள் செங்கல் துண்டுகள் இல்லை! பல சிறு சிறு அட்டைப் பெட்டிகள் இருந்தன. செட்டியார் தாவிக்கொண்டு வந்தார். அவைகளைப் பிடுங்கி, ஒவ்வொன்றாகத் திறந்தார். விளக்கு வெளிச்சத்தில் வைரங்கள் ஜகஜ்ஜோதியாக மின்னின.

'இதேதான்! இதேதான்! இதுவேதான்!' என்றார் செட்டியார் சந்தோஷம் தாங்காமல் வாய் குழற.

'எப்படி ஸார் கொண்டு வந்தீர்கள்?' என்றார் கோபாலன், சாம்புவைத் தழுவி.

சாம்பு திணறிக் கொண்டிருந்தான். மோவாய்க் கட்டையை வழித்துவிட்டுக்கொண்டு பார்த்தும் ஒன்றும் புலப்படவில்லை. செங்கல் துண்டுகள் இருந்த பெட்டி எங்கே? மோட்டாரில் ஏறும்போது இருந்த அந்தப் பெட்டியை இறங்கும்போது நாம் கொண்டு வரவில்லையோ என்று சிந்தனை செய்தான்.

'ரொம்ப வேடிக்கைக்காரர், ஸார். உங்கள் சாம்பு என்னிடம் என்னவெல்லாமோ சொல்லி முதலில் தமாஷ் செய்துவிட்டார்!' என்றார் செட்டியார்.

'எனக்கு ரொம்பத் தூக்கமாக வருகிறது!' என்றாள் சாம்பு, அசட்டுச் சிரிப்புச் சிரித்து.

'உங்கள் பெங்களூர் விஜயம், வந்தவுடனே பலன் அளித்து விட்டது மிஸ்டர்!' என்றார் செட்டியார், சாம்புவின் தோளில் கை வைத்து.

'பெங்களூர் விஜயத்துக்கும் பலன் கிடைத்துவிட்டது! அவள் வயிறெரிந்து கொண்டிருப்பாள்!' என்றார் கோபாலன். சாம்பு பேசாமல் மூக்கைச் சொறிந்துகொண்டு பல்லைமட்டும் இளித்தான்.

'பலே பேர்வழிகள் இரண்டுபேரும்! நானும் எவ்வளவோ ஜாக்கிரதையாகத்தான் இருந்தேன். நம்பள் கொளும்பு ஏஜண்டின் பிள்ளை என்று சொல்லிக்கொண்டு அவன் என்னோடு பேச்சுக் கொடுத்துக்கொண்டே இருக்கும்போது, ஒரு நிமிஷம் நம்பி

விட்டேன். அதுக்குள்ளே அவள் சுருட்டிக்கொண்டு விட்டாள்! பொம்மனாட்டிகளில் அவ்வளவு கைகாரியை நான் பார்த்தது மில்லை! போன பண்டம் கிடைக்குமென்று நான் எதிர்பார்க்கவு மில்லை!' என்றார் செட்டியார்.

'எனக்குந்தான் தெரியாமப் போச்சு! வர வேண்டிய சமயம் தெரியும், நீர் போம்! என்று என்னிடம் சாம்பு சொன்னாரே! அப்போதே அவர் பிளான் என்னவென்று தெரியாமப் போச்சு. மிஸ்டர் சாம்புவின் வேலை ஒண்ணொண்ணும் எனக்கு முதலில் பிடிபடமாட்டேங்கிறது. கடைசியில்தான் விளங்குகிறது!' என்றார் கோபாலன்.

இந்தச் சமயத்தில் பெங்களூர் விஜயம் என்ற ஸ்திரீயும் அவன் கூட்டாளியும் தங்களுக்குள் வாக்குவாதம் செய்து கொண்டிருந் தார்கள்.

'அவன் யாரோ போக்கிரி என்று நான் முதலிலேயே சொன்னேனே, நீ கேட்டியா! அவன்கிட்டே ஏதோ கயிறு திரிச்சே! அவன் உன்னைக் கயிறு திரிச்சுட்டான்!' என்றாள் அவள்.

'என்ன சிரமப்பட்டு அந்தப் பெட்டியைத் தட்டிக்கொண்டு வந்தேன்! இதற்காக அந்தச் செட்டியாரின் கார் மாதிரியே ஒண்ணு கொணர்ந்து அதே நம்பரையும் மாட்டி, ரயில்வே ஸ்டேஷனில் நிறுத்தி வைத்திருந்தது. அங்கே கூட்டத்தோடு கூட்டமாக ஏறி யாரும் சந்தேகப்படாமல் நழுவிவிட என்ன முன்னேற்பாடெல் லாம் பண்ணினேன்! எல்லாம் வீணாய்ப் போச்சே!' என்று உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

அவர்கள் முன்னால் சாம்பு வைத்துவிட்டுப்போன பெட்டி திறந்தபடி கிடந்தது. அதில் நிறையச் செங்கல் இருந்தது!

•

வேம்பு சொப்பனம் கண்டுகொண்டிருந்தாள். அதில் சாம்பு தன் பிள்ளைக்கு வைர மாலை ஒன்றைப் போட்டுக் கொண்டி ருக்கிறான்!

இந்தச் சொப்பனம் வெகு சீக்கிரத்திலேயே பலித்து விட்டதையும் அவள் கண்டாள்.

32

திரை எழும்புகிறது!

இன்ஸ்பெக்டர் கோபாலனுடைய டயரிப் புத்தகத்தைப் புரட்டிப் பார்ப்பவர்கள், பெங்களூர் விஜயத்தின் கேஸைப் பற்றி விவரமாக அவர் எழுதியபின், சுமார் ஐந்து வருஷங்களுக்குப் பெரிய கேஸாகவே ஒன்றையும் குறிப்பிட்டிருக்க மாட்டார் என்பதைக் கவனிக்கலாம். சொந்த பங்களாவும் ஒரு பிள்ளையும் பெற்ற பிறகு சாம்புவே வெளியில் கிளம்பாமல் இருந்தது ஒரு காரணம்; இரண்டாவது இன்ஸ்பெக்டர் கோபாலனும் பட்டணத்திலிருந்து மாற்றலாகி மூன்று வருஷம் கோயமுத்தூரில் போய் இருந்தது. இந்தக் காலத்தை அவர் அஞ்ஞாத வாசம் போலவும், மனைவியை விட்டுப் பிரிந்த புருஷனைப் போலவும் கழித்தார் என்றாலும், சாம்பு என்னவோ கவலையற்றிருந்தான்.

சென்னைக்கு அவர் மீண்டும் மாற்றப்பட்டு வந்து, அவருக்குச் சாம்புவின் தரிசனமும் கிடைத்த பிறகுதான், தமது மன நிம்மதியைப் பெற்றார். அதே சமயம் சாம்புவும் தன் மன நிம்மதியை இழந்தான்.

சாம்புவின் பிள்ளை சுந்து வளர்ந்துகொண்டு வந்தான். வேம்புவும் வேடிக்கையாக அடிக்கடி, 'அப்பாவைப் பிள்ளை உரித்து வைத்திருக்கிறது; அந்த அசட்டுத்தனம் மாத்திரம் வந்து விடாமல் இருக்க வேண்டும்!' என்று சாம்புவின் கழுத்தைக் கட்டிக்கொண்டு சொல்லுவாள்.

சுந்து தூங்கும் காலம் தவிர, மற்ற போதுகளில் வீட்டில் இருக்கவே மாட்டான். கட்டெறும்புகளைப் பிடித்துக் கண்ணாடி சீசாக்களுக்குள் போட்டு அடைத்து, வேடிக்கை பார்ப்பான். நெருப்புப் பெட்டிகளைச் சேர்த்துக் கோத்து ரயில் விடுவான். பழைய ப்ளேடுகளை வைத்துக்கொண்டு, எதையாவது சீவித் தள்ளுவான். இவைகள் எல்லாவற்றையும்விட அவனுக்கு மிகவும் பிடித்த விளையாட்டு, பக்கத்துத் தெரு லக்ஷ்மணப் படையாச்சியின் கோழிகளைத் தெருத் தெருவாக மூச்சுத் திணறத் துரத்திக்கொண்டு போவதுதான்.

இப்படி ஒருநாள் இரண்டு தெருக்களுக்கு அப்பால் ஒரு கோழியைத் துரத்திக்கொண்டிருந்த சுந்துவைத்தான், ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த இன்ஸ்பெக்டர் கோபாலன் நிறுத்தி, 'எலே! அப்பா இருக்காராடா ஆத்திலே?' என்று விசாரித்தார்.

'விடுங்கோ, மாமா! கோழி ஓடிப்போயிடும்!' என்று துடித்தான் சுந்து.

'வேறே கோழி இருக்கும், துரத்தலாம்டா! அப்பா இருக்கிறாரா, என்னடா பண்ணிக்கொண்டிருக்கிறார், சொல்லு!' என்று அவனை நிறுத்தினார் கோபாலன்.

ஒரு நிமிஷம் யோசித்தான் சுந்து; கோழியோ தெருக்கோடி திரும்பிவிட்டது. 'காதை கிட்டே கொண்டு வாங்கோ, மாமா! சொல்றேன்!' என்றான்.

இன்ஸ்பெக்டர் தலையைக் குனிந்து கொள்ளவே சுந்து விஷயத்தை ரகசியமாகச் சொன்னான். கேட்டுக்கொண்டே வந்த இன்ஸ்பெக்டர் வாய்விட்டுச் சிரித்துவிட்டு, பையன் முதுகிலும் ஒரு ஷொட்டுக் கொடுத்து, 'ஓடுடா பயலே!' என்றார். பிறகு மோட்டார் சைக்கிளில் ஏறிக் கொண்டார்.

வீட்டில் வேம்பு கேட்டுக்கொண்டிருந்தாள் சாம்புவை! 'நீங்கள் பெரிய்ய மனுஷர் என்கிறேள்! நம்ம ராமலிங்க சாஸ்திரிகள் மூணு

வருஷமாகக் கேட்டுண்டிருக்கார் ஒரு சின்னக் காரியம்! செய்து வைக்க முடியவில்லையே உங்களால்!' என்றாள்.

'என்ன, சொல்லேன் அதை!'

'ஆமாம்! நூறு தரம் சொல்லியாச்சு இதோட! அவர் மாப்பிள்ளைக்கு ஒரு நல்ல வேளையா போலீஸிலே செய்து வைக்கச் சொல்றார். எங்கேயோ குமாஸ்தாவா ராப்பகலாக அவதிப்படறானாம். ரொம்பப் புண்ணியம் உண்டு; மறக்கவே மாட்டேன்!' என்கிறார்.

'கோபாலன் வரட்டும்டி! அவர் கையிலே பிடித்துக் கொடுத்துடறேன். கல்யாணத்தின்போதே அவனை நான் பார்த்திருக்கேன். இதென்னடி பிரமாதம்!' என்று சொல்லிக் கொண்டிருந்தான் சாம்பு.

'டப் டுப் டப் டுப்' என்ற சத்தம் கேட்டவுடனே திடுக்கிட்டு எழுந்தான் சாம்பு. 'என்ன கஷ்டகாலம்டி! இன்ஸ்பெக்டர் வண்டி மாதிரி இருக்கேடி!' என்றான். வேம்புவும் கவனித்துவிட்டு, 'ஆமான்னா!' என்று நகர்ந்து கொண்டாள்.

அடுத்த நிமிஷம் சாம்பு படுக்கையை உதறி நடுக்கூடத்தில் போட்டுப் படுத்துவிட்டான். கம்பளிப் போர்வையையும் தலையிலிருந்து கால்வரை போர்த்திக்கொண்டு 'அடி வேம்பு!' என்று கூப்பிட்டான்.

'எனக்கு என்ன கேடு?'

'நான் சொல்றபடி கேளு, சமையல் கட்டை விட்டு வெளியே வரப்படாது நீ! தெரிஞ்சுதா?'

'அழகுதான்!'

'இப்போ போடி உள்ளே!'

சைக்கிள் வாசலில் நின்றது. அதையடுத்து ரேழியில் பூட்ஸ் சத்தம் கேட்டது. நடையில் நின்றபடி கூடத்தில் சாம்பு படுத்திருப்பதை ஒரு க்ஷணம் கவனித்தார் கோபாலன். தலையை அசைத்துவிட்டு, பக்கத்தில் வந்து 'ஓய்! சாம்பு! என்னங்காணும் உமக்கு?' என்றார்.

'ஊம்!' என்று ஈன ஸ்வரத்துடன் கண்களைத் திறந்தான் சாம்பு.

'என்னைப் பார்க்க முடியவில்லையோ உமக்கு?'

'கண்ணே தெரியல்லே! ஊம். கோபாலனா? வாருங்கோ! மூணு நாளாச்சு, காய்ச்சல்!'

'ஐயோ பாவம்! வெங்காய சாம்பாரிலே இட்லி இட்லியாகத் தோய்த்துத் தின்றீரோ காய்ச்சல் வர!'

சாம்பு விறைத்தான். 'உமக்குப் பரிகாசம்! எனக்குப் பிராணா வஸ்தை! ஹூம்! இந்த இடுப்பிருக்கே, உட்காரவே முடியல்லே!'

'த்ஸொ! த்ஸொ! அடப்பாவமே! யார் வைத்தியமோ? நல்ல ஆசாமியாகப் பார்த்தால், சித்த நாழியிலே உம்மை உட்கார்த்தி வைச்சுடலாமே!'

'பயல்கிட்டே உங்களுக்குச் சொல்லி அனுப்புவோமான்னுகூட நினைச்சேன்!'

சாம்பு பேசிக்கொண்டிருந்தபோதே, இன்ஸ்பெக்டர் பக்கத்தில் உட்கார்ந்தார். அவர் கை போர்வைக்கு அடியில் சென்றது. விரல்கள் கணுக்காலிலிருந்து மெல்ல முழங்காலைத் தடவிச் சென்றன. துடையில் சிறிது தயங்கி, எலுமிச்சங்காய் அளவு சதையை அள்ளி எடுத்து, ஒரு திருகு திருகின. அடுத்த நிமிஷம், துள்ளிக் குதித்துப் போர்வையை உதறி எடுத்துக்கொண்டு எழுந்து இரண்டடி அப்பால் போய் உட்கார்ந்தான் சாம்பு.

'ஐயோ! இன்ஸ்பெக்டர்! வெடுக்குனு பலமான்னா கிள்ளி விட்டீர்கள்!' என்று சாம்பு ஓலமிட்டான்.

'பைத்தியக்கார மனுஷா! இந்த மாதிரி வியாதியை வைத்துக் கொண்டு சும்மா இருக்கிறதா? ஆபத்தாச்சே!' என்றார் கோபாலன்.

திருதிருவென்று ஆட்டுமுழி முழித்தான் சாம்பு. தான் செய்தது பாசாங்கு என்பது இன்ஸ்பெக்டருக்கு எப்படித் தெரிந்திருக்கும்?

'ஒன்றும் யோசிக்காதேயும்! பயலிடம் சொல்லி அனுப்பவேண்டு மென்றிருந்தீரா? பையனே என்னை வழியில் கண்டு, 'அப்பா வந்து மடியிலே தலையை வைத்துக் கொண்டிருக்கிறார். அம்மா, அப்பா வாயிலே இட்டிலியை விண்டு வெங்காய சாம்பாரிலே தோய்ச்சுத் தோய்ச்சுப் போட்டிண்டிருக்காள் என்று சொல்லிட்டானே ஓய்!' என்றார் கோபாலன்.

விஷயம் புரிந்தது சாம்புவுக்கு. சுந்துவின் மேல் கோபம் பொங்க, பல்லைக் கடித்துக்கொண்டு சமையலறைப் பக்கம் தன் திருஷ்டியைத் திருப்பினான். புடைவைத் தலைப்பின் நுனியினால் உதடுகளைப் பொத்தியவாறு வேம்பு வாசற்படியில் நின்று கொண்டிருந்தாள்.

இன்ஸ்பெக்டர் சிரித்தார். 'கோபப்படக் கூடாது சாம்பு ஸார்! குழந்தைகளே அப்படித்தான்! இப்போ நான் வந்திருக்கும் காரியம் என்ன தெரியுமல்லவா?' என்றார்.

'தெரியும்!'

'அடேயப்பா! என்ன அது!'

'என்னைச் சந்தியில் கட்டி இழுக்கப் போகிறீர்!'

'சும்மா ஒட்டாதேயும்! பெரிய மனுஷன் ஒருத்தன் கஷ்டப்படு கிறான். பரிதாபமாக இருக்கிறது.'

'யார் அவன்?'

'அப்புறம் சொல்கிறேன் பெயரை! நீர் வந்து இன்னிக்குச் சாயந்திரத்துக்குள் அவனுக்கு உதவி செய்யாவிட்டால் மனுஷன் அப்புறம் எலெக்ட்ரிக் ரயிலில் விழுவானோ, சமுத்திரத்தில் குதிப்பானோ சொல்வதற்கில்லை? நீர் வந்தால் காரியம் சீக்கிரம் முடிந்துவிடும்!' என்றார் இன்ஸ்பெக்டர்.

'என்னை வந்து அவர் மென்னியைப் பிடிக்கச் சொல்கிறீரா?'

'ஹஹ்ஹா! உம்ம பேச்சு இன்னிக்கு ரொம்ப தமாஷா இருக்கிறது! மேலே சமாசாரத்தைக் கேளும். நான் சொன்ன பெரிய மனுஷன் இருக்கிறாரே, பெரிய வக்கில்! மயிலாப்பூரில் வாஸம். அவருக்கு மாசம் 4,500 ரூபாய் வருமானம். அவர் ஒரு சங்கடத்தில் மாட்டிக் கொண்டிருக்கிறார். போலீஸிலும் கம்ப்ளெயிண்ட் கொடுத் திருக்கிறார். இருந்தாலும் உம்மிடம் ஒரு வார்த்தை போட்டால் கையும் மெய்யுமாகக் காரியம் நடந்து விடுமே என்று நான் வந்தேன். கேளுங்கள், சாம்பு! முந்தா நாள் சாயந்திரம் ஒரு கேஸ் சம்பந்தமாக முக்கியமான தஸ்தாவேஜை இந்தப் பெரிய மனுஷர் தம் வீட்டுக்குக் கொண்டு வந்திருக்கிறார். அதைக்கொண்டு வந்தது யாருக்குமே தெரிந்திருக்க நியாயமில்லை. அது கையில் இருந்தால்தான், இப்போது விசாரணையில் இருக்கும் ஓர் ஆசாமி

வெளியில் வரமுடியும். தெரிந்ததா? மேலே கேளும்!

'முந்தாநாள் இரவு வெகுநேரம் வரையில் இதை வைத்துக் கொண்டு படித்தும் இருக்கிறார். நேற்று காலை ஞாயிற்றுக் கிழமையிலும் மேஜையின்மேல் அது இருந்திருக்கிறது. இவர் பல்தேய்த்து ஆகாரம் செய்துவிட்டு வருவதற்குள் எப்படியோ மாயமாக மறைந்து போயிருக்கிறது!'

'அறையை நன்றாகத் தேடிப் பார்க்கச் சொன்னீர்களா?'

'தேடுகிறதா? இதைத் தேடப்போய் இரண்டு வருஷங்களுக்கு முந்திக் காணாமல் போனதெல்லாங்கூட அகப்பட்டிருக்கிறது, ஓய்!'

'அப்படியானால் இதையும் இரண்டு வருஷம் கழித்துத் தேடினால் அகப்பட்டுவிடும்!' என்றான் சாம்பு.

'ஓய்! இப்போதெல்லாம் நீர் ரொம்பப் பேசக் கற்றுக் கொண்டு விட்டீர்! கிளம்புகிறீரா என்ன?'

'நான் வந்து என்னத்தைங்காணும் செய்துவிடப் போகிறேன்? என் சட்டைப் பித்தானைக் காணோம்; ஒரு வாரமாக நான் தேடிக் கொண்டிருக்கிறேனே!'

'சேச்சே! எழுந்திரும், வாரும்!'

'எங்கே போறே, அப்பா?' என்று அப்போது சுந்து ஓடி வந்தான். 'நானும் வரேன், அப்பா!'

'எங்கே போறே? நானும் வரேன்! - நல்ல சகுனம்! பிரம்மஹத்தி! பிரம்மஹத்தி!' என்று எரிந்து விழுந்தான் சாம்பு.

'குழந்தையைக் கோபிக்காதீங்கோ சாம்பு! கிளம்புங்கள்!'

இன்ஸ்பெக்டரிடம் கண்டிப்பாக வர முடியாது என்று சொல்ல அவனுக்குத் தைரியம் வரவில்லை; போகவும் பயமாயிருந்தது. முணுமுணுத்துக்கொண்டே எழுந்திருந்தான்.

'அடியே! நான் வரேன்!' என்று வேம்புவிடம் சொல்லிக் கொண் டிருக்கும்போது, சுந்துவும் பின்னாலேயே கிளம்பிவிட்டான்.

'நீ எங்கேடா?'

'நானும் உன்னோடே!'

வேம்பு குறுக்கிட்டு, 'குழந்தையை எங்கேயும் கூட்டிக்கொண்டு போக வேண்டாம். காலம்பரலேருந்து அவன் ஒண்ணுமே சாப்பிடலே! ஆமாம்!' என்றாள்.

அவளைப் பார்த்து விறைத்துவிட்டு, 'எலே! என் கையைப் பிடிச்சுக்கோடா!' என்றான் சாம்பு.

'அவன் வேண்டாம்! விட்டுவிட்டுத்தானே போங்கோ?'

'பேசாதே!' என்று அதட்டினான் சாம்பு.

'உங்கள் துர்க்குணம் இருக்கே, ஈடு கிடையாது!' என்றாள் வேம்பு.

மோட்டார் சைக்கிளைச் சாம்புவின் வீட்டிலேயே ஓரமாக விட்டுவிட்டு, சாம்புவும் சுந்துவும் பின்தொடர, பேசாமல் நடந்தார் கோபாலன்.

•

திவான் பகதூர் கோதண்டராமன் வயிற்றைப் பிசைந்துகொண்டு தமது ஆபீஸ் அறையில் அங்குமிங்கும் உலாத்திக் கொண்டிருந் தார். சாம்புவை இன்ஸ்பெக்டர் கோபாலன் அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

திவான் பகதூர் அவநம்பிக்கையுடன் ஒரு புன்சிரிப்பைச் சிரமப் பட்டு வருவித்துக்கொண்டு, 'எனக்கே புரியவில்லை! இதென்ன யக்ஷிணி வேலையா? வீட்டுக்குள் ஒருவர் வரவில்லை; வெளியே ஒருவர் போகவில்லை. வாசல் கேட் சார்த்தியபடியே இருந்திருக்கிறது. இங்கேயானால் தஸ்தாவேஜியைக் காணோம், ஹூம்!' என்றார்.

சாம்பு அறையை ஒரு நோட்டம் விட்டான். இண்டு இடுக்கு கிடையாது. கம்பி வைத்த உயர்ந்த ஜன்னல்கள். ஒவ்வொரு ஜன்னலின் முன்பும் மணம் கமழும் கஸ் கஸ் தட்டிகள், சில தொங்கிக்கொண்டிருந்தன. காற்று ஜிலுஜிலுவென்று ஜன்னல் வழியாக அடித்தது.

'சாம்புவுக்கு உங்கள் குமாஸ்தாவையும் காண்பித்து விடுங்கள்! கேட்கிறதைக் கேட்டுக் கொள்ளட்டும்!' என்றார் கோபாலன்.

கூப்பிடுவதற்கு முன்பு குமாஸ்தாவே வந்துவிட்டான். சாம்புவைக் கண்டதும் ஒரு கும்பிடு போட்டான். அவனை ஒரு விறைப்பு விறைத்துவிட்டு, நீங்களும் பேனாவுக்குப் பச்சை மசிதான் போடுகிறதோ?' என்று கேட்டான் சுவாதீனமாக.

திவான் பகதூர் இதற்கும் விஷயத்துக்கும் சம்பந்தம் என்ன என்று கவனிக்கவே, சாம்பு, 'ஒன்றும் பெரிய விஷயமில்லை. சட்டைப் பையில் பேனா ஒழுகிக் கொண்டிருக்கிறது; அவர் கையையும் பாருங்கள்!' என்றான்.

குமாஸ்தா கையைக் காட்டினான். விரலிலும் பச்சை மசி பட்டிருந்தது.

'என் பேனாகூட இப்படித்தான் கசிகிறது; ரிப்பேர் செய்ய வேண்டும்! இருக்கட்டும்! உங்களுக்கு இந்தக் கேஸ் விஷயமாக ஏதாவது தெரியுமா?' என்று கேட்டான் சாம்பு ஹோதாவுடன்.

குமாஸ்தா மென்று விழுங்கிக் கொண்டு, 'நான் ஆறு வருஷமாக இங்கே இருக்கிறேன்' என்று ஆரம்பித்தான்.

'ரொம்ப சந்தோஷம்! தஸ்தாவேஜு காணாமற் போனது உமக்கு எப்போது தெரியும்? காணாமற் போன பிற்பாடா? அல்லது முன்னாலா?' என்றான் சாம்பு.

'அப்புறந்தான் தெரியும்; கெட்டுப்போவதற்கு முந்தி எப்படிக் கெட்டுப் போனதாகத் தெரியும்?' என்று வெடுக்கென்று திருப்பிக் கேட்டான் குமாஸ்தா.

திவான் பகதூர் சாம்புவைப் பார்த்தார். 'இவன் ஒரு பித்துக் குளியோ?' என்கிற பாவத்தில். சாம்புவுக்கும் தான் அசட்டுபுட் டென்று பேசிவிட்டதாகச் சந்தேகம் வந்து ரத்தம் தலைக் கேறியது.

'இல்லை. அதற்குச் சொல்லவில்லை. கெட்டுப்போகும் முன் அது கெட்டுப்போய்விடும் என்று உமக்குத் தெரியுமோ?' என்றான்.

'ஸார்! அது வீட்டில் இருந்ததே எனக்குத் தெரியாது!' என்றான் குமாஸ்தா, உஷ்ணமாக.

'அப்படிச் சொல்லுங்கள்! அதை உங்கள் கையால்கூட நீங்கள் தொட்டதில்லையாக்கும்!'

'கிடையாது, ஸார்!'

'தொட்டிருந்தால் அது கட்டாயம் கெட்டுப் போயிருக்குமே!'

'நீங்கள் சொல்கிறது புரியவில்லை ஸார் எனக்கு!'

'அதாவது, தொட்டிருந்தால் அதில் உங்கள் கையிலுள்ள பச்சைமசி பட்டிருக்கும். அதனால் கெட்டுப் போயிருக்கும், இல்லையா?'

குமாஸ்தா விழித்தான். சாம்பு மேலும் விடாமல், 'உங்கள் பேர் என்னவோ?' என்றான்.

'தியாகராஜன், ஸார்!'

'ரொம்ப நல்ல பெயர் ஸார், அது! எனக்குக்கூட அப்படி ஓர் பேர் எங்க அத்தைப் பாட்டி வைச்சிருந்தாள். நேற்று காலையில் நீங்கள் இங்கே இருந்தீர்களோ?'

'இருந்தேன்; நான் எப்போதும் வீட்டோடு இருப்பவன்தான்!'

'அப்புறம் எங்கேயாவது வெளியே போனீர்களாக்கும்?'

'இல்லவே இல்லை, ஸார்! போலீஸார் வந்து போன பிறகுதான் போனேன். தவிர, இந்த அறைக்குள் நான் நேற்று வரவே இல்லை.'

'யார் எடுத்திருக்கக்கூடும் என்று உங்களுக்குச் சந்தேகம் இருந்தால் அதைச் சொல்லுங்களேன்!'

'யார் எடுத்திருந்தாலும், நான் இல்லை என்று நீங்கள் சந்தேகம் இல்லாமல் ருசுப்பிக்க வேண்டும், ஸார்! காணோம் என்று சொன்னதிலிருந்தே எனக்கு ரொம்ப வேதனையாக இருக்கிறது.'

'வேதனைப்படாதேயும், ஓய்! உம்மை நான் தெரிந்து கொண்டு விட்டேன். நீர்தான் என்னை இன்னும் தெரிந்து கொள்ளவில்லை, போம்!' என்றான் சாம்பு உத்ஸாகமாக.

குமாஸ்தா வெளியே சென்றதும் திவான் பகதூர், 'மிஸ்டர் சாம்பு! நேற்று ஞாயிற்றுக்கிழமையாகையால், என் இதர கிளார்க்குகள் கூட யாருமே வரவில்லை. எனக்கு இப்போது யார் எடுத்தார்கள் என்றுகூடக் கவலை இல்லை. பண்டம் கிடைத்தால் போதும்!' என்றார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் சாம்புவின் பிள்ளை மெல்ல அவன் மடியிலிருந்து நழுவி, அவனுடைய நாற்காலி பின்னால் போய் நின்றுகொண்டு, 'ஆத்துக்குப் போகலாம் அப்பா, எனக்குப் பசிக்கிறது!' என்றான்.

'நன்னா பசிக்கட்டும்! திண்டாடு, கழுதை! இவாத்திலே ஒரு காகிதத்தைக் காணோமாம். தேடி எடு! சாதம் போடச் சொல்லு கிறேன்! போ அப்படி!' என்று எரிந்து விழவே, சுந்து மூஞ்சியைத் தூக்கிக்கொண்டு ஓர் ஜன்னல் அடியில் போய் நின்றான்.

சாம்பு திரும்பியபோது கேஸைப்பற்றி அவன் என்ன சொல்லப் போகிறானென்று அவனையே திவான் பகதூர் கவனித்துக் கொண்டிருந்தார்.

'கெட்டி முடிச்சாக இருக்கிறதே, ஸார்!' என்றான் சாம்பு.

'அதை அவிழ்க்கத்தானே உங்களைக் கூப்பிட்டிருக்கிறேன்.'

'நான் தொட்டால் இன்னும் மணி முடிச்சாகப் போய்விடும், ஸார்! இத்தனை போலீஸ்காரர்கள் இழுத்துப் பார்த்துவிட்ட முடிச்சு அல்லவா?' என்றான் சாம்பு, மூக்கைத் தடவிக்கொடுத்து.

திவான் பகதூர் எழுந்து கவலையுடன் உலாவத் தொடங்கினார்.

'எனக்கு நாளைக்குக் கட்டாயம் வேண்டிய தஸ்தாவேஜு ஸார், அது! எதிர்க்கட்சியார் கையில் சிக்கியதோ, என் கட்சிக்காரர் விடுதலையாவது, இந்த ஜன்மத்தில் இல்லை. ஆனால், அவர்கள் கையில் அது இன்னும் எட்டவில்லை என்று கோபாலன் நிச்சயமாகச் சொல்கிறார். நீங்கள்தான் கவனம் வைத்து...'

சாம்பு தலையைக் குனிந்துகொண்டு பெரிதாக யோசனை செய்பவன்போல் மூக்கை இடதுபுறமும் வலது புறமும் ஆட்ட ஆரம்பித்தான். கோபாலனோ கண்ணையே மூடிக்கொண்டு விட்டார்.

திவான் பகதூருக்கு இந்தக் காட்சி சகிக்கவில்லை. ஜன்னல் அருகே போய் நின்று, 'விஷயத்தைச் சொல்லிவிட்டேன். தஸ்தாவேஜி இல்லையென்றால் என் தலையில் இடி! என் கட்சிக்காரர் தலையிலும் இடி!' என்றார் ஆவேசமாக.

அவருடைய பேச்சு சாம்புவின் காதில் விழுந்ததோ என்னவோ, கடைக் கண்ணால் ஜன்னல் படியில் உட்கார்ந்திருந்த சுந்துவையே

பார்த்தான். அவன் செய்து கொண்டிருந்த காரியம் திடுக்கிடச் செய்தது. 'போக்கிரிப் பயல்! பழைய பிளேடுகளை எடுக்காதே, கையில் பட்டுவிடும் என்று எத்தனை தடவை சொல்லியிருக் கிறேன்! கேட்காமல் இங்கேயும் ஒன்றைக் கொண்டு வந்திருக் கிறான்!'

வேகமாக அவனை நோக்கிக் கையை வீசினான். சுந்து நாக்கைத் துருத்திக்கொண்டு, வேலையில் மேலும் மும்முரமானான். ஆத்திரமாகத் துள்ளி எழுந்து பிள்ளையின் பக்கம் இரண்டடி வைத்தான். ஆனால், சுந்து அதற்குள் தட்டியைச் சுருட்டி இழுத்துக் கட்டியிருந்த கயிற்றை அறுத்துவிட்டான்! 'என் தலையில் இடி! என் கட்சிக்காரர் தலையிலும் இடி!' என்று திவான் பகதூர் முடித்ததற்குச் சரியாக, தட்டி அவிழ்ந்து லொட்டென்று அவர் தலையில் விழுந்தது!

நடுநடுங்கிப்போய் ஓட யத்தனித்த சுந்துவைக் கண்டு சாம்பு, 'பிடி அவனை!' என்று கர்ஜித்தான்.

கோபாலன் திடுக்கிட்டு நிமிர்ந்தார். சுருள் பிரிந்து விழுந்த தட்டியிலிருந்து ஒரு தஸ்தாவேஜி வெளிப்படுவதுதான் முதலில் அவர் கண்ணில் பட்டது. அதை அடுத்துச் சாம்புவின் உத்தரவும் கேட்கவே, அப்போதுதான் நுழைந்துகொண்டிருந்த குமாஸ்தா வின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்.

'இன்ஸ்பெக்டர் மாமா! என்னைக் கோவிச்சுக்காதீங்கோ, மாமா! அப்பாதான் முடிச்சை வெட்டச் சொல்லி ஜாடை காட்டினார்; நான் வெட்டினேன்!' என்றான் சுந்து, வாசற்படியில் நின்று கொண்டு.

தட்டிக்குப் பின்னாலிருந்து அசடு வழிய வெளியே வந்த திவான் பகதூர், தஸ்தாவேஜைப் பார்த்ததும் முகம் மலர்ந்து போனார். 'மிஸ்டர் சாம்பு! நீங்கள் முடிச்சு அவிழ்க்க வேண்டும் என்று சொன்னீர்களே! எனக்கு அப்போது புரியவில்லை, ஸார்!' என்றார் தழுதழுத்த குரலில்.

சாம்புவோ சுந்துவையே விறைத்துப் பார்த்துக் கொண்டிருந் தான்.

குமாஸ்தா அதற்குள் குற்றத்தை ஒப்புக்கொண்டான். எதிர்க்கட்சி ஆசாமியின் பணத்துக்கு ஆசைப்பட்டுக்கொண்டு அப்படிச்

செய்தானாம். 'அதை வெளியே கொண்டு போக நினைத்தபோது, திவான் பகதூர் திரும்பும் நேரமாகிவிடவே தாற்காலிமாகத் தட்டியில் வைத்துச் சுருட்டி, முடிச்சைப் பலமாகப் போட்டேன். ஒரு போலீஸ்காரனாவது தட்டியை அவிழ்க்கவில்லை. இவர் என் பச்சை மசியைப் பற்றிப் பேசினபோதே கொஞ்சம் திகிலாக இருந்தது. தஸ்தாவேஜை நான் எடுத்தபோது அதில் கொஞ்சம் பச்சை மசி பட்டது. அதைக்கொண்டு இந்தச் சாம்பு என்னைக் கட்டாயம் மாட்டிவிடத்தான் ப்ளான் போட்டிருக்கிறார். நானே அதற்கு முந்தி ஒப்புக்கொண்டு விடுகிறேன்!' என்றான்.

'இனிமே உங்கள் குமாஸ்தா பாடு உங்கள் பாடு. நான் வரேன். இப்போ ரொம்பப் பசிக்கிறது' என்று கிளம்பினான் சாம்பு.

இங்கேயே சாப்பிடலாமா? யாரடா டேய்! இலை போடச் சொல்லு!' என்றார் திவான் பகதூர்.

'இல்லை. போகணும். ஆத்திலே வேம்பு, அதாவது, என் ஒய்ப் கோவிச்சுக்குவள். இல்லை, அதாவது, எதிர்பார்த்துக் காத்திண் டிருப்பள். இன்னொரு நாள் பார்த்துக் கொள்ளலாம். ஹி! ஹி!' என்று சுந்துவையும் அழைத்துக்கொண்டு வெளியே நடந்தான் சாம்பு.

•

வேம்புவிடம் கதை பூராவையும் சொல்லிவிட்டு, 'அந்தக் குமாஸ்தா யார், சொல்லேண்டி பார்ப்போம்!' என்று கேட்டான்.

'நான் என்னத்தைக் கண்டேன்! உங்கள் மாதிரி புத்திசாலியா?'

'நீ காலம்பற உத்தியோகத்துக்குச் சிபாரிசு பண்ணச் சொன்னியே, அந்த ராமலிங்க சாஸ்திரியின் மாப்பிள்ளையேதான் அவன்!'

'ஐயைய! வேலை பார்த்துத் தரச்சொன்னால் இருக்கிற வேலை யையும் போக்கிவிட்டேளே!'

'இதைக் கேளுடி! நான் அவனைத் தப்ப வைக்கணும்னுட்டே எத்தனையோ கேள்வியெல்லாம் சாமர்த்தியமாப் போட்டேண்டி! அந்த முட்டாள்தான் எக்குபுக்கா மாட்டிண்டுடுத்து! போகட்டும்! நான் சொன்னபடி அவனைக் கோபாலன் கையிலே பிடித்துக் கொடுத்தேனா இல்லையா!' என்று மூக்கைத் தடவினான் சாம்பு.

மோட்டார் சைக்கிளை எடுத்துப்போக வந்த கோபாலன் ஒரு பெரிய செக்கையும் கொண்டு வந்தார். அது எவ்வளவு ரூபாய்க்கு என்று சொல்ல சாம்புவின் அநுமதி எனக்குக் கிடையாது. ஆனால் கோபாலன் போன பிறகு, சாம்புவின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அவன் மடிமேலேயே வேம்பு வெகுநேரம் உட்கார்ந்திருந்தாள் என்பதை மட்டும் ரகசியமாகச் சொல்லி விடுகிறேன்!

33

சித்திரஸேனா நாடகசபை

ஒரு பெரிய மோட்டார் வண்டி வந்து சாம்பு வின் வீட்டு வாசலில் நின்றது. அதிலிருந்து ஸில்க் ஷர்ட் அணிந்த ஒருவரும் அவருக்குக் காரியதரிசி போல் தோன்றிய மற்றொருவரும் இறங்கி வந்தார்கள். ஸில்க் ஷர்ட் ஆசாமி தமது விஸிட்டிங் கார்டைச் சாம்புவிடம் கொடுத்துவிட்டு, 'ஓர் உபகாரம் வேண்டி வந்திருக்கிறேன். நாளை இந்த ஊரில் ஜவந்தி மலைக்கள்ளன் என்கிற நாடகத்தைப் போடு கிறோம். நீங்கள்தான் தலைமை வகிக்க வேண்டும்!' என்று விநயமாகக் கேட்டுக் கொண்டார்.

அசடு வழியச் சிரித்துக்கொண்டே சாம்பு, கையிலிருந்த கார்டைப் பார்த்தான். வி.பி.எம். விநாயக முதலியார், புரொப்ரைட் டர், சித்திரஸேனா நாடக சபை என்று போட்டிருந்தது. சாம்பு நிமிர்ந்தபோது ஒரு பெரிய பழத்தட்டை முதலியார் நீட்டிக் கொண்டிருந்தார்.

'ரொம்ப சந்தோஷம். ஹி ஹி! இதெல்லாம் என்னத்துக்குன்னா... அடே சுந்து! சுந்து! பழம்

வந்திருக்கு டோய்! ஹிஹி! முதலியார்வாள் அபிமானம் இருந்தாலே போதுமே!' என்றான் சாம்பு.

'நன்றாய்ச் சொன்னீர்கள்! நீங்கள் வருகிறதாக இருந்தாலே எங்களுக்குக் கௌரவம், தைரியம், பந்தோபஸ்து எல்லாம். அப்புறம் திருட்டு புரட்டு கலாட்டா ஒன்றும் நடக்காது, ஸார்! நாளை வெள்ளிக்கிழமை, இரண்டு வார்த்தையாவது பேச ஒப்புக் கொள்ள வேணும்!'

சாம்பு கையைப் பிசைந்தான். தலைமை வகிப்பதாம்! பிரசங்கம் செய்வதாமே! பயமாயிருக்காதா?

'நீங்கள் ஒண்ணும் யோசிக்கப்படாது, ஸார்! எத்தனை நாள்தான் நீங்கள் இப்படி சங்கோசப் பிராணியாக அடைந்துகிடப்பது! உங்கள் மாதிரி மூளையுள்ளவர்கள் அவ்வப்போது வெளியில் தலையைக் காட்டிக்கொண்டிருந்தால் ஜனங்களுக்கு எத்தனை சந்தோஷம்!' என்றார் முதலியார்.

சாம்பு, முதலியாரின் பேச்சில் வெண்ணெயாய் உருகி, பாகாய்க் கரைந்தான். தலைமை வகிக்க அவன் ஒப்புக்கொண்ட பின்பு தான் முதலியாரும் நகர்ந்தார். அவர் போனவுடனே சாம்புவும் கோபாலனைப் பார்க்கக் கிளம்பினான்.

சாம்பு நுழைந்த சமயம், இன்ஸ்பெக்டர் கோபாலன் முன்னால் பரட்டைத் தலை ஆசாமி ஒருவன் நின்றுகொண்டிருந்தான். பக்கத்தில் நின்ற ஒரு கான்ஸ்டபிள், 'இவன் முனிசாமிங்க. ஆறு மாசத்துக்கு முந்தி நம்ம டிவிஷன்லே ஒரு கன்னக் கேஸிலே இருந்தானுங்க. விடுதலையாகிப் போறானுங்க!' என்றான் கான்ஸ்டபிள்.

முனிசாமி கையைக் கும்பிட்டவாறு தலையைக் குனிந்தான்.

'என்னடா! என்ன! இன்னும் ஒரு வாரமாவது நீ இன்னொரு கன்னம் வைக்காமல் இருப்பியாடா?' என்றார் இன்ஸ்பெக்டர்.

முனிசாமி கீழே விழுந்து ஒரு நமஸ்காரம் செய்தான். 'அப்படிச் செஞ்சால் எசமான் என் முதுகுத் தோலை, சாட்டையாலேயே உறிச்சுப் போடுங்க!' என்றான். பிறகு சாம்புவுக்கும் கோபாலனுக்கும் தலைக்கு ஒரு கும்பிடு போட்டுவிட்டு, கான்ஸ்டபிள் பின்தொடர வெளியே போனான்.

'ஏது அபூர்வமாக இருக்கிறது, மிஸ்டர் சாம்பு! ஐந்து நிமிஷம் கழித்து வந்திருந்தீரானால் நான் வெளியே போயிருப்பேன்!' என்று எழுந்துவிட்டார் கோபாலன்.

'நான் ஒரு டிராமாவில் தலைமை வகிக்கப் போகிறேன்!' என்று சொல்லிக்கொண்டான் சாம்பு, பெருமையுடன்.

கோபாலன் ரொம்ப சந்தோஷப்படப் போகிறார் என்று எதிர் பார்த்தவன் மிகவும் ஏமாந்து போனான்.

'ரொம்ப சந்தோஷம். போய் வாருங்கள். ஒரு பெரிய கொள்ளைக் கேஸில் நான் அவசர வேலையாகப் போகிறேன். நீங்கள் அப்புறம் வந்து எல்லாம் சொல்லுங்கள், நான் வரட்டுமா?' என்று நகர்ந்தார் கோபாலன் நிற்காமல்.

'ஹூம்! இவ்வளவு அலட்சியமா!' என்று பல்லைக் கடித்துக் கொண்டான் சாம்பு. ஆனால், 'நம்மையும் கேஸில் இழுக்காமல் விட்டானே!' என்று மனச் சாந்தியுடன் ஓட்ட ஓட்டமாக வீட்டுக்குத் திரும்பினான்.

•

குறிப்பிட்ட தினத்தில் சித்திரசேனா நாடக சபையின் நாடகமான ஜவந்தி மலைக்கள்ளன் அமர்க்களமாக நடந்தது. சாம்பு எழுந்து நின்று மூக்கை ஒருமுறை இழுத்துவிட்டுக் கொண்டவுடனேயே வானம் இடிந்து விழுவது போன்ற கரகோஷம் சபையில் எழுந்தது. 'சபையோர்களே!' என்று சாம்பு மறுபடி மூக்கைத் தடவிக் கொண்டான். மீண்டும் கரகோஷம். 'இன்று நாம் பார்க்கும் நாடகம் இருக்கிறதே, அதி அற்புதமானது! இதிலே வரும் கள்ளன் பலே கள்ளனாயிருக்கிறான். அவனை என்னாலே கூடப் பிடிக்க முடியாது! (பலத்த சிரிப்பு) நான் வந்திருந்துங்கூட அவன் திருடுகிறான், பாருங்கள்! (சபையில் புளியம்பழம் உதிர்க்கிற சத்தம்) ஆகையினாலே, நான் இருப்பதைச் சொல்லிக் கொள்ளாமல் உட்கார்ந்து விடுவதே நல்லது! (மூக்கைத் தடவுதல் - நிற்காத கைதட்டல்) இந்த நாடகம் வெகு நன்றாக நடக்குமென்பதில் சந்தேகம் இல்லை. ஸ்ரீ விநாயக முதலியார் கைகாரர். இந்த ஊரில் இதைவிடப் பெரிய நாடகங்களை அவர் நடத்துவார் என்பது என் நம்பிக்கை!' (மூக்கு... கைதட்டல் - ரோஜா மாலை... கைதட்டல் - மூக்கு... கரகோஷம்... உட்கார்தல் - ஒரே ஆரவாரம்!)

அன்று நாடகம் முடிந்து திரும்பின சாம்புவை, முதலியார் வீடுவரை கொண்டு வந்துவுட்டு, 'நான் மறுபடி வந்து பார்க்கிறேன். நம்ம பங்களாவுக்கும் ஒரு முறை வரவேண்டும் நீங்கள்!' என்றார்.

'நீங்கள் ரொம்ப கெட்டிக்காரர்!' என்றான்.

'நான் நாடகம் மட்டும் நடத்துவதில்லை, ஸார்! இன்னும் எத்தனையோ வியாபாரங்கள் செய்திருக்கிறேன். மிளகு இருக்கு பாருங்கள் மிளகு! ஆயிரம் ஆயிரம் மூட்டைகளாக மொத்த வியாபாரம் நடத்தி இருக்கிறேன். நாடகம் போட வேண்டுமென்று ஓர் ஆசை, அதையும் தீர்த்துக் கொள்கிறேன்.'

'ஹி ஹி! ரொம்ப சந்தோஷம்!'

'நகைகள் வியாபாரம் இன்றைக்கும் நான் வைத்துக் கொண்டிருக்கிறேன். வைரம் பொட்டலம் பொட்டலமாக இப்படி வாங்கி அப்படி கொடுக்கிறது!' முதலியார் மணி பர்ஸிலிருந்து பெரிய ஸைஸ் வைரம் ஒன்றை விளக்கொளியில் பிடித்து, 'இதன் மதிப்பு என்ன இருக்கும்? சொல்லுங்கள், பார்க்கலாம்!' என்று கேட்டார்.

'அறுநூறு இருக்குமா?'

'ஆயிரம் ரூபாய் கொடுக்கிறேன். இதுமாதிரி ஒன்று வாங்கித் தருகிறீர்களா? பார்க்கலாம்!'

'எனக்குத் தெரியாது, ஹி ஹி!'

'பரவாயில்லை. நான் இதை வாங்கின விலையைக் கேட்டால் நீர் இன்னும் ஆச்சரியப்பட்டுப் போவீர். நூறு ரூபாய்க்கு வாங்கினேன்!'

சாம்புவுக்கு மூச்சு வாங்கியது. 'அடே அப்பா!' என்றான்.

'நான் செய்கிற வியாபாரத்தைக் கேட்டால் நீங்கள் பிரமித்தே போவீர்கள், சாம்பு! நான் சாதாரணமாக இந்த இரகசியத்தை யாருக்குமே சொல்வதில்லை. உங்கள் மேல் எனக்கு ஓர் அபிமானம் விழுந்துவிட்டதால் சொல்கிறேன். நீங்கள் வெளியிலே சொல்லிவிடக் கூடாது. வடக்கேயிருந்து ஒரு பெரிய சமஸ்தானாதிபதியின் பிள்ளை இங்கே வந்திருக்கிறான். அவன் மூலமாய், அங்கிருந்து வைர செட்டுகள் தருவிக்கிறேன். ஒரு

கையால் ரொம்ப மலிவாக வாங்குகிறேன். மறு கையால் விற்கிறேன். முந்தாநாள் அவனிடமிருந்து ஆயிரம் ரூபாய்க்குச் சரக்கு எடுத்தேன். இன்று காலையில் பதினாலாயிரத்துக்கு உள்ளூரில் விற்றுவிட்டேன்!'

'அம்மாடியோவ்!'

'பெரிய லாபம் இருந்தால் வியாபாரம் செய்யணும். இல்லாவிட்டால் சும்மா இருக்கணும்! என் பிரின்ஸிபிள் அது! ஒரு வாரத்திற்கெல்லாம் அந்த ஆசாமி மறுபடி இருபதினாயிரம் ரூபாய்க்குச் சரக்கு கொண்டு வருகிறான். இரண்டே நாளில், அதைப் பதினைந்து லட்சத்துக்கு நான் மாற்றி விடுவேன்!'

'அம்மா...டி!' என்ற சாம்பு, தம் கையிலிருந்த பெரிய வைரக்கல்லையே விறைத்துப் பார்ப்பதை முதலியார் கவனித்து விட்டார்.

'ஏன், உமக்கு வேண்டுமா?'

'ஆமாம்! எப்படி விலை?'

முதலியார் சவுடாலாகச் சிரித்தார். 'ஹுஹும்! இந்த முதலியாரை நீர் இன்னமும் தெரிந்துகொள்ளவில்லை. சிநேகிதர்களிடம் ஒன்றைக் கொடுத்துவிட்டுப் பணம் வாங்குகிற வழக்கம் இவரதில்லை, ஓய்!' என்றார். சாம்பு திகைத்தான்.

'சும்மா வைத்துக் கொள்ளுங்கள்! நீங்கள் ஞாயிற்றுக்கிழமை ராத்திரி நம்ம பங்களாவுக்கு வாருங்கள், ஸார்! அங்கேயே சாப்பிடலாம். என்னிடம் இருக்கிற நகை செட்டுகளைக் காண்பிக்கிறேன். பார்த்தால் நீங்கள் அசந்து போவீர்கள்!' என்று எழுந்திருந்தார் முதலியார்.

அவர் போனபின் அந்த அறைக்குள் வேம்பு நுழைந்தாள். 'யார் இவன்? என்ன கனைப்பு வேண்டியிருக்கு, இத்தனை நாழிக்கு மேலே?' என்றாள் சாம்புவை.

'போடி பித்துக்குளி! இதைப் பாருடி!' என்று சாம்பு வைரக் கல்லை எடுத்துக் காண்பித்தான். வேம்புவும் சுந்துவும் ஏக காலத்தில் வைரத்தை நோக்கித் தாவினார்கள்.

'இருடா! எல்லாத்துக்கும் முந்தி வந்துடறது! இன்னிக்கு இவன் என்ன பண்ணினான்னு கேளுங்கோ!' என்றாள் வேம்பு.

'என்னடா பண்ணினே?'

'நீதான் டிராமாவுக்குக் கூட்டிண்டு போகலையே என்னை?'

'அது கள்ளன் டிராமா. நீ பார்த்தா பயப்படுவே!'

'நீ மாத்திரம் பயப்பட மாட்டியோ?'

'நீ அப்பாவை இதெல்லாம் சொல்லப்படாது, தெரியுமா? - இவன் அலமாரியிலிருந்து என்னைக் கேட்காமலே காலணாவை எடுத்துக்கொண்டு போய் கடலைக்காய் வாங்கித் தின்னிருக்கான், கேளுங்கோ!' என்றாள் வேம்பு.

'ஹூம்! அப்படியா? நீ இலையைப் போடு!' என்று வேம்புவை அனுப்பிவிட்டு ஒரு காகிதத்தை எடுத்தான். அதன் ஓர் ஓரத்தில், 'இவன் பெரிய போக்கிரி, திருடன். இவனைச் சரியாக கவனித்துக் கொள்ளவும்!' என்று பென்ஸிலால் எழுதிவிட்டு, 'ஏலே, சுந்து! இப்படி வா! நீ திருடினாயா?' என்று பிள்ளையை மிரட்டினான்.

'ஆமாம், அப்பா!'

'சரி! உன்னை நான் ஜெயிலுக்கு அனுப்பப் போறேன். இந்தக் காகிதத்தை எடுத்துண்டுபோய், கோபால மாமா கிட்டே நீ கொடுத்தால் என்ன பண்ணுவார், தெரியுமா? சாட்டையாலே உரிச்சு, ஜெயிலிலே தள்ளி...'

'ஐயோ, வேண்டாம் அப்பா!' என்று குதித்தான் சுந்து.

'சரி! இப்போ மன்னிச்சேன்! ஆனால், இன்னொரு தரம் விஷமம் பண்ணினியோ, இந்தக் கடுதாசையும் உன்னையும் அனுப்பி விடுவேன். வா, இப்போ சாப்பிடலாம்!'

சாப்பிட உட்கார்ந்த பிறகுதான் வேம்புவிடம் முதலியாரைப் பற்றி பிரஸ்தாபித்தான் சாம்பு. 'அவன் பெரிய பிரபுடி! என்ன தாராள மனசு! அவன் வியாபாரம் ஒன்றில் நானும் கலந்து கொண்டு, நல்ல லாபமாக அடித்துவிட்டால், சுந்துவின் கொள்ளுப் பேரன் வரைக்கும் கவலை கிடையாதுடி!' என்றான்.

வாயைப் பிளந்தாள் வேம்பு.

'அவன் பங்களாவுக்கு ஒருநாள் அழைத்துக்கொண்டு போகிறேன் என்று சொல்லியிருக்கிறான். ஒரே ஸ்வர்ணமும் வைரமுமாக அங்கே மிதிபடுகிறதாம்டி!' என்றான்.

வேம்பு மறுநாள் யார் பிடியிலும் அகப்படவில்லை. விநாயக முதலியார் பங்களாவின் பெருமையை அவள் பெரியம்மா பெண்ணிடமும் சொல்லிவிட்டு வந்தாள். சாயந்திரம் பொழுது போகாதபோது, தோட்டக்கார ரத்தினத்திடமும் முதலியார் பங்களாவைப்பற்றி ஒன்றுக்குப் பத்தாக அளந்தாள்.

மூன்று நாள்களுக்குப் பிறகு, முதலியார் சொன்னது சொன்னபடி இரவு எட்டு மணிக்கு வந்துவிட்டார். 'மிஸ்டர் சாம்பு! ஒருகால் மறந்துபோய் வேறெங்கேயாவது எங்கேஜ்மெண்ட் வைத்துக் கொண்டு விடுவீர்களோ என்று பயந்துவிட்டேன்!' என்று சாம்புவைப் பரிவுடன் அழைத்தார்.

முதலியார் தங்கியிருந்தது அழகான பங்களா. அவருடைய பேச்சு கரும்பாக இனித்தது சாம்புவுக்கு. பத்து மணிக்கு அற்புதமான விருந்தைத் திணறச் சாப்பிட்டுவிட்டு ஹாலில் வந்து உட்கார்ந் தான். பிறகு மெதுவாக ஆரம்பித்தான்: 'முதலியார்வாள்! அன்றைக்குச் சொன்னீர்களே, வைர வியாபாரம்! அதில் நானும் சேர்ந்து கொள்ளலாமென்று என் சம்சாரம் ரொம்ப விருப்பப் படுகிறாள்!' என்றான்.

முதலியார் தலையைப் பலமாக ஆட்டினார். 'சாம்பு ஸார்! நீங்கள் என் நண்பர். நாளுக்கு நாள் ஆப்தராகிக் கொண்டுமிருக்கிறீர். முடியாது என்று சொல்வதற்குக் கஷ்டமாக இருக்கிறது. என்னை மன்னித்து விடுங்கள்!' என்றார் கண்டிப்பாக.

'ஏன், ஸார்! நான் வேண்டிய பணம் போடத் தயார், ஸார்! இதற்காக வீட்டில் பதினாயிரம் ரூபாய் தயாராக வைத்திருக் கிறேன்!'

முதலியார் பலமாகச் சிரித்தார். 'நல்ல வேலைக்காரர் நீர்! இன்றைக்குப் பதினாயிரம் ரூபாய் போட்டுவிட்டு மூன்று நாளைக்கெல்லாம் பன்னிரண்டு லக்ஷம் கொண்டு போகலா மென்று நினைக்கிறீர் அல்லவா? ஆசையைப் பார்!'

சாம்பு முகம் சடேரென்று வாடிப் போயிற்று. 'அப்படி யானால்...'

முதலியார் பதில் சொல்லு முன்பாக வாசலில் ஒரு மோட்டார் வந்து நின்ற சத்தம் கேட்டது. பளிச்சென்று திரும்பி, 'யார் அது?' என்றார். பின்னால் நின்ற காரியதரிசி, 'தெரியவில்லையே!'

என்று வாசல் பக்கம் ஓடினான். இரண்டே நிமிஷங்களில் திரும்பி வந்து, 'ராஜா ஸாஹேப் வந்திருக்கிறார். பக்கத்து ரூமில் இருக்கச் சொல்லியிருக்கிறேன்!' என்றான் முதலியாரிடம்.

முதலியார் முகம் கறுத்தது. 'ஒரு ஸெகண்ட் இருங்கள் சாம்பு' இதோ வருகிறேன்!' என்று சொல்லி, பக்கத்து அறைக்குப் போனார். காரியதரிசி பின் தொடர்ந்தான். அங்கே நடந்த சம்பாஷணை ஸ்பஷ்டமாகக் காதில் விழுந்தது சாம்புவுக்கு.

'புதன்கிழமையல்லவா நான் வரச்சொன்னேன், உங்களை?' - இது முதலியார் குரல்.

'ஆமாம், எனக்கு ஒரு நெருக்கடி. அவசரமாகப் பணம் வேண்டி இருக்கிறது. முன்னால் வந்தேன்.'

'இருந்தால்! உம் அவசரத்துக்கெல்லாம் நான் பணம் வைத்திருக்க முடியுமா என்ன? எனக்குப் புதன்கிழமைதானே பணம் வரும்!'

'நான் என்ன செய்வது? பதினாயிரமாவது தேவையாக இருக்கிறது, உடனே! இல்லாவிட்டால் இப்படி நான் ஓடி வருவேனா?'

'என்ன ஸாஹேப்! நீங்கள், சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருந்தால் என்ன உபயோகம்? பணம் இல்லை என்னிடம்! வேண்டாம் இந்த வியாபாரம், விடுங்கள்!'

சாம்பு துடித்தான். 'ஸார்! ஸார்!' என்று முதலியாரைக் கூப்பிட்டான்.

முதலியார் உடனே வந்தார். வந்தவர் கையில் ஒரு திறந்த பெட்டி! அப்பா! அதற்குள் எத்தனை வைரங்கள் எப்படி ஜொலித்தன!

'இந்த வியாபாரத்தை விட்டுவிடாதீங்க, முதலியார்! நான் பதினாயிரம் ரூபாய் பணம் தருகிறேன்!' என்றான் சாம்பு.

'வேண்டியதில்லை, ஸார்! நான் எதிலும் கூட்டு வைத்துக் கொள்கிற வாடிக்கை இல்லை!' என்றார் முதலியார் கண்டிப்பாக.

'நீங்கள் அப்படிச் சொல்லப்படாது! உங்களுக்கு இஷ்டப்பட்ட லாபத்தைக் கொடுங்கள், வியாபாரத்தை மட்டும் நழுவ விடாதீர்கள்!'

இவர்கள் பேசிக்கொண்டிருந்தபோதே பக்கத்து அறையிலிருந்து ஓர் ஆஜானுபாகுவான புருஷன் வந்தான். உயர்ந்த ஜரிகை

முண்டாசு; முறுக்கிவிடப்பட்ட மீசை; ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவனாகத்தான் இருக்கவேண்டும் என்று சாம்பு ஊகித்தான்.

'முதலியார்! இவர் உதவி செய்கிறதாகச் சொல்லும்போது குறுக்கே நிற்காதீர்கள். எனக்குப் பெரிய உபகாரமாக இருக்கும், ஆமாம்!' என்றான் அவன்.

முதலியார் ஒரே நிமிஷம் யோசித்தார். 'சாம்பு! நீர் மகா அதிர்ஷ்டக் காரர். வேறு யாராக இருந்தாலும் நான் மசியக்கூடியவன் இல்லை. உம் இஷ்டப்படியே பணத்தைக் கொடுங்கள்! இவர் கையிலேயே ஒரு கடிதம் எழுதி வீட்டுக்கு அனுப்புங்கள். பணத்தை வாங்கிக் கொண்டு வரட்டும். ஆனால் ஒன்று; இவ்வளவு வைரத்தையும் நீரேதான் வைத்துக்கொள்ள வேண்டும்! அதற்குச் சம்மதமா?' என்றார்.

சாம்புவின் உள்ளம் குளிர்ந்தது. சட்டைப் பையிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்து அவசரமாக வேம்புவுக்கு ஒரு லெட்டர் எழுதினான். வந்தவன் கையில் கொடுக்கவும், உடனே அவன் புறப்பட்டான்.

முதலியார் சாம்புவின் முதுகில் உத்ஸாகமாகத் தட்டினார். 'ஓய்! இந்தப் பிகு காட்டாவிட்டால் இவன் போக மாட்டான். நமக்குக் கொள்ளை கொள்ளையாக லாபம் இருக்கிறது, ஓய்! என்னோடு வாரும்! இன்னொரு வேடிக்கைக் காட்டுகிறேன்!' என்று அவன் கையைப் பற்றி இழுத்துக்கொண்டு கீழே போனார். தேன்குடித்த நரிபோல் சாம்புவும் பின்னால் துள்ளி ஓடினான். ஓர் அறைக் கதவைத் திறந்து, 'பாரும் உள்ளே, ஆச்சரியத்தை!' என்றார் முதலியார்.

ஆவலுடன் எட்டிப் பார்த்த சாம்பு, ஒரு கை தன் கழுத்தை ஸ்பரிசிப்பதை ஒரு க்ஷணம் உணர்ந்தான். மறுக்ஷணம் அறைக்குள் சடேரென்று தள்ளப்பட்டுத் தரையில் கிடந்தான் சாம்பு. வாசற்படியிலே நின்ற முதலியார் உதாசீனமாக, 'நாளைக் காலை வரை இங்கே இரும்! வேடிக்கை நன்றாக இருக்கும்!' என்று சொல்லி, அறைக்கதவைச் சாத்திப் பூட்டிக்கொண்டு போனார். சாம்புவை அந்தகாரம் சூழ்ந்து கொண்டது.

பன்னிரண்டு மணி சாம்புவின் வீட்டுக் கடியாரத்தில் அடித்த போது வாசல் கதவு படபடவென்று தட்டப்பட்டது. ஓடிப் போய்க் கதவைத் திறந்த வேம்புவின் முன், இன்ஸ்பெக்டர்

கோபாலனும் ஒரு கான்ஸ்டபிளும் நின்றார்கள். அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

'சாம்பு வந்துவிட்டாரா?'

'இல்லை, வருகிற சமயந்தான்! என்ன விசேஷம்?'

'சொல்கிறேன். அவர் வருகிற வரைக்கும் நாங்கள் அவர் அறையில் இருக்கிறோம். ஒரு முக்கியமான சமாசாரம்!' என்றார் கோபாலன்.

கோபாலன் உட்கார்ந்துகொண்டு, பதினைந்து நிமிஷங்களுக்கெல்லாம் ஒரு மோட்டார் வந்து நின்றது. திரும்பி விட்டான் சாம்பு என்று எதிர்பார்த்தார் கோபாலன். ஆனால், வேம்பு மட்டுந்தான் திரும்பினாள். 'அவர் வரவில்லை. லெட்டர் கொடுத்தனுப்பி இருக்கிறார்!' என்றாள் வேம்பு.

'என்ன லெட்டர்?'

'ஏதோ பணம் கேட்டனுப்பியிருக்கிறார்.'

'எத்தனை ரூபாய்?'

'பதினாயிரம் ரூபாய்!'

'நன்றாகப் பார்த்தீர்களா? பெரிய தொகையாயிற்றே!'

'நீங்கள்தான் பாருங்களேன்!' என்று லெட்டரைக் கொடுத்தாள் வேம்பு. இன்ஸ்பெக்டர் கோபாலன் விளக்கடியில் காகிதத்தைப் பார்த்தார். உதட்டைக் கடித்துக்கொண்டு வேம்புவை உள்ளே போகச் சொல்லிவிட்டு, போலீஸ் ஸ்டேஷனுக்கு டெலிஃபோனில் பேசினார்.

மேலும் சில நிமிஷங்கள் சென்றன. கடிதத்தைக் கொடுத்த ஆள் உள்ளே வந்து எட்டிப் பார்த்தான். கோபாலன் கண்ணில் பட்டதும், இரண்டே எட்டில் வாசலுக்கு ஓடி, காரில் ஏறிக் கொண்டான். வாயு வேகத்தில் அது பிய்த்துக்கொண்டு கிளம்பியது. ஆனால், வேகமெல்லாம் தெருக்கோடி வரையில்தான்! மூன்று போலீஸ் லாரிகள் அதை எதிர்பார்த்து, தெருவின் குறுக்கே நின்றன. காரிலிருந்த ஆறு பேரும் இரண்டு தோல் பெட்டிகளுடன் சிக்கிக் கொண்டார்கள்.

பொறியில் அகப்பட்ட எலியைப்போல் திக்கு முக்காடிக் கொண்டிருந்த சாம்பு உற்றுக் கவனித்துக் கேட்டான்.

அறைக்கு வெளியே தெருப் பக்கத்திலிருந்து ஏதோ சத்தம் வந்தது. யாரோ கடப்பாரையால் சுவரை நோண்டுகிறார்கள். ஜாக்கிரதையாகக் கற்கள் ஒவ்வொன்றாகக் கரகரவென்று பெயர்க்கப்படுகின்றன. யாராக இருக்கும்? ஒன்றும் புரியவில்லை. அரை மணிக்குப் பிறகு சுவரில் ஒரு சிறு துவாரம் ஏற்பட்டது. இடிக்க இடிக்க, துவாரம் ஓர் ஆள் நுழையும் அளவு பெருத்தது. சாம்பு பார்த்துக் கொண்டிருக்கும்போதே ஓர் ஆள் அதன் வழியே நுழைந்துவிட்டான்! இதுதான் சந்தர்ப்பமென்று சாம்பு சுவரோடு ஒட்டியவாறு நகர்ந்து, ஒரே பாய்ச்சலாக துவாரத்தின் வழியே பாய்ந்தான். மறுநிமிஷம் அறைக்கு வெளியே ஒரு சிறிய சந்தில் அவன் நின்றான். அதற்கு அடுத்த நிமிஷம், மூச்சுத் திணற தெருத் தெருவாக ஓடிக்கொண்டிருந்தான்!

தலைக்கெதிரே தொலைவில் ஒரு பெரிய வெளிச்சம் தெரிந்தது. டபடப சத்தம் கேட்டது. சாம்பு நின்று கவனித்தான். தலை சுழன்று தள்ளாடியது; தடாலென்று கீழேயும் விழுந்தான்! கண்ணை விழித்தபோது, சுற்றி ஒரே போலீஸ் கூட்டம். வேம்பு ஒரு பக்கம் கண்ணைக் கசக்கிக்கொண்டு நிற்கிறாள். 'அப்படி அரையும் குறையுமாகப் பென்ஸிலால் ஒரு மூலையில் எழுதி அனுப்பினேளே! யார் கண்ணிலும் அது படாமல் இருந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்?' என்று விகசித்தாள்.

சாம்பு மண்டையைக் குழப்பிக் கொண்டான். மெல்ல ஞாபகம் வந்தது. சுந்துவை மிரட்டுவதற்காகப் பென்ஸிலால் எழுதிய அதே காகிதத்தின் மேல் வேம்புவுக்கும் பணத்துக்கு எழுதி இருக்கிறான்!

கோபாலன் கடுமையாக இருந்தார். சாம்புவிடம், 'நீர் என்னதான் சாமர்த்தியசாலியாயிருந்தாலும், இப்படித் தனியாகப் போகக் கூடாது. இந்த முதலியார்மீது சந்தேகப்பட்டு, நான் ரொம்ப நாளாகவே கவனிக்கிறேன். பெரிய ஆள் இவன்! ஆதியிலிருந்தே உம்மீது அவனுக்குப் பயம். மடக்கிப் போடலாமென்று வழி செய்திருக்கிறான்! நீரும் ஒன்றும் தெரியாதவர்போல் நன்றாய் விளையாடி இருக்கிறீர்!' என்றார்.

சாம்புவுக்குச் சிறுகச் சிறுக விஷயம் தெரிந்தது. முதலியார் வியாபாரமெல்லாம் வெளி வேஷம். பெரிய கள்ளக் கூட்டத்தின் தலைவர் அவர் என்று தெரிந்துகொண்டான். அவசரமாகப்

பணம் கேட்ட ராஜா சாஹேப் கூட நடிகர்களில் ஒருவனே என்பதும் விளங்கியது!

எல்லாவற்றையும்விட அவனுக்குப் பெரிய மர்மம், சரியான சமயத்தில் கன்னம் வைத்தவன்தான்! அதுவும் சற்று நேரத்தில் புரிந்துவிட்டது. போலீஸ் ஸ்டேஷனில் பார்த்த முனிசாமிதான் அவன் என்றும், அவனும் தன் தோட்டக்காரன் ரத்தினத்தின் மச்சான்தான் என்றும் தெரிந்துகொண்டான். 'நான் ஒரு பித்துக்குளி! நம்ம தோட்டக்காரன்கிட்ட முதலியார் பங்களாவில் நிறைய வைர நகை இருப்பதாகச் சொன்னேன்! உடனே சங்கதி மச்சானுக்குப் போயிருக்கு!' என்றாள் வேம்பு.

'பேசாமல் இருடி!' என்று வேம்புவை அடக்கிவிட்டு, சாம்பு தோட்டக்காரனை தக்ஷணமே டிஸ்மிஸ் செய்தான். ஆனால், முனிசாமியை எப்படியாவது மன்னிக்கும்படி அசடு வழிய அவன் மன்றாடியதைக் கண்டு ஆச்சரியப்பட்டார் இன்ஸ்பெக்டர் கோபாலன்!

முதலியார் வீட்டு அறையில் மாட்டிக்கொண்டு, அவமானப்படாமல் தப்பவைத்துத் தன் கௌரவத்தைக் காப்பாற்றியதற்குத்தான், சாம்பு முனிசாமிக்குப் பரிந்து பேசுகிறான் என்று யாருக்குத் தெரியப்போகிறது!

34

'அகல்யா'வில் தேநீர் விருந்து

ஒரொரு சமயங்களில் சாம்புவுக்கே வெட்கம் பிடுங்கித் தின்பது உண்டு. கோபாலன் வந்து கூப்பிடுவதும், இவன் பயந்து நடுங்கி மாட்டேன் என்பதும், அப்புறம் கௌரவத்தை விட்டுக் கொடுக்காமல் கோபாலனுக்காக இவன் போவதும், எப்படி எப்படியோ முட்டாள்தனத்தையும் தெய்வ பலத்தையும் வைத்துக்கொண்டு ஒப்பேற்றி நல்ல பெயர் வாங்கிக்கொண்டு வெளிவருவதுமே வழக்கமாகிவிட்டது. ஒரு தடவை - ஒரே ஒரு தடவை மட்டுமாவது, 'மிஸ்டர் கோபாலன்! இன்ன இடத்தில் இத்தனை மணிக்கு இந்த மாதிரி ஒரு திருட்டு நடக்கப் போகிறது. அங்கேப் போய்ப் பாரும்!' என்று சொல்லக் கூடிய யோக்கியதை தமக்கு இருக்கிறதா என்று அடிக்கடி சாம்பு மனோராஜ்ஜியம் செய்து கொள்ளுவான்.

ஒரு நாள் சினிமாக் கொட்டகையின் அந்த காரத்தில் உட்கார்ந்து மூக்கைத் தடவிக் கொடுத்துக்கொண்டிருந்தபோதுகூடச் சாம்புவின் மனம் இதே பாதையில்தான் தீவிரமாக ஓடிக் கொண்டிருந்தது. அந்த

யோசனையைக் கலைத்துக்கொண்டு, 'ஏ மைதிலி! உன்னிடம் சொல்லிவிட்டேன். இந்த மாதிரி ஓட ஓட விரட்டினால், நான் கேட்டுக்கொண்டிருக்கிறவன் இல்லை. நான் போய்விடுவேன்!' என்றது ஓர் ஆண்குரல் அவன் பின்னால்.

'என்னை என்னவோவென்று நினைத்துவிட்டாற் போலிருக் கிறது, செல்லமணி! உன்னிடமிருந்து இப்படி ஒரு வார்த்தை வரவேண்டுமென்று நான் எத்தனை நாளாகக் காத்துக் கொண்டு இருக்கிறேன் தெரியுமா! நீ கிளம்பினால், உன் பின்னால் நானும் அந்த க்ஷணமே கிளம்பத் தயார்!' என்றது மிருதுவான, இனிமை யான ஒரு குரல்.

'ரைட்! ஆனால் ஒன்று: ஜமீன்தார் முதுகை முறித்துப் போடாமல் மட்டும் போகக் கூடாது.'

'அவன் மட்டுமில்லை, அந்த மந்தரேசன் இருக்கிறானே...'

'அவன் தலையைக் காட்டட்டும்; வெட்டிப் போட்டு விடு கிறேன். அங்கேயே, அதற்குச் சரியான பிளான் வைத்திருக் கிறேன்!'

'இன்னொன்று பார்! பணம் என்னிடம் சேர்த்திருக்கிறதைப் பார்த்தால்தான்...'

'அதை எப்போதும் தயாராய் வைத்துக்கொள், சொல்கிறேன். ஜமீன்தார் கைக்குப்போய் எட்டிவிடப்படாது அது! நாளைக்கு நான் உன்னை எங்கே பார்க்கலாம்?'

'ஜில்லூஸ் வாக்ஸ் ஓர்க்ஸுக்குச் சாயந்திரம் போகிறேன். ரொம்ப நன்னா இருக்கிறதாம்.'

'பார்க்கிலேதானே! நானும் வரேன். மற்ற விஷயம் அங்கே உன்னைக் கண்டு பேசலாமா?'

'வெரி குட்!'

'ரைட், மைதிலி!'

சாம்புவுக்கு ரத்தம் சுறு சுறுவென்று மண்டைக்கு ஏறியது. அவன் பின்னால் நடப்பது ஒரு முட்டாளுக்குக் கூடப் புரிய வேண்டுமே! இரு காதலர்கள், பணத்தைச் சுருட்டிக்கொண்டு ஓடப் பார்க் கிறார்கள். ஒரு ஜமீன்தாரும், மந்தரேசன் என்ற ஒரு பேர்வழியும்

குறுக்கே நிற்கிறார்கள். அவர்களை முறித்துப் போடவும், வெட்டிப் போடவும் தயார் இவர்கள். எவ்வளவு நல்ல கேஸ்! சாம்பு அசையாமல் உட்கார்ந்து, இடைக்கால விளக்குப் போடும் வரை காத்திருந்தான். அப்போது, குற்றவாளிகளின் முகத்தை நன்றாகப் பார்த்துக்கொள்ளலாம் அல்லவா?

சுமார் ஒரு மணிக்குப் பிறகுதான் விளக்குப் போட்டார்கள். அப்போது பார்த்தால், சாம்புவின் பின் ஸீட்டு காலியாக இருந்தது. அந்த யுவனும் யுவதியும் எப்படியோ தெரிந்துகொண்டோ அகஸ்மாத்தாகவோ - நழுவிவிட்டார்கள். சாம்பு தன்னைத் தானே நொந்துகொண்டான். அப்போதே சினிமா மேனேஜரிடம் போய், விளக்கைப் போடச் சொல்லி நிமிஷத்தில் பிடித்திருக் கலாமே அவர்களை!

அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்தைச் சோதனை போட்டான் சாம்பு. அங்கே அவனுக்கு அகப்பட்டது ஒரே ஒரு கைக்குட்டை தான். அதைமட்டும் எடுத்துக்கொண்டு வீட்டுக்குக் கிளம்பினான்.

மறுநாள் காலை சாம்பு போலீஸ் ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டர் கோபாலனைப் பார்க்கப்போன சமயம். ஐந்தாறு ஸப் இன்ஸ் பெக்டர்கள் சூழ அவர் உட்கார்ந்து, எப்போதையும் விட மும்மரமாகத் தம் வேலையில் ஈடுபட்டிருந்தார்.

'மிஸ்டர் சாம்பு! ஓர் அற்புதமான திருட்டுக் கேஸ் இருக்கிறது. உம்மால் ஒத்தாசை செய்ய முடியுமா?' என்று ஆரம்பித்தார் கோபாலன், சாம்புவைக் கண்டதும்.

'ஒத்தாசை செய்யலாம். ஆனால், நான் இப்போது வேறொரு கேஸில் ஈடுபட்டிருக்கிறேன்!' என்று தட்டிக் கழித்தான் சாம்பு.

'என்ன கேஸ் அது?'

கைக்குட்டையை மேஜையின்மேல் வைத்துவிட்டு, பூரா கதையையும் சொன்னான் சாம்பு. ஆனால், தன் அபிப்பிராயத்தை மட்டும் சொல்லாமல், 'இது என்னவாயிருக்கும்?' என்று கேட்டான்.

'அது கிடக்கிறது, ஓய்! நான் ஒரு கேஸ் சொல்கிறேன்!' என்றார் கோபாலன் இடைமறித்து.

'உம் ஹூம். இதை முடித்துக்கொண்டுதான் அது!' என்றான் சாம்பு, அசட்டுப் பிடிவாதமாக. 'நான் இன்றைக்குச் சாயந்திரம் அந்த மெழுகுப் பொம்மைக் கண்காட்சிச் சாலைக்குப் போகப் போகிறேன். கண்டுபிடித்துக்கொண்டு வருகிறேன்!' என்றான் சாம்பு.

'சரி!' என்றார் கோபாலன், முகத்தை மாற வைத்துக்கொண்டு. சாம்புவும் கைக்குட்டையை எடுத்துக்கொள்ள மறந்துபோய், அங்கேயே போட்டுவிட்டுத் திரும்பினான்.

•

பார்க்கில் டேரா போட்டுக்கொண்டு ஜில்லுஸ் வாக்ஸ் ஓர்க்ஸ் ஒரு மாதமாய்ச் சென்னையில் பணம் திரட்டிக்கொண்டு வருகிறது. மெழுகினால் செய்த பொம்மைகள் ஆள் உயரத் துக்குத் தத்ரூபமாக அதில் இருந்தன. உடலில் ஓடும் பச்சை நரம்புகள்கூட ஸ்பஷ்டமாகத் தெரிவதைப் பாமர ஜனங்கள் அவைகளில் கண்டு, வியந்துவிட்டு வந்தார்கள். இப்போது இந்தக் காட்சி வந்து அதிக நாளாகி விட்டதால், இதன் முதலாளி டிக்கெட்டைச் சரிபாதியாகக் குறைத்துங்கூட முன்பிருந்த கூட்டத்தில் சரிபாதிகூடத் தேறாததைக் கண்டு கவலை கொண்டிருந்தார்.

சாம்பு அங்கே போய்ச் சேர்ந்தபோது மணி ஐந்து. டேராவுக்குள் விளக்குகள் ஏற்றிவிட்டார்கள். ஒரணா டிக்கெட் ஒன்றை வாங்கிக்கொண்டு நுழைந்தவன், வாசற்படிக்குப் பக்கத்திலே நங்கூரம் பாய்ச்சி விட்டான். சுமார் அரைமணி நேரம் இப்படி அவன் நின்ற பிறகுதான் வந்த காரியம் பலிதமாகும் போல் தோன்றியது.

இரண்டு இளைஞர்கள் ட்வீட் ஸூட் போட்டுக்கொண்டு உள்ளே வந்தார்கள்.

'என்னடா இது! முக்கால் மணியாகக் காத்திருக்கிறேன், காணோமே மைதிலியை!' என்றான் அவர்களில் ஒருவன். சாம்புவுக்கு அந்தக் குரலைப்பற்றிச் சந்தேகமே இல்லை, முதல்நாள் மாலையில் சினிமாக் கொட்டகை இருளில் அவன் கேட்ட குரலேதான்!

'ஏன்? மைதிலியின் பேச்சைப் போய் நீ நம்பினாயே, எங்கே யானும் கிளம்பி இருப்பாள்!' என்றான் மற்றவன். இவன் இன்னொரு கூட்டாளி போலும் என்று ஊகித்தான் சாம்பு.

மேலும் என்ன பேசுகிறார்கள் என்று கவனிக்க மெல்லப் பின்னால் போய் நின்றுகொண்டு, முகத்தை மட்டும் நீட்டினான். வாசலில் காவல்காரனைப் போல் நின்ற ஒரு மெழுகுப் பொம்மையை ரசித்துக் கொண்டிருந்த அந்த ஆசாமி சமயம் பார்த்துக் கையை அசைக்கவே, சாம்புவின் மூக்கில் அவன் முழங்கை பலமாக இடித்துவிட்டது.

'ஐயம் ஸாரி!' என்றான் அவன் திரும்பி.

மூக்கே உடைந்து போய்விட்டதுபோல் வலி ஏற்பட்டு கண்ணில் கூட ஜலம் வந்துவிட்டது சாம்புவுக்கு. கையால் முகத்தைப் பொத்திக்கொண்டு அப்பால் நகர்ந்தான். இப்போது சாம்புவின் பயமெல்லாம் அந்த ஆசாமிகள் தன்னைப் பார்த்துவிடக் கூடாதென்பதுதான். ஆகவே, ஓர் இருபதடி முன்னால் சென்று தீவிரமாக யோசித்தான்.

இவர்களைத் தப்பவிடவும் கூடாது; இவர்கள் பேச்சையும் கவனிக்க வேண்டும். ஆனால், அதற்காக ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒருமுறை மூக்கை உடைத்துக்கொள்வதென்பது முடியாத காரியம். என்ன செய்யலாம்? மாறுவேஷம் போட்டுக் கொள்ளலாம். இப்போதைக்கு அவனிடம் ஒரு மூக்குக் கண்ணாடிதான் இருந்தது. அதை மாட்டிக் கொண்டான். அந்த முகூர்த்தத்திலேயே இன்னோர் அபாரமான யோசனையும் உதயமாயிற்று.

காட்சி பார்க்க வருகிறவர்கள் கடைசியாக வெளியேற வேண்டிய வாசலில் மூன்று பொம்மைகள் நின்றன. ஒன்று, ஒரு பிச்சைக்காரன்; மற்றொன்று ஒரு மகாராஜா; மூன்றாவது ஒரு கிழவி. இன்னும் பத்து நிமிஷங்களுக்குப் பிறகு, அந்த இரண்டு துஷ்டர்களும் அங்கேதான் வரப்போகிறார்கள்; நின்று பேசவும் போகிறார்கள். சாம்பு இருபுறமும் பார்த்தான், அப்போது யாரும் அவனைக் கவனிக்கவில்லை. கண்ணிமைக்கும் நேரத்தில் கயிற்றைத் தாண்டிக்கொண்டு நான்காவது பொம்மையாக, பரதநாட்டிய அபிநயம் ஒன்றைச் செய்துகொண்டு சாம்பு ஆடாமல் அசையாமல் நின்றுவிட்டான்!

துணிச்சலான காரியந்தான் அது. சாம்புவுக்கு நெஞ்சும் மார்பும் படபடவென்று அடித்துக் கொண்டன. மூக்கில் மாட்டியிருந்த மூக்குக் கண்ணாடி, அவன் எழும்பிக் குதித்ததில் இடம்விட்டுப் பெயர்ந்து, நுனி மூக்கில் தொத்திக் கொண்டு, இப்போதே விழுந்துவிடுவேனென்று பயமுறுத்தியது. அதை மெல்ல எடுத்து

விட வேண்டுமென்று ஆசைதான் அவனுக்கு. ஆனால் அதற்குள் அந்த இரண்டு ஆசாமிகளும் பேசிக்கொண்டு பக்கத்திலே வந்துவிட்டார்கள். சாம்பு சிலைபோல் விறைத்து நின்றான்.

அவன் எதிர்பார்த்தபடி அவர்கள் அங்கே வந்ததும் தயங்கி முன்னாலே நின்றார்கள்.

'ஏய்! ஜமீன்தாருக்கு நான் ஒரு வெடி வைத்திருக்கிறேன். தூள் தூளாகாவிட்டால் பார் அவன்!' என்றான் பழைய பேர்வழி.

'இரைச்சல் போடாதேடா! யார் காதிலாவது விழப் போகிறது!' என்று, மற்றவன் சாம்புவின் பக்கம் தன் திருஷ்டியைச் செலுத்தினான்.

'இங்கே யார்டா இருக்கிறான்! எல்லாம் வெறும் மெழுகுடா! வெறும் மெழுகு! ஆனால், பார்! நிஜ மனுஷனாட்டமாகவே செய்திருக்கிறான்! வேலை என்றால் இதுதான் வேலை! அங்கே பார் ஒருத்தன் மூக்கையும் முழியையும் கண்ணாடியையும்! இவனைக்கூட எங்கேயோ பார்த்தாப்போல இருக்குடா!' என்றான் பழைய பேர்வழி.

'ஆமாண்டா!' என்று மற்றவன் உன்னிப்பாகக் கவனித்தான். சாம்புவுக்கு ஸப்த நாடியும் ஒடுங்கிவிட்டது. முழங்கால்கள்கூடச் சிறிது தொய்யத் தொடங்கின. மூக்குக் கண்ணாடியும் விழ மேலும் பயமுறுத்தியது.

'அது கிடக்கிறது! இதைக் கேள்! பணமெல்லாம் மொத்தமாக மைதிலியிடம் இருக்கிறது. அது போறும், நம் காரியத்துக்கு, ஜமீன்தாருக்கு உசிர் இருந்தான்னா வாயைத் திறக்கப் போகிறான்! நான் ஒரே அடியாக அடிச்சுப் போட்டுட மாட்டேன்!' என்றான் முதல்வன்.

இதற்குப் பிறகு இருவரும் வாசற்படியில் சிறிது தயங்கினார்கள். அப்புறம் வேகமாக வெளியே சென்றார்கள். அவர்கள் பின்னாலேயே பாய்ந்து சென்று, ஜமீன்தார் யார் என்று கண்டுபிடித்து, அவரை எச்சரிக்கை செய்யத் துடித்தான் சாம்பு. ஆனால் அவன் அவ்வாறு செய்ய முடியாமல் மேலும் இரண்டு பேர் அடுத்தாற் போலேயே வந்துவிட்டார்கள்.

சாதாரணமாக உடை உடுத்தின ஒரு யுவன், அவன் பக்கத்தில் ஒய்யாரமாக நடத்துவரும் ஒரு பெண்மணி - இருவரும்

நெருங்குவதைச் சாம்பு கவனித்து, மீண்டும் பதுமைபோல் அசையாமல் நின்றான்.

இரண்டு வார்த்தைகளுக்கொருமுறை கலகலவென்று வெண்கல மணியொன்று இசைப்பதுபோல் நகைத்தாள் அவள். இங்கு மங்கும் மயிலைப்போல் ஆடி அசைந்துகொண்டே பேசினாள். சாம்பு மெய்ம்மறந்து போனான்.

'இந்த மாதிரி நானும் நீங்களும் இரு பொம்மைகளாக நின்றால் எப்படி இருக்கும்?' என்றாள் அவள் கண்களை ஒரு சுழற்றுச் சுழற்றி.

'அப்படி உன் இஷ்டமானால் சரி!' என்றான் கூட வந்தவன்.

'சும்மா நிற்கப்படாது! இப்படி நிற்கணுமாக்கும்!' என்று அந்தப் பெண் அந்த வாலிபனை நெருங்கி, கழுத்தில் ஒரு கையை வளைய விட்டுக்கொண்டு, சுவரின் மேல் பாசியைப் போல் ஒட்டிக்கொண்டு நின்றாள். சாம்புவின் மனம் பொருமியது. 'அடடா! அசட்டு வேம்புவுக்கு ஒரு நாளைக்கு இந்த மாதிரி அன்பாக அணைத்துக் கொண்டு இருக்கத் தெரிகிறதா? நமக்கென்று ஒரு தரித்திரம் வந்து வாய்த்ததே!' என்று அசூயைப் பட்டான் சாம்பு. இவர்கள் காதல் சம்பாஷணையில் மனத்தைப் பறிகொடுத்து, வெளியே நழுவிவிட்ட இருவரையும் பற்றி அநேகமாக அதற்குள் அவன் மறந்து விட்டான்.

'முந்தாநாள் நாடகத்திலேகூட நான் எப்படி நடித்தேன், கேழ்க்கிறீங்களா?'

'உஷ். இரைந்து பேசாதே! யாராவது கேட்டுக்கொண்டு இருப்பார்கள்!'

'ஆமாம்; நீங்க சுத்தப் பயந்தாங்கொள்ளி! இங்கேதான் எல்லாம் மெழுகுவர்த்தி பொம்மையாச்சே! அதோ நிற்கிறானே ஓர் ஆளு, அவனைப் பார்த்துப் பயமா? அடுப்பிலே போட்டா தண்ணியா ஓடிடுவானே!' என்று சிரித்தாள் அவள்.

தன்னை அனலில் போட்டுப் பார்க்க இந்த அழகி விரும்பியதைச் சாம்பு ரசிக்கவில்லை. இருந்தாலும் அவள் பேச்சில் இருந்த ருசி அவனைக் கவர்ந்தது. இவள் ஒரு டிராமாவில் நடிப்பவள் என்று தன் ஊகத்தை அப்போது ஊர்ஜிதம் செய்துகொண்டான்.

'கேளுங்க நாடகத்தை! மாடியிலிருந்து இறங்கி வந்தான் தங்கவேலு. அவன் பையிலே வைரப் பதக்கம் இருக்குது. திடீரென்று ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் வரார். 'தம்பி! அகப்பட்டுக்கிட்டியா கடைசியிலே? எத்தனை நாளா டபாய்ச்சிக்கிட்டு வரே நீ! உன்கிட்டே இருக்கு வைரப் பதக்கம். நீ தப்ப முடியாது!' என்கிறார். உடனே கையிலே விலங்கும் போட்டுடறார்.

'அந்தச் சமயத்திலே, கதாநாயகியான நான் பிரவேசிக்கிறேன். ஒருமுறை பார்க்கிறேன். விஷயம் விளங்கிடுத்து. ஹா! என் பிராணநாதா! உங்களுக்கா இந்த கதி! ஒரு பாவமும் அறியாத வெள்ளை மனமாச்சே உங்களுக்கு! உங்களை ஒரு முறை ஆலிங்கனம் செய்து கொள்ளா விட்டால் என் உயிர் போய்விடும்! என்று கதறி, மேலே போய் விழுந்து, தங்கவேலுவைத் தழுவிக் கொண்டு, கண்ணீரைக் கொட்டுகிறேன். அப்புறம் சிரமப்பட்டுப் போலீஸார் என்னைப் பிரித்து அப்புறப்படுத்தி, அவனைப் போலீஸ் ஸ்டேஷனில் கொண்டுபோய்ச் சோதனை போட்டால் பையிலே ஒண்ணுமில்லே!'

'நான் பார்த்தேன், கண்ணாலே அவன் பதக்கத்தைப் போட்டதைன்னு இன்ஸ்பெக்டர் முழிக்கிறாரு! எப்படி நாடகம்?' இதைச் சொல்லிவிட்டு அவள் கையைக் கொட்டிக்கொண்டு பலக்கச் சிரித்தாள்.

நாடகம் பேஷாகத்தான் இருந்திருக்க வேண்டும் என்று சாம்புவும் தீர்மானித்து விட்டான்.

'நாளைக்கு இன்னொரு நாடகமும் இருக்குதே!'

'எங்கே அது?'

'அகல்யான்னு, நுங்கம்பாக்கத்திலே ஓர் இடம். பெரிய கூட்டம் வரப்போவுது அதுக்கு. அவ்வளவும் பெரிய மனுசங்க. இதிலேயும் பிரமாதமான இடம் ஒண்ணு இருக்குது! கேளு! ஒரு டீ பார்ட்டியிலே திடீர்னு கதாநாயகி மயக்கம் போடுது. வீட்டுக்கார ஐயா பெரிய மிட்டாதார். நடுங்கிப் போயிடறார். இவளைக் கொண்டுபோய் உள்ளே போடுறார். அப்போ ஒரு மோட்டார் சைக்கிளை உதைச்சி உதைச்சிண்டு ஓர் ஆள் அங்கே வரான். அவன் மோட்டார் சைக்கிள் நின்னு நின்னு போவுது. 'நான் ஒரு

டாக்டர்; ஒரு ஸ்பானர் இருந்தா கொஞ்சம் கொடுங்க' என்கிறான். உடனே மிட்டாதார் கதாநாயகிகிட்டே அவனை அழைச்சிக் கொண்டுவிட்டு சித்த கவனிச்சுக்கச் சொல்லிட்டு, டீ பார்ட்டிக்கு வரார். மறந்துட்டேனே! அவருக்குப் புது வருஷப் பட்டம் வந்து இருக்கு; அதுக்காகத்தான் டீ பார்ட்டி! அப்புறம் டாக்டரும் கதா நாயகியும் சேர்ந்து ஒரு வேலை செஞ்சு போடறாங்க! அது என்னன்னு இப்போ சொல்ல மாட்டேன்! நீ வந்து பாரு! நான்தானே கதாநாயகி!' என்று ஒயிலாக அவன் கன்னத்தில் தட்டினாள்.

'டாக்டர் வேஷம் யாரு?'

'தங்கவேலுதான் போடறான். எனக்கும் அவனுக்கும் நல்ல ராசி!'

இருவருமாகக் கை கோத்துக்கொண்டு வெளியேறினார்கள். இந்த நாடகத்தைத் தவறாமல் பார்ப்பதென்று சாம்புவும் முடிவு செய்தான்.

இவர்கள் பின்னாலேயே இரு குட்டிகள்,வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்துவிட்டனர்.

'அங்கே பாருடி! யாரோ ஒருத்தன் பித்துக்குளி சாம்பு மாதிரி நிக்கிறாண்டி!' என்றது ஒரு பெண்.

அப்போது இன்னொரு பெண் எதிர்ச் சறுகில் இருந்த ஒரு பொம்மையின்மீது கவனமாக இருந்ததால், இந்தப் பக்கம் திரும்பவே இல்லை. இத்தனை நேரம், சாம்புவின் மூக்கின்மேல் நின்று, 'விழுவேனா விழுவேனா' என்று பாய்ச்சுக் காட்டிக் கொண்டிருந்த மூக்குக் கண்ணாடி இப்போது நழுவியே விட்டது. ஆனால் அது தரையில் விழுவதற்குள், கப்பென்று அதைப் பிடித்தான் சாம்பு.

'ஐயோடி! பொம்மை கையை ஆட்டறது, ஐயோடி! ஐயோடி!' என்று அலறிக்கொண்டு அந்தப் பெண் தன் தோழியிடம் ஓடினாள். தோழி, சாவகாசமாகத் திரும்பி 'பேத்தாதேடி! மெழுகுப் பொம்மைக்கு ஏதுடி உசிரு?' என்றாள்.

'என் கண்ணாலே பார்த்தேண்டின்னா! கையிலே எதையோ பிடிச்சுதோ இல்லை என்னை வான்னுதான் கூப்பிட்டதோ, தெரியலைடி!' என்று மற்றவளைப் பற்றி இழுத்தாள் அவள்.

இருவருமாக மீண்டும் வந்து பார்த்தபோது, முதல் பெண் காண்பித்த பொம்மையே அங்கில்லை. இனிமேல் அங்கே தங்குவது ஆபத்து என்று அறிந்து சாம்பு அங்கிருந்து அவசரமாக நழுவினான்.

வெளியே வந்த சாம்புவுக்கு இனிமேலே அந்த இருட்டில் பழைய ஆசாமிகளைத் தேடிக் கண்டுபிடிப்பது அசாத்தியமென்று பட்டு விட்டது. திரும்பவும் போலீஸ் ஸ்டேஷனுக்கே போய், தான் கண்ட விவரங்களைச் சொல்லி விடலாமென்று நடையைக் கட்டினான்.

அங்கே போனபோது கோபாலனும் இன்னும் அதே ஸப் இன்ஸ் பெக்டர்களும் எதையோபற்றிக் குழப்பிக்கொண்டு கூட்டமாக உட்கார்ந்திருந்தார்கள். கோபாலன் சாம்புவைக் கண்டதும், 'போங்காணும்! உம்மால் வேறு ஓர் அரை நாள் வீணாயிற்று!' என்றார்.

'நான் என்ன செய்தேன்?'

'நீர் ஒரு கைக்குட்டையை வைத்துவிட்டுப் போனீரே, அதனால் தான்! அதிலிருந்த லாண்ட்ரி அடையாளத்தைக் கொண்டு, அது யாருடையதென்று பார்த்தார் இன்ஸ்பெக்டர் அழகுசிங்கம் நாயுடு. மெடிகல் காலேஜ் ஸ்டூடெண்ட் ஒருத்தருதாம் அது. மேலே விசாரித்தால், அவர்கள் சங்கத்திலே கல்லூர் பங்களா என்று ஒரு நாடகம் போடறாளாம். டிக்கெட் விற்று நிறையப் பணமும் சேர்த்திருக்கிறார்களாம். ஒருத்தருக்கொருத்தர் நாடகத்திலே வர பேரையே வச்சுக் கூப்பிட்டுக்கொள்கிறார்கள். மைதிலி, மந்தரேசன், ஜமீன்தாரர் எல்லாம் அதிலே வர பேர்கள் தான். இந்த மாதிரி டிராமாக்களிலே சில்லறைப் பூசல்கள், கோபதாபங்கள் இருப்பது சகஜம். நீர் அதைக் கேட்டு மலைச்சுட் டீர்!' என்றார் கோபாலன்.

சாம்பு சும்மா இருப்பதைக் கவனித்துவிட்டு மேலும், 'என்னங் காணும்! நீரும் தண்டத்துக்கு அந்த வாக்ஸ் ஓர்க்ஸிலே போதை வீணாக்கினீரோ?' என்றார் கேலியாக.

தொண்டையை அடைத்துக்கொண்டு வந்த துக்கத்தை ஒருவாறு மறைத்து, சாம்பு தலையை ஆட்டினான். பிறகு, 'நான் வரேன், கோபாலன்!' என்று எழுந்தான்.

கோபாலன், கழுத்தைப் பிடித்து இருத்தித் திரும்ப உட்கார்த்தி வைத்தார். 'என்ன? மறந்து விட்டீரோ? இது விஷயம் தீர்ந்த வுடனே எங்கள் கேஸைக் கவனிப்பதாகச் சொன்னீரா, இல்லையா!' என்றார்.

சாம்பு பொத்தென்று உட்கார்ந்தான். கோபாலன் தொடர்ந்து, 'கேளும்! இந்த ஊரில் இப்போது ஒரு மகா தந்திரசாலியான ஜோடி வந்திருக்கிறது. ஓர் இடத்தில் திருடிய மாதிரி இன்னோர் இடத்தில் இவர்கள் திருடுகிறதில்லை. ஒவ்வோர் இடத்தில் ஒவ்வொரு புதிய வேலைத்தனம் செய்கிறார்கள். இன்றைக்கு இந்த இடத்தில் இன்ன மாதிரி திருடுவார்கள் என்று நமக்குத் தெரிவதில்லை. எல்லாம் நடந்த பிறகுதான் தெரிகிறது. போலீஸ் கமிஷ்னர் கடுமையா இருக்கிறார்!' என்றார்.

'ஹூம்!' என்றான் சாம்பு.

'பாருங்கள்! முந்தாநாள் மாம்பலத்திலே இந்த ஆசாமி ஒரு பங்களாவில் ஒரு வைரப் பதக்கத்தைக் கிளப்பி இருக்கிறான். இன்ஸ்பெக்டர் சுந்தரவராஹன் பின்னாலேயே போய்ப் பிடித்திருக்கிறார். அதற்குள் பாருங்கள், அவன் பொண்டாட்டி மாதிரி ஒருத்தி அலறிக்கொண்டு வந்து தழுவிக்கொள்கிறாற் போல் தழுவிக்கொண்டு, அதை மாயமாக அப்புறப்படுத்தி விட்டாள். சுந்தரவாஹன் மூஞ்சியில் சேற்றைப் பூசிக்கொண்டு திரும்பினார்!'

சாம்புவின் மூளை தீவிரமாக வேலை செய்தது. அவன் மனமெல் லாம் காட்சிச் சாலையில் வந்த யுவன் யுவதியைப் பற்றித் திரும்பியது.

மூக்கைத் தடவிக்கொண்டு மூன்று நிமிஷம் சும்மா இருந்தான் சாம்பு. பிறகு, ஆவேசம் வந்தவன்போல், 'கோபாலன்! நாளைக்கு நுங்கம்பாக்கத்தில் அகல்யாவில் ஒரு டீ பார்ட்டி நடக்கிறது!' என்று ஆரம்பித்து மளமளவென்று விவரங்களை ஒப்புவித்து விட்டான்.

•

திருட்டுத் தம்பதிகள் ஏற்பாட்டின்படியே அவர்கள் நாடகம் நடந்தது. அதை அடுத்து, கோபாலன் திட்டம் செய்திருந்த போலீஸ் நாடகமும் நடந்தது! திருடர்கள் கையும் களவுமாகப் பிடிபட்டனர்.

அகல்யாவின் சொந்தக்காரர், சாம்புவுக்கு ஒரு பெரும் சன்மானம் செய்ததோடு, அவனைக் கௌரவப்படுத்த இன்னொரு தேநீர் விருந்தும் ஏற்பாடு செய்துவிட்டார்.

ஒரு பெண் ஜில்லுஸ் காட்சிச்சாலையில், 'சாம்பு, சாம்பு!' என்று போட்ட கூச்சலில் பெருங்கூட்டம் கூடியதை மனத்தில் கொண்டு, அந்த முதலாளி நிஜமாகவே சாம்பு பொம்மையை வைத்து விட்டு, வரும் கூட்டத்தைச் சமாளிக்க முடியாமல் இப்போது திணறிக் கொண்டிருக்கிறார்.

35

வேம்புவின் மாமா பிள்ளை

சாம்புவின் வீட்டு முற்றத்தில் உட்கார்ந்து, விடிந்தது முதலே ஒரு காக்காய் தொண்டை கிழியக் கத்தியது. கேமரா அறையில் நாற்காலியில் சாய்ந்துகொண்டிருந்த சாம்புவும், அந்த நாற்காலியின் கையின் மேல் சாய்ந்து கொண்டிருந்த வேம்புவும் அதைக் கவனிக்காமல் இல்லை.

'காலம்பறேலேர்ந்து காக்காய் போடுகிற சத்தம் சகிக்கலை. உங்களைத் தேடிக்கொண்டு தான் யாரோ வருகிறார்கள்! என்றாள் வேம்பு, அவன் மூஞ்சியில் இடித்து.

'எனக்கு மனுஷாள் யாருமே கிடையாது. உனக்குத்தான் பெரியம்மா பொண்ணு, பெரிய தாத்தாவின் பேத்தி ஆம்படையான்னு ஐந்நூறு உறவு!' என்றான் சாம்பு.

'ஐயோ போகட்டுமே! எல்லாரும் வந்து உங்கள் சாப்பாட்டையெல்லாம் சாப்பிட்டு விட்டுப் போயிட்டாளாக்கும்! ஹும். அவாளுக்கெல்லாம் நீங்கள் கௌரவமா யிருக்கேள்னு என்ன பெருமை தெரியுமா?' என்று கேட்டாள் வேம்பு.

'நிஜம்மாவாடி?'

'நிஜம்மாத்தான்! எல்லாருக்கும் பெருமைதான், இந்த அசட்டு மூஞ்சிக்கு இத்தனை அதிர்ஷ்டமா கொட்டி இருக்கேன்னு!'

'யாருக்குடி அசட்டு மூஞ்சி, அதிகப்பிரசங்கி நாயே?'

'கண்ணாடியைக் கொண்டுவந்து காட்டறேனே! நீங்களே பார்த்துக் கோங்களேன்!' என்று வேம்பு ஒய்யாரமாக எழுந்து, குலுக்க லுடன் நடந்துபோய், சுவரில் மாட்டியிருந்த கண்ணாடியைக் கழற்றி வந்தாள். சற்றுத் தூரத்தில் வரும்போதே அதில் தெரிந்த ஒரு பிரதி பிம்பத்தைச் சாம்பு பீதியுடன் பார்ப்பதைக் கவனித்த வேம்பு, சட்டென்று வாசற்படிப் பக்கம் திருஷ்டியைத் திருப்பி னாள். குடுமித்தலையும், சுருட்டின படுக்கையும், அசட்டுச் சிரிப்புமாக அங்கே சாக்ஷாத் வெங்குட்டு நின்றான். வேம்புவின் அம்மான் மகன் வெங்குட்டு!

'நீ எப்போடா வந்தே?' என்றாள் வேம்பு திடுக்கிட்டுப் போய்.

சாம்புவுக்கு ஏற்பட்டிருந்த பிரமிப்பில் அவனால் வாய் திறக்க முடியாமல் போகவே, மூக்கைமட்டும் பல முறைகள் வேகமாய் உருவிவிட்டுக் கொண்டிருந்தான்.

சாம்புவுக்கு வெங்குட்டுவைக் கண்டாலே சிம்மசொப்பனம். சாம்பு மட்டுமல்ல; அவனுடன் பழகும் எல்லாருமே அவனிடம் ஜாக்கிரதையாக ஒதுங்கித்தான் போக வேண்டும். அரைச் செங்கல்லை ஆயுதமாகக் கொண்டு, ஒருத்தரைக் குறி பார்த்து வேறொருத்தரை அடிக்கும் பேர்வழியைக் கண்டால் ஒதுங் காமல் பின்னே என்ன செய்வது? வெங்குட்டுவின் தந்தையும் பல பிரம்புகளை அவன் முதுகில் முறித்தும் பலன் கிடைக்காமல் போகவே, அந்தக் காரியத்தை ஸர்வேஸ்வரனாகிய கைலாஸபதி யிடம் ஒப்புவித்துவிட்டுச் சும்மா இருந்தார்.

மூன்றாம் வருஷம் தன் சொந்த ஊராகிய தேவகோட்டையி லிருந்து சாம்புவின் வீட்டுக்கு இந்த வெங்குட்டு வந்திருந்தான். மூன்று நாளைக்குத் தங்கக் கம்பியாக இருந்தான். நான்காவது நாள், சாம்புவின் பொடி டப்பாவை அவன் எடுக்கவே, சாம்பு சற்றுக் கடிந்துகொண்டான். அதுவரை வெங்குட்டுவின் விசுவ ரூபம் என்னவென்று அறியாதவன் சாம்பு.

'விளாங்காய்த் தலையா! என்ன நெனைச்சுட்டே நீ? உன்னைக் கட்டிவைத்து உரித்துவிடுவேன். பேசாமல் போ!' என்றான் வெங்குட்டு.

சாம்பு நடுநடுங்கிப் போனான். 'கிடக்கிறான், தெரியாத குழந்தை! நீங்கள் கவனிக்காதீங்கோ!' என்று அனுப்பினாள், வேம்பு தன் புருஷனை.

அன்று சாயந்திரம் வாசல் திண்ணைக்குக் கீழே ஒரு பெரிய பாறாங்கல் போடப்பட்டிருந்தது. அது எதற்காக வந்தது என்று சாம்பு யோசித்தபோது, அடுத்த வீட்டுத் திண்ணையிலிருந்த வெங்குட்டு, 'எலே சாம்பு! இன்னிக்கு ராத்திரி நீ தூங்குறபோது உன் மண்டையை நசுக்க அதை வைத்திருக்கிறேன்! உனக்காச்சு, எனக்காச்சு பார்த்துடலாம்!' என்றான்.

அன்றிரவு சாம்பு தூங்கவே இல்லை. மறுநாள் காலை வெங்குட்டுவைக் காணவில்லை. ஊருக்குக் கிளம்பி விட்டான். அவன் போகிறபோது சாம்புவின் பௌண்டன் பேனாவும் இரண்டொரு வெள்ளிச் சாமான்களும் கூடவே போய்விட்டன. அதற்குப் பின் மூன்று வருஷங்களுக்குக் கிணற்றில் போட்ட கல்லுமாதிரி இருந்த அதே வெங்குட்டு இப்போதுதான் வருகிறான்.

'சௌக்கியமா, அத்திம்பேரே!' என்று கேட்டான் வெங்குட்டு.

'ஹூம்!' என்றான் சாம்பு.

'எங்க அப்பா இருக்கோல்லியோ! அதுதான் அந்தக் கிழம் - போக்கிரித்தனமாப் பேசித்து. சீ போ! எங்க சாம்பு அத்திம் பேரோட நான் இருந்துட்டு வரேன்! - அப்படின்னு சொல்லிட்டு வந்துட்டேன். இங்கே அது வராது. வந்தால் நான் அரைக் கல்லை எடுத்து வீசிட மாட்டேனா?' என்றான் வெங்குட்டு.

திருதிருவென்று விழித்தான் சாம்பு. 'அழகாத்தாண்டா இருக்கு! வா உள்ளே! ஏதானும் சாப்பிட்டியா இல்லையா?' என்று தளுக்காக வேம்பு உள்ளே கூப்பிட்டாள் தன் மாமா பிள்ளையை.

அந்தச் சமயத்தில் அறைக்கு வெளியே செருப்புச் சத்தம் கேட்டது. தொடர்ந்து, 'மிஸ்டர் சாம்பு! சாம்பு இருக்காரா?' என்ற கணீரென்ற குரலும் எழுந்தது.

'வந்துடுடா, வெங்குட்டு! யாரோ பெரிய மனுஷா வந்திருக்கா வந்துடு!' என்று வெங்குட்டுவுடன் போனாள் வேம்பு.

அவள் சொன்னபடியே வந்திருந்த மனிதர் பார்வைக்குப் பெரிய மனிதராகத்தான் தோன்றினார். ஸில்க் ஜிப்பா, ஜரிகை அங்க வஸ்திரம், வைரம் பதித்த தங்கப் பித்தான்கள், தங்கக் கடிகாரம், சங்கிலி, தங்க பிரேம் போட்ட மூக்குக் கண்ணாடி இவைகளுடன் அந்த மனிதர் கை கூப்பி, 'நமஸ்காரம்' என்றார்.

'வாருங்கள், உட்காருங்கள்!' என்றான் சாம்பு. எதிரில் போட்டிருந்த ஒரு ஸோபா நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார் அவர்.

'என்னை உங்களுக்கு இதற்குமுன் பார்த்திருக்க முகாந்தரம் இல்லை. என் பெயர் சோமசுந்தரம். பம்பாய், டில்லியில் என் பெயர் சிறு பையன்களுக்குக்கூடத் தெரியும்!' என்றார் அவர்.

'என்ன விசேஷம்?' என்றான் சாம்பு, மூக்கைத் தடவிக்கொண்டு.

வந்தவர் புன்னகை செய்து, 'நான் இப்போது வந்திருக்கும் காரியம் பரம ரகசியம். நீங்கள் மகா புத்திசாலியாகவும்... உம்... சகலவிதமான உதவிகள் செய்யக்கூடியவராகவும் இருக்கிறதனாலே, உங்களிடம் மட்டும் சொல்லும்படி எனக்கு மேலேயிருந்து உத்தரவாகியிருக்கிறது!' என்றார்.

'ஹூம்? அது யாரு, மேலே?'

'சர்க்காரிலேதான்!'

'ஓஹோ! சொல்லுங்கள்!'

'நான் அந்தக் காரியமாப் பட்டணத்திலே நாளை ஒரு நாள் தங்கப் போகிறேன். நாளை பூராவும் எனக்கு நீங்கள்தான் காவல்!'

'ஹூம்!' என்றான் சாம்பு.

'இந்தியா பூராவிலுமே சில பாங்குகளையும் பெரிய பணக்காரர்களையும் பற்றி அந்தரங்கமான தகவல் எடுத்துப்போக நான் வந்திருக்கிறேன். அது மேற்படி பாங்குகளுக்குக் கூட, நான் போன அப்புறந்தான் தெரிய வேணும். முன்னால் தெரிந்தால் அவர்கள் ஜரூராகி, நமக்கு இருப்பைக் காண்பிக்க மாட்டார்கள். உங்களுக்குத் தெரியாத விஷயமா? ஹி, ஹி!'

'ரொம்ப சரி.'

'பாருங்கள்! இதிலே நான் ஒரு சின்ன முட்டாள்தனம் செய்துட்டேன். முட்டாள்தனம்கூட இல்லை அது; அஜாக்கிரதைதான்!'

'என்ன அது?'

'ஒண்ணுமில்லை. நான் என் டயரியைத் தவற விட்டுவிட்டேன். நோ! நோ! நோ! அதை உங்களைத் தேடி எடுத்துத் தரச் சொல்லவில்லை நான்! அந்த டயரி யார் கையில் அகப்பட்டிருக்கிறதென்றுகூட எனக்குத் தெரியும். அவன் பெயரையும் நான் சொல்கிறேன். நான் இந்த ஊரில் இருக்கும்வரையில் அவன் என்னை நெருங்காமல் கண்காணித்துக் கொண்டால் போதும்!'

'அதைப் போலீஸில் சொல்லிவிட்டால் திவ்யமாகச் செய்வார்களே!' என்றான் சாம்பு.

'போலீஸுக்கு கூடத் தெரியக்கூடாத விஷயம் ஆச்சே! அங்கே தெரியப்படுத்தினால் எப்படியாவது வெளியில் பரவிவிடும். அதனால் காரியமே கெட்டுப்போய்விடும். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் நான் குறிப்பிடுகிற ஆள் பின்னால் நீங்கள் போக வேண்டியது. அவ்வளவேதான்! நீங்கள் வருகிறீர்கள் என்று தெரிந்தால்கூட அந்த ஆள் வாலைச் சுருட்டிக் கொள்வான், தெரிந்ததா? நான் என் காரியத்தைக் கவனித்துக்கொண்டு டில்லிக்குத் திரும்புவேன்!'

'ஹூம்!'

'இந்த உதவிக்காக, நாளைய தேதி போட்டு, செக் ஆயிரம் ரூபாய்க்குக் கொடுத்துவிடுகிறேன். என்ன! அந்தத் திருட்டுப் பயல் பெயரைக் கேட்கவில்லையே நீங்கள்! ரத்தினம்னு பேர். போலீஸ் ரிக்கார்டிலே பார்த்தீர்களானால் கூட அகப்பட்டுவிடும். சைதாப்பேட்டை ரத்தினம்னு இருக்கும்.'

சாம்புவுக்கு ஆயிரம் ரூபாய்மேல் ஆசை விழுந்தது. கேஸும் ஆபத்தே இல்லாமல் சகஜமானதாகவும் தோன்றவே, சிறிது தயங்கினான்.

'ஒன்றும் யோசிக்காதீர்கள், சாம்பு! இப்படி அந்தப் பேனாவைக் கொடுங்கள்! செக்கை எழுதிவிடுகிறேன்!' என்று அங்கேயே

எழுதினார். பிறகு சாம்புவின் கையைக் குலுக்கி, ஒரு புன்னகையும் செய்துவிட்டு வெளியே சென்றார்.

அவர் அப்பால் போனதும் போகாததுமாக, சாம்பு டெலிஃபோனை எடுத்தான். ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டர் கோபாலன் இல்லை; இன்ஸ்பெக்டர் அழகுசிங்கம் நாயுடுதான் பேசினார்.

'உங்களுக்குச் சைதாப்பேட்டை ரத்தினத்தைத் தெரியுமோ?' என்று கேட்டான் சாம்பு.

'தெரியுமோவா! அவன் வெளியே வந்து ஒரு மாசந்தானே ஸார் ஆகிறது? மூணு வருஷமாக வேலூரில் இருந்தவனாச்சே!'

'அவன் எங்கிருப்பான்? விசாரித்துச் சொல்ல முடியுமா?'

அழகுசிங்கம் நாயுடு சாம்புவுடன் கோபாலனைப் போல் சுவாதீனமாகப் பேசுவார். ஆகையால், 'அப்படியே ஸார்!' என்று சொல்லிவிட்டு டெலிபோனை வைத்துவிட்டார்.

ஒரு பெரிய காரியத்தைச் சாதித்துவிட்டவன்போல் சாம்பு உச்சந்தலை வழுக்கையைத் தடவிக் கொடுத்துக்கொண்டு மேஜையடிக்கு வந்தபோது, பெரிய ஏப்பமாக விட்டுக்கொண்டு அங்கே நின்றான் சமத்து வெங்குட்டு.

'நாலணா இருந்தா கொடு, சாம்பு அத்திம்பேரே!'

'என்னத்துக்குடா நாலணா?'

'சினிமா பார்க்கணும், அத்திம்பேரே! முன்னே பார்த்தது அப்புறம் பார்க்கவே இல்லை!'

'நான்கூடத்தான் பார்க்கலை! அதற்காக?'

'நீ பார்க்காட்டாப் போயேன்! எனக்குப் பார்க்கணும்! காசைக் கொடு, நாழியாறது!'

'இதேதடா அசட்டுச் சனியன்! இங்கே காசுமில்லை, மண்ணுமில்லை! போடா அப்படி! அடி வேம்பு!'

'ஏன் அத்திம்பேரே புளுகறே! உன்னண்டையா காசில்லே! இப்போ வந்தானே, அவன்கூட ஆயிர ரூபா கொடுத்தானே!'

'சீ போ! பித்துக்குளி சோணாசலம்!' என்றான் சாம்பு.

'சாம்பு, பாம்பு, வீம்பு, தோம்பு! விளாங்கா மண்டை, கழுகு மூக்கு! உன் ஆயிர ரூபாய் நோட்டு, செல்லாது போக!' என்றான் வெங்குட்டு.

'ஏலே! ஏதானும் பேசினியோ...'

'என்னடா பண்ணிப்பிடுவே! உன்னையே நான் துப்பறிஞ்சுப்பிட மாட்டேனா! ஹூம்?'

'அட கட்டால போறவனே! வர்றத்துக்கு முந்திச் சண்டைக்கு ஆரம்பிச்சுட்டியா, நாசமாப் போறவனே!' என்று உள்ளே இருந்து வந்தாள் வேம்பு.

'பார்! அரைக்கல்லைக் கொண்டுவந்து டணார் டணார்னு உங்க ரெண்டு பேர் மண்டையையும்...' என்று வெங்குட்டு வெளியே போகவே, பின்னாலே சென்ற வேம்பு கதவைச் சாத்தி, தாழ்ப்பாளும் போட்டாள். ஜன்னல் வழியாகச் சாம்பு தைரியமாக, 'அடே! போலீஸுக்கு டெலிஃபோன் பண்ணி, உன்னை உரிக்கச் சொல்கிறேன், பார்!' என்று மிரட்டினான்.

வெளியே போன வெங்குட்டு உள்ளே திரும்பவில்லை!

•

மறுநாள் காலை சாம்பு காபி சாப்பிட உட்கார்ந்த போதுதான் ஒரு விஷயத்தைக் கவனித்தான். முதல் நாள் மேஜைமீதிருந்த அவனுடைய பௌண்டன் பேனாவைக் காணோம்! விஷயங்கள் ஒவ்வொன்றாக ஞாபகம் வந்தன. டில்லி சோமசுந்தரம் வந்து போன பிற்பாடு சாம்பு டெலிஃபோனில் பேசப்போனது, திரும்பி வந்தபோது அசட்டு முழி முழித்துக்கொண்டு வெங்குட்டு நின்றது, பிற்பாடு சண்டை போட்டுக்கொண்டு அவன் வெளியேறினது. இவ்வளவையும் நினைத்துக்கொண்டான். முன்பு ஒரு தரம் திருடியது போதாதென்று வெங்குட்டு மறுபடியும் பேனாவில் கை வைத்து விட்டான்.

'அடி வேம்பு! வேம்பு! மிருகமே!' என்று தலையில் போட்டுக் கொண்டான் சாம்பு.

'ஏன் லோலோன்னு கத்தறேள்?' உங்களுக்கு என்ன பைத்தியமா?'

'எனக்கும் பைத்தியமில்லை. என் வம்சத்திலேயும் பைத்திய மில்லடி! உன் கிளைதான் ஊமத்தங்காய்! உன்னைக் கட்டிக் கிண்டதுக்காக இனிமேதான் எனக்குப் பைத்தியம் பிடிக்கணும். என் பேனாவை உன் மாமா பிள்ளையா, மந்திக் குரங்கா? ஒரு பிரம்மஹத்தி வந்ததே நேத்திக்கு, அது கிளப்பிக்கொண்டு போயிடுத்துடி!'

'அநியாயமாய்ச் சொல்லாதீங்கோ! நாக்கு வெந்து போகும்!'

'அடி அவன் கை எரிஞ்சுபோகும்டி!' என்று உதறினான் சாம்பு.

அந்தச் சமயத்தில்தான் இன்ஸ்பெக்டர் அழகுசிங்கம் உள்ளே வந்தார். வேம்புவும் உள்ளே போனாள். 'மிஸ்டர் சாம்பு! நேற்று கேட்டீர்களே, சைதாப்பேட்டை ரத்தினத்தைப் பற்றி! அவன் காலையிலிருந்து கடை வீதியிலே நிக்கிறான். இதோ இருக்கிறது, அவன் படம்!' என்றார்.

சாம்பு படத்தைப் பார்த்துக்கொண்டு, 'சரிதான்!' என்றான்.

அழகுசிங்கம் உடனே திரும்பவில்லை. 'ஸார்! கோபாலன் நேத்திலிருந்து ரொம்ப வேலைத் தொந்தரவாயிருக்கிறார். அதனால் உங்களை வந்து பார்க்க முடியல்லே. நீங்களே சித்தே வரமுடியுமா, கேட்டுவரச் சொன்னார்!' என்றார்.

'நானா? எனக்கு இன்னிக்குப் பூராவும் வேலை இருக்கே!'

'அப்படியானால், நாளைக்காவது வரமுடியுமென்கிறீர்களா?'

'பார்க்கலாம், பார்க்கலாம்!' என்ற சாம்புவுக்கு, பௌண்டன் பேனாவின் ஞாபகம் வந்துவிட்டது. 'மிஸ்டர் நாயுடு! என் பௌண்டன் பேனாவை ஒரு பேர்வழி கிளப்பி இருக்கிறான். அதைத் தேட உடனே ஏற்பாடு செய்யணுமே!' என்றான். மடமடவென்று அப்போதே வெங்குட்டுவை வர்ணித்திருப் பான். ஆனால், காளியின் உக்கிரத்துடன் வேம்பு வந்து நிற்பதைக் கண்டதும் அவன் வாயடைத்து விட்டது.

'சரி, அப்புறம்?' என்றார் அழகுசிங்கம்.

'அது ஒன்று அகப்பட்டாலே, பல விஷயங்கள் அகப்படும்!' என்றான் சுருக்கமாக.

கடைத்தெருவில் சைதாப்பேட்டை ரத்தினத்தைச் சாம்பு சீக்கிர மாகவே கண்டுபிடித்து விட்டான். மத்யார்ஜுனா பேங்கின் எதிரில் ஒரு வெற்றிலைப் பாக்குக் கடையில் அவன் நின்று கொண்டிருந்தான். சாம்பு எதிரில் ஒரு சோடாக் கடையில் நின்றான். தான் அவனைக் கவனிப்பதாகக் காட்டிக்கொள்ளாம லிருப்பதற்காக, சாம்பு இரண்டு மூன்று சோடா உடைத்துக் குடித்தான்; வாழைப் பழங்கள் வாங்கித் தின்றான். ரத்தினம் பதினொன்றரை மணிவரை நின்றுவிட்டு அங்கிருந்து கிளம்பி னான். சாம்புவும் பின் தொடர்ந்தான். திரிபுராந்தகா பேங்க் வாசலில் ஒரு கடலைக்காரியிடம் ரத்தினம் பேரம் பேசினான். எதிரே ஒரு குருவி சாஸ்திரக்காரனிடம் சாம்பு ஜோஸ்யம் பார்த்தான். அப்படி அரை மணி நடுப்பகல் வேளைக்கு ஸென்ட்ரல் பேங்குக்கு வெளியே ரத்தினம் கூடாரம் போட்டான். எதிரே தகிக்கும் வெயிலில் திண்டாடித் திணறி வியர்த்து உருகினான் சாம்பு, அப்படியும் விடவில்லை தனது முயற்சியை! சரியாக மூன்று மணிக்கு ஆங்கிலோ - பர்மன் பேங்குக்கு வெளியே ரத்தினம் யாரையோ எதிர்பார்ப்பவன்போல் காத்து நின்றான். சாம்பு எதிரே சௌகரியமாக இருந்த ஒரு குட்டிச் சுவரின் பின்னால் ஒண்டிக் கொண்டிருந்தான். அப்பா! ஒரு மனுஷனை அவனுக்குத் தெரியாமல் பின்தொடருவதென்றால் எவ்வளவு சிரமமான காரியம்! மாலை ஆறு மணி சுமாருக்கு, சாம்புவுக்குப் பின்தொடர்ந்ததில் திராணியே போய் அதில் ஒரு வெறுப்பும் தட்டிவிட்டது. மேல்மூச்சு கீழ் மூச்சு வாங்க கடைசியில் அவன் நின்றபோது, அந்த ரத்தினமே அவனைத் தேடிக்கொண்டு எதிரில் வந்துவிட்டான்!

'ஏய்! என் பின்னாலேமட்டும் வர்றியா? அந்த ஆள் பின்னாலேயும் வர்றியா? சொல்லிடு நிசத்தை!' என்றான் அவன் திடும்பிரவேசமாக.

சாம்பு, இதைச் சிறிதும் எதிர்பார்க்கவில்லையாதலால் விக்கித்துப் போனான். இருந்தாலும், சமாளித்துக்கொண்டு ஒன்றும் அறியாதவன் போல, 'நான் யார் பின்னாலேயும் வரல்லையே, தம்பி!' என்றான்.

'அட! யார்கிட்டே அளக்கிறே? அதிருக்கட்டும்! காலையி லேர்ந்து என் பின்னாலேயே வரியே! என்னாத்தைத்தான் கண்டுபிடிச்சே?'

'நீ என்ன செஞ்சே, நான் கண்டுபிடிக்க?' என்றான் சாம்பு. தெருவில் ஜன சஞ்சாரம் சிறிது இருந்ததால், அவன் அவ்வள வாக ரத்தினத்துக்குப் பயப்படவில்லை.

'நான் என்ன செஞ்சேனா! அந்தப் போக்கிரிப்பயல்தான் கொண்டு போயிட்டானே, நாலு பேங்கிருந்து. நெருங்க வொட்டல் லையே நீ!' என்றான் ரத்தினம் ஆத்திரமாக.

'என்ன பேசுகிறீர்கள்? ஸ்டேஷனில் போய் பேசலாமே!' என்று கோபாலனின் குரல் பின்னால் கேட்டது. ரத்தினத்தின் கையை அவர் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு, ஸ்டேஷனுக்கு நடந்தார். சாம்புவும் பின் தொடர்ந்தான்.

அங்கேபோய் உட்கார்ந்ததும், 'ஸாமி! எசமான்! நான் ஒண்ணுமே பண்ணலீங்க!' என்றான் ரத்தினம், கோபாலன் காலில் விழுந்து.

'உன்னை யார் என்ன செய்தாய் என்று சொன்னார்கள்? எப்போது ஒரு தரம் நீ ஜெயிலுக்குப் போய்விட்டு வந்தாயோ, அப்புறம் உன் குணமே மாறி இருக்காதா? ஹூம்!' என்றார் இன்ஸ்பெக்டர்.

'ஆமாங்க, எசமான்!'

'நீ இப்போ கோயிலுக்குப் போறியாம்; பஜனை செய்யறியாம்; கேள்விப்படறேன்! வாஸ்தவந்தானா? சொல்லு பார்ப்போம்!'

'வாஸ்தவம், எசமான்! இவருதான் என்னைத் துரத்து துரத்துனு காலையிலேர்ந்து துரத்துறாரு.'

'இவர் கிடக்கிறார், விஷயம் தெரியாத மனுஷன்! அப்பாவி!'

சாம்புவுக்கு ரத்தம் முகத்தில் ஏறிற்று. 'கோபாலன் பேச்சு இன்று நன்னாவேயில்லையே கொஞ்சமும்!'

'ஆமாமுங்க. உங்க மாதிரி அனுபவப்பட்டவரில்லை இவரு!'

'ஏதானும் விஷயம் இருந்தா, அப்புறமா வந்து சொல்லு! என்ன?'

'கட்டாயம் சொல்றேன். நான் இப்போ வரேனுங்க.'

கோபாலன் பரிவாக, 'போய்விட்டு வா, அப்பா!' என்றார். சாம்புவுக்கு, கோபாலன் காரியம் வயிற்றெரிச்சலாக இருந்தது.

சைதாப்பேட்டை ரத்தினம் திரும்பி வாசற்படியை நெருங்கி இருப்பான். இன்ஸ்பெக்டர் கோபாலனின் முகத்தில் ஏற்பட்ட பிரமாதமான மாறுதல் சாம்புவைத் தூக்கிவாரிப் போட்டுவிட் டது. பல்லை நெறித்துக்கொண்டு அவர் புலிபோல் முன்னால் பாய்ந்தார்.

ரத்தினம் உருட்டி அடித்துக்கொண்டு திரும்ப உள்ளே வந்து விழுந்ததையும், கோபாலன் கையில் ஒரு சாட்டை பயங்கரமாகச் சுழன்றதையுமே மறுநிமிஷம் சாம்பு கண்டான். 'மயிலே, மயிலேன்னா போடுமா?' என்றார் கோபாலன்.

'ஒப்புக்கிறேன், எசமான்! அடிக்காதீங்க, எசமான்!' என்று ரத்தினத்தின் அலறல் கேட்டது.

'சேச்சே! நீ கோயிலுக்குப் போறவனாச்சே! பஜனை பண்றவ னில்லே!' சொடேர், சொடேர் என்று சாட்டை இறங்கியது.

'ஐயோ அடிக்காதீங்க, எசமான்! எசமான், வலிக்குது எசமான்!' ரத்தினம் சாம்புவின் காலைப் பிடித்துக் கொண்டான். 'உள்ளதைச் சொல்லிடறேன், அடிக்காம இருக்கச் சொல்லுங்க சாமி!'

சாம்புவினால் பேசவே முடியவில்லை; அவன் உதடுகள் பதறின.

ரத்தினம், 'சாமி! நான் திருடவே இல்லிங்க. பழைய கேடி சோமசுந்தரந்தான் நேத்து ஆறு பேங்கிலே அடிச்சான்; இன்னைக்கும் நாலு பேங்கிலே புகுந்து கொள்ளையடிச்சான். நான் வெளியேதான் நின்னேனுங்க!' என்றான்.

சாம்புவுக்குத் திக்கென்றது. யார் இந்த சோமசுந்தரம்? டில்லி சோமசுந்தரமாயிருக்குமோ ஒருகால்?

'சாமி! அவன் கொள்ளையடிக்கப்போற சமாசாரம் தெரிஞ்சு நானும் பங்கு கேட்டேனுங்க. முடியாதுன்னானுங்க. 'இந்தச் சாம்பு பின்னாலே வராரு, ஓடிப் பிளைச்சுக்கோன்னானுங்க. நான்தான் முட்டாள்தனமாக நின்னுட்டேனுங்க! அவன் தப்பிச்சு ஓடிட்டானுங்க!'

சாம்புவுக்கு விஷயம் பூராவும் விளங்கிவிட்டது. முதல்நாள் வந்த பெரிய திருடன், இந்தச் சின்னத் திருடன் தொந்தரவு இல்லாமல் தன் காரியத்தை நடத்திக்கொள்ளச் சாம்புவை அமர்த்தியிருக்கிறான்!

'அவன் தப்பி ஓடிடுவானோ? அவனைப் பிடிக்கவும் இந்த அப்பாவி மனுசரு நல்லா ஏற்பாடு பண்ணி இருப்பாரே! உன் பங்கை நீ வாங்காமே போகலாமா, தம்பி?' என்றார் இன்ஸ்பெக்டர். சாட்டை மீண்டும் துடித்தது. சாம்பு கையைப் பிசைந்தான். இன்ஸ்பெக்டருக்கு என்ன பதிலைச் சொல்லுவான்?

டெலிஃபோன் மணி அடித்தது. அழகுசிங்கம் பேசினார், சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து: 'சொல்லுங்கள் சாம்புவிடம்! அவர் பேனாவை எடுத்த ஆசாமியை இங்கே பிடித்து விட்டோம். ஒரு கார்டுக்கு அட்ரஸ் எழுத வேண்டும்!' என்று நம்ம ஆள் மெல்லக் கேட்டு, அதை வாங்கிப் பார்த்துவிட்டான். சாம்புவின் பேனா என்று தெரிந்ததும் ஆசாமியின் பெட்டியையும் சோதனை போட்டோம். ஒரே ரூபாய் நோட்டுகளாக இருக்கிறது! வேறு யாருமில்லை. பழைய கேடி சோமசுந்தரந்தான். மைனர் வேஷத்தில் வந்திருக்கிறான். வேண்டுமென்றே பேனாவைக் கொடுத்துத் தன்னை அடையாளமாகச் சாம்பு பிடிக்க ஏற்பாடு செய்திருக்கிறார் என்கிறான்! செய்திருப்பார் சாம்பு, அப்படியும்! பூனைபோல் இருந்துகொண்டு பலே வேலைக்காரராச்சே அவர்!'

இதைக் கேட்டதும் சாம்புவுக்கு ஒருமுறை வியர்த்து விட்டது. செக் எழுத வாங்கிய பேனாவை, இந்த சோமசுந்தரம் அல்லவா அதைக் கையோடு கொண்டு போயிருக்கிறான் போல் இருக்கிறது!

மூன்று தினங்களாகவே பல பாங்குகளில் நடக்கும் திருட்டு சம்பந்தமாகச் சாம்புவைத் தாம் பார்க்க விரும்பியதாகக் கோபாலன் பிற்பாடு விவரித்தார். சாம்பு வாய் திறக்கவில்லை. மௌனம் ஸர்வார்த்த ஸாதகம் என்பது அவனுக்குப் புதிதல்லவே.

வெங்குட்டு எங்கும் போய்விடவில்லை. வேம்புவின் பெரியம்மா பெண் வீட்டுக்குத்தான் போயிருந்தான். இட்டிலி சாப்பிட அரையணா கேட்டு அது கிடைக்காத கோபத்தில் செங்கல்லை எடுத்து வீசவே, அங்கேயும் அவனை விரட்டி விட்டார்கள். ஆகவே, சாம்புவின் வீட்டுக்கே திரும்பி வந்தான். மூன்று நாள்கள் தங்கியிருந்து விட்டு, தன் அப்பா ஞாபகம் வந்துவிட்டதாகச் சொல்லிக்கொண்டு அவசரமாகக் கிளம்பினான். அவன் போனபிறகு பார்த்தபோது, சாம்புவின் பேனா மறுபடியும் காணாமல் போயிருந்தது!

36

பம்பாயில் பிரக்யாதி

சாம்பு தையற்காரனிடம் சூட் கோட்டுக்கு அவசரமாக அளவு கொடுத்தான். உடனே பம்பாய்க்குப் போய் வரவேண்டிய நிர்ப்பந்தம் ஒன்று எதிர்பாராதவிதமாக அவனுக்கு ஏற்பட்டுவிட்டது.

இரண்டு வருஷங்களுக்கு முன்பாக, பம்பாய் பேங்க் கொள்ளை ஒன்று நடந்து பத்திரிகைகளிலெல்லாம் தடபுடல் பட்டபோது, சாம்புவைப் புறப்பட்டு வரும்படி பம்பாய் போலீஸ் பெரிய அதிகாரி ஒருவர் வருந்தி வருந்தி அழைத்தார். சென்னைப் பட்டணத்தில் இன்ஸ்பெக்டர் கோபாலனைப் போல் பம்பாய்ப் பட்டணத்தில் யார் இருக்கிறார்கள்? சாம்பு புத்திசாலித்தனமாக, 'இப்போது நான் வந்து உபயோகம் ஒன்றும் ஏற்படப் போவதில்லை!' என்று எழுதிப் போட்டு விட்டான். பிடிபட்ட திருடர்கள் சிறைச்சாலைக்குச் சென்றார்கள் என்றாலும், கொள்ளை போனது போனதுதான்.

அதற்குப் பிறகு, முழுசாக இரண்டு வருஷங்கள் ஆன பிறகு, சாம்புவுக்குப் பம்பாய் போக வேண்டிய பிரமேயம் இப்போது ஏற்பட்டது.

பம்பாயில், பிரபல சினிமா ராணி உமாதேவிக்கு, தன் புதிய பங்களா கிருஹப்பிரவேசத்துக்குச் சாம்புவைத் தருவிக்க வேண்டுமென்று அவளுக்கு ஓர் ஆசை உதித்தது. ஒரு நீண்ட கடிதம் போட்டாள். வேம்புவும், 'போய்விட்டுத்தான் வாருங்களேன். வீட்டையே சுற்றிக்கொண்டிருக்கிறீர்களே!' என்றாள்.

'வருகிறேன். ஆனால் நான் வருகிற விஷயம் மட்டும் வெளியில் தெரிய வேண்டாம்!' என்று சாம்பு பதில் போட்டு வைத்தான். உடனே கிளம்புவதற்கும் துரிதமாக ஏற்பாடுகள் செய்தான்.

'உங்களைத்தானே!' என்றாள் வேம்பு. சாம்பு நிமிர்ந்து உட்கார்ந்தான்.

'பம்பாய் போகிற பெருமை பிடிபடமாட்டேனென்கிறதோ! என்னைக்கூடப் பார்க்க மாட்டேளோ?' என்று நெருங்கி வந்தாள் வேம்பு. வேடிக்கையாக அவன் மூக்கைப் பிடித்து ஆட்டி, வரபோது எனக்கு என்ன வாங்கிண்டு வரேள், பம்பாயிலேர்ந்து?' என்றாள்.

'கிடைக்கிறதை வாங்கிண்டு வரேன்!' என்றான் செல்லமாக.

'அசட்டுப் பிசட்டுனு அல்வாவும் கோவாவுமா ஏதானும் மூட்டை கட்டிண்டு வந்து நிக்காதீங்கோ. நல்ல இங்கிலீஷ் கறிகாயா பார்த்து வாங்கிண்டு வாங்கோ!' என்றாள்.

சாம்பு பம்பாய்க்குக் கிளம்பும் முன்பு, எதிர்பாராதவிதமாக ஒரு புதிய நண்பன் தோன்றி, டிக்கெட் வாங்கி, காதும் காதும் வைத்தாற்போல் சீட்டு ரிஸர்வ் செய்துகொடுத்து ரயிலிலும் ஏற்றினான். ரயில் கிளம்பியது. சாம்புவும் நிம்மதியாகச் சாய்ந்து, கொட்டாவி விட்டுத் தூங்குவதற்குத் தயாரானான்.

இந்த நிம்மதி அரக்கோணம் ஜங்ஷனை அடையும் வரையில்தான் சாம்புவுக்கு இருந்தது. அங்கே ஒரு டிக்கெட் பரிசோதகர் நுழைந்து, 'யார் அய்யா இங்கே சாம்பு? ஹு இஸ் மிஸ்டர் சாம்பு?' என்று கேட்டுக்கொண்டே வந்தார்.

சாம்பு திடுக்கிட்டுப்போய், 'ஏன், நான்தான்!' என்றான். வண்டியிலிருந்த அவ்வளவு பேரும் சாம்புவையே கவனித்தார்கள்.

'உங்களிடம் டிக்கெட் இல்லை!'

'இருக்கிறது!' என்றான் சாம்பு.

'இருக்கிற டிக்கெட் பிளாட்பாரம் டிக்கெட்! பம்பாய் டிக்கெட் இல்லை அது!'

சாம்புவுக்கு வெலவெலத்துப் போயிற்று. அதெப்படி இருக்கும்? இருந்தாலும் இந்தப் பரிசோதகருக்கு எப்படித் தெரியும் அது?

'யோசிக்காதீர்கள், ஸார்! ஒன்றும் முழுகிப் போய்விடவில்லை. உங்களை ரயிலேற்ற வந்தவர் கைத்தவறுதலாகத் தம்முடைய பிளாட்பாரம் டிக்கெட்டை உங்களுக்குக் கொடுத்துவிட்டு, உங்கள் டிக்கெட்டைக் கையோடு கொண்டு போய்விட்டார். ரயில் போனவுடன் அதைக் கவனித்து ஸ்டேஷனில் சொல்லி இருக்கிறார். தந்தி வந்திருக்கிறது. கவலைப்படாமல் போங்கள்! என்றார். சாம்புவுக்கு வியர்த்து விட்டது. இறங்கிவிடலாமா என்றுகூட நினைத்தான்.

அடுத்த ஜங்ஷனில் இன்னொரு டிக்கெட் பரிசோதகர் தடபுடலாக வந்தார். அந்த ஜங்ஷனுக்கும் தந்தி வந்திருப்பதாக அவர் சொன்னார். அவர் பின்னால் சாம்புவைப் பார்க்க ஒரு சிறு கூட்டமும் வந்தது. மூன்றாவது ஜங்ஷனில் இன்னொரு பரிசோதகரும் இன்னும் பெரிய கூட்டமும். இப்படி ஒவ்வொரு ஜங்ஷனிலும் இதே கதை. சாம்புவின் வண்டியிலிருந்தவர்கள் பரிசோதகர் வருமுன்னமே, 'சாம்பு! உங்களைத்தானே தேடிக்கொண்டு வருகிறார்' என்று சொல்லத் தொடங்கி விட்டார்கள்.

பம்பாய் போய்ச் சேர்ந்து, ஸ்டேஷனில் உமாதேவியின் கணவனைப் பார்த்தபிறகுதான் சாம்புவின் நெஞ்சிலிருந்த பெரிய சுமை இறங்கியது. காரில் ஏறிக்கொண்டு, 'உமா ஸதனுத்துக்குப் போய்ச் சேர்ந்தான் சௌகரியமாக.

பம்பாயின் நெருக்கடியான இடங்களுக்கு எட்டாக் கையில் புதிதாகக் கட்டப்பட்ட பங்களா - உமா ஸதனம். சுற்றிலும் தோட்டம்; அப்பால் திறந்தவெளி. 'இப்போதைக்கு உமா ஸதனம் தனியாக இருந்தாலும், இரண்டு வருஷங்களுக்குள் சுற்றிலும் பல பங்காளக்கள் கிளம்பி விடும்!' என்று பெருமையடித்துக்கொண்டான் உமாவின் புருஷன்.

உமாவைக் கண்டபோது சாம்பு ஒரு கணம் திகைத்துவிட்டான். அவன் பார்த்த அழகிகளில் அவளுக்கு நிகர் இல்லை என்று நினைத்தான் சாம்பு.

உமாவின் கணவன் கலகலப்பாக இருந்தான். 'நீங்கள் எங்கே வராமல் இருந்துடப் போறீங்களோன்னு பயந்துட்டேன், ஸார்! நீங்க வரணும்னு இவங்களுக்கு ரொம்ப ஆசை. தவிர, கிருஹப் பிரவேசம் செய்யறோமா? நாலுபேர் வரபோது போறபோது நீங்கள் இருந்தால் எவ்வளவு பந்தோபஸ்து!' என்றான் அவன்.

சாம்பு பதில் சொல்ல வாயெடுக்குமுன்பு அன்றைய பத்திரிகை வந்துவிட்டது. 'சாம்பு - சென்னையின் துப்பறியும் நட்சத்திரம், பம்பாயின் சினிமா நட்சத்திரத்தின் பங்களாவுக்கு விஜயம் செய்கிறார்!' என்று முதல் பக்கத்திலே பெரிதாக அச்சிடப் பட்டிருந்ததைக் கண்டு, சாம்பு வாயைப் பொத்திக் கொண்டான்.

அன்று சாயந்திரம் சாம்பு வாக்கிங் போய்விட்டு வந்தான். பங்களாவை நெருங்கிய சமயத்தில், தான் வந்த அன்றே எவ்வளவு தூரம் பிரக்யாதி அடைந்துவிட்டானென்பதைக் கண்டான். வாட்டசாட்டமான ஓர் ஆசாமி வேகமாக வந்தார். சாம்புவின் கையைப் பிடித்துக் குலுக்கி, 'உங்களைத் தனியாகப் பார்க்கிறதென்றால் எவ்வளவு சிரமமாக இருக்கிறது!' என்றார்.

'நீங்கள் யார் தெரியவில்லையே!'

அந்த ஆசாமி, சற்றுத் தொலைவில் தென்பட்ட ஒரு பங்களாவைச் சுட்டிக்காட்டி, 'அங்கே வாருங்கள், பேசலாம்!' என்று அவனை அழைத்துக்கொண்டு போனார். போனதும் காபி கொண்டு வைக்கப்பட்டது. சாப்பிட்டார்கள்.

'மிஸ்டர் சாம்பு! இந்தக் காபியைக்கூட நான் தாராளமாக எடுத்துச் சாப்பிடுவதில்லை. இதைக் கொண்டு வைத்துவிட்டுப் போனவன் விஷம் கலந்து வைக்கவில்லை என்று என்ன நிச்சயம்?' என்று கேட்டார் அவர்.

சாம்பு நடுங்கினான். இவன் யார்?

'ஆமாம் சாம்பு! போலீஸ் இலாகாவில் வெகுகாலம் பெரிய உத்தியோகம் வகித்து, தினந்தினம் கொலையையும் கொள்ளையையும் பற்றியே கேள்விப்படுகிறவருக்கு, இந்த மாதிரிச் சந்தேகம் ஏற்படுவது ரொம்ப சகஜந்தான். நான் யாரென்று தெரிந்தால் நீர் ஆச்சரியப்படுவீர். நான்தான் இந்தப் பம்பாயில் போலீஸ் டெபுடி கமிஷ்னர். என் பெயர் சங்கரன் குட்டி நாயர்!'

சாம்பு திகைத்தான். எவ்வளவு பெரிய மனிதர் எவ்வளவு எளிமையாக இருக்கிறார்! அவர் எழுந்து பீரோவுக்குப் போய், பெரிய பைல்களாக நாலை எடுத்துக்கொண்டு வந்து மேஜையின் மீது போட்டார். 'முக்கியமான வேலையெல்லாம் நான் வீட்டிலேதான் செய்கிறது. தவிர, எனக்கு இங்கே ஒரு பங்களா இருப்பது வெகு பேருக்குத் தெரியாது! நீங்களும் வெளியே சொல்லிவிட வேண்டாம்!' என்றார்.

சாம்பு தலையை ஆட்டினான். அப்புறம் சங்கரன் குட்டி பல கேஸ்களைப்பற்றிச் சரமாரியாகப் பேசினார். தம் வீரப் பிரதாபங்களை அளந்து கொட்டினார். அதைக் கேட்கக் கேட்க சாம்பு அசந்து போனான். உச்சி குளிர்ந்து பங்களாவுக்குத் திரும்பினான்.

மறுநாள் பூராவும் சாம்புவுக்கு வேலை எதுவுமில்லை. அந்த டிவிஷன் ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் அவனை வந்து பார்த்து, தமது சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொண்டார். 'வந்ததுதான் வந்தீர்களே. இரண்டு வருஷத்துக்கு முந்தி இங்கே நடந்த பேங்க் கொள்ளையைப் பற்றி உங்கள் யோசனைகள் இப்போதாவது சொல்ல முடியுமா?'

சாம்பு தலையை ஆட்டி, 'வந்திருக்கும் அலுவல்கள் தீரட்டும்! இப்போது என் மண்டையில் வேறு விஷயம் வைத்துக்கொள்ள இடம் இல்லை!' என்றான்.

சாம்புவின் மண்டையைப் பார்த்த இன்ஸ்பெக்டருக்கு சிரிப்பு வந்தது. அதைக் காண்பித்துக் கொள்ளாமலே எதற்கும் பைல் களை அனுப்பும்படி சூப்பரிண்டெண்ட் உத்தரவிட்டிருக்கிறார். மெட்ராஸிலிருந்து அவருக்கு அட்வைஸ் வந்திருக்கிறது. சௌகரியப்படிச் செய்யுங்கள்!' என்று சொல்லிவிட்டுப் போனார். அவர் சொன்னபடியே பைல்கள் வந்துவிட்டன. அன்றிரவு அவனுக்கு அவை தலைக்குயரமாக உபயோகப் பட்டன!

சாம்புவின் கவலை, மறுநாள் விடியும்போதே தொடங்கியது. எழுந்ததும் எழுந்திராததுமாக உமாதேவியின் வேலைக்காரி அலறி அடித்துக்கொண்டு ஓடி வந்தாள். 'எஜமானியம்மாளின் வைர அட்டிகையைக் காணோமாம்! இன்னும் தூங்குகிறீர்களே!' என்று கூவினாள்.

சாம்பு எழுந்து உட்கார்ந்து கண்களைக் கசக்கி, மூக்கையும் சரி பார்த்துக்கொண்டான். பிறகு, 'இதென்னடா அபசகுணம்!' என்று கோட்டைத் துரிதமாக மாட்டிக்கொண்டு ஹாலுக்கு ஓடி வந்தான். ஹாலில் அவனுக்கு முன்பாகவே எல்லாரும் கூடியிருந் தார்கள். முதல் நாள் வந்த இன்ஸ்பெக்டர்தான் உட்கார்ந்து கேள்வி கேட்டு குறிப்புகள் எழுதிக்கொண்டிருந்தார். உமாவும் அவள் புருஷனும் பதில் சொல்லிக்கொண்டிருந்தார்கள். சாம்புவைக் கண்டதும் இன்ஸ்பெக்டர் குறும்பாக, 'வாருங்கள், ஸார்! நீங்களும் வந்திருக்கிறீர்கள்! திருட்டும் நடந்திருக்கிறது!' என்றார்.

சாம்பு அசடு வழியச் சிரித்தான். 'எனக்கு முந்தி நீங்கள் வந்திருக்கிறீர்களே! ஹி, ஹி, கவனித்துக்கொள்ளுங்கள்!' என்று சொல்லி மோவாய்க்கட்டையைத் தடவினான்.

களவுபோன பண்டம் விலையுயர்ந்ததுதான். உமாவும் அவள் கணவனும் அதைப்பற்றிக்கூட வருத்தப்படவில்லை. ஆனால், நாளைக்கு ஒரு விசேஷம் நாலு பேர் வரப்போகிறார்கள். அந்தச் சமயம் பார்த்து இது நடந்ததே என்பதுதான் அவர்கள் தாபம் என்று தோன்றியது. இன்ஸ்பெக்டர் வேலைக்காரியையும் தோட்டக்காரனையும் பார்த்து, 'இவர்களை உதைத்தால் விஷயம் வெளிவரலாம்!' என்றார்.

'ஐயோ கடவுளே! ஏழைங்க நாங்க!' என்று இரண்டு பேரும் ஏக காலத்தில் கதறினார்கள்.

'மிஸ்டர் சாம்பு! திருடியது யாராக இருக்கலாம்?' என்றார் இன்ஸ் பெக்டர் சாம்புவின் பக்கம் திரும்பி.

கோட்டுப் பைக்குள் ஆழக் கையைவிட்டு, மூக்கை உச்சிமோட் டுக்குத் திருப்பி யோசனையில் ஆழ்ந்தான் சாம்பு. மூளையில் ஏதோ சட்டென்று பட்டு, அவன் முகம் விகாரம் அடைந்தது. ஏனென்றால் அவன் கோட்டுப் பையின் அடியில், காணாமற் போனதாகச் சொல்லப்பட்ட வைர அட்டிகையைத்தான் அவன் விரல்கள் வருடிக் கொண்டிருந்தன! அந்த சந்தர்ப்பத்தில், 'நான்தான் திருடன்!' என்று அவன் எப்படி உளறிக்கொட்டாமல் இருந்தான் என்பது நாளைக்கும் சாம்புவுக்கும் ஓர் ஆச்சரியமே! அட்டிகை அங்கே எப்படி வந்தது? அவன் மனம் இதையே திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டது.

இன்ஸ்பெக்டர் குறிப்புகளை எடுத்துக்கொண்டு, இண்டு இடுக்கு விடாமல் உமாதேவியின் பங்களாவைத் துழாவிவிட்டுப் போனார். அப்புறம் இரண்டு கான்ஸ்டபிள்கள் வந்து வேலைக்காரியின் வீட்டையும் தோட்டக்காரன் குடிசையையும் தேடியாயிற்றென்று சொன்னார்கள். சாம்பு மட்டும் கோட்டுக்குள் கைவிட்டபடி ஒதுங்கி ஒதுங்கிப் போய்க்கொண்டிருந்தான்.

பக்கத்தில் யார் வந்தாலும் சட்டென்று சாம்பு அப்பால் நகர்ந்து கொண்டான். மேலும் கீழும் பார்த்துக்கொண்டு பங்களாவின் தோட்டத்தைச் சுற்றி சுற்றி வந்தான்; காம்பவுண்டுக்கு வெளியில் ஏகாந்தமாகப் போய் வெகு நேரம் நின்று யோசித்தான். இனிமேல் என்ன செய்வது என்று ஒன்றுமே பிடிபடவில்லை.

திருடன் யாராக இருக்கலாம்? வேலைக்காரியுமல்ல; தோட்டக்காரனுமல்ல! நகை இருப்பது, இரும்புப் பெட்டி சாவி இருக்குமிடம் எல்லாம் உமாவைத் தவிர, யாருக்குத் தெரிய முடியும்? வெகுநேரம் சிந்தனை செய்தபின் சாம்புவுக்கு ஒரு பதில்தான் திரும்பத் திரும்பக் கிடைத்தது. அவன் கணவனுக்குத்தான் அது தெரியும்!

ஏன் அவனே திருடியிருக்கக் கூடாது? அவன் ஒருகால் உமாவுக்குத் தெரியாமல் கடன்காரனாக இருந்தால்? பார்க்கலாம்!

கையெழுத்து மறையும் நேரத்தில் சாம்புவுக்கு ஒரு புதிய யோசனை தோன்றியது. ஏன் டெபுடி போலீஸ் கமிஷ்னரிடம் கலந்துகொள்ளக் கூடாது? அவர்தான் சந்தர்ப்பப்பட்டபோதெல்லாம் வரச் சொல்லியிருக்கிறாரே? யார் கண்ணிலும் படாமல் சங்கரன்குட்டியின் பங்களாவுக்கு விடுவிடென்று சாம்பு நுழைந்து விட்டான். அவன் போன சமயம் அவர் பைல் ஒன்றின்மீது கவனமாக இருந்தார்.

'வாருங்கள், மிஸ்டர் சாம்பு! உங்களைத்தான் நினைத்துக் கொண்டிருந்தேன்! இதோ ஒரு கேஸ்! கேட்கிறீர்களா? கூட்டத்தில் ஓர் ஆசாமி வைர நெக்லெஸுடன் பிடிபட்டிருக்கிறான். முட்டாள்! அவன்மட்டும் புத்திசாலியாயிருந்தால் என்ன செய்திருப்பான் தெரியுமா? கையும் களவுமாக அகப்பட்டிருக்கவே மாட்டான்! அதைச் சரியான இடமாக வெட்டிப் புதைத்து விட்டிருப்பான்! ஹஹ்ஹா! என்ன சொல்கிறீர்?' என்றார்.

சாம்பு கூர்ந்து கவனித்தான் அவரை. 'ஏன் இப்படிப் பேசுகிறார்?'

'யோசிக்காதேயும், சாம்பு! போலீஸ் டெபுடி கமிஷ்னரே இப்படிப் பேசுகிறாரே என்று பார்க்கிறீரோ? அகௌரவமான விஷயமாக இருந்தால் திருடனாயிருந்தாலென்ன, கமிஷ்னராகவே இருந்தால் என்ன? மனத்திலே ஆழப் புதைக்க வேண்டும்! பண்டமாக இருந்தாலோ, மண்ணிலே புதைக்க வேண்டும்! யாருக்கும் இதே ரூல்தான் , ஹஹ்ஹா!'

மேலும் பல கேஸ்களைப் பற்றிச் சொன்னார் சங்கரன். ஒவ்வொன்றிலும் வெட்டிப் புதைப்பதே பிரதானமாக இருந்தது. சாம்பு திரும்பியபோது தன் மனத்திலும் ஒரு தீர்மானம் செய்து கொண்டு விட்டான்.

இரவு பன்னிரண்டு மணிக்கு பங்களா நிசப்தமாக இருந்தபோது, சாம்பு எழுந்தான். காலடிகளை நிதானமாக வைத்து, வெளியே வந்தான். மூன்று நிமிஷங்களுக்குப் பிறகு தோட்டத்தில் அவன் மண்வெட்டியுடன் வேகமாகப் போய்க்கொண்டிருந்தான். ஒரு புளியமரத்தின் அடிதான் அவன் பார்த்து வைத்திருந்த இடம். சுற்றுமுற்றும் கவனித்துவிட்டு, மண்வெட்டியால் தரையில் துரிதமாக இரண்டு போடு போட்டான். மூன்றாவது போடு அவன் போடவில்லை. அவன் மண்டையில் ஓர் அடி படீரென்று விழுந்தது. கலங்கிப்போன சாம்பு திரும்புவதற்குள், இரு கரிய தடியர்கள் அவனைக் கையைப் பிடித்து அப்பால் உதறித் தள்ளினார்கள். 'டேய்! யாரடா நீ. புதைச்சு வைத்தவன்போலே அடையாளமா வெட்ட வந்துட்டே! நாங்களே மூணுநாளாத் தேடறோம். கிடைக்கல்லே. உனக்குத் தெரிஞ்சு போச்சோ?' என்றான் ஒருவன்.

சாம்பு திகைத்தான். 'யார் இவர்கள்? எதற்காக வந்தவர்கள்? என்ன சொல்லுகிறார்கள்?'

'தெரிஞ்சுதான் அவர் வெட்டுகிறார்!' என்று ஒரு குரல் கேட்டது. சலசலவென்று உலர்ந்த இலைகளைப் பல யானைகள் மிதிப்பதுபோல் சத்தமும் வந்தது. நாலைந்து கான்ஸ்டபிள்கள் காம்பவுண்டுச் சுவரைத் தாண்டிக் கொண்டிருந்தார்கள்.

போலீஸ் தலைகளைக் கண்டதும் சாம்புவுக்குத் திகில் பிடித்துக் கொண்டது. அவர்கள் கையில் அப்போது சிக்கிக்கொண்டால் நிமிஷத்திலே அவர் பையைச் சோதனை போட்டு விடுவார்களே! பிடித்தான் ஓட்டம், பங்களாவை நோக்கி!

பங்களாவை அடைந்த சாம்பு, ஹாலில் இப்போது விளக்கு எரிந்துகொண்டிருந்ததைக் கவனித்தான். உமா கவலையுடன் உட்கார்ந்திருக்க அவள் புருஷன் உலாத்திக் கொண்டிருந்தான். ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அவன் கையில் அட்டிகையைத் திணித்தான். எப்படியாவது தன்மீது குற்றம் சேராமல் தப்பித்துக் கொள்ளும் ஒரே நோக்கந்தான் சாம்புவுக்கு இப்போது. 'போலீஸ் வருகிறது! ஒப்புக்கொள் உன் குற்றத்தை!' என்று உறுமினான். மேல் மூச்சு, கீழ்மூச்சு வாங்க நின்ற சாம்புவுக்கு இப்படிச் சொன்னதற்கே எங்கே அவன் தன்னைப் புடைத்து விடுவானோ என்று உள்ளூரப் பயமே! ஆனால், அவனோ கதவைச் சாத்திக் கொண்டு வந்து சாவகாசமாகப் பேச உட்கார்ந்தான்.

'உட்காருங்கள், சாம்பு! உங்களுடன் காலையிலிருந்தே தனியாகப் பேச வேண்டுமென்று பார்க்கிறேன். அகப்படவே மாட்டேனென்கிறீர்கள்!' என்றான் சாந்தமாக. சாம்பு பேச மாட்டாமல் மாடுபோல் மூச்சு விட்டுக்கொண்டிருந்தான்.

உமாவை ஒரு முறை பார்த்துவிட்டு அவள் புருஷன் மேலும், 'சாம்பு! கோபித்துக்கொள்ளக் கூடாது! உங்கள் பேரையும் புகழையும் உபயோகித்து நாங்களும் புகழ் அடையலாம் என்ற நோக்கத்துடன்தான் உங்களைத் தருவித்தோம். நீங்கள் வர ஒப்புக் கொண்டவுடன் எங்கள் சந்தோஷம் இவ்வளவு அவ்வளவல்ல. ஆனால் நீங்களானால், ரகசியமாக இருக்கவேண்டும் உங்கள் வருகை என்றீர்கள்! அதை உத்தேசித்து முதலில் எங்கள் ஏஜெண்டைக் கொண்டு டிக்கெட்டை இருத்திக்கொண்டு, ஜங்ஷனுக்கு ஜங்ஷன் தந்தி அடிக்கவும் சொன்னோம். அதனால் உங்கள் வருகை ஸ்டேஷன்தோறும் பிரபலமாயிற்று. இங்கே வந்த பிறகும், பத்திரிகையில் உங்கள் பெயர் எங்கள் சம்பந்தமாக வந்தால் இன்னும் நல்ல விளம்பரம் கிடைக்கும் என்று நான்தான் நகைத் திருட்டை ஏற்பாடு செய்தேன். பத்திரிகைகளில் அதுவும் பிரபலமாக இன்று பிரசுரமாகியிருக்கிறது. இந்த வீட்டில் வேறெங்கேயிருந்தாலும் இந்த நகைகளைப் போலீஸார் தேடி எடுத்திருப்பார்கள். ஒரு பிரபல துப்பறிபவரின் பையிலிருந்தால் அங்கே யாரும் தேட மாட்டார்கள் அல்லவா? அதனால்தான் அதை அங்கே போட்டு வைத்தேன். நீங்கள் அதையும், அதைப் போட்ட காரணத்தையும் கண்டுபிடித்து, இன்று பூராவும் எங்களிடம் பேசாமலே விலகி இருக்கிறீர்கள்!'

சாம்பு கடைக்கண்களால் பார்த்து, பதில் சொல்லாமலிருந்தான். ஓஹோ! அப்படியா சமாசாரம்?

உமாவின் புருஷன் சாம்புவின் கையைப் பிடித்துக் கொண்டான். 'இந்த உபகாரம் நீங்கள் செய்ததாக இருக்கட்டும்; போலீஸில் ஒன்றும் சொல்லிவிட வேண்டாம்! உங்களுக்குக் கௌரவம் வரக் கூடியதாகவும், யாரையுமே பாதிக்காத விதமாகவும் நான் திருட்டு விஷயத்தை ஒரு மாதிரியாக அடக்கிவிடுகிறேன்!' என்று கெஞ்சினான்.

கதவைப் போலீஸார் இடித்தார்கள். டிவிஷனல் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சாம்புவின் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு போனார் தோட்டத்துப்பக்கம். சாம்பு இரண்டு வெட்டு போட்டிருந்த மரத்தடியில் இப்போது பெரிய பள்ளம் ஒன்றே செய்திருந்தார்கள் போலீஸார்! அதிலிருந்து ஒரு மரப்பெட்டி வெளியே எடுக்கப்பட்டுக் கிடந்தது. அதனுள் பார்த்தால் ஒரே நகைகளும் சவரன்களும்!

'மிஸ்டர் சாம்பு! இந்த இரண்டு ஆள்களும் நேற்றுதான் ஜெயிலிலிருந்து வந்தவர்கள் என்பது உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும். பேங்கில் கொள்ளை அடித்த பணத்தை எங்கே ஒளித்தார்கள் என்பது இதுவரை தெரியாமலிருந்தது. பைல்களை உங்களிடம் நேற்று கொடுத்த உடனே நீங்கள் இதில் வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறீர்களென்று இப்போது தெரிகிறது! அதெப்படி உங்களுக்குத் தெரிந்தது, இந்த இடந்தான் என்று?' ஆவலுடன் கேட்டார்.

'அதை டெபுடி கமிஷ்னரிடம் நான் சொல்லிக்கொள்ளுகிறேன்!' என்றான் சாம்பு தீர்மானமாக.

பொழுது விடிந்ததும் சாம்புவைப் பார்க்க டெபுடி கமிஷ்னரே காரில் வந்துவிட்டார். ஆனால் வந்தவர் சங்கரன் குட்டி நாயர் இல்லை; சாம்பு பார்த்திராத வேறு ஒரு புதிய மனிதராக இருந்தார் அவர்!

சாம்புவை மிகவும் சிலாகித்துவிட்டு, 'வாருங்கள், நம்ம பங்களாவுக்கு!' என்று டெபுடி கமிஷ்னர் அழைத்தார். பிறகு வேடிக்கையாக, 'வழி தவறி வேறு இடத்துக்குப் போய் விடாதீர்கள்! இந்த ஊரில் இரண்டு டெபுடி கமிஷ்னர்கள் இருக்கிறார்கள், ஸார்! ஒன்று நான்; மற்றொன்று, அதோ அந்தப் பங்களாவில் இருக்கும்

ஒரு பைத்தியம்! எப்போதோ திருடனுக்குப் பணத்தைப் பறிகொடுத்து விட்டானாம். அதோடு புத்தி சுவாதீனமும் போய் விட்டது. அதற்காகக் கல்லைக்கில்லை விட்டெறிகிறதில்லை அவன்! ஆனால், 'நான்தான் டெபுடி கமிஷ்னர்' என்று தடபுட லாகச் சொல்லிக் கொள்கிறான். புதிதாக பார்க்கிற பேர், அவன் வார்த்தை நிஜந்தானோ என்றுகூட நம்பிவிடுவார்கள். உங்களை இன்னும் பார்க்கவில்லை போலிருக்கிறது அந்தப் பேர்வழி!' என்று சிரித்தார்.

சாம்பு அசட்டு மூஞ்சியை மறைத்துக்கொள்ள முயன்றான்.

அன்று மாலை பம்பாய்ப் பத்திரிகைகளில் சாம்புவின் படம் இரண்டு பக்கங்களில் இரண்டு கேஸ்கள் சம்பந்தமாகப் பிரசுரமா கியது. இரண்டு வருஷங்களுக்கு முன்பு நடந்த பிரபல பேங்க் கொள்ளையை வெகு லகுவாகக் கண்டுபிடித்த சென்னை வீரரைப்பற்றி ஒரு புறமும், உமா தேவியின் வைர அட்டிகையைத் திருடியது ஒரு குரங்கு என்று சாம்புதான் கண்டுபிடித்தார்; மேற்படி குரங்கு இப்போது பிடிபட்டுவிட்டது என்றும் இன்னொரு புறமும் வெளியாகியிருந்தது.

கிருஹப்பிரவேசத்துக்குத் தங்காமல் உடனேயே சாம்பு திரும்பி னான். உமாவின் அபிலாஷையைத் தீர்த்த பிறகு அவனுக்குப் பம்பாயில் என்ன வேலை? அதுவும் சென்னையில் மாலையுடன் வரவேற்க அத்தனை பேர் காத்திருந்தபோது?

கிளம்பின அவசரத்தில் வேம்பு கேட்ட கறிகாய்களை வாங்க மறந்து போய்விடவே, சென்னையிலேயே டாக்ஸியை நிறுத்தி, கொஞ்சம் உருளைக் கிழங்கும், முட்டைக்கோஸும் வாங்கிக் கொண்டான் சாம்பு. அந்தக் கறிகாய்களையும் புருஷனையும் மாறி மாறிப் பார்த்துவிட்டு வேம்பு, அவன் இரண்டு கன்னங் களையும் அருமையாக வழித்துத் தன் நெற்றியில் நெறித்து, 'என் சமர்த்தே!' என்றாள்.

'ஏண்டி! நன்னாயில்லையோடி இதெல்லாம்?' என்றான் சாம்பு.

'பட்டணத்து வீதியிலே சீரழிகிற கறிகாயை, பம்பாய்க்குப் போய்க் கட்டிக்கொண்டு வந்தேளே! சமர்த்து இல்லையா அது!' என்றாள்.

37

கோடாலி தர்மராஜய்யா

பம்பாயிலிருந்து திரும்பிய சாம்புவுக்கு ஒரு வாரத்துக்கு ஓய்ச்சல் ஒழிவில்லை. அவனை அதிகமாகத் தொந்தரவு செய்யாதவர் கோபாலன் ஒருவர்தான். 'என்னடா இது! ஒரு சினிமாக்காரி கூப்பிடுகிறாள் என்று பம்பாய்க்குப் போகப்பட்ட மனிதர் இல்லையே நீர்! வேறே ஏதோ மனத்தில் வைத்துக்கொண்டு, இதை ஒரு சாக்காக ஏற்படுத்திக்கொண்டு போகிறீர் என்று நான் நினைத்தேன். அது சரியாகப் போய்விட்டது!' என்றார். ஆனால் பத்திரிகைக்காரர்கள் அவனை அவ்வளவு லகுவாக விட்டு விடவில்லை. தினம் வந்து போட்டோ பிடித்தார்கள். 'பம்பாய்ப் போலீஸார் இரண்டு வருஷங் களாகத் திணறிக் கொண்டிருந்த ஒரு கேஸை இரண்டே தினங்களில் சாம்பு பிளந்து தள்ளிவிட்டார்!' என்று பிரசுரித்து, அவன் படத்தையும் போட்டார்கள். தவிர, உள்ளூர் பிரமுகர்கள் படுத்திய தொந்தரவு அவனால் சகிக்க முடியவில்லை. டீ பார்ட்டி, க்ரூப் போட்டோ அட்-ஹோம் என்று அழைத்தார் கள். டவுன் ஹாலில் ஒரு பொதுக்கூட்டத்தில் வெற்றிகரமாகத் துப்பறிவது எப்படி?

என்பதைப்பற்றி ஒரு பிரசங்கம் அவன் செய்தாக வேண்டு மென்று ஒரு சங்கக் காரியதரிசி, முட்டி தேய உள்ளங்கால் எரிய நடக்கலானார்.

தலையை இரண்டு கையாலும் பிடித்துக்கொண்டான் சாம்பு. 'அடி வேம்பு! நான் என்னடி பண்ணுவேன்?' என்று ஏங்கினான்.

'என்னத்தைச் செய்யறதாம்? நான் சொல்கிறபடி கேட்கிறேளா?' என்றாள் வேம்பு.

'சொல்லுடி! நீ சொல்லி நான் எப்போடி கேட்காமலிருந்தேன்?'

'சாமான் அறையில் வந்து உட்கார்ந்துகொண்டு விடுங்கள். வாசல் பக்கம் தலையைக் காட்டக்கூடாது; டெலி ஃபோனில் பேசக்கூடாது.'

'சரிடி! உன் பிள்ளையையும் அடக்கி வைடி. யாரிடமாவது நான் இருக்கிறேன் என்று சொல்லிவைக்கப் போகிறது!'

'குழந்தையை என் பெரியம்மா பெண் கொஞ்ச நாளைக்கு வைத்துக் கொள்ளணும்னு தபஸ் கிடக்கிறாள்; பத்து நாளைக்கு அனுப்பினால் போச்சு!' என்றாள் வேம்பு.

அதற்குப் பிறகு ஒரு வாரத்துக்குச் சாம்புவைத் தேடிக்கொண்டு வந்தபேரெல்லாம் வேம்புவிடம் ஒரே மாதிரியான பதிலைத்தான் கேட்டுக்கொண்டு திரும்பினார்கள். 'அவர் வெளியிலே போயிருக்கிறார்; எப்போது வருவாரோ, சொல்வதற்கில்லை! வேலைக்குத் தகுந்தாற்போல் வருவார். இந்த வீட்டிலே பொம்மனாட்டிகள் புருஷனை எப்போ வருவேள் என்று கேட்கிற வாடிக்கை இல்லை. வந்தால் சொல்கிறேன். ஆனால் நீங்கள் மறுபடி வருகிறபோது அவர் இருப்பார் என்று நான் நிச்சயமாகச் சொல்வதற்கில்லை!' - இப்படிச் சொல்லி அனுப்பினாள். வந்தவர்களைச் சாமர்த்தியமாக அனுப்பிவிட்டு வேம்பு திரும்பும் ஒவ்வொரு சமயமும் அவளுக்கு ஒரு பிரத்தியேகமான மரியாதை கிடைக்கும். அவள் கழுத்தைப் பிடித்துக்கொண்டு தொங்குவான் சாம்பு அல்லது இறுகத் தழுவிக் கொள்வான் ஒரு சமயம். இடுப்பைச் சுற்றிக் கைகொடுத்து இங்கிலீஷ் டான்ஸ் ஆடுவான். சந்தோஷம் மிதமிஞ்சிப் போன சமயத்தில் உப்பு மூட்டை தூக்கிக்கொண்டு போய் அவளை அடுப்பங்கரையில் இறக்குவான். இப்படி ஆனந்தமாகவே ஒரு

வாரம் ஓடியது. இதனிடையில் இரண்டு முறை கோபாலன்கூட வந்து ஏமாந்து திரும்பினார்.

ஒரு நாள் காலையில் ஒரு விஷயம்மட்டும் மனக்கவலையுடன் வேம்பு கவனித்தாள். ஆந்திரர் போல் தோற்றமளித்த சுமார் முப்பது வயதுள்ள ஓர் ஆசாமி அவள் கண்ணில் அடிக்கடி பட்டுக் கொண்டிருந்தான். அவனுடைய திருட்டு முழியும் அசட்டுச் சேஷ்டைகளும் அவள் சந்தேகத்தை எடுத்த எடுப்பிலேயே கிளப்பிவிட்டன. வேம்பு கதவைத் திறக்கும்போதெல்லாம், சட்டென்று தெருவின் ஓரமாக ஒதுங்கிக்கொண்டான். ஆனால், கடைக்கண்ணை மட்டும் அகற்றுவதே இல்லை. கையில் ஒரு நோட்டுப் புத்தகம் வைத்துக் கொண்டிருந்தான். இது ஏமாற்று வதற்காகப் போடும் வேஷம் என்பது வேம்புவின் ஊகம். தன்னுடைய சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்துகொள்ள, மாடிக்கு ஓடிச் சென்று ஜன்னல் கதவைச் சிறிதளவு திறந்துகொண்டு பார்த்தாள். அந்த ஆள் இப்போது சாம்புவின் வீட்டு வாசலையே உற்றுப் பார்த்துக்கொண்டு அசையாமல் நின்றான்.

'கட்டேல வைக்க! குத்து கண்ணை!' என்று திரும்பினாள் வேம்பு.

'என்னடி, யாரைச் சொல்றே?' என்று கேட்டான் சாம்பு, அவள் பின்னால் சந்தடியில்லாமல் வந்து நின்றுகொண்டு.

'யாரோ ஒருத்தன் நிற்கிறான் - அசையாமல்!' என்றாள் வேம்பு.

சாம்புவும் பார்த்தான். மோவாய்க்கட்டையைத் தடவிக் கொண்டு, 'சரி! சாயந்திரமும் பார்க்கலாமே!' என்றான்.

சாயந்திரமும் பார்த்தார்கள். படுக்கை போடுமுன் இரவு 11 மணிக்கும் பார்த்தார்கள். எதிரிலே ஒரு லாந்தல் கம்பத்தின் அடியில் நின்று நிமிஷத்துக்கொரு முறை நிமிர்ந்து சாம்பு வீட்டைப் பார்த்துக்கொண்டான் அவன்.

தன்னுடைய நிம்மதிக்கு முற்றுப்புள்ளி வைத்தாகிவிட்டதென்று சாம்புவுக்கு விளங்கிவிட்டது. ஏதோ ஆபத்து வரப்போகிற தென்று உள்ளுணர்வு எச்சரித்தது. மறுநாள் காலையிலேயே அதற்கேற்ப ஒரு விசேஷமும் நடந்தது.

சுமார் எட்டு மணிக்கு வாசற்கதவு இடிக்கப்பட்டு வேம்பு திறந்தாள். ஆஜானுபாகுவான ஓர் ஆள் சர்வ சுதந்தரத்துடன்

உள்ளே வந்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, 'சாம்புவை வரச் சொல்லு!' என்றான் அதிகாரத்தோரணையில்.

'அவர் இல்லையே!' என்றாள் வேம்பு வழக்கம் போல்.

'சூ! எனக்கும் தெரியும்! வரச்சொல்லு சீக்கிரம்! நேரமாகுது!' என்றான் அவன்.

'நான் இல்லை என்கிறேன்; நீங்கள் சொன்னதையே சொன்னால்?'

'நீ கூட்டி வரயா? நான் போய் இழுத்துக்கொண்டு வரட்டுமா?' என்றான் அவன். சொன்னபடியே செய்து விடுவான் என்று தோன்றியது அவன் தடபுடல்.

கதவிடுக்கிலிருந்து கவனித்துக்கொண்டிருந்த சாம்புவுக்கு ஆத்தி ரம் பற்றிக்கொண்டு வந்தது. அவன் அருமை வேம்பு ஒன்றைச் சொல்லுவதாவது, இந்தத் தடியன் மறுத்துப் பேசுவதாவது!

விடுவிடென்று வெளியே வந்தான். 'யாரய்யா நீ! வீட்டில் இல்லையென்று இந்த அம்மாள் சொன்னவுடன் நீ பேசாமே போகவேண்டியதுதானே? பொய்யா சொல்லுவாங்க?' என்றான் படபடப்பாக.

வந்த ஆசாமி தேர்ந்த பேர்வழியாக இருந்தான். வாய்விட்டுச் சிரித்துக்கொண்டே, 'ஏய் சாம்பு! அப்படி உட்கார்! சும்மா உன் மிரட்டலெல்லாம் என்கிட்டே வைத்துக்கொள்ளாதே! தெரிஞ் சுதா? உள்ளே பதுங்கிக்கிட்டாப் பேசாமே போயிடுவேனோ நான்? என் ஆள்தாள் உன்னைப் பார்த்துக் கிட்டேயிருக்கானே! அது போகட்டும்! கேட்டதுக்குப் பதில் சொல்லு! இன்ஸ்பெக்டர் கோபாலன் இரண்டு தரம் வந்தாரே, என்ன சொன்னார்?' என்று கேட்டான் அவன்.

சாம்பு தன்முன் இருக்கும் ஆளின் பலத்தை ஊகித்து அடங்கிப் போய், 'அவர் வரவே இல்லையே, இங்கே!' என்றான்.

'இதைப் பார்! அதானே வேண்டாங்கறேன்! உள்ளதைச் சொல்ல மாட்டேங்கறியே! இந்த மாதுசிங்குக்குக் கோபம் வந்தா என்னமாயிருப்பான்னு நீ பார்த்ததில்லை! மண்டை கிண்டை யெல்லாம் எகிறிப் போயிடும்!'

சாம்பு மௌனமாக இருந்தான். நாக்கைப் புரட்ட மாட்டாமல் அது ஒட்டிக்கொண்டு விட்டது!

'சாம்பு! நான் யார் என்று கோபாலன் சொல்லியிருப்பான். இருந்தாலும், நானே சொல்லிக்கொள்கிறேன். இந்த ஊரிலே நாற்பது இடத்திலே சூதாட்டம் நடக்குது. அதிலே ஒவ்வோர் இடத்துக்கு ஒருத்தன் பொறுப்பாயிருந்து நடத்தறான். அத்தனை பேருக்கும் பொறுப்பாயிருக்கிறவன் நான்! தெரிஞ்சுதா? என் பெயர் மாதுசிங்! போலீஸிலே என்னைப் பிடிக்க ஆறு வருஷமா கஜகர்ணம் போடறான்கள். எனக்குப் பயம் இல்லை. என்னைப் போலீஸ் பிடிக்க முடியாது! என் ஆள் ஒருத்தனும் என்னைக் காட்டிக்கொடுக்க மாட்டான்! எஃகு தகடு அவங்க! ஏன் தெரியுமா? என்று உறுமினான் சிங்.

'தெரியாது!' என்றான் சாம்பு.

'ஏனென்றால், என் ஆள் ஒருத்தனையும் நான் காட்டிக்கொடுக்க மாட்டேன்! கோபாலன் என்னமோ ஒரே மாசத்தில் புரட்டிவிடப் போகிறதாகக் கிதாப்பு பேசுகிறானாம். அவன் கிட்டே சொல்லு, அது ஒரு நாளும் நடக்காது!'

'சொல்கிறேன்!' என்று நடுங்கினான் சாம்பு.

'ஹஹ்ஹா! நீயுங்கூட வேலை செய்யப் போறியாமே என்னைப் பிடிக்க? அது நிசந்தானா?'

'இல்லவே இல்லை!'

'இப்பவே சொல்லிப்புட்டேன், என் வியாபாரத்திலே தலையிட்டவங்களை எமன்கிட்டே ஒப்படைச்சுடுவேன். அதோ அந்த அம்மா தாலி பத்திரமாயிருக்கணும்னா நல்ல பிள்ளையா நீ ஒதுங்கிப் போயிடு!'

சாம்பு ஏதோ பதில் சொல்ல வாயெடுத்தான். அதற்குள் டெலிஃபோன் மணி கணகணவென்று அடித்தது. சாம்பு டெலிஃபோனை நோக்கி ஓர் அடி வைக்குமுன், அவனைப் புறங்கையால் தள்ளிவிட்டு, மாதுசிங்கே பேசலானான். சாம்புவுக்குப் பகீர் என்றது. அந்தக் கோபாலனா அப்போது பேச வேண்டும்?

'என்னய்யா! சாம்புவா? அப்பாடா! எத்தனை தரம் கூப்பிட்டாலும் அகப்படமாட்டேனென்கிறீரே! எங்கேங்காணும் ஒளிந்துகொண்டு இருந்தீர்? வருகிறீரா ஸ்டேஷனுக்கு?' என்றார் கோபாலன்.

'என்ன விசேஷம்?' என்றான் மாதுசிங் பதிலுக்கு.

'விசேஷமா? ஒரே மாதத்தில் இந்த ஊரில் உள்ள அத்தனை சூதாட்டக் கிடங்குகளையும் ஒழித்துவிடுவதாகக் கமிஷ்னருக்கு பிராமிஸ் கொடுத்திருக்கிறேனே, ஓய்!'

'ஒழியுமேன், ஒழிந்து போமேன்!' என்றான் சிங்.

'என்ன சொல்லுகிறீர்? சரியாகக் காதில் படவில்லையே! அந்த மாதுசிங்கைச் சரியானபடி பிடித்துவிட்டால் வேலை லகுவாகி விடும், ஓய்! உம்ம ஹெல்ப் வேணுமே!'

சாம்பு திடுக்கிட்டான். இதென்ன சங்கடம்? மாதுசிங்கிடமே போய் என்ன உளறுகிறார் கோபாலன்? கையைப் பிசைந்தான்.

மாதுசிங் ஒரு புன்னகையுடன் கண்ணைச் சிமிட்டி, மீசையைத் தடவிக்கொண்டான். 'அதுமட்டும் முடியாது, கோபாலன்! நான் மாதுசிங் வழிக்குப் போகிறதில்லை என்று வாக்குக் கொடுத்து விட்டேன்!' என்றான் அவன்.

'என்ன விளையாட்டு, சாம்பு!'

'விளையாட்டே இல்லை! மாதுசிங் இருக்கிற திக்குக்குக்கூட நான் போக மாட்டேன். என் மண்டையை உடைத்துவிடுவான் அவன்!'

'இப்படித்தான் நீர் ஒவ்வொரு தரமும் சொல்லுவீர். ஆனால்...'

'இந்தத் தடவைமட்டும் நான் சொன்னபடி செய்யப்போகிறேன். என்னை எதிர்பார்க்க வேண்டாம்!' - டக்கென்று ரிஸீவரை வைத்துவிட்டு, மாதுசிங் சாம்புவைப் பார்த்துச் சிரித்தான். 'நான் பதில் சொன்னது சரிதானே? அதன்படி நீ நடக்கணும். கோபாலன் பக்கம் நெருங்கப்படாது. தனியாகத் திண்டாடட்டும்! என் ஆள்கள் என்னிடம் வைத்திருக்கிற நம்பிக்கையைக் குலைக்க, இந்தக் கோபாலனைப் போல் முந்நூறு கோபாலன்கள் வந்தாலும் ஆகாது! நீ ஏதானும் வாலைக்கீலை ஆட்டினாய் என்று தெரிந்ததோ என்ன செய்வேன் தெரியுமா?' என்று மாதுசிங் ஒரே பாய்ச்சலாக டெலிஃபோனைத் தூக்கித் தலைக்கு மேல் ஓங்கினான். சாம்பு இரு கைகளையும் தூக்கி, 'இல்லை, இல்லைனா! வேண்டாம்; வேண்டாம்னா!' என்று குழறும்போதே, 'ஒரே போடாகப் போட்டு உன் விளாங்காய் மண்டையை டணார் என்று பிளந்து விடுவேன்! என் ஆள் ஒருத்தன் வந்துகொண்டே இருப்பான் உன் பின்னால், ஜாக்கிரதை!' என்று வெளியே போனான்.

சாம்பு வெகு நேரம் வரை ஸ்தம்பித்துப் போய் உட்கார்ந்திருந்தான். யோசனை ஒன்றும் ஓடவில்லை. ஒன்றிலும் சம்பந்தப்படாமல் வீட்டுக்குள் அக்கடா என்று அடைந்து கிடந்தால்கூட அல்லவா பிராரப்தம் அவனைத் துரத்திக்கொண்டு வருகிறது?

வேம்புவின் கரம் அவன் கழுத்தைச் சுருண்டு வந்தது. அவன் மோவாய்க்கட்டையைப் பிடித்துத் தன் மார்போடு அன்புடன் அணைத்துக்கொண்டு, நாற்காலியின் கைமேல் அவள் நெருக்கமாக உட்கார்ந்துகொண்டு, 'ஏன்னா? ஏன் இப்படி உட்கார்ந்திருக்கேள்?' என்றாள்.

'ஹுஂம்!'

'அந்தத் தடியன் அப்படிச் சொன்னானேயென்றே? விட்டுத் தள்ளுங்கோன்னா!'

'எப்படி விட்டுத் தள்ளுகிறதடி?'

'இருக்கட்டுமே! நீங்கள் அவனுக்கு எதிராக வேலை செய்யாமல் இருந்துவிட்டால் அப்புறம் என்ன?'

அதற்குக் கோபாலன் விட்டுவைக்க மாட்டானேடி?'

'நீங்கள் பேசாமல் இருங்கள். நான் அவரிடம் இல்லையென்று சொல்லிவிடறேன்.'

'அதைச் சொல்லிவிடலாம்டி! ஆனால், இந்த மாதுசிங் அதை நம்ம வேண்டுமேடி?'

வேம்பு யோசனை செய்தாள். புடைவைத் தலைப்பு நுனியால மோவாய்க்கட்டையை அழகாய்த் துடைத்துக்கொண்டு 'இப்படிச் செஞ்சுடுங்கோளேன்! தினம் ஒரு தடவையோ, இரண்டு நாளைக்கு ஒரு தடவையோ, அந்த மாதுசிங்கைப் போய்ப் பார்த்துவிட்டு வந்து விடுங்கோ ஒரு வாரம், பத்து நாள் இப்படித் தள்ளுங்கோ!' என்றாள்.

அந்த யோசனை சாம்புவுக்குச் சரியானதென்று பட்டது.

முதன்முதலாகச் சாம்பு மாதுசிங்கைப் பிராட்வேயில் போய் மறுநாள் பார்த்தான். தனியாக அவனை அழைத்துப் போய், 'சிங்! நேற்று நீர் வந்துவிட்டுப் போனதுமுதல் எனக்கு மனமே சமாதானமாக இல்லை. நேரில் பார்த்துப் பேசிவிட்டுப் போகலாமென்று வந்தேன்!' என்றான்.

சந்தேகத்துடன் நோக்கினான் சிங். 'இது என்ன புது தினுசு வேலை? ஹே!' என்று கேட்டான்.

'ஐயையோ! அதெல்லாமில்லை! தினசரி அல்லது ஒன்று விட்டொரு நாள் உம்மைப் பார்த்துவிட்டுப் போவது என்று தீர்மானம் செய்துவிட்டேன். என் சம்ஸாரமும் அப்படித்தான் சொல்கிறாள். என் மேல் உமக்கு அநாவசியமான சந்தேகம் ஏற்படக்கூடாதென்பதே என் அவா. அதிருப்தி இருந்தால் அவ்வப்போது சொல்லி என்னை நீர் கண்டித்துவிடும்!' என்றான்.

மாதுசிங் சிரித்தான். 'சாம்பு! நீ ரொம்ப வேடிக்கை மனுஷன்! உன் சங்கதி புரியறதேயில்லை. காபி சாப்பிடறியா?' என்றான்.

சாம்பு, காபி சாப்பிட்டான் சிங்குடன். மறுதினம் மாலையில் சிங்கை ஏழுகிணற்றில் சந்திப்பதாக அப்போதே சொல்லிவிட்டு வந்தான்.

இப்படியாக அடுத்த ஐந்தாறு தினங்கள் சென்றன. கோபாலன் பல முறைகள் கூப்பிட்டதாக வேம்பு சொன்னாள், சாம்பு லட்சியம் செய்யவில்லை. எக்கேடோ கெட்டுப் போகட்டும் இன்ஸ்பெக்டர்! ஒருநாள் ஆயிரம் விளக்கில், ஒரு நாள் பாண்டிபஜாரில், ஒரு நாள் வண்ணாரப்பேட்டையில், இன்னொரு நாள் சிந்தாதிரிப்பேட்டையில் என்று சிங்கைச் சாம்பு அடுத்தடுத்துச் சந்தித்தான். சந்திப்பதற்குக் காரணம் ஒன்றுமில்லை எனினும், தன் வரையில் சாம்புவுக்கு மன நிம்மதியும் ராத்தூக்கமும் வந்தன. கடைசியாக மன்ரோ சிலைக்கு அருகாமையில் ஒரு சந்திப்பு வைத்துக் கொண்டபோதுதான் சாம்புவால் அதை நடத்த முடியவில்லை!

எதிர்பாராதவிதமாக அன்று மாலை கோபாலனிடம் அவன் அகப்பட்டுக்கொண்டு விட்டான். 'இது என்ன ஓய், வேஷமா போடுகிறீர்? மாதுசிங்கைச் சுற்றிக்கொண்டு அலைகிறீரே! இதுவரை என்ன என்ன கண்டுபிடித்தீர்?'

'நானா அலைகிறேன்?'

'அப்படிப் பாசாங்கு செய்தால் நான் நம்பிவிடுவேனா? இதற்குள் ஒன்றும் சொல்ல மாட்டீராக்கும்?'

'இப்போது ஒன்றும் இல்லை!'

அகஸ்மாத்தாகத் திரும்பிய சாம்பு திடுக்கிட்டான். எதிர்ப்புறத்தில் ஓர் ஆசாமி சாம்புவையே முறைத்தபடி நின்றான்! அவன் வீட்டு

வாசலோடு பழி கிடந்த அதே பழைய ஆள்தான்! சாம்பு கோபாலனைச் சந்தித்த செய்தி சிங்குக்குப் பறந்துவிடும்! கஷ்டகாலமே! உள்ளதைச் சொன்னாலும் நம்ப மாட்டானே அவன்!

'அப்போ எப்போதான் சொல்லுவீர்?' என்றார் கோபாலன்.

சாம்பு மென்று விழுங்கினான்.

'இன்று ராத்திரி சரிப்படுமா?'

'பார்க்கிறேன்!' என்று உதறிக்கொண்டு ஓடினான் சாம்பு. இனி, சிங்கைப் போய்ப் பார்த்தாலும் ஆபத்து; பார்க்காமலிருந்தாலும் ஆபத்து. என்ன செய்வான் அவன்?

அன்று யமவாதனை அநுபவித்தான் சாம்பு. அவன் போகாத இடமில்லை. ஆனால், போகுமிடமெல்லாம் அந்த ஆள் சற்றுப் பின்னால் தென்பட்டுக்கொண்டேயிருந்தான்.

அஸ்தமித்துவிட்டது. தெரு விளக்குகளும் ஏற்றப்பட்டன. அதற்குள் சிங்கைப் பார்க்கவேண்டிய நேரம் தவறிவிட்டது! சாம்பு ராயப்பேட்டையில் ஒரு டிராமிலிருந்து குதித்து, உட்ஸ் ரோடில் ஓடினான். அவனுக்கு எதிர்ப்புறமாகக் குதித்து, அவனைப் பின் தொடர்ந்த ஆளும் வேகமாக வந்தான். 'ஓடினால் சுட்டுத் தள்ளு!' என்று சிங் சொல்லியிருந்தால் நம் கதி என்ன என்று யோசித்தான் சாம்பு.

தெரு திருப்பத்தில் ஒரு மோட்டார் லாரி, ஒரு கட்டடத்தின் முன் கிளம்பத் தயாராக நின்றது. அதன் டிரைவர் ஏதோ வேலையாக உள்ளே போயிருந்தான். ஒரே நிமிஷத்தினுள் அதனுள் தாவி, இரண்டு பேப்பர் கட்டுகளுக்கிடையில் சாம்பு பதுங்கிக் கொண்டான். அடுத்த நிமிஷமே லாரி நகர ஆரம்பித்தது! அப்பாடா!

சாம்பு உட்கார்ந்திருந்த இடம் அவ்வளவு சௌகரியம் என்று சொல்வதற்கில்லை. இருந்தாலும், டிரைவரும் மற்றோர் ஆசாமியும் பேசிக்கொண்டு போனதைக் கேட்கக் கேட்க ஆறுதலாக இருந்தது அவனுக்கு.

'எல்லாம் சாம்பு வேலை! ஒரே போலீஸ் கூட்டம் மன்ரோ சிலைகிட்டே! அடி அம்மா! அவ்வளவு ஜனங்களும் சாம்புவைக் கொண்டாடுறாங்கோ!' என்றது ஒரு குரல்.

'கில்லாடி மனுசன் ஆச்சே அந்தச் சாம்பு! அவன் மூக்கையும் மண்டையையும் பாரேன்! அசடு மாதிரி இருந்துக்கிட்டு, படா வேலை செஞ்சு போடறான்! அது சரி! குத்துப்பட்டது மாதுசிங்கு தானே?'

'ஆமாங்கறேன். அண்ணாத்தே! அவனோட ஆள் ஒருத்தனே குத்திப் போட்டிருக்கான்; அகப்பட்டுகிட்டான்; கத்தியும் கையுமா!'

'அவன் ஆளேவா? இருக்காது, தம்பி!'

'கேளு அந்த வேடிக்கையை! சாம்பு என்னமோ வேலை பண்ணி, அந்த சிங்கை, தினம் ஒவ்வோரிடத்திலே பார்த்திருக்கிறான். அதுக்கு அரைமணிக்கப்புறம், இன்ஸ்பெக்டர் கோபாலன் அதே இடத்திலே புகுந்தடிச்சு, சூதாட்டக்காரங்களைக் கைது பண்ணி யிருக்கிறாரு. இப்படியே பாரு, சிங்கோடு சாம்பு பேச வேண்டி யது, உடனே சித்தைக்கெல்லாம் பக்கத்திலேயே ஒரு போலீஸ் ரெய்டு - இப்படி நடந்திருக்குது. சிங்கோட ஆளுங்களும் பார்த்தான்கள். ஒண்ணாச்சு, ரெண்டாச்சு, நாலாச்சு, அவன் களுக்கு சிங்குதான் காட்டிக் கொடுக்கிறான்னு சந்தேகம் வந்திடிச்சு.'

'அண்ணாத்தே! காட்டிக் கொடுக்கிறியே போலீஸானுக்கு!' என்றுகூட ஒருத்தன் கேட்டானாம். சிங்கு ஒரே குதியாக் குதிச்சு, 'யார் சொன்னது! அந்தப் பய சாம்பு இந்த விளையாட்டா பண்றான்? இன்னைக்குச் சாயந்திரம் வரட்டும், அவன் மண்டையை டணார் செஞ்சுடறேன்'னானாம். ஆனா, அந்த ஆளுங்க சிங்கை நம்பலை. ஒருத்தன் மட்டும் பின்னாலேயே, சிங்கும் சாம்பும் பேசிக்கிறதைப் பார்க்கணும்னு போயிருக்கான். ஆனா சாம்பு வரல்லை. படா யத்தன் ஆச்சே அவன்! வருவானா? சிங்கு சாம்புவுக்காகக் காத்து நின்னிருக்கான். காட்டிக் கொடுக்கத்தான் காத்திருக்கான்னு நினைச்சுக்கிட்ட அந்த ஆளு சிங்கைக் குத்திப் போட்டுட்டான். இப்போ இவங்களுக்குள்ளே சண்டை வந்ததிலே விஷயம் எல்லாமே வெளியே வந்திடுச்சு! எப்படி இருக்குது இந்தக் கதை!'

சாம்பு நகத்தை அவசர அவசரமாகக் கடித்தான். 'அப்படியா சேதி?'

'இப்போ எங்கேதான் இருக்கிறான் அந்தச் சாம்பு?'

'அது யார் கண்டா? படா கில்லாடி ஆச்சே அவன்!'

அடுத்தபடி, லாரி தெருச் சந்திப்பில் நின்ற சமயம் பார்த்து, சாம்பு குதித்து விட்டான். இவ்வளவு நடந்த பின் கோபாலனைப் பார்ப்பதில் என்ன பயம் சாம்புவுக்கு?

போலீஸ் ஸ்டேஷனை, சாம்பு போய் அடைந்தபோது கோபாலன் காத்துக்கொண்டிருந்தார். அவனைக் கண்டதும் 'திருட்டுப் பயல்களுக்கு உம் சகவாசமே நெருப்பு என்பது முன்னாலேயே தெரிகிறதில்லை. அந்த மாதுசிங் இருக்கிறானே...' என்று ஆரம்பித்தார்.

'இருக்கிறானா? பிழைப்பானா?' என்று பதறினான் சாம்பு.

'பிழைப்பான். ஆனால், பதினைந்து வருஷமாவது ஜெயிலில் இருந்தாகணும். அவன் பேரில் ஒரு கொலைக் கேஸ்கூட இருக்கிறது! ஒன்றும் பயப்படாதேயும்! உமக்கு யார் மீது பயம் இனிமேல்?' என்றார் கோபாலன் வேடிக்கையாக.

கூட்டத்தில் நோட்டும் பென்ஸிலுமாக நின்ற பழைய ஆசாமி இப்போது சாம்புவின் திருஷ்டியில் விழுந்து விட்டான். 'கோபாலன்! அதோ அவனைக் கண்டால்தான் எனக்குப் பயம்!' என்றான் சாம்பு.

குறிப்பிடப்பட்ட ஆசாமியைக் கோபாலன் அழைத்து, 'யாரய்யா நீ?' என்றார் அவர்.

'ஒரு வாரமாகச் சாம்பு பின்னால் போகிறேன். காடு மேடு மலை பள்ளத்தாக்கெல்லாம் தாண்டினேன், இவர் பின்னால்! என் காரியம் நடக்கவில்லை!' என்றார் அவர்.

'என்ன காரியம் அது?'

'இவர் கையெழுத்து - ஆட்டோகிராப் வேணும் எனக்கு. மஹா ராஜாக்கள், வைசிராய்கள், கவர்னர்கள், கிரிக்கெட்காரர்கள் எல்லாரிடமும் வாங்கி வைத்திருக்கிறேன். இவ்வளவு சிரமம் வேறு யாரிடமும் பட்டதில்லை.'

கோபாலன் குபீரென்று சிரித்தார்; 'உம்ம பேரன்ன?'

'கோடாலி தர்மராஜய்யா!'

'பயமான்னா இருக்கு! முதல்லே கோடாலி! அது போதாதென்று தர்மராஜன்! ஏன் பயந்து ஓட மாட்டார் சாம்பு? ஏன், சாம்பு! ஒரு கையெழுத்துதான் போட்டுக் கொடுத்துவிடுமே! நீர் ஒரு தமாஷ் பேர்வழிங்காணும்!'

ஒரே நிமிஷத்தில் சாம்பு கையெழுத்தைப் போட்டுக் கொடுத்தான். இதற்காக இவ்வளவு சிரமம் எடுத்துக்கொண்ட கோடாலி தர்மராஜய்யா பேரானந்தப்படுவாரென்று எல்லாரும் எதிர்பார்த்தார்கள். ஆனால், அந்தக் கோடாலி அலுத்துக் கொண்டு அதைக் கீழே போட்டுவிட்டு, 'ஈ ஆட்டோகிராபு நாகு தெலுகுலேதா காவலா? அவரமுலோ ஒத்து!' என்றார்.

38

பேய் உலாவும் பங்களா!

ஒரு நாள் சாம்புவைக் கோபித்துக்கொண்டாள் வேம்பு. 'என்னால் எதையும் சாதித்து விடமுடியும்! என்று மார்தட்டிக் கொள்கிறதில்மட்டும் ஒரு குறைச்சலுமில்லை. ஒரு காரியம் முழுசாகச் செய்யத் துப்பு கிடையாது!' என்றாள்.

'துப்பறியும் சாம்புவைப் பார்த்துத் துப்பு கிடையாது என்று சொல்வது வெகு துணிச்சலான பேச்சுதான். யாரைப் பார்த்துச் சொல்கிறாய்? ஹூம்! பொழுது விடிந்தால் உன் ரோதனையே பெரிசாகப் போய்விட்டது. போய் உன் பெரியம்மா பெண் வீட்டில் இருந்துவிட்டு வா!' என்றான் சாம்பு.

'பெரியம்மா பெண் வீட்டுக்கு நான் போய் விடுவேன். ஆனால் அவளுக்கு என்னாலே ஓர் உபகாரம் உண்டா? ஒரு வீடு பார்த்துக் கொடுடி, தாங்க முடியாத கஷ்டமாயிருக்குன்னு மூணு மாசத்துக்கு முன்னே சொன்னாள். ஆத்துக்காரர் பேர்தான் பிரமாதமாயிருக்கு. காரியத்திலே ஸைபர்னு சொன்னா ஒப்புக்குவாளா?' என்று ஆத்திரமும் அழுகையுமாகப் பொழிந்து தள்ளினாள் வேம்பு.

'இது என்ன கஷ்டம்டி, வேம்பு! அந்த ராகவாச்சாரி ரோடு பங்களாவைத் தவிர வேறு ஒண்ணுமே காலி இல்லையே! அதிலேயும் பேயாம், பிசாசாம்; யாரும் போகிறதில்லையாம்!' என்றான்.

'நீங்க அதைச் சொல்லிண்டேயிருங்கோ; நானும் நம்பிக் கொண்டே இருக்கிறேன். நேத்திக்குத்தான் அதற்கும் ஒரு டாக்டர் குடி வந்துட்டாராம். நான் தேமேனு போயிருப்பேனே. என் பிள்ளையும் ஆம்படையானும் இருக்கிற இடத்திலே பேயும் பிசாசும் என்னடி பண்ணிப்பிடும்?னு சொல்லிவிட்டு அழறா என் பெரியம்மா பொண்ணு!' என்று சொல்லிவிட்டு வேம்பு உள்ளே போனாள்.

மூன்று வருஷங்களுக்கு முன்பு அந்தப் பங்களாவில் ஏதோ பயங்கரமான சம்பவம் நடந்து, அதன் விளைவாக யாருமே குடி வருவதில்லை என்று சாம்பு விசாரித்து வைத்திருந்தான். நடு ராத்திரியில் பேய்கள் உலாவுவதாகவும், வெளிச்சம் தெரிவதாக வும் சொல்லிக்கொண்டு ஜனங்கள் ஒதுங்கிப் போனார்கள். 'அப்படியிருந்துங்கூடத் தைரியமாக அந்தப் பங்களாவுக்கு குடிவந்தவர் யாராக இருக்க முடியும்? ஒரு கால் விஷயம் தெரியாதவரோ! அதெப்படியாவது போகட்டும். ஸ்டேஷனில் கோபாலனைக் கண்டு எப்படியாவது ஒரு வீடு சம்பாதித்துத் தர சொல்ல வேணும். இல்லாவிட்டால், வீட்டில் வேம்பு உட்கார விடமாட்டாள்!' என்று புறப்பட்டான் சாம்பு.

இந்தச் சமயத்தில்தான் போலீஸ் நண்பர்கள் பலர் ஒன்று கூடி, ஒரு நாடகம் போடுவதென்று யோசனை செய்து கொண்டிருந்தார் கள். சாம்புவைச் சேர்த்துக் கொள்வதா வேண்டாமா என்பதைப் பற்றி ஒரு பிரச்னை கிளம்பி, தீவிரமாக விவாதிக்கப்பட்டது. 'சாம்பு, போலீஸ் உத்தியோகஸ்தர் அல்லவென்பதால் அவருக்கு வேஷம் கொடுப்பது சரியாக இராது! என்றனர் சிலர். 'நாடகத்தை போலீஸ் நண்பர்கள் என்றுதானே நடத்தப்போகிறோம்? அப்படியானால் போலீஸுக்குச் சாம்புவைவிடச் சிறந்த நண்பர் ஒருவர் இருக்க முடியுமா?' என்று கேட்டார்கள் மற்றவர்கள்.

இன்ஸ்பெக்டர் கோபாலன் உடனே, 'அதெல்லாம் சரிதான்! சாம்பு உங்கள் நாடகத்தில் வேஷம் போட்டுக் கொள்ளச் சம்மதப்படுகிறாரா? அதை யாராவது முன்னால் கேட்டீர்களோ?' என்றார்.

கொல்லென்று அத்தனை பேரும் சிரிப்பதும், சாம்பு அங்கே வந்து நுழைவதும் சரியாக இருந்தது. தன் அசட்டுத்தனம் ஏதாவது வெளியாகி தன்னை அதற்காகத்தான் பார்த்துச் சிரிக்கிறார்களோ என்று திருதிருவென்று நாலாபுறமும் விழித்தான் சாம்பு.

'மிஸ்டர் சாம்பு! வாரும், வாரும்! உம்மைப் பற்றித்தான் பேச்சு நடக்கிறது. இங்கே எல்லாரும் நாடகம் போடுவதாக யோசித் திருக்கிறோம். அதில் உங்களுக்கு வேஷம் போட்டுக் கொள்ள இஷ்டமா? முதலில் சொல்லும்!' என்றார் கோபாலன்.

'நாடகமா? வேஷமா? எனக்குச் சாவகாசமே இருக்காதே!' என்றான் சாம்பு.

'ஊம். இதுதானே வேண்டாமென்கிறது? எங்களுக்கு மட்டும் ரொம்ப சாவகாசம் இருக்கிறதாக்கும்! முந்தாநாள் சாயந்திரம் அலிபுரம் ஜெயிலிலிருந்து வேலூர் ஜெயிலுக்குக் கொண்டு போகிறபோது ஒரு மகா துஷ்டனான கைதி தப்பித்துக்கொண்டு விட்டான். அதிக நாள் வெளியிலிருந்தால் ஊருக்கே வெடி வைத்துவிடுவான் அவன். ராப்பகலாகத் தேடிக்கொண்டிருக் கிறோம்; அகப்படவில்லை. ஒரு வாரத்துக்குள் பிடிக்காவிட் டால் போலீஸ் டிபார்ட்மெண்டு மானமே போய்விடும்போல் இருக்கிறது!' என்றார் கோபாலன்.

சாம்பு 'ஹெஹ் ஹெஹ் ஹெஹ்' என்று மண்டையை ஆட்டிக்கொண்டு சிரித்தான். 'அப்போ நாடகமும் 'ஒடிப்போன கைதி'ன்னு போட்டுடுங்கோளேன்! எனக்கு என்ன வேஷம் கொடுப்பேள்?' என்று கேட்டான் சாம்பு.

'நீர் எப்படி வந்தால் என்ன? மேடைமீது மூக்கை நீட்டினீரானால் சிரிப்பு ஒய அரை மணி ஆகும்!' என்றார் ஒரு ஸப் இன்ஸ்பெக்டர். குபீரென்று சிரிப்பு கிளம்பியது.

கோபாலன், 'உஸ்ஸ்! என்ன சத்தம்! இன்னும் சாம்பு ஆக்ட் பண்ணுகிறதாகவே ஒப்புக்கொள்ளவில்லையே! அதைக் கேட்டுக்கொண்டு மேலே பேசலாமே?' என்றார்.

'அதுதான் சரி! அதற்குள் நாம்பளும் என்ன நாடகம் என்று தீர்மானம் பண்ணிக்கலாம்!'

'நாடகம் எதுவாக இருந்தால், என்ன கவலை ஸார்? மிரட்டி யாவது கூட்டம் கூட்டிவிட மாட்டோமா?' என்று அழகுசிங்கம் ஹாஸ்யமாகப் பேசினார்.

கொழும்பு தமிழ்ச் சங்கம்

இப்படி விருதாவாகப் பொழுது போயிற்று சிறிது நேரம். கடைசியில், தான் வந்த காரியத்தை மறந்து சாம்பு வீட்டுக்குத் திரும்பி விட்டான்.

வரும்போது பேய் உலாவும் பங்களாவைத் தாண்டிக் கொண்டு தான் வந்தான். அதன் வாசல் காம்பவுண்டுச் சுவரில் ஒரு பெரிய போர்டு சார்த்தியிருந்தது. டாக்டர் நாகலிங்கம் என்ற பெயரும் எழுதியிருந்தது. சற்றுத் தயங்கினான் சாம்பு. அதற்குள்ளாகவே உள்ளேயிருந்து டாக்டரே வந்துவிட்டார். சாம்புவைப் பார்த்தும், 'என்ன பார்க்கிறீர்கள், ஸார்?' என்று கேட்டார்.

சாம்பு 'ஒன்றுமில்லை, இத்தனை நாளாகப் பூட்டியிருந்ததே! யார் குடி வந்திருக்கிறார்கள் என்றுதான் பார்த்தேன்!' என்றான்.

'வெளியிலே நிற்கிறீர்களே? வாருங்கள் இப்படி!' என்று அழைத்தார் டாக்டர்.

சாம்பு நுழைந்தான். சுமார் நாற்பது வயதுள்ளவராக ஆரோக்கியம் உள்ளவராகப் புன்னகை தவழும் முகத்துடன் கலகலப்பான மனிதராகக் காணப்பட்டார் டாக்டர்.

'ஒன்றுமில்லைன்னா! எனக்கு இதில் ஒரு போர்ஷனாவது கிடைக்குமா என்று பார்த்தேன்!' என்றான் சாம்பு.

டாக்டர் தலையை அசைத்தார். 'எனக்கே முழு வீடும் போதும் என்னமோ! இதில் நர்சிங் ஹோம் ஒன்று வைக்கலாமென்ற உத்தேசத்துடனே நான் வந்திருக்கிறேன்!' என்றார் அவர்.

'சரி, நான் வருகிறேன்!' என்று கிளப்பினான் சாம்பு.

'நீங்கள் யார் என்று எனக்குச் சொல்லாமல் போகிறீர்களே! இனிமேல் இந்த ஊரிலேயே இருக்க வேண்டியவன் ஆச்சே நான்? எல்லாரையும் தெரிந்துகொள்ள வேண்டாமா?' என்றார் அவர்.

சாம்பு சிறிது நேரம் அசட்டுச் சிரிப்பு சிரித்தான். பிறகு, 'என் பெயர் சாம்பு என்று சொல்லுவார்கள்' என்றான் அடக்கமாக.

டாக்டர் முகத்தில் பளிச்சென்று உத்ஸாகம் தென்பட்டது. 'என்ன? துப்பறியும் சாம்புவா! பம்பாயிலிருந்துகூட பிரக்கியாதி

யுடன் வந்த அதே சாம்புவா? நிஜமாகவா!' என்று குதித்தார் டாக்டர்.

'ஆமாம்!'

'ஸார்! நீங்கள் படாடோபமாக இருப்பீர்கள் என்று எண்ணி ஏமாந்து போனேன், ஸார்! ரொம்ப ஸிம்பிளாக இருக்கிறீர்களே! அடடா! உள்ளே வந்து உட்காராமல் போனால் உங்களை நான் விடமாட்டேன், ஸார்! எனக்கு எவ்வளவு கௌரவம். என் வீட்டுக்கு முதல் விஸிட்டர் புகழ் பெற்ற சாம்பு என்றால்!' என்றார்.

கரகரவென்று சாம்புவைக் கையைப் பிடித்து உள்ளே இழுத்துக் கொண்டு போனார். வைத்தியருக்கு வேண்டிய உபகரணங்கள் அங்கே நாற்புறமும் சிதறிக் கிடந்தன.

'இன்னும் என் ரூமில் சாமான்களை சரியாக அடுக்கவில்லை. எல்லாம் ஒழுங்காக இரண்டு நாள்கள் செல்லும்!' என்றார் டாக்டர்.

'உங்களுக்கு சம்ஸாரம், குழந்தைகள்?' என்று கேட்டு நிறுத்தினான் சாம்பு.

'மிஸ்டர் சாம்பு! நீங்கள் எல்லாருக்கும் உதவி செய்பவர்; நல்லவர். ஆகையால், ஒரு சகோதரனிடம் சொல்வது போல் சொல்லுகிறேன். நான் குடும்பத்தில் கஷ்டப்பட்டவன். என் சம்ஸாரம் மூன்று வருஷத்துக்கு முந்தியே காலமாகிவிட்டாள், ஸார்! அதற்கப்புறம்...'

'த்ஸொ! த்ஸொ!'

'நான் மட்டும் என்றால் சந்தியாசம் வாங்கிக்கொண்டு ஓடிப்போயிருப்பேன். ஆனால், என் தாயார் சாகும்போது ஒரு பெரிய பொறுப்பை என்னிடம் ஒப்புவித்துவிட்டுப் போனாள். அதுதான் என் தம்பி...'

'அடடா!'

'அவன் எப்படி என்கிறீர்கள்? அவனாவது நடமாடிக் கொண்டு நன்றாக இருக்கக் கூடாதா? படுத்த படுக்கை! கையைக் காலை நாம் நீட்டி வைத்தால்தான் உண்டு. நாமாக உட்கார்த்தி வைக்க

வேண்டும்! அவனுடைய சுசுருஷைதான் என் லட்சியம். ஊர் ஊராக அவனுடன் அலைந்து கொண்டிருக்கிறேன்.'

'ரொம்ப நல்ல கடமை, ஸார் அது! உங்கள் தாயார் ஆத்மாவுக்குத் திருப்தியாக இருக்கும்!' என்றான் சாம்பு.

பேசிக்கொண்டிருக்கும்போதே பக்கத்து அறையில் முனகல் சத்தம் போட்டது. 'ஒரே நிமிஷம், சாம்பு! மன்னிக்கணும்!' என்று சொல்லிவிட்டு டாக்டர் உள்ளே ஓடினார். இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம் திரும்பி வந்து, 'ஒன்றும் இல்லை. இப்போது தான் விழித்துக்கொண்டிருக்கிறான் தம்பி!' என்றார்.

பிறகு வெகு நேரம் சாம்புவுடன் பேசிக்கொண்டிருந்தார் அவர். சாம்புவும் தன்னையும் தன் குடும்பத்தையும் இன்ஸ்பெக்டர் கோபாலனையும் போலீஸில் தன் செல்வாக்கையும் பற்றிச் சொன்னான். கடைசியில், 'நாடகங்கூட போடப் போகிறார்கள். என்னையும் ஒரு வேஷம் போட்டுக்கொள்ளச் சொல்கிறார்கள்!' என்று முடித்தான்.

டாக்டர் எழுந்திருந்தார். 'அடடே! நாடகமா? நாடகம் என்றால் உயிர் ஆச்சே எனக்கு! எங்கள் ஊரில் எத்தனை டிராமா நான் நடத்தி இருக்கிறேன், தெரியுமா?' என்றார் உத்ஸாகமாக.

'அப்படியானால், எனக்கு நீங்கள் நடிக்கக் கற்றுக் கொடுக்கலாமே!'

'பேஷாய்! சந்தோஷமாய்! அந்த மாதிரி பாக்கியம் எனக்குக் கிடைக்க வேண்டுமே! நடிப்புக் கற்றுக் கொடுப்பது மட்டுமில்லை, நாடகத்தையே நடத்தும் பொறுப்பையே நான் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறேன், ஸார்!' என்றார் அவர் படபடப்புடன்.

மறுநாள் டாக்டர் நாகலிங்கத்தை, போலீஸ் நண்பர்கள் சங்கத்துக்கே அழைத்துக்கொண்டு போனான் சாம்பு. அன்றைக்கே நடிகர்களைப் பாடச் சொல்லிப் பார்த்து, தபேலாவைத் தட்ட ஆரம்பித்து விட்டார் டாக்டர்.

வெகு தமாஷாகப் பேசினார் அவர். இதற்கு முன்பு அமெச்சூர் நாடகங்களில் நடந்த பல தமாஷ் சம்பவங்களைச் சிரிக்கச் சிரிக்கச் சொல்லி, ஒரு மணி நேரத்தில் அவ்வளவு பேரையும் கைக்குள் போட்டுக்கொண்டு விட்டார். அவர் போகக் கிளம்பிய

போது, 'இருங்கள், ஸார்! இன்னும் சிறிது கழித்துப் போகலாமே?' என்றார் அழகுசிங்கம்.

'இருக்கலாம். ஆனால், சீக்காக இருக்கிறான் என் தம்பி! தீர்த்தம் வேண்டுமானாலும் கை நீட்டி எடுக்க அவனுக்குச் சக்தி கிடையாது! நாளை வருகிறேன்!' என்று சொல்லிவிட்டுப் போனார். போகும்போது இன்ஸ்பெக்டர் கோபாலனுடன் கை குலுக்கிவிட்டு, 'நம் வீட்டுக்கு வாருங்களேன்!' என்று அழைத்தார். அவர் பதில் சொல்லு முன்பே, 'கோபாலனை நானே அழைத்து வருகிறேன்!' என்றான் சாம்பு.

நாள் போவது தெரியாதபடி ஒரு வாரம் சென்றது. தினம் தவறாமல் டாக்டர் வந்து சொல்லிக் கொடுத்தார். போலீஸ் நாடகமும் முன்னேறிக்கொண்டு வந்தது. நடுநடுவே போலீஸ் வேலைகளையும் பற்றிப் பேசிக்கொண்டார்கள்.

கோபாலன் சாம்புவிடம், 'என்ன ஸார்! கேஸ் விஷயமாகக் கவனம் செலுத்தவே மாட்டீரா?' என்பார் ஒவ்வொரு தினமும்.

சாம்பு இப்போது நடிப்பு மயக்கத்தில் மூழ்கியிருந்தான். கதாநாயகியை நெருங்கி, 'என் கண்ணே! என் கட்டிக் கரும்பே! உன் பவழ உதடுகளில் ஒரே ஒரு மு... கொடுக்க அநுமதிப்பாயா?' என்று உணர்ச்சியுடன் சொல்ல, முழுசாக மூன்று தினங்கள் பிடித்தது அவனுக்கு. அதுகூட, வீட்டில் வேம்புவுடன் ஒத்திகை செய்து பார்த்ததால்தான் வந்தது என்ற ரகஸியம் சாம்புவுக்கு மட்டுந்தான் தெரியும்!

அன்றாடம் நாடகம் முடிந்து திரும்பும்போது வீடு வரை டாக்டருடன் பேசிக்கொண்டே வருவான். அவருக்குத் தெரியாத விஷயம் எதுவுமில்லை. லா பாயிண்டுகளை எடுத்து வீசுவார் ஒரு சமயம். அரசியல் விஷயமாக அவர் வாதம் தெளிவாக இருந்தது. இலக்கியங்களைப் பற்றி ஆரம்பித்தாரானால் இன்று பூராவும் கேட்டுக் கொண்டிருக்கலாம்.

தப்பித்துக்கொண்டிருக்கும் கைதியைப்பற்றியும் பேச்செடுப்பான் சாம்பு. போலீஸார் கைதியைப் பிடிக்கக் கையாளும் வழியே தவறு என்று தம் அபிப்பிராயத்தைச் சொல்லி, 'பதினைந்து நாள்கள் மட்டும் இவர்கள் சும்மா இருக்கட்டும். கைதியைப் பற்றிக் கவனிக்கவே கூடாது. அதற்குள் கைதி தைரியமடைந்து

திரியத் தொடங்குவான். தானாகப் பிடிபட்டு விடுவான்!' என்றார். அடுத்த நாள் இன்ஸ்பெக்டர் கோபாலனிடம் சாம்பு இந்த அற்புதமான யோசனையைத் தன் சொந்த அபிப்பிராயம் போலவே வெளியிட்டான்.

டாக்டரிடமும் அதைச் சொன்னபோது, 'ரொம்ப சரி! நானுங் கூட உமக்கு என்னால் முடிந்தவரை உதவி செய்ய முடியும். ஆனால், என் தம்பிதான் ஒரு பிரதிபந்தகமாக இருக்கிறான். இந்த ஊர் சீதோஷ்ணம் இவனுக்கு ஒத்துக்கொள்ளவேயில்லை, ஸார்! பாருங்கள்! நேற்று முதல் உடம்பு ஒரு மாதிரியாக இருக்கிறான். பத்து நாளைக்காவது இவனை மதனபள்ளியில் என் சிநேகிதர் வீட்டில் விட்டுவிட்டு வந்து விடலாமென்று யோசிக்கிறேன்!' என்றார் கவலையுடன்.

'செய்யுங்கள். முதலில் அதைக் கவனியுங்கள்!' என்று சொல்லிவிட்டு வந்தான் சாம்பு.

மறுநாள் டாக்டர் வீட்டுக்குக் கிளம்பிய சாம்பு, வாசலில் சுந்து ஏதோ ஒரு சிறு குழாயை வைத்துக்கொண்டு விளையாடுவதைப் பார்த்துவிட்டு, 'என்னடா அது? இப்படிக் கொடு!' என்றான்.

'இது என்னது! நான் தர மாட்டேன், போ!' என்றான் பயல்.

'கொண்டாடா , பார்த்துவிட்டுத் தந்துடறேன்!'

'ஐயோ, அம்மா! இந்த அப்பாவைப் பாரேன்!' என்று ஓலமிட்டான் சுந்து.

'என்ன வேண்டியிருக்கு? எப்பப் பார்த்தாலும் குழந்தையைச் சீண்டிக்கொண்டு!' என்று வெளியே வந்தாள் வேம்பு.

சாம்பு அதற்குள் சுந்துவிடமிருந்து குழாயைப் பிடுங்கி தலைக்கு மேல் பிடித்து, அது என்னவென்று பார்த்துக் கொண்டிருந்தான்.

'ஐய! குழந்தைக்கு மேலே குழந்தையாயிருக்குடி இது! என் பெரியம்மா மாப்பிள்ளை மிலிட்டரியிலேர்ந்து வந்திருக்கான். வெடிகுண்டு வைக்கிற வெத்துக் குழாயாம். குழந்தைதான் விளையாடட்டுமே அதை!' என்றாள் வேம்பு.

'இவனுக்கென்னத்துக்கடி இது?' என்று சாம்பு தன் பையில் அதைப் போட்டுக்கொண்டு போனான். டாக்டரிடம் காண்பித்தால் எவ்வளவோ விஷயம் சொல்வாரே!

சுந்து கீழே மண்ணில் விழுந்து புரண்டான்; கையையும் காலையும் உதைத்துக் கொண்டான். 'உன்னை, உன்னை!' என்று விக்கினான். ஆனால், ஒன்றையும் லட்சியம் செய்யாமல் சாம்பு நடந்து விட்டான்.

சாம்பு சென்ற சமயம் டாக்டர் தம் தம்பிக்குச் சுசுருஷைச் செய்து கொண்டிருந்தார். கட்டிலில் அசையாமல் கிடந்தான் தம்பி. தாடியும் மீசையும் வளர்ந்து முகமே தெரியாமல் மூடியிருந்தது.

'வாருங்கள், சாம்பு! இன்றைக்கு ராத்திரியே கிளம்புகிறேன், ஸார்!' என்றார் டாக்டர்.

'அவ்வளவு சீக்கிரமாகவா?' என்று கேட்டான் சாம்பு, வழக்கம் போல் தன் கோட்டுப் பையில் கையை விட்டுக் கொண்டு.

டாக்டர் பதில் சொல்லுமுன்பு, 'மிஸ்டர் சாம்பு!' என்று அழைத்துக்கொண்டு நுழைந்தார் இன்ஸ்பெக்டர் கோபாலன். 'அடடா! உங்கள் தம்பியா? எப்படி இருக்கிறார்?' என்று விசாரித்தார் அனுதாபத்துடன்.

'அவனைப்பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறேன் சாம்புவிடம். மதனபள்ளியில் இரண்டு மாசமாவது இருந்தால்தான் பிழைப்பான்! யாராவது அங்கே உங்களுக்குச் சிநேகிதர்கள் இருக்கிறார்களா?' என்று கேட்டுக்கொண்டே, டாக்டர் அறைக்கு வெளியே போனார் கையலம்புவதற்கு.

'நான்கூட இன்ஸ்பெக்டர் வருவார் என்று சொல்லிக் கொண்டிருந்தேன்; நீங்களும் வந்தீர்கள்!' என்றான் சாம்பு கோட்டிலிருந்து கையை எடுத்து. கையோடு சுந்துவின் குழாயும் வெளியே வந்தது.

இன்ஸ்பெக்டர் நோயாளிகளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார். சாம்பு குழாயை இருகைகளிலும் பிடித்துத் திருகத் தொடங்கினான். இன்ஸ்பெக்டராகப் பார்த்து அது என்ன என்று கேட்கட்டுமே! அப்புறம் சொல்லலாமே!

வியாதியஸ்தனின் கண்கள் சாம்புவையே விறைத்துப் பார்ப்பதையும், ஒரு பயங்கரமான தோற்றம் அதில் பரவுவதையும் இன்ஸ்பெக்டர்தான் முதலில் கவனித்தார். 'ஐயோ! அது என்ன?

கடைசிக் காலத்தில் ஹ்ருதயம் நிற்கும் முன் ஏற்படும் விகாரமா யிருக்குமோ அது!' என்று அவர் திடுக்கிட்டார்.

சாம்பு அதற்குள் குழாயை முறிக்கிறாற்போல் வேகமாகத் திருகினான்.

அடுத்த விநாடி நோயாளி படுக்கையில் சடக்கென்று எழுந்து உட்கார்ந்துகொண்டு கையை வீசி, 'அடேய்! முட்டாள்! அதை ஒன்றும் பண்ணாதே! வெடித்துவிடும்! வெடித்ததோ இந்த வீடே விழுந்து பொடியாகிவிடும்! நிறுத்து! நிறுத்து!' என்று கத்தத் தொடங்கினான். சற்றும் முன்னெச்சரிக்கை இல்லாமல் அவன் எழுந்தானாகையால் முகத்தை மறைத்துக்கொண்டிருந்த பெரிய தாடி கழன்றுகொண்டு கீழே விழுந்தது.

கோபாலன் தயாராக இருந்தார். 'இத்தனை நாளாக நீ இங்கேயா படுத்துக்கொண்டிருக்கிறாய்? ஓஹோ!' என்று கையிலிருந்த பாணாத் தடியால் அவன் மண்டையில் ஓர் அடி வைத்து விட்டார்.

திடுக்கிட்டான் சாம்பு. அவன் நிமிர்ந்தபோது, கையில் கத்தியைப் பிடித்தபடி டாக்டர் வாசற்படியில் நிற்பதைத்தான் கண்டான்!

'டாக்டர்! வீணாகக் கத்தியைக் காட்டிக்கொண்டிருக்க வேண்டாம்! அதை உடனே கீழே போடாவிட்டால் என்னிடம் துப்பாக்கி இருக்கிறது. நான் உபயோகித்து விடுவேன்!' என்றார் கோபாலன்.

சொன்னபடி செய்தார் டாக்டர்.

'சாம்பு! உமக்கு எப்போது முதல் தெரியும் இந்தச் சமாசாரம்?' என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

'நான் வந்த அன்றைக்கே தெரியும்! உடனே தேடிக்கொண்டு வந்துவிட்டானே இந்தப் பாவி, வீடு பார்க்கிறாற்போல்!' என்றார் டாக்டர் குரோதத்துடன்.

கோபாலன் சிரித்துக்கொண்டே, 'சாம்பு! உங்கள் சுந்து ஓடிவந்து சொன்னான். அப்பா வெடிகுண்டுக் குழாயைக் கொண்டுபோய் விட்டார். சீக்கிரம் போய்ப் பிடிச்சுக்கொண்டு வா அப்படின் னான். எனக்குச் சரியாப் புரியல்லே. உடனே மோட்டார் பைக்கிலே வந்தேன். நீர் குழாயை எடுத்து முறுக்கினதைக்கூட

நான் பார்க்கலைன்னா!' என்றபோது சாம்பு மௌனமாக வெத்துக் குழாயை நீட்டினான்.

'திருட்டு மனுஷன் இவன்! இது நிஜ வெடிகுண்டுதானாக்கும், என் ரூமிலிருந்துதான் தவறாகக் கொண்டுவந்து விட்டான் என்று என் தம்பி நினைத்துப் பயந்துவிட்டான். இத்தனைநாள் அவனைக் கட்டிக் காப்பாற்றினதும் ஒரே நிமிஷத்தில் வீணாகப் போச்சு!' என்று ஓலமிட்டார் டாக்டர்.

டாக்டர் என்ற பெயரில் வந்த பேர்வழி ஒரு பெரிய கொள்ளைக் காரன். அவன் தம்பியும் அதே காரணத்துக்காக ஜெயிலிலிருந் தவன். அவனைத் தப்புவித்துச் சில நாள் நோயாளி வேஷத்தில் மறைத்து வைத்திருந்து நல்ல சமயத்தில் கொண்டுபோவதற்கே இந்த நடிப்பெல்லாம் நடித்தான்.

நடமாட்டம் இல்லாமலிருப்பதற்காக, வேண்டுமென்றே பேய் உலாவும் பங்களாவாகப் பார்த்து வந்தானாம் அவன். போலீஸார் நடவடிக்கைகளை அறிந்துகொள்ள, சாம்புவின் சிநேகமும், போலீஸ் நாடகமும் சௌகரியமாக அமைந்தது டாக்டருக்கு ரொம்பச் சௌகரியமாயிற்று.

'ஆனால், கடைசியில் சாம்பு மோசம் செய்து விட்டானே!' என்று கதறினான் அவன்.

டாக்டரையும் அவன் தம்பியையும் கைது செய்தார் கோபாலன்.

'உமக்கு எவ்வளவோ தரம் சொல்லிவிட்டேன், சாம்பு! கடைசி வரையில் ரகசியம் செய்து ஒரொரு சமயம் ஆளைத் திணற அடித்துவிடுகிறீர். ஆனால், நோயாளி என்று பாசாங்கு செய்து கொண்டிருந்தவனை, வெற்றுக் குழாயைக் காட்டி உட்கார வைத்தீரே, அதுமட்டும் அபார வேலை!' என்று புகழ்ந்தார் இன்ஸ்பெக்டர்.

'அதிருக்கட்டும்! எனக்கு இந்தப் பங்களாவைப் பேசிவிட முடியுமா? வேம்பு தொல்லை தாங்க முடியவில்லை, ஸார்!' என்றான் சாம்பு.

சாம்பு வீட்டுக்குப் போனபோது சுந்துவை அழவிட்டதற்காக வேம்பு கோபித்துக்கொண்டாள்.

'இல்லைடி! ஒரு காரணார்த்தமாக அதைக் கொண்டு போனேன். வீணா அழவிடுவேனாடி! நான் என்ன அசடா? என்றான். பிறகு

நடந்த விஷயத்தைச் சொல்லி, அந்த வீட்டையே பேசச் சொல்லி விட்டேன். இனிமேயும் கோவிச்சுக்க மாட்டியேடி, சந்தோஷந் தானேடி? உம்!' என்று அசடு வழிய நெருங்கினான் வேம்புவை.

'சரிதான்னா சரிதான்! இதெல்லாம் உங்க நாடகத்திலே காட்டுங்கோ! இன்னிக்குக் கிருத்திகை; பலகாரம் பண்றவரைக்கு மாவது மேலே படாமல் ஒதுங்கியே இருங்கோ!' என்றாள் வேம்பு.

'அப்பா! கூடத்துக்குப் போயிடு! இல்லாட்டா இந்த வெடி குண்டை எறிஞ்சுடுவேன்!' என்றான் சுந்து.

39

திருநீர்மலையில் உத்ஸவம்

'வேம்பு! பவுடர் வேணும்னு வெறுமனே நச்சரிச்சுண்டிருந்தயே! வாங்கிண்டு வந் திருக்கிறேன், பார்!' என்று உள்ளே வந்தான் சாம்பு.

வழக்கமாகத் துள்ளிக்கொண்டு ஓடி வரும் வேம்பு, அன்று திரும்பிக்கூடப் பார்க்காமல் சூள் கொட்டிவிட்டு, சுரத்தில்லாமல், 'அப்படி மேஜையிலே வையுங்களேன்!' என்றாள்.

'என்ன விலை தெரியுமோ, வேம்பு? ஒன்பது ரூபாய்!' என்று அவளைப் பேச்சுக்கு இழுத் தான் சாம்பு.

வழக்கமாகச் சாம்பு தைலம், ஸோப்பு ஏதா னும் வாங்கி வந்தால், விலையை இப்படித் தான் வேடிக்கையாகப் பல மடங்கு உயர்த்திச் சொல்லுவான். வேம்பு ஒரு சிரிப்புச் சிரித்து, தன் அரிசிப் பல்லை அவனுக்கு அழகாக ஒரு தரம் காண்பித்து, 'ஆமாம்! ஒன்பது ரூபாய் - கொடுக்க மாட்டேளா? ஒன்பதணாவாக இருக்கும்! எனக்குத் தெரியாதாக்கும்!' என்பாள்.

வேம்பு எத்தனை கெட்டிக்காரி என்று சாம்பு சொக்கிப் போவான். 'அடியே! அடியே! ஒரேயடியாகக் குறைக்காதேடி! பதிமூணணா கொடுத்தேண்டி! நீயே பில்லைப் பாரடி!' என்று உண்மையைக் கெஞ்சலும் கொஞ்சலுமாக உளறிக் கொட்டுவான். 'நிஜத்தை வரவழைக்கத் தானே நான் அப்படிச் சொன்னேன்?' என்பாள் வேம்பு, சாம்புவின் கன்னத்தில் இச்சகமாக இடித்து.

இந்த வழக்கத்துக்கு மாறாக, இன்று வேம்பு அலட்சியமாக இருந்தது சாம்புவுக்கு ஒரே ஆச்சரியமாகப் போயிற்று. ஏன் இந்தப் பாராமுகம்? நாம் என்ன பிசகு செய்துவிட்டோம்?' என்று யோசித்தான். பிசகு செய்தது சாம்புவே அல்ல; அன்று விடியற்காலையில் அவனைத் தேடிக்கொண்டு வந்த சினிமா நக்ஷத்திரம் கன்யாகுமரிதான் அந்தப் பிசகினைச் செய்திருந்தாள்.

வேம்பு உள்காரியமாக இருந்துவிட்டதால், கன்யாகுமரி வந்ததை அவள் பார்க்கவே இல்லை. மதுரமான மெல்லிய குரல் ஒன்று சாம்புவின் அறையிலிருந்து வருவதைக் கவனித்து, சட்டென்று போய் உள்ளே எட்டிப் பார்த்தாள். அங்கே அவள் கண்ட காட்சி இதுதான்! சாம்புவின் கட்டிலின்மீது ஒரு ஸ்திரீ உட்கார்ந்து வெகுநாள் பழகியவள்போல் பேசிக்கொண்டிருந்தாள். எதிரில் ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்த சாம்பு அரைக் கண் மூடி ஆத்ம திருப்தியின் எல்லையை அநுபவித்துக் கொண்டிருந்தான்.

'இது சமாசாரம் உங்கள் ஒய்ஃபுக்குக்கூடத் தெரியப்படாது, ஞாபகம் இருக்கட்டும்! பின்னே உங்களை எப்போது பார்க்கலாம்?' என்றாள் அவள்.

'நான் வேம்புவிடம் சொல்லுவேனா? ஊஹூம். நீங்கள் வருகிறதற்கென்ன! எப்போ வேண்டுமானாலும் வாருங்களேன்!'

'நான் இங்கே வருகிறதைவிட, நீங்கள் என்னை வந்து பாருங்களேன். அதாவது அவர் இல்லாத சமயமாக இருக்க வேண்டும். நான் கடுதாசி எழுதி அனுப்புகிறேனே!'

சாம்பு ஒரு கட்டு நோட்டுகளைப் பையில் போட்டுக் கொண்டதைப் பார்க்க வேம்பு நிற்கவில்லை. 'எனக்குத் தெரியாத விஷயமாம். இதுவும் எனக்குச் சொல்லாதாம்! அவர் இல்லாத வேளையில் இதை வரச் சொல்லுகிறாள்!' என்று பல்லைக் கடித்துக்கொண்டு விடுவிடென்று உள்ளே போனாள்.

பார்க்கப்போனால் சமாசாரம் ஒன்றும் பிரமாதமில்லை. சினிமா நக்ஷத்திரம் கன்யாகுமரி அமோகமாக இருந்த காலம் அது. அவள் நட்சத்திரமாக மேலும் மேலும் முன்னேறிக்கொண்டிருந்த சந்தர்ப்பம். அவளும், அவளுடைய கணவன் சந்துருவும் மோட்டாரில் கிளம்பினால், பட்டணத்து ஜனங்கள் கற்சிலைகளாக நின்று கண்களை அகல விழித்துப் பார்த்தார்கள். கன்யாகுமரியின் கடாட்சத்துக்காகவும் மந்தஹாஸத்துக்காகவும் ஊரில் கௌரவஸ்தர்களாயிருந்தவர்கள், சந்துருவின் சிநேகத்துக்காகக் கஜகர்ணம் போட்டார்கள். சந்துருவும் வியாபகஸ்தன்தான். இல்லாவிட்டால் இந்த ஜகஜ்ஜோதியின் புருஷனாக இருக்க முடியுமா? இரண்டாயிரம் ரூபாய்க்குக் கன்யாவைப் புக் செய்ய விரும்புபவரை, இருபதினாயிரத்துக்குச் செய்யும்படி மயக்கி விடும் ஜாலக்கு அவனிடம் இருந்தது. தளுக்காகப் பேசி, தளுக்காகச் சிரித்தான்; தளுக்காக எதிராளியின் பணமும் அதனால் கழன்றது. இந்த ஜோடி அந்யோந்யமாகவும் ஆனந்தமாகவும் இருப்பதாக நினைத்துப் பெருமூச்சு விட்டது உலகம்.

சில மாதங்களாகக் கன்யாவின் நெஞ்சத்தில் - பல வைர வைடூரிய ஆபரணங்களை அது அகன்ற கவசமாக அணிந்திருந்துங்கூட - ஒரு சமயம் கள்ளத்தனமாகப் புகுந்துகொண்டு உறுத்தியது. சந்துரு முன்போல் இல்லை! அவன் பல தடவைகளில் ஆயிரம் ஆயிரம் ரூபாய்க்குச் செக்குகள் மாற்றத் தொடங்கினான். 'எதற்காகப் பணம்?' என்று கன்யா கேட்டதற்கு, 'உன் வேலையைப் பார்த்துக்கொண்டு சும்மா இரு!' என்றான். இதுவரை சந்துரு அவளிடமிருந்து எதையும் மறைத்ததே இல்லை. கன்யா கலங்கினாள். ஓர் ஆளை அமர்த்திச் சந்துருவைக் கவனிக்கச் செய்தாள். இரண்டு தடவைகளில் அவன் ஒரு ஸ்திரீயைத் தனிமையில் சந்தித்து, பணத்தைக் கொடுத்ததாக அந்த ஆள் சொன்னான். மூன்றாம் முறையும் அதைப் பார்த்த ஆள், சந்துருவிடம் வாங்கின அறையில் உயிர் தப்பியதே பெரிதென்று ஆகிவிட்டது.

இந்த சமாசாரத்தைத்தான் கன்யாகுமரி சாம்புவிடம் வெளியிட்டு, 'என் கூடப்பிறந்த அண்ணா மாதிரி உங்களிடம் சொல்லி என் குறையைத் தீர்த்துக்கொள்ளலாமென்று வந்திருக்கிறேன். நீங்கள் மட்டும் மாட்டேனென்னு சொல்லக் கூடாது!' என்றாள்.

சாம்பு மூக்கைத் தடவிக்கொண்டு யோசிப்பது போல் பாசாங்கு செய்தான். பிறகு, 'இந்த மாதிரி கேஸ்களில், உம். நான் நான்...'

என்று இளித்தான். சந்துரு அடிப்பதற்குக் கைகூசமாட்டான் என்பதைக் கன்யாகுமரியே சொல்லிவிட்டாள் அல்லவா? அப்புறம் அதில் தலையிட்டு, பொன்னான மேனியை புண்ணாக அடித்துக் கொள்வானேன்? ஆனால், சாம்புவின் தீர்மானம் எம் மாத்திரம்?

கடைசியில், கன்யாவின் சாதுர்யத்திலும் லாவண்யத்திலும் மயங்கி ரூபாயைப் பெற்றுக்கொண்டு, அதைக் கவனிப்பதாக ஒப்புக்கொண்டு விட்டான் சாம்பு.

அன்று சாம்பு சாப்பிடும்போது இதே நினைவாக இருக்கவே, இலையில் வைத்தது வைத்தபடி இருந்தது. 'சந்துருவைப்போல் மடையன் எங்கேயாவது இருப்பானா? ஆஹா! கிளி மாதிரி, மயில் மாதிரி, ஹம்ஸம் மாதிரி இப்படி ஓர் அப்ஸரஸை விட்டுவிட்டு...' என்று நினைத்தான்.

'ஏன்! சினிமாக்காரியை நினைச்சு உருகறேளோ?' என்று கேட்டாள் வேம்பு இடக்காக.

'அடியே! எப்படி உனக்கு அது தெரிஞ்சுதுடி?' என்றான் சாம்பு.

'மோரக்கட்டையில்தான் எழுதி ஒட்டியிருக்கிறதே! சாப்பிட்டு விட்டு தானே தனியா உட்கார்ந்து மனக்கோட்டை கட்டுங்கோ!'

'என்னடி என்னமோவெல்லாம் அடுக்கறே?'

'எனக்குத் தெரியுமே! நீங்கள் பம்பாய்க்குப் போய்விட்டு வந்த அப்புறமே சரியாக இல்லை. உங்களைச் சொல்லிக் குற்றம் இல்லை. எங்க அம்மா ஒரு பைத்தாரி; இங்கே கொண்டுவந்து தள்ளினாளே என்னை, அதைச் சொல்லணும்!' என்றாள் வேம்பு.

'உனக்கென்ன கெட்டுப்போச்சு அதனாலே, நாயே? ஹூம். நான் என்ன தகாத புள்ளியா? ஒருத்தொருத்தன் அசட்டுத்தனமா நிற்கிறபோது, நான் எப்படி இருக்கிறேன்? சாம்பு என்று எங்கே சொன்னாலும் தெரியுமேடி! அது தெரியுமோடி உனக்கு?'

வேம்பு பதில் சொல்லவில்லை. சாம்புவுக்கு அழகு காட்டிவிட்டு அப்பால் போனாள். அன்று சாயந்திரம் லேடீஸ் கிளப்பில் வேம்புவின் புதிய சிநேகிதி சௌந்தரம் அவளைக் கட்டிக் கொண்டு, 'ஏண்டி வேம்பு! இன்னிக்கென்ன நீ ஒரு மாதிரி இருக்கே! ஆத்துக்காரர் அடித்தாரா? அழுதியா?' என்று பரிவுடன் கேட்டாள்.

முதலில் தலையை ஆட்டிக் கொண்டிருந்த வேம்பு, கடைசியில் எல்லாவற்றையும் ஒப்புவித்து விட்டாள். 'நான் உன்னிடம் என் சொந்த தங்கை மாதிரிச் சொல்கிறேன். அவர் சாதுதான். ஆனால், இருக்கிறபேர் கெடுத்து அவர் புத்தி மாறிப்போய் விட்டதுடி!' என்றாள்.

'நீ சும்மா இருடி, வேம்பு! என் அப்பாவிடம் சொல்லி, அவரை ஓர் அதட்டல் போடச் சொல்றேனே?' என்றாள் சௌந்தரம்.

சௌந்தரமும் அவள் தகப்பனாரும் வேம்புவின் பங்களாவுக்கு நாலு பங்களா தள்ளி ஒரு மாசத்துக்கு முந்திதான் குடி வந்திருந்தார்கள். அவர் வடக்கே போலீஸில் பெரிய பதவி வகித்து ரிடையர் ஆனவர் என்று மட்டும் சாம்பு கேள்விப்பட்டிருந்தான். நேரில் இன்னம் பரிச்சயம் செய்து கொள்ளவில்லை. மாம்பலத்தில் இருந்த பங்களாவைத் தவிர, குரோம்பேட்டைக்கும் பல்லாவரத்துக்கும் இடையில் மைனாகம் என்ற ஒரு பங்களாவையும் அவர் எடுத்துக் கொண்டிருந்தார். இரண்டொரு தடவைகள் கோபாலனிடங்கூட அவரைப்பற்றிப் பிரஸ்தாபிக்க வாயெடுத்திருக்கிறான் சாம்பு. ஆனால் சொல்லவில்லை.

சௌந்தரம் மேற்கூறியவாறு சொன்னபோது, 'ஐயையோ! அதெல்லாம் வேண்டாம்டி!' என்று துடித்தாள் வேம்பு.

'பயப்படாதேடி! இன்னொரு வேலை செய்கிறேன், பார்த்துக் கொண்டே இரு!' என்று சொல்லிவிட்டுப் போனாள் சௌந்தரம்.

அன்றிரவு சாம்பு வெளியிலிருந்து திரும்பி வீட்டுக்குள் நுழையும் போதே, 'ஸார்!' என்று ஒரு குரல் கேட்டது.

'யார் அது?' என்றான் சாம்பு.

வெளிச்சம் அதிகம் இல்லாத ஓர் இடத்தில், கொழுகொழுவென்று மீசை வைத்துக்கொண்டு ஓர் ஆசாமி நின்று கொண்டிருந்தான். 'இப்படி வாங்க!' என்றான் அவன், அங்கிருந்து சிறிதும் நகராமல்.

'என்ன சமாசாரம்?' என்று பக்கத்தில் போனான் சாம்பு.

அந்த ஆசாமி சாம்புவின் தோளில் ஒரு கையை வைத்து அழுத்திக் கொண்டு, 'சாம்பு! இன்னிக்கு ஒரு கேஸுக்காக காலையில் பணம் வாங்கினாய். உண்டா, இல்லையா? பதில் சொல்!' என்றான்.

சாம்பு, 'உம் !உம்!' என்று திணறத் தொடங்கினான்.

'நீ பயப்படாதே! அந்தப் பிச்சைக் காசு எனக்கு வேண்டாம்! அது எவ்வளவு, சொல்லு!'

'ஆயிரம் ரூபாய்!'

'பிடி இதை! இதில் ஆயிரத்தைந்நூறு இருக்கிறது. வைத்துக் கொள்! அந்தக் கேஸிலே நீ தலையிடக் கூடாது! தெரிந்ததா?'

தயங்கினான் சாம்பு.

'பிடிக்கிறாயா, என்ன? உம், அதுதான் சரி! நீ தலையிட்டாயோ, தீர்ந்துபோனே. நல்ல பிள்ளையாட்டமா உள்ளே போய், பருப்புஞ் சாதம் சாப்பிடணும். தெரிஞ்சுதா? போ!' என்று சாம்புவை ஒரு திருப்புத் திருப்பி விட்டான்.

விடுவிடென்று வாசற்படிவரை வந்து சாம்பு திரும்பிப் பார்த்தபோது அந்த ஆள் மறைந்து விட்டான். இதென்ன வேடிக்கை! ஒரு ஸ்திரீ காலையில் வந்து ஒரு கேஸை எடுத்துக் கொள் என்று ஆயிரம் ரூபாய் கொடுக்கிறாள். மாலையில் ஒரு மீசைக்காரன் அதை எடுக்காதே என்று ஆயிரத்தைந்நூறு கொடுக்கிறான். ஒரு கேஸை எடுப்பதை விட எடுக்காதது லாபகரமாக அல்லவா இருக்கும் போலிருக்கிறது!

இது விவரங்களைக் கோபாலனிடம் சொல்லுவதை விட, சௌந்தரத்தின் தகப்பனாரிடம் சொல்லி அபிப்பிராயம் கேட்கலாம் என்று சாம்புவுக்குத் தோன்றியது. தவிர, அவருடன் சிநேகம் செய்து கொள்ளவும் இது ஒரு சந்தர்ப்பமல்லவா? சாப்பிட்ட கையுடன் கிளம்பினான்.

காம்பவுண்டுச் சுவரைத் தாண்டியவுடன் சாம்பு துள்ளிக் குதித்தான். காலில் குறுகுறுவென்று ஏதோ மிதிபட்டுவிட்டது. தேளோ, நட்டுவாக்கிளியோ என்று நடுங்கி, டார்ச்சைத் திருப்பினான். கீழே கிடந்தது ஒரு பொய் மீசை! சாம்புவுக்கு ஞாபகம் வந்தது. கேஸை எடுத்துக்கொள்ள வேண்டாமென்று எச்சரிக்கை செய்ய வந்த பேர்வழி, வேஷம் போட்டுக்கொண்டு வந்திருக்கிறான். போன அவசரத்தில் அதை நழுவ விட்டுவிட்டுப் போயிருக்கிறான் போலிருக்கிறது!

சாம்பு போனபோது, சுதர்சனம் அய்யங்கார் வீட்டில் போயி மட்டுந்தான் இருந்தான். 'எஜமான் குரோம்பேட்டைப் பங்களா

வுக்குப் போயிருக்கிறாரு. சின்ன அம்மாவும் போயிருக்கிறாங்க கூடவே. எப்போ வருவாங்களோ தெரியல்லே!' என்றான் அவன். சாம்பு வீட்டுக்குத் திரும்பினான்.

மறுநாள் காலை எழுந்த சாம்பு, இதற்குள் வேம்புவின் கோபம் குறைந்திருக்காதா என்று எதிர்பார்த்தான். தாஜா செய்து பார்க்கலாமென்று, 'இன்று என்ன கிழமை வேம்பு?' என்று நயிச்சியமாகப் பேச்சை ஆரம்பித்தான்.

'கிழமைகூடத் தெரியாமே இந்த மண்டையில் மோகம் ஏறிக்கிடக்கோ? இன்னிக்கு சனிக்கிழமை!' என்றாள் வேம்பு.

'திருநீர்மலையில் இன்றைக்கு உத்ஸவம் ஆச்சே! நீ வருகிறாயா?'

'நீங்கள் போய்விட்டு வந்தாலே எனக்குச் சந்தோஷம். கன்யா குமரி வந்தால் உங்களுக்குச் சந்தோஷம்!' என்றாள் வேம்பு இடக்காக.

காலை வேளையில் இதோடு நிறுத்திக்கொள்வதுதான் சரி என்று பேசாமல் போனான்.

பிற்பகல் இரண்டு மணிக்கே, திருநீர்மலைக்குச் சாம்பு பயணமானான்.

சாம்பு போன பிறகு கோபாலன் அவசரமாக வந்து விட்டுப் போனார். 'எங்கே போனார் சாம்பு? எப்போது போனார்? ஏதாவது சொல்லிவிட்டுப் போனாரா?' என்று திருப்பித் திருப்பிக் கேட்டார்.

'ஒன்றும் சொல்லவில்லையே!' என்றான் வேம்பு திருப்பித் திருப்பி.

'நான் ஒரு கடிதம் அனுப்பியிருந்தேன் நேத்து. அதைப் பார்த்தாரோ? பார்த்தால் ஏதாவது சொல்லியிருப்பாரே?' என்றார் இன்ஸ்பெக்டர் தயக்கத்துடன்.

வெடுக்கென்று வேம்புவின் உள்ளத்தில் இது தைத்தது. அந்தக் கடிதத்தைச் சினிமா நட்சத்திரந்தான் கொடுத்திருக்கிறாள் என்று நினைத்து சாம்புவிடம் கொடுக்காமல் இருந்துவிட்டாள்! ஆனால், அதைக் காட்டிக் கொள்ளாமலே 'எனக்கு ஒன்றும் தெரியாது!' என்று ஒரே வார்த்தையாகச் சொல்லிவிட்டாள் அவள்.

உதட்டைக் கடித்துக்கொண்டு கோபாலன் சிறிது நேரம் அங்கேயே நின்றார். பிறகு மோட்டார் சைக்கிளில் ஏறித் தலை தெறித்து விடுகிறாற்போல் ஸ்டேஷனுக்குப் போனார்.

திருநீர்மலை க்ஷேத்திரத்தில் பட்டர் பட்டாபி சாம்புவை நன்றாகக் கவனித்துக் கொண்டார். தோசையைச் சூடாகப் போட்டுவிட்டு, 'வீட்டுக்கும் பிரஸாதம் அனுப்புகிறேன். தாராளமாகச் சாப்பிடுங்கள்!' என்றார். மாலை ஏழு மணிக்குப் பெருமாள் புறப்பாடு நடந்தது. பாண்டு மேளமும் அமர்க்களப் பட்டது. அசாத்தியக்கூட்டம். சௌந்தரங்கூடச் சாம்புவின் கண்ணில் பட்டாள். பௌர்ணமியாதலால் அன்று நிலா திவ்யமாக இருக்கும் என்று வீதிப் பிரதட்சிணம் மெல்ல ஊர்ந்து சென்றது. சங்கீதத்தை அநுபவித்தவாறு தலையை ஆட்டிக் கொண்டு சென்ற சாம்புவின் முதுகில் ஒரு ஷொட்டு விழுந்தது. தன் நினைவு வந்து திரும்பினால், பின்னால் நின்றான் சந்துரு!

'சாம்பு! இப்படி வருகிறீரா?' என்று தனியே இழுத்தான் சந்துரு.

'ஏன் என்ன?' என்று பதறிக்கொண்டு கேட்டான் சாம்பு.

'கேஸை எடுக்கவில்லை! என்று சொல்லி! பணமும் வாங்கிக் கொண்டு ஏன் இங்கு வருகிறீர்?'

'ஐயையோ! ஸ்வாமி தரிசனம் செய்ய அல்லவா வந்தேன்?'

'பின் ஸ்வாமி தரிசனம் ஆனவுடன் போக வேண்டியதுதானே நீர்? மத்தியான்னம் மூன்றரை மணியிலிருந்து நானும் பார்க்கிறேன்! இந்த வேலையெல்லாம் என்னிடம் வைத்துக் கொள்ளாதேயும்!'

'என்ன ஸார் நீங்கள்?'

'பேசப்படாது! மணி எட்டரையாகிறது! இப்போதே நீர் திரும்பினால், ஒன்பதரை மணிக்குக் குரோம்பேட்டில் ரயில் இருக்கு. மாம்பலம் போய் வீட்டிலே தூங்கலாம். சொன்னதைக் கேட்காமல் நின்னீரோ, ராத்தூக்கம் திருநீர் மலைக்குளத்திலே!' என்றான் அவன். பிறகு வந்த சுவடு தெரியாமல் கூட்டத்தில் மறைந்தான்.

தானும் திருநீர்மலையிலிருந்து மறைவதே உத்தமம் என்று சாம்புவின் உள்ளுணர்வு வற்புறுத்தியது.

சுமார் அரை மைல்தான் வந்திருப்பான் சாம்பு. பகல் போல் காய்ந்தது நிலா. மூன்று ஆசாமிகள் கைகோர்த்து வருகிறார்கள்

பின்னால். நல்ல துணையாக இருக்கும், சேர்ந்து போகலாம் என்று சாம்பு நின்றான். ஆனால், அவர்களும் ஏனோ நின்று விட்டார்கள்! பிறகு மெல்ல நடந்தான், அவர்களும் மெல்ல நடந்தார்கள்! சந்தேகம் உதித்து வளரத் தொடங்கியது சாம்புவுக்கு. இதைப் பரீட்சை பார்த்து விடுவதென்று ஒரு மதகின் மேல் உட்கார்ந்தான் முப்பது நிமிஷம். அந்த ஆசாமிகளும் வரப்பில் இறங்கி உட்கார்ந்து கொண்டார்கள். இந்த ஆள்கள் சந்துரு அனுப்பி யிருக்கும் பேர்வழிகள் என்று சாம்புவுக்கு நிச்சயமாயிற்று. நிர்மானுஷ்யமான இடம் வரும்போது வெட்டிப் போடும்படி இவர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறானோ என்னவோ! யார் கண்டார்கள்?

இந்த ஆபத்திலிருந்து தப்ப வழி ஒன்றுமே புலப்படவில்லை. இன்னும் இரண்டு மைல் நடந்தால்தான் குரோம்பேட் ஸ்டேஷன். ஹா! ஏன் மறந்தோம் இத்தனை நாழி? சுதர்சனத்தின் பங்களா எங்கே போயிற்று?

சாம்பு எழுந்தான். தைரியமாக நடந்தான். ஒரு பர்லாங்கு சென்றதுமே மைதானம் வந்துவிட்டது. சாம்பு கதவை இடித்த மூன்றாவது நிமிஷத்திலே கதவைத் திறந்துகொண்டு நின்றார் சுதர்ஸனம்!

பேசுவதற்கு அவகாசம் இல்லை சாம்புவுக்கு. நின்றால் ஆபத்து. சுதர்சனம் சற்றும் எதிர்பாராதபடி, குபீரென்று பாய்ந்து அவரைத் தாண்டிக்கொண்டு உள்ளே ஓடினான் சாம்பு. ஒரு கணம் திகைத்த சுதர்சனம் கதவை மறுபடி சார்த்து முன்பு, சாம்புவைப் பின்பற்றி வந்த மூன்று ஆள்களும் உள்ளே காலை வைத்துக்கொண்டனர். ஹாலின் மற்றொரு கோடியிலிருந்தபடி சுதர்சனமும் அந்த மூன்று ஆள்களும் சண்டை போடுவது தெரிந்தது சாம்புவுக்கு. மூன்று பேருக்கு முன் எத்தனை நேரம் நிற்க முடியப் போகிறது இவரால்? தான் ஒருவனாவது தப்பிக்கலாமென்று இன்னும் உள்ளே ஓடினான். ஒரு சிறிய அறை கும்மிருட்டாகத் தென் பட்டது. அதனுள் புகுந்து படேரென்று கதவைச் சாத்தித் தாழ்ப் பாளும் போட்டுக் கொண்டான். அப்பாடா! இனிமேல் என்ன பயம்?

சரியாக ஒரு மணி அவகாசத்துக்குப் பிறகு, கோபாலன் குரல் கொடுத்தபோதுதான் சாம்பு கதவைத் திறந்துகொண்டு தைரியமாக வெளியே வந்தான்.

ஹாலில் சுதர்சனம் உட்கார்ந்திருந்தார். அவரைப் பார்த்ததும் ஏதேனும் பேசலாமென்று சாம்பு, 'இதைக் காண்பித்துப் பேசிக் கொண்டிருக்கலாமென்று வீட்டில்கூட உங்களை நேற்றும் இன்றும் தேடினேன் ஸார்!' என்று கோட்டுப் பையிலிருந்து அந்தப் பொய் மீசையை வெளியே எடுத்தான்.

'எல்லாம் தெரிந்த பிறகு, இதுவுந்தான் தெரிந்து போகட்டுமே! நேற்று இவரை மிரட்ட நான்தான் இந்த மீசையை வைத்துக் கொண்டு போயிருந்தேன். போக்கிரி மனுஷன்!' என்றார் சுதர்சனம், குரோதம் கொதிக்கும் குரலில்.

சாம்பு விழித்தான். 'ஓஹோ!' அப்ப - இது? ஆனால் இவனுக்கும் சந்துருவுக்கும் என்ன சம்பந்தம்? எதற்கும் மௌனமாகக் கவனிப்பதே நல்லதல்லவா?

இன்ஸ்பெக்டர் அழகுசிங்கம் சந்துருவையும் அழைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தார். அவனுடன் சௌந்தரமும் வந்தாள்.

'அப்பா! சாம்பு மோசம் பண்ணிவிட்டானா? அவனைத் திருநீர் மலையிலே பார்த்தபோதே பயந்தேன் அப்பா!' என்று கூவினாள் அவள். அப்புறம் கபகபவென்று பல ரகசியங்கள் வெளியாயின. சாம்பு திணறிப்போனான்.

சுதர்சனம், பர்மாவில் போலீஸில் இருந்ததென்னவோ வாஸ்த வந்தான். ஆனால் ஒரு கொள்ளைக் கேஸில் உடந்தையாக இருந்து ஜெயிலுக்குப் போனான். அதோடு வேலை போயிற்று. எனினும், சென்னையில் வந்து சர்க்காரோடு போட்டி போட்டான். குரோம்பேட்டையில் பங்களா வைத்துக்கொண்டு, நிபுணர்கள்கூட அசந்துபோகும்படி தத்ரூபமாக ரூபாய் நோட்டுகள் அடித்தான்.

பொய் நோட்டு அடிக்கவும் நிஜ நோட்டுகள் செலவழிக்க வேண்டும் அல்லவா? அதற்குச் சந்துரு அகப்பட்டான். சந்துருவுக்கு, சுதர்சனத்தின் தொழில் தெரியாது. தெரிந்திருந் தாலும்கூட அவனால் ஒன்றும் செய்திருக்க முடியாது. ஏனென் றால், சுதர்சனத்திடம் அவனுடைய ரகசியம் ஒன்று மாட்டிக் கொண்டிருந்தது. அதாவது, சந்துருவும் ஒரு காலத்தில் ஒரு கொலைக் கேஸில் கூட்டாளியாக இருந்து சுதர்சனம் இருந்த அதே சிறைச்சாலையில் இருந்தான். அது இப்போது வெளியா னால், கன்யாகுமரி கைவிடுவாள் என்பதுடன்கூட சந்துருவின்

பிழைப்பே போய்விடும். அகஸ்மாத்தாகச் சென்னையில் சந்துருவை அடையானம் கண்டுகொண்டு சுதர்சனம் அதைச் சொல்லி மிரட்டி, சந்துருவிடம் பணம் பிடுங்கி வரலானான்; சந்துருவிடம் பணம் வாங்கி வரச் சௌந்தரம் போனதால்தான் கன்யா சந்தேகப்பட்டுச் சாம்புவை ஏற்பாடு செய்தாள். சாம்பு கெடுத்துவிட்டான், ஆயிரத்தைந்நூறையும் வாங்கிக் கொண்டு! என்று குறைப்பட்டான் சுதர்சனம்.

'ஹ¨ம்! அதெப்படிச் சொல்ல முடியும்? அவர் பணம் வாங்கிக் கொண்டது எதற்கு? சந்துருவின் கேஸை எடுப்பதில்லை என்பதற்குத்தானே? கள்ள நோட்டுக் கேஸ் வேறு இல்லையா?' என்று சிரித்தார் கோபாலன்.

பிறகு சாம்புவைப் பார்த்து, 'ஏங்காணும்! மூணுபேரை உம்ம பின்னாலேயே அனுப்பினேனே! நம்ம ஆள்கள்தான் என்று தெரிந்துகொண்டு விட்டீரோ இல்லையோ?' என்றார்.

'இல்லை, இல்லவே இல்லை!' என்றான் சாம்பு யதார்த்தமாக.

'சும்மா அளக்காதேயும். நான் நம்பவே மாட்டேன். நீர் தனியாக இருந்தால் ஏதானும் ஆபத்தில் மாட்டிக்கொள்ளப் போகிறீரே என்று உம்மிடம் சொல்லாமலே ஆள்களை அனுப்பினேன்!' என்றார் கோபாலன்.

சாம்பு அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். வேறு என்ன செய்வான்?

இன்ஸ்பெக்டர் அழகுசிங்கம் உள்ளே போய், சாம்பு ஒளிந்து கொண்ட அதே அறையிலிருந்து நோட்டு அச்சடிக்கும் இயந்திரம், காகிதங்கள் மற்றும் அரைகுறையாகத் தயாராகியிருந்த நோட்டுகள் முதலியவற்றைக் கைப்பற்றி வந்தார்.

சந்துரு கையைப் பிசைந்துகொண்டு நின்றான். 'என் சமாசாரம் - என் ஒய்ஃபுக்கும் எனக்குங்கூட நேற்றுமுதல் தகராறு, ஒய்!' என்று எரிந்து விழுந்தான்.

எல்லாரும் சிரித்தார்கள்.

கேஸை முடித்துக்கொண்டு, இரவு போலீஸ் ஸ்டேஷனிலேயே தூங்கிவிட்டு, விடியற்காலைதான் சாம்பு வீட்டுக்குப் போனான். வீட்டு வாசலிலே, புறப்படத் தயாராக வண்டி நின்று கொண்டிருந்தது. சாம்புவின் மாமியார் அதில் உட்கார்ந்துகொண்டிருந்தாள்.

சாம்புவைப் பார்த்ததும் வேம்பு, 'நீங்கள் என்னை மறந்து சினிமாக்காரிகளோடேயே இருங்கோ. நான் இரண்டு மாசம் பிறந்தாத்தில் இருந்துவிட்டு வருகிறேன்! என்னைக் கூட்டிக் கொண்டு போகத்தான் அம்மாவுக்கு எழுதியிருந்தேன், வந்திருக்கிறாள்!' என்று சொல்லிவிட்டுச் சுந்துவுடன் வண்டியில் ஏறிக் கொண்டாள்.

'அடியே! அடியே!' என்றான் சாம்பு. அதற்குள் வண்டி புறப்பட்டு விட்டது.

•

உள்ளே போன சாம்பு, மேஜைமீது வேம்பு ஒரு லெட்டரை வைத்துவிட்டுப் போயிருப்பதைப் பார்த்தன். மூன்றாம் நாள் கோபாலன் அனுப்பிய கடிதந்தான் அது.

'கொஞ்ச நாளாக ஊரில் பொய் நோட்டுகள் நடமாட்டம் ஜாஸ்தியாகி வருகிறது. பேப்பரில் பார்த்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். மாம்பலத்து ஆசாமி ஒருத்தன்தான் செய்வதாக நமக்குத் தகவல். உடனே கவனிக்கவும். நாளை நீங்கள் திருநீர் மலை போகிறதாக அறிகிறேன்; இதற்கும் அதற்கும் சம்பந்தம் இருக்குமோ என்றுகூட எனக்குச் சந்தேகம்தான். எதற்கும் முன்னால் என்னை வந்து தவறாமல் பார்க்கவும் - கோபாலன்.'

'அடடே! அசட்டு வேம்பு இதைக் கொடுக்காமலே இருந்துட்டாளே! முன்னாலே நான் பார்த்திருந்தால் திருநீர்மலைக்கே போயிருக்க மாட்டேனே!' என்று தன் தலையில் வழுக்கையைத் தடவிக்கொண்டு அங்குமிங்கும் உலாத்தி வந்தான் சாம்பு.



40

அடி வேம்பு! அடி வேம்பு! அடி வேம்பு!

தன்னை அவ்வளவு அலட்சியம் செய்து கொண்டு வேம்பு பிறந்தகத்துக்குப் போய் விட்டதை நினைத்தபோது சாம்புவுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. ஒரு சமயம், இருக்கட்டும்; திரும்பிப் பார்க்கா மலே இருந்து விடுகிறேன் அந்த நாயை! என்று உறுமினான். மற்றொரு சமயம், வேம்பு அன்புடன் செய்து, நெய் சொட்டச் சொட்ட வாயில் ஊட்டிய வெண்பொங்கலின் ஞாபகம் வரும். ஐயோ! என்ன ஆசை! என்ன ஆசை! வேம்பு இல்லாமல் இருக்கும் இந்த ஜன்மமும் ஒரு ஜன்மமா? என்று ஒரு புத்தி சொல்லும். உடனே தக்ஷணமே - ஓடிப்போய் அவளை அழைத்து வருவது என்று நினைப்பான்.

இப்படியெல்லாம் பலவாறு நினைத்து மனம் ஊசலாட, சாம்பு அன்றிரவு கண்கொட்டவே இல்லை. வேம்புவின்மேல் கோபம் தணிந்து, மாமியார்மீது துவேஷம் உண்டா யிற்று. பின் அதுவும் மறைந்து, தன்னையே வெறுத்துக் கொண்டான். கடைசியில் வேம்பு சென்றிருந்த கும்பகோணத்துக்குப் போய்,

அவளைக் கையோடு அழைத்து வந்துவிடுவதென்ற தீர்மானத்துடன் மறுநாள் காலை எழுந்தான்.

ஆகவே, அன்று போட்மெயில் எஞ்ஜினின் உஸ் உஸ் சத்தத்துடன்கூட செகண்ட் கிளாஸில் படுத்திருந்த சாம்புவின் குறட்டையும் சேர்ந்து இழைந்தது.

சாம்புவின் எதிர்பாராத விஜயத்துக்காகக் கும்பகோணம் காத்திருக்கவில்லை. வழக்கமாகக் கூடும் ஜனங்களிடையே சாம்புவும் புகுந்து, சர்வ சாதாரணமான மனிதன் போலவே ஸ்டேஷனுக்கு வெளியே வந்து, ஒரு ஜட்காவில் ஏறிக்கொண்டு வீட்டைப் போய் அடைந்தான்.

'ஏன்னா! நீங்கள் சொல்லவேயில்லையே, இன்னிக்கு வர்றதாக!' என்றாள் வேம்பு.

'அடி! பேசாதேடி! நீ கிளம்புடி சொல்றேன். உம்! இப்பவே கிளம்பு!' என்றான் சாம்பு கோபமாக.

'நன்னாயிருக்கு! மெல்லத்தானே பேசுங்கோ. மாம்பலத்திலே நம்ம வீடு மாதிரி நினைச்சுண்டு இங்கே சத்தம் போட்டேளோ, குடித்தனக்காரர் காதிலே பட்டுச் சிரிச்சுப் போயிடும். ஏற்கெனவே அசடுன்னு நினைச்சுண்டிருக்கா இவா!' என்று எச்சரித்தாள் வேம்பு.

'அசடுதாண்டி நான், அசடுதான்! இல்லாவிட்டால், உன்னைத் துரத்திண்டு 200 மைல் வருவேனாடி?'

'ஏன், இரண்டாயிரம் மைல் வரப்படாதோ? உம் - இப்போது சாம்புவின் தலை வேம்புவின் அணைப்பில் இருந்தது. என் துரை என்னைத் தேடிக்கொண்டு எப்போ வரும்னு நான் காத்துண்டுன்னா இருக்கேன். உம்? நான் வந்த காரணத்தைக் கேட்டா நீங்க எவ்வளவு சந்தோஷப்படுவேள் தெரியுமா? சொல்லிடட்டுமா அதை?' என்றாள் வேம்பு கெஞ்சலாக.

தன்மீது அநாவசியமான சந்தேகம் எதையும் வேம்பு இன்னும் வைத்திருக்கவில்லை என்பதைக் கண்டதுமே சாம்புவுக்குப் பெரிய ஆறுதல் ஏற்பட்டு, மனம் குளிர்ந்து விட்டது.

காபி சாப்பிடும்போதுதான் அந்த ரகசியத்தை வேம்பு சொன்னாள். 'எனக்கு உடம்பே சரியாக இல்லை. நாலு மாசமா

நான் ஸ்நானம் செய்யவில்லை. அதை உங்களிடம் அங்கேயே சொன்னால், தடபுடல் பண்ணி தம்பட்டம் அடிப்பீர்களே என்று அம்மாவுக்கு எழுதினேன்.'

சாம்புவுக்கு வாயெல்லாம் பல்லாகப் போயிற்று. 'நிஜம்மா வாடி?'

வேம்பு பதில் சொல்லாமல், புன்னகை தவழும் முகத்தை மட்டும் அழகாக ஒரு முறை ஆட்டினாள்.

'அப்படியானால், சினிமாக்காரியோட நான் சிநேகமாயிருக்கிறேனென்று நீ என்னைக் கோவிச்சுக் கொண்டதெல்லாம்...'

'உள்ளாக்கட்டிக்குத்தான்!'

'என் கண்ணே! என் தங்கமே!' என்று சொக்கிப் போனான் சாம்பு.

'உங்க மூஞ்சியைப் பார்த்தாலே அது தெரியவில்லையா? அதற்கெல்லாம் சாமர்த்தியம் எங்கிருந்து வரும் உங்களுக்கு?' என்று செல்லமாக அவன் கன்னத்தில் இடித்துக் காட்டினாள் வேம்பு.

தொண்டையைக் கனைத்துவிட்டுக்கொண்டு வாசற்படியில் நின்றாள் மாமியார். 'அடி வேம்பு! மாப்பிள்ளைகிட்டே சொல்லிவிட்டாயோடி?' என்று கேட்டாள் அவள்.

'என்னத்தை, அம்மா?'

'எப்போ பார்த்தாலும் வேலை வேலைன்னு சாக்குச் சொல்றேளே! இங்கே வந்து பத்து நாளாவது இருக்கணும்னு என்ன கடுதாசி போட்டும் நீங்க வரலையே! இப்படியானும் வரட்டும் என்றுதான் நான் உன்னை அழைச்சுண்டு வந்தேன்னு சொன்னயோடி!'

'அதைத்தான் சொல்லிண்டேயிருக்கேன், அம்மா!' என்றாள் வேம்பு.

உடம்பெல்லாம் வியர்வையும் ஒரே கப்பிப் புழுதியும், கையில் ஒரு பம்பரமும் கயிறுமாக, யுத்த களத்திலிருந்து வரும் வீரனைப் போல் உள்ளே வந்தான் சுந்து. சாம்பு உட்கார்ந்திருந்தைக் கண்டதும் திடுக்கிட்டுப் போனான் அவன்.

'பார்த்தேளோல்லியோ உங்கள் பிள்ளையை! என்னாலே இவனை வைத்துக்கொள்ள முடியாது. ஆமாம்! நீங்களே அழைச் சுண்டு போங்கோ!' என்றாள் வேம்பு.

'ஏண்டா, விஷமமாடா? போக்கிரி! ஹும்?' என்றான் சாம்பு.

'போ அப்பா! இந்த அம்மா பேச்சை நீ நம்பறியே! இவள் உன்னை என்ன சொன்னாள் தெரியுமா?' என்று கேட்டான் சுந்து.

'என்னடா சொன்னாள்?'

'பாட்டிக்கிட்டே, நீ பேசாமே வாடி! அது ஒரு பித்துக்குளி! அதுக்கு நான் இல்லாட்டா ஒரு காரியமும் ஓடாது! தன்னாலே நாளைக்குக் காலம்பற வண்டியிலே வந்து நிற்காட்டாப் பாருடி!' அப்படின்னாள், அப்பா. நிஜம்மா, அப்பா!'

'ஏண்டி வேம்பு, சொன்னதுண்டா அப்படி?'

'நான் சொன்னேன், சொல்லல்லை! நீங்கள் இப்போ வந்தேளா, இல்லையா?' என்றாள் வேம்பு.

அன்று மாலை மாடி அறையில் சாம்பு வேம்புவுடன் ஏகாந்தமாக சரஸமாடிக் கொண்டிருந்தபோது ஒரு விசேஷம் நடந்தது. ஒரு குண்டு வெடித்ததுபோல் சத்தம் கேட்டுச் சதிபதிகள் திடுக் கிட்டுப் போனார்கள். ஜன்னல் கதவின் மீது மோதிய ஒரு பெரிய கல் கூரையின் மேல் விழுந்து, உருண்டு தரையைப் போய் அடைந்தது.

சாம்புவின் முகத்தில் பீதி தென்பட்டது. 'நான் வந்திருப்பது தெரிந்துதான் யாராவது காலிகள்...' என்று பயந்தான் அவன்.

வேம்புவின் முகம் உடனே தெளிந்துவிட்டது. 'ஒன்றும் பயப் படாதீங்கோ? யாரோ பைத்தியம் என்று சொல்லிக் கொண்டிருக் கிறார்கள். இது மாதிரி எத்தனையோ வீடுகளின்மேல் விழுந்திருக் கிறதாம். நேற்று வக்கீல் சுந்தரமய்யர் வீட்டு மாடியிலே விழுந்த தாம்!' என்றாள்.

சாம்பு பதில் சொல்லுமுன், 'ஸார்!' என்று ஒரு குரல் கேட்டது. சாம்பு எட்டிப் பார்த்தான்.

நடுத்தர வயதுள்ள ஒருவர் நின்றுகொண்டிருந்தார். அவர் ஒரு ஷர்ட்டும் அங்கவஸ்திரமும் மட்டும் அணிந்து கொண்டிருந்தார்.

'இங்கே... மெட்ராஸிலிருந்து... சாம்பு என்பவர் வந்திருப்ப தாகக் கேள்விப்பட்டு வந்தேன். அவாளைப் பார்க்கணுமே!' என்றார் அவர்.

'ஏன், என்ன சமாசாரம்?' என்று கேட்டான் சாம்பு.

'ஒன்றுமில்லை. ஔவையார் சொன்னார்' நல்லாரைக் காண்பது வும் நன்றே! என்று. அந்த மாதிரியாக...'

'உம். நான்தான் சாம்பு!'

'அடாடா! தாங்களா? ரொம்ப சந்தோஷம், ரொம்ப சந்தோஷம்! ஸ்ரீராமரைப்பற்றி வால்மீகியானவர் சொல்றபோது அவர் ஸௌலப்யமா இருந்தார் என்பதாகச் சொன்னார். அதாவது, மகாபுருஷனாயிருந்துங்கூடச் சுலபமாக நெருங்கிவிட முடியு மாம் அவரை. அதே மாதிரியாக நீங்களும்...'

'உட்காருங்கள். வேறே ஏதாவது விசேஷம் உண்டா?' என்று கேட்டான் சாம்பு.

'ஒன்றுமில்லை. என் பேர் பஞ்சாபகேசன். ரொம்ப நாளாக உங்களைப் பார்க்கணும்னு ஆசை. இதுவரை கிட்டல்லை. சிவவாக்கியர் ஒரு பாடலிலே சொல்றார் : வேணும் வேணும் என்று நீர் வீணுழன்று தேடுவீர்; வேணுமென்று தேடினாலும் உள்ளதல்லதில்லையே!' அப்படின்னார்ல. அந்த மாதிரிக்கு...'

'சரி, எனக்கு வேலை இருக்கிறது! இன்னொரு சமயம் பேசலாமே?' என்று சாம்பு, வேம்பு நின்ற திக்கைப் பார்த்தான்.

'அநேக விஷயம் பேசணும். அதுவும் நீங்கள் இப்படி மகா புத்திசாலியாகவும், பிறத்தியார் மனத்திலிருப்பதைக் கிராஹ்யம் பண்ணிக்கிற சக்தி உள்ளவராகவும் இருக்கிறதனாலே, அவசியம் பேசியாகணும். கேளுங்கோ, இந்த ஊரிலே போன வாரம் ஓர் அமர்க்களம்!'

'என்ன?'

'ஒன்றுமில்லை. ஓர் ஆசாமியை இன்னோர் ஆசாமி அடித்துப் போட்டு விட்டான். அடிபட்டுப்போனவர் அசலூர்க்காரர்; கோதண்டராம தேவர்னு பேர். அடித்தவன் யார்னு இன்னும் தெரியல்லை!'

'ஐயோ பாவம்! நான் வரட்டுமா? வேறே ஒண்ணுமில்லையே!'

'நானும் போகவேண்டியவன்தான். ஒரே ஒரு வார்த்தை; ஊருக்குப் புதிதாக வந்தவர் அவர். சேவகனோட வந்து பெஸண்ட் ரோடிலே ஒரு ஜாகையிலே தங்கியிருக்கிறார். அதோட நாய், பூனை, கிளி இப்படிப் பிராணிகள் மேலே ஆசை. வகைக்கு ஒண்ணும் வைச்சிருந்தார். அப்படி எத்தனையோ பேர் இருக்கிறார்கள் இல்லையா? ஷெல்லி சொல்கிறான் ஓர் இடத்திலே...'

'அட சனியன்!' என்று சாம்புவுக்கு ஆத்திரமாக வந்தது. 'விஷயத்தைச் சொல்லுங்கோ!' என்றான் படபடப்பாக.

'பார்த்தேளா? உங்களுக்கு விஷயத்திலே ருசி ஏற்பட்டுப் போச்சு! எனக்குத் தெரியும்! ஒரு நாளைக்கு அதாவது, போன வாரம் சாயந்திரம் ஹோட்டலிலேர்ந்து இவர் சேவகன் கண்ணன் சாப்பாடு கொண்டு திரும்பி வந்திருக்கான். பார்த்தால் தேவர் கீழே மண்டை பிளந்து கிடக்கிறார்! என்ன செய்வான், சொல்லுங்கள்!'

'நீங்கள்தான் சொல்லுங்கள்!'

'அப்படியே சாப்பாட்டைப் போட்டுவிட்டு, அலறிக்கொண்டு கீழே ஓடிவந்திருக்கிறான். போலீஸ்காரர் வந்து பார்த்தால், பெட்டி பேழையெல்லாம் காலியாக இருக்கு. இதிலிருந்து என்ன தோன்றுகிறது உங்களுக்கு?'

'உங்களுக்கு என்ன தோன்றுகிறது?'

'பார்த்தீர்களா, பார்த்தீர்களா? என் வாயையே கிண்டுகிறீர்களே! பணத்தையெல்லாம் கொண்டு போயிருக்கிறான் என்று ஏற்படுகிறது, இல்லையா?'

'சரிதான், ஸார்! சரிதான்! போனால் போயிட்டுப் போறான்!'

'நீங்கள் சொல்வதும் நியாயம்! வயிற்றுக்குச் சோறு கிடைக்காத காலம் இது! அன்னம் இல்லாவிட்டால் என்ன அப்புறம்? வேதத்திலே சொல்லியிருக்கு - 'அன்னகும் ஸாம்ராஜ்யமானாம் அதிபதீ ஸமாவது' என்று!'

'டபார்!' என்று ஒரு பெரிய சத்தம் கேட்டது. மறுபடி ஒரு கல், ஜன்னலில் இடித்துக் கூரையில் விழுந்து உருண்டு ஓடியது.

'அடடா! சொல்ல மறந்துட்டேனே! அந்தச் சேவகனுக்கு எஜமானன் மேலே அத்தியந்த விசுவாசம். உசிரையே வைத்திருந்தான். அன்னம் கொடுக்க வந்த எஜமானனுக்கு இனிமேல் பிண்டம்தான் என்று தெரிந்ததும், அவனுக்குப் புத்தியே கலங்கிப் போச்சுன்னா!' என்றார் பஞ்சாமி.

'உம்.'

'அவன் பாருங்கோ, கல்லை விட்டெறிந்துகொண்டு இப்போ பித்துக்குளி மாதிரி ஊரெல்லாம் அலைகிறான்! ஓர் இடத்திலே சொல்லியிருக்காள் ஆச்சாரியாள், சித்தம் பித்தஞ்ச மனுஷ்யானாம்.'

'சரி! அப்புறம், சொல்லுங்கோ!'

'நீங்கள் இங்கே வந்திருக்கேள். இந்தச் சமயத்திலே இந்தக் கேஸைக் கவனிக்கணும் - பகவான் ராமாவதாரம் ராவண வதத்துக்குத்தான் எடுத்தார் என்றாலும்கூட அகல்யைக்கும் சாப விமோசனம் செய்தாராம்! அதே மாதிரி.'

'நான் அநேகமாக நாளைக்குக் கிளம்பிவிடுவேனே!'

'அதனாலென்ன, அதற்குள்ளே முடித்துக்கொள்கிறேன் காரியத்தை. கீதையிலே பகவான் சொல்றார், யத்ர யோகிஸ்வரஹ் க்ருஷ்ணோ...'

'சரி, போய் வாருங்கள்!'

'விலாஸம் ஞாபகம் இருக்கட்டும். இது நடந்த இடம், பெஸண்ட் ரோடு. எனக்கு ஏன் இதில் இண்ட்ரஸ்ட் என்றால், நான் அடுத்த வீட்டுக்காரன்!' என்றார் அந்த ஆசாமி.

கொலை என்று கேட்டவுடனே காதவழி ஓட யோசனை செய்யும் சாம்புவுக்கு, ஒரு கொலைக் கேஸில் சம்பந்தப்பட, துளிகூடச் சம்மதமில்லை. வீட்டில் இருந்தால் யாராவது தொல்லை கொடுக்க வருவார்கள் என்று மறுநாள் காலை காபி சாப்பிட்டதுமே அவன் வெளியில் கிளம்பிவிட்டான். ஊர் புதிதாகையால் சாம்புவுக்கு அதிக தூரம் போனால் வழி தவறிவிடுமோ என்று பயமாக இருந்தது. டவுன்ஹால் ரோடோடு சென்று வலப்புறம் திரும்பினான். அப்புறம் பல தெருக்கள் திரும்பி, கடைசியாக ஒரு சந்து வழியாக வந்து பார்த்தால், மறுபடி டவுன் ஹால்

ரோடாகவே இருந்தது! ஆச்சரியப்பட்டு அதெப்படி என்று மூக்கை உருவிக்கொண்டு, வந்த இடத்துக்கே வந்திருக்க வேண்டுமென்று அவனுக்குத் தெரிந்தது. இப்படியே சுற்றிச் சுற்றி வந்து பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தவனுக்குப் பதினோரு மணி வேளைக்குச் சாப்பாடு ஞாபகம் வந்தது. இரண்டு தெருக்கள் தாண்டிவிட்டால் மாமியார் வீடு.

'ஸார்! உங்களைத்தானே?' என்றது ஒரு குரல். திரும்பிப் பார்த்தான் சாம்பு. ஒரு சிறு பயலைக் கரகரவென்று இழுத்துக் கொண்டு ஒருவர் வந்து கொண்டிருந்தார்.

'பட்டணத்திலேருந்து வந்திருக்கிறவர் நீங்கள்தானே?' என்று கேட்டு, சாம்புவின் முகத்தை உற்றுப் பார்த்தார் அந்த மனிதர்.

'ஆமாம்!' என்றான் சாம்பு.

'அந்தப் போக்கிரிப் பயல் சுந்துவின் தகப்பனார்தானே நீர்?'

'ஆமாம்.'

'ஸார்! நான் முதல் தடவை என்று அவனை நேற்றைக்குச் சும்மா விட்டேன். என்ன செய்துவிட்டுப் போயிருக்கிறான் தெரியுமா அவன்?'

'என்ன செய்திருக்கிறான்?'

'இந்தப் பையனைக் கல்லால் அடித்திருக்கிறான், ஸார்!'

'ஹுாம்! ஏன் அப்படி?'

'ஏனென்று கேட்டுக்கொண்டிருக்கிறவன் நான் இல்லை! அவன் முதுகை முறித்துப் போட்டிருப்பேன், ஸார்! இந்தப் பயல் பூஞ்சை, ஸார். இவனுக்கு மாசம் ஏழு ரூபாய்க்கு டானிக் வாங்கிக் கொடுக்கிறேன். இவன் கையிலிருந்த பம்பரத்தையும் கயிற்றையும் பிடுங்கிக்கொண்டு கல்லால் அடித்துவிட்டும் போயிருக்கிறான், உம்ம பிள்ளை கஜப் போக்கிரி! ஹுாம்?'

'நான் விசாரிக்கிறேன்!'

'விசாரிக்கிறதென்ன, ஸார்! நான் போலீஸில் ஹாண்டோவர் செய்திருப்பேன். ஆமாம்! என் மச்சினன் ஹெட்கான்ஸ்டபிளா யிருக்கிறான். முதல் தடவை என்று சும்மா விட்டேன்!'

'மாமாகிட்டேகூட நான் சொன்னேன், அப்பா! உம். உம். உம்... நான் பம்பரத்தை வாங்கித் தரேண்டா, அழாதேடா நீ, அப்படின்னானேன் அப்பா!' என்று விசித்தான் பயல்.

'எனக்குத் தெரியாதே! அதுக்குள்ளே சொல்லிவிட்டாயா? இந்தப் பயல் பம்பரம் அரைமணியிலே வந்து சேரணும், பையனையும் கண்டியும்!' என்றார் அவர்.

குரோதம் கொதிக்கச் சாம்பு வீடு திரும்பினான். போனவுடனே சுந்துவை நாலு அறை வைத்துவிடுவது என்றுதான் வேகமாக வந்தான். ஆனால், வாசலை நெருங்கும்போதே திக்கென்றது அவனுக்கு! தெருவில் அவன் வீட்டுக்கு வெளியே ஒரு போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் நின்றுகொண்டிருந்தார்! அதற்குள் அந்த அல்ப மனுஷன், ஒரு குழந்தைச் சண்டையை பெரிதாக்கி விட்டான் போலிருக்கிறதே!

இன்ஸ்பெக்டர், சாம்புவுக்கு ஒரு ஸலாம் வைத்துவிட்டு 'மூன்று தடவைகள் வந்துவிட்டுப் போனேன். நாலாவது தடவை இது! டவுன் ஹால் ரோடு பக்கம் நீங்கள் போய்விட்டு வருகிறீர்களோ?' என்றார்.

'ஆமாம்!' என்றான் சாம்பு.

'உங்களுக்கு விஷயம் பூராவும் தெரிந்திருக்குமே இதற்குள்?'

'தெரியும். கல்லை வீசி அடித்ததைத்தானே சொல்கிறீர்கள்?' என்று கேட்டான் சாம்பு.

'அது மைனர் விஷயம், ஸார்! பெரிய விஷயம் ஒன்று இருக் கிறதே! அதற்காகத்தானே உங்களை வந்து பார்த்தேன்!'

'இரண்டும் ஒன்றுதானே? நான்கூட இப்போதான் பம்பரம்...'

'பம்பரம் மாதிரி சுற்றுவீர்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இருந்தாலும் கையோடு கையாகக் கவனித்து...'

சாம்பு வாசற்படியில் நின்றுகொண்டு, 'எலே! சுந்து! சுந்து! தடிப்பயலே, இங்கே வா!' என்று கூச்சல் போட்டான்.

சுந்து திருட்டு முழி முழித்துக்கொண்டும், கையைப் பின்னால் மறைத்துக்கொண்டும் வந்தான். அந்நியர் எதிரில் பையனை அடிக்க வேண்டாம் என்று கோபத்தை அடக்கிக் கொண்டு,

'பயலே! இன்ஸ்பெக்டர் கையிலே கொடுத்துடு அதை!' என்றான் சாம்பு.

ஒரு நிமிஷம் தயங்கினான் சுந்து. மறு நிமிஷம், தகப்பன் முகத்தில் தோன்றிய ரௌத்ரத்தைக் கண்டு அச்சம் அடைந்து, கையிலிருந்ததை இன்ஸ்பெக்டரிடம் ஒப்படைத்தான்.

அது பம்பரம் அல்ல. உயிருள்ள, ஆனால் சிறகொடிந்த ஒரு கிளி!

சாம்பு திகைத்தான். இது ஏது, இதை யார் கொடுக்கச் சொன்னது இவனை?

அந்தச் சமயம் முதல்நாள் மாலை சாம்புவைப் பார்க்க வந்த பஞ்சாமி சொல்லி வைத்தாற்போல் வந்து நின்றார் அங்கே. இன்ஸ்பெக்டர் கையிலிருந்த கிளியைப் பார்த்ததும், அவர் 'அட, சுகப்ரம்மரா! ரங்கா, ரங்கா!' என்றார் பழகினவர்போல்.

கிளி இருமுறை மூக்கைத் துடைத்துக்கொண்டது. பிறகு, மூக்கைத் திறந்து, 'கண்ணன் கொன்னுட்டான், கண்ணன் கொன்னுட்டான், கண்ணன் கொன்னுட்டான்!' என்று ஸ்பஷ்டமாகத் திருப்பித் திருப்பிக் கீச்சிட்டது.

இன்ஸ்பெக்டர் கண்கள் அகல விரிந்தன.

அதற்குள் பழைய பஞ்சாமி, 'அடாடா! நம்ம கோதண்டராமத் தேவர் கிளியல்லவோ இது? அவர் அடிபட்டு விழுந்த அன்னிக்குத் தப்பித்துக்கொண்டு போனது, இப்போதான் அகப்பட்டிருக்கு! யார் ஸார் பிடித்தது?' என்றார்.

'நான்தான் பிடித்தேன். அதை அப்பா வந்து, உம் அப்பா வந்து...' என்று தயங்கித் தயங்கித் தொடங்கினான் சுந்து.

'அடடே! கல்லால் அடிபட்டிருக்கிறாப்போலே இருக்கே, பாவம்!' என்றார் பஞ்சாமி.

'இந்த ஊரிலே சில நாள்களாய் ஒருத்தன் கல்லை எறிந்து கொண்டிருக்கிறானே, அவன்தான் இதை அடித்திருக்கிறான்! (அவசரமாக) அவன் பெயர் என்ன?' என்று விசாரித்தார் இன்ஸ்பெக்டர்.

'கண்ணன்! அவன்தானே தேவரிடம் சேவகனாயிருந்து, புத்தி ஸ்வாதீனமில்லாமல் போனவன்?' என்றார் பஞ்சாபகேசன்.

'யாருக்குங்காணும் புத்தி ஸ்வாதீனம் இல்லை? உமக்கும் எனக்குந்தான் இல்லை! இதோ இந்தச் சாம்பு ஸார் ஒரு நொடியிலே காண்பித்துவிட்டாரே, அந்தக் கண்ணன் பயல்தான் தன் எஜமானரை அடித்துப் போட்டுவிட்டுப் பணத்தை கொள்ளை யடித்திருக்கிறான் என்று! எனக்கு இப்போது எல்லாமே புரிந்துவிட்டது, ஸார்! அடித்துப்போட்டவன் சேவகன்தான். ஆனால், அவர் கிளியின் எதிரில் அடித்தவன் பெயரைச் சாகும் முன் சொல்லிவிட்டு உயிரை விட்டிருக்கிறார். கிளி தப்பித்துக் கொண்டு ஓடி இருக்கிறது. யாரிடமாவது அது சொல்லிவிடப் போகிறதே என்று பயந்துதான் கண்ணன் பைத்திய வேஷம் போட்டுக்கொண்டு, அதைத் துரத்தித் துரத்திக் கல்லை எறிந்து கொல்லப் பார்த்திருக்கிறான். ஒரு வாரமாக ஊரில் கல் விழுகிற மர்மம் இப்போ விளங்கிப் போச்சா? நான் சொல்கிறது சரிதானே, ஸ்வாமி?' என்று சாம்புவைக் கேட்டார் இன்ஸ்பெக்டர்.

'வாஸ்தவம், வாஸ்தவம்! என்று மென்று விழுங்கினான் சாம்பு. பிறகு, எலே சுந்து! நீ நேத்து கொண்டுவந்த பம்பரத்தை அந்தப் பையனிடம் கொடுத்துவிட்டு வா. சமர்த்தோன்னோ? சொன்னதைக் கேட்கணும்! போ, ஓடு! என்றான்.

கண்ணன் அப்போதே கொண்டுவரப்பட்டான். கிளியையும், சாம்புவின் பிரசித்தி பெற்ற மூக்கையும் பார்த்த பின் அதிக நேரம் அவன் பித்துக்குளி வேஷம் போடவில்லை. கொன்றது அவன் தான். பணத்துக்கு ஆசைப்பட்டுத்தான் செய்ததாக மளமள வென்று ஒப்புக்கொண்டு விட்டான்.

'இவ்வளவு சீக்கிரமா எப்படி ஸார் கண்டுபிடித்தீர்கள்?' என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

'நன்றாயிருக்கிறது! நான் நேற்று மாலையில் பார்த்து, ரொம்பச் சொல்லி, உடனே கவனித்து இன்றைக்குள் முடிக்க வேண்டு மென்று கேட்டுக்கொண்டிருக்கிறேன். அப்புறம் சற்றுமுன் பெஸண்ட் ரோடு பக்கம் இவர் சுற்றிச் சுற்றி வந்ததைப் பார்த்த வுடனே முடிவு சீக்கிரம் என்று நான் நினைத்துவிட்டேன். சபாஷ், சாம்பு ஸார்! நீங்கள் நினைச்சுட்டாலே...'

'ஏன் சாப்பிட நாழியாகலையா உங்களுக்கு? அம்மா பட்டினி யாக இருக்காளே!' என்று வேம்பு ரேழியில் நின்று கூப்பிட்டாள்.

'போங்கள், போங்கள் சார்! சம்சாரத்தோட மனத்தாங்கல்மட்டும் மனுஷாளுக்கு ஆகவே ஆகாது. பாருங்கள், இங்கே கம்பனைத்

தான் மேற்கோளாகக் 'காட்ட வேண்டியிருக்கிறது. ஸ்ரீராமன் சீதையைப் பார்த்துக் கேட்கிறான் ஒரு சமயம்...'

வேம்பு பல்லைக் கடித்து கையை ஆட்டி, சாம்புவை உள்ளே ஆத்திரமாக அழைத்தாள். ஸ்ரீராமன் சீதையைப் பார்த்துக் கேட்டது என்னது என்று தெரிந்து கொள்ளாமலேயே சாம்பு மாமியார் வீட்டு விருந்து சாப்பிட உள்ளே போய்விட்டான்.

•

இதற்குப் பத்து தினங்கள் கழித்துதான் சாம்பு சென்னைக்குத் திரும்பினான். வேம்பு மேலும் இரண்டு வாரமாவது இருந்து விட்டு வருவதாகச் சொல்லவே, அவன் மட்டும் சென்றான். அவன் கூடவே அந்தக் கிளியையும் கொண்டு போனான்.

சென்னையில் பங்களாவில் சாம்பு நாளை எண்ணிக்கொண்டு மிகுந்த சிரமத்துடன் பொழுது போக்கினான். எப்போதும் வேம்பு நினைவு. வேம்பு ஸ்மரணையேதான்! ராமேசுவரம் போயிருந்த கோபாலன், இதற்குப் பத்துப் பன்னிரண்டு தினங்களுக்குப் பிறகே பட்டணம் வந்தார். சாம்புவின் படத்தையும், கும்ப கோணம் கேஸ் விவரங்களையும் பேப்பரில் பார்த்திருந்தாராகை யால் உத்ஸாகமாக, 'ஓய்! ஜமாய்ச்சுப்பிட்டீரே! கிளியைக்கூடக் கையோடு கொண்டு வந்துவிட்டீராமே! இப்படிக் கொண்டு வாரும், என்ன சொல்கிறது கேட்கலாம்!' என்றார்.

கிளி கோபாலனைக் கண்டதும் கீச்சுத் தொண்டையில், 'அடி வேம்பு! அடி வேம்பு! அடி வேம்பு!' என்று மூச்சு விடாமல் அடுக்க ஆரம்பித்துவிட்டது.

கோபாலன், சாம்புவின் முதுகை அநுதாபத்துடன் தடவிக் கொடுத்தார். பிறகு, 'ஓய்! ஏன்காணும் இங்கே இருந்துகொண்டு இப்படி உருகுகிறீர்! வேம்புவோடதான் இன்னும் பத்து நாள் இருந்துவிட்டு வாருமேன்!' என்றார். அதைச் சொல்லும்போது அவர் கண்களில் வாத்ஸல்ய மிகுதியால் இலேசாகக் கண்ணீர் படர்ந்திருந்தது!

41

சங்கராபுரம் மகாராஜா

ஒரு வாரமா சாம்பு தலையை வெளியே காட்டவே இல்லை. ஜலதோஷமும் மண்டைக் கனமுமாக, அவன் வீட்டோடு அசையாமல் உட்கார்ந்துவிட்டான். ஒன்றன் பின் ஒன்றாக ஏழும் எட்டுமாகத் தும்மல்களை வாரி வீசிக் கொண்டு அட்டகாசம் செய்வதைக் கவனித்த கோபாலன், ஜலதோஷத்துக்குச் சௌகரிய மாக இருக்கட்டும் என்று ஒரு சிறிய பச்சை சீசா ஸ்மெல்லிங் ஸால்ட் கொடுத்துவிட்டுப் போனார். சிறிது நேரத்துக்கு ஒரு முறை, அதன் கண்ணாடி மூடியைத் திறந்து, மோந்து பார்த்துவிட்டுக் கோட்டுப் பைக்குள் போட்டுக் கொண்டான் சாம்பு. அதனால் நன்மை இருந்ததோ இல்லையோ? அந்தப் பச்சை சீசாவின் அழகிய பட்டை தீர்ந்த குமிழ் மூடி, சாம்புவுக்கு ரொம்பப் பிடித்துப்போய் விட்டது.

ஏழு நாள்களுக்குப் பிறகு மண்டைக் கனமும் மறைந்து தும்மலும் குறைந்தபின், சாம்பு உலாத்தி வரலாமென்று வெளியே கிளம்பி னான். பத்தடி போவதற்குள்ளாகவே அதே தெருவில் இருந்த ரங்கநாத ஐயர் சாம்புவோடு

சேர்ந்துகொண்டார். அந்த சமயத்தில் யாராவது ஒருவரைப் பார்க்கவேண்டாமென்று அவன் நினைத்திருப்பானானால் அவர் இந்தப் பேர்வழிதான்!

அவருக்கு, சாம்புவைக் கண்டாலே ஒருவித அலட்சியம்! சாம்பு ஒவ்வொரு கேஸிலும் பெரும் வெற்றி பெற்றுவந்த போதெல்லாம், 'ஊம். புரட்டவில்லையா இவன்! சான்ஸாக ஏதோ செய்திருக்கிறான்!' என்பார். இந்தப் பேச்சு சாம்புவின் காதையும் வேம்புவின் மூலமாக எட்டியது. ஆனால், இந்த மனுஷனை ஒன்றும் செய்ய மாட்டாமல், மனத்துக்குள்ளேயே குமுறிக் கொண்டிருந்தான் சாம்பு.

'என்ன டிடெக்டிவ்வாள்! எங்கே கண்ணிலேயே காணோம்?' என்றார் ரங்கநாதம் கேலியாக.

வெட்டுகிறாற்போல் அவரைப் பார்த்துவிட்டுச் சாம்பு, 'எனக்கு உடம்பு சரியாக இல்லை!' என்றான்.

'ஓஹோ! வேலை ஜாஸ்தியாக இருந்திருக்கும்! மூளைக்கு ஓர்க் கொடுத்திருப்பீர்!' என்றார் அவர்.

தனக்கு மூளை இல்லை என்பதைத்தான் இப்படிச் சுட்டிக்காட்டுகிறார் பேர்வழி என்று ஊகித்துக்கொண்ட சாம்பு, சற்று வேகமாக நடைபோட்டுப் பார்த்தான். அந்த ஆளும் கைத்தடியை ஆட்டிக்கொண்டு, 'நானும் வரேங்காணும்! ஏதோ கேஸ் பிடிக்கப் போகிறவர் மாதிரி போகிறீரே! கோபாலன் இருக்கக்கொண்டு நீரும் ஒரு மனுஷனாயிருக்கிறீர்!' என்று பின்தொடர்ந்தார்.

'ஏன், கோபாலன் என்ன செய்துவிட்டார் எனக்கு?'

'என்ன ஓய்! இது தெரியாதா? கோபாலனுக்கு வேண்டப் பட்டவராகப் போயிட்டீர். அதனாலே உமக்கு எல்லாம் நடக்கிறது, கேஸ்களெல்லாம் வரது, கேஸ் நுணுக்கங்களெல்லாம் தெரியறது, நீரும் ஆத்திலே உட்கார்ந்தபடியே நல்ல பெயரும் சம்பாதிச்சுக்கிறீர்! இல்லாவிட்டால், சாம்பு எங்கே?'

'இப்படியெல்லாம் சொன்னால் எனக்குக் கோபம் வரும்!' என்றான் சாம்பு உஷ்ணமாக.

'அடேயப்பா! கோபம் வந்தவுடனே கோபாலனிடம் சொல்லி விடுவீராக்கும்! கோபாலன் உடனே என்னை அடித்து விடுவா

ராக்கும்! பூச்சாண்டி காட்டுகிறீரே! இதற்குப் பதிலைச் சொல்லும்! வெங்கட நாராயணா ரோடு பங்களாவில் நீர் கைதியைப் பிடிக்கப்போகிற சமயத்திலே கோபாலன் அங்கே எதற்கு வரணும்? உங்களுக்குள் முன்னேற்பாடா இல்லையா? உமக்குப் பாதி, அவருக்குப் பாதி எடுத்துக்கொள்கிற வியாபாரந்தானே அது?'

'அநியாயமாகச் சொன்னால், நாக்கு வெந்துபோகும். ஆமாம்!'

'போலீஸ் காரியங்கள் எல்லாமே அப்படித்தான் காணும். இந்தக் கழியைச் சித்தே பிடியும், தலையை முடிந்து கொள்றேன்!'

சாம்பு அந்த மனிதருடைய கைத்தடியை வாங்கிக்கொண்டு நடந்தான். 'மிஸ்டர் ரங்கநாத அய்யர்! நீர் இந்த மாதிரி பேசப் படாது! தெய்வத்துக்கே அடுக்காது! ஆமாம். நான் ஒரொரு சமயங்களில் எவ்வளவு ஆபத்துக்கு உள்ளாகியிருக்கிறேன், தெரியுமா?'

'ஹஹ்ஹ! பிரமாத ஆபத்து! இதை நீர் எனக்குச் சொல்லி நான் உடனே நம்பணுமாக்கும்!'

இதைச் சொல்லி வாய் மூடியிருக்க மாட்டார் அவர். தெரு ஓரமாக வந்த டாக்ஸி ஒன்று பத்தடி முன்னால் போய் நின்றது. அதன் இருபுறத்திலிருந்தும் இரண்டு ஆள்கள் குதித்து, பயங்கரமாக நெருங்கினார்கள். தன்னைத்தான் அவர்கள் கும்பிட வருகிறார் கள் என்று நடுங்கிவிட்டான் சாம்பு. ஆனால், அவர்களில் ஒருவன் சாம்புவின் கையிலிருந்த தடியை வெடுக்கென்று பிடுங்கி, இலேசாக அதனால் அவன் முதுகில் ஒரு தட்டுத்தட்டி, 'டேய்! ஓடிவிடு! இங்கே நின்னே, உன் மண்டையும் விரிஞ்சு போகும்! பிடி ஓட்டம்!' என்றான்.

அடுத்த நிமிஷம் சாம்பு இருநூறு கஜத்துக்கு அப்பால் நின்று திரும்பிப் பார்த்தான். அந்த இரண்டு ஆள்களும் ரங்கநாத அய்யரின் இருபுறமும் நின்றுகொண்டு அவரை முஷ்டியால் குத்திக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் கடைசியாக அவருடைய காலை இடறிவிட்டு, முதுகிலும் ஒரு குத்துக் குத்தவே, கீழே சாய்ந்துவிட்டார் மனிதர். தன்னையும் கோபா லனையும் அநியாயமாக நிந்தித்ததற்காகக் கடவுள் கையோடு அனுப்பிய தண்டனையோ இது என்று சாம்பு ஒரு கணம் எண்ணினான். அதற்குள் வழிப்போக்கர்கள் இருவர் விரைந்து

வரவே, மேற்படி ஆசாமிகள் திரும்பக் காரில் ஏறிக்கொண்டு மறைந்துவிட்டனர்.

சாம்புவின் மனம் தவியாகத் தவித்தது. ஒரு முறை சீசாவை எடுத்து மூக்கில் வைத்து உறிஞ்சிவிட்டு, நாளைக்கு இன்ஸ்பெக்டர் கோபாலனிடம் இதைச் சொல்லவேண்டும் என்று நினைத்துக் கொண்டு விரைவாக வீட்டுக்குத் திரும்பினான்.

மறுநாள் காலை சாம்பு எழுந்தபோது, முதல்நாள் மாலை நடந்ததெல்லாம் கனவுபோல் தோன்றியது. பத்து மணிக்கு மேல்தான் ரங்கநாதனைப் பற்றிய தகவல் ஆஸ்பத்திரியிலிருந்து வந்தது. மண்டையில் அடி பலந்தான் என்றும், இன்னும் சிறிய அதிகம் பட்டிருந்தாலும் நிச்சயம் பிராணாபாயமே நேர்ந்திருக்கு மென்றும் சொன்னார்கள். சாம்புவின் மனம் சிறிது சாந்தம் அடைந்தது. 'அப்பாடா! என்று சாய்ந்து கொண்டான் ஈஸி சேரில்.

டெலிஃபோன் மணி கணகணவென்று உடனே அடித்தது. 'மிஸ்டர் சாம்புவா பேசுகிறது?' என்று கேட்டது குரல்.

'ஆமாம். ஆமாம். ஆமாம்.'

'ஜெய்ஹிந்த் பேங்க் காரியதரிசி மங்கேஷ் ராவ் பேசுகிறேன். உங்களால் இன்று ஓர் உபகாரம் ஆகவேண்டியிருக்கிறதே!'

சாம்பு டெலிஃபோன் ரிஸீவருக்குள் ஒரு தும்மல் அனுப்பினான். 'ரொம்ப ஜலதோஷமாயிருக்கிறது, ஸார்! ஓர் இடத்துக்கும் இப்போது என்னால் அசைய முடியாதே!' என்றான் தீர்மானமாக.

'நீங்கள் வரவேண்டியதில்லை, ஸார்! நான் வந்து உங்களைப் பார்க்கிறேன். வீட்டில் இருப்பீர்களா என்றுதான் கேட்டேன்!' என்றார் அவர்.

வீட்டில் இருக்க மாட்டேன் என்று தப்பித்துக் கொள்ளும் மார்க்கம் இல்லாமல் போகவே, சாம்பு தயங்கினான். அதற்குள் டெலிஃபோன் ரிஸீவர் வைக்கப்பட்டது. அதே சமயம் சாம்புவின் கோட் நுனியினால் தள்ளப்பட்டு, சீசாவின் பட்டை தீர்ந்த கண்ணாடி மூடி, மேஜை மேலிருந்து உருண்டு கீழே விழுந்து இரண்டாக உடைந்து போயிற்று!

நன்றாக, லட்சணமாக இருந்த மூடி அல்லவா போய்விட்டது? சாம்புவின் ஹிருதயமே அதோடு உடைந்துவிட்டது போல்

இருந்தது. காலைத் தூக்கி நாற்காலியில் வைத்துக்கொண்டு, பதினைந்து நிமிஷம் அசந்து உட்கார்ந்து விட்டான் சாம்பு. வாசலில் மோட்டார் ஹாரன் சத்தம் கேட்ட பிறகுதான் அவன் திடுக்கிட்டு நிமிர்ந்தான். உள்ளே நுழைந்துகொண்டிருந்தார் காரியதரிசி மங்கேஷ்.

சாம்புவின் முன்னால் மூன்று மாதுளம் பழங்களை வைத்து விட்டுக் கையைப் பிடித்துக் குலுக்கினார் அவர். ஜலதோஷம் என்று யோசனை செய்யவேண்டாம், ஸார்! இந்த மாதுளம்பழம் ரொம்ப ஒஸ்தி. விரையே இருக்காது. பழம் ஒண்ணே கால் ரூபாய் அடங்குகிறது! மகாராஜாக்களோ திவான்களோதான் இதைச் சாப்பிடக் கூடும். நீங்கள் சாப்பிட்டுப் பாருங்கள்!' என்றார் அவர்.

சாம்பு தலையை ஆட்டிவிட்டு, ஒரு முறை சீசாவை உறிஞ்சினான்.

'மிஸ்டர் சாம்பு! உங்களிடம் ஓர் உபகாரம் வேண்டி வந்தேன். பெரிய விஷயம் அது! ஆனாலும், நீங்கள் இருந்தால் போதும். இங்கே உட்கார்ந்து கொண்டிருப்பதை எங்கள் பேங்குக்கு வந்து உட்கார்ந்து கொண்டிருக்க வேண்டும். இங்கே இருப்பதுபோல் எல்லா சௌகரியங்களும் செய்து கொடுக்கிறேன்!' என்றார் மங்கேஷ் ராவ். காரியவாதியாகையால், சாம்புவின் கண்கள் திரும்பத் திரும்ப மாதுளம் பழத்தையே நாடுவதைக் கவனித்து விட்டு, அவற்றில் ஒன்றைச் சட்டென்று உடைத்தும் வைத்தார்.

'என்ன சொல்லுங்கள்!' என்றான் சாம்பு, மாதுள முத்துக்களை மும்முரமாக உதிர்த்துக்கொண்டு.

'உங்களுக்குப் பிடித்தால் ஒரு கூடைப்பழம் அனுப்பச் சொல்லி விடுகிறேனே! இந்த வெயில் காலத்துக்கு வெகுசுகம், ஸார். தாகமே எடுக்காது! அதோடு அப்படியே ரத்தம் ஸார், அவ்வளவும்!' என்றார் ராவ்.

சாம்பு மூன்று தும்மல்கள் சேர்ந்தாற்போல் தும்மிவிட்டுச் சீசாவை அவசரமாக அள்ளப் போனான்.

'கேளுங்கள், சாம்பு! நான் வந்த காரியம் ஒரு சமஸ்தானாதிபதியைப் பற்றியது. சங்கராபுரம் எஸ்டேட் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். ஒன்பது வருஷமாக இதன் உரிமையைப்பற்றிப் பெரிய வியாஜ்யம் நடந்து, பிரிவி கௌன்ஸில் வரையில் போய், மகேந்திர ராவ் நாயுடுதான் சொத்துக்கும் பட்டத்துக்கும் பாத்யதை என்று சென்ற வாரம் தீர்ப்பாகியிருக்கிறது. அதன்படியே மகேந்திர ராவ் நாயுடுவும் மகாராஜா பட்டம் பெற்றுக்கொண்டு விட்டார்.'

'பெற்றுக் கொள்ளட்டுமே! எனக்கு ஓர் ஆட்சேபமும் இல்லையே!' என்று நினைத்தான் சாம்பு.

மங்கேஷ் ராவ் தொடர்ந்து, 'இந்தக் குடும்பத்துக்கும் நம்ம பாங்குக்கும் வெகு நாளைய நட்பு உண்டு. வியாஜ்யம் ஆரம்பிக்கும் முன்பே, நம்ம பேங்க் இரும்புப் பெட்டியிலே இந்தச் சமஸ்தானத்து வைரக்கல் ஒன்று இருந்து வந்தது. அப்புறம் வியாஜ்யம் ஆரம்பித்து விட்டது. ஒரு வழியாகத் தீர்ப்பு ஆகிற மட்டும் நாமே வைத்துக் காப்பாற்ற வேண்டி வந்துவிட்டது.'

'அதை இப்போது காணோமாக்கும்? நான் வந்து தேடிக் கொடுக்கணுமாக்கும்? எனக்குச் சரிப்படாது! மண்டையிடி பொறுக்க முடியாமல் நான் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறேனே!' என்றான் சாம்பு.

'அவசரப்படாதீர்கள், ஸார்! அது இன்னும் ஜாக்கிரதையாக நம்மிடந்தான் இருக்கிறது. இதுவரை எத்தனையோ தடவைகள் யார் யாரோ அதைக் கொள்ளை அடிக்க முயற்சி செய்து பார்த்தும், நாங்கள் காபந்து செய்து விட்டோம். இன்று மாலை நாலு மணி வரை காப்பாற்றி, சுவாந்தாரிடம் அதை ஒப்புவித்து விட்டால் அப்புறம் நம் கவலை விட்டது.'

'ஒப்புவித்து விடுங்களேன்!'

'அதில்தான் உங்கள் சகாயமும் வேண்டியிருக்கிறது. இத்தனை வருஷமாக அதை வெளியில் எடுத்ததே கிடையாது. குறைந்த பக்ஷம் ஐம்பதினாயிரம் ரூபாய் வரை மதிக்கக்கூடிய அந்த ரத்தினத்தை வெளியே எடுத்தால்கூட யாராவது தட்டிக்கொண்டு போய்விடுவார்களோ என்று பயந்து கொண்டிருந்தோம். அதற்காகவே, இன்று சமஸ்தானாதிபதி வரும்போதும் அதைப் பெற்றுக்கொண்டு போகும்போதும் தாங்கள் கூட இருந்து விட்டால் கொஞ்சம் தைரியமாக இருக்கும்!'

சாம்பு யோசித்தான். சற்று நேரம் போய் உட்கார்ந்து விட்டு, மஹாராஜாவையும் பார்த்துவிட்டு, வரும்போது ஒரு கூடை மாதுளம் பழத்தையும் கட்டிக்கொண்டு வந்தால் வலிக்குமா என்ன?

'நீங்கள் யோசிக்கப்படாது அப்படி! சரியாக மூன்றரை மணிக்கு வந்துவிட வேண்டும்! என் காரை அனுப்பி விடுகிறேன்!' என்று மன்றாடினார் ராவுஜி.

'செய்யுங்கள். நீங்கள் அப்படிச் சொல்றபோது என்ன செய்கிறது! அந்த மாதுளம் பழம் இருக்கே, நல்லதாகப் பார்த்து மட்டும் கூடையில் எடுத்து வையுங்கோ!' என்றான் சாம்பு.

'ஜெய்ஹிந்த் பேங்க் வாசலில் அதன் காரியதரிசி மங்கேஷ் ராவின் காரிலிருந்து சாம்பு இறங்கி உள்ளே சென்றான். சுவரில் பெரிய கடிகாரம் 3.30 -க்கு அறிகுறியாக ஒரு மணி அடித்தது. நிஜார் அணிந்த சேவகர்கள் நேரே காரியதரிசியின் அறைக்குள் சாம்புவை அழைத்துச்சென்று விட்டார்கள்.

மங்கேஷ்ராவும், பேங்கின் பிரஸிடெண்டாகிய பசுபதி தாஸும் சாம்புவைப் பரம உபசாரங்களுடன் வரவேற்று ஒரு சோபாவில் அமரச் சொன்னார்கள்.

'மஹாராஜா வருகிற சமயந்தான். இன்னும் இருபதே நிமிஷங்கள்தான் இருக்கின்றன. சொன்னால் சொன்னபடி வந்துவிடுவார் அவர்!' என்றார் ராவ். சாம்பு கோட்டுப் பையிலிருந்த சின்ன சீசாவை எடுத்து மூக்கிலே வைத்து ஒரு முறை மோந்துவிட்டு அதை அப்படியே மேஜைமீது வைத்தான்.

அதற்குள் பசுபதி தாஸ், 'ஏன், மிஸ்டர் சாம்புவுக்கு அந்த வைரத்தைக் காண்பிக்கலாமே! அதுபோன்ற ஒரு பெரிய வைரத்தை அவர் இதுவரை பார்த்திருக்கவே மாட்டார்!' என்றார்.

ஒரு பெரிய கடுக்காய்ப் பிரமாணம் உள்ள அந்தக் கல் பெரும்பட்டைகள் தீர்ந்து, பார்வைக்குச் சாதாரணக் கண்ணாடி போலவே தோன்றியது. அதை உள்ளங்கையில் வைத்து அழகு பார்த்தான் சாம்பு. 'இந்தப் பிரமாதக் கல்லுக்கா இத்தனை மதிப்பு! ஹும்!' என்று அவன் யோசனை ஓடியது.

சாம்பு மறுபடி தலை நிமிர்ந்தபோது அறையில் பரபரப்பு ஏற்பட்டு, காரியதரிசியும் பிரஸிடெண்டும் நின்று கொண்டிருந்தார்கள்.

'மகாராஜா! மகாராஜா வருகிறார்!' என்று ஒரு குமாஸ்தா ஓடிவந்து சொல்லிவிட்டுப் போனான்.

கடிகாரத்தில் டாண் டாண் என்று நாலு அடிப்பதற்குச் சரியாக, ஆஜானுபாகுவான ஒரு புருஷன் இரண்டு பேர் பின்தொடர உள்ளே நுழைந்துவிட்டான்! அவனுடைய மிடுக்கான நடையும், நிமிர்ந்த பார்வையும், முழங்கால்வரை தொங்கும் ஸில்க் கோட்டையும், ஜரிகை முண்டாசையும் பார்த்த சாம்புவின் உள்ளத்தில் அவனையும் அறியாத ஓர் அச்சம் புகுந்து கொண்டது.

மகாராஜா சுவாதீனமாக ஒரு சோபாவில் உட்கார்ந்து கொண்டார். 'நான் எதற்கும் பங்க்சுவலாக வந்து விடுவேன்! இன்னிக்கு எங்கே லேட்டாகிவிடுமோ என்று கொஞ்சம் பயந்தேன். கார் என்ன வேகம் வந்திருக்கிறது. அப்பா! என்ன, எழுபது மைல் வந்திருப்போமா?' என்றார் பக்கத்தில் திரும்பி.

'எழுபத்திரண்டு!' என்றான் அவருடைய ஆள்களில் ஒருவன்.

'எங்கே! வைரத்தை எடுக்கிறீர்களா? நான் போக வேண்டும். 4.25-க்கு ஒரு டீ பார்ட்டியிலே இருப்பதாக எங்கேஜ்மெண்ட் இல்லையா?' என்றார் அவர்.

வைரம் என்றவுடன் காரியதரிசியும் பிரஸிடெண்டும் சாம்புவைப் பார்த்தார்கள். சாம்பு தன் உள்ளங்கையைப் பார்த்தான். அது காலியாக இருந்தது. சற்று முன்பு, அதிலிருந்த வைரத்தைக் காணோம்!

பகீர் என்று வயிற்றில் மின்சாரம் பாய்ந்ததுபோல் ஓர் உணர்ச்சி பாய்ந்தது சாம்புவுக்கு. முகத்திலிருந்த ரத்தமெல்லாம் ஜிவ்வென்று வடிந்து, ஒரு பிரேதக்களை அதில் பரவியது.

'என்ன ஸார்?' என்றார்கள் இருவரும் பரபரப்பாக.

'இங்கேதான் வைத்துக்கொண்டிருந்தேன். எங்கே போய்விடும்? இங்கேதான் இருக்கும்னா...' என்று நாற்புறமும் பார்த்துத் துழாவ ஆரம்பித்தான் சாம்பு.

'நிஜந்தானா ஸார்! விளையாடுகிறீர்களா? மகாராஜா காத்துக் கொண்டிருக்கிறார். தெரியவில்லையா உமக்கு?' என்று பேசினார் பிரசிடெண்ட்.

சாம்பு கைகள் பதற, துரிதமாகத் தேடத் தொடங்கினான். அவசரமாகத் தன் கோட்டுப் பைகளைச் சோதித்தான். பட

படக்கும் நெஞ்சுடனும் உதறும் கைகளுடனும் சட்டையைத் தடவிவிட்டு, எச்சிலை நாலு தடவை முழுங்கினான்.

'என்ன ஸார்? என்ன ஸார்?' என்று பரபரப்புடன் வினவினார் காரியதரிசி. அவர் உடல் வெடவெடவென்று நடுங்க ஆரம்பித்து விட்டது. ஒன்பது வருஷமாகக் கண்ணிமைக்குள் வைத்துக் காப்பாற்றின ஒரு பண்டம், ஒன்பதே விநாடியில் - அதுவும் கண்ணெதிரில் - சாம்புவின் கையில் மறைந்து விடுவதென்றால்!

'யார் இவன்! சொல்லுங்கள்! இதென்ன போக்கிரித்தனம்?' என்ற கர்ஜனை வந்தது மகாராஜாவிடமிருந்து. அவருடைய முகத்தை அகஸ்மாத்தாகப் பார்த்த சாம்பு நடுநடுங்கிப் போனான். அவர் கண்களில் நெருப்புப் பொறிதான் பறந்து கொண்டிருந்தது.

'நீங்கள் எல்லாரும் நகருங்கள்! நான் இவனைக் கவனித்துக் கொள்கிறேன்! இவன் ஒரு திருடன்! எனக்குத் தெரியும் வரவழைக்கும் வழி!' என்று முன்னால் வந்தார்.

காரியதரிசியோ பிரசிடெண்டோ வாயைத் திறக்கு முன்பு மகாராஜா சாம்புவின் மார்பில் கை கொடுத்து, கிடுகிடென்று அவனைச் சுவர்வரை தள்ளிக்கொண்டு போய்விட்டார்! சாம்புவின் பின் மண்டையிலிருந்த வழுக்கை சுவரில் படீரென்று மோதியதும், அவன் கண் முன்னால் உலகம் ஒரு சுழல் சுழன்றது. அவன் மறுபடி கண்ணை விழித்தபோது மகாராஜாவின் முஷ்டி அவன் மோவாய்க் கட்டைக்கு நேரே பயங்கரமாக ஆடிக் கொண் டிருந்தது. 'அடேய்! எங்கே வைத்தாய்? ஒப்புக்கொண்டு விடு! ஒரு குத்து விட்டேனானால், உன் மூஞ்சி உன் பெண்டாட்டிக்குக் கூட அடையாளம் தெரியாது! உம். கக்கிவிடு, நிஜத்தை!'

பல தடவைகள் வாயைத் திறந்து திறந்து மூடினான் சாம்பு.

'சரி! நீ இரு இங்கே!' என்று மகாராஜா மேஜையடிக்கு ஓடினார். பத்து நிமிஷங்கள் அவசரஅவசரமாக எங்கும் தேடினார். திரும்பிச் சாம்புவிடமே வந்தார். சந்தேகத்துக்கு இடம் வைக் காமல் சாம்புவின் உடலில் எங்கேயானும் ஒளித்து வைத்துக் கொண்டு இருக்கிறானோவென்று ஒரு முறை பார்த்தார். மறுபடி காரியதரிசியிடம் விரைந்தார். 'ஏன் ஸார், நீங்கள் இந்தக் காரியம் செய்கிறீர்கள்? ரொம்ப ஜாக்கிரதை செய்கிறதாக எண்ணிக் கொண்டு ரொம்ப முட்டாள்தனமாக நடந்து கொண்டிருக்கிறீர் களே! 'எனக்கு டயம் ஆகிறதே!' என்று துடியாகத் துடித்தார்.

எங்கே தேடியும் அந்தப் பச்சை வைரம் அவர்கள் யாருடைய கண்களிலும் தென்படவில்லை! கடிகாரம் ஓடிக் கொண்டிருந்தது.

அந்த சமயத்தில் நுழைந்தார் கோபாலன். அவர் பின்னால் இன்ஸ் பெக்டர்கள் அழகுசிங்கமும், சுந்தரவராகமும் வந்தார்கள். சாம்பு நிற்பதையும், மற்றவர்கள் அவனையே பார்த்துக்கொண்டிருப் பதையும் கண்டு புருவத்தை நெறித்தார். பிறகு மகாராஜாவின் பக்கம் திரும்பி, 'என்ன மிஸ்டர் கோவிந்ததாஸ்! உம்ம வேலைக்குக் குறுக்கே சாம்பு முன்னாலேயே வந்துவிட்டாற் போல் இருக்கிறதே!' என்றார்.

மகாராஜா இதை எதிர்பார்த்தவராகத் தோன்றவில்லை. அவர் முகம் ஏனோ விகாரமாக மாறியது.

'சட்டைப் பைக்குள் கைவிட வேண்டாம், மகாராஜா! என்னிட மும் துப்பாக்கி இருக்கிறது! கையை மரியாதையாகத் தூக்கினால் விலங்கைப் போடுகிறோம்! எங்கே லேட்டாகிவிடுவோமா, வேறே எங்கேஜ்மெண்டுகளுக்குப் போய்விடுவீரோ என்று பறந்துகொண்டு வந்திருக்கிறோம்!' என்றார் அவர்.

காரியதரிசியும் பிரஸிடெண்டும் ஒன்றும் புரியாதவர்களாக விழித்தார்கள். கோபாலனோ சாந்தமாகப் புன்னகை பூத்தார்.

'நிஜ மகாராஜா வாசலில் வந்திருக்கிறார். அவர் காரை வழிமறிக்க ஏற்பாடு செய்துவிட்டு, இந்தப் பேர்வழி முன்னால் வந்திருக் கிறான். வைரத்தைக் கொடுத்து விட்டீர்களா, இல்லையா? சாம்பு இருக்கும்போது அவ்வளவு தூரத்துக்கு விடமாட்டாரே!' என்றார் கோபாலன்.

கோவிந்ததாஸ் என்று அழைக்கப்பட்டவன் பல்லை நறநற வென்று கடித்தான். கோபாலன் அதைக் கவனிக்காதவர் போல், 'மகாராஜாவின் காரை பங்க்சர் செய்து, லேட்டாக்கி இருக்கிறீர். அவர் வருவதற்கு முன் இங்கே காரியத்தை முடித்துக்கொண்டு ஓடி விடலாமென்று பார்த்திருக்கிறீர்! பொல்லாத சாம்பு வந்து கெடுத்துவிட்டாராக்கும்! இன்ஸ்பெக்டர்! இவர்களை ஸ்டேஷ னுக்கு அழைத்துக்கொண்டு போங்கள்! இவர்கள் போன பிறகே மகாராஜாவை உள்ளே அழைத்து வரலாம்!' என்றார்.

மகாராஜா உள்ளே வந்தபோது சாம்பு திகைத்தான். முதலில் வந்த ஆள் அவ்வளவு தத்ரூபமாக அவரைப் போலவே வேஷம் போட்டுக்கொண்டு வந்திருந்தான்!

காரியதரிசி நடந்த விஷயங்களைக் கோபாலனிடம் விபரமாகச் சொன்னார். சாம்பு கையிலிருந்த வைரம் காணாமல்போன மர்மத்தையும், என்ன தேடியும் அது அகப்படாத ஆச்சரியத்தையும் கூறி, 'சார்! சாம்பு யமகாதகர்! தெரியாமல், நாங்கள்கூட அவரைச் சந்தேகித்து விட்டோம். எங்கள் பேங்கின் மானத்தையே இவர் காப்பாற்றி இருக்கிறார், ஸார்!' என்றார்.

'அதுமட்டுமா? உங்களுக்காக இவர் நேற்று அடிபட்டிருக்க வேண்டியவர், ஸார்! இந்தக் கோவிந்ததாஸ், நேற்று தன் ஆளை டாக்ஸியில் அனுப்பி, 'கையில் தடி கொண்டு போகாத ஆள்' என்று அடையாளம் சொல்லி இவரை அடிக்கச் சொல்லியிருக்கிறான். அந்தச் சமயம் இவர் சாமர்த்தியமாக இன்னொருத்தர் தடியைக் கையில் வாங்கிக் கொண்டிருக்கிறார். அடி அந்த ஆசாமிக்கு விழுந்திருக்கிறது. எல்லா விஷயமும் ஆள்களிடம் நான் கறந்து விட்டேன். ஏன் சாம்பு, உமக்கு ரங்கநாத ஐயர் பேரில் ஏதாவது கோபம் கீபம் உண்டா?' என்றார் கோபாலன் சிரித்துக்கொண்டே.

சாம்புவின் மனம் தீவிரமாக வேலை செய்தது. எல்லாம் கிடக்கட்டும்! வைரம் எங்கே போய்விட்டது! அதற்கு அவன் பதில் சொல்லியாகவேண்டுமே! எதற்கும் ஒருமுறை சீசாவை மோந்து பார்த்துக்கொள்ளலாமென்று, கையை நீட்டி சீசாவை எடுக்கப்போனான்.

அதன் மேலிருந்து பச்சை வைரக்கல் அப்போது மேஜைமீது விழுந்தது! இத்தனை நேரமும் பச்சை சீசாவின் மேலேயே அந்தப் பச்சைக்கல் எல்லார் கண்முன்னிலையிலுந்தான் இருந்திருக்கிறது. ஆனால், ஒவ்வொருவரும் அதை சீசா மூடி என்றே நினைத்திருக்கிறார்கள். ஒரே வர்ணம் அல்லவா இரண்டும்! கைப்பிசகாக அதைச் சாம்பு அங்கே வைத்துவிட்டு, உடனே மறந்தும் போயிருக்கிறான்!

சாம்பு, வைரத்தைக் கோபாலனிடம் நீட்டினான்.

அவ்வளவு பேரும் ஒரு பெருமூச்சு விட்டார்கள். என்ன சாமர்த்தியம் சாம்புவுக்கு! ஒரு க்ஷண காலத்தில் யோசனை செய்து, ஆபத்தை உணர்ந்து இந்த வேலை செய்திருக்கிறாரே! திருட்டுப் பயல் மிரட்டினபோது என்ன அற்புதமாக வேஷம் போட்டிருக்கிறார்! 'ஆஹா! ஆஹா!' என்று எல்லாரும் ஏக காலத்தில் சாம்புவைப் புகழ்ந்தார்கள்.

மகாராஜா வாயைத் திறந்து, 'அச்சா! அச்சா! கைகாரர் இவர்! என்ன வேண்டுமானாலும் கேளுங்கள், சாம்பு! நம்ம சமஸ்தானத்தில் கிடைக்குமானால் கொடுக்கச் சொல்கிறேன்!' என்றார் தாராளமாக.

ஒரு நிமிஷம் சாம்பு மூக்கை உருவிக்கொண்டு யோசித்தான். பிறகு பச்சை சீசாவை நீட்டி, 'இதன் மூடி உடைந்துவிட்டது. நல்ல கண்ணாடி மூடியாக ஒன்று சம்பாதித்துக் கொடுங்களேன்!' என்றான்.

சாம்பு வெளியில் வந்தபோது கோபாலன், 'போட்டீரே ஒரு போடு மகாராஜாவை!' என்றார்.

'அது போகட்டும்! மங்கேஷ் ராவிடம் சொல்லி, மாதுளம் பழக் கூடையை என் ஒய்ஃபுக்கே அனுப்பிடவிடச் சொல்லுங்கள்! மிஸ்ஸிங் எஸ். வேம்பு, மடத் தெரு, கும்பகோணம். - ஞாபகம் இருக்கட்டும், மடத் தெரு!' என்றான் சாம்பு.

42

மலையாள பகுவதி

வேம்புவிடமிருந்து ஒரு கடிதம் வந்தது சாம்புவுக்கு. அதை முப்பது தரம் படித்தும் சலித்துப் போகாத அவனுக்கு அந்தக் கடு தாசியையே கடித்துச் சுவைத்துத் தின்னலாமா என்று தோன்றியது.

'என் அன்பார்ந்த துரைக்கு, அடியாள் வேம்பு அநேக கோடி சாஷ்டாங்க நமஸ்காரம். உபயக்ஷேமம்.

அங்கே உங்கள் உடம்பு சௌகரியமாக இருக்கிறதா? நான் கூட இல்லாமல் எப்படியெல்லாம் நீங்கள் சிரமப்படுகிறீர்களோ என்று எனக்குச் சதா வேதனையாக இருக்கிறது; உங்கள் நினைவாகவே இருக்கிறேன்.

நீங்கள் வந்தால் தாராளமாக இருக்க ஆசைப் படுகிறீர்கள் என்று அம்மா புது ஜாகை பார்த்து விட்டாள். தனி வீடு மாதிரி, எல்லாமே மாடிமேல்! என்னை அழைக்க வரும்போது, பத்து நாள் தங்கிவிட்டுப் போக வேண்டுமென்று அம்மா சொல்லுகிறாள். எப்போதும் போல் அசட்டுப் பிடிவாதம் பிடிக்கப்படாது. இப்பவே சொல்லிவிட்டேன்.

உங்களோடு இருக்க வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது. சீக்கிரம் வந்துவிடுங்கள். இங்கே வந்தால் இன்னொரு ரகசியம் கூடச் சொல்லுவேன்.

உங்கள் பிரியமுள்ள,

வேம்பு.'

'ஒரு ரகசியம்தான் சொல்லியாகிவிட்டதே! இன்னொரு ரகசியம் என்ன இருக்கிறது?' என்று சாம்பு நெற்றிப்பொட்டைத் தேய்த்துக் கொண்டு யோசித்து விட்டு இரண்டு தினங்களுக்குப் பிறகு காலை வண்டியில் புறப்பட்டு விடுவதென்று தீர்மானமும் செய்து கொண்டான்.

அதே சமயத்தில் இன்ஸ்பெக்டர் கோபாலன் மனைவி லக்ஷ்மிக்கும் வேம்புவிடமிருந்து ஒரு கடிதம் வந்திருந்தது.

'லக்ஷ்மி அம்மாமி, நீங்களும் உங்கள் ஆத்துக்காரரும் இங்கே வந்து ஒரு வாரமாவது தங்கிவிட்டுப் போக வேண்டும். நீங்கள் ராமேசுவரம் போய்விட்டு வந்ததாகக் கேள்விப்பட்டேன். காரணம் எனக்குத் தெரியும். ஆசை இருப்பதும் நியாயந்தானே? இங்கே சந்திரசேகர சாஸ்திரி என்கிற ஒரு பெரிய மனுஷர் வீட்டுக்கு மலையாளத்திலிருந்து ஒருவர் வந்திருக்கிறார். அம்பிகை உபாஸகராம். இந்த ஊரில் குழந்தை இல்லாத அவ்வளவு பேரும் அவரிடம் பிரசாதம் வாங்கிக் கொள்ளுகிறார்கள். நீங்கள் வந்த சமயத்தில் அதையும் பார்த்துக் கொள்ளலாம்!' என்று எழுதி, பூஜா காலத்தில் எடுத்த போட்டோ ஒன்றையும் அனுப்பியிருந்தாள்.

'ஆமா... மா... ம்! புரட்டினான்! எவனாவது போக்கிரிப் பயலாயிருப்பான்!' என்றார் கோபாலன்.

'உங்களுக்கு எல்லாமே அலட்சியம்! ஊரில் இருக்கிறவன் அத்தனை பேரும் திருடன்! போலீஸ்காரரோல்லியோ!' என்றாள் லக்ஷ்மி.

'இந்தா, உனக்குப் பிள்ளை பிறக்காது!' என்றார் கோபாலன்.

'அடேயப்பா! நீங்கள் பெரிய ரிஷி, வாக்குப் பலிச்சுடுமாக்கும்!'

'இல்லாவிட்டால், நீதான் பாரேன்! வைத்தியம் பார்த்தாச்சு, ஸர்ப்பசாந்தி பண்ணியாச்சு, ராமேசுவரமும் போய்விட்டு வந்தாச்சு! என் டிபார்ட்மெண்டுக்கே அது ஒரு சாபம்டி! இல்லாவிட்டால், ஸர்க்கிள் வெங்கட்ராமன், கோபாலகிருஷ்ணன், அப்புறம் ஸப் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணமாச்சாரி, கிருஷ்ண மூர்த்தி - ஒருத்தருக்குக் குழந்தை இருக்கா? சம்சாரியா இருக்கிற என் சிநேகிதர்களெல்லாம் கொஞ்ச நாளைக்காவது என் டிபார்ட்மெண்டுக்கு வந்து இருந்துட்டுப் போறேன் என்கிறார்கள்! என்னமோ பேத்தறியே!'

'இதையும் பார்த்துடுவோமே!' என்றாள் லக்ஷ்மி பிடிவாதமாக.

கோபாலனுக்கு வேம்பு அனுப்பி இருந்த போட்டோ அதிக ஆச்சரியத்தை உண்டாக்கியது. மேல் பார்வையாகப் பார்த்து, 'அடேயப்பா! பூஜை படா தடபுடலான்னா நடக்கிறது! கொள்ளையும் ஜாஸ்தியாயிருக்கும் போலேன்னா ஏற்படறது!' என்றார். சட்டென்று ஏதோ நினைவு வந்தவராகப் படத்தை வாங்கித் தம் கண்ணுக்கு அருகில் பிடித்தார்.

'லக்ஷ்மி! நான் ஸ்டேஷனுக்குப் போய்விட்டு வருகிறேன். ராத்திரி வர நேரமாகும்!' என்றார்.

'வந்துவிட்டதா பாழும் வேலை!' என்றாள் லக்ஷ்மி அலுத்துக் கொண்டு.

அதற்குப் பதிலாக 'டப டப டப' என்று கோபாலனின் மோட்டார் சைக்கிள் சத்தந்தான் கேட்டது.

•

சாம்பு ரயிலில் போகும்போது வழக்கமாக ஒரு துப்பறியும் நாவலைக் கொண்டுசெல்வான். இறங்குவதற்குள் அதைப் படித்து முடித்து, முக்கால்வாசி மறந்தும் போய்விடுவது வழக்கம். அந்த வழக்கப்படி கும்பகோணம் போகும்போது கொண்டுபோன புத்தகம், மாயவரம் ஸ்டேஷனை வண்டி தாண்டும்போதே தீர்ந்துவிட்டது. அப்புறந்தான் தலைநிமிர்ந்து இதர பிரயாணிகளை அவன் கவனித்தான்.

மாயவரத்தில் ஒரு கொழுத்த கனபாடிகளும் அவர் பின்னால் ஒரு இளைஞனும் ஏறினார்கள். ஒரு பிரயாணி கனபாடிகளைப் பார்த்ததும், 'என்ன ஹரிஹி? கும்பகோணம் சமாசாரம் என்ன ஆச்சு? ஏதானும் தெரியுமோ?' என்று விசாரித்தார்.

'கும்பகோணமா? அந்தப் பகவதி அடிச்சுட்டுப் போன கூத்தைத்தானே கேழ்க்கிறேள்? என்ன ஆறது! எல்லாப் பொண்டு

களும் வாயிலே விரலை வைச்சுக்கொண்டு நிற்கிறதுகள்! புருஷன்கள் வயிறெரிகிறான்கள், புள்ளை பொறக்கப் போறதோ இல்லையோ, இப்போதைக்குக் கண்டது நகையெல்லாம் போனதைத் தான்!' என்றார்.

'என்ன? என்ன சமாசாரம்?' என்று விசாரித்தார் விஷயம் தெரியாத ஒரு விழுப்புரம் பேர்வழி.

'என்ன! முட்டாள்தனந்தான்! கும்பகோணத்திலே ஒரு மலையாளத்து ஆசாமி வந்து பூஜை பண்ணியிருக்கான், இருபது நாளா.'

மற்றொருவர் குறுக்கிட்டு, 'பூஜையாவது பூஜை! என்ன பரிஷ்காரம் என்கிறேள்! நாலு பக்கத்திலே நாலு சாஸ்திரிகள் உட்கார்ந்து தேவி ஸஹஸ்ர நாமம், இந்திராக்ஷி சிவகவசம், துர்க்காஸூக்தம், சியாமளா தண்டகம் இப்படி மகா வாக்கியங்களாப் பாராயணம் பண்ணுவா. பகவதி நடுவிலே உட்கார்ந்து கொண்டு அற்புதமாக அர்ச்சனை நடத்துவார். என்ன கூட்டம்! ஹ! பார்க்கிறதற்கு என்னமோ ஒரு பயமாகத்தான் இருந்தது!' என்றார்.

'விஷயத்தைச் சொல்லுங்கள்!' என்றார் விழுப்புரம் பேர்வழி. சாம்புவும் கொக்குபோல் கழுத்தை நீட்டி, மூக்கை உருவிவிட்டுக் கொண்டு பேச்சைக் கவனித்தான்.

'என்ன விஷயம்! ஜனங்களுக்கு நம்பிக்கை விழுந்துடுத்து. அதை அவனும் நன்னாத் தெரிஞ்சுண்டுட்டான். ஒரு நாளைக்குப் புத்திர ஸந்தானம் இல்லாத பேருக்கு மந்திரித்துக் கொடுக்கிறதாகச் சொன்னான். பூஜையில் ஆளுக்கு ஒரு நகையை அம்பிகை பீடத்தில் வைத்துவிட்டு, மறுநாள் எடுத்துக் கொள்ளணும் என்றான். பொத்து பொத்தென்று கல்லட்டிகையும், வைரப் பதக்கமும், செயின் சங்கிலியுமாக வந்து விழுந்தன. மறுநாள் காலம்பற உபாஸகர் அந்தர்தியானமாகி விட்டார்!'

ரயிலில் அவ்வளவு பேரும் ஒரு பெருமூச்சு விட்டார்கள். 'போலீஸிலே தெரிவித்தார்களா?' என்று கேட்டார் ஓர் அநுதாபி.

'ஆ! போலீஸ் என்னய்யா பண்ணும்? புலன் விசாரிப்பாங்க, அவ்வளவுதான்! சட்டுனு சொல்ல, போலீஸிலே அம்பிகை உபாஸனை பண்றாங்களா என்ன!' என்றார் ஒரு ஹாஸ்யப் பேர்வழி.

'கடைசியிலே என்ன ஆச்சு?' என்று கேட்டார் விழுப்புரம்.

'நான் இறங்கவேண்டிய ஸ்டேஷன் வந்துவிட்டது!' என்று கனபாடிகள் அவசரமாக நரசிங்கம்பேட்டையில் இறங்கிக் கொண்டார்.

சாம்பு வீட்டுக்குப் போனபோது, வேம்பு எழுதின பிரகாரம் பெரிய வீடு என்பதை உடனே கண்டு கொண்டான். அதற்குத் தனிப் படி, தனிக் குழாய், தனி எலெக்ட்ரிக் மீட்டர் எல்லாம். கீழே குடியிருப்பவர் முகத்தில்கூட விழிக்க வேண்டியதில்லை.

'வீடு நன்றாயிருக்கா?' என்றாள் வேம்பு. 'பேஷாயிருக்கிறது! நம்ம ரூம் எங்கே?' என்று கேட்டான் சாம்பு.

'இதோ, அப்பா! வந்து பார் அப்பா!' என்று சுந்து முன்னால் ஓடினான் உத்ஸாகமாக.

'ஏன் வேம்பு, உன் மூஞ்சி சுரத்தாக இல்லையே! ஏதாவது கோபமா என்மேல்?' என்று விசாரித்தான் சாம்பு.

'ஒன்றுமில்லை. நீங்கள் சாப்பிடுங்கள், முதலில். எல்லாம் போறாத வேளை!' என்று வேம்பு வெறுத்துக் கொண்டாள்.

'சாப்பாடு கிடக்கட்டும்; விஷயத்தை முன்னால் சொல்லு!'

'ஒன்றுமில்லை என்கிறேனே! இங்கே மலையாளத்திலிருந்து ஒரு மாந்திரீகர் வந்து பூஜை செய்தார். நானும் போயிருந்தேன்.'

'உனக்கு அங்கே என்ன வேலை? கையிலே ஒரு பிள்ளையாச்சு; வயிற்றில் ஒரு பிள்ளையாச்சு! ஹூம்?'

'குடுகுடுப்பை! சொல்றதை முழுக்கத்தான் கேட்டுட்டா என்னவாம்? எனக்காக நான் போகலை; நம்ம இன்ஸ்பெக்டர் மாமிக்குக் குழந்தை இல்லையே என்று என் சங்கிலியை மந்திரிச்சுக் கொடுக்கலாம்னு கொண்டுபோய், முந்தாநாள் சந்நிதியிலே வைச்சேன்.'

'படீர் படீர்' என்று தலையில் போட்டுக்கொண்டு, 'போச்சா? தொலைஞ்சுதா? போயிடுத்தா?' என்று அலறினான் சாம்பு.

'இப்போது என்ன வந்துடுத்தாம்? போனால் போய்விட்டுப் போகிறதே! பிரமாதம், அஞ்சு பவுன்! எங்கம்மாவைக் கேட்டு...'

'உங்கம்மா பணக்காரி, இருக்கட்டும்டி! சாம்பு பொண்டாட்டியும் ஏமாந்தாள்னு என் மானம் போயிடுமேடி! ஏன், போயிடுத்தேடி!' என்று மூஞ்சியில் இடிக்கிறாற் போல் கையை நீட்டினான்.

'ஒண்ணும் போகலை! பேசாமே தானே இருங்கோ! எப்பவும் அவசரந்தான் உங்களுக்கு!'

சாம்பு தலையில் கையை வைத்துக்கொண்டு கட்டிலில் போய் உட்கார்ந்து கொண்டான். வேம்பு வெகு நேரம் பல வகைகளில் சமாதானம் செய்து பார்த்து, கடைசியில் தானும் கோபித்துக் கொண்ட பிறகுதான், சாம்பு ஒருவாறு சாந்தம் அடைந்தான்.

மறுநாள் பூராவும் மாடியறையை விட்டு நகரவில்லை சாம்பு. வேம்புதான் போய்விட்டு வந்து விஷயத்தைச் சொன்னாள். பூஜை ஏற்பாடு செய்த சந்திரசேகர் சாஸ்திரி பக்திமான் என்றும், இப்படித் தமது வீட்டில் ஒரு காரியம் நடந்ததற்குக் குன்றிப் போயிருக்கிறார் என்றும் சொன்னாள். எப்படியாவது பகவதியைக் கண்டுபிடித்து நகைகளைத் திருப்பிக் கொடுக்கப் போவதாகவும், அதற்காகத் தமது காரை இரவும் பகலும் ஓட்டிக்கொண்டிருப்பதாகவும் சொன்னாள்.

நகை போனதைப்பற்றிச் சாம்பு கவலைப்படவில்லை. அதன் கிரயம் அவனுக்குக் கொசு மாத்திரம். ஆனால், பெயர் கெட்டுவிடக் கூடாதே! 'இருட்டின பிறகு, அந்த சாஸ்திரியாரை யாரும் அறியாமல் கண்டு, நம் பெயர் வராமல் பார்த்துக்கொள்ளச் சொல்ல வேண்டும்!' என்று சாம்பு யோசித்தான். ஆகவே, ஒன்பது மணிக்குச் சாம்பு ஓர் அங்கவஸ்திரத்தால் தலையையும் சேர்த்துப் போர்த்திக்கொண்டு கிளம்பினான்.

சந்திரசேகர சாஸ்திரியாரின் வீடு ஐந்தாறு தெருக்களுக்கு அப்பால் இருந்தது. ஒரு பர்லாங் போவதற்குள்ளாகவே சாம்புவின் பின்னால் ஓர் ஆசாமி தென்பட்டு, பின் தொடர்வதை அவன் உணர்ந்து கொண்டான். உடனே கிலி பிடித்துக் கொண்டது. போன காரியத்தைக் கைவிட்டு, நாலைந்து சந்துக்குள் சட்சட்டென்று புகுந்து ஓட்டமாக ஓடி, எப்படியோ வீடு வந்து சேர்ந்து விட்டான்.

விடியற்காலையில் ஒரு கெட்ட சொப்பனம் கண்டு, திடுக்கிட்டு விழித்தான் சாம்பு. பக்கத்தில் இருக்கும் ஓர் ஆசாமியின் மீது இவன் கால் படவே, அவன் உயிரை விட்டு விடுகிறான்.

கொலைக் குற்றத்துக்காகப் போலீஸ்காரர்கள் துரத்துகிறார்கள். சாம்பு ஓடுகிறான், விடாமல் பின் தொடர்கிறார்கள் போலீஸார். சாம்பு தப்பித்துக் கொண்டு மரம் அறுக்கும் தொட்டிக்குள் ஒளிந்து கொள்கிறான்.

'என்ன, கர் புர்னு மரம் அறுக்கிறாப்போலே குறட்டை பலமா யிருக்கே!' என்றாள் வேம்பு, தன் முகத்தை அவன் முகத்தோடு அன்பாக ஒட்டிவைத்து.

திடுக்கிட்டு விழித்த சாம்பு, 'யாரது குறட்டை விட்டது?' என்றான்.

'எல்லாம் தூங்கற பேர்தான் குறட்டை விடுவா! மணி எட்டாச்சே, எழுந்திருக்க வேண்டாமா?'

சாம்பு கண்ணைக் கசக்கிக் கொண்டான். 'சமாசாரம் ஒண்ணு காதிலே பட்டது. நேத்து ராத்திரி ஒரு போலீஸ்காரன் ஒரு புது ஆசாமியைக் கண்டுபிடித்தானாம். முட்டாக்குப் போட்டுண்டு பித்துக்குளி மாதிரி நடந்துண்டு அவன் போனானாம். போலீஸ் காரன் கிட்ட வர்றதுக்குள்ளே எப்படியோ சந்துபொந்திலே புகுந்து அவன் தப்பிச்சுக் கொண்டுட்டானாம். இவனுக்கும் பகவதிக்கும் சம்பந்தம் இருக்கலாம். இவனைப் பிடிச்சால் எல்லாம் வெளியாகிவிடும்னு ஊரெல்லாம் பேச்சாயிருக்கு!' என்றாள் வேம்பு.

தூக்கிவாரிப்போட்டது சாம்புவுக்கு. ஒரு க்ஷண நேரம் ஒன்றுமே ஓடவில்லை. போலீஸ்காரன் தன்னைப் பார்த்துவிட்டல்லவா இப்படிச் சேதி கிளப்பிவிட்டிருக்கிறான்.

'வேம்பு! எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை. இன்றைக்கு ராத்திரி வண்டியில் நான் திரும்பிவிடப் போகிறேன். நீ அடுத்த வாரம் வா! நான் இங்கே வந்த வேளை நன்னாயில்லை!' என்றான்.

'அழகாத்தான் இருக்கு!' என்றாள் வேம்பு. ஆனால் அவள் என்ன சொல்லியும் சாம்புவை மாற்ற முடியவில்லை. ஒன்பதாவது மணிக்கு வரும்படி டாக்ஸி ஒன்றை ஏற்பாடு செய்துவிட்டான் அவன்.

காதும் காதும் வைத்தாற்போல் திரும்ப வேண்டுமென்று சாம்பு மாடிப்படியில் உட்கார்ந்து டாக்ஸிக்குக் காத்திருந்தான்.

எட்டே முக்கால் மணிக்கு, சாம்பு எதிர்பார்க்கும் முன்பே ஜம்மென்று ஒரு டாக்ஸி வந்து வாசலில் நின்றது. மடமடவென்று இறங்கி வருவதற்குள் இன்னொரு மோட்டாரும் வந்து நிற்பதைக் கண்டான் சாம்பு. 'ஒஹோ! கீழ்க்கட்டிலிருப்பவரும் போகிறாற்போலிருக்கிறது! என்று திரும்பியபோது அவன் பின்னாலே இரண்டு உருவங்கள் நின்றன. அந்த உருவங்களில் ஒன்று முதல் டாக்ஸியில் ஏறிக்கொள்ள, சாம்பு முகத்தை மறைத்துக்கொண்டே பின் வண்டியில் அவசரமாக ஏறினான்.

சிறிது தூரம் சென்ற பின்னரே தன்னோடுகூட ஓர் ஆசாமி உட்கார்ந்திருப்பதைச் சாம்பு உணர்ந்தான். அவன் யார் என்று பேச்சுக் கொடுக்க யத்தனிக்கவே, சாம்பு சற்றும் எதிர்பாராத காரியம் ஒன்று நடந்தது. அந்த ஆசாமி சாம்புவின் தலையை அழுத்தி, மூக்கின்மீது ஒரு கைக்குட்டையைப் பிடித்தான். அடுத்த நிமிஷம் அப்படியே சீட்டில் சாய்ந்துவிட்டான் சாம்பு.

மறுபடி கண் விழித்தபோது, ஓர் அறையில் கட்டிலின்மீது படுத்திருந்தான். 'நாம் எங்கே இருக்கிறோம்? எப்படி வந்தோம்? ரயிலில் போய்க்கொண்டிருக்க வேண்டியவன் இங்கே வந்தது ஏன்?, என்று நினைத்து நினைத்துப் பார்த்தும் அவனுக்கு விளங்கவில்லை.

பத்து நிமிஷங்களுக்குப் பிறகு புத்தி நிதானப்பட்டது. அறையில் எரிந்த சின்ன விளக்கில், மேஜை மீதிருந்த புத்தகங்களைப் புரட்டிப் பார்த்தான். ரயிலில் வரும்போது, அவன் வாசித்துக் கொண்டு வந்த புத்தகத்தின் பிரதிகூட அங்கே இருந்தது. ஆனால், ஒன்றிலாவது அந்த வீட்டுக்காரரின் பெயர் காணப்படவில்லை.

கதவை இழுத்தான். ஆனால், வெளிப்புறம் பூட்டப்பட்டிருந்ததென்று கண்டு, திரும்பக் கட்டிலில் உட்கார்ந்து கொண்டான் சாம்பு.

அதே இரவு ஒன்பதேகால் மணிக்கு, கும்பகோணத்துக்கு வரும் பாசஞ்சரில் லக்ஷ்மியுடன் வந்திறங்கினார் கோபாலன். லக்ஷ்மியின் பிடிவாதத்துக்காக அவர் வந்தது போல் தோன்றினாலும் அவர் வந்த காரணம் வேறு ஒன்றும் இருந்தது. சாம்புவின் வீட்டை அடைந்தபோது ஒன்பரை மணி. சாம்பு புறப்பட்டு விட்டான் என்பதைக் கேட்டபோது, அவர் சிறிது ஏமாற்றமே அடைந்தார். லக்ஷ்மியை வீட்டில் விட்டு, அதே வண்டியில் அவர் போலீஸ் ஸ்டேஷனுக்கு அவசரமாகச் சென்றார்.

சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஏற்கெனவேயே கோபாலனுக்குப் பரிச்சயமானவர். அவர் முன்னிலையில் டிரைவரும் சால்வை போர்த்த ஓர் ஆசாமியும் இப்போது நின்றார்கள். சர்க்கிள் மாறி மாறி இருவரையும் பார்த்துவிட்டு, 'இன்று காலையிலே ரயிலுக்குப் போக வேண்டும். டாக்ஸி கொண்டு வா என்று சொன்ன ஆசாமி இவரா?' என்று கேட்டார் டிரைவரை.

'இவர் இல்லிங்க!'

'பின் ஏன் இவரைக் கூட்டிவந்தே?'

'இன்னொரு வண்டியும் அந்த வீட்டிலேயே நின்னதுங்க. அவசரத்திலே நம்ம ஆளு அதிலே ஏறிக்கொண்டார் போல் இருக்குதுங்க!'

'போடா, முட்டாள்! முட்டாள்!' என்றார் சர்க்கிள்.

கோபாலன் ஒரு நிமிஷம் இதைக் கவனித்துவிட்டு, 'ஏது போர்வையில் இருக்கிறவர் நம்ம பகவதி போலிருக்கே!' என்றார்.

அந்த ஆசாமியின் உடம்பு வெடவெடவென்று நடுங்கியது. 'நான் நடந்ததைச் சொல்லி விடுகிறேன்! என்னை மன்னிக்கணும். என் அதிர்ஷ்டந்தான் நான் இங்கே வந்து சேர்ந்தேன், ஒரு தவறுதலினாலே! அம்பிகை நல்ல வழி காட்டி விட்டாள்!' என்று சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தார் அவர்.

பதினைந்து நிமிஷம் மளமளவென்று பேசினார் பகவதி. கடைசியில், கோபாலன் சர்க்கிளின் கையைப் பிடித்துக்கொண்டு, 'இது எங்கள் சாம்பு வேலை! இப்போது உங்களுக்குப் புரியாது. கிளம்புங்கள், ஐந்து கான்ஸ்டபிள்களுடன்! மேலே கவனிக்கலாம்!' என்றார்.

•

கோபாலனும் சர்க்கிளும் சாஸ்திரி வீட்டு அறையைத் திறந்த போது சாம்பு புத்தகத்தைப் புரட்டிக்கொண்டிருந்தான். 'என்னங் காணும் செய்து கொண்டிருக்கிறீர் இங்கே?' என்றார் கோபாலன்.

'நான் சும்மா ஒரு நாவல் படிக்கிறேன். நீங்கள் எங்கே வந்தீர்கள் இங்கே?' என்றான் சாம்பு. தான் அசட்டுத்தனமாக மாட்டிக்

கொண்டிருப்பதை வெளிப்படுத்திக்கொள்ள அவனுக்கு இஷ்ட மில்லை.

'நல்ல தைரியஸ்தர், ஓய்! சாவுக்குத் துணிந்து தலையிடுகிறீர் காரியங்களில்!' என்றார் கோபாலன்.

கூடத்துக்கு வந்தபோதுதான் சாம்பு ஒரு பெரிய உண்மையை உணர்ந்தான். பெரிய மனிதர், பக்திமான், ஞாதாள் என்றெல்லாம் பெயர் பெற்றிருந்த சந்திரசேகர சாஸ்திரி, கையில் விலங்கு போட்டுக்கொண்டிருந்தார். 'இந்த ஆசாமியை உங்கள் வேம்பு அனுப்பின பூஜைப் போட்டோவில் பார்த்துச் சந்தேகப்பட்டுத் தான் நான் கும்பகோணத்துக்கே புறப்பட்டது. ஏன் மிஸ்டர் சாஸ்திரி, நீர் தீக்ஷித் என்ற பேர் வைத்துக்கொண்டு நாக்பூரில் இன்ஷுரன்ஸ் கம்பெனி ஆரம்பித்துவிட்டு, இருபத்தை யாயிரத்தைச் சுருட்டிக்கொண்டு வந்த பேர்வழி இல்லை?' என்று கேட்டார் இன்ஸ்பெக்டர்.

கான்ஸ்டபிள்கள் பேச்சைக் கவனித்ததிலிருந்து கதையை மேலும் புரிந்துகொண்டான் சாம்பு. பகவதி வெறும் அப்பாவி தான் என்றும், அவரை உபயோகித்து ஊரார் நகைகள் சேர்ந்த தினத்தில் அவருக்குப் பாலில் மயக்க மருந்தைக் கொடுத்து, வேறு வீட்டில் மறைத்து வைத்தார் சாஸ்திரி என்றும் தெரிந்து கொண்டான். 'தலையை வெளியே காட்டினால் - போலீஸார் கொண்டுபோய் விடுவார்கள் என்று பயமுறுத்தி, பகவதியை அமுக்கியே வைத்திருக்கிறான். சரியான சந்தர்ப்பத்தில் ஓடுவதற்கு ஏற்பாடுகளும் செய்துகொண்டு வந்திருக்கிறான். இதில் எதிர்பாராத விதமாக நேர்ந்து போனது இரண்டு! ஒன்று, சாம்புவின் வீட்டுக்குக் கீழேயே பகவதி அடைபட்டிருந்தது. இரண்டாவது, ஏக காலத்தில் இருவருக்கும் மோட்டார் வந்தது. அவசரத்திலும் இருட்டிலும் பகவதிக்குப் பதிலாகச் சாம்பு, சாஸ்திரியின் வீட்டில் கொண்டுபோய் அடைக்கப்பட்டான். சந்தேகாஸ்பதமான ஆசாமிகளை ஸ்டேஷனுக்குக் கொண்டு வரும்படி டாக்ஸிகளுக்குப் போலீஸ் உத்தரவு இருந்ததால், பகவதியை ஏற்றிப்போன டாக்ஸி ஸ்டேஷனுக்குப் போய் நின்றது! அங்கே பகவதி பூராவையும் சொல்லிக் கதறியிருக்கிறார்.

'அக்ரமம்! அக்ரமம்! நல்லவர்களுக்கு இது காலம் இல்லை! எவனோ ஒரு போக்கிரி - ஒரு மலையாள பகவதி - சொன்னான் என்று நீங்கள் என்னை இப்படி அவமரியாதை செய்வதா? நான்

நகைகளைத் திருடியிருந்தேனானால் அவைகளை முதலில் சாமர்த்தியத்தினால் கண்டுபிடியுங்களேன், பார்க்கலாம்! நான் லேசில் விடமாட்டேன்! டாமேஜ் ஸூட் போட்டு உங்களை...' என்று கர்ஜித்தார் சாஸ்திரி.

சர்க்கிள் யோசனையுடன் தலையைத் தடவிக் கொண்டார். கோபாலனோ தைரியமாகச் சாம்புவைப் பார்த்தார். சாம்பு தன் மூக்கு நுனியை அசையாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

'என்ன யோசிக்கிறீர்?' என்று கேட்டார் கோபாலன்.

'ஒன்றுமில்லை. இப்போ ஒரு புத்தகம் வாசித்தேன். பர்ஸ்ட் கிளாஸ் மிஸ்டரி ஸ்டோரி அது!'

'உம், அதிருக்கட்டும்! 'இதைக் கேளுங்கள்! இதே மாதிரி ஒரு திருடன் நகைகளையெல்லாம் தன் காரிலேயே மெத்தைக்கு அடியிலே தைத்து வைக்கிறான். ஏன் தெரியுமா? ஆபத்து என்றால் சட்டுனு காரிலேயே ஓடிவிடலாம் பாருங்கள். சாமானைத் தேடிண்டு நிற்க வேண்டாம், இல்லையா?'

சர்க்கிள் இதெல்லாம் வெட்டிப் பேச்சு என்று சூள் கொட்டினார். ஆனால், மறுநிமிஷம் தம் பிசகை உணர்ந்து மன்னிப்பும் கேட்டுக் கொண்டார். ஏனெனில், சாஸ்திரி பல்லைக் கடித்து, 'அடப்பாவி! நான் படிச்ச அதே புத்தகத்தை நீயும் படிச்சிருக்கியா? ஹூம் விதி, தலைவிதி!' என்றார்.

இரண்டு கான்ஸ்டபிள்கள் சாஸ்திரியின் காரின் மெத்தையைக் கிழித்துப் பார்க்க விரைந்தார்கள்.

•

சந்திரசேகர சாஸ்திரி ஜெயிலுக்குப் போய், நகைகளும் சுவாந்தார்களைப் போயடைந்து, பகவதியும் தொல்லை நீங்கி வரும்வரை சாம்புவும் கோபாலனும் கும்பகோணத்திலேயே இருந்தார்கள். வேம்புவின் ஆக்ஞைப்படி, சாம்புவின் வீட்டில் பகவதி பூஜை ஒரு நாள் அமர்க்களமாக நடந்தது. லக்ஷ்மியின் விருப்பத்தை ஒட்டி, இன்ஸ்பெக்டர் கோபாலன் இடுப்பில் அங்கவஸ்திரத்தைச் சுற்றிக் கொண்டும், கட்டுக் கட்டாக விபூதியைப் பூசிக் கொண்டும் சந்நிதியில் உட்கார்ந்திருந்தது ஒரு காட்சிதான்.

பழைய பஞ்சாமி வந்து உட்கார்ந்திருந்தார். அவருக்கு ஏனோ பகவதியிடம் நம்பிக்கை விழவே இல்லை. ஆகவே, மெல்லச் சாம்புவிடம் வந்து, 'கேளுங்கோ! ஒரு சித்தர், பூசை பூசை பூசையென்று நித்தம் செய்யும் பேதைகாள்!' என்று அழைத்து, 'கோயிலாவதேதடா குளங்களாவதேதடா! கோயிலும் மனத்துளே, குளங்களும் மனத்துளே!' என்கிறார்!' என்று ஆரம்பித்தார்.

'கெட் அவுட்!' என்றான் கோபாலன் கடுமையாக.

'சரி!' என்று அப்போது வாயை மூடிய பஞ்சாமி, கடைசியில் சர்க்கரைப் பொங்கல் பிரசாதம் வரும்வரை வாயைத் திறக்கவில்லை.

•

இதற்குப் பத்து மாதத்துக்குப் பிறகு, கோபாலனுக்கு ஒரு ஸ்திரீ பிரஜை ஜனனமாயிற்று என்பதை இங்கேயே சொல்லி விடுகிறேன். ராமேசுவரம் போனதால் என்று குடும்பத்தினர் களும், ஸர்ப்ப சாந்தி செய்ததால் என்று ஜோஸ்யர்களும், தான் ஓர் ஆபரேஷன் செய்ததால்தான் என்று டாக்டர் மீனாக்ஷியும் அபிப்பிராயப்பட்டனர். அது எப்படியிருந்தாலும், கோபாலன் சாம்பு தம்பதிகள், சிரஞ்சீவி சுந்துவுக்குப் பெண்டாட்டி பிறந்து விட்டதாகவே சொல்லி ஆனந்தப்பட்டார்கள்.

43

கமிஷ்னரின் ஊதல்

ஒருநாள் அதிகாலையில் சாம்பு எழுந்திருக்கு முன்பே கோபாலன் வந்துவிட்டார். அரைக் கண்ணால் இதைக் கவனித்துக்கொண்ட சாம்பு, மேலும் தூங்குகிறாற்போல் பாசாங்கு செய்து பார்த்தான். மணி எட்டு ஆகியும் கோபாலன் நகருகிற வழியாக இல்லாமல் போகவே கண்ணை விழித்து, 'ஏன், என்ன கேஸ் வந்துவிட்டது இப்போ? நீங்கள் இரண்டு மணிக்குமேல் காத்துக்கொண்டிருக் கிறதைப் பார்த்தால், ஆளைப் பிடித்துக் கொண்டுதான் போவீர்கள்போல் இருக் கிறதே!' என்று ஆத்திரமாக எழுந்து உட் கார்ந்து கொண்டான் சாம்பு.

சிறிது காலமாக அபாரமான வேலைகள் செய்து போலீஸுக்கு உதவி புரிந்ததற்காகச் சாம்புவை கமிஷ்னர் பார்க்க விரும்புவ தாகவும் அன்று காலை பத்து மணிக்குள் அவனை எதிர்பார்ப்பதாகவும் கோபாலன் சொன்னார்.

'என்னத்துக்கு ஸார், அதெல்லாம்! முன்னே ஒரு தரம்தான் பார்த்திருக்கிறேனே! எனக்கு

உடம்பு சரியாக இல்லை என்று சொல்லி விடுங்கள், ஸார்!' என்று சாம்பு கெஞ்ச ஆரம்பித்தான். பெரும்பாடுபட்டு அவனைச் சம்மதிக்க வைத்த கோபாலன், 'ஓய் சாம்பு! துரையைப் பார்த்தால், முதலில் குட் மார்னிங் என்று மரியாதை செய்துவிட வேண்டும்! தெரியுமோ இல்லையோ?' என்றும் ஞாபகப்படுத்தினார்.

'ஆ! எனக்குத் தெரியாதா அதுகூட!' என்று புறப்பட்டான் சாம்பு.

கமிஷ்னர் துரை, சாம்புவிடம் மிகவும் சுமுகமாக இருந்தார். 'மிஸ்டர் சாம்பல்!' என்று அன்பாக ஆரம்பித்தார் அவர்.

'இல்லை! சாம்பு என்று பேர்' என்று திருத்தினான் சாம்பு.

'ஐ ஆம் ஸாரி, மிஸ்டர் சாம்பு! உங்களால் இந்த டிபார்ட்மெண்ட் அடைந்திருக்கிற நன்மை பிரமாதமானது. உங்கள் புத்திக் கூர்மையில் பத்தில் ஒரு பங்கு இங்கிலாந்தில் ஸ்காட்லண்ட் யார்ட் துப்பறிபவர்களுக்கு இருக்குமா என்று எனக்கு ஒரு சந்தேகந்தான். ஏன், உங்கள் பெயரே துஷ்டர்களுக்கு ஒரு சிம்ம சொப்பனமாகி விட்டது. இருந்தாலும், மிஸ்டர் சாம்பல்!'

'இல்லை, சாம்பு!'

'ஓ. எஸ். ஐ ஆம் ஸாரி! மிஸ்டர் சாம்பு! உங்களைப் பற்றி ஒரு கம்ப்ளெயிண்ட் இருக்கிறது! இந்தக் கேஸ்களில் எல்லாம் நீராகவே வேலை செய்கிறீர். போலீஸ் உதவி தயாராக இருந்தும் அதை நீர் பயன்படுத்திக் கொள்வதில்லை. இதனால் அநாவசிய மான ஆபத்துகளுக்கு உட்படுத்திக் கொள்கிறீர், மிஸ்டர் சாம்பல்!'

'உம். சாம்புதான் என் பெயர்!'

'தட் இஸ் ரைட், சாம்பல்! நான் சொல்வதை நீர் அலட்சியமாகக் கருதலாம். ஆனாலும், உம்மைப்போல் ஒரு பிரமாத மூளை உள்ளவரை, அதிஜாக்கிரதையாகக் காப்பாற்றி வரவேண்டியது எங்கள் பொறுப்பு. அதை உத்தேசித்து, நான் உமக்கு இந்த ஊதல் ஒன்றைக் கொடுக்கிறேன். ஆபத்து என்று தோன்றும் சமயத்தில், நீர் இதை மூன்று தடவை பலக்க ஊதிவிட வேண்டியது. இதன் சத்தம் கேட்டால், வேறு எந்தத் தலை போகிற காரியமாக இருந்தாலும் அப்படியே போட்டு விட்டுப் போலீஸ் - சி.ஐ.டி. காரர்கள் உம்முடைய உதவிக்கு வந்துவிடுவார்கள். அம்மாதிரி

நான் உத்தரவு கொடுத்து விடுகிறேன்!' என்றார். அப்படிச் சொல்லிவிட்டு, ஒரு சின்ன ஊதலையும் சாம்புவிடம் கொடுத்தார்.

துரைக்கு வந்தனம் செய்யவில்லையே என்று இப்போதுதான் சாம்புவுக்குச் சட்டென்று ஞாபகம் வந்தது. கோபாலன் சொல்லிக்காடுத்துங்கூட மறந்துவிட்டோமே என்ற வெட்கத்துடன், தக்ஷணமே துரைக்கு ஒரு சலாம் வைத்து, 'குட்மார்னிங், ஸார்!' என்று சொல்லிவிட்டு, சாம்பு புறப்பட்டான்.

தனது பலம் ஞாபகப்படுத்தப்பட்ட ஆஞ்சநேய மூர்த்தியைப் போல திரும்பிய சாம்புவுக்காக, வீட்டில் அப்போது இருபது வயதுள்ள பெண்மணி காத்திருந்தாள். ஒற்றை நாடியான தனது தேகத்தில் நாசுக்காக ஒரு வெள்ளை ஜாக்கெட்டும் வெள்ளைப் புடைவையும், ஒரே வளையும், ஒரே ஒரு செயினும் அணிந்து கொண்டு டீக்காகத் தோன்றிய அம்மாது, சாம்புவைக் கண்டு ஒரு நமஸ்தே போட்டாள்.

'உம், உம். உட்காருங்கோ! கமிஷ்னரைப் பார்த்துவிட்டு வந்தேன். அதில் கொஞ்சம் நாழியாகிவிட்டது. உம், நீங்கள் யார்?' என்று விசாரித்தான் சாம்பு பெருமையாக.

'ஒன்றுமில்லை. உங்களைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்!' என்று புன்னகை பூத்தாள் அவள். பிறகு, 'நான் டவுன் லேடீஸ் அசோசியேஷனில் காரியதரிசி. எங்கள் சங்கம் ஒன்பது வருஷமாக ஓர்க் செய்தும் இன்னும் கட்டடமே இல்லாமலே இருக்கிறது. அதற்காக நிதி சேர்க்கிறோம்!' என்றாள்.

'சேருங்கோ! சேருங்கோ! ரொம்ப சந்தோஷம்! இந்த நாளிலே இன்னதுக்குத்தான் நிதி சேர்க்கிறது என்று கிடையாது. அடி வேம்பு, என் மணிபர்ஸைக் கொண்டு வா!' என்றான் சாம்பு.

'ஆமாம்! பொம்மனாட்டிகளைக் கண்டுவிட்டால், இதுக்குத் தலைகால் தெரிகிறதில்லை!' என்று வாயோடு சொல்லிக் கொண்டே, வேம்பு அவசர அவசரமாக அதிலிருந்த நோட்டுகளையும் ரூபாய்களையும் அப்புறப்படுத்தத் தொடங்கினாள்.

வந்திருந்த பெண்மணி விடாமல் புன்னகை செய்தாள். இனிமையான குரலில், 'மிஸ்டர் சாம்பு! நான் உங்களிடம் பணம் கேட்டு வாங்கிப் போகும் உத்தேசத்துடன் வரவில்லை. எனக்கு

அது தேவையுமில்லை. நாங்கள் பணம் சேகரிக்க வேறொரு சிறந்த வழியை உபயோகிக்கிறோம். பொது ஜனங்கள் அபிமானத்தைக் கவர்ந்து மேதாவிகளாக விளங்குபவர்களுடைய படங்களை விநியோகித்தே இப்போது நிதி சேர்க்கிறோம்!' என்றாள்.

சாம்பு புருவத்தை நெரித்துக் கொண்டான். அசட்டுச் சிரிப்புடன், 'அடடா! நான் சமீபத்தில் என் போட்டோ ஒன்றும் எடுத்துக் கொள்ளவேயில்லையே!' என்றான்.

பெண் தனது தோல் பையைத் திறந்து அதனுள்ளிருந்து ஒரு படத்தை வெளியே எடுத்தாள். 'பரவாயில்லை, சார்! என்னிடம் உங்கள் படம் இருக்கிறது! இதை உபயோகித்துக்கொள்ள நீங்கள் அநுமதி கொடுத்தீர்களானால் போதும்!' என்றாள் அவள்.

ஆச்சரியத்துடன் படத்தை வாங்கிப் பார்த்தான் சாம்பு. அழகிய பிரேமில் மவுண்ட் செய்யப்பட்டிருந்த அந்தப் படம், சாம்பு வழக்கமாக மூக்கைத் தடவும் பாவத்தில், தன்னை மறந்து லயித்திருக்கும் கட்டத்தில் விழுந்திருந்தது. 'இதை எப்போது எடுத்தீர்கள்? உம்! எனக்குத் தெரியவே தெரியாதே!' என்றான் அவன்.

'அதைச் சொல்லுவேனா? என்று அவள் சிரித்துக்கொண்டே, இப்படி ஒரு கையெழுத்து, நீங்கள் வழக்கமாகப் போடுகிறது போல், அழுத்தமாகப் போடுங்கள்!' என்றாள். சொன்னபடியே நட்சணம் செய்து கொடுத்தான் சாம்பு.

'எதுக்குப்பா கையெழுத்துப் போட்டே?' என்று அவள் போனவுடன் கேட்டான் சுந்து.

'நீ சின்னப்பயல். அதெல்லாம் கேட்கப்படாது!' என்றான் சாம்பு.

'போ, அப்பா! நானும் கையெழுத்துப் போடுவேன். உம். உம்!' என்று சுந்து முனகினான்.

'என்னடா பிராணனை வாங்கறே நீ! சுந்து, உன் அப்பா பேர் சாம்பு. உன் ஊர் ஆலந்தூர். தெரிந்ததா? ஏ.எஸ். சுந்தரேசன். ஏ.எஸ்.எஸ்.தான் நீ! போ!' என்று எரிந்து விழுந்தான் சாம்பு. இதற்குப் பிறகு சுந்து ஒரு சாக்பீஸை வைத்துக்கொண்டு வீடெங்கும் ஏ.எஸ்.எஸ். என்று கிறுக்க ஓட்டமாக ஓடிப் போனான்.

சாம்புவிடமிருந்து கையெழுத்து வாங்கிக்கொண்ட பெண் நேரே சைதாப்பேட்டையில் ஒரு வீட்டுக்குள் நுழைந்தாள். இரண்டு பேர்வழிகள் அங்கே சீட்டாடிக் கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

'என்ன ஆச்சுது, போன காரியம்? பழமா, காயா?' என்று கேட்டான் அவர்களில் ஒருவன்.

'பழம் இல்லாமலேயும் வருவேனா? சாம்பு என்னமோ பெரிய கொம்புன்னு நினைச்சுட்டே! முழு முட்டாள் அவன்! பச்சைக் குழந்தைகிட்டக் கையெழுத்து வாங்கறாப்பலே வாங்கிட்டேன்!' என்று போட்டோவை நீட்டினாள் பெண்.

அதை வாங்கினவன் அவசரமாகப் பிரேமிலிருந்து அதை அகற்றினான். அடியில் தென்பட்டது ஒரு கடிதம். படத்தின்மீது சாம்பு போட்டுக்கொடுத்த கையொப்பம், அந்தக் கடிதத்தின் அடியிலும் ஸ்பஷ்டமாக விழுந்திருந்தது! அந்த ஆள் சபாஷ் என்று தலையை ஆட்டிவிட்டு, 'இந்த லெட்டரைச் சரியாக 10,30 மணிக்குக் கோபாலனிடம் கொடுக்க வேண்டியது. தியேட்டர் பக்கத்திலிருந்து அவர் போனவுடனே, நாம் மிஸ் கௌமாரியை வெளியே கொண்டுவந்து காரில் ஏற்றவேண்டியது! ரைட்!' என்றான் குஷியாக.

அன்று மாலை ஐந்து மணிக்குச் சாம்புவின் வீட்டில் ராவ் சாகேப் நடராஜய்யரின் கார் வந்து நின்றது. ராவ் சாகேபின் சம்சாரம் ஸ்ரீமதி காவேரியம்மாள்தான் வேம்புவை ஒரு நாடகத்துக்கு அழைத்துப்போக வண்டி அனுப்பி இருந்தாள். அது வந்து நின்றதுமே அதன் பின்னாலும் தன் சாக்கட்டியினால் சுந்து, ஏ.எஸ்.எஸ். என்று எழுதிவிட்டான்.

அதே சமயம் சாம்புவைத் தேடிக்கொண்டு பளபளவென்று வாரிவிட்ட கிராம்புடன், ஒரு சூட் ஆசாமி வந்தார். சாம்புவின் அறையில் சௌகரியமான நாற்காலியாகப் பொறுக்கி சுவாதீன மாக உட்கார்ந்துகொண்டு, 'என்னை உங்களுக்குத் தெரிந்திருக் கலாம்' என்றார் சாம்புவிடம்.

'ஹி, ஹி!' என்றான் சாம்பு.

'எனக்கு மங்களூர். மதனகோபால் நாயுடு என்று நீங்கள் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?'

எதையாவது சொல்லிச் சமாளித்துக்கொள்ள விரும்பிய சாம்பு, 'உம், உம். கேள்விப்பட்டிருக்கிறேன்!' என்று புளுகி வைத்தான்.

'எங்கே? எப்போ?' என்றார் அவர் விடாமல்.

சாம்பு ஒரு நிமிஷம் திகைத்துவிட்டு, 'இப்பத்தான் சொன் னீர்களே! ஹிஹி!' என்றான்.

புன்னகை செய்தார் மதனகோபால். 'கோபாலன் சொன்னபடி தமாஷ் பேர்வழிதான் நீங்க! இருக்கட்டும்! இந்த மெட்ராஸிலே எங்க ஊர் நாட்டியம் ஒண்ணு நடத்தலாம் என்பதாக யோசனை. நானும் கோபாலனும் பழைய சிநேகிதர்கள். சித்தேமுந்தி அவருடன் பேசுகிற போது நாட்டியத்தை இன்றைக்கு ராத்திரி காண்பிச்சுடு. பார்த்துவிட்டுச் சொல்றேன் என்றார் அவர். ரொம்பச் சரின்னுட்டேன் நான். நான் வரேன். ஆனா, நீ போய்ச் சாம்புவையும் கொண்டுவந்துவிடு. வர மாட்டேன் என்பார். நான் சொன்னேன்னு சொல்லி அழைச்சு வா! என்றார். அதான் இப்போ வந்திருக்கிறேன்!' என்றார் அவர்.

வேம்புவும் சுந்துவும் டிராமாவுக்குக் கிளம்பிவிட்டார்கள். அப்புறமும் சாம்பு வீட்டில் உட்கார்ந்து மங்களூர் மதன கோபாலுடன் பேசிக் கொண்டிருந்தான். விடாப்பிடியாகச் சாம்புவை அழைத்துக்கொண்டுபோய் விடுவதென்று அவர் வந்திருந்தார். ஏழரை மணிக்கு அவர் 'கிளம்புங்கள், சாம்பு! யோசனை செய்யாதீர்கள்! வேற்று மனிதர் யாரும் கிடையாது அங்கே. ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டுப் போனோமானால் டயம் சரியாயிருக்கும்!' என்றார்.

ராஜ சாப்பாடு சாப்பிட்டான் சாம்பு. 'நன்றாய்ச் சாப்பிடுங்கள்! கிடைத்தபோது வஞ்சனையில்லாமல் தின்றுவிட வேண்டும் என்பதுதான் என் பிரின்ஸிபிள். ஏனென்றால், நாளைக்கு நாம் உயிரோடு இருக்கிறோம் என்பது என்ன நிச்சயம்?' என்று மதனகோபால் கேட்டு கண்களைச் சிமிட்டிக் காட்டினார்.

'இந்த ஷோக் பேர்வழிக்கு வேதாந்தம் வேறயா?' என்று சாம்பு நினைத்து உள்ளூர சிரித்துக் கொண்டான்.

ஹோட்டலிலிருந்து கிளம்பும்போதே ஒன்பது மணி. ஒரு சினிமாவில் பாதி ஆட்டம்வரை பார்த்துவிட்டு, பத்தரை மணிக்கு மீண்டும் கிளம்பினார்கள் இருவரும். உண்ட மயக்கத்தில் எங்கே போகிறோம் என்பதைக்கூட கவனியாமல் டாக்ஸியின் பின்சீட்டில் சாய்ந்துவிட்டான் சாம்பு. கண் திறந்து பார்த்தபோது,

இறுபுறமும் நெருக்கமான சுவர் உள்ள ஒரு பாதையில் மோட்டார் வெகுவேகமாகப் போய் ஒரு சிறு பங்களாவின் முன் நின்றது.

மதனகோபால் இறங்கி உள்ளே செல்ல, சாம்பு பின் தொடர்ந்தான். அங்கே நாட்டியத்துக்கு ஏற்பாடு ஒன்றையும் காணாத சாம்பு, 'இங்கேயா நாட்டியம்?' என்று கேட்டு, சுற்றுமுற்றும் பார்த்தான்.

'அப்படி அந்த நாற்காலியில் உட்கார், சாம்பு! உன்னோடு பேசுவதை இங்கேயே பேசுகிறேன்!' என்று மதனகோபாலின் கடுமையான குரல் கேட்டுத் திடுக்கிட்டான்.

'இதென்ன கூத்து? ஏக வசனமாகிப் பேசுகிறானே! என்று நினைத்துக்கொண்டு, கோபாலன் இன்னும் வரவில்லைபோல் இருக்கிறதே?' என்றான்.

'கோபாலன் என்னத்துக்கு வருகிறான்? இங்கே நாட்டியம் ஆடப் போகிறது நீதானே?' என்றான் மற்றவன்.

'பின், வருவார் என்றீர்களே!'

'பச்சைப்பிள்ளை மாதிரி பேசறியே! அப்படிச் சொல்லியிரா விட்டால் நீ லகுவில் வந்துவிடுவாயா?'

'பின்னே நான் போகிறேன்!' என்று சாம்பு எழுந்து வாசற்படி வரை போகவும் போய்விட்டான்.

'அடேய்! நில்!' என்ற கர்ஜனை கேட்டது. சாம்பு திரும்பிப் பார்த்தபோது, மதனகோபால் கையில் துப்பாக்கி ஒன்றை வைத்துக்கொண்டிருந்தான். குடல் நடுங்க, பதில் பேசாமல் நாற்காலியில் வந்து உட்கார்ந்தான் சாம்பு.

'ஏ சாம்பு! நீ போலீஸுக்குப் பெரிசா உபகாரம் பண்றவன், சூரப்புலி, சிம்மம் என்றெல்லாம் கமிஷ்னர் சொன்னார் இல்லை? உன் மூஞ்சியைப் பார்த்துக்கூட அவருக்குத் தெரியவில்லையே!' என்று கேலியாகக் கேட்டான் மதனகோபால்.

சாம்பு தொண்டையைக் கனைத்துக்கொண்டான். 'என்னை இப்படியெல்லாம் திட்டி அவமானப்படுத்துவதற்காகவா நீங்கள் கூட்டி வந்தீர்கள்?' என்றான்.

'இல்லவே இல்லை! அதற்காக முதல் தரமான சாப்பாட்டை முதல் தரமான முட்டாளுக்குப் போடுவேனா, என்ன? உன்னால் கூட ஒரு காரியம் ஆகவேண்டியிருக்கிறது. எனக்குத் தெரியாத சமாசாரம் ஒன்றை உன்னை வைத்துக்கொண்டு நான் செய்ய வேண்டி இருக்கிறது! தெரிந்ததா சாம்பு?'

இத்தனை கஜப்போக்கிரிக்கும் தெரியாத விஷயம் என்னவாக இருக்கும் என்று சாம்பு மூளையைக் குழப்பிக் கொண்டான்.

'உன்னிடம் நான் மறைக்காமல் சொல்லிவிடுகிறேன், கேள்! இது ஒரு சூதாடுகிற கிடங்கு. இங்கே ஜனங்கள் வருவார்கள், போவார்கள். எவ்வளவுதான் ஜாக்கிரதையாக இருந்தாலும், இரண்டொரு போலீஸார்களும் சி.ஐ.டி.காரர்களும் வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். அவர்களை யார் என்று கண்டுபிடிக்க முடியாமல் இருக்கிறது. இப்போ பக்கத்து அறையில் எல்லாருமே கூட்டமாக இருக்கிறார்கள். அவர்களை எனக்குக் கண்டுபிடித்துத் தரவேண்டியது உன் வேலை.'

'அது என்னால் எப்படி முடியும்?'

'இன்று காலையிலே உன்னிடம் ஓர் ஊதலைக் கொடுத்து, அதை உபயோகிக்கும் விதத்தையும் கமிஷ்னர் சொன்னார் இல்லையா? அதை ஊதினால், எந்த வேலை இருந்தாலும் அப்படியே போட்டு விட்டு, உனக்கு உதவிக்கு அவர்கள் ஓடி வருவார்கள் அல்லவா? நீ இங்கே அதை ஊதி அவர்களை அழைக்க வேண்டும். அவ்வளவுதான் நீ செய்ய வேண்டியது!'

சாம்புவுக்கு விஷயம் புலப்பட்டது. 'இதென்னடா இழவு! ஆபத்தாய்ப் போயிற்றே!' என்று அவன் உள்ளம் பதைபதைத்தது.

'எனக்கு நாழியாகிறது, பார்! எடு ஊதலை! சீக்கிரம் ஆகட்டும்!'

'என்னிடம் ஊதல் ஏது?' என்று முதலில் சாதித்தான் சாம்பு.

'மரியாதை கொடுத்தால் பெற்றுக்கொள்ள மாட்டேனென் கிறாயே! நான் உன் மேல் கை வைத்தேனோ ஒரே நொடியில் எடுத்து விடுவேன். அதோ இடப்புறத்துப் பையில் துருத்திக் கொண்டிருக்கிறதே, அது என்ன? வெளியில் எடு பார்க்கலாம்!' என்றான் அவன்.

சாம்பு எடுத்தான் வெளியில். அது ஊதல்தான்! 'ஊம்! இது எங்கள் சுந்துவின் விளையாட்டு ஊதல்! நான்தான் மறந்து போய்...'

'உஸ்ஸ். பேசாதே! ஊது பார்க்கலாம்! பதினொன்று அடிக்கப் பத்து நிமிஷமே இருக்கிறது. பதினொன்றடித்து விட்டதோ கூட்டம் கலைந்துவிடும். அப்புறம் கண்டுபிடிக்க முடியாமல் போய்விடும். சீக்கிரம்!'

'எனக்கு ஒன்றுமே தெரியாதே!' என்றான் சாம்பு மேலும் தீனமாக.

மற்றவன் கண்கள் குப்பென்று பயங்கரமாகச் சிவந்தன. 'சாம்புப் பயலே! என்னண்டையா விளையாடறே! ஹூம்! இன்னும் ஐந்து நிமிஷம் கொடுக்கிறேன். அதற்குள் ஊது. இல்லை, நீ தொலைந் தாய்!' என்றான் மதனகோபால் பல்லைக் கடித்து.

சாம்புவின் கண்முன் சுந்துவும் வேம்புவும் தோன்றி மறைந் தார்கள். எப்போது ஊதலை எடுத்து ஊதினோமென்ற ஞாபகமே அவனுக்கு இல்லை. எங்கிருந்தோ இரண்டு ஆள்கள் அந்த அறைக்குள் ஓடி வந்தார்கள். மதனகோபாலின் துப்பாக்கி இப்போது அவர்களைக் குறிபார்த்தது.

பிரமை பிடித்துச் சமைந்துபோய் சாம்பு உட்கார்ந்து விட்டான். இத்தனை பெரிய துரோகத்துக்கு என்ன தண்டனை கிடைக்குமோ என்று அவன் கலங்கிய அந்த க்ஷணத்திலே அங்கே யாருமே எதிர்பாராத இன்னொரு சம்பவமும் நடந்தது.

'போலீஸ்! ஓடுங்கள், போலீஸ்!' என்ற சத்தம் நாற்புறமும் கேட்டது. நாற்காலிகள், மேஜைகள் உருளும் சந்தடியும், பூட்ஸ் கள் தபதபவென்று முன்னோக்கி வரும் ஓசையும் கலந்து வந்தன. மதனகோபால்கூட ஒரு கணம் ஸ்தம்பித்து நின்று விட்டான்.

நான்கு கான்ஸ்டபிள்களும் கோபாலனும் வாசற்படியில் நின்றார்கள். 'மதனகோபால்! இனிமேல் உபயோகமில்லை. துப்பாக்கியைக் கீழே போடு. வீணாகத் தூக்கு மேடைக்குப் போகாதே! வீட்டை வளைத்துக்கொண்டு விட்டோம்! என்றார் கோபாலன். பிறகு அவர் சாம்புவின் பக்கம் திரும்பி, உங்கள் லெட்டர் பத்தரை மணிக்குத்தான் கிடைத்தது. உடனே ஓட்டமாக வந்தேன். நான் வருவதற்கும், நீங்கள் ஊதலை ஊதியதற்கும் சரியாக இருந்தது!' என்றார்.

'லெட்டரா? ஏது லெட்டர்?' என்று கேட்பதற்கு வாயெடுத்தான் சாம்பு. ஆனால், அதற்குள் கோபாலனே ஒரு கடிதத்தை மேஜை மீது விசிறி விட்டார். கோபாலனை, கான்ஸ்டபிள்களுடன்

ஸுரேஷ் ரோடின் பக்கம் பதினொரு மணிக்கு வரச்சொல்லி எழுதியிருந்த அந்தக் கடிதத்தில் சாம்புவின் கையெழுத்து ஸ்பஷ்டமாக, சந்தேகத்துக்கு இடமின்றிப் போட்டிருந்தது!

காலையில் ஒரு பெண் தன்னிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டது அந்தக் கடிதத்தின் மேலுந்தான் என்பதைச் சாம்பு தெரிந்துகொள்ள முகாந்தரம் ஏது?

மேற்குறிப்பிட்ட சம்பவங்கள் நடந்துகொண்டிருந்த போது, சைதாப்பேட்டை ஆசாமிகள் தங்கள் திட்டத்தை நாடகக் கொட்டகையில் சௌகரியமாக நிறைவேற்றிக் கொண்டிருந் தார்கள்.

நாடகக் கொட்டகையில் முன் சீட்டில் உட்கார்ந்திருந்த சினிமா நடிகை மிஸ் கௌமாரியிடம் ஒரு ஸ்திரீ வந்து, 'அம்மா! உங்கள் தாயாருக்கு உடம்பு அதிகமாகி இருக்கிறதாம். உங்கள் பங்களா விலிருந்து டெலிஃபோன் வந்திருக்கிறது. உடனே புறப்பட்டு வரச் சொல்கிறார்கள்!' என்றாள்.

தான் வரும்போதே தேக அசௌக்கியமாக இருந்த தாயாரை நினைத்துக் கௌமாரி திடுக்கிட்டு, கையைப் பிசைந்து கொண் டாள். அவள் அணிந்திருந்த முப்பதாயிரம் ரூபாய் வைரமும் மின்சார வெளிச்சத்தில் மினுக் மினுக் என்றன.

'வாருங்கள்! உங்கள் கார்வரை நான் வருகிறேன்!' என்று அழைத்தாள் அந்த ஸ்திரீ.

கொட்டகை வெளியே இருட்டாக இருந்தது. மேலும், ஆட்டம் முடிய நேரம் இருந்ததால், தெரு சந்தடியற்றிருந்தது. கௌமாரி ஒரு காரின் பக்கத்தில் செல்லும்போது, பின்னால் வந்த யாரோ ஒருவன் அவள்மீது ஓர் இடிஇடிப்பதும் அந்தக் காரின் கதவு திறந்துகொள்வதும் சரியாக இருந்தன. கண்ணிமைப்பதற்குள் அவள் அதனுள் தடுமாறி விழுந்தாள். 'ஐயோ!' என்று வாய் திறந்து கத்துவதற்குள் கார் வாயு வேகத்தில் கிளம்பி, சைதாப் பேட்டையை நோக்கி மவுண்ட் ரோடில் இறங்கிவிட்டது!

கோபாலனுடன் வெளிவந்த சாம்புவுக்கு இப்போது வேம்புவைப் பற்றிய திகில் பிடித்துக்கொண்டது. தன்னை ஏமாற்றியதைப்போலவே அவளையும் ஒருவேளை ஏமாற்றி யாராவது கொண்டு போயிருந்தால் என்ன ஆவது?

'கோபாலன்! சீக்கிரம் கிளம்ப வேண்டுமே!' என்று அவசரப்படுத்தினான் சாம்பு.

'இதோ!' என்றார் அவர்.

சாம்புவும் கோபாலனும் மூன்று கான்ஸ்டபிள்களும் போலீஸ் வேன் ஒன்றில் ஏறிக்கொள்ள, டிராமா கொட்டகையை நோக்கி மவுண்ட் ரோட் மார்க்கமாக வண்டி பறந்தது. ஆனால், கொட்டகை வரையும் போக அது கொடுத்து வைக்கவில்லை. அதன் பிரகாசமான முன் விளக்கின் வெளிச்சம் எதிரில் செல்லும் ஒரு காரின் பின்புறத்தில் பட்டது. அதில் ஏ.எஸ்.எஸ். என்ற சுந்துவின் எழுத்து, சாம்புவை ஒரு கலக்கு கலக்கியது. வேம்பு நாடகத்துக்குச் சென்ற வண்டியல்லவோ அது?

'அதைப் பின்தொடருங்கள்!' என்று உத்தரவிட்டான் சாம்பு.

பின் தொடரப்படுவதைச் சற்றும் எதிர்பாராத அந்தக் கார் நிச்சிந்தையாகச் சென்று, ஒரு தோப்பில் நுழைந்து வளைந்து சென்று, ஒரு பங்களா வாசலில் நின்றது. அதன் பின்னாலேயே நின்றது போலீஸ் வண்டியும் சந்தடியின்றி.

சாம்புவின் மூக்கை முதன்முதலாகப் பார்த்ததுமே காரில் இருந்தவர்கள் வெலவெலத்துப் போனார்கள். வண்டியை வளைத்துக்கொண்ட கான்ஸ்டபிள்கள் அதில் மூர்ச்சையாகக் கிடந்த மிஸ் கௌமாரியை ஆசுவாசப்படுத்தினபோது, தியேட்டரில் நடந்த சூது வெளியாயிற்று.

'கடைசி நிமிஷம் வரையில் என்னிடங்கூடச் சொல்லவில்லையே! எப்போது இந்தப் பெண்ணை இவர்கள் கொண்டு போகிற சமாசாரம் உமக்குத் தெரியும்? எப்படி இந்தக் கார்தான் என்று அடையாளம் கண்டுபிடித்தீர்? இது என்ன இக்ஷிணி வேலையா உம்முடையது?' என்று கேட்டார் கோபாலன்.

பதில் சொல்லும் தோரணையில் இல்லை, சாம்பு. வேம்பு கவலைதான் முன்னால் நின்றது. 'கோபாலன்! நாம் வீட்டுக்குப் போகலாமே முதலில்!' என்றான் சாம்பு அழமாட்டாத குறையாக.

தகுந்த ஏற்பாடுகளைத் துரிதமாகச் செய்துவிட்டு கோபாலன் சாம்புவுடன் கிளம்பினார். அப்போதுதான் சாம்பு வீட்டுவாசலில் வேம்புவையும் சுந்துவையும் விட்டுவிட்டு, ராவ் சாகேப்

நடராஜய்யரின் கார் கிளம்பிக் கொண்டிருந்தது. சுந்து கிறுக்கியிருந்த ஏ.எஸ்.எஸ். அதிலுந்தான் பளிச்சென்று தெரிந்தது. போக்கிரிப் பயல்! சாக்பீஸை வைத்துக்கொண்டு, நாடகக் கொட்டகையின் வாசலிலிருந்த அவ்வளவு காரிலும் கையெழுத்துப் போட்டிருக்கிறான். திருடர்களின் காரும் அவன் கையெழுத்துக்குத் தப்பவில்லை!

வேம்புவைக் கண்ணால் கண்டபிறகுதான் சாம்புவின் மனம் முற்றும் சமாதானம் அடைந்தது-

'ஏன் இப்படி இறைக்க இறைக்க ஓடி வரேள்? மெல்ல வரப்படாதோ?' என்று கேட்டாள் வேம்பு.

பதில் சொல்ல முடியாமல் சாம்பு பார்த்துப் பார்த்து ஆனந்தப்பட்டான். 'பயந்துட்டேண்டி நான், உனக்கு ஆபத்து ஒண்ணும் இல்லாமல் இருக்க வேண்டுமே என்று!' என்று தழுவிக்கொண்டான் அவளை.

'வேறே வேலை என்ன உங்களுக்கு! எடுத்ததற்கெல்லாம் பயந்தான்!' என்றாள் வேம்பு.

வெளியே கோபாலன் குரல் கேட்டது: 'ஓய்! சாம்பு! எத்தனை நாழிங்காணும்! இப்போ வரப்போகிறீரா என்ன!' என்றார் தமாஷாக! சாம்பு அசட்டு மூஞ்சியுடன் ஹாலுக்கு வந்தான்.

'பாரும் ஓய்! உம்ம பயல் என்ன சொல்றான் கேட்டீரா? ஏ.எஸ்.எஸ். என்று அவன் பெயராமே?'

'கிடக்கிறான் ஸார்! அவன் வரவரக் கழுதையாகவேப் போய்க் கொண்டு வரான்!' என்றான் சாம்பு.

44

கோட்டையூர் கோமளம்

சுந்துவுக்கு விளையாட்டு காண்பித்து, பொழுது போக்கிக் கொண்டிருந்தான் சாம்பு. வேம்புவின் முகம் பார்த்துக்கொள்ளும் கண்ணாடியை அவன் வெயிலில் பிடித்த போது, பட்டையாகச் சுந்து ஓடினான். சட்டென்று கையைத் திருப்பினான் சாம்பு. வெளிச்சம் அறையில் அங்குமிங்கும் பாய்ந்தது. சுந்துவும் கூடவே பாய்ந்தான். கட கடா குடு குடுவென்று அப்பனும் மகனும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

திடீரென்று வெளிச்சத்தை எங்குமே காணா மல் ஒரு சமயம் சுந்து நாற்புறமும் தேடி வந்தான். அப்புறம் பார்த்தால் அது அவன் முதுகின் மேலேயே இருந்தது! 'போ அப்பா! நான் ஒப்புக்க மாட்டேன்!' என்று கூவினான் சுந்து.

ஹாலில் மத்தியான வேளைக்குப் படுத் திருந்த வேம்பு கோபமாக எழுந்து வந்தாள். சாம்பு வெளிச்சத்தை அவள் முகத்துக்கு நேரே பிடித்தான். வைரக் கம்மலும், மூக்குத்தியும், பேஸரியும் ஆயிரம் வர்ணங்களை வாரி

இறைத்தன. 'நன்னாயிருக்கு! இதென்ன இரைச்சல்! என்ன அமளி! பிள்ளையில்லா வீட்டில் கிழவன் துள்ளி விளையாடினானாம்!' என்றாள் வேம்பு. பிறகு கண்ணாடியைச் சாம்புவின் கையில் கவனித்துவிட்டு, 'ஐய்! கண்ணாடின்னா பொட்டையாப் போயிடும்! கொண்டு வையுங்கோ உள்ளே, சொல்றேன்!' என்று அதட்டினாள்.

'அட! சமர்த்துப் பிள்ளை என்ன பண்ணுவான் தெரியுமோ இல்லியோ! வீட்டிலே இருக்கிற கண்ணாடியையெல்லாம் இனிமே ஒண்ணொண்ணாக எடுத்துக்கொண்டு கிளம்பி விடுவான், ஆமாம்!' என்றாள்.

'வெறுமனே கதை பண்ணாதேடி!' என்று சாம்பு கூடத்துக்கு வந்தான்.

'உம். கதை என்றவுடனே ஞாபகம் வரது. நல்ல கதைப் புத்தகமாத்தான் லைப்ரரியிலேர்ந்து வாங்கிப் போடுங்களேன். மகாலக்ஷ்மி லைப்ரரின்னு இருக்காம்; புதிசு புதிசாக் கதைப் புத்தகங்கள் எதேஷ்டமாக இருக்காமே! நானாவது வீண்போது போகாமல் இருக்கேன்!' என்றாள் வேம்பு.

அவள் சிறிதும் எதிர்பாராதவிதமாக அன்று சாயந்திரமே சாம்பு, மகாலக்ஷ்மி லைப்ரரியில் மெம்பராக ஆனான். அன்று முதலாக வீட்டுக்குத் திரும்பும்போது, 'குருவியூர் கோரக்கொலை', 'இருட்டு அறையின் இரகசியம்', 'மஞ்சள்குடி மர்மம்', 'மாமண்டையூர் மரணம்' என்ற பயங்கரத் தலைப்புகள் கொண்ட புத்தகங்களைத் தினம் ஒன்றாக வாங்கிக்கொண்டு திரும்பினான். வேம்புவின் வாசிப்பும் அதிவேகமாயிருந்தது. காலையில் கொடுத்த --- பக்கம் கொண்ட 'ஜமீன்தாரின் ஜன்ம விரோதி' என்ற ர---மான கதையை மத்தியானம் மூன்று மணிக்குச் சாம்புவின் கையில் கொடுத்து, 'இதுவும் ஒரு புத்தகமென்று வாங்கிக் கொண்டு வந்தேளே? கடைசி வரைக்கும் சப்னு இருக்கு!' என்றாள். இதுபோல் ஒவ்வொரு தடவையும் சாம்பு வெயிலையும் பார்க்காமல் வேறு புத்தகம் வாங்க ஓடுவான்.

இரண்டே மாதத்தில், லைப்ரரியில் கீழ் வரிசைகளிலிருந்து புத்தகங்கள் எல்லாமே காலியாகி, மேல்வரிசையிலுள்ள தடிப் புத்தகங்கள் ஒவ்வொன்றாகச் சாம்புவின் வீட்டுக்குப் போய்வரத் தொடங்கின.

அந்த சந்தர்ப்பத்தில்தான் ஒரு நாள் மாலை ஏழு மணிக்கு, சாம்பு வெகு நேரம் தேடி, தடித்த அட்டையுள்ள இரு புத்தகங்களுக்கு வந்தான். ஒரு புத்தகம் 'மாயாபுரி மங்கை' - இனிய துப்பறியும் நாவல்; மற்றொன்று 'கொட்டையூர் கோமளம்' - ருசிகரமான நவீனம். இவைகளில் எதை முதலில் எடுத்துக்கொள்வது என்று புரியவில்லை அவனுக்கு. கடைசியில் கண்ணை மூடிக்கொண்டு இரண்டில் ஒன்றைப் பொறுக்கினான். அது கொட்டையூர் கோமளமாக இருந்தது.

லைப்ரேரியனிடம் வந்தவுடனே ஒரு தகராறு ஆரம்பித்தது. சாம்பு புத்தகம் பொறுக்கும்வரையில் பொறுமையுடன் காத்திருந்த ஓர் ஆசாமி சட்டென்று வந்து, 'ஸார்! எனக்கு இந்தப் புத்தகம் வேண்டும். நான் காலையிலேயே பார்த்துவிட்டுப் போயிருக்கிறேன்!' என்றார்.

'அதற்காக? நான் பொறுக்கி எடுக்கும்வரையில் நீர் ஏன் சும்மா இருந்தீர்? நான் நேற்றே இதைப் பார்த்து வைத்துவிட்டுப் போய் இருக்கிறேனே, அது தெரியுமா ஸார்?' என்று சீறினான் சாம்பு.

லைப்ரேரியனுக்குத் தர்மசங்கடமாகப் போயிற்று. 'இப்படிச் சொன்னால் நான் என்ன செய்கிறது, ஸார்! இரண்டு பேரும் மெம்பர்கள்தான்! நீங்களாவது நேற்றுதான் சேர்ந்தீர்கள். மிஸ்டர் சாம்பு இரண்டு மாசமாகச் சேர்ந்திருக்கிறார்' என்றார் அவர்.

அந்த வார்த்தையைக் கேட்டதும், மற்றவர் சட்டென்று சாம்புவைத் திரும்பிப் பார்த்தார்.

'அடடா! நீங்கள்தான் சாம்புவா? துப்பறியும் சாம்புவா? நான் கேள்விப்பட்டிருக்கிறேன், ஸார்! ஆனால், பார்த்தது கிடையாது ஸார்! மன்னிக்கணும் ஸார்! நீங்களே கொண்டுபோய்விட்டு வாருங்கள் முதலில். ஆனால், நாளைக்குக் கொண்டுவந்து விடுவீர்கள் அல்லவா? நான் அதுவரை பொறுத்து அப்புறம் படித்துக் கொள்கிறேன்!' என்றார்.

'நாளைக்கு மூன்றாவது மணிக்கு வேம்பு என் மூஞ்சியில் வீசி எறிந்துவிட மாட்டாளா புத்தகத்தை?' என்றான் சாம்பு உத்ஸாகமாக.

'உங்கள் சிநேகம் எனக்கு வேண்டும், மிஸ்டர் சாம்பு! என் வீட்டில்கூட நான் சில நல்ல நாவல்கள் வைத்திருக்கிறேன்.

படிக்கிற பேருக்கு இல்லாமல் புத்தகம் என்னத்துக்கு, ஸார்? நாளைக்கு இங்கே வருகிறபோது வழியில் நம் ஜாகையில் சற்று நுழைந்தீர்களானால், வேண்டியதைப் பொறுக்கிக் கொள்ள லாம்!' என்று சொல்லி, அந்த ஆசாமி தமது விலாசத்தைக் கொடுத்தார்.

பெரிய சண்டையாக ஆரம்பித்தது இப்படி சௌஜன்யமாக முடிந்ததில் லைப்ரேரியனும் கவலை நீங்கிப் போனார்.

ஆனால், புத்தக விஷயம் அதோடு அவ்வளவு லகுவாகத் தீர்ந்து விடுவதாக இல்லை. அந்தப் புத்தகத்தைக் கையில் இடுக்கிக் கொண்டு நிச்சிந்தையாக வீட்டை நோக்கிப் போய்க்கொண் டிருந்த சாம்பு, யாரோ தன்மீது பலமாக உராய்வதை உணர்ந்தான். மறு நிமிஷம், அவன் கையிலிருந்த புத்தகம் ஆகாய மார்க்கமாகப் பறந்து, பத்தடி அப்பால் போய் விழுந்தது. ஒரு கறுத்த மனிதன் பாய்ந்து சென்று புத்தகத்தைப் பொறுக்க ஓடினான்.

'டேய் யாரடா நீ? என்று ஆரம்பித்த சாம்புவின் குரல் வாயிலேயே அடங்கிவிட்டது. அந்த ஆள் ஓர் அறை விட்டால் அப்பள மாகிவிட வேண்டியவன் நாம் என்ற பயம் அவன் ஸப்த நாடிகளையும் ஒடுக்கிவிட்டது. புத்தகம் போனது போனது தான்! என்று ஒரே க்ஷணத்தில் மனத்தைச் சமாதானம் செய்துகொண்ட சாம்புவுக்கு, கஜேந்திரனுக்கு மோக்ஷம் அளிக்கக் கருடாரூ டராகத் தோன்றிய மகாவிஷ்ணுவைப் போல், எங்கிருந்தோ மற்றோர் உருவம் விரைந்து வந்தது. இப்போது தடியனுக்கும் புதிய ஆசாமிக்கும் கைகலப்பு விறுவிறுப்பாக நடக்கவே, புத்தகம் கீழே கவனிப்பாரற்றுக் கிடந்தது.

பின்னால் வந்த ஆசாமி, தேக அமைப்பிலும் சரி வலுவிலும் சரி குறிப்பிடும்படி இல்லாவிட்டாலும், அந்தத் தடியனை எப்படியோ அடித்து விரட்டிவிட்டார். திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு ஒரு சந்துக்குள் அந்தத் தடியன் ஓடினபோது, நல்லதாகப் போயிற்று! என்று தோன்றியது.

வெற்றியடைந்த ஆசாமி குனிந்து, புத்தகத்தைப் பொறுக்கிக் கொண்டு சாம்புவிடம் வந்து புன்னகை செய்தார். 'எவனோ தெரியவில்லை, காலிப்பயல்! அங்கிருந்தே பார்த்தேன், உங்களைப் போல் தோன்றியது. ஓட்டமாக ஓடிவந்தேன், நல்லதாகப் போயிற்று!' என்று புத்தகத்தை நீட்டினார்.

சாம்பு நிமிஷத்தில் அவர் யார் என்று தெரிந்துகொண்டு விட்டான். லைப்ரரியில் தன்னுடன் புத்தகத்துக்குப் போட்டி போட்டு, பின் மறுநாள் வாங்கிக்கொள்வதாகச் சொன்ன அதே ஆசாமிதான் அவர்.

'ரொம்ப வந்தனம், ஸார்! நீங்கள் மட்டும் சமயத்தில் வந்திராவிட் டால், அந்த முரடன் புத்தகத்தைக் கொண்டே போயிருப்பான். அவனை...' என்றான் சாம்பு.

'கிடக்கிறான், தள்ளுங்கள்! நான் இப்போ உங்க வீடு வரை வரட்டுமா, ஸார்? இம்மாதிரிப் போக்கிரி இன்னும் யாராவது வந்தாலும்' என்று நிறுத்தினார் அவர்.

'ஊஹூம். நீங்கள் சிரமப்பட வேண்டாம்னா! எவனாவது இனிமேலே தென்பட்டா, நான் ஒரே ஓட்டமா ஓடியே போயிட மாட்டேனா!' என்றான் சாம்பு, அழுத்தந்திருத்தமாக.

அன்றிரவு வெகுநேரம் வேம்பு படித்தாள். அதில் நூறு பக்கத் துக்குப் பிறகுதான் 'கொட்டையூர்' என்கிற பெயரே வந்தது. இருநூறு பக்கத்துக்குப் பிறகு கோமளம் வந்தாள். மிகுதி இருந்த ஐம்பதே பக்கங்களில் 'கொட்டையூர் கோமளம்' அதிகமாக நடமாட முடியாமல், நாவலே சப்பென்று இருந்தது.

இதைக் கேட்ட சாம்பு, 'முட்டாள் அவன்! நேத்து இந்தப் புத்தகத்துக்காகவா அத்தனை போட்டி போட்டான் என்னோடு! அவனைக் கண்டு நாளைக்குச் சொல்லணும்' என்று நினைத்துக் கொண்டு, புத்தகத்தைத் தலையணைக்கு அடியில் வைத்துக் கொண்டு தூங்கினான்.

காலையில் வேம்பு அவசர அவசரமாக எழுப்பினாள் சாம்புவை. 'திருடன் வந்திருக்கிறான் போலேயிருக்கு! சீக்கிரம் வந்து பாருங்கோ!' என்று பரபரப்பாகக் கூப்பிட்டாள்.

மாடி ஹாலுக்கு ஒரே எட்டில் ஓடிப்போய்ப் பார்த்தான் சாம்பு. பீரோக்கள், அலமாரிகள் எல்லாம் காலியாக இருந்தன. அவை களிலிருந்த புத்தகங்கள் எல்லாம் தரையில் நாற்புறமும் இறைந் தும் பிரிந்தும் கிடந்தன. யாரோ அவைகளையெல்லாம் இரவில் ஒவ்வொன்றாகப் பிரித்துப் பார்த்திருக்கிறார்கள்!

'நல்ல வேளை! நாம் கீழே படுத்துக்கொண்டோம்டி! இல்லா விட்டால், நமக்கே ஆபத்தாகப் போயிருக்கும்!' என்றான் சாம்பு.

'வயத்தெரிச்சக் கூத்தான்னா இருக்கு இது! புத்தகம் படிக்கிற கள்ளன்னு நான் புத்தகத்திலேகூடப் படித்ததில்லையே! கோபாலனைக் கூப்பிட்டுச் சொல்லுங்கோ, இந்த வேடிக்கையை!' என்றாள் வேம்பு, மோவாய்க் கட்டையில் கையை வைத்துக் கொண்டு.

'வெட்கக்கேடுடி! துப்பறியும் சாம்பு வீட்டிலே கள்ளன் வந்தான்னா, அதைவிட நாக்கைப் பிடுங்கிக்க வேண்டிய விஷயம் வேறே இருக்கா?' என்றான் சாம்பு.

'இல்லாட்டா நீங்கதான் சுருக்கத் துப்பறிஞ்சு கண்டுபிடிச்சுடப் போறேளாக்கும்! திருடனுக்குத் தேள் கொட்டினாப்பலே பேசாமே இருக்க வேண்டியதுதான்!' என்றாள் வேம்பு.

'என்ன, சாம்பு! புத்தகங்களெல்லாம் சாவகாசமாக அடுக்கி வைத்துக்கொண்டிருக்காப்பலே இருக்கு!' என்று பின்னால் கோபாலனின் குரல் கேட்டு இருவரும் திடுக்கிட்டார்கள். எத்தனை நேரமாக அவர் நின்று கொண்டிருக்கிறாரோ என்று சாம்பு உள்ளூர நடுங்கினான்.

'ஒன்றும் விசேஷமில்லை. விசித்திரமான கேஸ் ஒன்று சொல்லிவிட்டேன்; இங்கே காபி கீப்பி கொண்டுவந்தால் நான் சாப்பிட முடியாது. காலையில் எழுந்திருந்து ஆறு இடத்திலே சாப்பிட்டாகிவிட்டது!' என்று எச்சரித்துவிட்டு, இன்ஸ்பெக்டர் கோபாலன் கேஸ் விஷயத்தைச் சொன்னார்.

'போன வருஷம் கஜலக்ஷ்மி பேங்கிலே திடீரென்று நூறு ரூபாய் நோட்டுக்கட்டு ஒன்று காணாமல்போய், குமாஸ்தா மேலே சந்தேகப்பட்டுக் கேஸ் நடந்ததே! ஞாபகம் இருக்கிறதா உமக்கு? ஜயராம ராவ்னு ஒரு குமாஸ்தாகூட அதை வாங்கி வைத்ததாக எல்லாருமே சொன்னார்கள். அவனானால் தனக்கு ஒன்றுமே தெரியாது என்றான். நோட்டு நம்பர்கள்கூடப் பேங்கிலே இல்லை. நூறு நூறு ரூபாய்கள் - மாயமாகப் போச்சு. குமாஸ்தா வீட்டைச் சோதனை பண்ணினதிலே, வேற ஏதோ ஒரு நோட்டு அகப்பட்டு அதற்காக ஒரு வருஷம் ஜெயிலுக்குப் போனானே, ஸார்! உமக்கு ஞாபகம் இல்லையா?'

'இருக்கு, நன்னாயிருக்கு!' என்று புளுகினான் சாம்பு.

'அந்த ஆள் முந்தாநாள் ரிலீஸ் ஆகி வந்துவிட்டான். அவனைக் கொஞ்சம் நீரும் கவனித்தால், ஒருகால் நோட்டுக் கிடைக்க லாமோ என்கிறதாக ஓர் ஆசை எனக்கு!'

'இன்னிக்கு முடியாது! இன்னிக்குப் புத்தகங்கள் பார்க்கிற வேலைதான் எனக்கு! நீரும் ஒத்தாசை செய்தால் இது சீக்கிரம் நீரும்!' என்றான் சாம்பு.

கோபாலன் சிரித்தார். 'என்னமோ விஷமமாகப் பேசுகிறீர், ஓய்! இருக்கட்டும்!' என்று சொல்லிவிட்டுப் போனார்.

புத்தகங்களை அடுக்கி வைத்துவிட்டு, ஸ்நானம் - சாப்பாடு முடித்துக்கொண்டு சாம்பு தூங்கி எழுந்திருந்தபோது மணி சரியாக மூன்று. காபியைக் கொடுத்த வேம்பு, 'வேறே புத்தகம் வரணும்! ஞாபகம் இருக்கோ, இல்லையோ?' என்று கேட்டாள்.

'அசாத்திய வெயிலடி! நேத்து ஓர் ஆள், புத்தகம் தரேன்னான். முதல்லே அவனைப் பார்த்துக்கொண்டு, லைப்ரரிக்கும் போய் விட்டு வருகிறேனே!' என்றான் சாம்பு.

சாம்புவின் வருகைக்காகக் காத்துக்கொண்டிருந்தார் அந்த ஆசாமி. கையில் முதல்நாள் வாங்கின கொட்டையூர் கோமளத் துடன் சென்ற சாம்பு, மாடியில் அவர் அறைக்குச் சென்று உட்கார்ந்தான்.

'அட கோவிந்த்! ரெண்டு ட்ரிங்க் கொண்டு வா! க்விக்!' என்றார் அவர்.

'அதெல்லாம் வேண்டாம்! இப்போதுதான் காபி சாப்பிட்டு வந்தேன்!' என்று சாம்பு ஆனமட்டும் சொல்லியும் மற்றவர் கேட்கவில்லை. கோவிந்த் என்ற ஆள் இரண்டு ட்ரிங்குகளை ஒரு பிளேட்டில் மேஜைமீது கொண்டு வந்து வைத்துவிட்டு உள்ளே போனான்.

'சாப்பிடுங்கள், ஸார்! புத்தகங்களைக் கொண்டுவரச் சொல் கிறேன். தூக்கம் வருகிற வரையில் படிக்கலாம்!' என்றார் புது நண்பர்.

'ஹி, ஹி. ஆகட்டும்! ஹி ஹி!' என்று சாம்பு தன் முன்னாலிருக்கும் பிளேட்டை, சுண்டு விரலால் ஒரு சிறுதட்டு தட்டினான். அது அரைச்சுழல் சுழலவே, சாம்புவின் முன்னாலிருந்த டம்ளர்

நண்பர் முன்னும், நண்பரை நோக்கியிருந்த டம்ளர் சாம்புவின் எதிரிலுமாக வந்தன.

நண்பரும் வேடிக்கையாக அதேபோல் பதிலுக்கு ஒரு தட்டுத் தட்டினார். மீண்டும் அந்தப் பிளேட் சுழன்று. டம்ளர்கள் முதலில் வைத்ததுபோலவே வந்து நின்றன.

இந்த விளையாட்டு சாம்புவுக்குப் பிடித்துவிட்டது. டம்ளரை எடுத்துச் சாப்பிடுவதை மறந்து, பிளேட்டைச் சுழற்றுவதில் மும்முரமானான். நண்பரும், கூடவே அதில் ஈடுபட்டு, திருப்பித் திருப்பிச் சுழற்றுவதில் முனைந்தார்.

இந்த விளையாட்டு வெகுநேரம் நடந்திருக்கும். ஆனால் எதிர்பாராதவிதமாக அப்போது ஒரு விஷயம் நடந்தது.

அடுத்த வீட்டு மொட்டை மாடியில் இரண்டு சிறு பயல்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் கண்ணாடியை வெயிலில் பிடித்தான். அதன் வெளிச்சம் அப்பட்டமாக நண்பரின் கண்களில் அடித்தது. அவர் கண் ஒளியும் ஒரு க்ஷணம் மங்கியது. அவர் கண் மூடிய சமயம் சாம்பு பிளேட்டை மேலும் இருமுறை சுற்றிவிட்டான்.

'என்ன, மிஸ்டர் ஜயராம ராவ்! இங்கேதான் இப்போ ஜாகையோ? அடேடே! சாம்புகூட இங்கே வந்து விட்டாரோ? ஒரே கல், இரண்டு மாங்காய்!' என்று குஷியாகக் கோபாலன் நுழைந்தார்.

'நீங்கள் இங்கே வருவதாகச் சொல்லவே இல்லையே!' என்று கேட்டான் சாம்பு.

'நான் சொன்னேன். நீர்தான் என்னிடம் சொல்லவில்லை. நான் ஜயராமராவ் வந்திருக்கிறார். அவரைப் பார்க்க வேண்டும் என்று சொன்னேனோ இல்லையா? நினைத்துப் பாரும்!' என்றார் கோபாலன்.

சாம்புவுக்குச் சட்டென்று ஞாபகம் வந்தது. பேங்கில் களவு போன பணத்துக்காகக் கோபாலன் இந்த ஜயராமராவைத்தான் உபத்திரவப்படுத்தப் போகிறார்! எவ்வளவு நல்ல மனுஷராயிருக்கிறார் இவர்! இவர்மேல் சந்தேகமா?

ஜயராம ராவ் முகத்தில் வேதனை எழுதி ஒட்டியிருந்தது. 'ஸார்! நண்பர் என்ற ஹோதாவில் நீங்கள் வருகிறதைப் பற்றி எனக்கு

ஆட்சேபமே இல்லை. ஆனால், இன்ஸ்பெக்டர் என்று வருவது தான் மனத்துக்குப் புண்ணாக இருக்கிறது. நான் நிரபராதி. அநாவசியமாத் தண்டனை அநுபவித்துவிட்டு வெளியில் வந்துவிட்டேன். இனிமேலும் என்னைச் சந்தேகித்தீர்களோ...' என்று சொல்லிக்கொண்டு வந்த அவர் தலை இருமுறை ஆடியது. அப்படியே நாற்காலியில் கண்ணை மூடிக்கொண்டு சாய்ந்துவிட்டார்.

கோபாலன் சிரித்துக்கொண்டு நிற்கிறார். சாம்பு திடுக்கிட்டான். 'சே! என்ன குரூர சுபாவம் கோபாலனுக்குத்தான்! மனுஷன் மூர்ச்சை ஆனால்கூட அசைந்து கொடுக்க மாட்டேனென் கிறாரே!' என்று ஒரே துள்ளலில் மேஜையிலிருந்து ஒரு டம்ளரை எடுத்தான். மறுகணம் அதை ஜயராம ராவின் வாய் அருகே கொண்டுபோய் விட்டான்.

ஜயராம ராவ் ஏனோ உடனே கண்ணை விழித்துக்கொண்டார். 'வேண்டாம், வேண்டாம்!' என்று முகத்தைப் பலமாக ஆட்டி சாம்புவைத் தடுத்தார் அவர்.

'நான் மாட்டேன்! நீங்கள் அலட்டிக்கொள்ளப்படாது. உங்களுக்கு உடம்பு நன்றாயில்லை. எனக்கு எவ்வளவு அன்புடன் கொடுத்தீர் கள்! அதே மாதிரி நானும் கொடுக்க வேண்டாமோ? ஒரு வாயாவது சாப்பிட்டுத்தான் ஆக வேண்டும்!' என்று விடாப்பிடி யாக உபசாரம் செய்தான் சாம்பு.

கோபாலன் ஜயராம ராவை ஒரு கண்ணால் பார்த்தார். சாம்புவைத் தடுக்கிறாற்போல் நெருங்கிவிட்ட கோவிந்தையும் பார்த்தார். அப்போது தோன்றியது ஒரு வெளிச்சம். நிஜ வெளிச்சமே அது! அடுத்த வீட்டு மாடியில் கண்ணாடியை வெயிலில் பிடித்துக்கொண்டு நின்ற சிறு பயல்களின் கூச்சலுடன் வந்தது அந்த வெளிச்சம். அது இப்போது கோவிந்தன் முகத்தில் பளிச்சென்று அடித்தது. கோபாலன் கூர்மையாகப் பார்த்தார்.

'ஏய்! நீ இங்கே வா! நீ அரண்மனைக்காரத் தெரு பைண்டர் கோவிந்த முதலி இல்லை? எப்போ வைச்சே மீசை?' என்றார் அவர்.

சாம்புவும் பார்த்தான். மீசை புதிதாக வைத்ததென்றால், மீசை இல்லாமல் எப்படி இருப்பான் அவன்? அடடே இத்தனை நாழி எப்படித் தெரியாமல் போயிற்று! நேற்று வழிமறித்துப்

புத்தகத்தைப் பறிக்கப் பார்த்த அதே முரடன் அல்லவா அவன்? பின் அவன் ஏன் இங்கே ஜயராம ராவின் சேவகனாக இருக்கிறான்?

'கோபாலன்! அதோ அவனைப் பிடியுங்கள்! நேற்று முதல் என்னோடு போர் செய்கிறான், விஷயத்தை அப்புறம் சொல்லுகிறேன்! அவனுக்கு முன்னால் நான் லைப்ரரியில் போய் வேறு புத்தகத்தை வாங்கியாக வேண்டும்!' என்றான் சாம்பு.

'இதோதான் ஒரு புத்தகம் வைத்திருக்கிறீரே!' என்று கேட்டார் கோபாலன்.

'இதில் ஒன்றுமே இல்லை, பார்த்துவிட்டேன். இதே போல் இன்னொன்று இருக்கிறது. அதைத்தான் பார்க்க வேண்டும் உடனே!' என்றான் சாம்பு.

'இதில் இல்லையென்றால் அதில் கட்டாயம் இருக்கும், ஸார்!' என்றார் ஜயராம ராவ். அதைச் சொல்லும்போது அவர் குரலில் பெருத்த ஏமாற்றமும் முகத்தில் பிரேதக் களையும் இருந்தன.

'அடேயப்பா! மெல்ல நிஜம் வருகிறாற்போல் இருக்கிறதே! என்ன மிஸ்டர் சாம்பு! ஜயராம ராவ் சொல்லட்டுமா? நீரே சொல்கிறீரா?' என்றார் கோபாலன்.

அந்தச் சங்கடமான வேலையைச் சாம்புவுக்கு ராவ்ஜி வைக்கவில்லை.

ஜயராம ராவ் சொன்னார்: 'சென்ற வருஷம் பேங்கில் பணம் எடுத்தது நான்தான்! இந்தக் கோவிந்தும் அப்போது என் அறைக்குப் பக்கத்திலேயே இருந்தான். புத்தக பைண்ட் செய்கிற வேலை. பணத்தை மறைக்க இவனையும் சேர்த்துக் கொண்டேன். அப்போது லைப்ரரியிலிருந்து புத்தகங்கள் ஏராளமாகப் பைண்டுக்கு இவனிடம் வந்திருந்தன. எனக்கு ஆபத்து என்றவுடனே இவன் சட்டென்று நூறு நோட்டுகளையும் பக்கத்துக்கு ஐம்பது நோட்டுகளாகப் பரப்பி ஒரு புத்தகத்தின் அட்டைக்குள் வைத்து பைண்ட் செய்து லைப்ரரிக்கு அனுப்பி விட்டான்.'

'நான் ஒரு வருஷம் ஜெயிலில் இருந்துவிட்டேன். பைண்டரும் எதில் வைத்தோம் என்ற நினைவு இல்லாமல் இதுவரை சும்மா இருந்துவிட்டான். நேற்று மாலை நான் போனபோது, நான் எடுக்கப்போன புத்தகத்தையே சாம்புவும் எடுத்துக்கொண்டு

இருந்தார். விஷயம் தெரியாமல்தான் இவர் எடுத்துப் போவதாகத் தோன்றியபடியால் அப்போதைக்கு நான் விட்டு விட்டேன்.'

'பிற்பாடு, கோவிந்தன் இவர் கையில் புத்தகத்தைக் கண்டு வழியில் பிடுங்கப் பார்த்திருக்கிறான். அதனால் வீண் சந்தே/ கத்தைக் கிளப்பக் கூடாதென்று, நான் குறுக்கே வந்து சண்டை போடுகிறாற்போல் போட்டு, கோவிந்தனை நல்ல வார்த்தை/ யாகச் சொல்லி அனுப்பினேன். நேற்று ராத்திரி இவர் வீட்டுப் புத்தக அலமாரியை வேறு குடைந்திருக்கிறான் கோவிந்தன். அங்கே அது இல்லையாம்!'

'இன்று மத்தியானம் இவரை இங்கே தருவித்து, ட்ரிங்கில் தூக்க மருந்தைக் கலந்து கொடுத்துத் தூங்க வைத்துவிட்டு, அதற்குள் பணத்தை எடுத்துக்கொண்டு புத்தகத்தையும் திரும்ப பைண்ட் செய்துவிடலாம் என்று நினைத்தேன். அதற்கில்லாமல் வந்ததும் வராததுமாக பிளேட்டை இவர் திருப்ப ஆரம்பித்தார். அப்புறம் அதே டிரிங்கை எனக்கும் கொடுக்க வருகிறார்! இத்தனை விளையாட்டும் காட்டிவிட்டு, 'பணம் இதில் இல்லை; இதே போல் வேறொரு புத்தகத்தில் இருக்கிறது' என்கிறார் இப்போது! இவரிடம் இனி மறைத்து வைத்து உபயோகமில்லை. உள்ளதை ஒப்புக்கொண்டுவிட்டேன்!' என்று முடித்தார்.

'பிடி! கோபால் மாமா, பிடி! இன்ஸ்பெக்டர் மாமா, பிடி!' என்று அடுத்த மாடியிலிருந்து சுந்துவின் கூச்சல் கேட்டது. கண்/ ணாடியை வெயிலில் பிடித்து, அந்த அறையின் பல இடங்களில் வெளிச்சத்தை ஓட்டினான் பையன்.

'சபாஷ், சாம்பு! பையனை வேறே இதற்குத் தயார் செய்திருக்கிறீர் போலிருக்கிறது! அச்சா!'

'அது கிடக்கட்டும்! இன்னொரு புத்தகத்தைச் சீக்கிரம் வாங்க வழி பாரும்! எனக்கு வீட்டுக்குத் திரும்ப வேண்டும்!' என்றான் சாம்பு.

•

சாம்பு குறிப்பிட்ட புத்தகம் போலீஸார் வசம் ஒப்புவிக்கப்பட்டு, அதன் கனத்த அட்டையினுள்ளிருந்து நோட்டுகள் அகப்பட்டன. அன்றிரவு வேம்புவிடம் இந்தக் கதையெல்லாம் சாம்பு

சொல்லிவிட்டு, அவள் கொடுத்த பாலை விளக்கடியில் பிடித்துப் பார்த்தான்.

'என்ன பார்க்கிறேன்! தூசியா?' என்று கேட்டாள் பார்யாள்.

'இல்லைடி! ஏதானும் விஷம் கிஷம் கலந்திருக்கிறயோன்னு பார்த்தேன்!' என்று சொல்லி அசடுவழியச் சிரித்தான் சாம்பு.

மோவாய்கட்டையை வெடுக்கென்று தோள்பட்டையில் இடித்துக்காட்டி, 'ஹும்! வரவர புத்தி உலக்கைக் கொழுந்தாப் போறதே!' என்றாள் வேம்பு.

45

இன்ஸ்பெக்டர் கோபாலன்

'மிஸ்டர் சாம்பு! இனிமேல் நீங்கள் கார் வைத்துக்கொள்ள வேண்டியதுதான்! ஏன், இத்தனை நாள் வைத்துக்கொண்டிருக்க வேண்டுமே!' என்றார் கோபாலன்.

உள்ளே வேம்புவுக்கு இருப்புக் கொள்ள வில்லை. பீச்சில் தன் பர்த்தா சகிதமாக காரில் தெற்கும் வடக்கும் விர் விர்ரென்று போவது போலவும், சமுத்திரக் காற்று குளுகுளு வென்று வீசுவது போலவும் அவளுக்கு உணர்ச்சிகள் ஏற்பட்டன. கோபாலன் போனதுமே சாம்புவின் நாற்காலிக் கைமேல் ஏறி உட்கார்ந்துகொண்டு, அவன் கழுத்தைச் சுற்றி ஒரு கையை அளையவிட்டு, 'உங்களைத் தானே! இனிமேலே காரிலேதான் போவேளாக்கும்!' என்றாள் கொஞ்சலாக.

சாம்பு நிமிர்ந்து பார்த்து, 'நான் மட்டுமாடி போவேன்? என் பக்கத்திலே யார் இருக்கப் போறா, தெரியுமா?' என்றான்.

'என்னைக் கேட்டால் எப்படித் தெரியுமாம்?' என்று சாம்புவின் வழுக்கைத் தலையைப் பரிவுடன் தடவிக் கொடுத்தாள் வேம்பு.

இந்தப் பேச்சு சீக்கிரத்திலேயே உண்மையாயிற்று. ஒரு பெரிய கார் சாம்புவுக்குச் சொந்தமாக வாசலில் வந்து நின்றது. அதற்கு டிரைவர் பார்த்துத் தரும் பொறுப்பை நித்யானந்த லால் ஏற்றுக்கொண்டார். பிரபல வைர வியாபாரியான நித்யானந்தம் சாம்புவிடம் நட்பு கொள்வதில் ஒரு பெருமையே கொண்டிருந்தார். டிரைவரை அமர்த்தி வைத்து, 'இவன் என் பழைய சிநேகிதர் சிபாரிசு செய்து அனுப்பினவன். நீங்கள் சம்பளம் ஒன்றுமே கொடுக்கக்கூடாது. ஆமாம்! உங்களுக்கு டிரைவ் செய்தது போக, ஒழிந்த சமயத்தில் எனக்கும் வரட்டும் போதும்!' என்றார் ஸேட்.

'ரொம்ப சரி!' என்றான் சாம்பு.

சாம்புவுக்கு வாய்த்த டிரைவர், உலகத்திலே ஒரு புதுமையாக இருந்தான். சாம்புவின் மோட்டாருடன்கூட சாம்புவையும் டிரைவ் செய்தான் அவன்! 'என்னங்க! பீச்சுக்கு வர்றீங்களா?' என்று கேட்பான் கம்பீரமாக வந்து நின்றுகொண்டு. போக வேண்டாம் என்று சாம்பு தீர்மானித்திருந்தாலும்கூட அவனிடம் அதைச் சொல்ல அச்சப்பட்டுக் கொண்டு சாம்பு, சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்புவான். 'இன்னைக்கு எங்கேயும் போக வேண்டியதில்லை, ஸார். வண்டி நல்லாயில்லை!' என்பான் டிரைவர். 'சரி!' என்று நூற்றுக்கு நூறு தரம் ஒப்புக் கொண்டுவிடுவான். அவன் சொன்னபடி கேட்டுவிட்டால் என்ன செய்துவிடுவான் அவன் என்று மனத்தைத் தைரியப்படுத்திக் கொள்வான்.

ஆனால், சுந்து டிரைவரை லட்சியம் செய்தவனாக இல்லை. 'டேய் டிரைவர்! எடு வண்டியை! ஐயாவுக்குப் போகணும்! என்பான். என்னடா விடாய்க்கிறே! விரட்டி விடுவேன் உன்னை!' என்று மிரட்டுவான். ஒரு சமயம் சுந்து பட்டம் விட்டுக்கொண்டு தெருவில் ஓடினான். பட்டம் ஒரு வீட்டுக் கூரையில் மாட்டிக் கொள்ள, டிரைவரை, 'அடே! அதை எடுத்துக்கொடு!' என்று கேட்டான். 'அதெல்லாம் சாயாது! நான் குரங்கா, கூரைமேலே ஏற?' என்றான் டிரைவர். 'ஏறுடான்னா, என்னமோ முழிக்கிறியே! இல்லாட்டா அப்படியே வீட்டுக்குப் போக வேண்டியதுதான் நீ!' என்றான் சுந்து.

டிரைவர் கடுங்கோபமாக ஏறி, பட்டத்தையும் கயிற்றையும் சுக்குச் சுக்காக அறுத்து எறிந்து போட்டுவிட்டு இறங்கினான். ஹோவென்று கதறிக்கொண்டு போய் சாம்புவிடம் சொன்ன சுந்துவுக்கு, ஆறுதல் ஒன்றும் கிடைக்கவில்லை.

'நீ இனிமே காற்றாடி விடாதே, வேண்டாம்! நம்ம காம்பவுண்டுக் குள்ளேயே விளையாடேன். கிரிக்கெட் பந்து வாங்கித் தரேன்!' என்றான் சாம்பு. அப்படியே ஒன்று வாங்கியும் கொடுத்தான்.

'அழகுதான்! கிரிக்கெட் பந்தைக் கொடுத்தேளா! உங்க பிள்ளை கையால் யார் மண்டையோ உடையப்போறது! பார்த்துக் கொண்டேயிருங்கோ!' என்று எச்சரித்துவிட்டுப் போனாள் வேம்பு.

இன்ஸ்பெக்டர் கோபாலன் சாம்புவைப் பார்க்க அதிவேகமாக வந்தார். பேசிக்கொண்டே காரில் கிளம்பினார். ஒரு புதுவிதமான திருட்டு, பட்டணத்தில் அப்போது நடந்தது. ஒவ்வொன்றிலும் திருடன் தன் வந்தனத்தைத் தெரிவித்துக் கொண்டான்! முதல் கேஸ் திவான் தியாகராஜ முதலியார் வீட்டுக் கல்யாணத்தில் நடந்தது. முதலியார் தம் பெண்ணுக்கு வரிசையாகத் தட்டில் வைத்த வைர அட்டிகையை முதல் நாள் இரவு எல்லாருமே பார்த்தார்கள். ஆனால், காலையில் தட்டின் மீது அட்டிகைக்குப் பதிலாக ஒரு சிறிய கார்டு இருந்தது.

'அட்டிகை பேஷாக இருக்கிறது. நான் வைத்துக் கொள்கிறேன். வந்தனம்.

- சிம்மம்.'

என்று அதில் எழுதியிருந்தது. போலீஸார் வந்து பார்த்துவிட்டுப் புலன் விசாரிக்கப் போனார்கள். அடுத்த கேஸ், டாக்டர் நாராயணப் பிள்ளை என்பவர் பங்களாவில் மற்றும் சினிமா ஸ்டார் ஜகதாம்பிகை, நாட்டிய ராணி நாகலக்ஷ்மி, பிரபல பாடகி மங்களமோகினி ஆகிய மூன்று பேர் வீட்டிலும் மூன்று பெரிய வைர நகைகள் அடுத்தடுத்து களவு போயிருக்கின்றன. ஒவ்வொரு திருட்டின் போதும் அங்கே ஏதோ விசேஷம் நடந்திருக்கிறது. எல்லா இடத்திலும் ஒரே ஆசாமிதான் திருடியிருக்கிறான் என்பதற்கு அறிகுறியாக ஒரே மாதிரி கார்டுகள் கிடைத்தன!

இந்த விவரங்களையெல்லாம் காரில் போகும்போது தினம் ஒன்றாகக் கோபாலன் சாம்புவிடம் சொன்னார். கடைசியில் 'சும்மா கேட்டுக்கொண்டே வருகிறீரே ஒழிய, உதவி செய்கிறேன், கவனிக்கிறேன் என்று ஒரு வார்த்தைகூடச் சொல்ல மாட்டேனென்கிறீரே!' என்று கேட்டார் அவர்.

'வைரமெல்லாம் அதிகப்படிதானே, இன்ஸ்பெக்டர்? அது இல்லாவிட்டால் செத்துப்போக மாட்டார்களே! போனால் போகட்டும் போம்!' என்றான் சாம்பு.

'நாசமாய்ப் போச்சு, ஓய்! பத்திரிகைகள் உம்மைப் போல் சும்மா இருக்கின்றனவா? டிபார்ட்மெண்ட் மானத்தை வாங்குகிறார்களே! போலீஸ் தூங்குகிறதா? என்று தலையங்கமே வருகிறதுங்காணும்!' என்றார் கோபாலன்.

'இதையெல்லாம் உத்தேசித்துத்தான் நான் வேம்புவுக்குக் கூட வைர ஸெட் வாங்காமல் இருக்கிறேன். ஹி, ஹி., அவளானால் என்னைத் தூங்கவிடமாட்டேன் என்கிறாள்!' என்றான் சாம்பு.

இப்படி அசட்டையாக இருந்த அவனையும் ஊக்கப்படுத்தியது ஒரு விஷயம். கார் வாங்கிக் கொடுத்த நித்யானந்த லால் ஸேட் தம் பிள்ளைக்குத் தடபுடலாகக் கல்யாணம் செய்வித்தார். சாம்புவும் வேம்புவுங்கூடப் போயிருந்தார்கள். அற்புதமான விருந்து, தேவகானம் போன்ற இன்னிசை எல்லாம் நடந்தன. மருமகப் பெண்ணுக்குச் செய்திருந்த வைரப் பதக்கத்தை மின்சார வெளிச்சத்தில் பார்த்த சாம்புவுக்கு பத்து நிமிஷம் கண் கூசியே போயிற்று.

மறுநாள் விடியற்காலை ஸேட் அலறிக்கொண்டு சாம்புவிடம் ஓடி வந்தார். பதினாலு காரட் கொண்ட பதக்கம் காணாமல் போய் விட்டது என்று கதறிக்கொண்டே கார்டை நீட்டினார்.

'வைரப் பதக்கம் பலே ஜோர். எல்லாவற்றையும்விட இதுதான் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது.

- சிம்மம்.'

'சாம்பு சார்! நீங்கள் உடனே இதைக் கவனிக்க வேண்டும். ரூபாயைப்பற்றி இலட்சியம் இல்லை. ரொம்ப ரொம்ப ஆசையாக வைரங்களைப் பொறுக்கினேன். போய் விட்டது, சார்! எனக்காகச் சிரமத்தைப் பார்க்காமல் கவனிக்க வேண்டும்!' என்று காலைப் பிடிக்காத தோஷமாகக் கெஞ்சினார் ஸேட்.

'ஆகட்டும் என்றுதான் சொல்லுங்களேன்!' என்று வேம்பு அதட்டியதன் பேரில் சாம்பு தலையை ஆட்டி வைத்தான். ஸேட் திரும்பினார்.

சாம்புவுக்குக் கவலை வந்துவிட்டது. இது விஷயமாக இவன் செய்யக்கூடியது என்ன? ஆனானப்பட்ட இன்ஸ்பெக்டர் கோபாலனே எட்டு வாரமாகத் திணறுகிறாரே!

கோபாலன் ஏதோ தடயம் கிடைத்ததாக ஹைதராபாதுக்கு அவசரமாகப் போனார். போய்வந்தவர் சாம்புவிடம், 'நான் ஒரு விஷயம் கண்டுபிடித்திருக்கிறேன். ஹைதராபாதில் திருட்டு வைரம் வாங்குகிற தொழில் வைத்துக்கொண்டிருக்கிறான் ஒருவன். அவனுக்கு சப்ளை மெட்ராஸிலிருந்துதானாம். அவனைக் கண்காணிக்க ஏற்பாடு செய்துவிட்டு வந்தேன். இங்கே கையெழுத்துப் போடுகிற சிம்மமும் அவனும் கூட்டாளிகள் என்று சந்தேகப்பட, சில அம்சங்கள் தென்படுகின்றன. இருக்கட்டும், பார்க்கலாம்!' என்றார்.

'ஆஹா! பார்க்கலாம்!' என்றான் சாம்பு.

இதற்குள்ளாக இன்னொரு கேஸ் நடந்துவிட்டது. ஆனால் சிம்மம் இங்கே காரியத்தை வழக்கம் போலக் கச்சிதமாகச் செய்துவிடவில்லை. போகிற அவசரத்தில் ஒரு கைக்குட்டையைப் போட்டுவிட்டு ஓடியிருந்தான்! ஸ்தலத்துக்குச் சென்ற கோபாலன், அதைச் சாம்புவிடம் கொண்டு வந்தார். பெயர், சலவை அடையாளம் எதுவுமே காணப்படாத அந்தக் கைக்குட்டையில் ஒரு புதுவித ஸெண்ட் மணம் மட்டும் கம்மென்று வீசியது. 'இதை வைத்துக்கொண்டு கள்ளனைப் பிடித்து விடுகிறேன்!' என்றார் கோபாலன்.

'செய்யுங்கள்!' என்றான் சாம்பு.

அதற்குப் பிறகு மூன்று தினங்கள் கோபாலன் வரவேயில்லை. சாம்பு மூக்கை ஆகாயத்தில் உயர்த்திக் கொண்டு, அந்த வாசனையைத் தான் எங்கே பிடிக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தான்!

'ஏதாவது தகவல் கிடைத்திருக்கிறதா? நீங்கள் பார்க்கிறபோது கிடைக்காமல் போய்விடுமா என்று ஒரே நம்பிக்கை எனக்கு!' என்று கேட்டுக்கொண்டே வந்தார் ஸேட்.

'அவ்வளவு லகுவாக முடியுமா?' என்ற சாம்பு ஸெண்ட் சமாசாரத்தையும் இவரிடம் சொல்லிவிட நினைத்தான். ஆனால், அதற்குள் அவன் வாயடைத்துப் போகும்படியான ஒரு காரியம்

செய்துவிட்டார் ஸேட். தமது சட்டைப் பையில் கைவிட்டு ஒரு கைக்குட்டையை எடுத்து, முகத்தைத் துடைத்துக்கொண்டார். சிம்மம் கைத் தவறுதலாகப் போட்டுவிட்டுப் போன கைக்குட்டையின் ஜோடியாக அது இருந்தது என்பதுடன்கூட, அதிலிருந்து வீசிய மணமும் அதேபோல் இருந்தது!

பின் இந்த ஸேட் யார்? இவர்தான் சிம்மமா? வைர வியாபாரம் என்று சொல்லிக்கொண்டு வைரக் கொள்ளை அடிக்கிறாரோ? தம் வீட்டிலும் நகைகள் களவு போய்விட்டதாகச் சொல்லியது கூட, தம்மீது சந்தேகம் வராமல் செய்துகொண்ட ஒரு யுக்தி தானோ?

சாம்பு யோசனையில் ஆழ்ந்தான். அவன் மூளை வேலை செய்தது. ஹைதராபாத் கொள்ளைக்காரன் ஒருவனுக்கும் சிம்மத்துக்கும் சம்பந்தம் உண்டென்று கோபாலன் சொன்னாரல்லவா? இந்த ஸேட் ஹைதராபாத்தில் இருந்தவரா? அதைக் கண்டுபிடிக்க வேண்டும்.

'என்ன யோசிக்கிறீர்கள்?' என்று கேட்டார் ஸேட்.

சாம்பு சிரிப்பை வரவழைத்துக்கொண்டான். போக்கிரிக்குப் போக்கிரியாக அவன் நடந்துகொள்ள வேண்டும் இப்போது! அவனுக்குத் தெரியாதா என்ன? 'நான் உங்கள் கேஸ் விஷயமாக இன்னும் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. இப்போ நான் என் சொந்தக்காரர் ஒருவரைப் பற்றி யோசித்தேன். வெளியூர்க்காரர் அவர்!' என்றான்.

'எந்த ஊரோ?'

'உங்களுக்கு அவரைத் தெரிந்திருக்க நியாயமில்லை. ஹைதராபாத் அவருக்கு!' என்ற சாம்பு, தான் வெகு சாமர்த்தியமாகப் பேசிவிட்டதாகப் புளகாங்கிதம் அடைந்தான்.

'என்ன ஸார்? அப்படிச் சொல்லிவிட்டால்! நான் பிறந்து நாற்பத்துநாலு வருஷம் வளர்ந்தது அங்கேதானே! உங்களுக்கு யாரைப் பற்றித் தெரியணும்?' என்றார் ஸேட்.

சாம்பு கண்டுபிடித்து விட்டான்! ஸேட்டுக்கும் ஹைதரபாத்துக்கும் சம்பந்தம் உண்டு! முகத்தைச் சிறிதும் மாற்றி வைத்துக் கொள்ளாமலே, 'நான் சொல்லுகிற ஆசாமி ஹைதராபாதுக்குப்

புதுசு. அவன் வந்து மூணே வருஷம் ஆகிறது. நீங்க மெட்ராசுக்கு வந்தே பத்தே வருஷம் ஆகவில்லையா?' என்று சாம்பு சொல்லி, அதோடு பேச்சை முடித்துக் கொண்டான்.

அன்று மாலை கோபாலன் அவசரமாக ஓடிவந்தார். சாம்பு தன் அறையில் நாற்காலியில் குத்திட்டு உட்கார்ந்து, சாவகாசமாக மூக்கைத் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தான்.

பிரதோஷமாகையால் வேம்பு எண்ணெயை எடுத்துக்கொண்டு ஈசுவரன் கோயிலுக்குப் போயிருந்தாள். சுந்துப் பயல் விளையாட்டு மும்முரமாக இருந்தான், வாசலில் எங்கேயோ. வீடே வெறிச்சென்று கிடந்தது.

'இன்ஸ்பெக்டர்! என்ன சமாசாரம்?' என்று கேட்டான் சாம்பு.

'ஒரு பெரிய காரியம் சாதித்து விட்டேன்! திருடனைக் கண்டுபிடிக்கும் தருணம் நெருங்கிவிட்டது! என் கையில் அவன் போட்டோ நெகடிவ் இருக்கிறது. ஹைதராபாத் போலீஸ் செய்த வேலை. இதில் இருக்கிறது சிம்மத்தின் மூஞ்சி!' என்றார்.

சாம்புவுக்கு ஏனோ வெட்கம் வந்துவிட்டது. இத்தனை நாளாகக் கோபாலனை மிஞ்சிக்கொண்டு ஒரொரு கேஸிலும் குற்றவாளியைக் கண்டுபிடித்தது போக, இதில் அவர் இவனை மிஞ்சிவிடுவதா என்ற ரோஷம் வந்தது. 'மிஸ்டர் கோபாலன்! நீங்கள் இப்போது கண்டுபிடித்தீர்கள். நான் காலையிலேயே அதைக் கண்டுபிடித்து விட்டேன். இந்த க்ஷணத்தில் அந்த சிம்மத்தை இங்கே வரவழைக்க முடியும்!' என்றான் அவன்.

இப்படி அழுத்தம் திருத்தமாகச் சாம்பு பேசி கோபாலன் பார்த்தவரே அல்ல. தாம் கண்டுபிடித்த ஆளும் சாம்பு சொல்லும் ஆளும் ஒரே ஆசாமியாக இருக்க முடியுமா?

'அவன் யார் என்று சொல்லலாமா?' என்றார் அவர்.

'உங்கள் கண் எதிரிலே நான் தருவிக்கிறேன். அவனையே ஒப்புக்கொள்ளச் செய்கிறேன். அப்புறம்!' என்றான் சாம்பு.

அஸ்தமனமாகிவிட்டதால், அறையில் வெளிச்சம் மிகக் குறைவாக இருந்தது. நாற்காலியில் சாய்ந்தபடியே சாம்பு ஸ்விட்ச்சைப் போட்டான். அறையில் எங்கும் வெளிச்சம் திடீரென்று நிரம்பியது. அறை மூலையில் டிரைவர் நின்று பம்ப் ஒன்று முடுக்கிக் கொண்டிருந்தது அப்போது தெரிந்தது.

'என்ன டிரைவர்! எப்போ வந்தே நீ? என்ன செய்து கொண்டு இருக்கே அங்கே?' என்றான் சாம்பு திடுக்கிட்டுப் போய்.

'ஒண்ணுமில்லை. டூல் கேஸ் எடுக்க வந்தேன்!' என்றான் அவன்.

'எத்தனை நேரமா நீ நிக்கிற இங்கே?'

'இப்பத்தான் வந்தேன். நீங்க விளக்குப் போடச் சாய்ந்தபோது வந்தேன்!'

சாம்புவுக்கு ஒரு கவலை நீங்கியது. டிரைவர் காதில் பேச்சு விழுந்திருக்காது. 'சரி! நீ போய் நம்ம ஸேட்டிடம் இந்த லெட்டரைக் கொடுத்து, கையோடு கூட்டிக் கொண்டு வா!' என்று சாம்பு காகிதத்தை எடுத்துக்கொண்டு எழுதினான்.

'நண்பர் சேட் அவர்களுக்கு,

நான் காலையில் குறிப்பிட்ட என் ஹைதராபாத் சிநேகிதர் சுமார் நான்கு லக்ஷம் ரூபாய் வரையில் வைர வியாபாரத்தில் போடுவதாக உத்தேசித்திருக்கிறார். கால் மணியில் இவ்விடம் வருகிறார். தங்களிடம் உள்ள சிறந்த வைர நகைகளைக் கொண்டு வந்தால், இங்கே அவர் பார்வையிடத் தயாராயிருக்கிறார். காலையிலே அவர் ஊருக்குத் திரும்புகிறவராகையால் தயவுசெய்து உடனே வரவும்.

சாம்பு.'

டிரைவரிடம் இதைக் கொடுத்தவன், 'கையோடத் திரும்பணும், ஆமாம்!' என்று மறுபடி ஒருமுறை சொல்லி அனுப்பினான்.

கடிதத்தைக் கூடவே படித்து வந்த கோபாலன் ஒரு முறை சாம்புவை விறைத்தார். 'என்னது! ஸேட்டா கொள்ளைக்காரன் என்கிறீர்?' என்றார்.

'பார்த்துக்கொண்டே இருங்கள் வேடிக்கையை! அப்புறம் சொல்கிறேன்!' என்றான் சாம்பு.

'நானே ஒரு சமயம் சந்தேகித்ததுண்டு! திருட்டுகள் நடந்த ஒவ்வோர் இடத்திலும் கூடின விருந்தாளிகள் ஜாபிதா ஒன்று போடச் சொல்லி நான் பார்த்தேன். ஒவ்வொன்றுக்கும் இந்த ஸேட் போயிருந்திருக்கிறார். ஆனால், ஹைதராபாதில் நான் விசாரித்த வரையில் இவரைப் பெரிய மனிதர், நாணயஸ்தர் என்றுதான் சொல்கிறார்கள். நீர் சந்தேகப்படுகிறபடி...'

'பேசாமல் இருங்கோளேன்!'

'உம்ம யோசனையைத்தான் சொல்லுங்கள்! இப்போ ஸேட் உம்ம கடுதாசியை நம்பி வைர நகைகளை அள்ளிக்கொண்டு வருவான். அதில் ஒன்றாவது திருட்டு நகை கலந்திருக்கும் என்கிறதுதானே உம்ம நம்பிக்கை! ஹுஹும்! எமகாதகனாச்சே ஸேட்? அப்படி லகுவாய் உம்ம வலையில் வந்து விழுந்து விடுவானா?' என்றார் இன்ஸ்பெக்டர்.

அவர் அபிப்பிராயம் பிசகென்பது ஒரே நிமிஷத்தில் நிரூபண மாயிற்று. ஸேட் கையில் இரண்டு பெட்டிகளுடன் நுழைந்தார். அவர் பின்னால் டிரைவரும் வந்தான்.

'என்னங்க! இன்ஸ்பெக்டர் ஐயாகூட வந்திருக்காப்லே இருக்கு. எங்கே உங்கள் சிநேகிதர்? இன்னும் வரலையோ?' என்று கேட்டார் ஸேட் உத்ஸாகமாக.

சாம்பு பதில் சொல்லுமுன்பாக, 'ஸேட்ஜி! உமது பெட்டிகளை மேஜைமேல் வைத்துத் திறவுங்கள்! நான் பார்க்க வேண்டும்!' என்றார் கோபாலன்.

அவர் குரலில் சிறிது கடுமை தொனித்ததைக் கவனித்த ஸேட், இதில் ஏதோ மர்மம் இருக்கிறதென்று இரண்டு பேரையும் பார்த்துத் திகைத்தார்.

'பெட்டியைத் திறவுங்கள், ஸேட்ஜி! சீக்கிரம் நடக்கட்டும்! நான் சொன்னது காதில் விழவில்லையா?' என்றார் இன்ஸ்பெக்டர்.

ஸேட் பெட்டியைத் திறந்தார். அந்தச் சமயம் நிமிர்ந்து பார்த்த சாம்பு, டிரைவர் அறையிலேயே தயங்கி நிற்பதைக் கவனித்தான்.

'டிரைவர், நீ போகலாமே!' என்றான் அவன், உடனே.

ஆனால், டிரைவர் நகரவில்லை. ஒரு தினுசாக விறைத்து நின்று, பின் கையைக் கட்டியவாறு அவர்களையே பார்த்தான்.

'போ டிரைவர், வெளியிலே!' என்றார் இன்ஸ்பெக்டர் கோபாலன், கண்களை உக்கிரமாக உருட்டி.

அப்புறம் நடந்ததுதான் எல்லாரையும் திகைக்க வைத்தது.

'நிறுத்து உன் உருட்டலை! என்னை யார் என்று நினைச்சே நீ! ஹும்? நான் எப்போ போவேன் தெரியுமா? அந்தப் பெட்டியை யும் எடுத்துக்கொண்டுதான்!' என்றான் டிரைவர் சவுடாலாக.

'இவனுக்கென்ன பைத்தியம் பிடித்துவிட்டதா?' என்று புருவத்தை நெரித்தார், இன்ஸ்பெக்டர்.

'எனக்குப் பைத்தியமில்லை! உனக்குத்தான் பிடிக்கும், நாளைக்கு நீ உயிருடன் இருந்தால்! நான் யார் என்று தெரியாமலே நீ என்னைப் பிடிக்க முயன்றிருக்கிறாய், இன்ஸ்பெக்டர்! என்னைப் பக்கத்திலே வைத்துக்கொண்டு ஹைதராபாத்துக்கு ஓடினாய்! நான் உன்னை என்றைக்கோ முடித்திருப்பேன்!' என்று சொல்லிக் கொண்டே டிரைவர் பின் கையை வெளியே எடுத்தான். அதில் ஒரு துப்பாக்கி தென்பட்டது. 'ஏ சாம்பு! பயந்து சாகாதே! இந்த சிம்மம் புழுக்களை அடித்துக் கொல்லாது! நீ வெறும் புழு. ஸேட்! நீயும் அதுதான்! ஆனால், இன்ஸ்பெக்டர்! இந்தத் துப்பாக்கியால் உன்னை இன்றைக்குத் தீர்த்து விட்டுத்தான் நான் போகப் போகிறேன்!' என்றான் அவன்.

சாம்பு பல தடவை வாயைத் திறந்து திறந்து மூடினான்.

'நான்தான் சிம்மம்!' இந்த முட்டாள் ஸேட் என்னை அவன் சிநேகிதன் அனுப்பினதாக நினைத்துக்கொண்டிருக்கிறான். ஸேட்! உன் சிநேகிதன் மேல்உலகம் போய்விட்டான். அப்பா! நீயும் அங்கே போனால்தான் அவனைப் பார்க்கலாம்! நீ வைர வியாபாரம் செய்கிற இடமெல்லாம் பழக்கப்படுத்திக்கொண்டு, நீ போகிற கல்யாணத்துக்கெல்லாம் உனக்கு மோட்டார் ஓட்டிக் கொண்டு போய்தான் நான் கொள்ளை அடிச்சேன்!'

சாம்பு உதட்டைக் கடித்துக் கொண்டான். இப்போதல்லவா தெரிகிறது, ஸேட் சென்ற கல்யாணங்களிலெல்லாம் கொள்ளை நடந்ததன் மர்மம்!

'ஏ சாம்பு! நீ எத்தனை சமாசாரத்தைக் காரிலே பேசியிருக்கே இன்ஸ்பெக்டரோட! வண்டி ஓட்டுகிறவனுக்குக் காது, கண் ஒண்ணும் இல்லைன்னுதானே நினைச்சே!'

சாம்பு தவித்தான். கோபாலனைப் பார்க்கவும், அவர் பக்கம் திரும்பவும்கூட அஞ்சினான் அவன்.

டிரைவர் மேலும் சொன்னான்: 'ஸேட்! உன்னை மாட்டிவைக்க பிளான் போட்டேன். உன் [illegible]க்குட்டையை வேணுமென்றே நான் நழுவவிட்டு வந்தேன். இ[illegible]ந்தச் சாம்பு அதை நம்பி உன்னை வைரத்துடன் இங்கே இழுத்தி[illegible]க்கிறது! இதையும் சேர்த்து நான் எடுத்துக்கொண்டு போகிறே[illegible]ன். தேங்க் யூ, சாம்பு! தேங்க் யூ, ஸேட்ஜி!'

கோபாலன் கையைப் பி[illegible]சந்தார். அவரால் அப்போது செய்யக்கூடியது எதுவுமில்லை[illegible].

'சும்மா கையைப் பிசையாதே[illegible], கோபால்! மை டியர் இன்ஸ்பெக்டர்! என் போட்டோவை [illegible]யா கொண்டு வந்திருக்கிறாய் நீ! அதைக் கண்ணால் பார்க்க உ[illegible]க்கு உயிர் இருக்காது, டார்லிங்! சரி, எனக்கு நேரம் ஆகிறது! மா[illegible]பை கொஞ்சம் நீட்டு, தம்பி! ஒன்டு த்ரீ!' என்று போட்டோ எ[illegible]டுப்பவன் தோரணையில் கூறி, டிரைவர் இன்ஸ்பெக்டரைக் கு[illegible]றி பார்த்தான்.

த்ரீ என்றபோது டபார்! என்ற [illegible] பெருஞ்சத்தம் கேட்டது. சாம்பு கண்ணை மூடிப் பல்லைக் கடி[illegible]த்துக்கொண்டு கோபாலன் உடல் சாய்வதை எதிர்பார்த்திருந்தான் [illegible] கன்னங்களை இரு கைகளாலும் அழுத்திக்கொண்டு, அப்பால் [illegible]ரும்பிக்கொண்டார் ஸேட்.

நடந்தது என்னவோ யாருமே [illegible]திர்பாராத வேறு ஒரு விஷயம்!

சாம்பு வீட்டுக் காம்பவுண்டு[illegible]குள் கிரிக்கெட் பழகிக் கொண்டிருந்தான் சுந்து. கடைசிக் கண[illegible]டசி தரமாக ஒரு முறை கையைச் சுழற்றி அவன் வீசின பந்து தி[illegible]சை மாறிப் பறந்தது. சாம்புவின் அறை ஜன்னலின் பச்சைக் க[illegible]ண்ணாடியில் அதிவேகமாக ஒரு தாக்குத் தாக்கி நிற்காமல், உ[illegible]ள்ளே சென்று டிரைவரின் பின் மண்டையில் முட்டி, பின் எழு[illegible]ம்பிக் கீழே விழுந்தது.

துப்பாக்கியை நீட்டிக்கொண்டி[illegible]ருந்த டிரைவர் சிம்மம், தரையில் மடாரென்று சாய்ந்தான்!

சாம்பு சுய உணர்வு பெற்று பா[illegible]த்தபோது, கோபாலன் டிரைவரை ஒரு பெஞ்சியின் மேல் இழுத்[illegible]ப் போட்டுக் கொண்டிருந்தார்.

'சாம்பு! உம்மை நான் மன்னிக்[illegible]க மாட்டேன்! ஒரே வார்த்தையில் டிரைவர்தான் சிம்மம் என்ற[illegible] சொல்லிவிட்டால் நான் நம்ப மாட்டேனா? அதை இப்படி [illegible]ஒரு நாடகமாகக் காட்டி என்னை நடுங்க வைக்க வேண்டுமா? க[illegible]டைசி முனைவரையில் அவனுக்கு

இடம் கொடுத்தீரே! அதுதான் எனக்கு ஆச்சரியம், ஓய்!' என்றார் கோபாலன்.

இதெல்லாம் சாம்புவின் காதில் ஏறிற்றோ என்னவோ! எங்கே சுந்து வந்து, குட்டை உடைத்துவிடுவானோ என்று ஒரே கிலி தான் அவன் மனத்துக்குள் பிரதானமாக இருந்தது. ஆனால், ஜன்னல் கண்ணாடியை உடைத்ததற்காகத் தப்பாமல் அடி விழும் என்று பயந்துபோன சுந்து, வேம்புவின் பெரியம்மா பெண் வீட்டுக்கு ஓடி விட்டான்!

போலீஸ் வேன் வந்து சிம்மத்தை ஏற்றிச் சென்றது. அவன் சட்டைப் பையைச் சோதனை செய்த அழகு சிங்கத்துக்கு, 'டிரைவர்! நீ யாரிடம் தப்பினாலும் என்னிடம் தப்ப முடியாது! ஜாக்கிரதை! ஏ.எஸ்.எஸ்.' என்று சுந்து எழுதிப் போட்டிருந்த கார்டு அகப்பட்டது!' சிம்மமும் ஒரு மிருகம், ஏ.எஸ்.எஸ்.ஸும் ஒரு மிருகந்தான்!' என்று சொல்லிவிட்டு, கமிஷ்னர் சிரித்தாராம்.

மறுநாள் கள்ளனைப்போல் வந்து சுந்துப் பயலை உள்ளே இழுத்துக்கொண்டு போய் சாம்புவின் முன்னால் நிறுத்தினாள் வேம்பு. 'இவன் கிரிக்கெட் பந்தாலே யார் மண்டையோ உடையப் போகிறது என்று அப்பவே சொன்னேனே, சரியாப் போச்சா! இனிமே தொடுவியாடா அதை?' என்றாள்.

'போகிறாண்டி, குழந்தை! நான்கூட இவன் மாதிரி இருந்தபோது இப்படியெல்லாந்தான் அசடாக விளையாடுவேனாம்? எங்கம்மா சொல்லுவாள்!' என்றாள் சாம்பு.

'இப்போ மாத்திரம் என்ன வாழ்கிறதாம்?' என்று கேட்டுவிட்டு உள்ளே போனாள் வேம்பு.

46

பிரம்மஸ்ரீ கோவர்த்தன சிரௌதிகள்

'கோயில் மண்டபத்தில் ஜனத்திரள் பெரிதாகத்தான் இருந்தது. பௌராணிகர் பிரம்மஸ்ரீ கோவர்த்தன சிரௌதிகளுக்கும் உஷ்ணம் ஏறி இருந்தது. 'அடே முட்டாள்!' என்று உரத்து ஒரு கூச்சல் போட்டு நாற்புறமும் பார்த்தார். முன் வரிசைகள் ஒன்றில் உட்கார்ந்து கொண்டிருந்த சாம்பு உடனே தன்னைக் கவனித்துக் கொண்டான். 'ஹே! முட்டாள் மனுஷனே! எத்தனை காலத்துக்கு உன் சரீரத்தில் பிராணவாயுவானது சஞ்சாரம் செய்துகொண்டிருக்கிறதோ, அதுவரையில் தாண்டா சுற்றத்தார்கள் உன்னைக் குசலம் விசாரிப்பார்கள்! எந்த க்ஷணத்திலே ஜீவனாகப்பட்டது வெளிப்பட்டுவிடுகிறதோ, அப்போதே உன்னோடு கொஞ்சிப் பேசி சரசமாடி சல்லாபம் பண்ணி ஆசையோடு ஆலிங்கனம் செய்துகொண்ட உம் சம்சாரங்கூட - உன்னை நெருங்குவதற்குப் பயப்படுவாளடா!' என்றார் கம்பீரமாக.

சபையில் நிசப்தம் நிலவியது. சாம்புவின் மனமும் தீவிரமாக வேலை செய்தது!

எத்தனை வாஸ்தவமான விஷயம் அது! வேம்பு இன்றைக்குக் குலாவுகிறாள்! அப்புறம்?

சிரௌதிகள் மேலும் சொன்னார்: 'ஆகையினாலே ஆச்சாரியாள் சொல்லுகிறார்: ஏ மூடா! கேவலம் பணத்தைச் சேர்த்து வைக்கும் ஆசையை விட்டுவிடு! இது உபயோகப்படாது! உன் கர்மத்தினால் நீ சேர்த்து வைப்பதுதான் உனக்கு உபயோகப்படும்! ஆம்படையாள் போட்டுக்கொண்டிருக்கிற வைர நெக்லஸை அடைமானம் வைத்து மேல் உலகத்திலே ஒரு காரியம் சாதித்துக் கொள்ள முடியாது யமனுடைய கிங்கரன் வந்துவிட்டால், அடே! சித்தே இரு! என் பெண்டாட்டியிடம் அன்பாக ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வருகிறேன். நில்லு! என் பையனுக்காக இந்த உயிலில் ஒரே ஒரு கையெழுத்து நொடியில் போட்டு விடுகிறேன்! பொறு!' என்றால் கேட்பானா? க்ஷணகாலம் தாமசிப்பானா? மாட்டவே மாட்டான்!'

சதஸில் பிளந்த வாய் பிளந்தபடி இருந்தது. 'பார்த்தீர்களா என்ன அற்புதமாகச் சொல்கிறார்!' என்று சாம்புவின் பக்கத்திலிருந்த ஓர் ஆசாமி ரகசியமாக வியந்துகொண்டார்.

இரவு ஒன்பது மணிக்கெல்லாம் உபந்யாசம் பூர்த்தியாகி வீட்டுக்குத் திரும்பின சாம்புவின் மனத்திலும் 'சீ! என்ன வாழ்வு இது!' என்ற எண்ணமே மேல்நோக்கி இருந்தது.

'ஆமாம்! வெளியில் போனால் வீட்டு நினைவே இல்லாமேன்னா போயிடறது! மணியைப் பார்த்தேளா?' என்றாள் வேம்பு.

'உம்!' என்றான் சாம்பு.

'சுருக்க வந்துடுவேள்னு அடையைத் தட்டி வைத்தேன், எட்டு மணிக்கே. ஆறி அவலாப் போயிடுத்து!' என்று இலையைப் போட்டாள் வேம்பு.

என்ன ஆறியிருந்தாலும், வேம்புவின் வளைக்கை அடையைப் பரிமாறி, அதன்மேல் சாம்பாரையும் விட்டபோது, சாம்புவின் மனம் தளர்ந்தது. அப்புறம் சாப்பிட்டுவிட்டுச் சோபாவில் சாய்ந்தவுடன், எதிரில் நின்று வேம்பு வெற்றிலை கிழித்துக் கொடுத்தபோது, 'வேதாந்த விசாரம் இருக்கட்டும். அதெல்லாம் அறுபது வயதுக்கு மேலே வைத்துக் கொள்ளலாம்!' என்று நினைத்தான்.

'அடி வேம்பு. இன்னிக்கு அந்தக் கோவர்த்தன சிரௌதிகள் எடுத்துச் சொல்லியிருக்கிறார் பாரு விஷயம் என்ன அழகாயிருந்தது என்கிறாய்!' என்றான் சாம்பு.

'அவர் ஆம்படையாள் வந்து மத்தியானமெல்லாம் ஒரு புராணமே படிச்சுவிட்டுப் போனாள். நல்ல வேளை, ஞாபகம் வந்தது!'

'என்ன அப்படிச் சமாசாரம்?'

'ரொம்பச் சிரமப்பட்டு, அந்தச் சிரௌதிகள் வாயைக் கட்டி வயத்தைக் கட்டி ஐந்நூறு ரூபாய் சேர்த்து அந்த அம்மாளுக்கு, ஓர் அட்டிகை பண்ணிப் போட்டிருந்தாராம். கழட்டி வைச்சுட்டுக் குளிக்கப் போயிருக்கிறாள்; மாயமா மறைஞ்சுடுத்து அது. அந்த அம்மாள் அழுகிறதைப் பார்த்தால் எனக்குக்கூட அழுகை வந்து விட்டது.'

'போகட்டும்! சிரௌதிகள்தான் தங்கம், வெள்ளி உபயோகம் இல்லைன்னு ஊருக்கெல்லாம் கதை பண்றாரே!' என்றான் சாம்பு.

'ஆனாலும், அந்தக் கோபாலனோடே பழகிப் பழகி உங்கள் நெஞ்சும் கல்லாகத்தான் போயிடுத்து! ஏதோ கதை பண்றதுக்குச் சொன்னார்னா, உடனே அவர் வீட்டில் இருக்கிறதையெல்லாம் வாசலிலே வாரி விட்டுடணுமா?'

'அதை உன்னிடம் வந்து சொல்லுவானேன், அந்த அம்மாள்?'

'நான்தான் கோபாலன் ஷட்டகருக்காக எங்கேயானும் சின்ன ஜாகை ஒழிந்தால் சொல்லுங்கோ என்று அவளைக் கேட்டிருந்தேன். அந்த அம்மாமி, 'எங்காத்திலேயே வைத்துக் கொள்ளு வேண்டி, வேம்பு! ஒரு கடன்காரன் கதவையும் பூட்டிக்கொண்டு, போன இடம் தெரியாமல் போய்விட்டானேடி! போகிற போக்கில் என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டு, கிழங்காட்டமா அட்டிகையையும் கொண்டு போய்விட்டானே! என்றாள். சிரௌதிகளுக்குக்கூட உங்களைக் கண்டு சொல்ல வேண்டுமென்று ஆசையாம். ஆனால், பெரிய மனுஷாளோடே எப்படிப் பேசறதுன்னு பயப்படறாராம்!'

எல்லாப் பெரிய மனுஷர்களுக்கும் உண்டாவதுபோல் சாம்புவுக்கும் இதில் ஓர் ஆத்ம திருப்தி உண்டாயிற்று. அவனுடன் பேச

ஒருவர் பயப்படுகிறார்! சபாஷ்! தானே புன்னகை செய்து கொண்டான்.

'பேசாமே கேட்டுண்டிருக்கேளே!' என்றாள் வேம்பு.

'நான் என்னத்தைடி செய்கிறது? கோபாலனிடம் வேண்டு மானால் சொல்லுகிறேன்.'

'அதுதான் வேண்டாம் என்கிறாள்! போலீஸிலே சொல்லிவிட்டு, இல்லாத கேள்விக்குப் பதில் சொல்லிண்டு, ஸ்டேஷனுக்கு நடையா நடை நடக்கணுமே என்கிறாள்!'

'இருக்கட்டும். நானே சிரௌதிகளைப் பார்த்துப் பேசுகிறேன்.'

'என்ன பேசப்போறேள்?'

'ஆச்சாரியாள் சொன்ன தத்துவங்களிலே சிலதைப் பேசுகிறேன்.'

'பேசாமதானே இருங்கோ! அந்தக் குடியிருந்தவனைக் கண்டு பிடிச்சுக் கொடுத்தாலும் ஏதானும் உபயோகமாக இருக்கும்!'

'அவன் யாரோ?'

'யாரோ என்ன? அடிக்கடி நம்ம தெரு வழியாகத்தான் போவான். சின்னப்பிள்ளைகளுக்கு டியூஷன் சொல்லிக் கொடுக்கிறவன். இரண்டு மாசத்துக்கு முந்தி நம்ம சுந்துவுக்குக்கூடச் சொல்லித் தரேன் என்று கேட்டுண்டு ஒருத்தன் வரவில்லையா?'

'அவனா? அடே!'

'அவனேதான்!'

'சரி. என் கண்ணில் பட்டால், உடனே பிடித்துக் கொடுத்து விடுகிறேன்!' என்றான் சாம்பு.

அந்த ஆசாமியைச் சாம்புவுக்கு நன்றாக ஞாபகம் இருந்தது. அடிக்கடி ஒரு வக்கில் குமாஸ்தாவுடன் போவார். பார்வைக்கு யோக்கியராகத் தோன்றிய அந்தக் கணபதி அய்யரா நகையுடன் ஓடிவிட்டார்?

மறுநாள் காலை வீதியோடு போய்க்கொண்டிருந்த போது, 'ஸ்வாமி! அய்யர்வாள்!' என்ற சத்தம் கேட்டு, சாம்பு பார்த்தான். சின்ன வீட்டுவாசலில் நின்று, கோவர்த்தன சிரௌதிகள்தான்

அவனைக் கூப்பிட்டுக் கொண்டிருந்தார். 'ஏதோ அலுவலாகப் போகிறாற்போல் இருக்கிறது! மன்னிக்கணும்! ஹி, ஹி!' என்றார் அவர்.

சாம்பு மூக்கைத் தடவிவிட்டுக்கொண்டு பக்கத்தில் போனான்.

'நேற்று என்... சம்சாரம் அங்கே ஆத்தில் வந்து சொன்னாளாம்!' என்றார் சிரௌதிகள்.

'ஆமாம்! வேம்புகூட எல்லாம் சொன்னாள். நகை இப்போ கையைவிட்டுப் போயிடுத்துப் பாருங்கோ! அதுதானே கேட்கச் சிரமமாக இருக்கிறது!' என்றான் சாம்பு.

'இதைச் சொல்ல, துப்பறிகிறவன் வேண்டுமா?' என்று நினைத்துக்கொண்ட சிரௌதிகள், 'ஆமாம்னா. ரொம்பவும் சரியான வார்த்தைன்னா. சித்தே உள்ளே வந்து பார்க்கிறேளா?' என்றார்.

சாம்பு துப்புத் துலக்க உள்ளே சென்றான். முற்றத்தில் நின்று கொண்டிருந்த சிரௌதிகளின் தர்மபத்தினி 'வாருங்கோ! வேம்பு கிட்டே சொன்னேன். நல்ல பொண் வேம்பு. கண்ணாலே ஜலம் விடறா. 'அம்மாமி, நீங்க நல்லவளாச்சே' என்கிறாள். என்ன பண்றது, கஷ்டகால வேளை. இவரானால் மனசு ஒடிஞ்சு போயிருக்கார்!' என்றாள்.

சாம்பு, சிரௌதிகளைப் பார்த்தான். பரலோகத்தில் பவுன் துச்சம் என்ற மனோபாவம் கொண்டவர் இகலோகத்தில் அதற்காக இப்படி ஏன் அவதிப்படுகிறார்?

'அடியே பாகீரதி! இவாளுக்கு எங்கே நகையை வைத்தே என்கிற விவரமெல்லாம் சொல்லு. எத்தனையோ பெரிய பெரிய கேஸெல்லாம் துப்பு துலக்கியிருக்கார். இது கொசு மாத்திரம்!' என்றார் சிரௌதிகள்.

சமையலறைக்குள் எட்டிப் பார்த்தான் சாம்பு. முதல்தரமான கத்திரிக்காய் எண்ணெய்க்கறி பண்ணி இறக்கி வைக்கப் பட்டிருந்தது. சாம்புவின் நாக்கில் ஜலம் ஊறியது. வீட்டுக்குப் போனதும் வேம்புவையும் பண்ணச் சொல்ல வேண்டும்!

அறைச்சுவரில் ஒரு கிருஷ்ணன் படம்! அதன்கீழே ஒரு மாடம். அங்கேதான் கடைசியாக நகை வைக்கப்பட்டதாம். சிரௌதிகள்

சம்சாரம் உடனே எடுக்க மறந்திருக்கிறாள். அன்று இரவே குடியிருந்த ஆசாமி அவசரமாக சம்சாரத்துடன் புறப்பட்டுப் போய்விட்டார். பதினைந்து நாளாகியும் ஒரு தகவலும் இல்லை, அவரிடமிருந்து. அதிலிருந்து அவர்தான் கொண்டு போயிருக்க வேண்டும் என்று சிரௌதி தம்பதிகள் ஊகிக்கிறார்கள்.

'அவர் சிநேகிதன் ஒருத்தன் இருக்கிறானே, அவனை விசாரித்தீர்களோ?' என்று கேட்டான் சாம்பு.

'அவனைக் கேட்ட பிறகுதானே சந்தேகமே வலுக்கிறது? இந்தக் கணபதி அவனுக்கே அறுநூறு வரையில் கடன் தர வேண்டுமாம். அவனுந்தான் தேடிக் கொண்டிருக்கிறான்!'

'ஓஹோ!'

'உங்களுக்கு ஏதானும் தென்படுகிறதோ?' என்று கேட்டாள் சிரௌதிகளின் தர்மபத்தினி.

'ஓர் அல்ப ஜந்து இதைக் கொத்திக்கொண்டு போய்ப் பதுங்கிக் கொண்டிருக்கிறது! அதையும் விடாமல் பார்த்து விடுவோம்!'

'அதைச் சொல்லுங்கள்! மகா அல்பம் அவன்! அவன் பெண்டாட்டியும் அப்படி! ஐயோடி இந்த ஜன்மத்துக்கு இனிமே குடியே வைக்க வேண்டாம்டி!' என்றாள் பார்யாள்.

மறுநாள் காலையிலே சிரௌதிகள் சாம்புவைத் தேடிக்கொண்டு வந்தார். 'ஓர் ஆச்சரியம் நடந்திருக்கிறது! கேளுங்கள், சாம்பு. நேற்று ராத்திரி நானும் என் சம்சாரமும் வீட்டைப் பூட்டிக் கொண்டு கோயிலுக்குப் போயிருக்கிறோம். யாரோ திருடன் சுவர் ஏறிக் குதித்து வீட்டைக் குடைஞ்சிருக்கான். முக்கியமாக அந்தக் கணபதி அய்யர் பூட்டிவிட்டுப்போன அறையையும் குடைந்திருக்கிறான்' என்றார்.

'அதெப்படி உங்களுக்குத் தெரியும்?'

'நம்ம சமையல் அறைக் கதவை இவள் வெறுமனே தாழ்ப்பாள் போட்டு வந்திருக்கிறாள். போய்ப் பார்த்தபோது, அது திறந்து கிடக்கிறது! கணபதி அய்யர் அறைக்குள் சாவித் துவாரத்தில் பார்த்தால், எல்லாச் சாமான்களும் அலங்கோலமாக உருட்டிக் கிடக்கிறது.'

'இதுக்கு முந்தி இப்படி இறைந்திருக்கவில்லையோ?'

'இல்லைன்னா! நான் சாவித் துவாரத்திலே முன்னே ஒரு தரம் பார்த்திருக்கிறேன்! நம்ம வாடகைப் பாக்கி வர வேண்டி இருக்கே! ஹிஹி!' என்றார் அவர்.

'ஆச்சரியமான்னா இருக்கு!' என்றான் சாம்பு.

'ஆச்சரியமாத்தான் இருக்கு!' என்றார் அவர்.

சாம்பு மூக்கை உருவி விட்டுக் கொண்டான். 'சரி, நான் கவனிக்கிறேன்!' என்று அவரை அனுப்பினான். ஆனால், சிரௌதிகள் சாம்புவை விடுபவராக இல்லை. மூன்று வேளையும் அவனைத் தரிசித்துவிட்டுப் போனார். இந்த உபத்திரவம் தாங்க மாட்டாமல் சிரௌதிகளுக்கு, தானே ஓர் அட்டிகை செய்து கொடுத்துவிடுகிறதென்று சாம்பு கிட்டத்தட்டத் தீர்மானித்து விட்டான்!

இந்த சந்தர்ப்பத்தில்தான் சாம்புவுக்கு ஓர் அவசர ஜோலி ஏற்பட்டது. வேம்புவின் மாமா பிள்ளை வெங்குட்டுவுக்குக் கல்யாணம் நிச்சயமாகப் போகிறதென்றும், பெண் பார்க்கிறதற்கு வேதாரண்யத்துக்கு அருகில் உள்ள கத்திரிப்புலத்துக்குப் போகிறார்கள் என்றும் கடுதாசி வந்தது. 'சாம்புவும் வேம்புவும் வந்தால் தங்களுக்குக் கௌரவமாக இருக்கும்' என்று மாமா மிகவும் வேண்டி லெட்டர் போட்டிருந்தார்.

'என்னால் ஓர் இடத்துக்கும் வர முடியாது! எனக்கு வரவரத் தள்ளவே இல்லை!' என்றாள் வேம்பு.

'பின்னே என்னையா போகச் சொல்றே? உன் மாமா பிள்ளை என் மண்டையைக் கண்டதும் கல்லைத் தேடுவானேடி?'

'போய்த்தான் ஆகணும். வெங்குட்டுவிடம் என்ன பயம்? அவனைக் கண்டு மிரளாமல் தைரியமாக இருங்கோ. ஒண்ணும் பண்ண மாட்டான்!' என்றாள் அவள்.

இரண்டு தினங்களுக்குச் சிரௌதிகளின் தொல்லையாவது இல்லாமல் இருக்கட்டுமென்று சாம்பு போவதற்குச் சம்மதித்தான்.

திருத்துறைப்பூண்டியில் இறங்கி, கட்டை வண்டியில் ஒன்பது மைல் பிரயாணம் செய்து, இரவு ஏழரை மணிக்கு, காடாரம்பமான கத்திரிப்புலம் போய்ச் சேர்ந்தான் சாம்பு. பெண் வீட்டை விசாரிக்கும் நோக்கத்துடன், முதலில் தென்பட்ட ஒரு வீட்டில்

நுழைந்து, 'ஸார்!' என்று குரல் கொடுத்தான். ஓர் ஆசாமி அரிக்கன் லாந்தருடன் வந்து நின்றார். அவரைப் பார்த்த சாம்பு ஒரு நிமிஷம் வெலவெலத்துப் போய்விட்டான். அந்த ஆசாமியுங்கூடத் திடுக்கிட்டார். ஏனென்றால், சிரௌதிகள் வீட்டிலிருந்து அவசர மாக வந்த கணபதி அய்யர்தான் அவர்!

உள்ளே ஒரு மேஜை போட்டு அதில் உட்கார்ந்து எழுதிக்கொண் டிருந்திருக்கிறார் என்பதற்கு அறிகுறியாகப் பெரிய ரிஜிஸ்டர்கள் தென்பட்டன. இந்தக் குக்கிராமத்துக்கு வந்து இவர் என்ன செய்கிறார்? என்னத்தை விழுந்து விழுந்து எழுதுகிறார்?

'சாம்புவா? என்னைத் தேடிக்கொண்டா வந்துவிட்டீர்கள் நீங்கள்?' என்றார் கணபதி அய்யர்.

'ஹி! ஹி! அப்படித்தான் வைச்சுக்குமேன்!' என்றான் சாம்பு.

'ஒருநாள் இல்லாவிட்டால் ஒரு நாள் வரும் என்று எனக்குத் தெரியும். என் ஆம்படையாளும் சொன்னாள்!' என்றார் கணபதி அய்யர்.

'என்ன வரும்? என்ன சொன்னாள் உங்கள் மனைவி?' என்றான் சாம்பு. ஒன்றுமே தெரியாததுபோல் இப்போது பாவிப்பதுதான் சரி என்று தோன்றியது அவனுக்கு.

'உங்களுக்குத் தெரியாதா? அப்போது நீங்கள் வந்த காரியம்?' கணபதி அய்யர் திகைத்தார்.

'என் சம்சாரத்தின் மாமா பிள்ளைக்குப் பெண் பார்த்திருக் கிறார்கள். அதற்காக நான் வந்தேன். வீடு விசாரிக்கத்தான் இங்கே நுழைந்தேன்.'

கணபதி அய்யரின் முகத்தில் ஒரு பெரிய கவலை நீங்கிவிட்ட குறி தென்பட்டது. 'நான் என்னவோ என்று நினைத்துவிட்டேன். என் ஒய்ஃபுடைய பாட்டிக்குத் தேக அசௌக்கியமா இருந்தது. அவளைப்பற்றித்தான் தகவல் கொண்டு வருகிறீர்களோ என்று பயந்து விட்டேன்!' - கணபதி அய்யர் புளுகுகிறார் என்பதை ஒரு முட்டாள்கூட ஊகித்து விடலாம். ஆகவே, சாம்புவும் அதைத் தெரிந்து கொண்டான்.

கணபதி அய்யர் சாம்புவை வாசல்வரை அழைத்து வந்தார். 'ஒரு சின்ன சமாசாரம்! உங்களை நான் கேட்டுக்கொள்வது இதுதான்.

என்னை இந்த ஊரில் இந்த இடத்தில் பார்த்ததாக இன்னும் இரண்டு மாத காலத்துக்கு நீங்கள் வெளியிடக் கூடாது. இது என் வேண்டுகோள்!' என்றார் அவர்.

இதைக் கேட்டதும் சாம்புவுக்கு இருந்த கொஞ்சநஞ்ச சந்தேகமும் போய்விட்டது. நகையைத் திருடிவிட்டு ஒளிகிறார் என்பதற்கு வேறு என்ன ருசு வேண்டும்?

'நான் எதற்குச் சொல்லப் போகிறேன்?' என்றான் சாம்பு.

'இல்லை. ஞாபக மறதியாகக்கூடச் சொல்லிவிடக் கூடாது. இல்லாவிட்டால் என் பிழைப்பே போய்விடும்!'

'ஒருகாலும் மாட்டேன்!' என்று அடித்துப் புளுகினான் சாம்பு.

வெங்குட்டுவுக்கு வாய்க்கவிருந்த பெண்ணைச் சாம்பு பார்த் தான். தற்கால மாப்பிள்ளைகள் மோஸ்தரில், ஸதிர் பண்ணத் தெரிந்த பெண்ணாக இருந்தால்தான் கல்யாணம் செய்துகொள்ள முடியுமென்று ஒரு காலால் நின்றவன் வெங்குட்டு. அந்தப் பெண் நடப்பதே ஒரு மாதிரி வாத்து நடையாக இருக்கவே, உடனே கல்யாணத்துக்குச் சம்மதித்தான். வந்த காரியம் ஆனவுடனேயே, அவசரமாக சாம்புவும் பட்டணத்துக்குத் திரும்பினான்.

வந்தவுடனே நேரே சிரௌதிகளிடம் போய், சமாசாரத்தைச் சொல்லி விடுவோமா என்று முதலில் தோன்றியது. ஆனால், அவரால் என்ன செய்துவிட முடியும்? கேஸ் கொடுக்காத வரையில் கோபாலனும் செய்வதற்கொன்றுமில்லை. 'ஆம்! அறுநூறு ரூபாய் நஷ்டப்பட்ட நண்பன் வக்கீல் குமாஸ்தா காதில் போட்டுவிடுவதுதான் சரி!' என்று பட்டது சாம்புவுக்கு.

அன்று மத்தியானம் கோபாலனிடமிருந்து கடிதம் ஒன்று கொண்டு வந்திருந்த கான்ஸ்டபிள் மருதையை அனுப்பி வக்கீல் குமாஸ்தாவை வீட்டுக்கு வரவழைத்தான் சாம்பு. குமாஸ்தாவும் பறந்துகொண்டு வந்துவிட்டான்.

'உட்காருங்கள், அந்த நாற்காலியில்!' என்றான் சாம்பு.

வக்கீல் குமாஸ்தா நாற்காலி முனையில் அச்சப்பட்டு உட்கார்ந் தான். உயரே மாட்டியிருந்த ஒரு கண்ணாடியின் வழியே ரேழிக்கு அப்பால் நின்ற கான்ஸ்டபிளின் தொப்பியின் பிரதி பிம்பம் அவனுக்குத் தெரிந்து கொண்டிருந்தது.

சாம்பு மூக்கை உருவி விட்டுக்கொண்டான். தான் எதேச்சையாகக் கண்டுபிடித்த ஒரு விஷயத்தை சிரமம் எடுத்துச் செய்ததாகக் காட்டிப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று அவனுக்கு ஓர் ஆசை உண்டாயிற்று. 'ஒரு விஷயம் - முக்கியமான விஷயம். உங்களிடம் கலந்துகொண்டு செய்ய உத்தேசித்திருக்கிறேன். இது போலீஸில் எட்டி வெளியே சிரிக்க வேண்டாம். காதும் காதும் வைத்தாற்போல் முடிந்துவிடட்டும் என்பது என் அபிப்பிராயம்!' என்றான்.

குமாஸ்தா மேலே கண்ணாடியை ஒருமுறை பார்த்துக்கொண்டு, 'உம்!' என்றான்.

'இதுவரை உங்களுக்கு நான் சொல்லி அனுப்பாத காரணம், நீங்களாகவே வருவீர்கள் என்று நான் எண்ணியதுதான். ஆனால், இனிமேலும் தாமதிப்பதில் உபயோகம் இல்லை. எனக்கு எல்லாம் தெரியும்.'

'உம்.'

'இதற்காக ஒரு முறை நான் கத்திரிப்புலம் போய், கணபதி அய்யரைப் பார்த்துப் பேசிவிட்டும் வந்திருக்கிறேன்!'

'உம்.'

'அவரோ உங்கள் நண்பர். நீர் அவருக்குத் துரோகம் செய்கிறதோ அவர் உமக்குச் செய்கிறதோ சரியில்லைதான்! என்ன! நானே கோபாலனிடம் ஒரு வார்த்தை சொல்லி, காரியத்தை நடத்தி விடட்டுமா? அல்லது நீங்களாகவே காதும் காதும் வைத்தாற்போல்...'

குமாஸ்தா கண்ணாடி வழியாகப் பார்த்தான். கான்ஸ்டபிள் ஆணி அடித்தாற்போல் நிற்கிறான்!

'சாம்பு ஸார்! பாம்பின் வாயில் அகப்பட்ட தேரை என்றைக்காணும் தப்பினது உண்டா? நான்கு நாள் முந்தி நீங்கள் சிரௌதிகள் வீட்டுக்குப் போனவுடனேயே எனக்கு அழைப்பு வந்துவிடும் என்று எதிர்பார்த்தேன்!' என்றான் குமாஸ்தா.

'என்னைப் புகழுகிறது இருக்கட்டும். மேலே நடக்கிறது...'

'இவ்வளவு தூரம் நீங்கள் கண்டுபிடித்த பிறகு நான் வீணாக மறைத்து வைப்பதில் உபயோகம் இல்லை. நான்தான் கணபதி

அய்யரை அனுப்பினேன். மாசம் இருநூறு ரூபாய் சம்பளம் கொடுப்பதாக, ஆசை காட்டி, மூன்று மாசத்துக்கு அந்தக் கிராமத்துக்கு அவரை அனுப்பினேன்!'

சாம்பு நிமிர்ந்து உட்கார்ந்தான். 'ஏதோ புதிய சமாசாரம் அல்லவா சொல்கிறான் இந்தக் குமாஸ்தா?'

'இருபதாயிரம் வருகிற இடத்தில், அறுநூறு ரூபாய் போனால் என்ன என்கிற எண்ணந்தான் எனக்கு! என் பெயரில் அவர் ஒரு லாட்டரிச் சீட்டு கட்டினார். முதல் பிரைஸ் இருபதாயிரம் அந்தச் சீட்டுக்குத்தான் வந்துவிட்டது! எனக்கு லெட்டர் கிடைத்திருக் கிறது. பட்டணத்தில் இருந்தால் எப்படியும் அவர் காதில் பட்டுவிடும். பணத்தை அவருக்குக் கொடுக்கவேண்டி வந்து விடும் என்று இருநூறு ரூபாய் சம்பளம் பேசி, மூன்று மாதத்துக்கு அவரைக் கண்காணாத ஊருக்கு அனுப்பினேன். மனுஷன் நம்பிப் போனார். அப்படிப் போனதால் அவர் பேரில் அட்டிகை எடுத்ததாக ஓர் அபவாதங்கூட ஏற்பட்டிருக்கிறது! ஆனால், அந்த டிக்கெட்டை எங்கேயோ வைத்துவிட்டுப் போய்விட்டார். என் கையில் அது அகப்படவில்லை. அவர் ஜாகையில்கூடத் தேடிப் பார்த்துவிட்டேன்!'

சாம்பு மூக்கை உருவினான். எல்லாம் புது விஷயங்கள் அவனுக்கு! 'அப்புறம்?' என்றான்.

'நான்தான் ஒப்புக்கொண்டுவிடுகிறேனே! கணபதி அய்யரே பிரைஸை வாங்கிக்கொள்ளட்டும் ஸார்! போலீஸிடம் மட்டும் என்னைக் காட்டிக்கொடுத்து விடாதீர்கள்!' என்று பல்லைக் காட்டிக் கெஞ்சினான் குமாஸ்தா.

'ஓஹோ! கான்ஸ்டபிள் நிற்பதால் இப்படி உண்மையை வரவழைத்துவிட்டது!' என்று சாம்பு நினைத்துக்கொண்டு, 'கான்ஸ்டபிள்! நீ ஏன் நிற்கிறாய் இன்னும்?' என்றான்.

'இன்ஸ்பெக்டருக்கு ஏதானும் பதில் கொடுக்கிறீங்களா?'

'அதுதான் அப்பவே இல்லை என்றேனே!' என்றான் சாம்பு.

மறுநாளைக்கு மறுநாள், கத்திரிப்புலத்திலிருந்து திரும்பிய கணபதி அய்யர் சாம்புவைத் தூஷித்துக் கொண்டே வந்தார். 'எனக்குப் பெரிய சம்பளத்தில் கிடைத்த லகுவான வேலையைக் கெடுத்தான் பாபி!' என்றார் அவர்.

'ஓய்! அறுநூறு ரூபாயோடு திருப்திப்பட்டுவிடுகிறீரா! உமக்குப் ப்ரைஸ் விழுந்திருக்கிறதுங்காணும்! 20,000 ரூபாய்! எடும் டிக்கெட்டை!' என்றான் சாம்பு.

கணபதி அய்யர் தமது கிழிசல் மணிபர்ஸைத் திறந்து டிக்கெட்டை எடுத்தார். 'இது இங்கே இருக்கும்போது உம்ம ஜாகை எல்லாம் சோதனை போட்டால் எப்படிக் கிடைக்கும்?' என்றான் சாம்பு.

கணபதி அய்யர் வீட்டில் பலமான விருந்து நடந்தது சாம்புவுக்கு. 'சாம்பு ஸார்! நீங்கள் மட்டும் கவனித்திராவிட்டால், என் சிநேகிதன் 20,000 ரூபாயுடன் கம்பி நீட்டியிருப்பான்!' என்றார் அவர்.

தமது பிரைஸ் பணம் கையில் கிடைத்தவுடன் சிரௌதிகளுக்கு 500 ரூபாய் கொடுப்பதாகக் கணபதி அய்யர் தாராளமாகச் சொன்னார். ஆனால், அதற்கு இடமே வைக்காமல் சாம்புவின் பிள்ளை சுந்து தன் தங்கப் பித்தானை அன்றே அந்த வீட்டில் ஓர் எலி வலைக்குள் போட்டுவிட்டான். சாம்பு அந்த வளையைத் தோண்டும்படி ஏற்பாடு செய்தபோது, அதனுள்ளிருந்து காணாமற்போன அட்டிகை வெளிப்பட்டது! சிரௌதிகளின் பார்யாள் மறைவாக வைத்திருந்த சங்கிலியை ஓர் எலி இழுத்துக் கொண்டு போய் அந்த வளையில் போட்டிருந்தது! சுந்துவும் தன் பித்தானை யாரும் பார்க்காத சமயம் எடுத்துக்கொண்டான்.

'இந்தச் சாம்பு அன்றைக்கே, அல்ப ஜந்து கொத்திக் கொண்டு போய் எந்த வங்கியில் பதுக்கியிருக்கிறதோ? என்றாரே!' என்றாள் சிரௌதிகளின் பார்யாள்.

இதற்கெல்லாம் ஒரு வாரத்துக்குப் பிறகு, சிரௌதிகளின் உபந்நியாசம் கேட்டுவிட்டு வந்த சாம்பு, வேம்புவுடன் வேடிக்கையாக வேதாந்தம் பேசினான்: 'அடி வேம்பு! என்ன வாழ்க்கை இதடி! மனைவி யார்? புத்திரன் யார்? நீ எங்கிருந்து வந்தாய்? என்றெல்லாம் யோசித்துப் பார்த்தால் ஒன்றுமே இல்லையடி!' என்றான்.

'ஒன்றும் இல்லாமல் போவானேன்? உங்களுக்குப் பெண்டாட்டியும் பிள்ளையும் இல்லாவிட்டால் ஏது இத்தனை வாழ்வு என்கிறேன்!' என்றாள் வேம்பு கடுமையாக.

'வேடிக்கைக்குச் சொன்னேன்டி! கோவிச்சுக்காதேடி!' என்று கெஞ்சிக் கொஞ்சினான் சாம்பு.

47

சிபாரிசுக் கடிதம்

இன்ஸ்பெக்டர் கோபாலன் சொந்தக் காரியமாகக் கோயமுத்தூருக்குப் போயிருந்தார். திரும்பி வர ஒரு வாரமாவது பிடிக்குமென்று சொல்லிவிட்டுப் போனார். 'அப்பாடா! சாம்புவுக்கு எனக்கும் ஒரு வாரம் விசாரம் இல்லை!' என்றான் சாம்பு.

கோபாலன் போன மூன்று தினங்களுக்குப் பிறகு சாம்புவுக்கு அவரிடமிருந்து ஒரு லெட்டர் வந்தது. க்ஷேம சமாசாரங்களை விசாரித்துவிட்டு, 'எப்போது சம்சாரத்தை டெலிவரிக்கு அனுப்பப் போகிறீர்? கும்பகோணம் போய் வரும்போது ஞாபகமாக நல்ல இஞ்சியாகக் கொஞ்சம் வாங்கி வாரும். இந்த ஊரிலிருந்து சென்னைக்கு ஒரு பெரிய பேர்வழி புறப்பட்டு வருகிறார். அவர் வருவது அதிரகசியம். உம்மைப்பற்றி நன்றாகக் கேள்விப்பட்டு தான் வருகிறார். பார்த்தால் சாது போல்தான் இருப்பார். ஆனால், கொலை, கொள்ளை, போர்ஜரி இந்த மாதிரி விஷயங்களில் அவரிடம் பிக்ஸ்சர் வாங்க வேண்டும்! ராஜ மஹேந்திரபுரத்தில்

தமிழ் சங்கம் கொழும்பு நூலகம்

மூன்று வருஷம் இருந்த பேர்வழி. ஜாக்கிரதையாகப் பழகவும்!' என்று எழுதியிருந்தார்.

சாம்பு வழுக்கையைத் தடவிக் கொண்டான். ஊரில் எவனாவது கொள்ளைக்காரப் பயல் வந்தால் என்னிடந்தானா வரவேண்டும்? நான் என்ன மியூசியமா? அக்வேரியமா? என்று அலுத்துக் கொண்டான் சாம்பு. பிறகு, கடுதாசியை பிறர் கண்ணில் படாமல் கிழித்து, அப்போது ஏதோ காரியமாக வந்திருந்த கான்ஸ்டபிள் ஆராவமுதுவின் கையில் கொடுத்து, வாசலில் போடச் சொன்னான். ஆராவமுது ஆகட்டுமென்று அதைப் பையில் போட்டுக் கொண்டான்.

அன்று மத்தியானமே கோபாலன் குறிப்பிட்ட ஆசாமி சாம்புவைப் பார்க்க வந்துவிட்டான். சுமார் முப்பது முப்பத்திரண்டு வயது தான் இருக்கும். ஒல்லியான சரீரம். தீட்சண்யமான கண்கள். 'குட்மார்னிங், மிஸ்டர் சாம்பு! உங்களைப்பற்றி கேள்விப்பட்டேன். பார்த்துவிட வேண்டுமென்று அவா. பார்த்தாகிவிட்டது. நான் வந்திருக்கிற காரியம் உங்களுக்குத் தெரிந்துவிடும், சீக்கிரத்தில்!' என்றான்.

'உங்களைப்பற்றியும் கேள்விப்பட்டேன். கோபாலன் எழுதியிருக்கிறார்!' என்று நிறுத்திக்கொண்டான் சாம்பு. திருட்டுப் பயலுக்கு என்ன துணிச்சல்!

'ஒரு காலத்தில் கோபாலனுக்கு எதிராகவே நான் வேலை செய்திருக்கிறேன். என்ன போலீஸ், ஸார்! எனக்குத் திருப்தி இல்லை. சக்தி இருக்கிறது; அதோடு மூளையையும் உபயோகிக்க வேண்டும். இப்போ பாருங்கள், உங்கள் மூளை போலீஸ் சக்தியுடன் சேர்ந்து எப்படிப் பிரகாசிக்கிறது!' என்றான் வந்தவன்.

சாம்பு சிரித்துக் கொண்டான். 'போக்கிரிக் கள்ளன். குல்லா போடுகிறான்!' என்று நினைத்தான்.

'நான் வருகிறேன், பிற்பாடு சந்திக்கிறேன்!' என்று அவன் பளிச்சென்று எழுந்து போனான்.

பிற்பாடு அவனைச் சந்திக்க வேண்டிய சந்தர்ப்பம் மறுநாளே வரும் என்று சாம்பு எதிர்பார்க்கவில்லை.

இரண்டு விஷயங்கள் சாம்புவுக்குப் பிடிக்காதவை. ஒன்று - வேம்பு பக்கத்தில் இல்லாமல் டிராமா, சினிமா முதலியவற்றுக்குப் போவது; இரண்டாவது - பரத நாட்டியக் கச்சேரியில்

முன் வரிசையில் உட்கார்ந்து கொள்ளுவது. அப்படி ஒரு சமயம் முன்பு உட்கார்ந்து அவன் பட்ட சங்கடம் அவனுக்குத்தான் தெரியும். நடனமாடிய பெண், ஒவ்வொரு தடவையும் முன்னால் நாலடி வந்து, முகத்தில் வேதனையுடன் மார்பில் ஒரு கையை வைத்து அழுத்திக்கொண்டு, மற்றொரு கையால் எதிரில் இருப்பவரை அழைப்பதுபோல் அபிநயம் செய்தாள். அந்தப் பெண், தன்னையே பார்ப்பது போலவும் அழைப்பது போலவும் சாம்புவுக்குத் தோன்றி, திண்டாடி விட்டான் மனுஷன்.

இந்த இரு விஷயங்களிலும் சாம்பு அன்று தன் உறுதியைத் தளர்த்திக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. சிந்தாதிரிப் பேட்டை அமெச்சூர்கள் நடித்த 'பகல் கொள்ளைக்காரன்' என்ற சமூக நாடகத்துக்கு அவன் வேம்பு இல்லாமலே போனான். 'எனக்கு வரவர உடம்பு தள்ளவே இல்லை! நீங்களே போய்ப் பார்த்துவிட்டு வந்து, எப்படி இருக்கிறதென்று சொல்லுங்கள், போதும்!' என்று சொல்லி விட்டாள் அவள். முன் வரிசைகள் ஒன்றில்தான் சாம்பு உட்கார்ந்துகொள்ள வேண்டி வந்தது. நாடக மத்தியிலே, ஒரு மாது நடனம் செய்கிறாள். இதை உபயோகித்துக் கொண்டு சபை நிர்வாகிகள் ஒரு சிறு நடனக் கச்சேரியையே ஏற்பாடு செய்துவிட்டார்கள். சாம்பு திணறினான். சபையில் வேறு யாரேனும் எழுந்து வெளியே போனால், கூடவே தானும் போய்விடலாமென்று நாற்புறமும் பார்த்தபோது அவன் எதிர்பார்த்த காரியமும் நடந்தது! அவனுக்குப் பின் சீட்டிலிருந்த ஒரு மனிதன் அவசரமாக எழுந்து வெளியே சென்றான். சட்டென்று கூடவே எழுந்துவிட்டான் சாம்புவும். அரிய சந்தர்ப்பம் ஆயிற்றே! கூடவே விடுவிடுவென்று வெளியே வந்தான். தன்னையும் அறியாமல் முதலில் சென்றவன் பின்னாலேயே வேகமாகச் சிறிது தூரம் நடந்தான். வெளியே வந்து, சாரி சாரியாக நின்ற கார்களைத் தாண்டிக்கொண்டு சென்றான் பேர்வழி. சாம்புவும் விடாமல் பின் தொடர்ந்தான்.

தொலைவில் இரண்டு மூன்று கான்ஸ்டபிள்கள் உட்கார்ந்து சிகரெட் பிடித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களை நெருங்கும் போது முன்னால் சென்றவன் சட்டென்று திரும்பி, சாம்புவின் கையைப் பற்றினான். 'ஸார்! உங்களால் ஓர் உபகாரம் ஆக வேண்டும்! இந்தச் சிறிய பாக்கெட் உங்களிடம் இருக்கட்டும். நான் பிற்பாடு வந்து வாங்கிக் கொள்கிறேன்!' என்றான் அவன்.

'நீ யார்? இது என்ன பாக்கெட்? என்னை உனக்கெப்படித் தெரியும்?' என்றான் சாம்பு, அதைக் கையில் பிடிக்காமலே.

'உங்களைத் தெரியும் எனக்கு! பேசிக்கொண்டு நிற்க அவகாசம் இல்லை. பிடியுங்கள்! வெளியில் காட்ட வேண்டாம்!' என்று அதைப் பையில் திணித்துவிட்டு, இருட்டில் மறைந்துவிட்டான் அவன். சாம்பு திகைத்துப் போய் நின்றான். அவன் முன்பின் பார்த்திராத ஆசாமி, ஒரு பொறுப்பை அல்லவா அவன்மீது சுமத்திவிட்டான்.

இந்தப் பெரிய பொறுப்பு சீக்கிரமே அவனுக்கு நீங்கிவிட்டது. திரும்பி வந்துகொண்டிருந்த சாம்புவை, மெல்ல யாரோ தட்டினார்கள். இரண்டு கார்களுக்கு மத்தியில் அவன் அப்போது சென்றுகொண்டிருந்தான். 'டேய்! இப்போது வாங்கிக்கொண்ட பாக்கெட்டை எடு இப்படி!' என்றான் நிழலில் நின்ற ஓர் ஆசாமி.

'ஏன்?' என்றான் சாம்பு.

'ஏன் என்று என்னை யாருமே கேட்பதில்லை!' என்று அவன் சாம்புவின் பையில் கையைவிட்டு அதை எடுத்துக்கொண்டு, மின்னல்போல் ஒரு மோட்டாரினுள் பாய்ந்தான். மோட்டார் கிளம்புவதையாவது தடுப்போம் என்று சாம்பு ஒரு தாவலில் அதன் முன்னால் போய் நின்று மறித்தான். ஆனால் ஒரு பக்கம் கதவைத் திறந்துகொண்டு ஏறின அவன், இன்னொரு பக்கக் கதவின் வழியாக வெளியே குதித்து, குனிந்தாற் போலவே ஐந்தாறு மோட்டார்களைத் தாண்டி மாயமாக மறைந்து விட்டான். சாம்பு காத்துக்கொண்டிருந்ததுதான் வியர்த்தம்.

நாடகத்தில் மீண்டும் வந்து உட்கார்ந்தான் சாம்பு. ஆனால், நாடகம் அதற்குமேல் அவனுக்கு ருசிக்கவில்லை. பக்கத்தில் நின்றுகொண்டிருந்த கான்ஸ்டபிள் ஆராவமுது சாம்புவை உன்னிப்பாய்க் கவனித்து, 'என்னங்க! யோசனை செய்றீங்களே!' என்று கேட்டான்.

'ஒரு யோசனையுமில்லை!' என்றான் சாம்பு. அவன் மனம் தீவிரமாக வேலை செய்தது. தன்னிடமிருந்து பாக்கெட்டைப் பிடுங்கிக்கொண்டு போன ஆசாமி, ஒரு கால் காலையில் வந்து சந்தித்த கோயமுத்தூர்ப் பேர்வழியாக இருக்குமோ? நினைக்க நினைக்க, அவனுக்கு இந்தச் சந்தேகம் வலுத்தது.

கான்ஸ்டபிள் ஆராவமுது மேலும் தொடர்ந்து, 'ஏதானும் மனக் கஷ்டம் இருந்தால் சொல்லுங்க! வீட்டுக்கு வேணா கூட வரேனுங்க!' என்றான் பரிவுடன்.

'நீ சும்மாயிரு! வரத் தேவையில்லை!' என்றான் சாம்பு கடுமையாக.

ஆனால் வீட்டுக்குப் போனதுமே, 'கான்ஸ்டபிள் வந்திருந்தால் கூடத் தேவலை போலிருக்கிறதே!' என்று எண்ணும்படி நடந்தது ஒரு காரியம். வாசல் கதவைத் தட்டவில்லை இன்னும். கேட் அருகே ஒங்கிச் செழித்து வளர்ந்திருந்த மல்லிகைச் செடியின் பின்னாலிருந்து ஒருவன் வந்தான்.

'ஸார்! ஒரே நிமிஷம்! அந்தப் பாக்கெட்டைத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள்!' என்றான்.

'எந்தப் பாக்கெட்?'

'தியேட்டருக்கு வெளியில் நான் கொடுத்தேனே, அதுதான்!'

சாம்புவுக்குப் பகீரென்றது. இப்படி நேருமென்று அவன் எதிர்பார்த்ததுதான். ஆனால் என்ன செய்வான்?

'என்ன யோசிக்கறே? கொடுத்ததைக் கேட்டால் திருப்பிக் கொடுத்துவிட வேண்டியதுதானே?'

'என்னிடம் இல்லை அது!' என்றான் சாம்பு தடுமாறி.

'இது எந்த ஊர் வேலை? உன்னை என் ஆசாமி விடாமல் கவனித்துக்கொண்டே இருந்திருக்கிறான். நீ யாரையும் பார்க்காமே நேரே வீட்டுக்கு வந்திருக்கே! உன்னிடம் இல்லாமப் போயிடுமோ?'

'நான் என்ன பண்ணுவேன்?'

சாம்புவின் பதிலுக்கு அவன் காத்துக்கொண்டிருக்கவில்லை. ஒரு நிமிஷத்தில் அவன்மீது பாய்ந்துவிட்டான். அவன் கைகள் படுவேகத்தில் சாம்புவின் சட்டைப் பை, கோட்டுப் பை, மடி எங்கும் துழாவின. அந்தப் பாக்கெட் உடலில் எங்கும் இல்லை என்று தெரிந்துகொண்டதும் அவன், 'அடே! நீ என்னமோ இக்ஷிணி வேலை செய்து விட்டாய்! ஆமாம்! ஆனால், உன்னண்டை அதை நான் வாங்காமல் போக மாட்டேன். அதிலே என்ன இருந்தது தெரியுமா? நூறு ரூபாய் நோட்டாக நூறு - பதினாயிரம் ரூபாய்! விட்டுவிட்டுப் போயிடுவேன்னு நினைக்காதே!' என்று சொல்லிவிட்டு மறைந்தான்.

அப்படிச் சீக்கிரமாக அவன் போனதற்குக் காரணம் என்னவாக இருக்கும் என்று சாம்பு அதிக நேரம் யோசிக்கவில்லை. வெளி கேட்டண்டை கான்ஸ்டபிள் ஆராவமுதுவின் உருவம் தெரிந்தது. 'சாமி! யாருமில்லீங்க! நான்தான்! ஜாக்கிரதையாக வீடு வந்து சேர்ந்தீங்களான்னு பார்த்துட்டுப் போகத்தான் வந்தேன்!' என்று குரல் கொடுத்தான் அவன்.

ஆராவமுது என்ன சமயத்தில் அக்கறையுடன் வந்திருக்கிறான்! சாம்புவின் மனம் அந்த விசுவாசத்தைப் பாராட்டியது! 'ஒண்ணு மில்லை. காலையில் வாயேன்!' என்று அவனை அப்போதைக்கு அனுப்பினான்.

மறுதினம் காலையில் எழுந்ததும், பத்திரிகையில் -

'கோவை பேங்கில் கொள்ளை! பதினாயிரம் ரூபாய் அபேஸ்! திருடிச் சென்ற ஒரு வாட்ச்மேன் சென்னை நாடகக் கொட்டகை அருகில் அடிபட்டுக் கிடந்தான்!'

- என்ற செய்தி சாம்புவைத் திடுக்கிடச் செய்தது! முதல் நாள் தியேட்டரில் தான் சம்பந்தப்பட்ட காரியங்கள் உடனே ஞாபகம் வந்தன. தன்னிடம் கொடுத்த பாக்கெட்டில் அந்த கொள்ளைப் பணம் இருந்திருக்க வேண்டுமென்பதில் அவனுக்குச் சந்தேக மில்லை. அவனுக்குத் தலை சுழன்றது. ஒரு பெரிய கொள்ளை யில் அல்லவா அவனையும் மீறிச் சம்பந்தப்பட்டு விட்டான்! வெளியில் வந்தால் என்ன ஆகும்?

ஆராவமுது வரும் போதே, 'கேட்டீங்களா சேதி! வாட்ச்மேன் சமாசாரம் அமர்க்களப்படுதுங்களே! சூப்பரிண்டெண்ட் துரை வந்திருந்தாரு. ஒங்க பேரைக்கூடப் பிரஸ்தாபித்தாங்களாம்!' என்று சொல்லிக்கொண்டு வந்தான்.

'எதற்கு? எதற்கு?' - திடுக்கிட்டுப் போனான் சாம்பு.

'ஏதானும் யோசனை கேட்கலாமுன்னுதான் இருக்கும். அநேகமாக இன்ஸ்பெக்டர் கோபாலன் சாயங்காலமே வந்திடு வாராமே!'

'ஓஹோ!'

'உங்களுக்கு எதனாச்சியும் சந்தேகம் தோணுதா?' என்று கேட்டான் ஆராவமுது.

சாம்பு இருபுறமும் பார்த்துக் கொண்டான். பிறகு, 'பக்கத்தில் வா!' என்று கான்ஸ்டபிளை அழைத்து, 'எனக்குச் சந்தேகம் எல்லாம், ஒரு புது ஆசாமி வந்திருக்கிறான். அவன் மேலேதான். தகவல் கிடைத்திருக்கிறது!' என்றான்.

'நான் பார்க்கலிங்களே அவனை!' என்றான் ஆராவமுது.

'நான் பார்த்துவிட்டேன். சரியான சமயத்திலே இன்னைக்குக் காண்பிக்கிறேன் பார்!'

'எங்கே, ஸ்வாமி?'

'நாடகத்திலேதான்!'

'அப்படியானா இன்னைக்கும் நீங்கள் நாடகத்துக்கு வருவீங்களா?'

'ஆஹா!' என்றான் சாம்பு.

அன்று மத்தியானம் அரைத் தூக்கமாக இருந்த சாம்பு ஏதோ சத்தம் கேட்டு, திடுக்கிட்டு உட்கார்ந்து கண்ணைக் கசக்கிக் கொண்டான். அவன் எதிரில் சந்தடியின்றி நின்றான் கோயமுத்தூர் ஆசாமி!

'பயந்துவிடாதேயும் சாம்பு! நான் வந்தது யாருக்கும் தெரிய வேண்டாமென்று இப்படி வந்தேன். விஷயம் எல்லாம் காதில் விழுந்துவிட்டதா?' என்றான் அவன்.

'எந்த விஷயம்?' என்று கேட்க வேண்டுமென்று சாம்புவுக்கு ஆசை. ஆனால், பயத்தில் நாக்கு வாய்க்குள் ஒட்டிக் கொண்டு விட்டது. உதடுகள் துடித்தன.

'பேசாமல் இரும், சொல்கிறேன். எனக்கும் எல்லா விஷயமும் தெரியும். பணம் என்னிடம் பத்திரமாக இருக்கிறது. உம்முடைய உதவியை, சாயந்திரம் போலீஸ் எதிர்பார்ப்பார்கள். தயாராக இரும்!' என்றான்.

சாம்பு திணறினான். இவனுக்கு என்ன நெஞ்சழுத்தம் இருக்க வேண்டும். பட்டப் பகலில் வந்து நான்தான் திருடினேன் என்று அவனிடம் ஒப்புக்கெள்ள!

ஏதேனும் பதில் சொல்ல வேண்டுமென்று ஆசைதான் சாம்புவுக்கு. ஆனால் அவன் அதற்குள், 'உம்மைத் தொந்தரைப்

படுத்த இஷ்டமில்லை. கொட்டகையில் சந்திக்கலாம்!' என்று சொல்லி, பின்நடையாக நாலு அடி வைத்து ஜன்னலண்டை சென்றான். சாம்பு மறுபடி பார்த்தபோது அவன் அங்கே இல்லை!

நாடகத்துக்குப் போவோமா, வேண்டாமா என்று சாம்பு சிந்தித்தான். வீட்டில் தனியாக இருப்பதைவிட டிராமாவில் இருப்பதே மேல் என்று பட்டது அவனுக்கு. அதோடு முதல் நாள் நாடகத்தில் பார்க்காமல் விட்டதையும் பார்த்துவிடலாமே என்ற ஆசையும் ஏற்பட்டது. மேலும், இந்தத் திருடன் கொட்டகையில் சந்திப்பதாகச் சொன்னதும் தன்னை ஏமாற்றுவதற்காகவே இருக்கும் என்றும் பட்டது அவனுக்கு. நாடகம் முடிந்ததும் கான்ஸ்டபிள் ஆராவமுதை வீட்டுக்குத் துணைக்கு அழைத்துக் கொண்டு வந்துவிடலாம் என்று ஏற்பாடு செய்துகொண்டு, வேம்புவையும் சுந்துவையும் பெரியம்மா பெண் வீட்டுக்கு அனுப்பிவிட்டுக் கிளம்பினான்.

அன்று நாடகத்துக்கு முதல் நாளைவிடக் கூட்டம் அதிகம் வந்திருந்தது. சாம்பு சற்றுப் பின்னாலே உட்கார்ந்து கொண்டிருந்தான். உள்ளுக்குள் விவரிக்க முடியாத பயம் ஒன்று விடாப் பிடியாக அவனைப் பிடித்துக்கொண்டிருந்தது.

பக்கத்தில் திரும்பிப் பார்த்தான். ஆராவமுது கை கட்டிக்கொண்டு பாடிகார்டு போல் நின்றான். சற்றுத் தைரியம் பிறந்தது. 'தங்கமான மனிதன்! கோபாலனிடம் நம்மாலான சிபாரிசு செய்ய வேண்டும்!'

நாடகம் மளமளவென்று நடந்து ரஸமான கட்டத்தை அடைந்தது. மேடைமீது ஒரு கொள்ளைக்காரன் வருகிறான், இரும்புப் பெட்டியைத் திறக்கிறான். அதிலிருந்து ஒரு கட்டு நோட்டுகளை எடுக்கிறான். அலட்சியமாகச் சீட்டுக்கட்டைக் குலுக்கிப் போடுவதுபோல் அதைக் குலுக்கிக் கீழே போடுகிறான். சபையோர் வாயைப் பிளந்துகொண்டு பார்க்கிறார்கள். இந்தக் கட்டத்தில் கதாசிரியர் எழுதாத ஒரு சம்பவம் நடந்தது!

நாடக மேடைமீது திடீரென்று ஓர் இளைஞன் தோன்றினான். அவனைக் கண்டதும் சாம்புவுக்கு ஒரு முறை தூக்கிவாரிப் போட்டது. அவன்தான் கோபாலன் குறிப்பிட்ட கோயமுத்தூர்ப் பேர்வழி! என்ன தைரியம்! கொட்டகையில் சந்திக்கிறேன் என்றானே, இதுதானோ அது?

நோட்டுகளின் கட்டைக் கையில் எடுத்துக்கொண்டதும், தொப்பென்று மேடையிலிருந்து குதித்தான் அவன். வெளியே போலீஸ் ஊதுகுழல் பலமுறை கேட்டது. சபையே கலங்கிப் போய் நிசப்தமாகி விட்டது. போலீஸ் உடையில் மேடைமீது ஓர் உத்தியோகஸ்தர் தோன்றினார் : 'சபையோர்களே! இரண்டு தினங்கள் முன்பு கோவையில் நடத்த திருட்டு சம்பந்தமாகப் போலீஸார் இங்கே ஓர் அவசர நடவடிக்கை எடுக்க வேண்டியிருப்பதால், தயவு செய்து அவரவர்கள், அவரவர்கள் இடத்தில் அசையாமல் இருக்க வேண்டும். யாருமே வெளியே போக முயல வேண்டாம்! கொட்டகை நாற்புறமும் போலீஸ் காவல் இருக்கிறதென்று எச்சரிக்கிறேன்!' என்றார். சபை ஒரு பெருமூச்சு விட்டது.

இப்போது இன்ஸ்பெக்டர் கோபாலன் முகம், சற்றுத் தொலைவில் தெரிந்தது சாம்புவுக்கு. அவனைச் சுட்டிக்காட்டி ஏதோ பேசினார், இரண்டு கான்ஸ்டபிள்களிடம். அவர்கள் விரைவாகச் சாம்புவை நெருங்கினார்கள்.

'ஐயையோ! நேற்று நாம் பணம் வாங்கின சமாசாரம் தெரிந்து போய்த்தான் நம்மையும் உளவாளி என்று பிடிக்கிறார்களோ?' என்று சமைந்து போனான் அவன்.

சாம்புவின் மனம் தீவிரமாக வேலை செய்தது. இந்தச் சமயம் விடுவித்துக்கொள்ள கான்ஸ்டபிள் ஆராவமுதின் உதவி அவனுக்கு மிகவும் அவசியமாக வேண்டும்! அவன்தானே முதல் நாள் பூராவும் சாம்புவின் பக்கத்தில் இருந்தவன்?

கோபாலன் பின்தொடர, கான்ஸ்டபிள்கள் நெருங்கினார்கள். சாம்புவின் இடப்பக்கம் ஒருவன் நின்று கொண்டான்; மற்றவன் கான்ஸ்டபிள் ஆராவமுது பக்கத்தில் போய் நின்றுகொண்டான்.

'கோபாலன்! இதோ கான்ஸ்டபிளையே கேளுங்கள். இவனுக்குத் தெரியாமல் ஒன்றும் நடக்கவில்லை!' என்று அலறியே விட்டான் சாம்பு.

'கவனிக்கிறேன்!' என்றார் கோபாலன் நிதானமாக.

சாம்பு கவனித்தான். கோபாலன் பின்னால் நின்றான், அவர் சிபாரிசு செய்த அயோக்கியன்!

'என் கடுதாசியைப் பரிகாசம் செய்கிறீரோ, ஓய்?'

'பரிகாசம் இல்லை, கோபாலன்! கடுதாசியின்படி நடந்து கொண்டேன். ஜாக்கிரதையாக ஆராவமுதுவை அந்த க்ஷணம் முதல் எங்கேயும் போகாமல் என் பக்கத்தில் வைத்துக் கொண்டேன். எங்கே, இன்று நீங்கள் வராமல் இருந்து விடுவீர்களோ என்று, ராத்திரிகூட வீட்டோடு வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்தேன்!' என்றான் சாம்பு.

'அதுவரை சிரமம் என்னத்துக்கு! இப்போதே இவனை ஸ்டேஷனுக்குக் கொண்டு போவோம்!' என்றார் கோபாலன். பிறகு, ஏனோ தெரியவில்லை. நாலைந்து அறைகளைப் பளார் பளாரென்று ஆராவமுதின் கன்னத்தில் அறைந்து விட்டார். 'டிபார்ட்மெண்டுக்கே உன்மாதிரி ஆள்களால் அவமானம்டா! ஹூம்?' என்றார்.

சாம்பு திகைத்துப் போனான். கோபாலன் தம் பின்னால் நின்ற ஆசாமியைப் பார்த்து, 'யார், இன்னொரு பேர்வழி?' என்றார்.

'ஆமாம்! சாம்புவுக்கு இரண்டு பக்கத்திலும் நிற்பவர்கள்தான்! பையைச் சோதனை போட்டால் நோட்டுகள் எல்லாம் அகப்படுமே!' என்றான் அவன்.

சாம்புவின் இடப்புறம் இருந்தவனின் பையிலிருந்து உடனே ஒரு கட்டு நோட்டு வெளிவந்தது. 'பைத்தியக்காரா! இதெல்லாம் பணம் என்று போய் பொறுக்கிக் கொண்டு வந்தாயே! இதையெல்லாம் நாடகம் போடுகிற போதுதான் பணமாக வைத்துக் கொள்ளலாம்! நிஜப் பணமாக இருந்தால், சாம்பு இதை வீட்டில் வைத்துவிட்டு வருவாரா?' என்றான் கோபாலனின் பின்னால் வந்தவன்.

இந்தத் திருடனுக்குப் போய் இன்ஸ்பெக்டர் ஏன் இத்தனை இடம் கொடுக்கிறார்? சாம்புவுக்கு ஒன்றுமே புரியவில்லை! சுமார் ஒரு மணி நேரம் கழித்து, கமிஷ்னர் முன்னிலையில் விஷயங்களை, கோபாலன் அனுப்பின பேர்வழி விவரமாகச் சொன்னபோது தான் அவனுக்குப் புரிந்தது.

'கோபாலன் சாம்புவுக்கு ஒரு லெட்டர் போட்டார். அதை அவர் என்னிடமும் காண்பித்தார். அதில் நான் 'திருட்டு, கொலை, கொள்ளைகளில் சம்பந்தப்பட்டவன்' என்று எழுதினார். திருடர்களுடன் சிநேகிதனைப் போல் பழகிக் குழி பாய்ச்சும் மிஸ்டர் சாம்புவுக்கு இந்தக் கடிதம் உபயோகமாக இருக்கும் என்றுதான் அப்படி என்னை அறிமுகம் செய்தார் கோபாலன்.

நான்தான் திருட்டுக் கேஸ்கள், கொலைக் கேஸ்கள் பலவற்றில் வேலை செய்திருக்கிறேன். ராஜமஹேந்திரபுரத்திலும் சி.ஐ.டி. யாக இருந்திருக்கிறேன். எதிர்பார்த்தபடி, கடிதத்தைச் சாம்பு சரியானபடி புரிந்துகொண்டு, உபயோகப்படுத்திக் கொண்டிருக் கிறார்! அதைக் கிழித்து இந்தத் திருடன் ஆராவமுதுவிடமே கொடுத்து எறியச் சொல்லியிருக்கிறார். அவன் அதை ஒட்டிப் படித்துப் பார்த்து, சாம்புவுக்குத் தன்மேல் சந்தேகமிருக்க நியாய மில்லை என்று எண்ணி ஏமாந்து போயிருக்கிறான். கோயமுத்தூர் பேங்க் கேஸுக்காக நான் வந்திருப்பது மர்மமாகவே இருந்தது.

கோயமுத்தூரில் திருடினவர்கள் மூன்று பேர். அவர்களுள் வாட்ச்மேன் ஒருவன். மற்ற இரண்டு பேர்கள் இவர்கள். முதல் பேர்வழி, பணத்துடன் பட்டணம் வந்தவன். கூட்டாளிகளுடன் பகிர்ந்து கொள்ளாமல் ஓடிவிட எத்தனித்திருக்கிறான். அதைக் கண்டுபிடித்த, இரண்டாமவன் இந்தக் கொட்டகையில் அவனிட மிருந்து அதைத் திருடிக்கொண்டு வெளியே ஓடினான். சாம்பு அதைக் கவனித்து அவனைப் பின்தொடரவே, சாமர்த்தியமாக அவரிடமே அதை ஒப்புவித்துவிட்டுப் போனான். இவருக்குத் தான் ஆராவமுது காவல் இருக்கிறானே, பணம் போய் விடாது என்ற தைரியம் அவனுக்கு! எப்படியும் சாம்பு தனியாக அகப் பட்டுக் கொண்டுவிடுவார். பணம் பறிபோய் விடும் என்று நான் குறுக்கிட்டுப் பிடுங்கிக் கொண்டேன். அதையும் சாம்பு அறிவார்.

அன்றிரவே சாம்புவை இரண்டாவது கள்ளன் திருப்பிக் கேட்டிருக்கிறான். சாம்பு இல்லையென்று சொல்லி இருக்கிறார். நான் எடுத்தது இவர்களுக்குத் தெரியாது. சாம்புவும் சொல்ல வில்லை.

ஆதிமுதலே இவர்களில் ஒருவர், சாம்பு வீட்டை வளைய வந்திருக்கிறார்கள். ஆகவே, சாம்புவை நான் பகிரங்கமாகப் பார்ப்பதுகூட முடியாமல் போய், சுவர் ஏறிக் குதித்துப் பார்த்து விட்டு வந்தேன்.

இன்னொரு விஷயம்! நான் எடுத்த பணத்தை ஜாக்கிரதையாக வைக்க ஒரு யுத்தி செய்தேன். இந்த டிராமாவில் கள்ளன் நோட்டுகளை வீசும் கட்டம் ஒன்று வருகிறது. அதற்காகப் பொய் நோட்டுகள் வைத்திருக்கிறார்கள். நிஜ நோட்டுகளை அவற் றுக்குப் பதிலாக வைத்துவிட்டு, பொய் நோட்டுகளை நான் சாம்புவின் வீட்டில் வைத்துவிட்டு வந்தேன். இவர் நாடகத்துக்கு

வந்த பின்னர் ஆராவமுதுவின் கூட்டாளி, சாம்புவின் வீட்டில் நுழைந்திருக்கிறான். ஆராவமுது, இங்கே சாம்புவுக்குக் காவல் இருந்திருக்கிறான். கெட்டிக்காரச் சாம்பு, திருடனுக்குச் சௌகரி யமாக மனைவியையும் பிள்ளையையுங்கூட வெளியே அனுப்பி யிருக்கிறார்! ஓர் ஆசாமி தங்கள் திருட்டுக்கு இவ்வளவு அநுகூலங் கள் செய்கிறாரே என்றுகூட அந்த மடையர்கள் நினைக்க வில்லை.

'சௌகரியப்பட்டால் நாடகம் முடிந்ததும் சாம்பு சாரையும் வாட்ச்மேனைச் செய்ததுபோல் - மண்டையுடைத்துப் போடவே இவர்கள் திட்டம் செய்தார்கள்!' என்றான் அவன்.

வாயடைத்துப்போய் நின்றான் சாம்பு. அப்படியா சமாசாரம்! ஆராவமுது ஒரு திருடனா?

கோபாலன், கோவை சி.ஐ.டி.காரரின் கையைப் பிடித்துச் சாம்புவின் கையில் கொடுத்து, 'இப்போது தாராளமாக உம்மை அறிமுகம் செய்து வைக்கிறேன்! இவர்தான் ராஜகோபால். இவர் சாமர்த்தியத்தைப் பற்றி நான் சொல்ல வேண்டாம். இவர் மிஸ்டர் சாம்பு!'

'பேசுங்கள், மிஸ்டர் சாம்பு!' என்றார் கமிஷ்னர்.

'பேசவேண்டியதே இல்லை. கூட வேலை செய்கிறவரின் மனோபாவத்தை அறிந்துகொண்டு, அதற்கு அநுசரணையாக ஆபத்தையும் லட்சியம் செய்யாமல் வேலை செய்கிறவர்கள், பேச வேண்டிய அவசியம் என்ன? என் அநுபவத்தில் சாம்பு ஒருத்தர்தான் அப்படிப்பட்டவர்!' என்றார் ராஜகோபால்.

'அது மட்டுமா? மகாதமாஷ் பேர்வழியாச்சே, ஸார்! நான் உம்மை இவருக்குச் சிபாரிசு செய்த தோரணையிலேயே ஆராவ முதுவையும் எனக்கு, திருப்பிச் சிபாரிசு செய்தாரே! அதைக் கவனித்தீரா?' என்றார் கோபாலன்.

'ஒரே நாடகத்துக்கு இரண்டு தடவை சாம்பு வந்தபோதே ஏதோ விஷயம் இருக்கணுமென்று சந்தேகப்பட்டு விட்டோம் நாங்கள்!' என்றார் உள்ளூர்ப் பிரமுகர்.

சாம்பு அவசர அவசரமாக மூக்கை உருவிக் கொண்டிருந்தான்.

48

காணாமற்போன கணவன்

'நம் இரண்டு பேரில் யாருக்கு யாரிடம் பிரியம் ஜாஸ்தி?' என்று கேட்டான் சாம்பு ஒருநாள் மாலை.

எட்டு மாதக் கர்ப்பிணியான வேம்பு ஒரு கம்பளியைத் தரையில் விரித்துக்கொண்டு, ரவிவர்மாவின் படத்தில் கன்வ ரிஷியின் புதல்வி, துஷ்யந்தனுக்குக் கடிதம் எழுதும் நிலையில் காணப்படுவதுபோல் படுத்துக் கொண்டிருந்தாள்.

'இதென்ன அசட்டுக் கேள்வி, போங்கோ! யாராவது ஒரு பொம்மனாட்டி வந்து இளித்தால் உடனே பதிலுக்கு இளிக்காமல் இருந்து விடுவேளாக்கும் நீங்கள்! புருஷாளெல்லாம் ஒரே மாதிரிதான்!' என்றாள் அவள்.

'அப்படி நான் இளித்தால், நீ பொறாமைப் பட்டு மாய்ந்து போகாமல் இருந்து விடு வாயோ? ஹி! ஹி!' என்று கேட்டான் சாம்பு.

'நான் ஒண்ணும் மாட்டேன்! எனக்குக் கோபமே வராது. புருஷன் சந்தோஷமாய் இருக்க வேண்டியதுதான் உத்தம பத்தினியின் தர்மம்னு எங்கப்பா சொல்லுவார்.'

'அப்படியானால் உனக்குப் பிள்ளை பிறக்கப் போகிறதா, பெண் பிறக்கப் போகிறதா?'

'உங்களுக்கு எது வேண்டும்?'

'எனக்குப் பெண்தான் வேண்டும்!' என்று வேம்புவின் பக்கம் சிறிது நகர்ந்தான் சாம்பு.

'வெட்கமாயில்லை? யாரானும் வந்து நிக்கப்போறா. போங்கோ உங்கள் ரூமுக்குள்!' என்றான் அவள்.

சாம்பு தன் அறைக்குப் போனபோது, பட்டுப்புடைவை உடுத்தி முகத்தைப் பாதிக்குமேல் மூடிக்கொண்டு ஒரு ஸ்திரீ அவன் மேஜையின் முன்னால் நாணமே உருவமாக நின்றுகொண்டிருந்தாள்.

'உட்காருங்கள்! நீங்கள் யார்?' என்றான் சாம்பு.

மெல்ல, காது கேட்டதும் கேட்காததுமாக அவள் பதில் சொன்னாள்: 'உங்களை எப்படிப் பார்ப்பது என்று பயமாகவும் இருந்தது, சங்கோஜமாகவும் இருந்தது. நான் செங்கல்பட்டில் ஒரு பள்ளிக்கூடத்தில் வாத்தியாராக இருப்பவள். மேலே சொல்லட்டுமா?' என்றாள். சொல்கிறபோதே இருமுறை நாசுக்காக மேலாக்குப் புடைவையை வீசிப் போர்த்திக் கொண்டாள்.

'சொல்லுங்கள், கேட்கிறேன்.'

'என் தங்கையும் நானுந்தான் எங்கள் பெற்றோர்களுக்குப் பிறந்தவர்கள். அவர்கள் காலமாகி எட்டு வருஷமாகி விட்டன. நான் கல்யாணமே செய்துகொள்ளாமல் பள்ளிக்கூடத்தில் உத்தியோகம் ஏற்றுக்கொண்டேன். என் தங்கை ஷண்முகசுந்தரம் என்கிறவரை மணந்துகொண்டு இரண்டு வருஷம் முன்புவரையில் பம்பாயில் இருந்தாள். புருஷன் - மனைவி அந்நியோன்யத்தைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. தள்ளி நில் என்று சொல்ல மாட்டார் அவர். நான்கு நாளைக்கு முன்பு அவர் வெளியே புறப்பட்டுப் போனவர், திரும்பி வரவில்லை. மறுநாள் காலை எனக்குச் சொல்லி அனுப்பினாள் தங்கை. நான் ஓட்டமாக வந்தேன். மேலும் மூன்று நாளாகிவிட்டது. இன்னும் அவர் திரும்பவில்லை!'

'அவருக்கு என்ன உத்தியோகம்?' என்றான் சாம்பு.

'உத்தியோகம் என்று ஒன்றும் இல்லை. பம்பாயில் பிசினஸ் செய்து கொண்டிருந்தார். நல்ல லாபம் கிடைத்தது. இப்போ இங்கே வந்து சௌகரியமாக இருக்கிறார்.'

'போகிறபோது எங்கே போகிறேன் என்று சொல்லவில்லையோ?'

'இல்லையே! வழக்கந்தான் வெளியே போவதும், வருவதும். ஆனால், ஒரு தினமாவது திரும்பாமல் இருந்ததில்லை. என் தங்கை கவலையிலேயே குன்றிவிட்டாள்!' என்று ஏங்கினாள். அவள் கண்களில் அப்போது நீர் தளும்பியது.

சாம்புவுக்கு அநுதாபம் பிறந்து விட்டது. 'உஸ், வருத்தப் படாதீங்கோ! வந்துவிடுவார்!' என்றான்.

'நீங்கள் கவனித்து எங்களுக்குச் சொன்னால் தேவலை. நீங்கள் பார்க்க ஆரம்பித்து விட்டாலே, அவர் அகப்பட்டு விடுவார் என்று எங்களுக்கு ஒரு திடமான நம்பிக்கை.'

'போலீஸுக்குத் தகவலைத் தெரிவிக்கப்படாதோ?'

'ஐயோ, வேண்டாம்! பத்திரிகையில் வந்து சிரித்துப் போய் விடும். தவிர அவர் வந்துவிட்டால், ஏன் அமர்க்களம் செய்து விட்டீர்கள் என்று கோபிப்பார் என்றும் என் தங்கை பயப்படுகிறாள். நீங்கள் கொஞ்சம் பார்க்கிறீர்களா?'

'பார்க்கிறேன்.'

'அப்போ, காலையில் எங்கள் வீட்டுக்கு வருகிறீர்களா?'

'ஆகட்டும்.'

அவள் எழுந்திருந்தாள். வெளியே ஹாலுக்கு வரும்போது சாம்புவும் பின்தொடர்ந்தான். 'நான் வரட்டுமா? கோட்ஸ் ரோடு, 345 ஆம் நெம்பர், என் பெயர் சகுந்தலா' என்று திரும்பின அந்த ஸ்திரீ, சாம்புவின் கையைப் பிடித்து, ஹிதமாக அதை ஓர் அழுத்து அழுத்தி, அவன் கண்களைப் பிரேமையுடன் நோக்கினாள். பகீரென்றது சாம்புவுக்கு. 'இதென்ன சங்கடம்! இப்படி ஏன் பார்க்கிறாள் இவள்?'

ஒரு க்ஷண காலம் தயங்கினாள் அவள். பிறகு விசுக்கென்று வாசலில் போய்விட்டாள்.

ஏதோ பேச்சுக் குரல் கேட்கிறதே, யாராக இருக்கும் என்று வெகுநேரம் யோசனை செய்தவாறு படுத்திருந்த வேம்பு மெல்ல எழுந்து வந்ததும், சகுந்தலா சாம்புவின் கையைப் பிடித்து, வீட்டு விலாசத்தைச் சொல்வதும் சரியாக இருந்தன. பளிச்சென்று அவள் கண்களில் ஒரு பொறி பறந்தது. மறு கணம், 'சரி, இருக்கட்டும்!' என்று உள்ளே போய்விட்டாள்.

சுமார் அரை மணி நேரத்துக்குப் பிறகு இன்னும் இரண்டு பேர் சாம்புவைத் தேடிக்கொண்டு வந்தார்கள். இரண்டு பேரும் வந்து உட்கார்ந்ததும், 'ஓர் உதவி செய்ய வேண்டும்!' என்றார்கள்.

'சௌகரியப்படாது எனக்கு!' என்றான் சாம்பு.

'தகுந்த மரியாதை செய்வோம் சார், நாங்கள்! எங்கள் சிநேகிதர் ஒருவர் - ஷண்முகசுந்தரம் என்பது அவர் பெயர். திடீரென்று நான்கு நாள்களாகக் காணப்படவில்லை. வீட்டைவிட்டுக் கிளம்பி எலெக்ட்ரிக் ரயிலில் ஏறினவர்தான். அப்புறம் திரும்ப வில்லை. அவருடைய குடும்பத்தார்கள் அவரைக் கண்டுபிடிக்க என்ன ஏற்பாடு செய்கிறார்களோ, எங்களுக்குத் தெரியாது. அவர் ஜாக்கிரதையாகத் திரும்ப வேண்டும் என்பது ஒன்றே எங்கள் கவலை. என்ன செலவானாலும் பரவாயில்லை. நாங்கள் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்றும் தெரிய வேண்டிய தில்லை. நீங்கள்மட்டும் தயவு செய்ய வேண்டும்!'

'போலீஸில் சொல்லுங்கள்!'

'அதுதான் வேண்டாம் சார்' வீண் கலாட்டா! தவிர, நண்பர் இதற்காக வருத்தப்பட்டாலும் படுவார். உங்களிடம் காதில் போட்டு வைத்தால், காதும் காதும் வைத்தாற்போல் காரியம் நடக்கும்!'

சாம்புவின் முன்னால் இரண்டு நூறு ரூபாய் நோட்டுகள் நகர்ந்தன.

யோசித்தான் சாம்பு. அவன் கண்டுபிடிக்க வேண்டியது ஒரே ஆசாமி. பணம் கொடுக்கிறவர்களோ இரண்டு பேர். ஒருவர் சொன்னது ஒருவருக்குத் தெரிய வேண்டியதில்லை! பார்க்கலாமே!

'சரி! என்னால் முடிந்தவரையில் பார்க்கிறேன்!' என்றான் சாம்பு.

கையைத் தூக்கி வணங்கிவிட்டு, இருவரும் வெளியே போனார்கள்.

இரவு பத்தரை மணிக்கு இன்ஸ்பெக்டர் கோபாலன் வந்து கதவை இடித்தார். அப்போது சாம்பு படுத்துக்கொண்டு விட்டான். வேம்புவும் கதவை இடிக்கவே, சாம்பு போய்த் திறந்தான். 'மிஸ்டர் சாம்பு. ஒரு கேஸ் விஷயமாக உங்கள் உதவி வேண்டி இருக்கிறது. வழக்கம்போல் 'ஆ ஊ' என்றால் கேட்க மாட்டேன். ரொம்பப் பிளான் செய்து நடந்திருக்கிற திருட்டு இது. ஜார்ஜ் டவுன் கோவிலில் இருந்த அம்பிகையின் நகைகளை யெல்லாம் கிளப்பியிருக்கிறான் ஒரு பேர்வழி. உளவு தெரிந்த வனாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைக்கிறோம். புதிதாகக் கட்டுவதற்காகச் சுமார் இருபத்துநாலு காரெட் வைரக் கற்களை, பழைய நகைகளிலிருந்து நாலுநாள் முந்தி பெயர்த் திருக்கிறார்கள். அந்தப் பொட்டலத்தையே கொண்டு போயிருக் கிறான் எவனோ! குருக்கள்மீது சந்தேகப்பட்டு அவர் வீட்டைச் சோதனை போட்டோம். ஒரே ஒரு நகை மட்டும் அகப்பட்டிருக் கிறது. அது எப்படி அங்கே வந்தது என்று தமக்குத் தெரியவே தெரியாது என்கிறார் அவர். தாம் எடுத்திருந்தால், ஈசுவரி கண்ணை அவிழ்த்துவிடட்டும் என்கிறார். மனுஷர் முப்பது வருஷமாகக் குருக்களாக இருந்தவர். ஓர் அப்பழுக்கு சொல்ல முடியாது. பார்த்தால் பரிதாபமாகவும் இருக்கிறது; சந்தேகமாக வும் இருக்கிறது! என்ன சொல்கிறீர்?'

'நான் என்னத்தைச் சொல்வது? எல்லாம் ஈசுவரியின் செயல்!' என்றான் சாம்பு.

'குருக்கள் ஒருவரைத் தவிர நகைகளைப் பிரித்த விஷயம் பக்தர்கள் இரண்டு பேருக்குத்தான் தெரியும். ஆனால், அவர் களுக்கு நகைகளின்மீது கை வைக்கும்படியான சந்தர்ப்பமே கிடையாது. நன்றாக விசாரித்து விட்டோம். தவிர, திருட்டு நடந்த அதே சமயம் அவர்கள் அடுத்த பிரகாரத்தில் பஜனை பண்ணிக்கொண்டிருந்திருக்கிறார்களாம்! இருநூறு சாட்சிகள் உண்டு இதற்கு!'

'டாக்டர்கள் நல்ல பக்தர்கள் போலேயிருக்கு!' என்றான் சாம்பு.

'என்ன! தமாஷ் இருக்கட்டும்! உம்மை எப்போது பார்க்கலாம்?'

'எப்போ வேண்டுமானாலும் பாருங்களேன். நாளைக்கு மட்டும் வீட்டில் இருக்க மாட்டேன்!'

'காதில் போட்டு விட்டேன்!' என்றார் கோபாலன் போகும்போது.

மறுநாள் காலை ஒன்பதாவது மணிக்குக் கோட்ஸ் ரோடைப் போய் அடைந்தான் சாம்பு. அவனுக்குக் காணாமல் போன ஷண்முகசுந்தரத்தைவிடக் கண் எதிரில் இருந்த சகுந்தலாவைப் பிடித்திருந்தது. எவ்வளவு ப்ரீயாக, பிறந்தது முதல் பழகினவள் போல் இருந்தாள், சற்று நேரத்துக்குள்! வேம்புவுக்குத் தெரிந்தால்தான் மண்டை உடைந்து போகும்!

சகுந்தலா மேக்-அப் செய்துகொண்டு வந்தாள். அவள் தங்கை வாசற்படி மறைவில் நின்று பார்த்தாள். சாம்புவும் தன் பரிசோதனையை ஆரம்பித்தான். ஷண்முகசுந்தரம் ரொம்ப நிதானமான மனிதர் என்பது மாடியில் அவர் அறையைப் பார்த்தவுடனேயே தெரிந்தது. அவருடைய சாமான்கள் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. சுவரில் ஒரு போட்டோ தொங்கியது.

அதுதான் தன் தங்கையின் புருஷனுடையது என்று சொன்னாள் சகுந்தலா. சாம்புவுக்கு உபயோகமாக வேறு எதுவுமே தென்படவில்லை. அதைப்பற்றி அக்கறையும் இல்லை அவனுக்கு.

தங்கை சமையற்கட்டில் காபி தயாரிக்கப் போயிருந்தாள். முதல் நாள் மாலை தன்னிடம் காண்பித்த சுவாதீனத்தை இப்போதும் சாம்பு சகுந்தலாவிடம் எதிர்பார்த்தான். அவன் கடைக்கண்ணால் பார்த்த சமயம், அவளும் பார்த்தாள். உடனே இரண்டு பேரும் வெட்கப்பட்டுக் கொண்டு சிரித்தார்கள்.

'ஸார்! உங்கள் பெயரைக் கேட்டாலே நான் பரவசமாகப் போவேன். என்னைப் போன்ற அசடுகள் உங்களையொத்த மேதாவிகளுக்கு அடிமையாவதில் ஆச்சரியம் இல்லை!' - சகுந்தலாவின் கை சாம்புவின் ஒரு புஜத்தைப் பற்றியது. சாம்புவுக்கும் தைரியம் வந்தது. முன்னால் ஓர் அடி வைத்திருப்பான்.

மாடிப்படியில் ஒரு கனைப்பு கேட்டது. தங்கை காபியுடன் வந்துவிட்டாள். சாம்பு சட்டென்று ஒதுங்கிக் கொண்டான்.

காபியை அருந்தியவுடன், 'நான் வருகிறேன். இங்கே பார்க்க வேண்டியதைப் பார்த்து விட்டேன். வரட்டுமா?' என்றான் சாம்பு.

தங்கை காபி டம்ளருடன் உள்ளே போனாள். சகுந்தலா சாம்புவின் பின்பக்கமாக வந்து, 'இன்று ராத்திரி வாருங்கள் எட்டு மணிக்கு. எங்களுக்குத் தனியாக இருக்கக்கூட பயமாக இருக்கிறது. நீங்கள் இருந்தால் தைரியமாக இருக்கும். வர முடியுமா?' என்றாள்.

சகுந்தலாவின் உடம்பு அவன்மேலே உராய்ந்து கொண்டிருந்தது.

'கட்டாயமாக வருகிறேன்!'

'ஒரு விஷயம். நீங்கள் இப்படியே வரக் கூடாது. யாராவது கவனித்தால் நன்றாக இராது. இந்த வீட்டுக்கு அடிக்கடி பேங்கியில் இருந்து டவாலிச் சேவகன் வருவான். துப்பறிகிறவராச்சே நீங்கள்! அப்படி வாருங்களேன்!' என்றாள் அவள்.

சாம்பு வீட்டைப் போய் அடையும்போது மணி பதினொன்று. வாசலில் ஒதுக்குப்புறமாக, பழைய இரண்டு ஆசாமிகளும் காத்துக் கொண்டிருந்தார்கள்.

'என்ன! எங்கள் காரியமாக ஏதானும் கவனித்தீர்களா?' என்றார்கள்.

'நன்றாயிருக்கிறது! உங்கள் காரியமாகத்தான் போய்விட்டு வருகிறேன்! எவ்வளவு சிரமம் எனக்கு! அங்கே உள்ளே போய்விட முடிகிறதா லகுவில்?'

'போன காரியம் ஏதானும் கைகூடியதா?'

'நான் என்ன ஓய், ஈசுவரனா? ஈசுவரனுக்குக்கூட நகையெல்லாம் கெட்டுப் போயிருக்கிறது. அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை! நேற்றைக்கு ராத்திரி இன்ஸ்பெக்டர் கோபாலன் என்னை வந்து கூப்பிட்டுவிட்டுப் போயிருக்கிறார். உங்கள் காரியம் ஆன கையோடு அதைக் கவனிக்கலாமென்றுதான் போய்விட்டு நேரே வந்துகொண்டிருக்கிறேன்!' என்றான் சாம்பு.

'ஓஹோ! அது என்ன சமாசாரம்?' என்றார்கள் இரண்டு பேரும்.

'என்ன சமாசாரமா! டவுனில் ஒரு கோவிலில் சுவாமியின் நகைகள் எல்லாம் களவு போயிருக்கு. விஷயம் குருக்களுக்கும் இரண்டு பக்தர்களுக்குத்தான் தெரியும். குருக்கள்கிட்டே ஒரு நகை இருந்து அகப்பட்டிருக்கு. யார்மேலே குற்றம் சொல்றது?'

'குருக்கள் மேலேதான் சொல்லணும்! அது என்னம்மா அவன்கிட்டே வந்தது?'

'அதுதானே குருக்களுக்கும் தெரியல்லே!'

'நீங்க என்ன பண்ணப்போறீங்க?' என்றார்கள் அவர்கள்.

'சாப்பிட நாழியாகவில்லையா? நான் ஒருத்தி பட்டினி கிடக்கிறேனே!' என்று அலுத்துக் கொண்டாள் வேம்பு, கூடத்தில் இருந்தபடியே.

'அப்புறம் பேசலாம். நான் ஏதானும் தகவல் கிடைத்தால் சொல்கிறேன். ஹி! ஹி' என்று சாம்பு எழுந்து உள்ளே போனான்.

அன்று மத்தியானம் சாம்பு நித்திராதேவியின் அணைப்பில் கிடந்தான். வேம்பு அவனுடைய ஆபீஸ் அறைக்குப் போனவள் கணகணவென்று டெலிஃபோன் மணி அடிப்பதைக் கேட்டு, சட்டென்று ஓடிப்போய் எடுத்து காதில் வைத்துக் கொண்டாள்.

'யார் பேசுகிறது? மிஸ்டர் சாம்பு வேண்டும்!' என்றது கணீரென்று ஒரு பெண்ணின் குரல்.

'ஓஹோ! மிஸ்டர் சாம்புவா! அடேயப்பா, மரியாதையைப் பார்க்கவில்லை!' என்று முணுமுணுத்துக் கொண்டாள் வேம்பு. 'ஆமாம்! நான்தான் அது. என்ன சமாசாரம்?' என்றாள் கூடியவரை தன் குரலை மாற்றிக் கொண்டு.

'சாயந்திரம் சீக்கிரம் வரேன்னேளே? ஞாபகம் இருக்கோ?'

'ஆமாம்!' - நேற்று ராத்திரி வந்துவிட்டுப் போன கழுதைதான் கூப்பிடுவது போல இருக்கிறது!

'வரப்போறேளா என்ன?'

'ஆகட்டும், காத்துக்கொண்டிரு!' - டக்கென்று டெலிபோனை வைத்தாள் வேம்பு. தூங்கிக்கொண்டிருந்த சாம்புவை முறைத்துப் பார்த்துவிட்டு, சமையல் கட்டுக்குப் போனாள் அவள்.

சாயந்திரம் எப்போது வரப்போகிறதென்று சாம்பு காத்துக் கொண்டிருந்தான். வேஷ்டியையும், சட்டையையும் போட்டுக் கொண்டு ஒரு முண்டாசையும் கட்டிக் கொண்டான். பிறகு கண்ணாடியின் முன்னால் நின்று தன்னை அழகு பார்த்தான்.

'இதென்ன வேஷம்? பைத்தியம் பிடிச்சுடுத்தா உங்களுக்கு?' என்றாள் வேம்பு.

'இன்றைக்கு ஒரு நாடகம். அதில் நான் டவாலி வேஷம்!' என்று புளுகினான் சாம்பு.

'எனக்குத் தெரியும் உங்கள் நாடகம்! எல்லா நாடகத்தையும் பெண்டாட்டியிடமே நடத்திவிடாதீங்கோ!' என்றாள் படபடப்பாக. இதைச் சொன்ன சிரமம் தாங்காமல் கூடத்துக்குப் போய் உட்கார்ந்துவிட்டு அவள் திரும்பி வந்த பார்த்தபோது, சாம்பு போய்விட்டான். அவனுக்கு அவசரம்!

ஆத்திரமாக வேம்பு டெலிபோனை எடுத்தாள். அடுத்த நிமிஷம் கோபாலன் மனைவி லக்ஷ்மியுடன் பேசிக் கொண்டிருந்தாள். 'என்ன மாமி! உடம்பு என்னமாக இருக்கிறது?' என்று கேட்டாள் லக்ஷ்மி.

'உடம்புக்கு ஒண்ணும் இல்லை? அங்கே உங்க ஆத்துக்காரர் இருக்காரோ?'

'இப்போதான் வரார் போலிருக்கு! மோட்டார் சைக்கிள் சத்தம் வாசலில் கேட்கிறது. வந்தால் என்ன? நீங்க பேசுங்கோ!'

'எனக்காக அவரிடம் ஒரு வார்த்தை சொல்லுங்கோ, மாமி! இங்கே இவர் அவசரமாகப் போயிருக்கிறார். என்ன கேஸோ, என்னமோ! எனக்கானால் பயமாயிருக்கு. யாரோ ஒருத்தி வந்து இவரை ரகசியமாகக் கூட்டிண்டு போயிருக்காள். அவளைப் பார்த்தால் எனக்கு நம்பிக்கைப் படவில்லை. கோட்ஸ் ரோடாம். உங்க ஆத்துக்காரர் சித்தே போய்ப் பார்த்தால் தேவலை, மாமி!'

'இவரிடம் சொல்கிறேன். இதோ அவரே வந்து விட்டார்!'

கோபாலன் டெலிபோனைக் காதில் வைத்துக்கொண்டு, 'என்ன சமாசாரம்?' என்றார்.

வேம்பு சட்டென்று தலைப்பை இழுத்து நன்றாகப் போர்த்திக் கொண்டு, நாணலும் கோணலுமாக விஷயத்தைச் சொன்னாள்.

'நீங்கள் ஒண்ணுக்கும் யோசனை பண்ண வேண்டாம். அவர் ஆபத்திலே மாட்டிக்கொள்ள மாட்டார். எதற்கும் நான் பார்த்துக் கொள்கிறேன். இதோ புறப்படுகிறேன்!' என்றார் கோபாலன்.

சூர்ய பவன் ஹோட்டலைத் தாண்டும்போது சாம்பு தயங்கி நின்றான். அதனுள்ளிருந்து இரண்டு பேர்வழிகள் இறங்கி வெளியே வந்தார்கள். பெரிய விளக்கடியில் அவர்கள் முகத்தை, சாம்பு நிமிஷத்தில் கண்டுகொண்டான். டவாலி உடையிலிருந்த சாம்புவைக் கவனிக்காமலே அவர்கள் பேசிக்கொண்டு வந்தார்கள்.

'கிடக்கிறான், சாம்பு! அவன் எதையும் கண்டுபிடிப்பான் என்று தோன்றவில்லை. என்னைக் கேட்டால், ஏதானும் தொந்தரை தான் வருமென்று பயமாக இருக்கிறது.'

'பின் என்னதான் செய்யலாம்?'

'இனிமேல் உழப்புவதில் பிரயோசனம் இல்லை. இன்றைக்கு ராத்திரி பன்னிரண்டு மணிக்கு அந்த ஷண்முகசுந்தரத்தின் வீட்டிலே புகுந்து, இரண்டு பெண்பிள்ளைகளையும் கட்டிப் போடுகிறேன். விரலில் பந்தம் கட்டிக்கொண்டு கேட்டே னானால் கதறிக்கொண்டு விஷயத்தைக் கக்கிவிட மாட் டார்களா?'

சாம்பு அதற்கு மேல் அங்கே நிற்கவில்லை. கோட்ஸ் ரோடுக்குப் பறந்தான். போனதுமே விஷயத்தைச் சகுந்தலாவிடம் சொன்னான். 'சாமான்கள் கிடக்கிறபடி கிடக்கட்டும்! நீங்கள் நம்ம வீட்டுக்கு வாருங்கள். முக்கியமானதை மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள்! ஒன்றும் யோசனை வேண்டாம்!' என்றான்.

தங்கை ஸ்டவ்வை மூட்டிக் கொஞ்சம் ஓவல்டின் போடுவதாகச் சொல்லிவிட்டு உள்ளே போனாள்.

சகுந்தலா சாம்புவை நெருங்கினாள். 'உங்கள் அன்புக்கு என்ன கைம்மாறு செய்வதென்று தெரியவில்லை!' என்றாள் உணர்ச்சியுடன்.

சாம்பு அவளை அணைத்தாற்போல் நின்றான். ஒருபுறம் நெஞ்சு திக்திக்கென்று அடித்துக்கொண்டது; ஒருபுறம் விவரிக்க முடியாத ஆனந்தம். 'சகுந்தலா! அவசியமானால் உனக்கு ஆண் வேஷம் போட்டுக்கூட உன்னைக் கொண்டுபோவேன்! பயப்படாதே!' என்றான் சாம்பு.

சகுந்தலா, சாம்புவை விறைக்கப் பார்த்தாள். அவன் முகத்தில் வழிந்த அசட்டைப் பார்த்து, கபகபவென்று சிரித்துவிட்டாள்.

தங்கை ஓவல்டினைக் கொண்டு வைத்துவிட்டு, கதவைச் சாத்திக்கொண்டு மாடிக்குப் போனாள்.

சகுந்தலாவுடன் நெருக்கமாக ஹாலிலிருந்த சோபாவில் உட்கார்ந்துகொண்டான் சாம்பு. வேம்புவின் நினைவு மாறி மாறி வந்தது. பரம சாதுவாச்சே அவள்! அவளுக்குத் துரோகம் செய்வதா? ஆனால், சகுந்தலாவின் கண்களோ அவன் மூளையை மயக்கின. ஒரு கையை அவள் கழுத்தில் அணையவிட்டு, பவுடர் பூசின கன்னத்தை இச்சையுடன் வருடினான். இதென்ன கூத்து, சொரசொர என்கிறது கன்னம்! வேம்புவின் கன்னம் இப்படி இருக்கவே இராதே!

வெடுக்கென்று அவன் கையை உதறி எறிந்துவிட்டு எழுந்தாள் சகுந்தலா. 'போக்கிரிக் கழுதை! உன் அயோக்கியத்தனத்தைக் காட்டுகிறாயா?' என்று கர்ஜித்தாள். குரல் முற்றும் மாறியிருந் தது! சாம்பு நடுநடுங்கிப் போனான். ஏதோ ஆபத்து நெருங்கி விட்டது, ஓடிவிடு என்று அந்தராத்மா கூறிற்று. ஒரே பாய்ச்சலில் ஓடி, வாசல் கதவைத் திறந்துவிட்டான்.

மின்சார விளக்கு வெளிச்சத்தில், பளபளவென்று மின்னல் வேகத்தில் ஒரு சூர்க்கத்தி அவனைத் தாண்டி வாசலில் விழுந்தது. அப்போதுதான் நுழைந்த இன்ஸ்பெக்டர் கோபாலன், அதைக் குனிந்து எடுத்தார். 'என்ன ஓய்! கத்தி விளையாட்டு நடக்கிறதோ இங்கே? ஹூம்!' என்றார் அவர்.

சாம்புவின் நாக் குழறிற்று. 'அவன் கன்னம் சொர சொரவென் றிருக்கிறது என்று தொட்டேன். கோவிச்சுண்டுட்டாள்!' என்று உளறினான் அவன்.

கோபாலன் புருவத்தை நெரித்துக்கொண்டு பார்த்தார். சகுந்தலா ஸ்தம்பித்துப்போய் நின்றாள். இதை அவள் எதிர்பார்க்க வில்லை. அந்த சமயத்தில், தங்கை மாடியிலிருந்து ஷண்முக சுந்தரத்தின் படத்துடன் இறங்கி வந்தவள், கல்லாகச் சமைந்து போய் விட்டாள்.

'ஏன் சாம்பு! யாரையோ காணோமென்று வந்தீராமே? எனக்கா னால் வைரத்தைப் பார்த்துத் தருகிறேன் என்றீர், ஹூம்?' என்று கேட்டார் கோபாலன்.

'அதோ! அந்தப் படத்தை முதலில் கையில் வாங்கிக் கொள்ளுங் கள்!' என்றான் சாம்பு.

'அடப்பாவி மனுஷா!' என்றாள் சகுந்தலா. அவள் குரல் இப்போது புருஷக் குரலாகவே இருந்தது.

'ஓஹோ! அப்படியா?' என்று இன்ஸ்பெக்டர் சகுந்தலாவின் ஜடையைப் பிடித்து இழுத்தார். பின்னல் கையோடு வந்து விட்டது! சாம்பு மூக்கைத் தடவிக்கொண்டு அசட்டு விழி விழித்தான். போட்டோவிலிருந்த ஷண்முகசுந்தரந்தான் அது! அவனைக் காதலித்த சகுந்தலா ஆண் பிள்ளையா?

'ஓய் சாம்பு! இது பெண்பிள்ளை அல்ல என்பதை ஊர்ஜிதம் பண்ணிக்கொள்ளத்தான் மெல்ல மோவாய்க் கட்டையைத் தடவிக் கொடுத்தீரோ? அதில் கோபம் வந்துவிட்டதாக்கும் இவருக்கு!' என்று சிரித்தார் கோபாலன்.

போட்டோவின் பிரேமைப் பிரித்தபோது, மெழுகை உள்ளே சமமாக ஊற்றி, அதில் எல்லா வைரக் கற்களையும் பதித்திருந்தது! சாம்புவுக்கு, ஓவல்டினில் மயக்க மருந்தைக் கொடுத்திருப்பாள் என்றே தைரியமாகத் தங்கை, படத்தைக் கொண்டு வந்திருக்கிறாள். ஆனால் நடந்திருந்தது வேறு! திருட்டுக்குக் காரணமாயிருந்தவர்கள், இரண்டு பக்தர்கள் தான்! பக்கத்துப் பிரகாரத்தில் பஜனை பண்ணி, ஜனங்கள் கவனத்தை ஒருபுறமாக இழுத்துவிட்டு, அந்தச் சமயத்தில் ஷண்முகசுந்தரத்தைக் கொண்டு கற்களைத் திருட வைத்திருக்கிறார்கள். தங்கள்மீது சந்தேகமே வராமல் இருப்பதற்காக குருக்கள் வீட்டில் ஒரே ஒரு நகையை மட்டும் வீசியிருக்கிறார்கள். ஆனால், ஷண்முகசுந்தரத் துக்கு, எல்லாக் கற்களையும் சேர்ந்தாற்போல் பார்த்தபோது, தானே அவற்றை வைத்துக்கொள்ள வேணுமென்ற ஆசை வந்து விட்டது. தான் ஓடிவிட்டதுபோல் பாசாங்கு செய்து, பெண் வேஷம் போட்டுக்கொண்டு திரும்பி வந்து மனைவியுடன் ஓடிவிட யத்தனம் செய்திருக்கிறான். சாம்புவிடம் கேஸ் வந்து விடும் என்று பயந்து, அவனை முதலில் மடக்கிப் போட்டு விடவே இந்தக் காதல் நாடகம் நடத்தி இருக்கிறான்!'

'அந்த பக்தர்களுக்கு என்ன ஏற்பாடு? ' என்றார் கோபாலன்.

'அவர்களையும் இங்கே பன்னிரண்டு மணிக்கு வரவழைக்க, இந்த மனுஷன் சூழ்ச்சி செய்திருக்கிறான்!' என்றான் ஷண்முக சுந்தரம் குரோதமாக.

'ஏன் காணும் சாம்பு! என்னை இப்போ வரவழைக்கக்கூட, சூழ்ச்சிதான் செய்தீரோ வேம்புவிடம் சொல்லி!' என்றார் கோபாலன்.

•

அன்றிரவு சாம்பு வேம்புவிடம், 'தான் ஏகபத்தினி விரதத்தில் ஸ்ரீராமச்சந்திரமூர்த்திக்கு நிகர்!' என்று மன்றாடிச் சொல்லிக் கொண்டிருந்தான்.

'எனக்குத் தெரியாதா? நீங்கள் சொல்ல வேண்டுமா? எனக்குச் சந்தேகமே கிடையாதே!' என்றாள் வேம்பு.

49

சுந்துவின் சிறுகதை

கதர் வேஷ்டியும் ஜிப்பாவும் போட்டுக் கொண்டு, ஒரு தோல் பையையும் இடுக்கிக் கொண்டு மூக்குக் கண்ணாடி அணிந்த ஓர் இளைஞர் சாம்புவைப் பார்த்து ஒரு புன்னகை செய்து, 'உங்களை ஆசிரியர் பார்த்துவிட்டு வரச் சொன்னார். ஹி, ஹி!' என்றார்.

'என்ன விசேஷமோ?'

'நான் கொடுக்கு பத்திரிகையின் உதவி ஆசிரியர். கார்த்திகை மாசத்தில்தான் கொடுக்கு பத்திரிகையின் வருஷாந்திர மலர் வெளியாவது வழக்கம். அதில் உங்கள் கட்டுரை ஒன்று வந்தாக வேண்டுமென்று ஆசிரியர் ரொம்பவும் விரும்புகிறார். 'எப்படியும் வாங்காமல் வந்துவிடாதே, என்று அவர் என்னிடம் பொறுப்பை ஒப்புவித்து விட்டார்!' என்றார் அவர்.

'அடே! இது புது விவகாரமாக அல்லவா இருக்கிறது!' என்று நினைத்தான் சாம்பு. பிராபல்யமடைந்து பெரிய மனுஷன் ஆவதில் எவ்வளவு தொந்தரவு இருக்கிறது!

'மாட்டேன் என்று மட்டும் நீங்கள் சொன்னீர்களோ அப்புறம் நான் ஆபீஸுக்குப் போக முடியாது!' என்று எச்சரித்தார் உதவி ஆசிரியர்.

'ஹி, ஹி! சொல்கிறது சரிதான்! ஆனால் நான் யாருக்கென்று எழுதுவது? இன்றைக்குவரை இருபது பேர் கேட்டுவிட்டுப் போய்விட்டார்கள். நீங்கள் கேட்பது இருபத்தொன்றாவது பத்திரிகைக்கு! உங்களுக்கு எழுதினால் அப்புறம் எல்லாருமே என்னை மொய்த்துக்கொண்டு விடுவார்களே!' என்று தைரியமாகப் புளுகினான்.

'அதெல்லாமில்லை!'

'என்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்? அப்புறம், நான் துப்பறியும் தொழிலை விட்டுவிட்டு, கட்டுரை எழுதுகிற தொழில் ஆரம்பித்துவிட வேண்டியதுதான். போங்கோ!'

'என்ன ஸார்! எங்கள் கொடுக்கில் ஒன்றே ஒன்று கொடுங்கள். அப்புறம் நாங்கள் தொந்தரவு செய்கிறதில்லை. உங்களுக்கு இஷ்டப்பட்ட சப்ஜெக்ட் எடுத்துக் கொள்ளுங்கள். நாலே நாலு வரி எழுதினாலுங்கூட போதும், என்ன?'

'இதென்னடா தொல்லை! கொடுக்கை வைத்துக்கொண்டு இப்படிக் கொட்டுகிறானே!' என்று நினைத்த சாம்பு தாற்காலிகமாகத் தப்பித்துக்கொள்ள, 'சரி! அதற்கென்ன, பார்க்கலாமே!' என்று அவரை அனுப்பினான்.

'ரொம்ப நமஸ்காரம், ஸார்! அவ்வளவுதான் வேண்டியது!' என்று எழுந்தார் அவர்.

அதற்குப் பிறகு அந்தப் பேர்வழி சாம்புவின் வீட்டுக்கு நடத்த நடைக்கு அவர் காலுக்கு எண்ணெய்ப் பாளந்தான் போட வேண்டும்! காலையில் வந்தால், சாயந்திரம் வா என்றான் சாம்பு. சாயந்திரம் வந்தால், பீரோவுக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு இல்லை என்று சொல்லச் சொன்னான். ராத்திரி வந்தால் தூங்குகிறதாகச் சால்ஜாப்பு; பகலில் வந்தால் எழுந்திருக்கவில்லையென்ற காரணம். 'பூஜை செய்கிறார்', 'வெளியே கிளம்பிக்கொண்டிருக்கிறார்', 'நல்ல வெயிலில் வந்தீர்களே!', 'அடாடா மறந்தே போய்விட்டேன்' - இப்படி நூறு வியாஜங்கள்.

கடைசியில் 'உடம்பே சரிப்படவில்லை' என்று சொல்லி மூன்று மாதங்களை ஓட்டிவிட்டான். பத்திரிகைக்காரருக்கும் கோபம் வந்தது.

சாம்புவின் வழுக்கைத் தலையை வாசல் ஜன்னல் வழியாகப் பார்த்திருக்கிறபோது, வேம்பு வந்து, அவர் சைதாப் பேட்டைக்குப் போய்விட்டார் என்றால் ஏன் கோபம் வராது? 'பெரிய மனுஷனாம், பெரிய மனுஷன்!' என்று காறி உமிழ்ந்து விட்டுப் போனார். ஆனாலும், சோழனைப் பிடித்த பிரம்மஹத்தி போல் விடாது வந்துகொண்டிருந்தார். 'இவனுக்காச்சு, எனக்காச்சு! கட்டுரை வாங்காமல் போகிறதில்லை!' என்று வைராக்கியம் செய்துவிட்டார் அவர்.

பத்திரிகைக்காரரை உத்தேசித்து சாம்பு அடிக்கடி வெளியில் போகவேண்டி வந்தது. அப்படிப் போன ஒரு சமயம் டவுன் ஹாலில் ஓர் இளைஞனின் சிநேகிதம் கிடைத்தது. இளைஞனும் சாம்புவின் பெயருக்கும் புகழுக்கும் மனத்தைப் பறிகொடுத்து இழைந்துவரக் காத்திருந்தான். இருவருமாகப் பார்க்கில் உலாவி வரத் தொடங்கினார்கள். சுமார் முப்பது வயதுள்ள அவன், ஜரிகை ஓர் இழையாவது இல்லாமல் வேஷ்டி கட்டுவதில்லை, அங்கவஸ்திரம் போடுவதில்லை என்று பெருமை அடித்துக் கொண்டான். அவன் பசையுள்ளவனாம்! சாம்புவின் பழைய கேசுகளைப் பற்றியெல்லாம் ஆவலுடன் விசாரித்தான். தற்போது ஏதானும் கேஸ் கையில் இருக்கிறதா என்றும் கேட்டான்.

சாம்புவின் பேச்செல்லாம் கூடியவரை வேம்புவைப் பற்றியதாகவே இருந்தது. 'ஸார்! எங்கள் வேம்புவைப் போல் புத்திசாலி கிடையாது! என் மனத்தை நன்றாக அறிந்துகொண்டு விட்டாள் ஸார் அவள்!' என்பான் அடிக்கடி.

'அதுதானே ஸார் வேண்டும் மனுஷ்யனுக்கு! பெண்டாட்டியை மேன்மையாக, பாதி என்று சொன்னதற்குப் பின் அர்த்தந்தான் என்ன? நான் நாளைக்குக் கொண்டுவந்து காட்டுகிறேன் பாருங்கள்! எட்டு வருஷத்துக்கு முந்தி எங்க காலேஜ் பத்திரிகையில் சம்சாரத்தைப் பற்றி ஒரு கட்டுரை எழுதி இருக்கிறேன். நீங்கள் அதை ரொம்ப ரசிப்பீர்கள்!'

'அடடே! நீங்கள் கட்டுரைகூட எழுதுவீர்களோ!'

'கட்டுரை மட்டுமா? ஹூம் எத்தனை கதைகள் எழுதியிருக்கிறேன் பத்திரிகைகளுக்கு!'

சாம்பு மனத்துக்குள் தீர்மானம் செய்து கொண்டான். ஒருகால் அந்தப் பத்திரிகைக்காரர் தொந்தரவு ஜாஸ்தியாகப் போனால், இந்த ஆசாமி மூலமாக ஒன்றை ஏற்பாடு பண்ணிவிட்டால் போச்சு!

ஆனால், சாம்பு எவ்வளவுக்கெவ்வளவு கதை எழுதுவதை ஒத்திப் போட்டானோ அவ்வளவுக்கவ்வளவு சுந்து அதில் மும்முரமானான். அவன் கதை எழுதத் தொடங்கிய போது, வீட்டிலுள்ள பேப்பர்களுக்குத் தலைவலி ஆரம்பித்தது. 'இரண்டு பரங்கிக் காய்கள்', 'ராஜாவும் பெண்டாட்டியும்', 'ஏழு உயிரைக் கொன்றவன்' என்று கதைகளை எழுதி எழுதிக் கிழித்துப் போட்டான். வேம்பு வெடுக்வெடுக்கென்று எரிந்து விழுந்தாள்.

சுந்து, இப்போது ஒரு நாய்க்குட்டியை வேறு வளர்த்துக் கொண்டிருந்தான். வேம்புவின் குரல் கேட்கும்போதெல்லாம் அதையும் பக்கத்தில் இழுத்து வைத்துக்கொண்டு, வேறொரு திசையில் திரும்பி உட்கார்ந்து, புதிய கதையை எழுதினான். கடைசியாக அவன் எழுதின கதை 'முனிசாமியும் பேப்பர்க்காரனும்' என்பது. அதில் என்னதான் சுவாரஸ்யம் இருந்ததோ, சுந்து முப்பது தடவை அதைத் திருப்பி எழுதி, அவன் நாய்க்குப் படித்துக் காண்பித்தான்.

'முனிசாமியும் பேப்பர்க்காரனும்'

> பேப்பர்காரன் பேப்பர் கொண்டுவந்தான். சின்ன நாய்க்குட்டி வள் வள்ளென்று குலைத்தது. முனிசாமி மூஞ்சிலேயே பேப்பரை விட்டெறிந்தான் அவன் பேப்பர்காரன் மூஞ்சிலேயே பேப்பரைத் திருப்பி எறிந்தான்! நல்லதுதானே?
>
> ஏ.எஸ்.எஸ்.

இதுதான் அவன் எழுதின கதை. இதைச் சாம்புவும் படித்துப் பார்த்து, 'பேஷ்!' என்றான். அடுத்த தடவை பத்திரிகை ஆபீஸிலிருந்து உதவி ஆசிரியர் வரும்போது, சாம்பு பார்க்காத வேளையில், அவரிடம் கொடுத்துவிடுவது என்று சுந்து தீர்மானித்துக் கொண்டான். போகும் இடமெல்லாம், தூங்கும் போதுகூட, அதையும் சுமந்துகொண்டு பத்திரிகைக்காரர் வருகையையே எதிர்பார்த்து சுந்து காத்திருந்தான்.

இந்த சந்தர்ப்பத்தில்தான் ஒரு நாள் மாலை சுந்து அழுது கொண்டு வீட்டுக்கு வந்தான். வேம்பு என்ன கேட்டும் பதில் சொல்லவில்லை அவன். சாம்பு அவன் முதுகைத் தட்டிக் கொடுத்து, சமாதானம் செய்த பிறகு விஷயத்தைச் சொன்னான். அவன் நாய்க்குட்டியுடன் நடராஜா ரோடில் போய்க்கொண்டிருந்த போது, நாய்க்குட்டி ஒரு வீட்டுக் குறட்டுப்பக்கம் போயிற்றாம். திடீரென்று ஒரு சின்னப்பயல் உள்ளேயிருந்து ஓடி விட்டானாம். சுந்து போய்க் கேட்டதற்கு, அந்த வீட்டிலிருந்த ஒருவர், 'இந்த வீட்டில் பையனே கிடையாது. நாய்க்குட்டியும் வரவில்லை, பூனைக்குட்டியும் வரவில்லை! சொப்பனம் கண்டாயோ! போடா போ! என்று விரட்டி விட்டாராம்!' இதைச் சொல்லிவிட்டு, சுந்து மறுபடி ஹோவென்று அழுதான்.

'என்ன அழுகை வேண்டி இருக்கிறது! சனியன் நாய்! சமையற்கட்டெல்லாம் வந்து பாழ் பண்ணிக் கொண்டிருந்தது. நல்ல வேளையில் ஒழிந்தது! பேசாமல் இருங்கள்!' என்றாள் வேம்பு.

ஆனால், சாம்புவின் மனம் அவ்வளவு கடினமாக இல்லை. சுந்துவின் கண்ணீர் அவன் ஹ்ருதயத்தைக் கரைத்துவிட்டது. 'வா! பார்த்துவிட்டு வருவோம்டா!' என்று சுந்துவுடன் கிளம்பினான்.

'அசட்டுக்குச் சரியாக அசட்டுப் பிள்ளை வாய்த்ததே! அதைத்தான் சொல்லணும்!' என்று வேம்பு அலுத்துக் கொண்டாள்.

சுந்துவும் சாம்புவும் பதினைந்து நிமிஷங்களில் நடராஜா ரோட்டை அடைந்துவிட்டார்கள். 'இந்த வீடுதான், அப்பா! இந்த வீடுதான்!' என்று ஒரு சிறிய பங்களாவை, சுந்து காட்டினான்.

வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்த ஒருவர் கடுமையாக, 'நீங்கள் யார் ஸார்?' என்று கேட்டார்.

'பையன் நாய்க்குட்டியை இங்கே விட்டுவிட்டானாம். ரொம்ப அழறான். அதைக் கொஞ்சம் பார்த்து...'

'இங்கே நாய் கீய் ஒண்ணும் வரலை, சார்! நீங்கள்தான் இப்போ வந்திருக்கிறீர்கள்!' என்றார் அவர்.

'கோபப்படக்கூடாது! பயல் சிறுபயல் பாருங்கோ! இங்கேதான் வந்தது என்கிறான். என் பேர் சாம்பு என்பார்கள்.'

'அதென்னவோ, வீம்புதான் காணும் செய்கிறீர்! ஒரு சின்னப் பயல் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு இத்தனை பெரிய மனுஷர் வருவது என்றால், நான் என்னத்தைச் சொல்லுகிறது சார்! இந்த வீட்டில் நான்தான் புருஷக் குழந்தை; என் சம்சாரந் தான் பெண் குழந்தை. வந்து தாராளமாகப் பார்த்துக் கொள்ளும்!' என்றார் அவர்.

சாம்பு உள்ளே நுழைந்தான். அறை அறையாகப் பார்த்தான். ஒரு குழந்தையும் தென்படவில்லை. நாய்க்குட்டியும் தென்பட வில்லை! சுந்துதான் ஒருகால் தவறாகச் சொல்லுவானோ?

'இதே வீடுதான், அப்பா! இந்த மாமாகூட அப்போ நின்று கொண்டிருந்தார்!' என்று சாதித்தான் சுந்து.

'வேறே ரூம் கிடையாதோ இந்த வீட்டில்?' என்றான் சாம்பு.

'இனிமேல் நீங்கள் வாசலிலே போக வேண்டியதுதான். அநாவசியமாக வந்து என்னை இரவு வேளையில் தொந்தரவு செய்யறேளா? இத்தனை பெரியவன் சொல்றதில் நம்பிக்கை இல்லாமே ஹூம்?'

சாம்பு தன் கையில் சுந்துவைப் பிடித்துக்கொண்டு விடுவிடென்று வீட்டுக்குத் திரும்பினான்.

மறுதினம், காலை முதலே சாம்பு ஏதாவது கதை எழுதுவதென்று முனைந்துவிட்டான். வாசக சாலையிலிருந்து ஒரு டஜன் இங்கிலீஷ் கதைப்புத்தகங்கள் வாங்கி, மேஜைமீது போட்டிருந் தான். ஏதாவது இரண்டு கதைகளை இணைத்து, உருத்தெரியாமல் மாற்றி எழுதிவிடுவது என்பதுதான் அவன் செய்திருந்த யோசனை.

அன்று மத்தியானமே பத்திரிகை ஆசாமியிடம் சாம்பு வகையாக அகப்பட்டுக்கொண்டு விட்டான். அகஸ்மாத்தாக வாசல் வந்தவனை, மறைந்துகொள்ளுமுன் பிடித்துவிட்டார் அவர். 'ஸார்! ரொம்ப லேட்டாகி விட்டது! இன்னும் ஒத்திப் போடக் கூடாது, ஸார்!' என்றார் அவர்.

'ஓ! காலை முதல் உங்கள் காரியந்தான்! கதையெல்லாம் ரெடி செய்துவிட்டேனே!' என்றான் சாம்பு.

'பின்னே கொடுத்துவிடுங்கள். டயம் இல்லை சார்!'

'கொஞ்சம் பொறுங்கள்! இன்று ராத்திரி நான் கும்பகோணம் போகிறவன்!' என்றான் சாம்பு.

'ஐயையோ!'

'முடிந்தால் இப்போதே எழுதிக் கொடுத்துவிடுகிறேன்.'

'சார்! சார்! கடைசியில் இல்லை என்று சொல்லிவிடுவீர்கள் போல் இருக்கிறதே, சார்!'

'முடியாமல் போனால், கும்பகோணம் போனவுடனே எழுதி அனுப்பிவிடுகிறேன், நம்புங்கள்!' என்றான் சாம்பு.

பத்திரிகைக்காரர் தவியாய்த் தவித்தார். வேறு வழியில்லாமல், சாயந்திரம் வருவதாகச் சொல்லிவிட்டுப் போனார் அவர்.

பத்திரிகைக்காரர் வந்ததுமே, சுந்து ஒரு துள்ளு துள்ளி உள்ளே ஓடினான். அவன் சிறுகதையை, தேடி எடுத்துக்கொண்டு வர! இந்த சந்தர்ப்பத்தை விடக்கூடாதல்லவா? ஆனால், பாவம்! அவன் எங்கே தேடியும் கதை தென்படவில்லை! கடைசியாக எங்கே வைத்தேன் என்று மண்டையைத் துருவித் துழாவினான். ஹா! முதல் நாள் சாம்புவுடன் நாய்க்குட்டியைத் தேட, அந்த வீட்டுக்குள் நுழைந்தபோது அது கையில் இருந்தது. திரும்பி வந்தபோது அது இல்லை! அந்தவீட்டில்தான் எங்கேயோ மறதி யாக வைத்துவிட்டான்! இப்போது கொண்டுவர வேண்டுமே!

சாம்புவை அழைத்தால் வரமாட்டானென்று சுந்துவுக்குத் தெரியும். ஆகவே, தனியே ஓடினான். வழியில் எதிரே மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்தார் இன்ஸ்பெக்டர் கோபாலன்.

'அப்பா இருக்கிறாராடா?' என்றார் அவர் சைக்கிளை நிறுத்தி.

'இருக்கார், மாமா! உங்களையும் அழைத்துக்கொண்டு போய்த் தான் என் கதையைப் பொறுக்கிக்கொண்டு வரச்சொன்னார் அப்பா!' - இது சுந்துவின் கைச்சரக்குதான்.

'என் பின்னால் ஏறிக் கொள்!' என்றார் கோபாலன். போகும் போதே சுந்து, முதல் நாள் நடந்த கதையைச் சொல்லி விட்டான்.

'டபடப' சத்தத்தைக் கேட்டு வாசற்கதவைத் திறந்தார் அந்த வீட்டுக்காரர். சுந்துவைப் பார்த்துப் பல்லை நெரித்துவிட்டு, 'இந்தப் பயல் படுத்துகிற பாடு, ஹூம்!' என்றார் வெறுப்புடன்.

கோபாலன் சிரித்து, 'பசங்கள் பசங்களாகத்தான் இருப்பார்கள்! நாம் என்ன பண்றது? ஏதோ கதையாமே, இங்கே போட்டுவிட்டானாம். கொஞ்சம் பார்த்து எடுத்துக் கொள்ளட்டும்!' என்றார்.

அநுமதிக்கோ உத்தரவுக்கோ காத்திருக்கவில்லை சுந்து. ஒரே பாய்ச்சலில் பாய்ந்து, மூன்றே நிமிஷத்தில் கதையுடன் திரும்பி விட்டான். 'மாமா! என் கதையில் யாரோ படம் போட்டிருக்கா பாரு, மாமா!' என்று கூவிக்கொண்டே கோபாலனிடம் அதை நீட்டினான்.

உண்மையில் அந்தக் காகிதத்தில், கதையின் கீழ் ஒரு நாயின் படம் போட்டிருந்தது! அந்தப் படத்தை ஓர் ஏழெட்டு வயதுக் குழந்தைதான் போட்டிருக்க முடியும். கோபாலன் நெற்றிப் பொட்டை இருமுறை தட்டிக்கொண்டார். சுந்து சொன்ன வரலாறில் உண்மை இருக்குமோ?

'ஏன் சார்! இங்கே குழந்தை எதுவுமே இருந்ததில்லை என்பது வாஸ்தவந்தானோ?' என்று கேட்டார் கோபாலன் சந்தேகத்துடன்.

'வாஸ்தவம், ஸார்!'

'என் மோட்டார் சைக்கிள் இங்கே இருக்கட்டும். என்னோடு நீர் சாம்பு வீடுவரை வந்துவிட்டுப் போகிறீர்களா?'

இன்ஸ்பெக்டர் குரல் இதமாகத்தான் தொனித்தது. ஆனால், அதை மீறினால் விபரீதம் ஏற்படும் என்பதை அந்த வீட்டுக்காரர் உணர்ந்துகொண்டார். 'வீணாக அற்ப விஷயத்தைப் பெரிதாக்குகிறீர்கள், சார்! நான் வரேன், எனக்கு ஆட்சேபணை இல்லை. அப்புறம் நீங்கள்தான் வருத்தப்படுவீர்கள்!' என்றார்.

•

தன் அறைக்குப் போன சாம்புவுக்கு, பத்திரிகைக்காரரை மேலும் விரோதித்துக் கொண்டால் ஆபத்து வருமோ என்ற பயம் வந்தது. அவன் சால்ஜாப்பையெல்லாம் ஆசிரியர் ஒரு கட்டுரையாக எழுதிப் பிரசுரித்துவிட்டால்? ஆகவே, தெரிந்தவரையில் ஏதோ கதையை எழுதி எறிந்து விடுவது என்று தீர்மானித்தான். கதை எழுதிப் பழக்கமுள்ள பாலசுந்தரத்தைக் கூப்பிட்டு, அவரிடம் தன் கதையைச் சொல்லிப் பார்த்து, முடிவையும் சரி செய்து

கொள்ளலாம் அல்லவா? டெலிஃபோனில் அவரை உடனே அழைத்துவிட்டு, வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

நண்பர் ஐந்தே நிமிஷத்தில் ஓட்டமாக வந்துவிட்டார். 'என்ன ஸார்? ஏதானும் விசேஷமோ என்று வந்தேன்!' என்றார் அவர்.

'ஒன்றுமில்லை! உம்மை ஒரு விஷயம் கேட்டு, சந்தேகம் தெளிந்துகொள்ள வேண்டும். எனக்காக எதையும் ஒளிக்கக் கூடாது! சரியான ஜவாபு கொடுக்க வேண்டும். அத்தனையும் பத்திரிகையில் வெளியாகி ஆயிரக்கணக்கான பேர் வாசிக்கிற விஷயமாக்கும்!'

'பீடிகை பலமாக இருக்கிறதே!' என்று நண்பர் முகத்தை நீட்டி வாயைப் பிளந்துகொண்டு, உட்கார்ந்து கேட்கத் தயாரானார்.

சாம்பு கம்பீரமாகக் கனைத்துவிட்டுக்கொண்டான்.

'ஒரே ஒரு தனவந்தர் இருக்கிறார். வாரிசு ஒரே ஒரு பிள்ளைதான் இருக்கிறான். அந்த வாரிசைக் கொண்டுபோய் மறைத்து விடுகிறான் ஒருவன். அவன் ஏன் அப்படிச் செய்கிறான், தெரியுமா?'

'தெரியாது, சொல்லுங்கள்!' என்று மென்று விழுங்கினார் அவர்.

'கேளுங்கள் கதையை! அதுதான் சுவாரசியமான கட்டம்! எத்தனை சிரமப்பட்டு நான் கண்டுபிடித்திருக்கிறேன், தெரியுமா? தினம் வாக் போகிறபோதெல்லாம் உம்மோடு பேசுகிறாற்போல் நீர் நினைத்துக்கொண்டிருப்பீர்! என் மனம் இதில்தான் வேலை செய்யும்! எதற்காகக் கொண்டு போகிறான்? பையனை மறைத்துவிட்டால், அடுத்த வாரிசு அவன்தான்! எப்படி அவன் யோசனை?'

'பேஷ்!' - குரல் சற்றே கம்மியிருந்தது பாலசுந்தரத்துக்கு.

'ஆனால், போலீஸ்காரர்கள் சும்மாயில்லை. இதைச் சந்தேகப்பட்டு அந்த இடத்தை வளைய வளைய வருகிறார்கள். அவன் இப்போது விழித்துக்கொள்கிறான். குழந்தையை வேறெங்கேயானும் மறைவாகக் கொண்டு போக வேண்டும் அல்லது அகப்பட்டுக்கொள்ள வேண்டும்!'

'ஹூம்?'

'சும்மா கேட்டுக்கொண்டேயிருந்தால்? நீர் பதில் சொல்ல வேண்டும். எனக்கு அப்போதுதானே உபயோகமாக இருக்கும்! சாம்பு எழுந்து நின்றுகொண்டான். அதற்கு மேல்தான் கதை சிடுக்காக இருக்கிறது! குழந்தையை இப்போது எங்கே கொண்டு போய் வைக்கிறான்? அதுதான் கேள்வி! பதில் சொல்லும்!'

'எனக்கென்ன தெரியும்?'

'சும்மா அப்படிச் சொல்லித் தப்பித்துக்கொண்டால் நான் விட்டு விடுவேனா? உம்மிடம் அதற்கு பதிலைக் கேட்டுக்கொள்வது என்றுதானே உம்மை வரவழைத்திருக்கிறேன். இன்று ராத்திரி கும்பகோணம் போகவேண்டும் எனக்கு! என் ஒய்ப் இனிமேல் இருக்க முடியாது என்கிறாள். சீக்கிரம் சொல்லும், குழந்தை எங்கே?' என்றான் சாம்பு.

இரண்டு நிமிஷங்களாக வாசற்படியில் தயங்கிய கோபாலன், உள்ளே நுழைந்தார் அந்த வீட்டுக்காரருடன். 'என்ன சாம்பு! கடைசியில் பாலசுந்தரத்தையே மடக்கிவிட்டீர் போலிருக்கிறது! கேட்டதற்குப் பதிலைச் சொல்லும். குழந்தை எங்கே?' என்று திருப்பிக் கேட்டார் கோபாலன்.

வீட்டுக்காரர், சாம்புவின் புதிய தோழனிடம் 'எல்லாம் தெரிந்து போய்விட்டது!' என்கிற பாவனையில் உதட்டைப் பிதுக்கி ஜாடை செய்தார். பிறகு, 'ஏன் இனிமேல் வளர்த்த வேண்டும்? குழந்தையை இப்போது எழும்பூர் ஹோட்டல் ஒன்றிலே கொண்டு வைத்திருக்கிறோம். இன்று இரவு கும்பகோணம் கொண்டுபோவதாகத் தீர்மானித்திருந்தோம். அந்தக் குழந்தை நடராஜா ரோடில் இருந்தது யாருக்குமே தெரியாது. இந்தச் சாம்புவின் பிள்ளை நாயைக் கொண்டு வரவே, நானும் சிறிது அஜாக்கிரதையாக இருந்துவிட்டேன். அது வெளியாகிவிட்டது!' என்றார் அவர்.

சாம்பு விழித்தான். அவன் இட்டுக்கட்டிக் கதையைச் சொன்னதற்கும் இதற்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறாற் போல் இருக்கிறதே!

'அப்புறம் இந்தப் பயல் இவன் தகப்பனாரைக் கூட்டி வந்தபோது ஓர் அறையை மட்டும் காண்பிக்காமலே ஏமாற்றி அனுப்பிவிட்டேன். ஆனால், இந்தப் பயல் ஒரு காகிதத்தைப் போட்டிருக்கிறான் போலிருக்கிறது. அதில் அந்தக் குழந்தை,

அப்புறம் ஒரு நாயின் படத்தைப் போட்டிருக்கிறது. நான் அதையும் கவனிக்காமல் போனேன். என்னைக் காட்டிக் கொடுத்துவிட்டது அது!' என்றார் அவர்.

கோபாலன் மேலும் விவரித்தபோது விஷயம் நன்றாகப் புரிந்தது சாம்புவுக்கு. சாம்புவின் புதிய நண்பன், தனவந்தரான ஒரு வியாபாரியினுடைய தம்பியின் மாப்பிள்ளை வியாபாரி யினுடைய ஒரே மகனைக் கொண்டுபோய்விட்டால் சொத்து பூராவும் தனக்குக் கிடைக்கும் என்று, அவனை அந்த வீட்டில் ஒளித்து வைத்திருக்கிறான். ஒருகால் கேஸ் சாம்புவிடம் வந்தாலும் வரும் என்று மாப்பிள்ளை, புதிய தோழமைக் கோலத்தில் சாம்புவைச் சுற்றியிருக்கிறான். ஒன்றுமே தெரியாததுபோல் பாசாங்கு செய்த சாம்பு, இப்போது அதைக் கதையாகவே சொல்லி வாக்குமூலத்தை வாங்கப் பார்க்கிறான்! யமகாதகன்!

'இந்தச் சாம்பு முதலில் பையனை விட்டுக் கதையை அந்த வீட்டில் வேண்டுமென்றே போடச் சொன்னார் என்பது இப்போ தாவது தெரிகிறதா? குழந்தைகள் மனத்தைத் தெரிந்துகொண்டு புத்திசாலித்தனமாகச் செய்த காரியம் இது ஓய்!' என்றார் கோபாலன்.

மாப்பிள்ளை காலைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினான். 'இனிமேல், இந்த ஜன்மத்தில் இம்மாதிரிக் காரியம் செய்வ தில்லை. செய்தால், என்னை ஜோட்டால் அடியுங்கள்; சித்திரவதை செய்யுங்கள்; இப்போது மட்டும் என்னைக் காட்டிக் கொடுத்துவிடாதீர்கள்!' என்றான்.

வீட்டுக்காரரைக் கோபாலன் அறைந்த அறையில், மாப்பிள்ளை குலை நடுங்கிப் போய்விட்டான். கோபாலன், 'நீர் கும்பகோணம் போக எத்தனை டிக்கெட் வாங்கியிருக்கிறீர், ஓய்!' என்று அதட்டிக் கேட்டார் அவனை.

'இரண்டரை பர்ஸ்ட் கிளாஸ்!'

'அப்படியே அதைச் சாம்புவிடம் கொடும்! இன்று ராத்திரி அவர் கும்பகோணம் போகிறார். நீர் எழும்பூரில் போய், அந்தக் குழந்தையை அழைத்துக்கொண்டு வீட்டில் கொண்டுவிடும்! மறுபடி இந்த மாதிரி நடந்ததோ...'

'நடக்காது, ஸார்! புத்தி வந்தது!' என்றான் மாப்பிள்ளை.

பத்திரிகைக்காரர் சிறிது நேரத்துக்கெல்லாம் வந்த போது, சாம்பு தன் வழுக்கையைத் தடவிக்கொண்டான். கதை தயாராக வில்லையே!

இந்தக் கதையையே எழுதிக் கொடுத்துவிடுவதாக சாம்பு சொல்லி, கோபாலனும் உத்தரவாதம் கொடுக்கவே பத்திரிகைக் காரர் ஒரு வழியாகச் சமாதானமடைந்து போக வேண்டி வந்தது!

அன்றிரவு போட்மெயிலில் சாம்புவையும் வேம்புவையும் அனுப்ப, கோபாலன் தம்பதி சென்றனர்.

வேம்பு, வெளிரடித்த தன் அழகிய முகத்தை வெளியில் நீட்டி லக்ஷ்மியிடம், 'மாமி! கடுதாசி போடுகிறீர்களா?' என்று கேட்டாள் வழக்கமான புன்னகையுடன்.

லக்ஷ்மி, வேம்புவின் கையை அன்புடன் பற்றிக் கொண்டு, 'குழந்தை பிறந்த உடனே தந்தி அடித்து விடணும், மறக்கப் படாது!' என்றாள்.

டண் டண் டண் என்று மணி அடித்தது. நாணம் வந்து சூழ்ந்து கொள்ள, வேம்பு தன் முகத்தை மறைத்துக்கொள்ள முயன்ற போது ரயிலும் மெதுவாக நகர்ந்தது.

50

லண்டனில் மூன்று நாள்

அகில இந்திய போலீஸ் கமிஷ்னர்கள் மகாநாடு ஒன்று நடந்ததும், அப்போது தன் வீரச்செயல்கள் வானளாவப் புகழப்பட்ட தும், சாம்புவின் காதுகளுக்கு எட்ட பிரமேயமே இல்லை.

இந்தப் பேச்சு அங்கேயே நிற்கவில்லை. இங்கிலாந்தில் உள்ள பிரசித்தி பெற்ற துப்பறியும் ஸ்தாபனமான ஸ்காட்லண்ட் யார்டின் பிரதம கமிஷ்னர் ஸர் ஜான் ஸ்மித் தின் காதில் போய் அது விழுந்தது. கோல்ட் ஸ்டீன் என்ற பெரிய வர்த்தகரின் பங்களாவில் அந்தக் கமிஷ்னர் டின்னர் சாப்பிட்டுக் கொண்டிருந்த சந்தர்ப்பம் அது. ஸர் ஜான் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார். 'ஓஹோ! அப்பேர்ப்பட்ட புத்திசாலி இருந்தால், நாம் கூட தருவிக்கலாமே இங்கே!' என்றார் அவர்.

சாம்புவின் படத்தையே கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த கோல்ட்ஸ்டீன் முகத்தில் திடீ ரென்று ஒரு பிரகாசம் ஏற்பட்டது. 'ஸர் ஜான்! நீங்கள் சொன்ன அளவில் அதை நிறுத்திக் கொள்ளக் கூடாது. இந்த மனுஷனை உடனே



வரவழைக்க வேண்டும். சீக்கிரமே ஏற்பாடு செய்யுங்கள்!' என்றார் உத்ஸாகமாக.

ஸர் ஜான் தமது நெற்றிப்பொட்டை அமுக்கிவிட்டுக் கொண்டார். 'ஆகட்டும்! அவனுக்கு நெரடான ஒரு வேலை கொடுக்கிறேன்!' என்றார் ஆழ்ந்த யோசனையுடன்.

கும்பகோணத்திலிருந்து திரும்பியதுமே சாம்புவுக்குக் கமிஷ்னர் துரை கூப்பிடுகிறார் என்ற செய்தி காத்துக்கொண்டிருந்தது. கோபாலனை அழைத்துக்கொண்டு அவசரமாகப் போனான்.

'குட் மார்னிங், மிஸ்டர் சாம்பல்! உங்களுக்கு அதிர்ஷ்டம் காத்திருக்கிறது!' என்றார் துரை.

சாம்பு மூக்கைத் தடவிக்கொண்டு மூலைக்கு மூலை பார்த்து விழித்தான்.

'நீங்கள் இங்கிலாந்துக்குப் போய்விட்டு வரவேண்டும் ஸார். ஆமாம், இங்கிலாந்தில் ஸ்காட்லண்ட் யார்டுக்குத்தான்! ஒன்றும் விசேஷமில்லை. கமிஷ்னருக்கு உங்களைப் பார்க்க வேண்டு மென்று ஓர் ஆவல்! போய் வாருங்கள், மிஸ்டர் சாம்பல்!' என்றார்.

சாம்பு இரு மூச்சுகளைச் சேர்த்து ஒன்றாக விட்டான். இதென்ன கூத்து! போதாத வேளையா?

'ஒன்றும் உமக்குச் சிரமமேயிராது. அங்கே மிக தனவந்தரான ஒரு வியாபாரி மிஸ்டர் கோல்ட்ஸ்டீன் என்பவர் - உம்முடைய செலவு பூராவையும் ஏற்றுக் கொள்கிறாராம். போய் வாரும், ஸார்! நல்ல ஆப்பர்ச்சுனிட்டி இது! நான் இன்று காலையிலே பிளேனுக்கு ஏற்பாடு செய்துவிட்டேன். இந்த வாரக் கடைசியில், கிளம்பத் தயாராய் இரும். குட்மார்னிங்!' என்றார் துரை.

சாம்புவை, சீமைக்குப் போய்வரும்படிச் செய்வதற்குள் கோபாலன் பாடுதான் திண்டாட்டமாகிவிட்டது. 'நீரும் வாரும்! அப்போதுதான் போவேன்!' என்று ஒற்றைக் காலால் நின்றான். அவன்.

'அதெல்லாம் நன்றாயிராது, சாம்பு! நீர் ஒன்றும் யோசிக்காமல் போய்விட்டு வாரும். வேம்பு பிரசவித்த சமாசாரந்தானே

கொழும்பு தமிழ்ச் சங்கம்

நூலகம்

உமக்குத் தெரியணும்? சேதி வந்தவுடனே, நான் கேபிள் செய்துவிடுவேனே! எனக்குத் தெரியாதா?' என்று பலவாறு சமாதானம் சொல்லி அனுப்பினார் இன்ஸ்பெக்டர்.

•

இந்திரலோகம் எப்படியெல்லாம் இருக்குமென்று சாம்பு கற்பனையில் பார்த்திருந்ததைவிட ரம்யமாக இருந்தது லண்டன் மாநகரம். அவன் திகைத்துப் போனான். எந்தப் புறத்தை முதலில் பார்ப்பது, எதை அப்புறம் பார்ப்பது என்று புரியாமல் சுற்றிச் சுற்றிப் பார்த்து, மயக்கம் போடும் நிலையையே அடைந்து விட்டான்.

சாம்புவை வரவேற்று, கூடவே அழைத்துச் சென்றார் பிரதம கமிஷ்னர் ஸர் ஜான். அன்றிரவு நடந்த பெரிய விருந்தின்போதும், சாம்புவின் வலப்புறம் கமிஷ்னரும், இடப்புறத்தில் கோல்ட் ஸ்டீன் துரையும் புன்னகை நிரம்பிய வதனத்துடன் அமர்ந்திருந் தார்கள்.

டின்னருக்குப் பிறகு சாம்புவை, கோல்ட்ஸ்டீன் தமது கிருஹத்துக்கு அழைத்துவிட்டுப் போனார். கமிஷ்னர் அவனைத் தமது அறைக்கு இட்டுச் சென்றார். பல விஷயங்களைப் பற்றிப் பேசிவிட்டு, 'மிஸ்டர் சாம்பு! உமது பிரதாபத்தைக் கேள்விப் பட்டே நான் தருவித்தேன். யுத்தம் எல்லாம் முடிந்து சமாதான நிலைமை ஏற்பட்டு வரும் இந்தக் காலத்திலும் நம் பழைய விரோதிகள் ஒரு சிலர் இருக்கக்கூடும் அல்லவா? அப்படி இருக்கிறவர்களில் ஓர் ஆசாமி கள்ள நோட்டுகளை இங்கே ஏராளமாக விநியோகிக்க ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறான் என்று எங்களுக்குச் சமாசாரம் கிடைத்திருக்கிறது...' என்று நிறுத்தினார் அவர்.

சாம்பு, வழுக்கையில் கையை வைத்துத் தடவிக் கொடுத்தான். 'சும்மா கூப்பிடுவார்களா? தொந்தரவு இருக்கிறது!' என்று அவன் எண்ணம் ஓடியது.

'இது சம்பந்தமாக எங்கள் டிபார்ட்மெண்ட் ஒரு ஸ்த்ரீயைச் சந்தேகப்பட்டு கைது செய்திருக்கிறது. அவள் இப்போது அடுத்த அறையில் காத்திருக்கிறாள். அவளை நீரும் கவனித்துக் கொள்ளும். மேற்கொண்டு நடக்க வேண்டியதைப் பிற்பாடு பார்க்கலாம்!' என்றார் ஸர் ஜான்.

அடுத்த அறைக்கு அவர்கள் இருவரும் சென்றபோது, சுமார் இருபது வயதுள்ள ஓர் இளமங்கை அழுது சிவந்த கண்ணும் மூக்குமாக உட்கார்ந்து கைக்குட்டையால் ஒற்றிக் கொண்டிருந் தாள். கமிஷ்னரைக் கண்டதும் இரண்டு துரைகள் எழுந்து மரியாதை செய்தார்கள். அவர்களை ஹண்ட், பால்மர் என்று சாம்புவுக்குக் கமிஷ்னர் அறிமுகம் செய்து வைத்து, 'பலே கைகாரர், துப்பறிபவர்!' என்று சிலாகித்துக் கொண்டார். ஹண்ட் என்றவர், 'நான் இவளைச் சோதனை செய்துவிட்டேன், சார்! உபயோகப்படுவதாக எதுவும் இல்லை. என்ன செய்வது?' என்றார் மரியாதையாக.

'என்ன செய்கிறதா? சரியான காலத்தில் செய்திருந்தால் எல்லாம் சரியாக இருந்திருக்கும். இந்தப் பெண் எதிர்பார்த்து ஜாக்கிரதை யாக வரும்போது பிடித்தீர்களானால் என்ன இருக்கப் போகிறது?' என்றார் கமிஷ்னர் கடுமையாக.

அந்தப் பெண் குலுங்கிக் குலுங்கி அழுதாள். 'எனக்கு ஒன்றுமே தெரியாது! அநியாயமாக, அக்கிரமமாக என்னை உபத்திரவப் படுத்துகிறீர்களா? கடவுள், உங்களைச் சும்மா விட மாட்டார்!' என்றாள்.

சாம்புவுக்கு இரக்கமாக இருந்தது. ரோஜா புஷ்பம் போன்ற முகம்; உருண்டையான பெரிய கண்கள். இவள் நிரபராதிதான் என்று அவனுக்குப் பட்டுவிட்டது.

'சரி! விட்டுத்தொலை இப்போதைக்கு!' என்றார் கமிஷ்னர்.

சாம்புவின் பக்கம் திருஷ்டியை ஒரு வீச்சு வீசிவிட்டு, வெளியே சென்றாள் அவள். அவன் நெஞ்சு ஒருமுறை துள்ளிற்று. 'என்ன அழகு! என்ன அழகு! இனிமேல் இவளை நாம் எங்கே பார்க்கப் போகிறோம்!' என்று ஏங்கியது மனம்.

ஆனால், மனம் பதினைந்து நிமிஷங்களுக்குப் பிறகு ஸ்காட் லண்டு யார்டிலிருந்து வெளிப்பட்டு, நூறு கஜம் போகுமுன்பே அவளைப் பார்த்துவிட்டான் சாம்பு. அவள் தன் கைக்குட் டையை நழுவ விட்டுவிட்டு எங்கேயோ வேகமாகப் போய்க் கொண்டிருந்தாள். ஒரே நிமிஷத்தில். சாம்பு அந்தக் கைக்குட்டையை எடுத்துக்கொண்டு பின்பற்றினான். சாம்பு நெருங்குமுன் அவள் தன் அழகிய மேனியை லாகவமாகச் சுமந்துகொண்டு வெகுதூரம் நடந்துவிட்டாள். சாம்பு அவளைப்

போய்ப் பிடித்து கைக்குட்டையைக் கொடுத்தபோது, அவள் ஒரு பங்களாவுக்குள்ளே நுழைந்துகொண்டிருந்தாள்.

'வாருங்கள் என் அறைக்கு, மிஸ்டர் சாம்பு! இதுதான் என் ஜாகை. அங்கேயே உங்கள் முகத்தில் இரக்கக் குறியை நான் கண்டு விட்டேன. மிகவும் வந்தனம்!' என்றாள் மிருதுவான குரலில்.

சாம்புவுக்கு இந்த லோகத்தில் இருக்கிறோமோ என்ற சந்தேகமே வந்துவிட்டது. எவ்வளவு நல்ல பெண்! எவ்வளவு நயமான சுபாவம்! எலெக்ட்ரிக் லிப்டில் ஆறு மாடியை மூன்றே விநாடி களில் கடந்து, அந்தப் பெண்ணுடன் அறையை அடைந்தான் சாம்பு. ஒரே தாவலாகச் சாம்புவின்மீது தாவி அணைத்துக் கொண்டாள் அவள் 'டார்லிங்! உங்களைப் போன்ற புத்திசாலி கிடையாது; நல்லவர் கிடையாது!' என்று திரும்பத் திரும்பத் தழுவிக் கொண்டாள். பிறகு சாம்புவை ஒரு சோபாவில் தள்ளி, அவன் மடியின்மேல் உட்கார்ந்துகொண்டு கழுத்தையும் ஒரு கட்டு கட்டிக்கொண்டு கொஞ்சத் தொடங்கிவிட்டாள்.

சாம்பு திணறினான். இங்கிலீஷ் சஞ்சிகைகளில் இம்மாதிரிப் படங்களை அவன் பார்த்திருக்கிறான். ஆனால், நிஜமாக அல்லவா இங்கே நடக்கிறது எல்லாம்!

'இதெல்லாம் என்னத்துக்கு? என்னை விடு!' என்று சொல்ல அவன் வாயெடுக்குமுன்பு, வாசற்படியில் ஒரு கர்ஜனை கேட்டது. யாரோ ஒரு புருஷன் துப்பாக்கியுடன் அங்கே நின்றான்!

'ஓஹோ! நான் இல்லாதபோது இதெல்லாம் நடக்கிறதோ? ஹூம்!' என்றான் அவன், பல்லைக் கடித்துக்கொண்டு. ஒருகால் அவள் புருஷனோ இவன்!

வெடவெடவென்று சாம்புவின் கைகால்கள் உதறலெடுத்தன.

'ஏய் சாம்பு! நீ யார் என்று எனக்குத் தெரியும்! எதற்கு வந்திருக்கிறாய் என்றும் தெரியும்! பரம முட்டாளாகிய நீ, எங்கள் வலையில் வந்தவுடனே விழுந்துவிட்டாய்! உன்னை இங்கே தருவிக்கத்தான், இவள் கைக்குட்டையைக் கீழே விட்டது. அதோ சுவரில் தெரிகிற ஓட்டை வழியாக இங்கே நடந்ததை யெல்லாம் போட்டோ எடுத்தாகிவிட்டது, தெரிந்துகொள்!' என்றான் அவன்.

சாம்பு வாயைப் பிளந்தான். ஏமாந்துபோய் அல்லவா வந்து மாட்டிக்கொண்டு விட்டான்! மேலும், அந்த ஆசாமியே பேசினான்.

'உன் மானம் தப்ப வேண்டுமானால், நாளைக்கு மாலை ரயில்வே ஸ்டேஷனில் காத்திரு! ஓர் ஆசாமி வந்து உன்னிடம் ஒரு தோல் பையைக் கொடுப்பான். அதை வாங்கிக் கொள்! தெரிந்ததா? அதில் ஆறு லட்சம்! அத்தனை நோட்டுகளையும் உன் கையாலேயே நீ ஒரு வாரத்துக்குள் இந்த லண்டனில் விநியோகம் செய்ய வேண்டும்.'

'ஏன்? சும்மாவா?'

'ஆமாம். சும்மா, இனாமாகத்தான்! ஏனென்றால், அத்தனையும் கள்ள நோட்டுகள்! நீ கள்ள நோட்டுக் கேஸை கண்டுபிடிக்க வந்தாயல்லவா? முட்டாள்! ஆகையால், உன் கையாலேயே நீ அதை விநியோகம் செய்ய வேண்டும்! அதுதான் உனக்குத் தண்டனை! இதை எங்கேயாவது சொன்னாயென்று தெரிந்ததோ, நாய் சுடுகிறாற்போல் சுட்டு வீழ்த்தி விடுவேன்! என் ஆள்கள் எங்கேயும் இருக்கிறார்கள். அதற்கு நீ தப்பினாலும், இப்போது நடந்த காட்சியைப் பிரசுரித்து, மான நஷ்ட தாவா போடுவேன்! என்ன சொல்கிறாய்?'

'ஹூம்!' என்றான் சாம்பு.

'நாளைக்குச் சாயந்திரம்! மறந்து விடாதே! தவறினால், உன் தலை போய்விடும். இப்போது போ!'

சாம்பு வெளியே கிளம்பினான். குனிந்த தலையுடன் வெளிப் பட்டு, கோல்ட்ஸ்டீன் பங்களாவுக்கு டாக்ஸியில் அவன் திருப்பியபோது, அடுத்த அறையிலிருந்து அவன் பின்னாலேயே மற்றோர் ஆள் வெளிப்பட்டு இன்னொரு டாக்ஸியில் நிழல் போல் வருவதை அவன் கவனிக்கவில்லை.

கோல்ட்ஸ்டீன் பங்களாவில் சாம்பு தன் பெயரைச் சொன்னதுமே ஒரு சேவகன் உள்ளே அழைத்துச் சென்றான். பல பிரும்மாண்ட மான கூடங்களைக் கடந்து செல்லும்போதே, அவருடைய ஏராளமான செல்வத்தையும் அதிகாரத்தையும் வியந்துகொண்டே போனான் சாம்பு. இங்கேயானும் பத்திரமாக இருக்கலாம் என்று எண்ணிக்கொண்டு சென்றவன், ஓர் உலுக்கல் உலுக்கப்பட்டு, பத்தடி எகிறி விழுந்தான் ஒரு கட்டிலின் மேல்.

ஒரு வழியாக நிதானப்பட்டுக் கொண்டு பார்த்தபோது, அவன் எதிரில் ஒரு வெள்ளைக்காரன் நின்றுகொண்டிருந்தான். ஒரு க்ஷணம் தன்னுடைய பிரதிபிம்பந்தானோ அது என்று ஏமாந்து விட்டான் சாம்பு. அவ்வளவு தத்ரூபமாக அவன் சாயலாகவே இருந்தான் அந்த ஆள்! 'மிஸ்டர் துப்பறியும் சிங்கம்! உம்முடைய அநுமதியின் பேரில், நான் சாம்புவாக மாறிக்கொள்கிறேன். நான் உம்மை வெளியே விடும்வரை நீர் என் கைதி! தாங்கள், உடம்பை அலட்டிக்கொள்ளக் கூடாதென்றுதான் இந்தக் காரியம் செய்கிறேன். கள்ளநோட்டுக் கேஸில் மாட்டிக்கொண்டீரே, அதைக் கூட இனி நானே கவனித்துக் கொள்கிறேன்!' என்றான் அவன்.

சாம்பு வாயைப் பிளந்துகொண்டு மௌனமாகப் பார்த்தான்.

போலிச் சாம்பு மேலும் தொடர்ந்து, 'ஆனால் ஒன்று! ஏதானும் கலாட்டா செய்தாயோ, மன்னிக்கவே மாட்டேன். தேம்ஸ் நதி ரொம்ப ஆழம்; அதில் விழுகிற பேர் எல்லாருடைய உடல்களும் அகப்படுகிறதில்லை. ஞாபகமிருக்கட்டும்!' என்று எச்சரித்துவிட்டு கதவையும் சார்த்திக்கொண்டு வெளியே போனான்.

ஒரே விநாடியில் சாம்புவுக்கு உண்மை விளங்கி விட்டது. அவன் சீமைக்கு அழைக்கப்பட்டது ஒரு கள்ளநோட்டுக் கேஸுக்காக. அதற்காக ஓர் ஆசாமி அவனை முதலிலேயே மடக்கிப் போட்டு விட்டான். அதிலிருந்து வெளிவந்தால், அவனைப் போலவே ஓர் ஆள் கிளம்பி, அவன் ஸ்தானத்தில் ஸ்காட்லண்ட் யார்டுக்கு வேலைக்குப் போகிறான்! கமிஷ்னரும் இதர சிப்பந்திகளும் இந்தப் புதிய போலிச் சாம்புவை, நிஜச் சாம்பு என்று நம்பி ஏமாந்து போகப் போகிறார்கள்! என்ன சங்கடம்!

சாம்புவின் தலை சுழன்றது. அவன் செய்யக் கூடியது ஒன்றும் இல்லை. இரு கைகளாலும் தலையை அமுக்கிப் பிடித்துக் கொண்டு சாய்ந்துவிட்டான்.

உலகத்தின் பிரதான துப்பறியும் ஸ்தாபனமான ஸ்காட்லண்ட் யார்டில், குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க நூதன நூதனமாக முறைகள் இருந்தன. மறுநாள் கமிஷ்னர் துரை கதை சொல்வதுபோல் அநேக நடவடிக்கைகளை, போலிச் சாம்புவுக்குக் கூறினார்:

''உமக்கு எந்த இலாகாவில் பரிச்சயம் வேண்டுமானாலும் நீர் செய்து கொள்ளலாம்!' என்று தாராளமாக இடமும் கொடுத்தார். பிறகு கள்ள நோட்டு விவரங்களைப் பற்றியும் அவனிடம் சொன்னார்:

'சில ஜெர்மன் சதிகாரர்கள் ஒளிந்திருந்து கள்ளநோட்டுகளை மாகப் பரப்பி, சர்க்காருக்குக் கெட்ட பெயர் வாங்கி வைக்கும் எண்ணத்துடன் இந்த வேலை செய்கிறார்கள் என்று தெரிகிறது. முதல் கட்டு இன்று மாலை வருகிறது. எந்த ரயில் ஸ்டேஷனில், எந்த வண்டியில், யார் கொண்டு வருகிறார்கள் என்றுதான் நிச்சயமாகத் தெரியவில்லை. நம்முடைய ஆள்களும் வேலை செய்கிறார்கள்; நீங்களும் கவனிக்கலாம் என்ன?' என்றார்.

'ஆகா, சந்தோஷமாக!' என்றான் போலிச் சாம்பு.

அன்று மாலைவரை போலிச் சாம்பு ஸ்காட்லண்ட் யார்டில் பல இலாகாக்களையும் உன்னிப்பாகப் பார்வையிட்டுக் கொண்டிருந்தான். கலகலப்பாக எல்லாருடனும் பேசினான். மாலை ஐந்து மணிக்கு அவன் குறிப்பிட்ட ரயில்வே ஸ்டேஷனுக்கும் போய் விட்டான். கூட்டத்துடன் கூட்டமாகக் கலந்துகொண்டும், தூண்களின் மறைவிலும் காத்திருந்தான். ரயில் ஒன்று ஸ்டேஷனுக்குள் வந்து, பிரயாணிகள் பெருங்கூட்டமாக வெளியே வந்தார்கள். போலிச் சாம்புவின்மீது யாரோ மெதுவாக இடித்தது தெரிந்தது. அடுத்தபடி அவன் கையில் ஒரு ஸூட்கேஸ் திணிக்கப்பட்டது. மறு நிமிஷம் அவன் அதனுடன் ஒரு டாக்ஸியில் ஏறிக்கொண்டான்.

நிஜச் சாம்பு செய்வதாகச் சொன்ன காரியத்தை, வேஷதாரி சாம்பு செய்துவிட்டான்! அவன் அப்படிச் செய்யாமலே இருந்தால், நிஜச் சாம்புவுக்குக் கிடைக்கும் தண்டனை அவனுக்குக் கிடைத்துவிடும் அல்லவா? வேஷம் போட்டாலும் பூராவும் போட வேண்டாமா?

டாக்ஸியில் ஸூட்கேஸைத் திறந்து பார்த்தான் அவன். ஒரே நோட்டுகள் மயம்! அவைகளை விநியோகிக்கும் வேலையில் உடனே இறங்காமல், தற்போதைக்கு அவைகளை, சாம்பு அடைபட்டிருந்த அறையிலே தள்ளிவிட்டு தான் எடுத்த வேலையைக் கவனித்தான் போலிச் சாம்பு.

இரண்டு தினங்களாகத் தனது காராகிருஹத்தில் தூங்கி விழுந்து கொண்டிருந்த நிஜச் சாம்புவுக்கு, வெளியில் என்ன நடக்கிறதென்பதே தெரியாது. 'சீமைக்கு வந்துங்கூடச் சிறைவாசந்தானா?' என்று பலமுறை ஏங்கினான். தப்பித்துக் கொள்ள வழி இருக்குமா என்றால், முன்பின் தெரியாத இடத்தில் அகப்பட்டுக் கொள்வது வெகு லகுவாயிற்றே! இரண்டு தினங்கள் கழிந்துவிட்டன.

பின் கையைக் கட்டிக்கொண்டு, அறையில் மேலும் கீழும் உலாவினான் சாம்பு. தனது வேஷம் போட்டுச் சென்றவன் என்ன

வெல்லாம் அக்கிரமங்கள் செய்து கொண்டிருக்கிறானோ, தன் பெயர் எப்படியெல்லாம் சந்தி சிரிக்கிறதோ என்று சிந்தித்தான். சாம்புவின் உள்ளம் நடுங்கியது.

கோட் ஸ்டாண்டில் ஒரு கோட்டு தொங்கியது. அது போலிச் சாம்புவின் கோட். சாம்பு அதன் பையில் கைவிட்டு, வெளியே இழுத்தான். ஒரு கைக்குட்டை வெளிப்பட்டது. சாதாரண வெள்ளைப் பட்டில், தங்கமும் வெள்ளியுமாகப் பல புள்ளிகள் தாறுமாறாக இருந்தன. அறையின் பூட்டு ஓசைப்பட்டது. யாரோ வருகிறார்கள்! சட்டென்று கைக்குட்டையைத் தன் பையில் போட்டு மறைத்துக்கொண்டு, ஏதும் அறியாதவன் போல் நின்றான் சாம்பு.

வேலைக்காரன் பரபரப்பாக ஓடி வந்தான். 'மிஸ்டர்! போலீஸ் வாசலில் வந்துவிட்டது! ஒளிந்து தப்ப வேண்டும்! என்னோடு கீழே வாரும்! சீக்கிரம், சீக்கிரம்!' என்றான்.

திகிலுடன் சாம்பு ஓடினான். பல மாடிகள், பல திருப்பங்கள், பல அறைகள் எல்லாம் தாண்டி ஒரு சிறிய கதவு வழியே ஒரு சந்தில் வந்து நின்றான். சந்து கும்மிருட்டாக இருந்தது. எங்கிருந்தோ வந்துவிட்டது தைரியம் சாம்புவுக்கு! தப்பித்துக்கொள்ள இது ஒரு சந்தர்ப்பம். கடவுளே அளித்திருக்கிறார்! வேலைக்காரன் சற்றும் எதிர்பாராத சமயம் ஒரே உதறலாகக் கையை உதறி அவன் பிடியிலிருந்து விடுவித்துக் கொண்டான். மறு நிமிஷம் தலை தெறிக்க முன்பின் அறியாத அந்தப் பட்டணத்தில் ஓடத் தலைப்பட்டான். பின்னால் வேலைக்காரன் கூச்சல் கேட்டது; யாரோ துரத்துகிற சத்தமும் கேட்டது.

'விடுதலை! விடுதலை!' என்று முணுமுணுத்துக்கொண்டே ஓடினான் சாம்பு. மூன்றாவது சந்தில் ஓர் ஆளின்மீது பலமாக மோதிக்கொண்டு சிறிது தயங்கினான். 'இவன்தான் அன்று என்னிடம் தோல் பையை வாங்கிக்கொண்ட ஆசாமி! பிடி! பிடி!' என்றது பக்கத்திலே ஒரு குரல். இரண்டு தடித்த புஜங்கள் சாம்புவைப் பற்றின. மறுபடியும் மாட்டிக் கொண்டோம் என்ற பயத்தில் அந்த க்ஷணமே மூர்ச்சை அடைந்தான்.

கண்ணைத் திறந்தபோது, ஒரு பெரிய அறையில் சாம்பு நாற்காலியில் கிடந்தான். ஐந்து வெள்ளைக்காரர்கள் சுற்றி நின்றார்கள்.

'அடே சாம்பு! எங்கே அந்தத் தோல் பை? உள்ளதை ஒப்புக் கொள்!' என்றான் ஒருவன்.

'எந்தத் தோல் பை? நான் அதை அன்று வாங்கவே இல்லையே?' என்றான் சாம்பு.

'அயோக்கியப் பயலே! யாரிடம் இந்த வேலை? நீ வாங்கினதை மூன்று பேர் பார்த்திருக்கிறோமே! அதை வாங்கும்படி நம் ஆள் உன்னிடம் சொன்னது வாஸ்தவந்தான். ஆனால், அதில் ஒரு பிசகு நடந்துவிட்டது. கள்ள நோட்டுகள் வரத் தாமதமாகி இப்போது தான் வந்திருக்கின்றன. வேறொரு காரணமாக அனுப்பப்பட்ட நிஜநோட்டுகளை, எங்கள் ஆசாமி தவறுதலாக உன்னிடம் சேர்ப்பித்து விட்டான். என்ன செய்தாய் அந்த நோட்டுகளை?'

'ஐயோ! நான் ஏதும் அறியேனே!' என்றான் சாம்பு.

துரையின் கண்கள் கோபக்கனலைக் கக்கின. தன் சகாக்களைப் பார்த்து, ஏதோ சைகை செய்தான். இரண்டு ஆள்கள் சாம்புவின் பின்னால் வந்தனர். ஒருவன் கைகளைப் பின்னால் முறுக்கவே, மற்றவன் பற்றவைத்த சிகரெட்டை அவன் கன்னத்தில் வைத்து அழுத்த வந்தான். சாம்பு ஓவென்று அலறிவிட்டான். அவன் கண்முன் எல்லாம் கிடுகிடென்று ஆடின. அறையின் கதவுங்கூட ஆடியது. எதிர்பாராதவிதமாக அது திறந்து கொண்டது!

ஹண்ட், பால்மர் என்ற இரு துப்பறிபவர்களும் அங்கே தென்பட்டார்கள். அவர்கள் பின்னால் பல போலீஸ் தலைகள் தெரிந்தன! 'தூக்குங்கள் கையை எல்லாரும்!' என்ற உத்தரவு பிறந்தது. சாம்புவின் தலை சுழன்றது.

ஹண்ட், சாம்புவின் பக்கம் வந்து அன்புடன் தடவிக் கொடுத்தார். 'பலே வேலைக்காரர் சார்! அங்கே கோல்ட்ஸ்டீன் வீட்டில் நாங்கள் ரெய்ட் செய்வதற்குச் சற்று முன்னேயே நீர் வந்திருக்கிறீர். அப்புறம் இங்கேயும் நாங்கள் வருவதற்கு முன்னால் வந்துவிட்டீர்! அந்த வீட்டில் அகப்பட்டதா ஏதானும்?' என்றார்.

'என்ன அகப்பட வேண்டும்?' - சாம்புவுக்கு ஒன்றுமே புரியவில்லை. நெற்றியில் துளிர்த்த வியர்வையைத் துடைக்க கோட்டுப் பையில் கைவிட்டு, கைக்குட்டையை எடுத்தான். அது, அவன் அஜாக்கிரதையாகக் கொண்டு வந்துவிட்ட புள்ளி வைத்த பட்டுக் கைக்குட்டை!